சங்க காலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் அருளிய

ஐந்திறம்


விண்வெளி



புனித மாநெறி
(மண்டூக பதம்)



மண்வெளி




மனித மாநெறி
(பரமசாயிகபதம்)


"ஆலமா மரத்தின் கீழே அருள்மயன் அமர்ந்த தாலே
ஆலமா மரத்தின்கீழே அருட்கலை வளர்ந்த தாலே
ஆலமா மரத்தின்கீழே அறிவர்கள் வளர்ந்த தாலே
ஆலயம் ஊரூர் தோறும் அமைந்தன செழிக்க நன்றே!"

பதிப்பாசிரியர்கள்:
வாஸ்து வியாஸன் டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி, B.A., F.I.I.A.,
சிற்பக்கலை அரசன் ஸ்தபதி எஸ்.சந்தானகிருஷ்ணன், B.sc.,(T.Arch),M.A.,(Sanskrit)


தெக்ஷிணா கலை நூற்பதிப்பகம்
எண்: 46, முதல் அவன்யூ, வெட்டுவான்கேனி, ஈஞ்சம்பாக்கம், சென்னை – 41.
தொலைபேசி : 044 – 2449 1384, 24492651. மின் அஞ்சல்: vaastuved@gmail.com.



முன்பக்கத் தோற்றம்



தரைப்படம்




முதல் தள தரைப்படம்

ஸ்தபதியின் வாஸ்து வேத ஆய்வு நிறுவன கட்டிடம் மாமுனி மயன் கண்டு சொன்ன மனித மாநெறியின் படி [பரமசாயிக பதம்] அமைக்கப்பட்டிருப்பதைக் காண்க.

சங்ககாலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் இயற்றிய
பிரம்ம சூத்திரங்களாம்

ஐந்திரம்




சங்ககாலச் சிற்பச் சித்தன் மாமுனிமயன்
ஆலமரச் செல்வன்

"ஆலமா மரத்தின் கீழே அருள்மயன் அமர்ந்த தாலே
ஆலமா மரத்தின்கீழே அருட்கலை வளர்ந்த தாலே
ஆலமா மரத்தின்கீழே அறிவர்கள் வளர்ந்த தாலே
ஆலயம் ஊரூர் தோறும் அமைந்தன செழிக்க நன்றே!"
[வை:386]

விரிவுரையாளர்:
வாஸ்து வியாசன் டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி,B.A.,F.I.I.A.,
சிற்பக் கலை அரசன் ஸ்தபதி.S.சந்தானகிருஷ்ணன்,B.Sc.,(T.Arch),M.A.,(Sanskrit)

வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்
எண்:46, முதல் அவென்யூ, வெட்டுவாங்கேணி, ஈஞ்சம்பாக்கம், சென்னை-41.
தொலைபேசி: 044-2449 1384, 2449 2651, மின் அஞ்சல்:vaastuved@gmail.com




நாற்புறத்தியல் – அறுபான் நான்கியல்

விண்ணும் எட்டே மண்ணும் எட்டே
உயிர்க்கலை எட்டே உடலொளி எட்டே
செயிரறும் உயிரெலாம் பொருளெலாம் எட்டே

ஐந்திறம்

[மூலத்தின் ஐந்து இயல்புகளை முறையே மூலம், காலம்,சீலம், கோலம், ஞாலம் என்ற ஐந்து நிலைகளாக வெளிப்படும் பிரபஞ்ச சிருஷ்டி நுட்பத்தைக் கூறிடும் விண்ஞான நூல்]



அருளியோன்

மாமுனி மயன்

பிரசுரிப்பாளர்
தெக்ஷிணா கலை நூற்பதிப்பகம்.
எண்.46, முதல் அவென்யூ,
வெட்டுவாங்கேணி,
ஈஞ்சம்பாக்கம் கிராமம்,
சென்னை - 41.
இந்தியா (தமிழ்நாடு)
தொலைபேசி எண்: (044) 24491384,
(044) 24492651
இமெயில்:vaastuved@gmail.com
visit us at www.vastuved.com

விரிவுரையாளர்:
வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்
- டாக்டர். வை. கணபதி ஸ்தபதி.

முதல் பதிப்பு: 11ம் தேதி பிப்ரவரி 2006
தைப்பூச நன்னாள்
மயன் பிறந்த நாள்.

விலை : ரூ.500
வெளிநாடு: $ 30

கணினி தட்டச்சு :
திருமதி.R.இராஜலஷ்மி இராமநாராயணன்
திருமதி.D.ஹேமலதா

அச்சகம் :
கேப்டன் பிரிண்ட் சர்விஸ்
சென்னை - 41.
தொலைபேசி எண்: 044-24482250

6-4

ஐந்திறம்

ஐந்திறம்

நமது கலை மொழிகள் எங்கே மறைந்தன?

ஒவ்வொரு மொழிக்கும் இரண்டு வகையான (aspects) பக்கங்கள் இருக்கின்றன. ஒன்றை இலக்கிய மொழி என்றும் மற்றொன்றை கலை மொழி என்றும் சொல்கிறோம். இத்தகைய பாகுபாடு எல்லா மொழிகளுக்கும் உரியதாகும் என்றாலும், தமிழுக்கும் சமஸ்கிருதக்கும் இது நிரம்பவே பொருந்தும். இந்த வேறுபாட்டால், நமது மொழிகளின் கலைமொழி ஒரு சாராருக்கு மட்டும் தெரிந்ததென நாளது வரை இருந்து விட்டது.

இதற்கொப்ப, ஐந்திறம் என்ற தமிழ் அறிவியல் நூல், ஒன்றை தமிழக அரசால் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிட்டு புலவர் பெருமக்களுக்கு வழங்கியும் இன்று வரை எவரும் அந்த நூலைப் புரிந்து கொள்ளவும் ; போற்றவும் இல்லை; உட்புகுந்து நுட்பங்களை கண்டறியவும் இல்லை. இதே போல் தான், சமஸ்கிருத மொழிக்கும் கிரந்தம் என்ற கலைமொழிக்கும் உள்ள தொடர்பு பற்றி யாருக்கும் தெரிந்திடவில்லை. இதனால் நமது கலாச்சார மொழி (Cultural Language) எது என்று உறுதி செய்யப் படவில்லை.

மொழிபெயர்ப்பு ஆசிரியர்களும் (Literal Translation) செய்தார்களேயொழிய விரிவுரை எழுத முடியவில்லை. வாஸ்து சாஸ்திர அறிஞர்களாகிய சிற்பிகளும் விரிவுரை எழுதிடவில்லை. அதற்குப் பதிலாக தாங்கள் செய்த கலைப் படைப்புகளை கண்ணால் பார்த்தறியும் விரிவுரைகளாக (visual comentaries) இயற்றிச் சென்று விட்டார்கள். மணிமேகலைக் காப்பியம் வழியாக ஓவியச் செந்நூல் என்ற கலைநூல் அறிமுகமானது. இது எவர்க்கும் புரியாமல் போய், இறுதியில் வழக்கொழிந்த நிலையை அக் காப்பியத்தின் உரையாசிரியர் மூலம் அறிகிறோம்.

மேலைநாட்டுக் கட்டிடக் கலைஞர் (VITRUIUS) விட்ருவியஸ் என்பவரின் கட்டுரை இதற்கு ஒரு சான்றாக இருப்பதால் அதனை இத்துடன் இணைத்து வைக்கிறேன்.

VITRUVIUS,
ARCHITECT ON CRAFTSMANSHIP and SCHOLARSHIP

Vitruvius was a celebrated architect of Rome who lived in the 5th Century B.C. Dr.Prasanna Kumar Acharya of Allahabad, India has done deep research in respect of the antiquity of Manasara Vaastu Shastra which he edited and translated into

English in the year 1933, published by the Oxford University Press, London. No scholar of repute has done such a great service to bring the technical treatise of the Indian sub-continent back to life. The first Indian scholar who brought this unique technological treatise to the notice of the western scholars was Sri.Ram Raz, equally a great scholar, patronised by Maharaja Serfoji of Tanjore, Tamilnadu. Ram Raz's essay on the architecture of Manasara, that appeared prior to P.K.Acharya's caused a flutter among world scholars.

This Dr.Acharya, was able to find quite a lot of similarities between Vitruvius and Manasara. We Sthapatis of the South India do recognise and appreciate his findings. Is not the history of the old world changing today? Mayan of India and Maayan of Mexico are identified to be one and the same person, and the contribution of South Indian sculptors in the erection of Egyptian Pyramid is also brought to light by contemporary researchers. The cultural history of India needs revision.

"Those who have aimed at acquiring manual skill without scholarship have never been able to reach a position of authority corresponding to their pains, while those who have relied only upon theories and scholarship were obviously hunting the shadow, not the substance.But those who have a thorough knowledge of both, like men aimed at all points have sooner attained their object and carried authority with them".

— Vitruvius

மேலும் இந்தக் கலைப்படைப்புகளின் வேர்களை தேடிய(Global level search) Robert Lawlor ராபர்ட்லாலர் என்ற ஆஸ்திரேலிய விஞ்ஞானியும் கட்டிடக் கலைஞரும் ஆகிய ஒருவர் மேலுமோரு செய்தியாகக் கூறுவதை இங்கு எடுத்துக் காட்டாக வைக்கலாம்.

SACRED GEOMETRY

Readers have to go deep into the observations of Dr.Robert Lawlor. It is very siginificant that Dr.Lawlor has identified the roots of the ancient scriptures on Vaastu, in the science of rhythm and form, which fact, the 'sthapati' has been repeatedly mentioning all over the treatise on Sthapatya Veda. It is hoped that the local scholars would feel free to accept and applaud the efforts of the 'Sthapati', to expose the root-source of this indigenous science.

"The fundamental nature of the material world is knowable only through its underlying patterns of wave forms".

"Both our organs of perception and the phenomenal world, we perceive of form and proportion. Therefore, when many ancient cultures chose to examine reality through the metaphors of geometry and music (music being the study of the proportional laws of sound frequency) they were already very close to the position of our most contemporary science".

"The point of view of modern 'force-field' theory and wave mechanics corresponds to the ancient geometric - harmonic visions of universal orders as being an interwoven configuration of patterns".

— Sacred Geometry of Robert Lawlor
Architect and Scientist of Australia.

Robert Lawlor quotes Bertrand Russel in this connection as saying "what we perceive as qualities of matter, are actually differences in periodicity".

எனவே எவர் மீதும் குறை சொல்லாது, இக்காலக் கல்லூரிகளில் Technical Tamil, Technical Sanskrit ஆகிய இரண்டையும் தக்கோருக்குச் சொல்லி கொடுத்தால் இந்த குறை நீங்கி விடும் என்று அரசோச்சும் மூதறிஞர்களுக்கு விண்ணப்பமாக சமர்ப்பிக்கின்றேன்.

இத்தகைய கவனத்தை நாம் ஆங்கில மொழிக்குக் காட்டியதால் மேற்சொன்ன செய்திகள் நமக்கு ஓரளவு புரிவதாயிற்று. மேற்சொன்ன நமது இரண்டு மொழிகளுக்கும் இந்த அக்கறையைக் காட்டியிருந்தால் நமது இன வேறுபாடுகள் ஒழிந்து ஓரினப்பட்டு அமைதியான – சுக வாழ்க்கையில் திளைத்திருக்கலாம் என்க. (emotional integration) இதனால் நம் தமிழ் மொழியும் சம்ஸ்கிருதமும் உலகளாவிப் பரவிடும் என்று சொல்லிட விரும்புகிறேன்.


இந்த நிலையை எளிதில் பெற்றிட ஐந்திறத்தமிழை முதலில் கற்பித்திட வழிவகை செய்தல் அரசின் கடமை எனக் கூறி அமைகிறேன். – ஸ்தபதி.

உள்ளே புகுமுன்

ஐந்திறமா? ஐந்திரமா?

வினாவும் விடையும்


தமிழ் நாடு அரசு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் ஐந்திறம் என்ற ஒப்பற்ற ஒரு கலை நூல் [1986] வெளியாகியது. அதே ஆண்டில் அதனை மனமார வரவேற்று அழகிய அணிந்துரை தந்தவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர்.வ.சுப.மாணிக்கம் அவர்கள் ஆவார்கள். ஒரு பார்க்கோடா ஆய்வுரையாகச் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்தது. அந்த ஆய்வுரையில், தமது சிறப்புரையை தொகுத்துக் கூறிவிட்டு அதற்குப் பிறகு யாதொன்றும் சொல்ல முடியாமல் இருக்கிறேன் என்று சொல்லியதோடு இந்த நூல் அறிவியல் சார்ந்த விஞ்ஞானிகளை வைத்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவுரை செய்துள்ளார். என்னே அவரது Honest Scholarship?



கிட்டதட்ட 19 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் ஒரு வரும் இந்த நூலுக்கு உரை எழுத வில்லை. அதற்குமாறக, ஐந்திறம் என்று வல்லின ‘ற’ போட்டு தலைப்பு இருப்பதால், இது சந்தேகத்தை ஊக்குவிக்கிறது என்று சொல்லி விட்டார்கள். தொல்காப்பியத்தில் பரம்பாரனார் அமைத்த பாயிரத்தைப் பார்க்கும் பொழுது பரம்பாரனார் ஐந்திறம் என்று சொல்லாமல் ஐந்திரம் என்ற ‘ர’ போட்டு சொல்லி

விட்டதால் இந்த நூல் வடவர் சார்ந்த நூல் என்றும் அடித்துப் பேசி, ஐந்திறத்தை வழக்காற்றுக்கு வரவிடாமல் செய்து விட்டார்கள்.

இந்த நிலையில் வடலூர் இராமலிங்க அடிகளார் அவர்கள் அருட் பெருஞ்ஜோதி என்ற அகவலில் தன் கைப்பட எழுதிய செய்தி கீழே காட்டடப்பட்டிருக்கிறது. இதில் ஐந்திறம் என்ற வல்லின 'ற' போட்டு எழுதியிருக்கிறார். இவரது திருவருட்பாவை படித்தவர்கள் இராமலிங்க அடிகளார் அவர்கள், மயன் எழுதிய ஐந்திறத்தை கசடற கற்று, தேர்ந்து அந்த தமிழ்ப் பாவை இயற்றியிருக்கிறார் என்க. மயன் என்ற பெயரையும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் ஐந்திறம் என்பது சரியேதவிர இந்திரனால் கொடுக்கப்பட்ட நூல் என்று ஒரு சிலர் இது நாள் வரை கூறி வந்த கருத்து இன்றோடு அடிபட்டுவிடுகிறது. வாழ்க இராமலிங்க அடிகளார் அவர்கள்!



மண்ணினி லைப்பூ வகுத்ததி லைந்திறம்
அண்ணுற வமைத்த வருட்பெருஞ் ஜோதி

மேலும், ஐந்திற நூலாசிரியர் மயன் பற்றிய செய்திகள் இந்த அகவலில் இடம் பெறுகிறது. இதனால், தமிழக அரசு கொடுத்த ஐந்திறம் 10,000 ஆண்டுகளுக்கு முன்பாக முதற் சங்ககாலத்தில் இயற்றிய செய்தியை ருசுப்படுத்திடச் செய்த இராமலிங்க அடிகளார் அவர்களை மீண்டும் ஒரு முறை வாழ்த்துவோமாக! தமிழர் மானம் காத்த பெருமகனன்றோ!



வடலூர் சத்திய ஞான சபையில் கல்வெட்டில்
பொறிக்கப்பட்டுள்ள திருஅருட்பாவில் ஐந்திறம்
என்ற சொல்லை ஸ்தபதி அவர்கள் காண்பிக்கிறார்.

ஐந்திரம் என்பது இயற்கையின் நிலைப்பாட்டை, முன்னும் பின்னும் நடந்து வரும் செயல்பாட்டை, அதிலிருந்து இயல், இசை, நடம் என்ற முத்தமிழோடு சிற்பக்கலை, கட்டிடக் கலை சேர்ந்து ஐந்தமிழுக்கு அடிப்படையான ஒரு பொது இலக்கண நூல் – ஒரு பொது அறிவியல் நூல் – பொது விண்ணியல் மண்ணியல் நூல் என்பது ருசுவாகிறது. இந்த நற்செய்திக்கு உரித்தான தமிழக முதல்வர் அவர்களையும் தமிழக அரசையும் அறிஞர்கள் போற்றுவார்களாக.

முதன் முதலில், 1986 ல் இந்தத் தமிழ் ஐந்திரத்தை அரசு மூலம் பதிப்பித்துக் கொடுத்தருளியோர் மூவர்.

1.முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்கள்.

2.தமிழக முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர்.அரங்கநாயகம் அவாகள்.

3.முன்னாள் தமிழக இந்து அறநிலையத்துறை அமைச்சர் மேதகு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள்.

4.இந்த ஐந்திரச் செய்திகளை அவ்வப்போது தமிழினத் தலைவர் டாக்டர்.கருணாநிதி அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, வாய்ப்புகள் கிடைக்கும் ஆரம்ப நேரத்தில், ரசிக்கச் செய்திட்ட என்னை ஊக்கு வித்தவர்களும், அய்யன் திருவள்ளுவர் சிலையினை எடுப்பிக்கச் செய்ததைப் பாராட்டி – அத்திருவுளத்தை போற்றுவதற்கு ஐம்பதாயிரம் விஸ்வகர்மாக்கள் சென்னையில் ஒன்று கூடி வாழ்த்திய போது, மயனை நன்றாகத் தெரிந்து கொண்ட அவர்கள் தமிழக முதல்வராக இருந்த நேரத்தில், சிற்பியர் இனமக்களை விஸ்வகர்மர்கள் என்று அழைக்காமல் இந்திய மாயர்களே! என்று அடைமொழிந்து எங்கள் உளத்தை மகிழ்வித்த டாக்டர். கலைஞர் அவர்கள். இந்த நால்வருக்கும் எனது நன்றியினை புலப்படுத்திக் கொண்டு,

இறுதியாக, ஐந்திரத்தையும் சிற்பச் சித்தன் மயனாருடைய பிற நூல்களையும் அரசு ஆணையை மேற்கொண்டு அரசுக்குச் சேர்ப்பித்த மனனவேந்தன் ஆன்மிகப் புலவர் அருட்கவி வீரபத்தினார் அவர்களுக்கும் என்னுடைய சிற்பியர் சமுதாயச் சார்பில் நன்றி கூறி எனது உரையினை நிறைவு செய்கிறேன்.

வாஸ்து வியாசன் டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி.

முதல் பதிப்பில் முன்னாள் தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் மாண்புமிகு.செ.அரங்கநாயகம் அவர்களின் அணிந்துரை

உலக மொழிகளிலே தமிழ் மொழி மூத்த மொழியென சொற்பிறப்பியல் ஆய்வாளர் கூறுவர். எனவே மொழி வழிப்பட்ட தமிழர் தம் நாகரிகமும், பண்பாடும் மிகத் தொன்மையுடையதென உறுதி செய்வர்.

அக்கருத்தின் அடிப்படையில் புலவர் பெருமக்களும் பன்னாட்டு ஆய்வாளர் களும் பல முனைகளிலே பல ஆய்வுகளைத் தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

இந்திய நாட்டின் வரலாறே தெற்கிலிருந்து தான் தொடங்கப்பட வேண்டு மென்று பலர் பேசியும் எழுதியும் வருகின்றார்கள். அதற்கான வரலாற்றுக் குறிப்புகளைக் கண்டறியவும் முற்பட்டிருக்கின்றார்கள். பல தடயங்களைப் பெற்றுமிருக்கின்றார்கள். தொடர்ந்து ஆய்வுகளை நிகழ்த்திக் கொண்டு மிருக்கின்றார்கள்.

இக்காலக் கட்டத்தில் 'ஐந்திறம்' என்ற நூலொன்று கிடைத்திருக்கின்ற செய்தியானது அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டுவதாக அமையும் என்று கருதுகிறேன்.

தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அந்நூல் ஆசிரியர் தன் நூலுக்கு அடிப்படையான தொல் நூலொன்றைக் குறிப்பிடுகின்றார். அந்நூல் "ஐந்திரம்" என்று அங்கே குறிப்பிடப்படுகிறது. "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்" என்பது அந்நூலில் காணப்படும் சொற்றொடர். அதற்கேற்ப "ஐந்திறம்" என்ற தலைப்பில் ஒரு தொந்நூலானது தஞ்சை, சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் குவிந்து கிடந்த சுவடித் தொகுப்பிலே இருக்க, அதனை ஒரு புலவர் பெருமகன் தன் மாணவப் பருவத்தில் மனப்பாடம் செய்துள்ள செய்தியினைக் கேட்டு அகமகிழ்ந்து, எழுதச் செய்து அந்த நூலை பல அறிஞர் பெருமக்களிடமும் ஆய்வாளர்களிடமும் காட்டி, ஒப்புதலும் பெற்று, இன்று அச்சேறிய நூலாக, அது தமிழ்ப் பெருமக்களிடம் பெருமகிழ்ச்சியுடன் வழங்கப்படுகிறது.

‘ஐந்திறம்’ ஓர் இலக்கண நூல். மொழி இலக்கணமாக முதலில் தொடங்கி, அங்கே பல்கலை இலக்கணங்கள் விரிவாக பேசப்படுகின்றன; அவ் இலக்கணங்களுக்கு அடிப்படையான உளவியலும், அறிவியலும், கணக்கியலும், கலையியலும் அதில் காணப்படுகிறன்றன.

உளத்தில் தோன்றிய உணர்வானது விண்ணாகி, ஒளியாகி, வெளிப்பட்டு, வளியினால் அசையாகி, ஓசையாகி ஒலியாகி மொழியாகிற படிமுறையொன்றும் பேசப்படுகின்றது. மொழி இலக்கண நூல் ஒன்று இங்ஙனம் பேசுவது வியப்பினும் வியப்பல்லவா? இஃதொரு அறிவியல் நுட்பமல்லவா? சொற்பிறப்பியல் ஆய்வறிஞர்கட்கு நல்லதொரு விருந்தாகுமல்லவா?

இந்த நூலில் மொழியிலக்கண மட்டுமல்லாது சிற்பக்கலை, ஓவியக்கலை, கட்டடக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை பற்றிய பல்கலை இலக்கணங்களும் அறிவியல் அடிப்படையில் வழங்கப் படுகின்றன. மேலும் விண்கலம் மரக்கலம் – செய்முறை பற்றிய இலக்கணக் குறிப்புகளும் இடம் பெறுகின்றன.

அவற்றை பல்துறையில் ஆழ்ந்த புலமையும் ஆய்வனுபவமும் பெற்ற மூதறிஞர்கள் படித்துப் பார்த்து அவற்றின் நுட்பங்களை ஆய்ந்து, மக்களுக்கு அவற்றின் பயனையும் பெருமையையும் வெளியிட வேண்டுமென்று கருதி இப்போது அந்நூலின் மூலப் பாடல்களை மட்டும் அரசு வெளியிடுகிறது. தொடர்ந்து பிற கலை நூல்களின் மூலப்பாடல்கள் வெளியிடப்படும்.

இந்த நூலின் மிகச் சிறப்பாக காணப்படுவன காலம் மற்றும் இடம் ஆகிய இரு பெரும் அறிவியல் நுட்பங்கள் விளக்கப்படுவதேயாகும் உள்ளமே இடம்; அதன் துடிப்பே காலம். இடமே வடிவங்களைத் தோற்றுவிக்கின்றது. காலமே மொழியைப் படைக்கின்றது. இடமும், காலமும் பொருளையே தோற்றுவிக்கின்றன. கண்ணால் பார்க்கப்படுவது இடம் தோற்றிய ஒளிப்பொருள். காதால் கேட்கப்படுவது காலம் தோற்றிய ஒலிப்பொருள். ஒலிப்பொருளில் பொருள் மறைந்து நிற்கும், அதாவது உணர்வாகும். ஒளிப்பொருள் பருப்பொருளாக நிற்கும். ஒலிப்பொருள், சொற்பொருள் என்ற பிண்டத்தில் நிகழ்வதே அண்டத்திலும் நிகழ்கிறது.

இவையெல்லாம் இந்நூலினின்று வெளிப்படும் புது விளக்கங்கள். இக்கருத்துக்களை ஆய்வாளர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகக் குறிப்பிடுகிறேன்.

இந்நூலைத் தந்தவர் சமயத்துறையில் கருமாரி தாசர் என்று புகழ்பெற்ற புலவர் வீரபத்திரனார் ஆவர். அவர் பத்து லட்சம் தமிழ்ப் பாடல்களை மனனம் செய்து வைத்திருப்பதில் 2½ லட்சம் பாடல்கள் ஒலிப்பதிவாகியும், ஒரு சில தட்டச்சு செய்திருக்கும் நிலையிலும் உள. அன்னாரின் நினைவாற்றலையும் அப்பாடல்களை விரைந்து அவர் பாடுவதையும் கேட்டு வியப்படைந்தேன். அவர் தம் ஆற்றலை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

இப்பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் பாராட்டுவதோடு, இதற்கு ஊக்கமளித்து பாடல்களை வெளிக் கொணரச் செய்த தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களையும், பத்தே நாட்களில் மிகச் சிறந்த முறையில் அச்சேற்றி வெளிக் கொணர்ந்த அரசினர் அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தினரையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

நாள்: 10.40.1986
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009

[ஒப்பம்] செ.அரங்கநாயகம்
கல்விஅமைச்சர், தமிழ்நாடு

முதல் பதிப்பில் ஸ்தபதியின் அறிமுகக் கட்டுரை

உலகத்தில் தோன்றிய ஒவ்வொரு இனமும் அதனதன் உளப் பண்பாட்டுக் கேற்றவாறு பல கலை மரபுகளைத் தோற்றுவித்துப் பேணி வளர்த்து வருகிறது. அவ்வழியில் தமிழர்களாகிய நாமும் பல கலை மரபுகளைப் பேணி வளர்த்து வைத்துள்ளோம். செய்தொழில் எல்லாம் கலைகளெனினும் ஏற்றமிகு சிற்பக்கலை, கட்டக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை ஆகிய கலைகளை நுண்கலைகளாகக் கொண்டு போற்றி வருகின்றோம். அக்கலைகளில் இலக்கியம் இசையில் ஒன்றிட எஞ்சியிருக்கும் நான்கு கலைகளும் சேர்ந்து ஐம்பெருங் கலைகளில் எனப் போற்றப் படுகின்றன. இந்த ஐம்பெருங் கலைகளில் நான்கு கலைகள் கண் வழிச் சென்று உளத்தில் ஒன்றி இன்பவுணர்வு பெறச் செய்கின்றன. ஆனால் இசைக்கலை செவி வழிச் சென்று உணர்வை அல்லது இவ்வனுபவத்தைப் பொறுத்தமட்டில் இக்கலைகள் தோற்றுவிக்கும் சுவையெல்லாம் ஒரே தன்மையுடையதாக இருப்பதை நடுநிலையினின்று ஆய்வோரும், அத்துறைகளில் ஆழ்ந்த புலமையோ, அனுபவமோ அல்லது நெருங்கிய தொடர்போ கொண்டோரும் ஏற்பர்.

மேற்குறிப்பிட்ட கலைகள் ஒவ்வொன்றையும் பிறநாட்டுக் கலை மரபுகளோடு ஒப்பு நோக்கிப் பார்த்தால் நம் நாட்டுக் கலைகள் தோற்றுவித்திடும் இன்பவுணர்வு நிலையானதாகவும், தூய்மையானதாகவும் விளங்குவதோடல்லாமல் நம்மை மெய் மறக்கச் செய்து, தொடர் இன்பத்தையும் நல்கி, இனிமையின் சிகரத்தில் நம்மை நிறுத்தித் துய்க்க வைத்துவிடுகின்றன. அங்ஙனம் ஒப்புக் கொள்வோரை கலையறிவு பெற்றவர்களாகச் சொல்லிவிடாமல் கலையுணர்வு பெற்றவர்களாகவே கொள்ளுதல் வேண்டும். கலைஞர்களாக வளர விரும்புவோர் வெறுங் கலையறிவு மட்டும் பெற்றிருந்தால் போதாது. கலையுணர்வு வாய்க்கப் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். அறிவால் வெளிப்பட்ட கலையைக் காட்டிலும், உணர்வால் வெளிப்பட்ட கலையே பேரின்பம் நல்கும் என்பதை உண்மைக் கலையுணர்வு வாய்க்கப் பெற்றோர் ஏற்காமல் இருக்க முடியாது. இங்ஙனம் கலையுணர்வோ

அல்லது மொழியுணர்வோ வாய்க்கப் பெற்றோர்களின் அனுபவக் கூற்றுகள், உணர்வின் - உண்மையின் - வெளிப்பாடேயாகும். அக்கூற்றுகளுக்கு அன்னார் காரணம் காட்ட முடியாமலும் போகலாம். ஆனால் அவை இயல்பாகவே அவர்களுக்கு அமைந்திடும். **யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்** என்று பாடிய கவிஞனை உணர்ச்சிக் கவிஞன் என்று சொல்லி மகிழ்கின்றோம். கவிஞனை உணர்ச்சிக் கவிஞன் என்று சொல்லி மகிழ்கின்றோம். அங்ஙனம் கவிஞன் சாற்றிய அக்கூற்று அவர்தம் முதிர்ந்த அனுபவத்தின் - உள்ளுணர்வின் வெளிப்பாடு, வெறும் ஆய்வறிவின் வெளிப்பாடு அல்ல. இவ்வனுபவம் மூளைக்கு ஏற்பட்ட அனுபவம் அல்ல. உயிருக்கு ஏற்பட்ட அனுபவம் ஆகும். இவ்வுயிர் பெற்ற அனுபவத்தையே ஆன்மீக அனுபவம் என்று சொல்லுகின்றோம். அவ்வனுபவம் நிகழும் இடம் உயிர். அங்ஙனமே யாமறிந்த இசைகளிலே தமிழிசை போல் எங்குங் காணோம் என்று தமிழிசை பற்றிக் கூறிடலாம். அதே கூற்றை தமிழக ஓவியக் கலைக்கும், சிற்பக் கலைக்கும், கட்டடக் கலைக்கும், நாட்டியக் கலைக்கும் சொல்லுவோமானால் அஃது மிகமிகப் பொருந்திடும் கூற்றாகவே உணரப்படும். அந்தந்தத் துறையில் உணர்வு கொண்டோர் எந்தவொரு மரபைச் சார்ந்தோராகயிருந்தாலும் இதனை ஏற்கவே செய்வர். இங்ஙனம் தமிழகக் கலை மரபுகள் ஆன்மிகத் தொடர்பு கொண்டு பிற கலை மரபுகளின் எல்லைகளைத் தாண்டி நின்று, அன்றுபோல் இன்றும் குறைவிலாப் பேரின்பத்தை நல்கும் மரபுகளாகவே இருந்து வருகின்றன. ஒன்றை உயர்த்தி மற்றதைத் தாழ்த்திப் பேசுவதற்கான இடமேயில்லாது ஒரே ஏற்றமுடையன வாகவும் விளங்குகின்றன. அனுபவ நிலையிலே உணர்வும், உயிர்த் தொடர்பும் கொண்டு, வெளிப்படும் நிலையிலே அறிவும் சேர்ந்து முழுமையான இன்பத்தை அக்கலைகள் துய்க்க வைக்கின்றன என்று சொல்லிவிடலாம். இத்தகைய பேராற்றல் நமது கலைகளுக்கு எங்ஙனம் வாய்ந்தது? இஃதொரு ஆன்மீக இரகசியம்!

உலக மக்கள் பல இடங்களில் பல இனத்தவர்களாகக் கூடி வாழ்கின்றார்கள். அவ்வினத்தவர்களில் தமிழ் மக்கள் மிகத் தொன்மையானவர்கள். அவர்கள் இன்றைய தமிழகத்தின் தெற்கே, குமரி மண்தலம் என்ற நிலப்பரப்பிலே பன்னெடுங்

காலத்திற்கு முன்பு தோன்றி வாழ்ந்து வந்தவர்கள். அக்காலத்தில் அவர்தம் பண்பாடும், நாகரிகமும் மேலோங்கி வளர்ந்திருந்தன. அவர்களிடையே தோன்றிய மொழி தமிழ்மொழியாகும். அம்மொழியானது தொன்மையோடு இனிமையும் பெற்று விளங்கிய செம்மொழியாகவும் இருந்தது.

அக்குமரி மண்தலத்தை ஆண்டவர்கள் பாண்டியர் ஆவர். நிலந்தரு திருவிற்பாண்டியன், காய்ச்சின வழுதி ஆகிய மன்னர்கள் அக்காலத்தில் கோலோச்சி வந்தார்கள். முதல் தமிழ்ச்சங்கம் அமைந்தது அம்மன்னர் வாழ்ந்த காலம் என்பர் ஆய்வறிஞர்.

அக்காலக் கட்டத்தில் அக்குமரி மண்தலத்தில் மயன் என்ற சிற்பி ஒருவன் தோன்றியிருந்தான். அவன் பல்கலை வித்தகனாக இருந்தான் என்ற செய்தியை சிற்பக்கலை மரபினர் வழியாகவும் இன்று நம்மிடையே இருந்து வரும் இலக்கியங்கள் வாயிலாகவும் அறிகின்றோம்.

இன்று பாரதநாடு முழுவதுங் காணப்படும் சிற்ப, ஓவிய, கட்டடக்கலை மரபுகளுக்கு மயன் மரபே மூல மரபு என்ற சிற்பியர் கருத்துக்கு, மேலும் நல்ல தடயங்கள் இப்போது கிடைத்திருக்கின்றன.

தமிழ் மரபைப் பொறுத்தவரை இம்மயனைப் பற்றிய செய்தியொன்று தமிழக வரலாற்றுக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் சிறப்பாகக் காணப்படுகிறது. இச்செய்தியினை ஆய்வுக்கு இதுவரை எவரும் மேற்கொள்ளவேயில்லை. வடநாடு சென்று பல பொருள்களைத் திறையாகக் கொண்டு வந்த சோழ மன்னன் ஒருவன் தோரணவாயில், முத்துப்பந்தர், பட்டி மன்றம் ஆகிய மூன்று கலைப் பொருட்களைக் கொண்டு வருகிறான். அவற்றைத் தன் நாட்டுக் கைவினைக் கம்மியர் காணா மரபின என்றும், மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம் என்றும் புகழ்ந்து பேசி ஒரு மரபின் வரலாற்றுப் பேருண்மையை அக்காப்பியத்தில் நூலாசிரியர் பதிவு செய்கிறார். அத்தகைய கலைப் பொருட்களை மயன் தனக்கும் தன் மூதாதையர்களுக்கும் வடபுல மன்னர்கள் செய்த உதவிக்கு நன்றிக் கடனாக செய்து கொடுத்திருந்தனவற்றையே திசையாகப் பெற்று வந்ததாகவும் குறிப்புமுளது. எனவே மயன் என்பான் தமிழகத்தில் ஒரு கலை

2

மரபைத் தோற்றுவித்து அதனைப் பாரத நாடு முழுவதும் எடுத்துச் சென்று பரப்பியிருக்கின்றான் என்ற குறிப்பும் அதிலிருந்து கிடைக்கிறது. சிற்பமொழி தெரிந்தோர், அனைத்திந்திய கலைச் சின்னங்களைத் துருவி நடுநிலையினின்று பார்த்தோர், இதனை நன்கு அறிவர். மேலும் அவனது பெயரில் பிற்காலத்தில் மயமதம் என்ற நூலொன்று தோன்றி அஃதும் இன்றளவும் தமிழகச் சிற்பிகளால் ஒழுகிவரப்படுகின்றது. அதே மயன் என்பான் பாரத நாட்டின் முதற் காப்பியமாகச் சொல்லப்படும் வால்மீகி இராமாயணத்திலும் புகழ்ந்து பேசப்படுகிறான். விந்தை பல புரிந்திடும் ஆற்றலாளன் என்றும், பெரும் புகழ் கொண்டவன் என்றும் இராமாயணம் அவனைப் புகழ்கிறது. அங்ஙனம் இலக்கியங்களால் வடக்கிலும், தெற்கிலும் ஒரு சேரப் புகழ்ந்து பேசப்படும் சிற்பி மயனொருவனே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அத்தகைய மயன் தமிழ்க்குடிமகன், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவன், மரபுச் சிற்பியர் வழித் தோன்றியவன். தந்தையின் பெயர் தாமரை. தாயின் பெயர் கருங்குழலி. தமிழர் வளர்த்த நுண்கலைகளுக்குத் தந்தையு மானவன். தமிழ், தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு ஆகியவை மறுமலர்ச்சி பெற்று எழுச்சி கொள்ளும் இக்காலக் கட்டத்தில் அத்தகைய பல செய்திகள் அவனைப் பற்றிக் கிடைத்திருக்கின்றன. அவன் சிற்பக்கலைஞனாக மட்டுமல்லாது – கலை நூலாசிரியனாகவும் இருந்திருக்கிறான். அதுமட்டுமல்ல, தமிழ்மொழியின் தொல் இலக்கண நூலாகிய ஐந்திரம் என்ற இலக்கணத்தின் மூல ஆசிரியனாகவும் இருந்திருக்கிறான் என்ற நற்செய்தியும் கிடைத்திருக்கிறது. அதோடு நின்றுவிடாமல், பன்னெடுங் காலம் புதையுண்டு கிடந்து அந்த இலக்கண நூலும் இப்போது நமக்குக் கிடைத்திருக்கின்றது. அந்நூலே இன்று தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு தமிழக அரசால் மகிழ்ச்சியுடன் வழங்கப்படும் பெருநூலாகும். இவ்விலக்கண நூல் தலைச்சங்க காலத்தில் நிலந்தரு திருவிற்பாண்டியன் அவையில் தமிழ்ப் பெரும்புலவர் முன்னிலையில் அரங்கேறிய வரலாற்றுக் குறிப்பொன்று மயன் செய்த வேறு பல இலக்கியங்களிலிருந்து தெரிய வருகின்றது. அதுமட்டுமல்லாமல் சங்கப் பலகையைச் சங்கத் தமிழ்ப் பலகையாக சிற்பியாகிய அவனே செய்தளித்தான் என்ற குறிப்புமுளது. செந்தமிழ் இயக்கம்

கண்டேன் என்றும் ஓரிடத்தில் தன்னைப் பற்றி மயனே சொல்லிப் பெருமைப் படுகிறான். அப்படியானால் இந்நூல் தோன்றிச் சுமார் 10,000 ஆண்டுகளாகிறது எனலாம். அத்தகைய தொந்நூல் அரசுக்கு எப்படிக் கிடைத்தது? சுமார் பதினைந்து மாதங்களுக்கு முன்பு ஒரு தமிழ்த்துறை ஆராய்ச்சிப் பேரறிஞர் ஒருவர் மாமல்லபுரத்திலுள்ள சிற்பக்கலைக் கல்லூரிக்குத் தற்செயலாக வந்திருந்தபோது தமிழ்ப் புலவர் ஒருவரும் அவருடன் வந்திருந்தார். அவர்தான் சமயத் துறையினரால் கருமாரிதாசர் எனப் புகழ்ப்பெற்ற புலவர் வீரபத்திரனார் ஆவர். அப்புலவர் பெருமகனார் பழமையான சிற்பக்கலைத் தமிழ் நூல்களைப் பயின்றவர் என்றும் அந்நூல்களை மனப்பாடமாகச் செய்து வைத்துக்கொண்டு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக கொள்வாரின்றி சுமந்து வருகிறார் என்றும் என்னிடம் சொல்லி அறிமுகப்படுத்தப்பட்டார். அன்னார் மனனம் செய்து வைத்த நூல்கள் அனைத்தும் மயன் என்ற சிற்பியால் இயற்றப் பெற்றவை என்றும் தெரிய வந்தேன்.

சமஸ்கிருதக் கலை நூல்களில் சொல்லப்படும் அனைத்துச் செய்திகளும், நெறிமுறைகளும், பண்பாட்டுக் கூறுகளும், சிற்ப அமைதிகளும், உருவப் பொலிவுகளும் தமிழ் மண்ணின் மணம் கொண்டிருப்பதைத் தொடர்ந்து உற்று நோக்கி உணர்ந்து கொண்டிருந்த எனக்கு இச்செய்தி தேனினும் இனித்தது. பண்டைச் சிற்பிகள் வழிவழியாகச் சொல்லிவந்த செய்தியொன்று அப்போது உயிர்பெற்று எழுந்து நிற்பதாகவே எனக்குத் தோன்றிற்று. இன்று புழக்கத்திலிருக்கும் சமஸ்கிருதக் கலை நூல்கள் அனைத்தும் தொடக்கத்தில் தமிழ் மொழியிலேயே இருந்தன என்ற மரபு வழிப்பட்ட செய்தி மெய்யாகிறதாகவே எனக்கு உணர்வாயிற்று. மயமதம் என்ற நூல், பழங்காலத்தில் மயநூல் என்ற பெயரில், மயநெறி என்ற அறிவியல் அடிப்படையில் தோன்றிய முதல் நூல்தான் என்று நான் அறிந்த மரபுவழிச் செய்தி உறுதிபெற்றது. இவற்றை அகத்தில் வைத்து, புலவர் வீரபத்திரனார் அவர்களை உற்றுநோக்கி, அவர் நினைவிலே பதிந்து கிடந்த வேறுபல மரபுக்கலைச் செல்வங்களையும், செய்திகளையும் அன்றே அப்பெரியவரிடமிருந்து வாய்மொழியாகப் பெற்றேன். மேலும் தமிழகச் சிற்பக்கலை மரபினர் தோற்றுவித்திருந்ததாகச் சொல்லப்படும் தமிழ் வேதமாகிய பிரணவ

வேதமும் அன்னாருக்கு மனப்பாடம் ஆகியிருந்ததைக் கேட்டு மெய்மறந்து போனேன். அங்ஙனம் பலப்பல வினாக்களைத் தொடுத்து, அன்னாரை பலவாறு ஆய்வுக்குட்படுத்தி எண்ணற்ற தொல் பழஞ் செய்திகளைக் கேட்டு மகிழ்ந்து, எங்கள் கல்லூரியில் பண்டைச் சிற்பக்கலை மரபுகள் பற்றி சொற்பொழிவு ஆற்றிட அன்னாரை வேண்டி, பல சொற்பொழிவுகளையும் நிகழ்த்தச் செய்தேன். அதன் பயனாகத் தமிழகத்தையே வியப்பில் ஆழ்த்தும் பல வரலாற்றுச் செய்திகளையும் நானும், மாணாக்கர்களும், ஆசிரியர்களும் கேட்டு மகிழ்ந்தோம்.

வெறும் செய்திகளையே கேட்டுப் பரவசமடைந்த எங்களுக்கு மயன்கலைத் தமிழ்ப் பாடல்களைக் கேட்டு மகிழும் ஆர்வம் மேலோங்கிய நிலையில் புலவர் வீரபத்திரனார் கலைத் தமிழ்ப் பாடல்களை இசைக்கக் கேட்டோம். அப்பாடல்களில் தமிழகச் சிற்பக்கலை மரபிற்கு உயிரான செய்திகளும் மயனுடைய வரலாற்றுச் செய்திகளும், தமிழ்ப் பெருங்குடி மக்களின் பண்பாட்டுச் செய்திகளும், நாட்டின் வளமும், நலமும் வெளிப்பட்டன. மயன் எழுதிய கலை நூல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, பன்னிரெண்டு எனக்கூறி அப்பெருமகன் பின்வரும் நூல்களையும் குறிப்பிட்டார்கள். மணிமேகலை என்ற காப்பியத்தில் அதன் நூலாசிரியர் குறிப்பிடும் ஓவியச் செந்நூல் என்ற நூலையும் அத்தமிழ் மயன் இயற்றியிருக்கிறான் என்ற செய்தியையும் அறியப் பெற்றோம். அந்நூல்களையெல்லாம் புலவர் வீரபத்திரனார் சொல்லி வந்ததோடல்லாமல், அவர் பாடிக் காட்டிய பாடல்களிலே இடையிடையே பல நூற்பெயர்கள் வருவதையும் கேட்டு உறுதி பெற்றோம். அத்தகைய பாடல்களை முதலில் கையால் எழுதச் செய்து பிறகு வாயால் பாடச் செய்து ஒலிப்பதிவும் செய்து கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் கலைத் தமிழ்ப் பாடல்களைக் கைவசம் வைத்துள்ளோம். புலவர் வீரபத்திரனார் ஒலிபெருக்கியைக் கையிற் பிடித்து, கண்களை இறுக மூடி, வாய்திறந்து பாடல்களை விரைந்து மழையெனப் பொழியும் காட்சியானது எங்களை வியப்பின் சிகரத்துக்கே தூக்கிச் சென்று கொண்டிருந்தது. அவர்தம் மனன ஆற்றலை எப்படிப் புகழ்வது?

மயன் இயற்றிய பன்னிரு செந்நூல்கள்:

1. ஓவியச் செந்நூல்
2. சிற்பமாச் செந்நூல்

3. கட்டடச் செந்நூல்
4. மனைநிலச் செந்நூல்
5. நிலமனைச் செந்நூல்
6. கணிதமாச் செந்நூல்
7. வானியற் செந்நூல்
8. மரக்கலச் செந்நூல்
9. விண்கலச் செந்நூல்
10. பெருநடச் செந்நூல்
11. ஏழிசைச் செந்நூல்
12. தமிழியற் செந்நூல்

இன்னும் சுமார் ஏழு லட்சம் பாடல்கள் இருப்பதாக புலவர் வீரபத்திரனார் சொல்ல, அப்பணி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கலை நூல்களோடு அவர் மனப்பாடம் செய்து வைத்திருந்த தொல்பழந்தமிழ் இலக்கண நூலாகிய ஐந்திறம் என்ற நூல் அவர்தம் கையால் எழுதப்பெற்று அச்சேறி இன்று நம்மிடையே முதுபெரும் தமிழ் நூலாக தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

புலவர் வீரபத்திரனார் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் சரபோஜி மன்னர் பாதுகாத்து வைத்திருந்த நூல் நிலையத்தில் நான்காண்டு காலம் தங்கியிருந்து அந்நூல்களையே மனப்பாடம் செய்துவிட்டார். தமிழ் மொழியில் புலமைப் பெறுதற்கும், கவிதை இயற்றும் ஆற்றல் பெறுதற்கும் நல்ல இலக்கியங் களை மாணவப் பருவத்தில் மனப்பாடம் செய்திடல் வேண்டுமென்று அவர்தம் பள்ளி ஆசிரியர் அறிவுறுத்திய ஒரு நிகழ்ச்சி அன்னாரின் உள்ளத்தில் நின்று, அதன் பயனாய் இனிய பாடல்களைத் தேடமுயன்ற அவர், தஞ்சை நூல் நிலையத்தில் கட்டி ஒதுக்கிக் கிடந்த பழஞ் சுவடிகளை விரித்துப் பார்த்தார். எதுகை, மோனை, இனிய ஓசை நிரம்பிய தமிழ்ப் பாடல்கள் அவர் மனதை ஈர்த்தன. இனிய தமிழோசையில் தன்னையிழந்திட்ட புலவர் வீரபத்திரனார் நான்காண்டு காலத்தில் பத்து லட்சம் பாடல்களை மனனம் செய்து வைத்துக் கொண்டார். அவர்தம் நினைவாற்றல் தான் எத்தனை வலுவானது.

தமிழ்க்குடி மக்கள் செய்த தவப்பயனாய் – சிற்பக்கலை மரபினர் செய்த புண்ணியவசத்தால் அப்பத்து லட்சம் பாடல்களில் இரண்டரை லட்சம் பாடல்கள் மயன் விதித்துக் கொடுத்த மரபுசார் கலைத் தமிழ் நூல்களாக இன்று கிடைக்கப் பெற்றிருக்கின்றோம். அவையனைத்தும் கலை இலக்கண நூல்களாகும். இன்றும்

சிற்பிகள் ஒழுகிவரும் செய்திகள் – கலை நுட்பங்கள் மட்டுமல்லாமல் இன்றைய வழக்காற்றில் இல்லா அரிய பெரிய கலைச் செய்திகளும், அறிவியல் நுட்பங்களும் நிரம்பிய மூல நூல்களாக அவை விளங்குகின்றன.

செயற்கரிய செயலைச் செய்து இன்று நம்மிடையே இருக்கும் புலவர் வீரபத்திரனார் பலபெரும் புலவர்களை தனது காலத்தில் சந்தித்து அப்பாடல்களைப் பற்றி எடுத்துரைத்தும் பயன்தராது போனது. எனவே அப்புலவர் சமயத்துறையில் புகுந்து பல சமய இலக்கியங்களை வெளியிட்டு அவ்விலக்கியங்களிலே மயன் பாடல்களை இடையிடையே புகுத்திப் பதிப்பித்து, அறிஞர்களிடையே ஒரு வியப்பை எழுப்பிட முடிந்ததேயொழிய அவரிடம் முடங்கிக் கிடந்த செய்திகளை வலிந்து பெற அக்கால நிலை யாருக்கும் இடம் தரவில்லை. பெரும்பாலும் அறிவியல் நிரம்பிய கலை இலக்கண நூல்களாகவும், கலைச் சொற்கள் மலிந்ததாகவும் இருந்தமையே பெருங்காரணமாகும் எனலாம்.

இந்நிலையில் புலவர் வீரபத்திரனாரிடம் முடங்கிக் கிடந்த நூல்களின் சிறப்பையும், பயனையும் நாங்கள் நன்கு உறுதி செய்து கொண்டு, எங்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் திரு.வெ.சீனிவாசன் அவர்கள் துணைகொண்டு, தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு செ.அரங்கநாயகம் அவர்களை அவர்தம் இல்லத்தில் சந்தித்து புலவர் அவர்களை அறிமுகப்படுத்தி, அவர் மூலம் பெற்றிட்ட கலை நூல்களைக் காட்டி மகிழ்வித்து, அந்நூல்களை அன்னாரிடமிருந்து பதிவு செய்து, அவற்றை அச்சேற்றவும் பேராதரவு நல்குமாறு பணிந்து வேண்டினோம். அமைச்சர் அவர்கள் கலைத் தமிழ்ப் பாடல்களை கேட்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் பெற்ற உவகையை வருணித்துக் காட்டிட வார்த்தைகளே இல்லையெனலாம். இப்பணியைத் தலையாய பணியென அகத்தே கொண்டு எங்கட்கு தகுந்த ஆதரவினைத் தந்துதவினார்கள். மாமல்லபுரம் வந்து அப்பாடல்களைக் கேட்டு உறுதி கொண்டார்கள். மயன் தமிழின் இனிமையைச் சொல்லிச் சொல்லி இன்புற்றார்கள். மேலும் பல மூதறிஞர்களிடம் கொடுத்து கருத்துக் கேட்டார்கள். ஆராய்ச்சியாளர்களையும் அனுப்பி வைத்து அவர்தம் ஆலோசனைகளையும் கலந்தார்கள். மாமல்லபுரம் வந்து அந்நூல்களை இறுதியாகப் படிக்கக் கேட்டு மனநிறைவு கொண்டார்கள். ஐந்திறம் என்ற தமிழ் இலக்கண நூலை முதலில் எழுதித்தர வேண்டுமென்று அப்புலவர் பெருமகனாரிடம் விருப்பமும் தெரிவித்தார்கள்.

இதற்கிடையே மாண்புமிகு தமிழக முதல்வர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களையும் சந்தித்து நடந்தவற்றை விளக்கிக் கூறி, அவர்களுடைய மேலான ஆர்வத்தையும் பெற்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க சுமார் 10 நாட்களில் அச்சேற்றும் பணி மேற்கொண்டு இனிது முடித்து, உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவிடும் இப்பொன்னான நாளில் மதுரை மூதூரில் சிறப்பு நிகழ்ச்சியாக ஐந்திறம் என்ற இத்தொன்னூலை முதல் நூலாக தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு மகிழ்ச்சியோடு சொந்தமாக்குகிறார்கள். தமிழுக்குப் பெருமை சேர்க்கப் பெரியதோர் உலகத் தமிழ் விழா எடுத்து, தமிழ் வளர்ந்தோங்க தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்து, உலகத் தமிழர்களையெல்லாம் இணைத்துத் தமிழ் காக்க உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றும் நிறுவி பெருமகிழ்ச்சி கொள்ளும் இந்நன்னாளில் இத்திருநூலை உலகத் தமிழருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடைமையாக்குவதும் அந்நிகழ்ச்சி இம்மதுரையில் நிகழ்வதும் எத்துணைப் பொருத்தம்!

மயன் இயற்றிய ஐந்திறம் என்ற இந்த இலக்கண நூலில் மொழி இலக்கணம் மட்டுமில்லாமல் ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை, இசைக்கலை மற்றும் நாட்டியக்கலை ஆகிய நுண்கலைகளின் இலக்கணங்களும் அவற்றைச் சார்ந்த அறிவியல் நுட்பங்களும் பெருமளவில் வருகின்றன. எனவே தான் தொல்காப்பியர் அவற்றை முழுமையாகக் கொண்டிடாமல் மொழியிலக்கணத்தை மட்டும் பிரித்தெடுத்து தன்னுடைய இலக்கண நூலை ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம் என்று சொல்லிக் கொண்டாரோவென நினைக்க வேண்டியிருக்கிறது. மேலும் இங்கே காலம், இடம் [Time and Space] என்ற விஞ்ஞான நுட்பங்கள் வரையறுக்கப் படுகின்றன. மற்றும் ஒளிஒலி நுட்பங்கள், ஒளிப்பொருள் மற்றும் ஒலிப் பொருள் பற்றிய விஞ்ஞானக் கருத்துக்கள் அணுவியல் நுட்பங்கள் அனைத்தும் இடம் பெறுகின்றன.

உலகத்தில் நடைபெறும் அனைத்துச் செயல்களும் நமது உள்ளத்திலே தான் நடைபெறுகின்றனவாதலால் உள்ளமே இடமாகும். அவ்வுள்ளத்தின் துடிப்பே - அதன் இயக்கமே காலமாகும். காலவிசையின் அளவுகளே - காலக் கூறுகளே - இலக்கணக் கூறுகளாகும். எனவே இவ்வுளவியல் ஒளியியலாகி, ஒளியியல் அணுவியலாகி மற்றும் ஒலியியலாகி அவை மேலும் வெளிப்பட்ட நிலையில்

பொருளியலாகி, மொழியியலாகி, இறுதியில் கலையியலாகவும், பாவியலாகவும் வடிவம் பெறுவதை இந்த ஐந்திற நூலிலும், பிற செந்நூல்களிலும் அடிக்கடி சொல்லப்படுவதைக் காண்கின்றோம். ஒலி அணுக்கள் சேர்ந்து மொழியாகிறது என்ற கூற்றை மயனும் நன்னூல் ஆசிரியரும் குறிப்பிடுவதை இங்கு நினைவு கொள்வது பொருந்துமெனக் கருதுகிறேன்.

அணுத்திரள் ஒலியே எழுத்தொலி சிறப்பாம்
ஒளியொலி வடிவாய் ஓங்கும் எழுத்தே
எழுத்தே முதல்சார் பென்றிரு வகைத்தே
– [ஐந்திரம்]

மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே
– [நன்னூல்]

இக்கால விஞ்ஞானம் காலம், இடம் என்ற அறிவியல் நுட்பங்களை அறுதியிட்டு இன்னும் கூறிடவில்லை. எண்ணாயிரம் ஆண்டுகட்கு முன் பிறந்த தமிழ் மயன் அவற்றையே மையமாகக் கொண்டு உள்ளமே இடமாகும் என்பதை உணர்ந்து, இடமே வடிவம் கொள்கிறது என்ற நுட்பமுஞ் சொல்லி இடத்தின் இயக்க இலக்கணத்தை மொழியிலக்கணமாகவும், கலையிலக்கணமாகவும் தந்திருக்கிறான். இலக்கணத்தைக் கொண்டே இலக்கியம் இயற்றுதல் வேண்டுமென்பதே மயனின் கொள்கையும் நடைமுறையுமாகும். இவ்விலக்கணப் படி அமைந்த உருவங்கள் மூலத்தின் படிமங்கள் ஆகுமன்றோ? அவ்விலக்கணமே தமிழ் மொழியிலக்கணமும் ஆகுமானால், தமிழ் மொழியானது மூலத்தின் மொழி - இறைமொழி ஆகுமல்லவா? எனவேதான் இறைவனான சிவபெருமான் தமிழ்ச் சங்கத்தில் புலவரோடு வாதிட்டு இன்புற்றானோ? சிற்பக் கலையைப் பொறுத்த மட்டில் மயன் இயற்றி அன்று தந்த இலக்கணங்களை அன்றுபோல் இன்றளவும் இக்காலச் சிற்பிகளாகிய நாங்கள் உயிர்போலக் காத்து வருகின்றோம், என்பதைச் சொல்லி மகிழ்கிறேன். இலக்கண மரபு வழுவாமல் வெளிப்படவே சிற்பியர் படைப்புக்களை வழிபடு படிமங்களாக தமிழ் மக்கள் மதித்துப் போற்றி வந்த மரபுதான் எத்தனை பெரிது! அக்கலைகள் புத்துயிர் பெற்று ஓங்கி வளர்ந்திட தமிழக அரசு செய்து வரும் கலைத் தொண்டினைப் போற்றி என் நன்றியையும் இத்தருணத்தில் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இங்ஙனம் கலையியலும், மொழியியலும், அறிவியலும், பொருளியலும் மயன் நூல்களில் கலந்தே வருவதினால் இதுகாறும் இந்நூற் கருத்துக்கள் தெளிவாகி வெளிப்பட வாய்ப்பின்றி காலம் தாழ்ந்து விட்டது.

இந்நூல்களின் அறிவியல் உள்ளீடைப் புரிந்துக் கொண்டு இந்நூல்களைப் பெற்றிடும் முயற்சியிலும், பதிப்பித்திடும் முயற்சியிலும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் ஈடுபட்டிருப்பது சாலப் பொருந்துமல்லவா?

புலவர் வீரபத்திரனார் அவர்கள் மயன் நூல்களில் காணப்படும் ஓசை நயத்தை மட்டும் பருகிடாது மயனுடைய சொல்லாட்சியையும் தன்வயப்படுத்தி யிருக்கிறார்கள். மயனாரின் கருத்துக்கள் அவர்தம் கருத்தாக வெளியிட்டிருப்பதை அவர்தம் பிள்ளைத்தமிழ், இலக்கியத்தமிழ், நூல்களிலே காணலாம். அவர் ஒரு தமிழ்ப் பேரறிஞர். மயன் சொற்களே அவர்தம் பேச்சிலும் எழுத்திலும் வருகின்றன. மயன் இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு அவ்விலக்கியப் புலமையும் வாய்க்கப்பெற்று நூல்களின் உட்கிடையை விளக்கிச் சொல்லிடும் ஆற்றலும் பெற்றிருக்கிறார்கள். கருத்தாழம் கொண்ட பாடல்களைத் தானே இயற்றிடும் பேராற்றலும் பெற்று விளங்குகிறார்கள்.

இந்நூலாசிரியன் மயன், படைப்பாற்றல் இயல்பாகவே வாய்க்கப்பெற்ற மாபெரும் சிற்பி. அக்காலச் சிற்பிகள் அனைவரும் இக்காலப் பொறியாளர்போல அனைத்துப் பணிகளிலும் ஈடுபட்டுத் தமிழர் நாகரிகத்துக்கே இடமாக விளங்கியவர்கள். தனது இச்சைக்கு வடிவம் தர முயன்ற மயன் தனது இயக்கத்தின் தொடர் நிகழ்ச்சிகளை உற்று நோக்கி உளவியல் ஞானம் பெற்று உண்மையினை எல்லாப் பொருள்களிலும் கண்டு மகிழ்ந்து உயிரின் இயக்க இலக்கணத்தை வடித்துத் தருகிறான். அதன் விளைவே ஐந்திறம். அதன் விளைவே கலை இலக்கண நூல்களும் ஆகும்.

மாந்தம் தம் உள்ளம் ஒரு விந்தையான பொருள். அவ்வுள்ளம் இயற்கை யானது. எப்பொழுதும் உயிர்ப்புடனேயே இருப்பது. அஃது ஒடுங்கி விரியும் தன்மையது. கண்களால் பார்க்கப்படும் பொருள்களும் காதுகளால் கேட்கப்படும் பொருள்களும் அதற்கு உணர்வாகிவிடும். அதாவது அதன் உள்ளேயே ஒடுங்கிவிடும். உள்ளத்தின் ஒடுக்க நிலையே அதன் உணர்வுநிலை எனப்படும்.

உள்ளம் உருகி உணர்வாகிறது என்றும் சொல்லலாம். உள்ளத்தின் மையத்தில் ஒரு புள்ளியல் இவ்வுணர்வு நிகழ்கிறது. அதற்கு உணர்வாகாத பொருளே இல்லை. அதனால் வெளிப்படாத பொருளும் இல்லை. இஃது பொருளே மயமானது. அனைத்துப் பொருள்களின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் அஃதே இடமாவதால் உள்ளம் இடம் எனப்படுகிறது. இதற்கு மூலம் என்ற பெயருமுண்டு.

உள்ளம் எனப்படும் இயற்கையானது பொருளே மயமானதாயிருப்பதால் எப்பொருளும் அதற்கு உணர்வாவதால் – அனைத்துப் பொருளும் அதிலிருந்து வெளிப்படுவதால் – அவ்வுள்ளமான இயற்கை, தன்னேயே புலப்படுத்திக் கொள்கிறதல்லவா? இஃதே உண்மை நிலை.

இவ்வுள்ளம் உள்ளுவதெல்லாம் பொருள். உட்கொள்வதெல்லாம் பொருள். இவ்வுள்ளம் ஒன்றை உள்ளி, உன்னி, உணர்வாக்கி அதனால் வெளிப்படுவது ஒளி. இஃது அக விண்ணில் தோன்றுவது. இது முதற்பொருள் எனப்படும். வரவிருக்கும் முதிர்ந்த பொருளுக்கு இதுவே முதல் நிலையாகும். ஒளிப்பொருளாகிய முதற் பொருளை தெளிப் பொருளாக்குதற்கு மூலமானது ஒரு முயற்சியை மேற்கொள்கிறது. இம்முயற்சி மூலத்தின் முயக்கம் அல்லது இயக்கம் என்ப்படும். மூலமானது தன்னை ஒடுக்கி, முடுக்கி, விசையோடு இடமிருந்து வலமாகச் சுழலத் தொடங்குகிறது. இச்சுழற்சியினால் ஒரு வகையான விசை மூலத்திற்கு ஏற்படுகிறது. இந்த விசையானது ஆற்றல் எனப்படும். இவ்வாற்றலுக்குக் காலம் என்ற பெயரை மயன் தருகிறான். அந்த விசையை காலவிசை என்றும், காலமாக் கடவுள் என்றும் மயன் குறிப்பிடுகின்றான். மூலத்தின் துடிப்பே காலம் எனப்படுகிறது.

இங்ஙனம் இயற்கையின் ஐந்தியல் இலக்கணத்தை மொழியில் ஏற்றி மூலத்தில் பிறந்திடும் ஐந்தெழுத்தில் [அ,இ,உ,எ,ஒ] தொடங்கி இறுதியில் எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி என்ற ஐந்தியல் அமைப்பை – ஐந்தியல் மரபை மயன் தோற்றுவிக்கிறான். மூலமாகிய உள்ளத்தில் அதன் இயக்கம் கொள்ளும் நேரத்தில், ஐந்து ஆற்றல் [ஐந்திறம்] ஐந்து நிலைகளில் வெளிப்படு கின்றன. இந்த அடிப்படை இயக்க ஆற்றலால் விளைந்த வினைகள், ஐந்தைந்தாக விளையும் என்றும், இஃதே இயற்கையின் இயல் நெறி என்றும், அவற்றையே கலை

இலக்கணமாகக் கொண்டுள்ளதாகவும் மயன் சொல்கிறான். ஐம்புலன்கள், ஐம்பொறிகள், ஐம்பூதங்கள், ஐந்தெழுத்துக்கள், ஐவண்ணங்கள் என்று ஐந்தாகவே இயல்பாக அமைவதை மொழி முதல் அனைத்துக் கலைகளிலும் காட்டி இலக்கணம் தீட்டுகிறான். இங்கு இவ்வைந்தியல் முறை பற்றி கைகாட்டி போல் எட்டி நின்று காட்டியே அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது. இந்தப் பழைய இலக்கணம் புதியதாக வருவதால், அறிஞர் பெருமக்கள் மேற்சொன்ன கருத்துக்களை வைத்து மயன் விதித்துக் கொடுத்த ஐந்திற இலக்கண நூலுக்குள்ளும் கலை நூல்களுக்குள்ளும் புகுந்து அதன் விரிவை தத்தம் அனுபவத்திற்கேற்ப ஆய்வுகள் செய்து இப்பேருண்மையை துய்க்குமாறு வேண்டிக் கொள்கிறேன். என்றாலும் இவ்விடத்தில் ஒன்றை மட்டும் சொல்லி என்னுடைய அறிமுகச் சொற்களை முடித்துக் கொண்டு அமைகிறேன்.

உள்ளமாகிய இடம், தன்னை இயக்கித் தொழிற்படுத்திக் கொள்ள சுழற்சி கொள்வதால் ஒளி அணுக்கள் சிதறுகின்றன. இந்தச் சிதறிய அணுக்கள் பயன்பட வேண்டுமே எனக் கருதி ஒரு கட்டுப்பாட்டை மூலமானது பிறப்பித்து அணுச் சிதறல்களை ஒழுங்குப்படுத்துகிறது. இவ்வொழுங்கு சீலம் எனப்படுமென்று முன்பு குறிப்பிடப்பட்டது. இச்சீலத்தை அல்லது ஒழுங்கு நெறிகளை – அணுதிரண்டமையும் பாங்கினை – அளவியலை – வாய்ப்பாடாக மயன் தருகிறான். இஃது எளிமையானது. இந்த வாய்ப்பாட்டையும் இவ்வாய்ப்பாடு தரும் அளவுகளையும், கட்டடக் கலையிலும், சிற்பக் கலையிலும் மரபுச் சிற்பிகளாகிய நாங்கள் மயன் காலந் தொட்டு இன்று வரை கொஞ்சமும் தவறிடாமல் பயன்படுத்தி வருகிறோம் என்பதை மகிழ்ச்சி பொங்கக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒன்றாயிருந்த ஒளிப்பொருள் காலவிசையினால் பல கூறுகளாகச் சிதறுகின்றது. இவற்றுக்குக் காலக் கூறுகள் என்று பெயர். மூலமானது தான் எண்ணிய பொருளை அடைவதற்கு [தன்னையே அப்பொருளாக மாற்றிக் கொள்வதற்கு] மூலமானது காலக் கூறுகளை கட்டுப்படுத்துகிறது. இக்கட்டுப் பாட்டினால் சீரான ஒளி அணுக்கள் விரிந்து தோன்றுகின்றன. இங்ஙனம் மூலம் தனக்குள் புகுத்திக் கொண்ட கட்டுப்பாட்டினால் ஒரே சீரான அணுக்கள் தோன்றுகின்றன அல்லவா? இந்த சீர்த்தியை மயன் சீலம் என்ற சொல்லால் சுட்டுகிறான். இந்தச் சீரான அணுக்களின் திரட்சியினால் பற்பல வடிவங்கள்

அல்லது பொருள்கள் தோன்றுகின்றன என்றும் சொல்கிறான். அவற்றைக் கோலங்கள் என்று பெயரிட்டழைக்கிறான். இவ்வணுக்கள் எங்ஙனம் கூடுகின்றன? எங்ஙனம் பருமனாகின்றன? எங்ஙனம் பருப்பொருளாகின்றன? என்ற அறிவியல் நுட்பங்களையெல்லாம் மிகவிரிவாகக் கூறுகிறான். இங்ஙனம் மூலம் தனக்குள் புகுத்திக் கொண்ட கட்டுப்பாட்டினால் ஒரே சீரான அணுக்கள் தோன்றுகின்றன அல்லவா? இந்தச் சீரான அணுக்களின் திரட்சியினால் பற்பல வடிவங்கள் அல்லது பொருள்கள் தோன்றுகின்றன என்றும் சொல்கிறான். அவற்றைக் கோலங்கள் என்று பெயரிட்டழைக்கிறான். இவ்வணுக்கள் எங்ஙனம் கூடுகின்றன? எங்ஙனம் பருமனாகின்றன? எங்ஙனம் பருப்பொருளாகின்றன? என்ற அறிவியல் நுட்பங்களையெல்லாம் மிகவிரிவாகக் கூறுகிறான். இங்ஙனம் தோன்றிய கோலங்களின் கூட்டமைப்பே ஞாலம் எனப்படுமென்றும் சொல்கிறான். எனவே மூலம் தன்னையே புலப்படுத்திக் கொள்ளுதற்கு தானே காலத்தை தோற்றுவித்துக் கொண்டு, அதைக் கட்டுப்படுத்தி சீலமாக்கிக் கொண்டு, பல கோலங்களையாக்கி ஞாலத்தை தோற்றுவித்துக் கொள்கிறது என்று ஒருபடிமுறையைக் காண்கிறான். அதனை மூலத்தின் ஐந்தியல் என்று சொல்லி இயற்கையின் இயக்கத்தில் ஓர் இலக்கணத்தையே காண்கிறான்.

உள்ளமே மூல மாகி உணர்வுறும் கோல மாகி
உள்ளமே ஊக்க மாகி உள்ளமே உணர்வு மாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய ளித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்

காலமும் இடத்தினாலே கருத்துணர் வுற்ற போது
மூலமும் சீலம் நோக்கி முழுமையின் ஆய்ந்து ணர்ந்து
ஞாலமே போற்றும் வண்ணம் நன்னெறி முறையில் நின்று
சீலமாம் வாழ்வளிக்கும் உளவியல் நூலே செப்பும் – மயன்

மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் ஆகிய ஐந்தில் மூலமே ஞாலமாகிறதால் அவற்றை விடுத்து காலம், சீலம், கோலம் ஆகிய மூன்று நிலைகளை மட்டும் உற்றுநோக்கிச் சுருக்கமாகச் சொல்லும்போது, காலமே கோளத்திற்கு காரணமாகிறது. எனவே காலத்தை காலமாக் கடவுள் என்பான் மயன். மூலமானது காலத்தால் – கால விசையால் – காலக் கூறுகளால் – கால அளவுகளால் கோலத்தை தோற்றுவிக்கிறது. தோற்றுவிக்கப்பட்ட பொருள்கள் இனிமை பெற்றிடச் செய்ய சீலம் தேவைப்படுகிறது. இந்த சீலத்தை விசையின் கட்டுப்

பாட்டினால் மூலம் சாதித்துக் கொள்கிறது. [இச்சீலத்தை ஆங்கிலத்தை ரிதம் என்று சொல்கிறோம்.] ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு அளவுகளும், அவ்வளவுகளில் சீலமும் இன்றியமையாதன. இன்னும் நுணுகிப் பார்த்தால் சீலமே பொருளாகிற தென்பது மட்டுமல்லாமல் அதற்கு இனிமையும் பயனும் தரவல்லதாகிறது.

ஆகவே ஓர் அளவியல் முறையிலே உருக்கொடுக்கும் தொழிலை மூலமானது செய்கிறது. இங்ஙனம் சிதறிய மிக நுண்ணிய ஒளி அணுக்கள் ஒவ்வொன்றும் ஒரே பருமனாக அமைவதையும் மயன் பேசுகிறான். அவ்வணுவின் நீளம், அகலம், கனம் ஆகிய அம்மூன்றும் ஒரே அளவாகும் என்கிறான். அதாவது ஒவ்வொரு அணுவும் ஒரு கனச் சதுரமானவை என்கிறான். இந்த ஒரு கனச் சதுரத்திற்கு உள்ளே அடைந்திருப்பது ஒளியன்றோ? இவ்வொளிக் கட்டியை மயன் சிற்றவை என்றும், சிற்றம்பலம் என்றும் சொல்கிறான். [இந்நிலையில் கட்டடக் கலைத் தோற்றம் கொள்கிறதாகவும், மயன் கொள்கிறான்]. இச்சிற்றவைக்குள் அடங்கிக் கிடப்பது ஒளி என்று சொன்னோமல்லவா? அந்த ஒளி அசைவற்று உறைந்து நிற்கும் ஒளி அல்ல. அவ்வொளி எப்பொழுதுமே நடுங்கிக் கொண்டிருக்கிறது என்றும் சொல்கிறான். அந்நடுக்கம் சீராக நடப்பதால் – அதிலும் ஒரு சீலமிருப்பதால் – அதனை ஆடல் என்றே சொல்கிறான். அவ்வாடலுக்கு அவன் கொடுத்திட்ட வடிவமே உலகப் பெரும் புகழ் பெற்ற ஆடலான் திருவுருவம் ஆகும். சிற்றம்பலமும், சிற்றம்பலத்தில் உள் நின்று நடம்புரியும் ஒளிநடராசனும் மயனால் தமிழகக் கலை மரபுக்குக் கிடைத்திட்ட பெருஞ்செல்வமாகும். ஐந்திறமாகிய – ஐந்து ஆற்றல்களையே – ஐந்தொழிலையே – தனித் தொழிலாகக் கொண்ட மூலத்தின் மறுபதிப்பாக இந்நடராசத் திருக்கோலம் அமைந்திருக்கிறதென மயன் சொல்லி மகிழ்கிறான்.

உளநிகழ்ச்சியின் படிமுறையில் உளத்தில் தோன்றிய உணர்வானது, விண்ணாகி, ஒளியாகி வெளிப்பட்டு வளியினால் அசையாகி, ஓசையாகி, ஒலியாகி மொழியாகிற பாங்கினை மயன் தனது பாடல்களிலே இனிமை துளிர்க்கப் பாடுவதையும் காணலாம்.

நமது உள்ளத்தில் நிகழும் இயக்க இலக்கணத்திற்கு ஒப்பாகவே அண்ட மூலத்தில் – விண்ணில் – நிகழ்கிறது என்று மயன் உற்றறிகிறான். மண்ணையும் விண்ணையும் ஒன்றாக்குகிறான். பிண்டத்தில் நிகழ்வது அண்டத்தில் நிகழ்கிறது

என்கிறான். பிண்டத்தில் விளைந்த காலக்கூறுகளும், காலக் கணக்கும் சீலமும் கோலமும் அண்டத்திலும் அங்ஙனமே அமைகின்றனவெனச் சொல்லி அண்ட மூலம் படைத்து வரும் உயிர்கலையும் அக்கணக்கியலை வைத்து நாமும் படைக்கலாம் என்றும் சொல்லி தனது நூல்களிலே பற்பல மொழிபடைத்தேன் என்றும் சொல்லுகிறான். அறிவியல் நிலையிலே இது முடியும் என்றே தோன்றுகிறது.

தொடக்கத்தில் தமிழ் மொழியின் இனிமை பற்றிக் குறிப்பிடும் பொழுது கவிஞர் பாரதியின் ஓர் அனுபவக் கூற்றை குறிப்பிட்டிருந்தேன். அம்மொழிக்கு இனிமை பயப்பது அம்மொழிக்கு வாய்த்த இலக்கணமேயாகும் என்று சொன்னேன். அவற்றை இங்கு நினைவு கூர்ந்து மேலும் ஒரு சில கருத்துக்களை சொல்லி மகிழ்கிறேன்.

நமது மொழிக்கும், ஐம்பெருங்கலைகளுக்கும் வாய்த்த இலக்கணம் ஒரே அடிப்படையில் அமைந்து, ஒரே சீலத்தையும் பெற்றிருக்கிறது. மொழி இலக்கண மாயினும் சரி, கலை இலக்கணமாயினும் சரி, அவை மயன் கூறும் உயிரின் இயக்க இலக்கணமாக அமைந்திருப்பதினால் இன்பமே மயமான உயிர், இன்பமே கலைகளாக மாற்றம் கொண்டு விட்டன என்று சொன்னால் மிகையாகாது. இந்த ஆன்மீகத் தன்மையே நமது கலைகளுக்கும், மொழிக்கும் இருக்கிறது என்பதை துணிந்துக் கூறலாம். என்றுமுள உயிர், என்றுமுள மொழியாகவும், கலைகளாகவும் நமது தமிழ் மரபுக்கு வாய்த்திருப்பதை எண்ணி மகிழ்ந்திடுவோமாக.

அகத்தில் நிகழ்ந்த இவ்வினிய நிகழ்ச்சிகளும், இனிய முடிவுகளும், இனிய இலக்கண மரபாக வாய்த்த நிலையில் அதனை அப்படியே சிற்பிகளும், மொழி வல்லுநர்களும் கையாளுவதால் உயிர் துய்த்த இன்பத்தை மீண்டும் மீண்டும் உயிர் துய்த்து இன்புறுகிறது. புறச் செயல்கள் மற்றும் மூளையின் ஆட்சி இதில் குறைந்த அளவே உளதென்றும் சொல்லிவிடலாம்.

மயன் வழிபட்ட கலைத் தமிழ் நூல்களை விரைந்து அச்சு ஏற்றி வெளியிட தமிழ்நாடு அரசு மனமுவந்து நிதி வசதி செய்திருப்பது இந்நேரத்தில் எண்ணி மகிழ்ந்திடுதற்குரியதாகும்.

முதற் சங்க காலத்தில் பிறந்த சிற்பி மயன், நிலந்தரு திருவிற்பாண்டியனால்

ஆதரிக்கப் பெற்று, குமரி மாநிலத்தில் கடல் முல்லை என்ற ஊரில் சிற்பக் கலைக்கூடம் நிறுவி, தன்னால் நிறுவப்பட்ட மரபுசார் சிற்பக் கலையினை மாணாக்கர்களுக்கு கற்பித்து கலைத்தொண்டு செய்து வந்தான். தில்லை மாநகர் தனில் ஒளிநடராசனுக்கு கோவில் கட்டி அதனைப் பொன்னவையாக ஆக்கி, இன்று உலகம் போற்றும் ஐந்து உலோகத்தாலான ஆடல்வல்லானின் திருவுருவையும் அவனே ஆக்கியமைத்துப் போற்றியும் வந்தான்.

கபாடபுரம் என்ற மதுரை மாமூதூரில் செந்தமிழ்க் கூடம் அமைத்து செந்தமிழ் இயக்கங் கண்டேன் என்று மயன் தனது நூல்களில் பெருமையோடு சொல்லிக் கொள்கிறான். தன்னை ஆதரித்த மன்னனையும் அவனது காலச் சூழலையும் இதோ அவனது அழகு தமிழ்ப் பாடல்களில் காண்போம்.

நிலந்தரு திருவின் வேந்தன் நற்றமிழ் அவைக்க ளத்தே
வலந்தரச் செய்யும் நூல்கள் வளர்கலைச் சிற்பம் ஆதி
நலந்தரும் கலைவ ளர்க்கும் நற்றமிழ் இலக்கி யங்கள்
பொலந்தமிழ் மொழியி னாலே பொற்புறப் படைத்த வாறே.

அவைக்களப் பலகை கண்டே அருந்தமிழ்ப் பலகை யாக்கி
அவைக்களச் சான்றோர் வாழ்ந்த அருந்தமிழ்ப் பலகை ஏற்றி
அவைக்கள வேந்தன் வாழ்த்த அருந்தமிழ் நூல்கள் எல்லாம்
அவையுளோர் கண்க ளிக்க அரங்கேறி நின்ற தன்றே.

மரத்தினால் பலகை செய்து மாக்கலை வளர்ப்ப தற்கு
உரத்தினால் வண்மை ஓங்கி உளத்தினால் திண்மை பெற்று
வரத்தினால் பெற்ற வாறு வண்டமிழ் கலைகள் ஓதி
சிரத்தினால் போற்று கின்றேன் சிறியனேன் மயனே யன்றோ.

அந்தக் கபாடபுரமாகிய மதுரை மூதூர், காலத்தால் இடப்பெயர்ச்சியாகி இன்று மதுரையாக விளங்குகிறது. அம்மதுரையம்பதியில் ஐந்திரம் மீண்டும் வெளிப்படுவது எவ்வளவு பொருத்தம்! இதனைத் திருவருளே கூட்டி வைத்திருக்கிறதெனில் மிகையாகுமோ!

வாழ்க தமிழ் ! வளர்க நம் மரபுக் கலைகள் !!

டாக்டர் வை.கணபதி ஸ்தபதி,
முதல்வர்
அரசினர் கட்டிடக்கலை மற்றும்
சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

ஐந்திறம்

காலப் பார்வையும், தமிழ்ப்பார்வையும்

(அறிஞர் வ.சுப.மாணிக்கம்)

"செந்தமிழ்ச் செல்வி"
என்ற தமிழ் இலக்கிய மாத இதழிலிருந்து பெறப்பட்டது
அக்டோபர் இதழ் பக்கம் 57-62,
நவம்பர் இதழ் பக்கம் 107-111,
திசம்பர் இதழ் பக்கம் 161-163
ஆண்டு: 1986

தமிழ்நிலைபெற்ற தன்னேரில்லா மதுரை மாநகரின் கண் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவில் வெளியிடப்பெற்ற 'ஐந்திறம்' என்ற பெறலரும் பனுவலை நான் வரவேற்கின்றேன். முன்னரே 'சிற்பச் செந்நூல்' எனப் பெயரிய கலைப்பனுவலை உரிமையோடு பதிப்பித்த தொழில் நுட்பக் கல்வியியக்ககம் ஐந்திற நூலையும் தொடர்ந்து வனப்புறப் பதிப்பித்திருப்பதைப் பாராட்டுகின்றேன்.

நம் நினைவுச் சுரங்கத்துள் ஐந்திற மணிகளைக் காத்துப் போற்றி வைத்து மாற்றுப்படாது அறிவுக் கருவுயிர்த்த புலவர் வீரபத்திரனார் நம் தனி மதிப்புக்கும் வழிவழி நன்றிக்கும் உரியவர். இந் நன்மகனார் இன்றும் தம் நினைவுச் சுரங்கத்தில் தேக்கித் தொகுத்து வைத்திருக்கும் பல்விலக்கச் செய்யுட்களையும், தொழில்நுட்பக் கல்வியியக்ககம் தொடர்ந்தும் விரைந்தும் பதிப்புருவாக்க வேண்டுமென்பது என் விழைவு. ஐந்திறத்தின் தெளிவு இவ்வெளியீடுகளைச் சார்ந்தது.

''பல்துறையில் ஆழ்ந்த புலமையும் ஆய்வனுபவமும் பெற்றுள்ள மூதறிஞர்கள் படித்துப் பார்த்து அவற்றின் நுட்பங்களை ஆய்ந்து மக்களுக்கு அவற்றின் பயனையும் பெருமையையும் வெளியிட வேண்டுமென்று கருதி, இப்போது அந்நூலின் மூலப் பாடல்களை மட்டும் அரசு வெளியிடுகிறது. தொடர்ந்து பிற கலை நூல்களின் மூலப் பாடல்கள் வெளியிடப்படும்'' என்று கல்வியமைச்சர் மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் எழுதியிருக்கும் அணிந்துரை பொருள் பொதிந்த செயலுரையாகும். ஐந்திறம் என்ற இவ்வெளியீடும் புலவர் வீரபத்திரனார் மனநினைவில் ஒத்தன ஒத்தனவாக ஒப்பிக்கும் எதிர்கால வெளியீடுகளும் வீறுமாறுபட்ட ஆய்வுப் பூசல்களுக்கு உரியனவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இன்திறனும் எதிர் திறனும் மிகுவது நூலுக்கு ஒளிதருமேயன்றி மடனாகாது. ஆதலின் ஐந்திறம் போன்ற

கலைப் பனுவல்கள் வருக, பதிப்புடல்கள் பெறுக, நடமாடுக. அதன்பின் மெய்ப்பொருள் காண்பார் திறன்செய்க என்பதுவே என் அறிவுரை. ''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா'' என்ற திருவாக்கின்படி நூல்கள் பிறப்பதற்கு முன்பே கருத்துத் தடை செய்யாது அறிவுக்களரியில் பயிலவிடுவோமாக.

நல்லுள்ளத்தோடு நிறைந்த நம்பிக்கையோடு ஐந்திரம் பதிப்புமெய் பெற்று இன்று நம் கைத்தலத்து இலங்குகின்றது. நம் ஆய்வுக்கு ஒரு புதுவுடைமை கிடைக்கப்பெற்றோம். ''தமிழுக்குத் துறைதொறும் துறைதொறும் அழகு காப்பாய். இதுதான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம் எழுக நன்றே'' என்று தமிழ் முன்னேற்றம் வேண்டினார் பாரதிதாசன். அதற்கு 'ஐந்திரம்' ஓர் எடுத்துக்காட்டு.

ஐயங்கள்:

இந்த ஐந்திர நூலைக் கற்பார்க்கு வலுத்த சிலபல ஐயங்கள் தோன்றாமல் இரா. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பதொப்ப, இந்நூல் தக்க சில ஐயங்களொடு தோன்றிய நூலேயாகும். ஐந்திரம் முதலான மயன்சுவடிகள் பல தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்து இருந்தவற்றைத் தாம் நான்காண்டுகள் இருந்து மனனம் செய்து கொண்டதாகப் புலவர் வீரபத்திரனார் கூறுகின்றார். இருபத்தைந் தாண்டுகட்கு முன் அஃதாவது மிக அண்மைக்காலத்தே இப்பழஞ்சுவடிகள் உயிராவணமாகத் தஞ்சையில் இருந்தன என்றால், அவற்றின் இன்றைய நிலை என்ன? அவை எங்கே? வரலாற்று முறையில் இதனை உறுதிப்படுத்த இக்காலத்து நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். எதிர் காலத்தார்க்கு நாம் தக்க விடையளித்தாக வேண்டும்.

ஐந்திர நூலின் காலம்:

தொல்காப்பியப்பாயிரம் கூறும் 'ஐந்திரம்' என்பது இப்போது பதிப்பாகியிருக்கும் ஐந்திரம் என்ற நூலா? இந்நூல் தொல்காப்பியத்திலும் தொன்மை சான்றதா? இல்லை, இல்லை என்றே ஒருவந்தம் முடிபு சொல்லிவிடலாம் என்றாலும், தொன்மைகாட்டும் இந்நூலின் மொழிக் குறிப்புக்கள் நம்மை மயக்குகின்றன.

1. சகரம் மொழிக்கு முதலில் வாராது என்பது தொல்காப்பியம். சங்கவிலக்கியங் களிற்கூட சமர், சந்து, சவட்டு, சமழ்ப்பு முதலான சில சகரக் கிளவிகள் புகுந்துள. 892 நூற்பாக்களும் ஏறக்குறைய 26000 அடிகளும் கொண்ட இந்நூற்கண்,

''ஆழ்மனை பாழ்மனை வாழ்மனை ஏழ்நிலம்
தாழ்வுறும் மனைச்சரி வரும்நிலை தோற்றம்'' [728]

எனச் சரிவு என்னும் ஒரே ஒரு சகர மொழி வரக்காண்கின்றோம். அதுவும் தனி முதலாக வரவில்லை என்பது நினையத்தகும்.

2. தொல்காப்பியத்துக்பின் 'செய்யாத' என்ற வாய்பாட்டில் எதிர்மறை பெயரெச்சங்கள் வந்துள. ''மணந்தார் அகலாத காலை'' [1226] 'உளவரை தூக்காத ஒப்புரவு'' [480] எனத் திருக்குறளிலும்,

''களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது'' [ஊர்சூழ்]

எனச் சிலப்பதிகாரத்தும் பின்னைய நூல்களிலும் இவ்வழக்குப் பெரிதாயிற்று. ஐந்திறத்திலோ செய்யாத என்ற வழக்கு ஒன்றுகூட இல்லை என்பது வியப்பைத் தரும். இமையா நோக்கம், தோன்றாப் பொருள், பொன்றாக் காலம், புனையா, ஓவியம், உலையா முயற்சி, குன்றாவுணர்வு, மாறாச் செந்நெறி, மூவாக்கலை, மாற்றிலாக் கணக்கியல் என்றவாறு 'செய்யா' என்னும் வாய்பாடாகவே வரக் காண்கின்றோம்.

3. விளக்குபு, கிளக்குபு, நோக்குபு, நாடுபு, ஓங்குபு, உணர்த்துபு, ஆற்றுபு, காட்டுபு என்ற செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்ச வடிவங்களும்; நிறீஇ, எனா அ முதலிய அளபெடை வடிவங்களும் உள்.

4. ஆநின்று கின்று, கிறு என்ற நிகழ்கால இடை நிலைகள் காணப்படவில்லை. கின்று என்பது சங்ககாலத்துக்குப் பின்பெருவழக்காகும். ஐந்திற நூலில் இவ்வடிவங்கள் இல. எனினும் மயன் எழுதியனவெனக் காட்டப்படும் சில தமிழ்ப் பாடல்களில் ''சிரத்தினாற் போற்றுகின்றேன் சிறியனேன் மயனே யன்றோ'' எனக் கின்றாட்சி வருகின்றது.

5. தொல்காப்பியத்துக்குப்பின் கள்ளீறு அஃறிணைப் பன்மைக்குப் பெரு வழக்காயிற்று. பன்மைப்பெயர்த்தொகைகள் பெருகியிருக்கும் இவ்வளவு பெரிய ஐந்திற நூலின் கள்ளீறுவரக்காணோம்; எனினும் மயன்யாத்தவேறு சில செய்யுட்களில், 'நற்றமிழ் இலக்கியங்கள்,' அருந்தமிழ் நூல்கள்' என்று கள் வரவைக் காணலாம்.

6. பரதம் இசை மருத்துவம் சோதிடம் பல்குறிச்சாத்திரம் பற்றிய தமிழ்ச் செய்யுட்களில் எல்லாம் வடமொழிச் சொற்களும் வடமொழி யெழுத்துக்களும் நிரம்பவுள. ஓவியம், சிற்பம், சித்திரம், நீரியல், விண்ணியல், மனையியல்,

கணக்கியல், வளியியல் என்றாங்கு பல்துறையிலக்கணம் பாடும் ஐந்திரப்பனுவலின் கண் வடவெழுத்து என்பது இல்லெழுத்தாகும். வட சொற்கூட இல்லை என்று சொல்லுமளவிற்கு மூன்று நான்கே தலைகாட்டுகின்றன. சிலம், புனிதமாநெறி, விற்பனத்திறம் என்பன நுனித்துப்பார்ப்பின் தமிழாகவும் கருத இடனுண்டு.

இவையும் இவைபோன்ற சிலவும் ஐந்திர நூலின் தொன்மை காட்டுவன என்று கொள்ளலாம். எனினும் பின்மை சுட்டுக் குறிப்புக்களும் பலவுளவே,

அ] 'எழுத்தே சொல்லே பொருள்கூட் டணியென
வழுத்தும் ஐந்தியல் முறைநெறி வழக்கே [9]
எழுத்தும் சொல்லும் பொருளும் விளக்கி
வழுவிலாக் கூட்டணி வளமுற வகுத்துச்
செழுமலர் ஐந்திதழ் செம்மல ரென்ன
முழுத்தமிழ் ஐந்தியல் நூல்நெறி யன்றோ [36]

என ஐந்தியல் கூறுவதாக ஐந்திரநூல் சுட்டும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கண அதிகாரத்தோற்றம் கி.பி.11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழிய காலமாகும் என்பது இலக்கணிகள் கருத்து.

ஆ] நன்னூலின் சாயல் எழுத்தியல் குறித்த பலவிடங்களிற் காணப்படும்

'எழுத்தே முதல்சார் பென்றிரு வகைத்தே [17]
எண்ணெழுத் தின்பெயர் உருவம் முறைபிறப்
பெண்ணியல் நுட்பம் எழுத்தியல் வகையே [27]
உயிர்நிறை முயற்சி யுள்வளித் திறனே
செயிரற எழுமணுத் திரளொலி யாற்றல்
உரமும் கண்டமும் உச்சியும் மூக்கும்
வரவே இதழ்நாப் பல்வகைத் தொழிலாய்
வேறுவே றெழுத்தொலி யாய்வரல் நெறியே [62]

நன்னூலுக்குப் பிந்தியது ஐந்திரம் என்று சொல்வதற்து இம்மேற்கொள்கள் ஓரளவு துணை செய்யும்.

'உழைப்புறும் முயல்வே ஊழினை நீக்கும் [201]
ஊழை வென்று உள்ளொளி காண்பரே [255]
உலைவில் ஊக்கமும் உணர்வும் ஓங்கி
ஊழை வெல்லும் உறுவலித் திறமுறும் [539]
உழைப்புறும் உண்மை ஊழினை வெல்லும்
முயற்சி பெருந்திறல் நல்குவ தியலாய் [883]

எனவரும் ஐந்திரப் பகுதிகள் 'ஊழயும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்ற குறளை அடியொற்றியவாகும்.

தொல்காப்பியத்தை நினைவூட்டும் தொடர்களும் கருத்துக்களும் ஐந்திறத்தில் அரிதாக வருகின்றன. ஓரெழுத்தொருமொழி [351] கிளவியாக்கம் [355] புலனெவழக்கம் [369] கண்ணிமை கைந்தொடி [14] என்பன சான்றுகள்.

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே [தொல் 551]

என்று தொல்காப்பியம் கூறிய திணை வரிசைப்படியே முல்லை மாநிலம் [783], தண்மலர் குறிஞ்சி [784], அணியியல் நிகழும் மருதம் [785], கடற்சார் நெய்தல் மாநிலம் [786] என நானிலங்களை ஐந்திறத்தார் கூறியுள்ளார். பாலை பற்றி வரையறுக்கும் நூற்பாவும் நம்மைக் கவர்கின்றது.

'முல்லையும் குறிஞ்சியும் முறைமை மாறி
ஒல்லையில் இருநிலம் திருநிலை ஆழ்ந்தும்
தொல்லை வேறுவே றிருநிலை மாறி
வல்லை கடுமை கோடை வெயில்நிலை
புல்செடி கொடிநிலை மாற்றமும் வீழ்ச்சியும்
நன்மரம் அற்றுறும் நீர்நிலை யற்றுறும்
நலத்தியல் நீரியல் நெறிமுறை சாரா
நிலமுறும் பாலை நெறிமுறை நிலமே [787]

இந்நூற்பாவைப் படிக்கும்போது சிலப்பதிகாரக் காடு, காண் காதையின் நடத்தைக் காண்கின்றோம்.

'வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகித் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்'

என்ற இளங்கோவின் அடிகளை ஐந்திறத்தார் போற்றிக் கொண்டார் என்றும் மேலும் சிறிது விரிவு செய்தார் என்றும் கருதலாமன்றோ?

ஐந்திறம் பல்துறை அறிவியற் பனுவலாதலின் இலக்கியத் தழுவல்கட்கும் உவமை முதலான இலக்கிய வனப்புகட்கும் அத்துணை இடனில்லை. இலக்கணத் தொடர்பான தழுவல்களையே நாம் காண முடியும்.

இ] ஐந்திறத்தில் ஓரடி முதல் அறுபது அடிவரை நூற்பாக்கள் எல்லாம் நாற்சீரடி யுடையவை. வகையுளிச்சீர் என்பதில்லை. மாச்சீர் விளச்சீர்கள் நிறைந்துள. காய்ச்சீர் காண்பதரிது. எனினும் குற்றியலுகரத்தைப் பொறுத்தவரை பரவலாக ஓர் யாப்புக் குற்றம் காணமுடிகின்றது.

'இயல்பி னோர்ந்து எண்ணுறத் தெரிந்தே' [636]
'உணர்வி லாய்ந்து ஒவியாற் கண்டே' [658]
'உள்குற் றுணர்ந்து ஒருபய னோக்கி' [700]

இவற்றை ஓர்ந்தெண்ணுற, ஆய்ந்தொளியால், உணர்ந்தொரு பயன் என முறைப்படி புணர்ப்போமானால் ஓரசை குறைவதையும், அடிநாற்சீர் இன்மை யையும் பார்க்கின்றோம். இஃது அடியிடைக்குறை.

'விண்ணொலி ஒலிஓம் நிலைமறை யறிந்து
ஐந்தியல் மெய்க்கலை மெய்த்திறம் விளங்க' [109]
'அகவெளித் திறத்தாற் புறவெளி ஓர்ந்து
அகத்துணர் மெய்த்திறன் கலைநிலை கூறுமே' [204]
'உற்றுறும் உணர்வால் மெய்த்திற னோர்ந்து
எட்டின் பிறழ்நிலை இனிதுற வுணர்ந்தே'
'அறுபான் நான்குறும் அரும்பொருள் நோக்கு
உறுகலை நெறித்திறன் உற்றிவ னோர்ந்து' [282]

என்ற நூற்பாப் பகுதிகளில் குற்றியலுகரங்கள் யாப்பு முறைப்படி புணர வேண்டியவை தனித்து நிற்பது குறைபாடாகும். இந்த ஈற்று முதற் குறை பலவிடங்களில் உள. யாப்பில் குற்றியலுகரத்தை வரும் உயிரோடு புணர்க்காத போக்கு அண்மைக்காலத்து வருகையாகப் பார்க்கின்றோம். இக்குறையை உணர்ந்த ஐந்திற நூலார் எண்ணிறந்த சீர்களில் ஏகார அசையைச் சேர்த்து, தெரிந்தே, ஓர்ந்தே, உணர்ந்தே, ஆய்ந்தே, உற்றே, தேர்ந்தே, கிளந்தே, தெளிந்தே என்றாங்கு யாப்பொழுங்கு படுத்தலையும் காணலாம்.

உ] எண்ணிறந்த தொடைவகைகட்கு எடுத்துக் காட்டான இலக்கியம் என்று பாராட்டுமாறு, ஐந்திறத்தின் தொடை வளம் பல்கியுள்ளது. எந்தச் சிறிய பெரிய தமிழிலக்கியத்திலும் இத்துணைத் தொடை விகற்பங்களைக் கண்டதில்லை. பெருங்காப்பியங்களிலும் இடம் பெறாத தொடைச் செல்வங்கள் ஓர் அறிவியற்கலை நூலில் மண்டிக் கிடப்பது கற்றற்கரிய காட்சியாகும். ஓரடியுட் கிடக்கைத் தொடையும் பல அடிதோறும் வருகைத் தொடையும் அளப்பில.

'ஒருபொருள் பல்பொருள் பெரும்பொருள்
நுண்பொருள்' [219]
'தமிழிசை இமிழிசை உமிழிசை குமிழிசை' [548]
'ஓவம் ஓவியல் ஓவியம் ஓம்கவை' [616]
'தாயொளி தீயொளி சேயொளி நோக்கி' [679]
'நிலமனை வாழ்மனை வளர்மனை ஆழ்மனை
ஒளிமனை பெருமனை சிறுமனை யியலாய்' [696]
'செங்குடில் பைங்குடில் கருங்குடில்
வெண்குடில்' [843]

இத்தகைய கிடக்கைத் தொடைகள் கருத்துவளம் தருவனவா என்பது ஐயம். இது போல நீண்ட அடிவருவகைத் தொடைகளும் ஐந்திறத்து மலிந்துள. நூற்றுக்கணக்காக எடுத்துக் காட்டலாம். இடச்சுருக்கங்கருதிச் சான்றுக்கு ஒன்று:

'மாநெறி வொன்றே மாக்கலை மூலம்
மாநெறி மாயியல் மெய்க்கலைக் காலம்
மாநெறி நிலைப்பணி எண்ணெண் கலைத்திறன்
மாநெறி யியலே கணக்கியல் ஆற்றல்
மாநெறி ஆடலான் கலைநிலை யாற்றல்
மாநெறி செந்தமிழ் நெடுங்கணக் கியலே
மாநெறி தூநெறி குறுங்கணக் கியலே
மாநெறி ஆயம் நிலைபொருள் தேர்தல்
மாநெறி இயலால் எழுத்தியல் மூலம்
மாநெறி செந்நெறி ஐநெறி மூலம்
மநெறி இயலால் ஐந்தியல் நுட்பம்
மாநெறி வொன்றே எண்ணிலை மெய்த்திறன்
மாநெறி நோக்கே எண்கலை எண்ணியல்
மாநெறி திறனால் எண்முறை ஆய்ந்தே
மாநெறி யாற்றலும் பழுதறு விளக்கம்
தூநெறி தொன்மையும் சொற்பொருள் உண்மையும்
வண்மையும் உண்மையும் வளர்நிலை யாற்றலும்
எண்மையும் நுண்மையும் இயல்பிற் றேர்ந்தே
நுண்கலை நுணுக்கம் திட்பமும் ஆய்ந்தே
எண்கலை கணக்கியல் இயல்நெறி யாற்றலால்
விண்ணெறி நோக்கி விளம்புமா நெறியால்
எண்ணெறி இயலல் அறுபான் நான்கே' [842]

இத்தகைய நெடுந்தொடையடுக்குகளால் ஐந்திற ஆசிரியர் தொடை வேட்கையர் என்பதும் ஓசைச் செவிஞர் என்பதும் வெளிப்படை. யாப்பு வரலாறு நோக்கின் இன்ன தொடை பெருக்கம் மிகப் பிற்காலத்தது என்பது போதரும். எந்த ஒரு தமிழ் நூலிலும் இவ்வளவு தொடை மலிவுகள் இல்லை. இவற்றால் கருத்துகள் நலிவும், மெலிவும் இப்பெரு நூலுக்கு ஏற்படலாயின.

ஐந்திரம் என்ற நூற்பெயரும் பொருளும்:

இந்நூலில் எழுத்தியல், மொழியியல், இசையியல், சிற்ப சித்திரம், ஓவியம், நாட்டியம், வளியியல், விண்கலவியல், நிலவியல், மனையியல் என்றின்ன பல துறைக் குறிப்புகள் உள. இவை அறிமுக நிலையில் உள்ளனவே. எந்த ஓர்

அறிவியலும் நிறைவாகச் சொல்லப்பெறவில்லை. எனினும் எல்லாத் துறைகட்கும் அடிப்படையான மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்ற ஐந்தியலை நூல் முழுதும் வலியுறுத்திச் செல்கின்றது. ஐந்திறத்துக்கு அறிமுகவுரை எழுதிய முதல்வர் கணபதி தபதியார் ஐந்து என்ற எண் குறியைப் பற்றி நல்விளக்கம் தருகுவர். இதனாற்றான் நூலின் தொடக்கமுதல் இறுதி வரை மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்ற கிளவிகள் தொடைவரிசையாக வந்து விடுகின்றன.

'காலமும் மூலமும் கடிதற நோக்கிக்
கோலமும் சீலமும் நவையறப் புரிந்து
ஞாலம் காணும் நல்லறி வாளரே [832]

இன்ன நடையில் வரும் நூற்பாக்கள் பலப்பல. ஆதலின் எழுத்து, சொல், பொரு, யாப்பு, அணி என்ற ஐந்திணையும் திறப்படி விளக்குவது இந்த ஐந்திறநூல் என்ற கருத்துகடியத்தகும்.

நூல் முழுதும் நோக்கின் எழுத்துப் பற்றி நனிசில குறிப்பு உண்டு. புணர்ச்சி விதி எதுவுமில்லை. ஐந்திணை பற்றிய குறிப்பு தவச்சில; துறை பற்றி யாதுமில்லை. சொல், யாப்பு, அணி, பற்றிய குறிப்பு வரவில்லை. எனவே தொல்காப்பியம், வீரசோழியம், நன்னூல், நம்பியகப் பொருள், வெண்பாமாலை, தண்டியலங்கலரம் போன்ற மொழியிலக்கண நூலாகக் கொள்வது என்னானும் பொருந்தாது. அத்தகைய ஒரு மயக்கக் கருத்துக் கொண்டமையாற்றான், தொல்காப்பியப்பாயிரம் கூறும் ஐந்திரம் என்ற சொல்லோடு இணைத்துக் காணும் பெருவழு ஏற்பட்டது. மயன் பெருந்தச்சனாகக் கருதப்படுதலன்றி இலக்கணியாகச் சொல்லப்படுதல் இல்லை. தொல்காப்பியத்து மூலம் காலம், சீலம், கோலம் முதலான கோட்பாடு பேசப்படவில்லை என்பதனை நினைவு கொள்ளுங்கள்.

பல்வேறு அறிவியலுக்கெல்லாம் அடிக்கூறுகள் ஐந்தாற்றல் என்பதனைச் சுட்டிக் காட்டுவதே ஐந்திற நூலின் நோக்கம். நிலமனைத் திருநூல், ஏழிசைச் செந்நூல், பெருநடச் செந்நூல், விண்கலச் செந்நூல், ஓவியச் செந்நூல், என்ற பல நூற் பெயர்கள் ஐந்திறத்தில் வருவ. இவையெல்லாம் ஓவ்வோர் துறை குறித்த தனிக் கலை நூலாகும் என்றும் இவற்றில் அத்துறை தொகுத்தும் வகுத்தும் தொகை விரியாகவும் அமைந்திருக்கும் என்றும் ஊகிக்கலாம்.

'வந்தசெந் தமிழொளி ஆடலான் அருளால்
அகமகிழ்ந் தின்புற் றைம்புலத் தொன்றி
மிகுமொளி யுணர்வால் பன்னிரு செந்நூல்' [892]

என்பது ஐந்திரத்தின் இறுதி நூற்பா, பன்னிரு தனித் துறைகள் குறித்த தனிநூல்கள் மயனாற் செய்யப்பட்டவை என்று அறியலாம். இந்நூல்களைப் புலவர் நன்மகன் வீரபத்திரனார் மனனம் செய்து கொள்கலமாகக் காத்துள்ளார் என்று தெரிவதால், இவை விரைவில் அச்சு வடிவாக வெளிவரும் பொன்னாளைத் தமிழறிஞர் உலகம் எதிர் பாக்கின்றது. மேலும் சில செந்நூல்கள் வெளிவந்த பின்றையே ஐந்திரம் குறித்த ஐயமும், திரிபும், அகல வாய்ப்பும் உண்டு.

ஓவியம், சிற்பம், சித்திரம் முதலான நுண்கலைகளையும், நீரியல், மனையியல், விண்ணியல் முதலான அறிவியற்கலைகளையும், நுவலும் இயல் நூலாதலின், ஐந்திர நூலை மதிப்பிடத்தக்கவர்கள் இத்துறைகளில் வல்ல கல்வியாளர்களேயாவர். இலக்கிய இலக்கணப் புலவர்கள் கலைக் கொள்கை களையும், துறைக்குறியீடுகளையும் மதிப்பிடவியலாது. இக்கலைகட்கெல்லாம் மானங்கள் என்னும் அளவுகளும், ஒன்று முதல் பத்து வகைத் தாளங்களும், ஓடிவு வளைவுகளும், ஆயாதி மரபுகளும் நுண்ணடிப்படையாதலின், ஐந்து எட்டு அறுபத்து நான்கு என்றினைய எண்கள் பல நூற்பாக்களில் வருவ. தாளம், அணு, தேர்த்துகள், இம்மி, நெல், எள், விரல், புள்ளி, புள்ளிமையம், கேரடு, வளைவு, ஆநிலம், தூணிலை, செங்குடி, பைங்குடி, கருங்குடி, கணுக்கம், நுணுக்கம், ஈர்ப்பு, வேர்ப்பு, நுண்ணிமை, தேற்றம், தோற்றம், பெருநொடி, சிறுநொடி, நொடி, விண்ணெறி, முகடு, மாற்றல், ஏற்றல், வீசல், கதிர்க்குறுகலை, கதிர்க்கணுக்கம், கீற்றொளி, விண்மை, தெருண்மை, மருண்மை முதலாகப் பன்னூற்றுக் கலைச்சொற்கள் நூற்பாக்களில் பயின்று வருவது இயல்பே. இவற்றைக் கூறியது கூறலெனக் குற்றஞ் சொல்லலாகாது. கலைக்கூறு ஒவ்வொன்றினையும் உரிய சொற்கள் கொண்டு விளக்கும் தன்னிறை நடையாகக் கொள்ள வேண்டும். சிலப்பதிகாரத்தில் வரும் இசைத் தமிழியலை அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் பொருந்திய கலை நூல்களை மேற்கோள் காட்டி விளக்கியாங்கு, ஐந்திரப்பகுதிகளும் அவ்வத்துறை வல்லுநரால் இக்காலத்திற்கேற்ற வரைகோடு வண்ணங்களோடு விளக்கம் பெறல் வேண்டும்.

ஓம் ஒளி, ஓம் ஒலி:

மூலம் முதலான ஐந்தியல் கூறும் ஐந்திர நூல் அனைத்தையும் ஓம் ஒளி, ஓம் ஒலி என்பதன் ஓர் இயக்கமாக நிறுவுகின்றது. இது சமய நோக்கன்று; அறிவியல் நோக்கு என்றாலும் சமயப் பின்னணியும் ஒன்று உள்ளதுபோல் சில தொடர்களும்,

கருத்துகளும் புலப்படுத்துவ. சிற்றவை, பெருவெளிமன்று, முருகு, திருநெறி, ஆடலான் என்ற சொற்கிளவிகள் இதற்குச் சான்று. சைவத்தைத் திருநெறி என்பது ஒரு வழக்கு. 'திருநெறிய தமிழ் வல்லவர்' என்பது தேவாரம்.

''அம்மையும் அப்பனும் சேயு மாய்த்திகழ்
செம்மைத் திருநிலை ஆட லானும்
அருளும் அன்பும் அறிவும் விளக்கும்
தெருளுங் கூட்டி மருளும் போக்கும்
தென்முக நோக்கும் விண்முக நோக்காய்
மூவொளி கூட்டும் பேரியல் தன்மை [876]

என்ற நூற்பா சமய மெய்ப்பொருள் பற்றிய ஆழ்ந்த நோக்கினைப் புலப்படுத்தும்.

உமை முருகு சிவன் என்ற [சோமாற்கந்தம்] முக்கூட்டொருமைப் படிமமும் தக்கணமூர்த்தி எனப்படும் தென்முகக் கடவுள் நிலையும் பேரொளி தாயொளி, சேயொளி என்ற மூவொளித் தன்மையும், தமிழ்நிலைத் திருநெறியும், கூத்தப் பெருமானின் ஆடற்கலைநெறியும் குறிக்கப்படுகின்றன. சைவப் பேரறிஞர் முருகவேள் தெய்வத் திருவுருவங்கள் என்ற நூலில், இந்திய நாட்டில் வேறு பிற எந்தப் பகுதியிலும் இன்றித் தமிழகத்திலே மட்டும் காணப்படும் திருவுருவம் உமை முருகு சிவமேனி என்பர். ஐந்திர நூலார் உலகவியக்கத் திருக்கூத்தாடும் ஆடவல்லானை மட்டும் கூறாது அம்மை-யப்பரோடு சேயொளியாகிய முருகனையும் இணைத்துக் காட்டும் தனித்தன்மை சிந்தனைக்குரியது.

தமிழ்ப்பெருமையும் நூலாசிரியன் நோக்கமும்:

ஐந்திர நூலினை மேலோடாகப் பார்த்தாலும், உள்ளகமாகப் பார்த்தாலும் இதன் ஆசிரியன் இத்தகைய ஒரு பனுவலை ஆக்குதற்குரிய உள்ளுணர்வுகளும் அவற்றைப் புலப்படுத்தும் நன்முறைகளும் தெளிவாகின்றன.

1. எனைவகை அறிவியல்களையும் சொல்லும் ஆற்றல் செந்தமிழுக்கு உண்டு.
2. துறைக் கிளவிகள் எல்லாம் தூய இனிய தமிழாகச் சொல்லும் ஆற்றல் ஒளித் தமிழுக்கு உண்டு.
3. பல்வேறு கலைகளையும் முன்பே விரித்துரைத்த செந்நூல்கள் முந்து செந்தமிழுக்கு உண்டு.

இந்த முப்பேருண்மைகளை ஐந்திரம் பறையறைகின்றது.

ஐந்திரம் தொன்மைக்கால நூலானால் என்ன? இன்றைய நூலானால் என்ன? எபதியவன் மயனானால் என்ன? பிறனானால் என்ன? கருத்து மடக்காக இருந்தால்

என்ன? தொடை மிகுதியாக இருந்தால் என்ன? தொடர்கள் பின்னியும், பன்னியும் வந்தால் என்ன? தற்கொலைக்குத் துணிந்த சீதைப்பிராட்டி:

'அரக்கனே யாக வேறோர் அமரனே ஆக வன்றிக்
குரக்கினத் தொருவ னேதான் ஆகுக கொடுமை யாக
இரக்கமே யாக வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
உருக்கினன் உணர்வைத் தந்தான் உயிரிதின் உதவி
யுண்டோ'

என்று அனுமன் வரவுக்கு உயிர்தளிர்த்தாற் போன்ற உணர்வை இப்போது ஐந்திறம் நமக்கு ஊட்டுகின்றது. தமிழ் என்ற ஒரு பெயரை வைத்துக்கொண்டு தூய்மையும் செம்மையையும் அகற்றி, ஒலியாலும், எழுத்தாலும், சொல்லாலும், தொடராலும், கருத்தாலும், குணத்தாலும், கலப்புப் பேய்மைகளையும், கன்மாரிகளையும் திணிக்கும் இந்நாளில், ஐந்திறப் பதிப்பு எம்மனோர்க்கு உயிரூட்டும் நல்லுரமாக இலங்குகின்றது.

ஐந்திற நூலில் தமிழுக்குக் கொடுத்த பண்படைகள் எண்ணிறந்தன. தமிழ்ப் பெருமை கூறாத நூற்பா இல்லை. இதுகாறும் வந்த தமிழிலக்கியங்களில் இயம்பப் பெற்ற தமிழடைகளின் எண்ணிக்கையைத் தொகுத்துப் பார்ப்பின், அது கைம்மண்ணளவாம்; ஐந்திறத்திலோ இக்காலக் காவிரியளவாம். ஐந்திறம் இலக்கியமன்றேனும், தமிழ் பற்றிப்பாடும்போது எவ்வளவு உணர்ச்சி வெள்ளம், எவ்வளவு நாடித் துடிப்பு, எத்துணையோ மனக்குமுறல்களும், கிளர்ச்சிகளும், புரட்சிகளும், எழுச்சிகளும் ஐந்திறவாசான் நெஞ்சில் பிறந்திருக்கின்றன.

'உயிர்க்குல முதன்மொழி ஒண்டமிழ் வண்டமிழ்' [808]
'தென்மொழி பன்மொழி மூலம்' [810]
'மூல மாமொழி கால முணர்மொழி' [712]
'ஞாலம் ஆள்வர் நற்றமிழ் நெறியால்' [831]
'தென்மொழி முதன்மொழி சாற்றல் நெறியே' [223]
'தொன்மொழி தொன்னிலை தொன்மர
பியல்நெறி' [776]
'தண்டமிழ் மூலம் தனித்தமிழ்க் காலம்' [798]

முழுத்தமிழ், சிற்பச் செந்தமிழ், விண்தமிழ், எண்தமிழ், பூந்தமிழ், மாத்தமிழ், கனித்தமிழ், தொழிற்கலைத்தமிழ், ஒளித்தமிழ், ஒளிமொழித்தமிழ், முதனிலைத் தமிழ், தெள்ளுநற்றமிழ், தலைமொழி, ஒலிச்செந்தமிழ், ஒண்தமிழாற்றல் எனவரும் பன்னூறு இனிய தொடர்களால் தமிழ்த் திறத்தை வழுத்துகின்றது ஐந்திறநூல். உயிர்க்குல முதன்மொழி, தனித்தமிழ்க்காலம், பன்மொழிமூலம், மூலமாமொழி என்ற கருத்துகள் இன்றைய மொழியுணர்வு பாய்ச்சுகின்றன.

'நாடும் மொழியும் இருவிழி யென்றே
நாடுறும் உய்த்துணர் நெறிநிலை' [744]

என்று அமைச்சியல் நெறி பகர்வர் ஐந்திரத்தார். இன்றைய மொழி வளர்ச்சிக்கு எத்துணை எழுச்சி மிகுந்த அறிவுரை இது.

'குமரி மாநிலம் நெடுங்கலை யாக்கம்
அமர்நிலைப் பேரியல் பெற்புறுந் திறனாய்ப்
பஃறுளி யாற்றுப் பெருமலை திறனிலைப்
புக்குறும் நிலைத்திறன் ஏழேழ் நிலமும்
ஏழேழ் நாடென இயம்புறுங் காலை
நால்வகை நிலமும் நன்னெறி விளக்கி
நூல்வகைத் திறனாய் பால்வகை விளக்கி
ஆக்கமும் நிறையும் வாழ்வியற் கலையும் [212]

என்ற நூற்பாவில் குமரிக் கண்டமும் பஃறுளியாறும் குமரிக்கோடும் நாற்பத் தொன்பது நாடுகளும் அத்தொல்பழங்காலத்தே நானிலப்பகுப்பும், நூல்வகைச் சிறப்பும், பல்வகைக் கலையும் சிறந்த பெற்றியைத் தமிழ்ப்பற்றோடு இசைப்பர் ஐந்திரத்தார்.

இந்நூலுக்குத் தொடக்கத்துக் கடவுள் வாழ்த்து இல்லை. அவையடக்கம் இல்லை. பிறர் பாடிய பாயிரம் இல்லை. எனினும் இறுதி நூற்பாவை இவை யாவுமாகக் கருதுவதற்கு இடனுண்டு. வேந்தன் மகிழவும், தீந்தமிழ்க்கழகச் சான்றோர் புகழவும் அவைக்களத்துச் செந்தமிழொளியான ஆடலான் அருளால் பன்னிரு செந்நூலை மயத்தமிழ்ச் சிற்பி அளித்தான் என்பது இந்நூற்பாவின் கருத்து, ஏனைச் செந்நூல்களும் வெளிவரும்போது, இக்கருத்து மேலும் தெளிவு பெறலாம். மயன் என்ற ஆசான் பழைய மயன்வழி வந்தவனாக இருக்கலாம், ஆசான் யாராயினும் அவன் காலம் எதுவாயினும் அவன்தன் தூய தமிழ் நோக்கம் பின்வரும் நல்லடிகளால் வெள்ளிடைமலை.

'செந்தமிழ்ச் சான்றோர் சீரவை சேர்ந்தே
எட்டெழுத் தியற்றமிழ் ஐந்திரம் அளித்தனன்
நாட்டுணர் வோங்கும் நறுந்தமி ழுணர்வால்
இருகை குவித்தே இன்புற் றளித்தனன்
திருவுறும் ஆடலான் அருள்நிலை சிறந்தே
ஆன்றவிந் தடங்கும் அருந்தமிழ்ச் சான்றோர்
ஏன்றுள மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே
அயல்நெறி சாராத் தமிழொளி யுணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே' [892]

நாட்டுணர்வும், நறுந்தமிழுணர்வும், அயல்நெறி சாராத் தமிழொளியுணர்வும் கொண்டு ஐந்திறம் படைக்கப்பட்டதாதலின், ''ஏன்று உளம் மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே'' என எதிர்காலத் தமிழ்மக்களை வேண்டுகின்றான் மயன் தமிழ்ச்சிற்பி. இதனைவிட அவையடக்கம் ஒன்று வேண்டுமா? அயல்நெறி கொள்ளாத் தமிழுணர்வைவிட நல்லாசிரியனுக்கு வேறு ஒரு தகுதி வேண்டுமா? 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல' என்ற சேக்கிழார் துணிவுரையை நாம் என்றும் நினைவோமாக.

''தொன்மையவாம் எனுமெவையும் நன்றாகா இன்று
தோன்றியநூல் எனுமெவையும் தீதாகா''

என்ற சிவப்பிரகாசம் நம் ஆய்வுக்குரிய ஐந்திற நூலுக்கும் பொருந்தும்.

நன்றி - செந்தமிழ்ச் செல்வி

ஐந்திறம்

இந்த நூலுக்குள்ளே என்ன இருக்கிறது ?

– ஒரு பருந்துப் பார்வை –

டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி

இந்த ஐந்திறம் என்ற நூல் நமது ஞாலத்தின் தோற்றத்தை மற்றும் அஃது ஓங்கி விரிந்து பரவுவதற்கான, இயற்கையாக நிகழும் வளர்ச்சிப் படிமுறையினை (Progressive steps or process of evolution or manifestation) மற்றும் அதற்குரிய கணக்கியல் (mathematics) ஆகியவற்றை வியத்தகு விஞ்ஞானத் தேற்றங்களின் மூலம் வெளிப்படுத்துகிறது. இக்காரணம் பற்றி, இந்த ஐந்திறத்தை cosmology அல்லது space science என்று சொல்லத் தோன்றுகிறது. இதனை இந்நூல் விண்ணியல் (aerodynamics / astrophysics) அதாவது விண்ணின் இயல்பு என்று கூறுகிறது. விண் என்பது ஆகாஸம் (celestial space or cosmos) அல்லவா? விண் என்ற அந்தப் பேரிடம் (macro space) தோற்ற நிலையில் பரமாணுவாக (subtle atom or sub atom) இருந்து, அடுத்து பௌதிக அணுவாக (gross atom) உருமாறி, பிறகு தானாகவே தன் உணர்வினால் தெரித்து (explosion) அதாவது வெடித்துச் சிதறிச் சிதறி, அதனால் விளைந்த ஒவ்வொரு அணுவும் (micro space) மேலும் துடித்துத் துடித்து ஒரு குறிப்பிட்ட நெறியில் (Order) இணைப்புற்று வளரும் குணமுடையது என்று அறிவுறுத்துகிறது. இந்தத் துடிப்புத்தான் உயிர் (Pulse) எனப்படுகிறது. இத்தகைய விண் துகள்கள் (Particles of cosmic space) சூழ்ந்து நீக்கமற நிறைந்த ஒளிமய இடமே ஆகாஸம் என்பது நமக்குத் தெரியவருகிறது. இந்த ஆகாஸத்தை பேரான்மா என்றும் பேருயிரி என்றும் சொன்னால் பிழைபடாது என்பதும் தெரியவருகிறது. இதற்கு ஒளி விண் என்ற விஞ்ஞானப் பெயரும் (luminous space) காணப்படுகிறது. எனவே அத்தகைய விண்வெளியின் இயல்பும் அதாவது அதன்

உடன் பிறந்த துடிப்பும் (pulse) துடிப்பின் அளவியலும் (measure of pulsation or vibration) அந்தத் துடிப்பின் வெளிப்பாடுகளும் (dynamics of luminous space and its manifest forms) இத்தகைய தோற்றங்கள் [அ] வடிவங்கள் வெளிப்படுவதற்கான கணக்கியலும் இந்த நூலில் விளக்கமுறுகின்றன. சுருங்கச் சொன்னால் இந்த நூல் பிரம்ம சிருஷ்டி நுட்பத்தை சூத்திரங்களாகத் தொகுத்துக் கூறும் ஓர் உச்ச விஞ்ஞான நூல் எனத் தெளிவாகிறது. இவற்றை பிரம்ம சூத்திரங்கள் எனக் கொள்வதற்கு நிரம்ப இடமிருக்கிறது. எனவே, இதனை விண்ஞானம் என்றால் இப்பெயர் நன்றாகப் பொருந்துகிறதல்லவா? இக்கால அறிஞர் ஏற்றுக் கொள்வர் என நம்புகிறேன். இதையே நாம் பின்பற்றுவோமாக.

சொல் விளக்கம்:

ஐந்திறம் என்ற சொல்லானது, ஞால மூலத்தின் ஐந்து அடிப்படை ஆற்றல்கள் என்பதைக் குறிக்கும் நோக்குடைய ஆழமும் அடர்த்தியும் கொண்ட சொல்லாக விளங்கும் கலைச் சொல் (fundamental five fold function of the quint essence of the Universe) என விளக்கம் தருகிறது.

மூலத்தில் அசையா நிலையில் உயிர்ப்புடன் திகழும் (vibrant stillness) – அமைதியே உருவான (embodiment of absolute peace and bliss), சாத்விக நிலையில் (vibrant stillness) ஒரு நுண்பொருள் (Subtle substance) தானே துடித்துக் கலைந்து – கலைவதால் கலையெனப்பட்டு, (grid of energy dividing itself into atoms of equal sized spaces, each one being designated as Kalai [கலை], particle or fractals) அது தன் இயல்பாகத் தோற்றுவித்திடும் விந்தைகளை (wonders) தர்க்க ரீதியாக – விஞ்ஞானப் போக்கில் விளக்குகிறது. இதனை ஒட்டு மொத்தமாக ஐந்தியல் (five fold step of evolution) என்ற சொல்லால் மேலும் இந்நூல் உணர்த்துகிறது. [நடைமுறை வாஸ்து சாஸ்திரப்படி இந்த energy grid க்கு வாஸ்து புருஷ மண்டலம் என்பது பெயராகும். பல சதுரங்கள் அடங்கிய இடமாக வாஸ்து சாஸ்திரம் அறிவுறுத்துகிறது. वास्तु पुरुषः चतुरश्र संस्थः*] ஐந்தியல் என்றால், இயற்கையின் அடிப்படைக் குணங்கள் – இயல்புகள் – செயல் நெறிகள் (behaviour or dynamics) என்பதும் அத்தகைய வெளிப்பாடு ஐந்தே என்பதும் பொருளாகிறது. இப்படித்தான் மூலப் பொருளாகிய – இன்று பிரம்மம் என்று நாம் சொல்லிவரும் நுண் பொருள் –

* वास्तु विद्या ....published by Travancore University in library.

தனது சிருஷ்டிப்பணியை (creative function), அதாவது ஆக்கப்பணியைச் (form figuration) செய்கிறது என்று தெரிவிக்கிறது. இஃதொரு உச்ச விஞ்ஞானம் அல்லது விண்ஞானம் (Science of subtle space) என பெயர் சூட்டியது பொருந்தும் என்க. இங்ஙனம் சொல்லிச் சொல்லி மகிழலாம்; பெருமைப்படலாம். காரணம் இச்சொல்லானது தமிழ் வழிப் பிறந்த சொல் என்க.

நூன் மூலம் – நூன்கரு – நூலாசிரியன்:

இத்தகைய நுண்பொருளானது ஐந்திற நூலின் முதல் பாவிலேயே உணர்த்தப்படுகிறது. இங்ஙனம் சூத்திரமாக – தேற்றமாக – வேறெந்த விஞ்ஞான நூலிலும் நான் பார்த்தேனில்லை. முதலில் மொழியியல் – மொழியின் பிறப்பியல் – பேசப்படுகிறது. இது ஓம் என்ற ஒற்றை ஒலியிலிருந்து, ஒற்றை எழுத்தொலியிலிருந்து (from mono syllabic sound) பிறக்கிறது. இதுவே எல்லா உலகமொழிகளுக்கும் ஆதி மூலம் (Root) அதாவது தோற்றுவாயென (primal source) உறுதிபடப் பேசுகிறது. இப்படிப் பேசுவோன் மயன் என்ற ஒரு பெருந்தச்சன் (architect) ஆவன். இந்த மேதை முதற் சங்க காலத்தில் தோன்றிய ஒரு தொல் பழங்குடியில் பிறந்த தமிழன் என ஐந்திற நூல் வழி தெரிய வருகிறது.[இன்றுள்ள முதல் சூரிய சித்தாந்தம் என்ற வான நூல் இவனை மயாசுரன் என்று கூறுகிறது]. அவனுக்கே சொந்தமான – மயத்தமிழில் (Mayonic Tamil) காணும் முதல் ஓரிரண்டு பாக்களை காணுங்கள். என்ன பொருள் கூறப்படுகிறது என்பதை உற்று நோக்குங்கள். புரிந்திடில் உங்கள் திறம் மகத்தானது எனலாம்.

''ஒளிமுதற்கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற்பாற்றே''
– [ஐந்திறம் – 1]

''நிறையொலி நேரொலி வெளியொளி விண்மொழி
மறையொலி ஓமென வகுத்தற் பாற்றே''
– [ஐந்திறம் – 2]

''ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப்படுமே''
– [ஐந்திறம் – 8]

''கண்ணிமை விண்ணிமை மண்ணிமை எண்ணிமை
பண்ணிமை ஐந்துங் காலக் கூறே ''
– [ஐந்திறம் – 13]

''ஒளிமுதற்கண்ட விண்தமிழ் ஓசை
வெளி வளர் ஓமென விளம்பல் கேட்டே
ஒளித் தமிழ் பொறியியல் ஐந்தியல் வரம்பாய்
ஒளிவளர் ஐந்திரம் உரைத்தனன் நன்றே
– [ஐந்திரம் – 45]

தொல் நூல்களின் நிலை:

புராண இதிகாசங்களில் இத் தேற்றத்தை ஒட்டிய சில துணுக்குச் செய்திகள் (Passing references) கிடைக்கின்றன. உபநிஷதங்கள் வேறு சில செய்திகளைத் தருகின்றன. தர்க்க ரீதியான, முழுமையான வாதப் பிரதிவாதங்கள் மற்றும் விளக்கங்கள் (interpretation and elucidation) ஒருசேர எங்கும் கிடைக்கவில்லை. மிருகேந்திராகமம் என்ற ஆகம நூலில் 'குண்டலெக்ஷண படலத்தில் உரையாசிரியர், மய விஞ்ஞானத்தைச் சான்றாகக் கூறுகிறார். கிடைத்ததெல்லாம் (inferential statements) அனுமானப் பிரமாணங்களே! அல்லது குறிப்புரைகளே!

இந்த நிலையில், வரகுண பாண்டியனின் சபையை அலங்கரித்த அமைச்சர் மாணிக்கவாசகரின் திருவாசகம், வடலூர் இராமலிங்கனாரின் திருவருட்பா, திருமூலரின் திருமந்திரம், செந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியம், ஐயன் திருவள்ளுவரின் திருக்குறள் ஆகியவற்றில் நல்ல பல அடிப்படைச் செய்திகள் (messages) உள. தென்னக ஆகமங்கள் ஞான பாதத்தில் பிரபஞ்ச சாரத்தைப் பேசுகின்றன. அதோடு, கடவுளின் விந்தைச் செயல் நெறிகளையும் அதனால் உருக்கொண்ட வடிவங்களையும் (imagic forms) உற்று நோக்கிட, அவற்றை வணங்கிட, வழிபட, வழிபாட்டு நெறிகளை உணர்த்திட – அவற்றால் நல்ல பயனடைய வழிகாட்டுகிறது ஆகமம் எனலாம். எல்லாவற்றுக்கும் மேலாக கைவசமுள்ள மயமதம், மானசாரம் போன்ற வாஸ்து நூல்களில் தொழில் நுட்பச் செய்திகளும், அறிவியல் நுட்பங்களும் நிரம்ப உள்ளன. ஒரு காலத்தில் 32 நூல்கள்[2] இருந்த செய்தியை மானசாரம் மதூச்சிஷ்ட விதானத்தில் வெளிப்படுத்துகிறது. பிற்காலத்தில் புராணங்களில் வேறுசில ஆசிரியர் பெயர் காணப் படுகிறது. என்றாலும் மயன் என்ற பெருமகனே தமிழ் மற்றும் சம்ஸ்கிருத இலக்கியங்களிலே குறிப்பிடப்படுகிறான். இந்தக் கண்ணோட்டத்தில் பிருஹத் சம்ஹிதையும், சுக்ரநீதி சாஸ்திரமும் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

---

1. மயன் பெயரில் மயனால் எழுதப்பட்ட மயாகமம் என்ற ஒரு நூலும் உளது.
2. காண்க: நூற்பட்டியலை பிற்சேர்க்கையில் காண்க.

ஆன்மிக நெறி கூறும் இரட்டை நூல்கள்:

இந்த வழிபாட்டு நெறியைத்தான், அனுபவ ரீதியாக, உளவியல் என்று ஐந்திறமும், வேத ஆகம சாத்திரங்கள் ஆன்மிகநெறி என்றும் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. சுருக்கிப் பார்த்தால், நமது தென்னக கலாச்சாரத்தின் இரட்டை நூல்களாக விளங்குபவை **வாஸ்துவும், ஆகமமும்** தான் என உறுதியாகக் கூறலாம். இவ்விரண்டும் செய்நூல்கள் (technologies) எனக் கொண்டால் ஐந்திறம் ஒரு விண்ஞான மூல நூல் எனவாகிறது. ஏனெனில் இக்கால வாஸ்து நூல் அருவத்தை உருவமாக்கிடும் விந்தையினைக் காட்டும் பிரமாணக் கணித நூலாக விளங்குகிறது. கணக்கின்றி உருவம் தோன்றாதல்லவா? இதனை மகுடோத்தராகமம் என்ற தொல் பழம் நூலானது मानेन निर्मिते बिम्बे स्वयं आभाति दैवतम् ॥ என்று உறுதி செய்கிறதைக் காண்கிறோம். அதாவது வாஸ்து மானப் பிரமானங்களால் செய்யப் பெற்ற பிம்பங்கள் தானாகவே உயிர்ப்புடன் விளங்குகிறது எனப் பேசுகிறது. இந்த நிலையில், ஐந்திறம் ஒரு முழுமையான; எல்லாவற்றுக்கும் முந்து நூல், மூல நூல் மற்றும் முழு நூல் எனத் தெரிகிறது. காரணம், ஐந்திறம் முழுக்க முழுக்க சங்க காலத்தில் எழுந்த ஒரு விஞ்ஞான நூல் – கணிதமயமான அறிவியல் நூல் எனத் தெளிவுறுகிறது. முதற் சங்க கால வரலாற்று எச்சங்கள் மட்டுமே ஓரிரண்டு இடங்களில் காணப்படுகின்றன. சிறப்பாக, நிலந்தருதிருவில் பாண்டியன் மற்றும் சங்க காலத்தமிழ்ச் சான்றோர் மட்டும் வருகின்றனர். நமக்குத் தெரிந்த பிற்கால வரலாற்றுச் செய்திகள் இந்த நூலில் ஏதும் காணப்படவில்லை. இதிகாச, புராணக் குறிப்புகள், பெயர்கள் ஏதுமில்லாத தூய தமிழ் நூல். பல லட்சம் பாடல்களைக் கொண்ட பிற மயத்தமிழ் நூல்களும் இப்படித் தான் இருக்கின்றன. மற்றபடி, ஐந்திறம் ஓர் அதிசய அறிவியல் நூல் அதாவது அற்புத ஆன்மிகம் பேசும் கணிதம் மற்றும் அறிவியல் நூல் என்பதைக் காணமுடிகிறது. எனவே, ஐந்திறத்தை மிகப் பழைய நூல் என்று கொண்டிடல் முற்றிலும் தகும் என முடிவு செய்திடல் வேண்டும். அது மட்டுமல்ல, ஒரு காலக் கட்டத்தில் உலகெங்கணும் பரவியிருந்த – தொல்பழம் பாரதீய விஞ்ஞான கலாச்சாரத்திற்கு இஃதொரு வித்தும் விருட்சமும் ஆக விளங்குகிறது என்று கூறலாம்.

குமரிக் கண்டத்தில் மயன் – மயவிஞ்ஞானம்:

இந்த ஐந்திற நூலில் மேலுமொரு வரலாற்றுச் செய்தி கிடைக்கிறது. அதாவது, இன்று பரவலாகத் தமிழ்ச் சான்றோர் பேசியும் எழுதியும் வரும் குமரிக் கண்ட

செய்திகள் கிடைக்கின்றன. இந்தக் குறிப்பு தென் குமரிக்குத் தெற்கே இருந்த குமரி மாநிலத்தைக் கீழ்க்கண்ட பாக்களால் வருணிக்கிறது.

''குமரி மாநிலம் நெடுங்கலை ஆக்கம்
அமர்நிலைப் பேரியல் வெற்புறம் திறனாய்
பல்துளி யாற்றுப் பெருமலை திறனிலைப்
புக்குறும் நிலைத்திறன் ஏழேழ் நிலமும்
ஏழேழு நாடென இயம்புறும் காலை''

– [ஐந்திறம் – 812]

இதையொட்டிய செய்திகளை ஐந்திறத்திலும் கண்டு, தமது ஆய்வுச் செய்திகளையும் முன்னிலைப் படுத்தித் தொகுத்து நாகர் கோவில் பேராய்வாளர் டாக்டர். பத்மநாபன் அவர்கள் அண்மையில் [காண்க: பிற்சேர்க்கை] பொள்ளாச்சி அருட்செல்வர், டாக்டர்.மகாலிங்கம் அவர்கள் சென்னையில் எடுத்திட்ட விழா ஒன்றில் விரிவாகப் பேசியதை இந்த நூலில் ஆர்வலர் செய்திக்காகச் சேர்த்துள்ளேன். மேல் விவரங்களை அங்கே காண்க. இவர் Indian History Congress ன் உறுப்பினர் என்பது குறிப்பிடத் தகுந்தது.

விண்ணியல் (Cosmology):

இதோ அந்த முதல் நூற்பாவை மட்டும் முதற்கண் உற்று நோக்குங்கள். பிரபஞ்ச மூலத்தையே (Roots of the cosmos) அதாவது பிரபஞ்சத்தின் அடிமுடியையே காண்பீர்கள்.

''ஒளிமுதற்கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற்பாற்றே''

இதன் பொருள் யாதெனில், இந்த ஞாலத்தின் தோற்றுவாயில் அதாவது மூலத்தில் நின்று நிலைத்து – இயங்குவது – ஒளி[1]. இந்த ஒளியே விண்ணில் அதிர்ந்து பரவிடும் நிலையில், ஒலியாக வெளிப்பட்டு இறுதியில் ஒலி மய விண்ணாகிறது. அதாவது ஒலிபடர்ந்த வெளியாகிறது (sound based space). இதனால் விளைவது ஓசை (dense/ coarse but audible sound) எனப்படுகிறது. அசைந்து அசையாகி, ஓசையாகி

1. ''வெளியை அறிந்து வெளியின் நடுவே
ஒளியை அறியின் உளிமுனி ஆமே
தெளிவை அறிந்து, செழுநந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேல்அறி யேனே.''

– [திருமந்திரம்]

இசையாகிறது என்பதின் நுட்பம் மின்னலுக்குப் பிறகு இடி இடிப்பது போல எனக. இந்த ஓசையே வெளி பேசிடும் மொழியுமாகிறது (language of space). இந்த வெளி பேசிடும் மூல ஒலி தான் – மூல மொழிதான் – வெளிமொழிதான், – 'ஓம்' எனப்படுவதாயிற்று என்பது மேற்கண்ட பாவின் பொருள்[1]. "ஓம் ஒலி விண்ணில் கேட்கும்" என்று சுருக்கியும் பிறிதொரு இடத்தில் பேசுகிறது. ஓம் என்ற ஒற்றை ஒலியின் [அ] ஒற்றை எழுத்தின் புதியதொரு விஞ்ஞான விளக்கம் இஃதன்றோ! இதல்லவோ Cosmology?

இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் வள்ளுவன் தந்த "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்பதை இப்போது உற்றுப் பார்த்தால் இந்த விண்ஞானம் வள்ளுவனுக்கும் தெரிந்திருக்க வேண்டுமென உறுதி செய்திடலாம்.

மேலும், "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு"[2] என்ற குறட்பாவையும் ஒப்பிட்டு உற்றறிக. ஔவைப் பிராட்டியின் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற சூத்திரத்தையும் உற்று நோக்குக. பிரம்மத்தை விளக்கும் தாயுமானவரின் சொற்களையும் ஒட்டிவைத்து முழுக் கருத்தையும் ஆய்ந்து தெளிக. "அங்கெங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்ஆனந்த பூர்த்தியாகி" இறுதியாக सर्वं खल्विदं ब्रह्म – "எல்லாம் பிரம்மமே" என்று வேதமும், जगत् सर्वं शिल्पमेव भवति "பிரபஞ்சப் பொருள் அனைத்தும் சிற்பமே [பிரம்மமே]" என்ற சிற்பியர் உபநிஷதமும் பேசுவதை உற்றுப் பார்த்தால் ஐந்திறப் பாவின் உயர்நிலை தெளிவுறும் எனலாம்.

. நான் படித்தறிந்த எல்லைக்குள் *(within my limited knowledge)* இருந்து கொண்டு இஃதென்ன விஞ்ஞானம் என்று சொல்ல வேண்டுமானால், இஃதொரு

---

1. "ஓம்மறை முதற்சீர் ஒருங்குற் றோங்கி
ஓம்முத லெழுத்தாய் ஒளிஒலி யியர்சீர்
எட்டின் நிலைதெரி யியற்றிற னோங்கி
எட்டுறும் பிறழ்நிலை இயல்நிலை தேர்ந்தே
அமிழொலி இமிழொலி குமிழொலித் தமிழொலி
உமிழொலி ஓமியல் ஏங்குறுஞ் செந்தமிழ்"
– [ஐந்திறம் – 769]

2. "கண்ணுங் கருத்தும் ஒன்றுவ போன்றே
எண்ணும் எழுத்தும் இயல்பிற் றிகழும்"
– [ஐந்திறம் – 66]

super science என்றும் *end of knowledge* என்றும் சொல்லிடலாம். இப்படிச் சொல்ல எனக்கு என்ன தகுதியுளது? இதனை முதலில் சமர்ப்பித்திட கடமைப்பட்டவனாகிறேன். நான் செல்வாக்கு மிகுந்த நீண்டவொரு பாரம்பரிய வரலாறு கண்ட ஸ்தபதியர் குடும்பத்தில் உதித்தவன். எங்கள் குடும்பமானது இன்றளவில் 1018 ஆண்டு தொடர் வரலாறு கொண்டதாகும். ஸ்தபதியர் குடும்பத்தில் முதன் முதலில் கல்லூரிப் படிப்பை மேற்கொண்டவன் நான். என் தந்தைக்கு அனைத்து இந்திய மொழிகளிலும் நல்ல பரிச்சயம் - ஞானம் உண்டு. எழுதப் படிக்கத் தெரிந்ததோடு பேசவும் செய்வார். கலை சார்ந்த சம்ஸ்கிருத நூல்களில் ஆழ்ந்த புலமை பெற்றவர். எனினும் அவருக்கு ஆங்கிலம் மட்டும் வரவே இல்லை. இதன் காரணமாகத் தன்னைத் தானே நொந்துக் கொள்வார். எனவே, எனது கல்லூரிப் படிப்பை பெருமையுடன் நோக்குவார். அவர் படிக்காத ஆங்கிலத்தை தன் மகன் படித்து வருவதாகச் சொல்லி தன் குறையை அகற்றிக் கொள்வார். நானும் படித்தது அதிகம் இல்லையானாலும் படித்தவரை எனது மரபு விஞ்ஞானத்தைப் புரிந்து கொள்ள நன்றாகப் பயன் பெற்றது என்பேன். படித்தது பின்வருமாறு: நான் *B.A.,*யில் *Pure mathematics*ம் *[1947-49]. Intermediate*ல் *maths, physics and chemistry*யும் (1945-47) ஆழ்ந்து படித்ததோடு சம்ஸ்கிருதமும் வேது வகுப்பிலிருந்து *B.A* வரை முறையே பள்ளியிலும் கல்லூரியிலும் படித்திருக்கிறேன். (வாஸ்து ஆகம சாஸ்திரங்கள் அத்தனையும் அப்போது சம்ஸ்கிருதத்திலேயே இருந்தன. தமிழில் இருந்தவை கடல் கோளினால் அழிந்து போயிற்று என்க.) சுருக்கிப் பார்க்கின், நான் படித்த இந்த சம்ஸ்கிருதமானது இலக்கிய சம்ஸ்கிருதமே *(Literary Sanskrit)* ஆகும். இதற்கெல்லாம் மேலாக விளங்கும் *Technical Sanskrit* ஆகிய வாஸ்து விஞ்ஞானப் படிப்பும் பயிற்சியும் எனது தந்தையிடம் 5 வயதிலிருந்தே கற்றிருக்கிறேன். இப்படிப்பு வேறெங்கும் - இன்று கூட - அக்காலத்திலும் இக்காலத்திலும் கிடைத்திடாத ஒன்று என்க. இந்த மொழிக்கு அக்காலத்தில் கிரந்தம் என்று பெயர். தமிழ் வழி எழுத்துக்கள் பெற்றிட்ட மொழி இஃதாகும். வேதமே கிரந்த மொழியில் தான் முதன் முதல் எழுதப்பட்டதென்ற ஒரு செய்தியும் உண்டு தான். கிரந்த மொழி சிற்பியற்கே சொந்தமென எங்கள் குடும்பத்தில் இன்றும் பேசி வருகிறோம்.இம்மொழி குமரிக்கண்ட மொழி என்று இன்று பேசலாகிறது. இக்கிரந்தப் பாடம் விடியற்காலை 5 மணிக்குத் தொடங்கும்; தினந்தோறும் 2 மணி நேரம் இந்தப் பாடம் நீடிக்கும். பல ஆண்டுகள் இப்படிச் சென்றன. இப்படித் தான் இதனை விட்டில் படித்திட்டேன். இதுவே மரபு வழிக்கல்வி எனப்பட்டது. *(Tradtional type of learning)* இதோடு, எங்கள் வீட்டில் தொழிற் பட்டறையும் உண்டு. எப்பொழுதும் ஏதாவதொரு வேலை நடந்து கொண்டிருக்கும். பத்துப் பதினைந்து சிற்பிகள் வேலை செய்து கொண்டே இருப்பர். இங்கே தொடக்க நிலைப்பயிற்சியும் பெறலானேன். அது என் காலத்தில், இப்போதும் நீடித்துப் பெரிய

கலைத்தொழில் நிறுவனமாக Shilpi guild ஆக ஓங்கி விட்டது. அத்துடன் தக்க வயது வந்து, கலைப் பணியாற்றும் நிலையில் வாஸ்து விஞ்ஞானத்தையும் அதில் அடங்கிய தொழில் நுட்பத்தையும் மீள் ஆய்வும் தொடர் ஆய்வும் செய்து எனது அன்றாடத் தொழிலில் புகுத்தி நல்ல பல சாதனைகளும் வெற்றிகளும் கண்டிருக்கிறேன்.

இதன் இறுதி வடிவம் தான் நான் இயற்றிய 133அடி உயர ஐயன் திருவள்ளுவரின் திருக்கோலம் ஆகும். கட்டிடக் கலைப் பயிற்சிக்கான எனது *field experience*க்கு எனக்கு உதவிய குரு என் தந்தையின் அண்ணார் திரு.செல்லக்கண்ணு ஸ்தபதி ஆவார். இது 1957 இல் பழனி தேவஸ்தான - திருவாவினன்குடி முருகன் கோவிலில் தொடங்கியது. அவர்க்குப் பிறகு நானே எனக்குக் குருவாகி விட்டேன். எனது ஆத்மாவே - ஆத்மானுபவமே - எனக்குக் குருவாகி விட்டது என்று சொல்லுகிறேன். இந்தக் காலத்திலே ஆத்ம சிந்தனைகள், சோதனைகள், சாதனைகள் மிகுந்தன. இதன் காரணமாக சிறியன, பெரியன, பழையன, மற்றும் புதியன என்னுடைய தொழிலில் சிறிய பெரிய தோற்றங்களில் - அமைதிகளில் – well defined forms – உருவங்களாக மிளிர்வதாயின. அத்தகைய படைப்புக்கள் நல்ல வரவேற்பைப் பெற்றன. ஓரளவு நல்ல பெயர்களையும் பட்டங்களையும் பெற்றிட்டேன். சிற்பகுரு என்ற பட்டம் இன்றைய குடியரசுத் தலைமகன் மேதகு அப்துல்கலாம் அவர்கள் வழங்கினார்கள் (2003). இதற்கிடையில், எனது பணிகள் உலகளாவிப் பரவின. எனது படைப்புக்களை அதனால் வந்த சிறப்புக்களை எல்லாம் நெடுங்காலம் தொய்வுற்றுக் கிடந்த எனது சிற்பக்கலை மரபுக்கே - அதன் பெருமைக்கே - ஆக்கத்திற்கே - ஏற்றத்திற்கே - உயர்நலத்திற்கே - உரித்தாக்கினேன். இப்போதும் பல திருப்பணிகளைச் செய்திடும் பேறும் பெற்று வருகிறேன். என்னை ஆதரித்த பெரியோர் பட்டியல் மிக நீளமானது. இதுவும் தனி நூலாக வெளிவருகிறது. இந்தத் தொழிலுக்கு இணையாக பிறிதொரு தொழில் இந்த நிலவுலகில் இல்லை என்பது எனது முடிவு. மறு பிறவி ஏதாவது நிகழுமானால் ஸ்தபதியாகவே பிறக்க வேண்டுமென்பது எனது ஆசையும் பிரார்த்தனையுமாகும்! காரணம், கண்களுக்குப் புலப்படாத ஓர் அருவப் பொருளுக்கு உருவம் கண்ட தொழில் இஃதே அன்றோ! காணாத மூலப் பொருளைக் கண் முன் நிறுத்திக் காட்டிய ஆபூர்வ விஞ்ஞான மரபு இஃது என்றால் மிகையல்ல.

இதற்குமுன், 27 ஆண்டுக்காலம் தொடர்ந்து மாமல்லபுரக் கட்டிக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி முதல்வனாக இருந்த காலத்தில், நிர்வாகத்தோடு மட்டும் ஒட்டிக் கொள்ளாமல், தினந்தோறும் மாணவர்களுக்கு, படிப்பையும் பயிற்சியையும் சொல்லிக் கொடுத்து வந்தேன். துணை ஆசிரியர் இரண்டே இரண்டு பேர் தான். ஒரு வருடத்தில் 2 ஆண்டுப் பணி வீதம் செய்தேன் என்றால் மிகையல்ல. உழைப்பிலேயே முழுமூச்சாக ஈடுபட்டேன். ஓய்வு நாடி எங்கேயும் ஓடிவிடவில்லை; ஒதுங்கி நின்றேனுமில்லை. உழைப்பிலேயே ஓய்வின் சுகத்தை அனுபவித்தேன்.

இன்றும் அப்படித் தான். அதாவது, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற (1988) பின்னரும் இப்பணி தொடர்கிறது. இந்த வாஸ்து விஞ்ஞானத்தை மேலை நாட்டினரும் தெரிந்து கொள்ள அவர்களுக்கென ஒரு கற்பகத்தையே *(institute)* நடத்திவருகிறேன். இக்கற்பகத்திற்கு *International Institute of Mayonic Science and Technology* என்று பெயரிட்டேன். இதில் நம்நாட்டு *B.Arch., B.E.,* படித்தோரும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இந்த ஆசிரியப்பணி மூலம் இந்தச் சிற்பக் கலை மரபின் அடிப்படை விண்ணியல் நுட்பங்களை எனது மாணவர்களுக்கும், பெரியோர்களுக்கும் சொல்லிக் கொடுத்ததினால், நானும் இதற்காக எனது மரபை அடிக்கடி ஆழ்ந்து நோக்கியதால், அம்மரபின் உள்ளே துடித்துக் கொண்டிருந்த "உள்ளம்" என்ற இடத்தில், அதிலிருந்து முகிழ்ந்து வந்த உணர்வுகளையும் உற்றறிந்தேன். என் உணர்வுகள் வரைவுகளாக - படங்களாக - படிமங்களாக மற்றும் விடு மாளிகைகளாக - மாற்றம் பெருவதைக் கண்டு என்னை நானே ரசித்தேன். இந்த எனது ரசனையை பிறரும் துய்த்திடச் செய்திட்டேன். நானே ரஸமாகவும், ரஸிகனாகவும் மாறி விட்டேன். இதனை விளக்கிடும் ஓர் அறிவியல் பாடலை - மயத் தமிழ்ப் பாடலை - இங்கே சொல்லி வைக்கிறேன்.

"உள்ளமே மூல மாகி உணர்வுறும் கோல மாகி
உள்ளமே ஊக்க மாகி உள்ளமே உணர்வு மாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய வித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்" - மயன்

இந்தக் கலை மரபுக்குத்தான் சிற்பிகளாகிய நாங்கள் வாஸ்து சாஸ்திரம் என்றும், வாஸ்து விஞ்ஞானம் என்றும், வாஸ்து வேதம் என்றும் வாஸ்து மரபு என்றும் வரலாற்றுக் காலத்தில் (B.C)பெயரிட்டு பல்லாண்டு காலமாகச் சொல்லிவருகிறோம். இவை கூறும் செய்திகள் அடங்கிய முந்து நூலை **ஸ்தாபத்யவேதம்** என்று சொல்லப் பட்டதைக் கண்டு தேறினேன். அபுர்வே.........வஸ்து என்பது சக்திமய விண்பொருள் (space packed with energy, Cosmic energy) என்பதையும் வாஸ்து என்பதை சக்தி உள்ளிட்ட மண்பொருள் (terrestrial energy, material energy, earthly energy) என்பதையும் எனது மரபு ஒரே சுலோகத்தில் இரண்டே வரிகளில் விளக்குவதை உற்று நோக்கி வியந்து போனேன்; பெருமை கொண்டேன். இதிலிருந்து தான் எனது தீவிர ஆராய்ச்சிகள் தொடங்கின. இதோ அந்த வாஸ்து சாஸ்திரம் கூறிடும் விஞ்ஞானப் பாடலையும் உற்று நோக்குங்கள். மொழிப் பிணக்கில் மற்றும் வாதப் பிரதிவாதங்களில் மூழ்கிவிடாமல் இது காட்டும் மூலப் பொருளாகிய உணர்வில் மூழ்கித் திளையுங்கள். நீங்களும் ஆய்வு செய்யுங்கள். வெற்றி பெறுவீர்கள்.

"प्रासादादीनि वास्तूनि वस्तुत्वात् वस्तु संश्रयात् ।
तान्येव वस्तुरेवेति कथितं वै वस्तुविद्बुधैः ॥"

"ப்ராசாதாதீனி வாஸ்தூனி வஸ்துத்வாத் வஸ்து சம்ஸ்ரயாத் ।
தான்யேவ வஸ்துரேவேதி கதிதம் வை வஸ்து வித்புதை: ॥"

- மயமத வஸ்து சாஸ்திரம்.
அத்தியாயம் 3, முதல்ஸ்லோகம்.

இதன் பொருள் யாதெனில், பிராசாதம் எனப்படும் கட்டிடங்கள் (Prasadam மனமகிழ் மன்றம்] வாஸ்துக்கள் எனப்படும். இக்கட்டிடத்திற்குள் வஸ்து (energy) உளது; இது eternally existing cosmic substance ஆகும். இஃது எப்போதும் வாஸ்துவோடு இணைந்தே இருக்கும் (Perpetually co-existing with energy). இதனால் வஸ்துவே வாஸ்து எனப்படுவதாயிற்று (energy turned into matter or matter is the extended form or motamorphic form of energy). இதனால் வஸ்து என்பதும் வாஸ்து என்பதும் ஒன்றே எனத்துலக்கமாயிற்று. (energy = matter) இங்ஙனம் வஸ்து நுட்பம் அறிந்தோர் [நூலறி புலவோர் Scientists] சுறுகின்றனர். இதனை ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமெனில் "A part of the Vast Space, if enclosed by a four walled structure, such a built space becomes a living organism, by virtue of its having inhered the energy inside. This is just like the human form or any living body containing life energy within. The structure is body, the space or energy enclosed by four walls is life". ஓடும் கருவும் கொண்டு முட்டை போல் என்க. இதற்கு தமிழிலும், சம்ஸ்கிருதத்திலும் [முட்டை] அண்டம் என்பதே பொருள். பேரண்டமெனப்படும் cosmosம் இப்படித்தான் இருக்கும் [அ] இருக்கிறது என்பது இதன் corollary என்க. இதை வைத்து "வீடு ஓர் உயிர்ப் பொருள்" என்றும் இதற்கான கணக்கியலை அறிந்து, அஃது இசைக்கான கணக்கியலை ஒத்து நிற்பதையும் உற்றறிந்து, "வீடு ஓர் இசை வடிவம்" என்றும் கடந்த 25 ஆண்டுகளாக மேடைகளில் பேசி வருகிறேன். உடம்பெடுத்த நாமும் நம் முன் வாழும் அனைத்து உயிரினங்களும் இறைவனின் இசை வடிவங்களே என்றும் முழங்கினேன். எவர்க்கும் புரியவில்லை; எவரும் எதிர்க்கவுமில்லை. இதைக் கண்டு வியப்புற்றேன்; விசனிக்கவும் செய்தேன். என்றாலும், நான் இக்கூற்றைக் கைவிடவில்லை; தொடர்ந்து பேசியும் எழுதியும் மேல் ஆய்வும் செய்து வருகிறேன். இக்கூற்று மேலை நாட்டினருக்கு நன்றாகவே புரிந்து விட்டதெனினும், எனது பிரச்சாரத்தை நிறுத்தி விட்டேனில்லை. நமது இயலுக்கும் இசைக்கும் ஒரு பெரும் தொடர்பும் பயனும் இருப்பதை உற்றுணர்ந்து அதே பயன் வீடு, கோயில்

கட்டிடங்களிலும் கிடைக்கிறது என்பதையும் உற்றுநோக்கி ஒரு புனிதமா நெறி (Sacred order) தழுவிய - இப்பணியைத் தொடர்கிறேன். இதனால் விளைந்திட்ட அப்பயன் தான் "ஆத்மபலம்" எனப்படுகிறது. ஆத்மபலம் பெற்றோர் - நல்லோராகவும், உடல் ஆரோக்யம் பெற்றவராகவும், இனிய வாழ்க்கை நடத்துவோராகவும், அமைதி இன்பம் துய்ப்போராகவும் இருப்பதைக் கண்கூடாகப் பார்த்திட்டேன். விபரீத வீடு, கோயில் ஆகியவை தீமைகளைத் தருவதையும் உற்றறிந்தேன். சாஸ்திரங்களும் இவ்வண்ணமே பேசுவதை பக்க பலமாக வைத்து தெளிவு பெற்றேன். எனவே, இந்த இன்ப வாழ்க்கை உலக மாந்தர்க்கும் கிடைக்கச் செய்திட பாடுபட்டேன்; பாடுபட்டும் வருகிறேன். இதனால் எனது வாழ்க்கையில் களைப்பும், கவலையும் நோய் நொடியும் ஏற்படவில்லை என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுள் இன்பு உணர்வே நிகழ்வதைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன். தனியனாய்ப் பயணித்த நான் ஒரு பெரிய குடும்பத்தையே அமைத்துக் கொண்டு, நான் வகுத்துக் கொண்ட பாதையில் அழைத்துச் செல்லுகிறேன். அவர்கள் மேலும் இக்கலையையும் கலை சார்ந்த மரபையும் உயர்த்துவர் - பரப்புவர் - காப்பர் என்ற நம்பிக்கையுடன் மேலும் நடந்து செல்லுகிறேன். அமெரிக்கர்கள் இம்மரபின் மீது பேரார்வங் கொண்டு செயல்பட்டு வரும் போக்கையும் கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

இந்த நிலையில், இடையிடையே, எனது மரபு விஞ்ஞானம் பற்றிய பல வினாக்களை நானே தோற்றுவித்துக் கொண்டு, ஒரு சிலவற்றுக்கு விடைதேடி வாஸ்து, ஆகம நூல்களையும், மேலும் பல ஞானநூல்களையும் பார்க்கலானேன். இத்தேடல் மூலம், மேலும் ஒரு சில புதிய விஞ்ஞானச் செய்திகளைக் கண்டறிந்தேன். இவ்வாறு புரிந்திட்ட நிலையில், நான் கட்டிய மனிதர் வாழும் கட்டிடங்களும், கடவுள் தங்கும் கோவில்களும், கடவுட் சிற்பங்களும் உயிர்ப்புள்ள பொருள்கள் எனக் கண்டு தேர்ந்ததுடன் இதற்கெல்லாம் சிற்பியின் உள்ளுணர்வுதான் மூலமென உற்றறிந்து ''சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதையாகிறான்'' என்ற உள்ளார்ந்த விளக்கங்களையும் பிரகடனப் படுத்தினேன். நானும் பிரம்மன்; நீயும் பிரம்மன் என்ற மகாவாக்கியங்களின் உட்கிடக்கையினையும் ஆய்வு செய்திட்டேன். வாஸ்து மரபுக் கணக்கியலையும் அளவியலையும், அணியியலையும் நன்றாகப் புரிந்து கொண்டேன். இதே கணக்கு,

மரபுக் கவிதைக்கும் [சொல்லோவியத்துக்கும்] இருப்பதை தெரிந்து மகிழ்ந்தேன். கம்பனும் காளிதாசனும் ஷேக்ஸ்பியரும் நான் ரசித்த கவிவாணர்கள் ஆவர். சிற்பமும் கவிதையும் உயிர்ப்புள்ள இரட்டைப் பொருள்கள் (two fold form of a single inner experience) அல்லது வடிவங்கள் [சொல்லோவியம் மற்றும் கல்லோவியம்] என்பதையும் உணர்ந்து மேலான தெளிவொன்றையும் பெற்றிட்டேன். இரண்டின் பிறப்பிடம் "உள்ளம்" (inner space) என்பதை விஞ்ஞான ரீதியில் புரிந்துக் கொண்டேன். நான் படித்த Physics and Chemistry எனது அகக் கண்களைத் திறந்து விட்டன!* கணக்குத் தான் விஞ்ஞானத்துக்கு அடிப்படை என உறுதி செய்து கொண்டேன். மூலமே கணக்காக உளதென்பதையும் செயல்படுகின்றதையும் கண்டறிந்தேன்.

"உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கி, கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி, சொல்லும் சொல்லே சொற்பொருளாகி" என்ற மயத்தமிழ் எனது அனுபவத்துக்கு உரமிட்டது. எனது மரபின் தந்தையான அந்த மயனையும் அவனுடைய பேராற்றலையும் உற்றறிந்து மயங்கிப் போனேன். ஆனந்தக் கண்ணீர் வடித்திட்டேன். இதுவரை மறைந்திருந்த மயனை ஒரு நிலையில் கண்டவுடன் அழுதே விட்டேன். பிறகு பண்டிதர்களையும் ஆராய்ச்சி வல்லுநர்களையும் அணுகி வரலாறு கேட்டறிந்தேன்; மகிழ்ந்தேன் அவனது சிருஷ்டி (creativity) நெறிமுறைகளையும் உற்றறிந்தேன். இதைச் சொல்லிட ஒரு Documentary Film கூட எடுத்தேன். அஃது 1991ல் குடியரசுத் தலைவரின் பரிசையும் போற்றுதலையும் பெறுவதாயிற்று Best of documentaries yet known என்ற புகழ்ச்சியையும் வரவேற்பையும் அது பெற்றது. இந்த documentaryஐ BBC (London) கூட ஒளி பரப்பியது. இந்நிகழ்ச்சியானது எனது ஆய்வுப்பயணத்தை நம்பிக்கையுடன் நீட்டிக்கச் செய்தது.

இதனால், எனது விஞ்ஞான மயக் கேள்விகள் ஒரு வேள்வியாகி, அந்த வேள்வியை - அதாவது எனது அந்தர்யாகத்தை - அக வேட்கையை நீட்டித்தேன்.

---

* கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் காணஒண் ணாது;
கணக்கு அறிந்தார்க்கு அன்றிக் கைகூடா காட்சி,
கணக்கு அறிந்து உண்மையைக்கண்டு அண்டம் நிற்கும்
கணக்கு அறிந்தார் கல்வி கற்று அறிந் தாரே. – [திருமந்திரம்]

இறுதிக் காலத்தில் மய விஞ்ஞானச் செய்திகளும் என் கைக்குக் கிடைத்து விட்டதால் (1980) எனது வாழ்க்கைப் பயணம் வேகம் கொண்டு முன்னேறியது. இவையெல்லாம் மேலும் நாட்டு மக்கள்தம் நலனுக்கு உபயோகப்பட உழைத்து வருகிறேன். 'உழைப்பே மூலம் உணர்வே காலம்' என்ற மயன் விதித்துக் கொடுத்த கொள்கையினனாக மாறி விட்டேன். அந்த அதிசய விஞ்ஞானியின் பெயர் வைத்து ஒரு சிறு கட்டிடத்தையும் கட்டி வைத்து பேரம்பலம் *(macro abode)* மற்றும் மயசபை (Maya Sabha) என்றும் பெயரிட்டு எனக்குப் பின் காலத்தில் அங்கே இந்த ஆய்வுகள் தொடர்ந்திடச் செய்துள்ளேன். சங்க காலச் சிற்பச் சித்தனாம் மயனுக்கு ஒரு விஞ்ஞானக்கலைக்கூடம் ஒன்றும் இப்போது கட்டி வருகிறேன். இது முற்றிலும் கல்லால் அமைகிறது. இக்கட்டிட அமைப்பில் இந்திய மயனையும் மெக்சிகோ மாயனையும் ஒப்பு நோக்கி இருவரும் ஒருவரே எனக் காட்டியிருக்கிறேன். மெக்சிகோ மாயன் நாட்டுக்குச் சென்று அவனது படைப்பின் நுட்பங்களைக் கண்டறிந்தேன்.

இதற்கு முன்னர் 1977ல் *'சிற்பச் செந்நூல்'* என்ற படிமக்கலை நூல் ஒன்றை அரசு ஆணை மூலம் தமிழில் எழுதினேன். அப்போதே நல்லதொரு முன்னேற்றப் படி ஏறக்கிடைத்து அந்நிலையில் கலைத்துறையில் புதியதொரு தெளிவும் பெற்றேன், உயர்வும் பெற்றேன். படவிளக்கங்கள் மலிந்து நூல் இஃதென்க. ஆங்கிலப் பதிப்பும் தெலுங்குப் பதிப்பும் பெற்று இந்நூல் நன்கு பிரசித்தமாயிற்று. இதுவரை ஆங்கிலத்திலும், தமிழிலும் 17 கலை ஏடுகளை அச்சேற்றி வெளியிட்டிருக்கிறேன். எல்லாம் விஞ்ஞான விளக்கங்களாகவே அமைந்துள்ளன. எனது பயிலகத்தையும், தொழிலகத்தையும் *Computerise* பண்ணியுமுள்ளேன். எனது 17 ஏடுகளையும் பாரத ரத்னா குடியரசுத் தலைமகன் மேதகு APJ.அப்துல் கலாம் அவர்களிடம் சேர்ப்பித்து விட்டேன். காரணம், அவர் ஒரு Space Scientist and Technologist என்பதால் என்க. இதற்குமுன் பல பெரியோர்களிடமும் கொடுத்திருக்கிறேன். ஆனால் மாண்புமிகு கலாம் அவர்களே தனது உயர்ந்த ஸ்தானத்திலிருந்து புரிந்து பாராட்டினார் என்பது குறிப்பிடத் தகுந்தது. இவைதான் எனது ஒரு சில தகுதிகள், அத்துடன் இனமறியா - என் உடன் பிறந்த வேட்கையும் (inner urge) ஆகும் என்க. நிற்க.

ஐந்திறம் – மேல் விளக்கம்:

மேலும், இந்த விஞ்ஞானமானது நமது ஞாலம் தோன்றுவதற்குக் காரணமான மூலப் பொருள் அல்லது முழுப் பொருள் ஒன்றே என்றும் அஃது 'ஒளி' தான் என்றும் கூறி, அந்த மூலமே தானாக உணர்வுற்று அசைந்தாடும் நிலையில் காலமாகி (Absolute Time), அந்தக் காலமே சீலமாகிக் கொண்டு (rhythm லயம்), அந்தச் சீலமே கோலமாகி (form), இறுதியில் அங்ஙனம் இயல்பாய் – தோன்றிய பல கோலங்கள் நிறைந்த பேரிடத்தை ஞாலம் (space of celestial bodies) என்று குறிப்பிட்டு, இயற்கையின் ஓர் அதிசய – அபூர்வ – அற்புதமான ஓர் ஐந்தியல் இலக்கணத்தை இந்த ஐந்திற நூல் – சூத்திரப் பாங்கில் – படிமுறைப்படுத்தி ஓதுகிறது. இதனாலும் இந்த நூல் ஐந்திறம் எனப்பட்டதென்க.

விண்தமிழ்:

மயத்தமிழ் ஒரு விஞ்ஞானத் தமிழ்; எளிய தமிழ் தான். ஆனால், அஃது ஒரு படி உயர்ந்து விண்ஞானத்தமிழாகத் திகழ்கிறது. இங்கே தான் சிக்கல் தோன்றி விட்டதெனலாம். இதைப் புரிந்து கொள்ள எது தேவை? சாதாரணப் படிப்புப் போதாது. Space dynamics அதாவது, ஒளியானது செயல்படும் நுட்பத்தைத் தெரிந்து கொள்ள விண் சார்ந்த அறிவியல் [விண்ணியல்] படிப்புத் தேவையல்லவா? இதுதான் பெரும்பாலோருக்குக் கிடைக்காமல் போயிற்று. இஃது ஐந்திறத்தில் கிடைக்கிறது. சொல்லிக் கொடுக்க அப்போது தகுந்த ஆசான் இல்லை. இப்போதும் தேவை தான். நிரந்தர ஆய்வுக் கூடமும் தேவை. இளைய சமுதாயம் இதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது, but going blind folded. No guide is available.

முத்தமிழ் போல் மூன்று மாமணிகள்:

இந்த நேரத்தில் மூன்று மனிதர் மாமணிகளை நினைக்கிறேன். அவர்கள் யார் எனில், முன்னாள் தமிழக முதல்வர் திரு.எம்.ஜி.ஆர் அவர்கள், இரண்டாவது முன்னாள் கல்வி அமைச்சர் திரு.அரங்கநாயகம் அவர்கள், மூன்றாவது முன்னாள் அறநிலைய அமைச்சர் திரு.ஆர்.எம்.வீரப்பன் அவர்கள். இந்த மூவரும் இன்று எனக்கு உதவிட முடியா நிலையில் உளர். என்றாலும் நான் சாம்பாதித்த பெருமைகளை எல்லாம் அவர்களுக்கே உரித்தாக்குகிறேன். நிற்க.

எனக்கொருஆய்வுக்கூடம் கட்டித்தருவதாக1988ல் டாக்டர்.அரங்கநாயகம் அவர்கள் கூறினார்கள். ஓர் *Art movement* வாஸ்து மரபினருக்குத் தேவை என அறிவுரை செய்தார்கள். மாமல்லைக் கல்லூரியின் பின் புறத்தே அதனைக் கட்டித் தர திட்டமிட்டார். இதனை டாக்டர்.எம்.ஜி.ஆர் அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் இப்போது அரசுப் பதவியில் அவர்கள் எவரும் இல்லையாதலால் நானே ஓர் ஆய்வுக்கூடத்தை சென்னையில் நிறுவி ஏற்கனவே குறிப்பிட்ட படி அதற்கு "பேரம்பலம்" என்றும் "மயசபை" என்றும் பெயரிட்டிருக்கிறேன். கலைப்பயிர் வளர்வதற்கன்றி வயிர் வளர்ப்பதற்கு அல்ல என்பதை பணிந்து தெரிவிக்கிறேன். நான் பிறந்த நாளாகிய 30.09.2004ம் தேதி (வயது 78 தொடக்கம்) மங்கலத் துவக்கம் பெற்று விட்டது. இந்த நிலையத்தை எனது மாணாக்கர்களும், குமாரர்களும், மருமக்களும், பேரன், பேத்திகளும், என்னிடம் பயிற்சி பெற்ற - உடன் உழைத்து வரும் சிற்பியர்களும், பல ஸ்தபதியர்களும், நண்பர்களும் தொடர்வர். இவர்களுக்காவது செல்வர்தம் உதவி, அல்லது அரசின் ஆதரவு பிற்காலத்தில் கிடைக்கட்டும். கிடைத்திடும் என்று நம்புகிறேன். இந்த அதிசய விஞ்ஞானம் அனைவர்க்கும் புரிந்தாலன்றி - புரியச் செய்தாலன்றி - எவர் ஆதரவும் கிடைக்காது என்பது நன்கு தெரிந்தே ஆதரவு கோரி யாரிடமும் இன்னும் செல்லவில்லை.நிற்க.

இந்த நேரத்தில் இன்னொரு மூதறிஞரை - இன நலக் காவலரை - நான் குறிப்பிடாமல் விட்டு விட்டால் நான் செய்நன்றி கொன்றவனாவேன். அரசு வழியாக தனது தமிழ்க்கலாச்சார உணர்வுக்கு உணவாக - உயர்நலத்திற்கு ஏற்ப - பூம்புகார் படைத்து, வள்ளுவனுக்கு எழில்மிகு கோட்டம் அமைத்து, இறுதியாக வள்ளுவனுக்கே 133 அடி உயரத் திருவுருவத்தை நிருமித்து *Practical aspect* ல் மிகப்பெரியஉதவியைச் செய்ததோடு, என்னையும் வரலாற்றில் - இல்லை - எனது வாஸ்து மரபை - நிலைக்கச் செய்திட்ட பெருமகனாவார். அவர் தான் டாக்டர் கலைஞர் கருணாநிதி ஆவார். அவரும் நான் நடத்தி வரும் *Art movement* க்கு எப்போது உதவி வேண்டுமோ அப்போது வாருங்கள் என்று சொன்ன அன்பான உறுதியை என்னால் மறக்க இயலாது. அவர் மட்டுமல்ல அவருக்குப் பிறகு அவரது குடும்பத்தினரும் அடுத்தடுத்து உதவுவர் என்று நம்பிக்கை கொண்டுள்ளேன். நிற்க,

விண்ணே மண்ணாகிறது:

இனி மீண்டு விஞ்ஞானத்துக்குப் போவோம். நான் சொல்லி வந்த இந்த மூலப் பொருளானது நம்மைச் சூழ்ந்துள்ள விண்வெளி என்பதைக் கண்டறிந்து அந்த விண்வெளியே இறுதியில் மண்வெளியாக - மண்பொருளாக உருமாற்றம் கொள்கிறது என்ற ஒரு விசித்திர விஞ்ஞான நுட்பத்தை இந்த ஐந்திறம் சொல்லுகிறது. அதாவது, விண்ணே மண்ணாக உருமாற்றம் கொண்ட (metamorphic phonomenon) விஞ்ஞான ரகசியத்தை நமக்கெல்லாம் ஐயமறச் சொல்கிறது இந்த ஐந்திறம். அதாவது விண்ணாகிய energyயே மண்ணாகிய matter ஆகிறது (material energy) என்பது விளக்கம். அதாவது விண்=மண்; வஸ்து=வாஸ்து. $E=mc^2$ [பேராசிரியர் நோபல் பரிசு பெற்ற ஐன்ஸ்டீனின் சூத்திரம்] என்பன மேல் விளக்கம் என்பேன். காரணம், விண்ணும் சக்திப் பொருளே; மண்ணும் சக்திப் பொருளே! எல்லாம் Energy யே!என்க. அசத்து, சத்து என்ற பிரிவினை விஞ்ஞான மாகாது. எல்லாம் சத்தே என்பதே விஞ்ஞானக் கூற்று என்க.

அழியாச் செல்வம்:

பிறகு நிகழ்ந்த எனது 20 ஆண்டு தீவிர ஆராய்ச்சியின் அடிப்படையிலும் ஆராய்ச்சிக்குக் கிடைத்திட்ட செய்திகளையும், விளக்கங்களையும் வாஸ்து ஆகம நூல்களிலும் பார்த்து, வாஸ்து வழி நின்று செயலாற்றி, அந்தச் செயலால் விளைந்திட்ட எனது படிமங்களால் ஐந்திற விஞ்ஞானப் படிமுறைகள் தெளிவும், உறுதியும் பெற்றன. இது தான் நான் பெற்ற செல்வம் நான் விட்டுப் போகும் செல்வம்; மற்றும், நிலையான காலத்தால் அழியாத செல்வம் என்பேன்.

ஒளியும் உணர்வும், அண்டமும் பிண்டமும்:

நம்மைச் சுற்றி உள்ள ஒளி வெளியைத்தான் பஹிராகாஸம் என்றும் அகவெளியை 'அந்தராகாஸம்' என்றும் சொல்லிவருகிறோம். இத்தகைய ஓர் ஒளி அணுதான் அனைத்து உயிரினங்களுக்குள்ளும் உயிராகவும் ஒளியாகவும் நின்று நிலவுகிறது. இதன் மறுபெயரே உணர்வு எனப்பட்டது. எனவே, உயிர் நிரம்பிய உயிர்ப்புள்ள வெளியாக நம்மைச் சூழ்ந்த ஆகாஸம் இருக்கிறது என்பதை உறுதிபெறச் சொல்லியதோடு அணுவே அண்டமாக - பேரண்டமாக, ஞாலமாகப் பருத்து, பரந்து வளர்ந்திருக்கிறது என்பதையும் இந்த நூல் தேற்றங்களாகத் தருகிறது.

கணக்கையும் உரைக்கிறது! இந்த நூலைப் படிப்போர்க்கும் உற்று நோக்குவோர்க்கும் இந்த ரகசியத்தைத் தெரிவிக்கிறது. மேலும், இந்த ஐந்திர நூல் ஞாலத் தோற்றத்திற்கும், மனிதக் கோலத்திற்கும் ஒரு சமன்பாட்டையும் காட்டுவதோடு நிரூபிக்கவும் செய்கிறது. சுருங்கச் சொன்னால் "மனித வடிவமே ஒரு பிரபஞ்ச வடிவம்" எனக் காட்டுகிறது. வாஸ்துக் கட்டிடங்களும் பிரபஞ்சக் குஞ்சுகள் தான் என்க. கோவில் அமைப்பின் மூலமும் இது விளக்கப்பட்டிருக்கிறது. இதுவே கோயிற் சமயம் என பண்டைத் தொழில் மரபில் நிலவி வந்தது. பூசை ஆரவாரத்தில் இந்த அதிசயம் மூழ்கி விட்டது. குமரிக்கண்டத்தை கடல் கொண்டது போல் என்க.

ஓம் என்பதென்ன? ஓங்குறும் ஒலியே ஓம்:

விண்ணியல் மறைந்து போயிற்று. இந்திய மண்ணியலோவெனில் சாகும் நிலைக்கு வந்து விட்டது. இந்த ஐந்திர நூல் எடுத்த எடுப்பிலே "ஓம்" என்ற ஒற்றை ஒலிக்கு, நல்ல விளக்கவுரை தருகிறது. ஓம் என்பது என்ன? எப்படி உண்டாகிறது எங்கே, எங்கிருந்து உண்டாகிறது என்பதை விஞ்ஞான ரீதியாகக் கண்டு சொல்கிறது. தொடக்கத்தில் இதனை நான் விளக்கி இருந்தாலும், மேலாய்வு செய்த நிலையில் ஒரு சில நுட்பங்களை இப்போது சொல்லப் போகிறேன்.

ஐந்திரம் என்ன சொல்கிறது என்பதை மீண்டும் நோக்குவோம்.

"ஓம்" என்பதை ஒற்றை ஒலியாக - மூல ஒலியாக எங்கும் பரவிய ஒலியாக முதற்கண் விளக்குகிறது. ஓம் என்ற மூல ஒலியானது எந்தெந்த சந்தர்ப்பங்களில் எப்படியெல்லாம் வழக்காற்றில் உளது என்பதை மேலும் ஒரு சில வரிகளில் மிகத் தெளிவாக நமக்குத் தருகிறது ஐந்திரம். உதாரணமாக, மறைமுதல் ஒலி ஓம் அறைதல் மரபே என்று பேசுகிறது. இங்கே மறை என்பது வேதம் என்று கொள்ளப்படுமானால் தவறேதும் இல்லைதான். ஆனால் இந்த மறை என்ற சொல்லுக்குள் என்ன மறைந்துளது? இச் சொல்லுக்குள் பொருள் ஒன்று (meaning) கண்களுக்குப் புலப்படாமல் மறைந்திருப்பதால் அத்தகைய நுண்பொருளை - இந்த ஓம் ஒலி உணர்த்தும் நுண்பொருளை - **மறை** என்று சொல்கிறது என்பது பொருள். இதன் மூலம் சொல்லுக்குள் - சொல் ஒலிக்களுக்குள் மறைந்திருப்பது பொருள் ஆவதால், இங்ஙனம் மறைமுதல் ஒலி ஓம் என்று

சொல்லுவது மரபு என்கிறது ஐந்திறப்பா.

அதுமட்டுமல்ல, மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே என்றும் ஓம் என்ற ஓலியின் பயன்பாட்டை அல்லது செயல்படு நிலையை குறிக்கும் என்றும் ஒரு வழக்கு இருந்ததை இந்த ஐந்திறம் சுட்டிக்காட்டுகிறது. இங்ஙனம் ஓம் என்ற மூல ஒலியின் நிலைப்பாட்டை – மொழிமுதல் ஓம் என்று இந்த ஐந்திறம் தெளிவுற விளக்குகிறது. ''ஓம்'' என்பது மூலத்தின் ஆற்றல் அல்லது ஆற்றல் புள்ளி (energy point) என்று கூறுகிறது.

அதன் பிறகு, அத்தகைய மொழிக்கு முதலாகிய எழுத்து ஒலி இருக்கிறதே அது எப்படித் தோன்றுகிறது என்பதை மிகத் தெளிவாக ஐந்திறம் சொல்லுகிறது. இந்த ஒலிக்குள் பல அணுக்கள் (Sound atoms) திறண்டு கிடப்பதாகவும், அத்தகைய அணுத்திரள் ஒலியானது ஒவ்வொன்றும் ஒவ்வொரு எழுத்துக்கும் உரித்தானது என்று சொல்லி, இத்தகைய அணுத்திரள் ஒலியும், அணுத்திரள் ஒளியும் இணைந்த நிலையில் எழுத்துருவாக – எழுத்தோவியமாகச் சொல்லப்படுகிறது என்பது மேலும் ஒரு சிறப்பு என ஐந்திறம் கூறுகிறது. அத்தகைய பாக்கள் பின்வருமாறு.

"மறை முதல் ஒலி ஓம் என அறைதல் மரபே"
"மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே"
"அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்"

என்று மூன்று பாக்கள் மூலம் ஓம் என்ற மூலத்தின் தோற்றத்தையும் அதாவது, அதன் வெளிப்பாட்டையும் அதன் நிலைப்பாட்டையும் ஐந்திறம் அறுதியிட்டுக் கூறுகிறது. நிற்க.

ஓம் ஒலி, ஓம் ஒளி – இரட்டை ஓம்கள்:

நடைமுறையில், ஓம் என்ற மூல ஒலியிலிருந்து இந்தப் பிரபஞ்சமே தோற்றம் கொள்கிறதென நீண்ட காலம் சொல்லிவருகிறோம். இது சரியில்லை என்பது ஜந்திறம் வாயிலாகத் தெரியவருகிறது.ஒலியானது அகத்தில் பொருளை உணர்த்துமே – ஸ்மரனை தருமே தவிர, அந்தப் பொருளைக் கண்ணால் பார்த்துப் புரிந்திடக் காட்டாது. எப்படி எனில், நாம் பல காட்சிகளை காது வழியாகக் கேட்டு அதற்கு ஈடான காட்சியை நமது உள்ளத்தில் உணர்கிறோம். உணர்கிறோம் என்றால் ஒலிமயக்காட்சியை அகநோக்கில் காணுகிறோம் என்பது பொருள். இதனை ஞானம்

என்று அதாவது ஞானக்காட்சி என்று ஐந்திறம் சொல்லுகிறது. இந்த அகக் காட்சியானது ஒலிமயமாக காது வழி அகத்துக்குள்ளே சென்றவுடன் ஒளிமயக் காட்சியாக மாறியபின்னரே அக்காட்சி எவருக்கும் உணர்வாகிடும், இல்லையேல் பேசிய பேச்சு புரியாது அல்லது தெரியாது என்பது பிறிதொரு நுட்பம் என்க. இதைத்தான் (Self realisation / inner vision) என்று பேசிவருகிறோம். இந்த அடிப்படைக் காட்சி ஒளி மயமானதென்பது விஞ்ஞான அதாவது விண்ஞான உண்மையாகும். மீண்டும் ஒருமுறை சொல்கிறேன்; கேளுங்கள்.

அகத்தில் காணும் காட்சியை புறத்திலேயும் காணுகிறோம். இயற்கை, நமது கண்களுக்குப் புலப்படும் காட்சியாக மிளிர்வதை கண்வழி பார்த்து தெரிந்து கொள்கிறோம். காது வழி - வந்தடைந்த - அகத்தே பார்த்திடும் காட்சியை நம்மால் உணரமுடிகிறதே தவிர அதனை தொடமுடியாது. காரணம் யாதெனில், ஒலிவழி வந்திட்ட அக்காட்சி நொடிக்கு நொடி மாறிடும் அல்லது மறைந்திடும் இயல்புடையது. ஆனால் புறத்தே காணும் காட்சிகளை கண்களால் பார்த்து, கையால் தொட்டுணர்ந்து, மகிழ்ச்சியுற முடிகிறது. அதுமட்டுமல்ல, அப்பொருள் நம்கண் முன்னால் நீடு நிலைத்தும் இருந்துவிடுகிறது. இஃதே சிற்பக் கலையின் தனிச் சிறப்பு [விஞ்ஞானம் சில்பகுசலம் - கௌசல்யம்] அகத்தே காணும் காட்சியும், புறத்தே காணும் காட்சியும் ஒன்றே என்பதை இதன்மூலமும் பிறிதொரு வகையிலும் நாம் எல்லோரும் அறிதல் வேண்டும். காட்சிகள் ஒன்றாக இருந்தாலும் கேட்கப்படும் காட்சி, பார்க்கப்படும் காட்சி இரண்டும் தனித்தனியான மூலங்கலிருந்து தோன்றுவதாக எவருக்கும் இப்போது உணர்வாகிடும் அல்லது அனுமானமாகிடும் என்று சொல்ல விரும்புகிறேன். அதாவது ஒலிக்கு மூலம் ஓம் என்ற நிலையில் அதனை ஓம் ஒலி என்று ஐந்திறம் கூறுகிறது. நிலையான காட்சியை தரக்கூடிய பிரிதொரு ஓம் இருப்பதை உணர்வோமானால் - இதற்கு உண்மையில் மூலமாக இருப்பது ஒலி அல்ல மாற்றாக அதனை ஒளி என்று ஐந்திறம் பேசுகிறது. இதனால் ஓம் ஒலி, ஓம்ஒளி என்ற சொற்களை இரண்டு ஓம்-கள் ஐந்திறத்தில் குறிப்பிடப் படுவதைக் காணலாம். எனவே ஓம் என்ற ஒற்றைச் சக்திப் பொருள் (the ultimate reality) இரண்டு நிலைகளை, வெளிப்பாடுகளை (out ward expression into the world of reality) அல்லது மூலங்களைக் கொண்டது என்பது தெளிவாகிறது. அவ்விரண்டும் ஓம் ஒளி, ஓம் ஒலி என்று சொல்லப்படுகின்றன, மறந்து

விடாதீர்கள். ஆனால், இதனை ஒன்றித்த பொருளாக - அறுதிப் பொருளாகச் சொல்லுமிடத்து - ஒளியே மூலப் பொருள் என்றாகிறது. எனவே **"ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே"** என்று மயசூத்திரம் முதலில் தொடங்குவதாயிற்று. இத்தகைய தெளிவுரை எந்த நூலில் இருக்கிறது? சிந்தித்துப் பாருங்கள்.

ஐந்திற விஞ்ஞான த்தில் கண்டவாறு ஒளி துடிப்புற்று ஒலி பிறக்கிறது என்று அறுதியிட்டுக் கூறினேனல்லவா? ஒலி வழியாகக் கிடைக்கும் காட்சியை ஞானம் என்றும் ஒளி வழியாகக் கிடைக்கும் காட்சியை கண்ணால் பார்த்திடும் உருவு என்றும் பகுத்துக் கூறுகிறது. இப்படி இரண்டு ஓம்களை இதுவரை எவரும் கேட்டிருக்க முடியாது என்று சொன்னால் எவரும் மறுப்பதற்கில்லை. இதை விளக்கும் ஒரு மயத்தமிழ்ப் பாடலை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். **''ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும், ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்!''** என்று மிகச் சிறப்பாகவும், குறிப்பிட்டும் பேசுகிறது. அங்ஙனம் பேசுவதினால் இரண்டு காட்சிகள் கிடைக்கின்றன அல்லவா? ஒன்றே இரண்டாகப் பிரிவுற்று விளங்குகிறதல்லவா? இதனை two fold stream of articulation or projection என்று நான் கண்டுணர்ந்து பேசி வருகிறேன்.

ஓவியமும் ஓமியமும்:

இந்த நிலையில் ''ஓம் ஒளி'' தோற்றுவிக்கும் காட்சியை ஓவியம் என்றும் ''ஓம்ஒலி'' தோற்றுவிப்பதை ஓமியம் என்றும் மயத்தமிழ் குறிப்பிடுகிறது. இந்தச் சொற்களை இதுவரை எவரும் எந்த ஞான நூலிலும் சொன்னதாகவோ, எந்த நூலும் எடுத்துக் காட்டியதாகவோ எனக்குத் தெரிந்தவரை இல்லை என்பதை சொல்லிட விரும்புகிறேன். எனக்குத் தெரிந்த வரை, காதால் பார்த்திடும் ஒலியைத்தான் கேட்டிருக்கிறோம் பயன்படுத்தி வந்திருக்கிறோம். இந்த ஓவியம் என்ற சொல்லானது கையால் வரைந்து காட்டும் பொருள் மட்டுமல்லாது கையால் செதுக்கிடும் சிற்பத்தையும் குறிப்பிடும். கையால் வரைந்து காட்டுவது, மற்றும் கையால் செய்து காட்டுவதும் எல்லாம் ஓவியமே என்று உறுதி செய்திடும் நேரத்தில் இதற்கெல்லாம் மூலப் பொருளாக இருப்பது ஒளி ஓம் என்றும் தெளிவுபடுகிறது. இதனால் இந்த ஞாலமே அல்லது பிரபஞ்சமே ஒளிவழிப் பிறந்த அல்லது பிறழ்ந்த பெரும் பொருள் அல்லது தெரிபொருள் என்றாகிறது. இந்த ஞாலத்தின் பிறப்பியல் இப்படித்தான்

நிகழ்கிறது; இப்படித் தான் நிகழ்ந்து வந்துவிட்டது என்பதை ஐந்திற விண்ணியல் சார்புடைய அறிவியல், நுட்பமிகு விளக்கத்தைத் தருகிறது. இஃதொரு வியப்பல்லவா?*

ஒளிநடம் – ஒளி நடராசன்:

இங்ஙனம் ஒளிவழிப் பிறந்த முதல் பொருள் யாது என்று இந்த நிலையில் வினவத் தோன்றுகிறதல்லவா? இதற்கு விடையாக மயவிஞ்ஞானம் தருவதை மயன் பாடல் மூலம் கீழே சொல்லிட விரும்புகிறேன்.

"ஒளியொளிர் உருவந்தானே ஆடலன் ஆடலன்றோ" என்று மயன் ஒரு மூல வடிவத்தை – மூலப் படிமத்தின் வாயிலாக மூலப் பொருளையே காட்டி விடுகிறான். அதாவது ஒளியானது ஒளிர்ந்து [அதிர்ந்து/ துடிப்புற்று] அதனால் பெற்றிடும் ஒளிமயக் கருத்துருவாக, ஆடலாகச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது (Dance of Light) என்பது நுண்பொருள் ஆகும். இஃது ஒரு கற்பனை வடிவம் அன்று. பிரபஞ்ச விஞ்ஞான துடிப்புருவை கணக்கிட்டு தோற்றுவித்த, விந்தைமிகு – அர்த்த புஷ்டியுள்ள வடிவம் ஆகும். இதனை உருவகித்துத் தந்தவன் தான் மயன் என்ற சங்ககாலச் சிற்பச்சித்தன் ஆவன். இந்த வடிவத்தைத்தான் சிவன் என்றும் கூத்தன் என்றும் ஆடலன் என்றும் ஒளி நடராசன் என்றும் மயவிஞ்ஞானம் சொல்லுகிறது. இப்பொழுது ஒருவகைக் கலைப் படிமம் கிடைத்து விட்டதல்லவா? இதனை முழுமுதற்படிமம் என்றும் மூலப்படிமம் என்றும் சிற்பியர் மரபில் தொன்று தொட்டுச் சொல்லி வருவதை இங்கே எல்லோருக்கும் தெரியச் செய்கிறேன். இக்காரணம் பற்றியே, சிதம்பரத்தில் உள்ள திருக்கோயிலின் [பெருங்கோயில் என்பது இது தான்] ஒரு பகுதியை வெற்றிடமாகவும் அதாவது ஒளிவெளியாகவும் மற்றொரு பகுதியை நடராசன் ஆடும் பொருளாகவும் அதாவது – சிற்பமாகவும் காட்டியிருப்பதை உற்று நோக்குங்கள். அதாவது ஒளிமய வெளியே உருவம் தரித்து விடுகிறது என்பதே நுற்பம். கலைமரபில் நுற்பம் என்ற சொல்லே சிற்பமாயிற்று என்க. இதுதான் சிதம்பர ரகசியம் எனப்படுகிறது. எனவே ஒளியானது முதலில் வெளிப்படுத்திய பொருள் நடராசன்

---

* "ஓம்நிலை தமிழ்க்கலை ஒளிக்கலை தமிழியல்
ஓம் நெறி தமிழ்ஒளி தமிழ்ஒலி ஓர்த்து
ஓமியல் ஓமியம் ஒருநெறி தெளிந்தே
ஓமியல் ஒன்பான் ஒருங்கவர் ஆக்கம்"
– [ஐந்திறம் – 762]

வடிவம் ஆகும் என்றால் எல்லோரும் வியப்படைவது இயல்பே. இந்த எளிய விளக்கத்தினால் நம்மைச் சூழ்ந்து கோட்டையாக – இடுக்கிப் பிடிபோல் இருந்துவரும் மூட நம்பிக்கை சிதறிப் போகும் என்று நம்புகிறேன். இறைப் பொருளின் அருளைத் துணைக்கு அழைக்கிறேன். உங்கள் திருமுன்பு ஸ்தாபிக்கிறேன். அரங்கநாதனைப் பிறகு பார்ப்போம்.

இந்த விளக்கத்திலிருந்து மேலும் ஒரு அடிப்படைச் செய்தி நமக்கு கிடைக்கிறது. ஓவியம் என்பது அடிப்படையில் ஒரு கோட்டால் ஆன கோட்டுருவே ஆகும். இதனை ஆங்கிலத்தில் line drawing என்று சொல்லுகிறோம். இந்தச் சொல்லையே நாம் ஒரு சிறிது ஆய்வோமானால், கோட்டை இழுக்கிறோம் என்ற செயல் ஒரு விஞ்ஞான நுட்பம் கொண்ட செயலாகும் எனச் சொல்லத் தோன்றும். அந்தக் கோடானது எங்கிருந்து எப்படி இழுக்கப்படுகிறது என்று ஒரு கேள்வியை கேட்போமானால், எத்தகைய விடை நமக்கு கிடைக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இத்தகைய கோடு ஒரு புள்ளியிலிருந்து இழுத்து வரப்பட்டது என்பது நமக்குப் புலனாகும். இந்தக் கருத்தை மிக அரிய கருத்து என அழுத்தமாகச் சொல்லிட விரும்புகிறேன். இந்தப் புள்ளி இல்லையேல் கோடு இல்லை, கோட்டுருவும் இல்லை என்று சொல்லலாம். இந்தக் கோடை யார் இழுக்கிறது என்பதை உற்று நோக்கின் இயற்கையில் இப்புள்ளியானது உளது என்றும் அப்புள்விப் பொருள் தன்னைத் தானாகவே, கோடாக வளர்த்துக் கொள்கிறது, இழுத்துக் கொள்கிறது என்று சொல்லலாம்*. இக்கோட்டுரு முதலில் நமது இதயம் என்ற அந்தராகாசத்தில் [அகவிண்] நிகழ்கிறது. பிறகு, நடைமுறை வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், மூலத்திலே ஒரு புள்ளி இருப்பினும், அது போன்ற பல புள்ளிகள் [இந்த

---

* ''மூலம் நாற்புறத் தியல்நெறி கலைநிலை
மூலப்புள்ளி முன்னிலை யாக்கம்
மூலப்புள்ளி காலங் கூட்டும்
மூலப்புள்ளி விசைநிலை யாக்கம்
மூலத்தியலால் நாற்புற மோர்ந்தே
மூலத் தைந்தியல் நெறிவரும் ஆற்றல்''

– [ஐந்திரம் – 730]

'' மூலப்புள்ளி முறைமையின் ஆய்த்து
கால நுட்பங் கருத்துற் றேர்வோர்
கலைநெறி மாண்பின் நிலைபே றறிவரே''

– [ஐந்திரம் –]

ஞாலத்தில் பரவிக்கிடப்பதால்] சேர்வதினால் இந்தக் கோடு தானாக வளருகிறது என்று நாம் கூறிட முடியும். இந்தப் புள்ளிக்கு இக்காலப் பெயர் பிந்து அல்லது விந்து (foctus) என்பதாகும். இத்தகைய கருத்தை இந்த ஐந்திரமானது ஒரு படிமுறையாகக் காட்டுகிறது. புள்ளி, கோடு, வரி, வடிவு, உருவு என்பதே அப்படிமுறை. இங்கேயும் மூலத்தின் ஐந்திறம் (five fold power) வெளிப்படுவதை உற்று நோக்குக. இந்தச் செயலை நாம் கணக்கியல் என்று சொல்லலாமே என்று நினைக்கத் தோன்றும். இயற்கையில், இச்செயலை மனதில் வைத்து இப்படித் தான் புள்ளிகள் கொண்ட கோடாகி – வரைவாகி – வரை எனப்பட்டு – பல கோடுகளால் வடிவு பெற்று இறுதியில் நீள அகலம் கொண்ட கனவடிவமாகவும் வளர்ந்து, இறுதியில் ஒளிக் கோடுகள் நிறைந்த உருவமே தோன்றுகிறது என்றும், இங்ஙனம் நிகழ்ந்த அத்தனையும் ஒளிப் புள்ளிகளாலும், கோடுகளாலும் ஆகியது என்றும், அறுதியிட்டுக் கூறுவோமானால், கண்ணால் பார்த்திடும் அத்தனை உருவங்களும் அடிப்படையில் ஒளிமய வடிவங்கள் என்று சொல்லத் தோன்றும். எனவே, இந்த ஞாலத்தில் தோன்றும் அத்தனை பொருள்களும் ஒளிப் பொருள்கள் தான் என்று சொன்னால் மிகையல்ல. இத்தகைய ஒளிப் பொருள்கள் தான் மூல நிலையில் நமது அகத்திரையில் உருவமாக தெரிகிறது என்று முடிவு செய்திடலாம். இத்தகைய உள்ளொளிக் காட்சியைத்தான் வெளிப்பட்ட நிலையில், சிற்பம் என்று சொல்லுகிறோம். இந்தச் சிற்பத்தை அகத்தே கண்டுணர்ந்தவர்கள் புறத்தே கையால் உருவகித்துக் காட்டினால் அது அகக் காட்சியின் பிரதி அல்லது படிமம் எனப்படுகிறது*. சில்பத்திலிருந்து பிரதிமைகள் தோன்றுகின்றன. शिल्पात् प्रतिमा: जायन्ते என்பது சிற்பியர் தம் உபநிஷத வாக்கியமாகும். இது தெரியாதோர் கைவினைஞர்களே தவிர சிற்ப விஞ்ஞானியர் அல்ல என்க.

இத்தகைய படிமம் இயற்றப்படுவதற்கு படிமக் கலை நூலில் ஒரு கணக்கியல் உளதென்பதை இங்கே சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். இக்கணக்கியலைத்தான் எண்ணியல் என்றும் எட்டியல் என்றும் ஐந்திறம் விரித்துப் பேசுகிறது. இக்கணக்கியல் தான் மிகப் பெரிய கண்டு பிடிப்பு என்று சொல்லிப் பெருமைப்படலாம். தமிழ் மரபுக்கு இயற்கை அளித்த ஓர் உச்ச விஞ்ஞானம் எனலாம். அதன் தோற்ற

* ''அகத்துறு முணர்வே அகத்துறு மொளியாய்
புறத்துறும் உருவம் நிலைபெறக் கூட்டும்''
– [ஐந்திறம் – 306]

शिल्पात् प्रतिमा: जायन्ते

நிலையைத்தான் புள்ளி என்றும் பிந்து என்றும் அருவ நிலையிலும் உருவ நிலையிலும் இருப்பதாகிறது. இக்கணக்கை இக்காலத்திய வாஸ்து, ஆகம சாஸ்திரங்களிலும் காணலாம். இந்தக் கணக்கியலே புள்ளியாக தொடக்கத்திலிருந்த ஒன்று, பல புள்ளிகளாகச் சேர்ந்து வெவ்வேறு படிமங்களாக புறத்தே தோன்றுவதாயின என்று சொல்லுகிறது ஐந்திறம். [காலக்கூறே கணக்கியலாகி என்பான். விரிவை பிறகு பார்ப்போம்]

எனவே, சிற்பம் என்பது அகக்காட்சி என்றும் படிமம் என்பது அகக்காட்சியின் பிரதி [அ] பிரதிமா என்றும் படிமம் என்றும் சிற்பியர் சொல்லுவர். இந்த நேரத்தில் ஒலி மயக்காட்சியையும் காது வழியே சென்ற நிலையில் புரிந்து கொள்ளுகிறோம். அது சொல்லால் ஆன அல்லது ஒலியால் ஆன வடிவம் அல்லது உருவம் என்று நடைமுறையில் சொல்லுகிறோம். இதனை ஒலிப்பொருள் என்றே மயன் கூறுவான். சொல்லால் ஆன இந்த உருவத்தை தோற்று விப்பதற்கு ஒரு கணக்கியல் உளது.சொற்களை உருவகிப்பதற்குரிய கணக்கியலும் கண்ணால் பார்த்திடும் காட்சியை உருவகிப்பதற்கு நடைமுறையில் இருக்கக் கூடிய கணக்கியலும் ஒன்றே என்று ஐந்திறம் கூறுகிறது. இதனை units of the functions of the point energy [பிரம்மபிந்து] என்று சொல்லுகிறோம்.

இப்படிக் கூறும் ஐந்திறம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக இந்த இந்திய மண்ணில் குமரிக்கண்டத்தில் தோன்றியது என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? அது மட்டுமல்ல, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்திட்ட முதற் சங்ககாலத்தில் அரங்கேற்றப்பட்டு, சங்கப்புலவர்களால் அங்கீகரிக்கப்பட்டது இந்த ஐந்திறம் என்றால் நமது வியப்பு எல்லை மீறிச் சென்று விடுகிறதல்லவா? ஆம் நான் இதுவரைச் சொல்லிய அனைத்தும் விண்ணியல் மற்றும் அறிவியல் சார்ந்த ஐந்திறம் கூறும் பிரபஞ்ச சிருஷ்டி நுற்பம் என்றால் மிகையல்ல. இக்கணக்கியலை உபயோகித்துச் சிற்பிகள் படைக்கும் உருவங்களே [அ] படிமங்களே - கட்டிடங்களே இறுதியில் வணக்கத்திற்கும் வழி பாட்டிற்கும் உரிய கோயில்களாகவும், கடவுட் படிமங்களாகவும் ஆயின. ஆன்ம நலம் நல்கும் அரிய தொரு பொருளும் ஆயிற்று. இது தான் தமிழர் நாகரிகம்; இதுவே பாரதம் தழுவிய நிலையில் இன்று பாரதீய கலாச்சாரம் என்று மாயிற்று. கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி என்பான் மயன். Architecture is the zenithal achievement of mathematics என்பது நான் பேசி வரும்

ஆங்கில மொழி பெயர்பாகும். இந்தக் கணக்கில் தான் மானுட உடலும் ஒரு கட்டிடமாக (structure of the material body) உருப்பெற்று விட்டது என்பது corollary துணைத் தேற்றம் எனலாம். இதுவும் விந்தைமிகு விஞ்ஞானத் தேற்றமே. இஃது இக்காலத்தில் வாஸ்து எனப்பட்டு படாத பாடுபட்டு வருகிறது. இதை உற்றறிந்தோர் அரிதாகயைால் பெருங்குழப்பம் இத்துறையில் நிலவுகிறது. இந்தக் கணக்கியல் தெரிந்தோர், பயன்படுத்தி வீடு, மனை செய்வோர் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே. வாஸ்து விஞ்ஞானம் Commercial ஆகி விட்டது. விரைவில் இந்த அவலநிலை மாறி நல்லதே முகிழும் என்பேன். இந்தக் கணக்கியல் அற்புதக் கண்டுபிடிப்பன்றோ! இந்த நிலையிற்றான் ஆகம சமயம் (religon and rituals) ஆனவை மகத்தான இந்த விண்ஞானத் துறையை துணிச்சலுடன் ஏற்று, மக்கள் உடல் நலமும், உயர் நலமும், உயிர் சுகமும் பெற ஒரு மரபே தோன்றுவதாயிற்று. இது தான் இந்தியச் சமயம் என்க. தூய்மையான - விஞ்ஞான ரீதியான ritual தான் இப்பயன்களை நல்கிடும் என்க. மற்றெல்லாம் வெற்றுப் பூசைகளே! ஆடம்பர விளையாட்டுக்களே! முடிவென்ன? வீண்செயல், பயனற்ற பொருள் விரயம் மற்றும் வேதனை தான்.

மரபுக் கவிதைகளை இயற்றுவதற்கு சந்தம் (Speech rhythm) என்ற ஒரு கணக்கை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் இஃதொரு கணக்கியல் தான். ஒலிகளால் - ஒலி அணுக்கள் காட்டிய கணக்கு இஃது எனலாம். இதனை வைத்து சிறப்பாக "சந்தம் நிறைந்த தமிழ்" என்று சொல்லிச் சொல்லி பெருமை அடைகிறோம். இந்தப் பெருமை தமிழுழுக்கு மட்டுமல்ல சம்ஸ்கிருதத்திற்கும் உண்டென்பதை இங்கு சொல்ல வேண்டும். தமிழும், சம்ஸ்கிருதமும் ஒரு மூலத்தில் ஒரே மண்ணில் [குமரிக் கண்டம்] தோன்றிய இருமொழிகள் என்று சொன்னால் மறுத்துப் பேசுவோர் எவரேனும் உண்டோ? முடியுமா? இல்லை என்று துணிந்துக் கூறலாம்; இது தான் உண்மையிலும் உண்மை என்று இங்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைக்கிறேன். ஒளி, ஒலி பற்றி ஆய்ந்திடும் விஞ்ஞானிகள் தாம் இந்த ஒருமைப்பாட்டை நன்கு உணர்வோர் ஆவர் என்று இங்கு குறிப்பிடலாம். மேல் ஆய்வு செய்திடுவீர் எனவும் வேண்டுகிறேன்.

மேற்கருத்தை உறுதிப்படுத்தும் தமிழ்த் தேற்றத்தையும், சம்ஸ்கிருதப் பாடலையும் இங்கே குறிப்பிடுவேனானால் நம்மிடம் இருக்கும் ஐயங்கள் மற்றும்

வேற்றுமைகள் பறந்தோடி விடும். எழுத்தைப் பற்றிப் பேசும் ஐந்திறம் ஒளியும், ஒலியும் சேர்ந்த பொருள்தான் எழுத்து என்று சொல்லுகிறது. **"ஒளியொலிப் பொருளாய் ஓங்கும் எழுத்தே"** என்று ஐந்திறம் விண்ஞானம் மற்றும் மண் ஞானம் பேசுகிறது. அதுமட்டுமல்ல, எழுத்தெல்லாம் ஓவியமே என்றும் பேசுகிறது. இது கலையின் பிறப்பியல் அல்லவா? எத்தகைய பேருண்மை!


வாஸ்து சாஸ்திரப் பிரமாணங்களைக் கொண்டு உருவகித்திடும் இடமானாலும் சரி, உருவமானாலும் சரி அது சாந்நித்யம் என்ற உயிர்ப்பைப் பெறுகிறது என்பதை உறுதிப்படுத்தும் மகுடோத்தராகமப் பாடலைக் கீழே காண்க.

"मानेननिर्मिते बिम्बे स्वयं आभाति दैवतम् ।।"

"மானேன நிர்மிதே பிம்பே ஸ்வயம் ஆபாதி தைவதம்।।"



விநாயகர் (ஐங்கரத்தன்)



நடராஜர் (விண்மேனியன்)



ரங்கநாதன் (மண் மேனியன்)

ஐந்திறம் நிறைந்த அணிந்துரை

பொறியாளர்.வெ.இராமமூர்த்தி,B.sc., B.E.,

நான் ஒரு B.Sc., பட்டதாரி. B.E., பட்டம் பெற்ற பொறியாளனும் கூட. எனவே, அணைகள், சிறுபாலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை வடிவமைத்துக் கட்டியிருக்கிறேன். அதன் பின், தமிழக அரசின் தொழில் நுட்ப இயக்ககத்தின் planning and development துறையில் 20 ஆண்டுகள் உதவி இயக்குனராகவும் இணை இயக்குனராகவும் Joint Director பணி புரிந்துள்ளேன். 150 பாலிடெக்னிக், 10 பொறியியல் கல்லூரி ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அடிப்படை ஆலோசகனாகவும், பொறுப்பாளனாகவும், பொறியாளனாகவும், கல்வியாளனாகவும் பணியாற்றியிருக்கிறேன்.

எனது தாய் மொழி தெலுங்காக இருந்த போதிலும், தமிழ் நாட்டில் பிறந்து [அளக்குடி தஞ்சை மாவட்டம்] தமிழைப்படித்து, தமிழ் மீது காதல் கொண்டு, பல தொல் நூல்களையும், கவிதைகளையும் படித்து ருசித்தவன். திருவள்ளுவரின் திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன்: ஓரளவு இசை இலக்கணமும் இலக்கியமும் தெரிந்தவன்.

இந்த நிலையில், தமிழ்நாட்டிலும், பரந்த அளவில் இந்தியாவின் வேறுபல மாநிலங்களிலும் தொன்றுதொட்டு நிகழ்ந்து வந்ததும், இன்றும் அங்குமிங்கும் நடைபெற்றுவரும் கட்டிடங்களையும் சிற்பங்களையும், வேறுபல அமைப்புக்களையும் நான் பார்க்கும்போது அவ்வமைப்புக்களில் ஏதோ ஒரு விசேடத்தன்மையும் தோற்றப் பொலிவும் இருப்பதைக் காண்கிறேன். கண்ணால் பார்க்கும்போது இனமறியா ஓர் இன்ப உணர்ச்சியும் வியப்புக் கலந்த மகிழ்ச்சியும் முகிழ்கிறது. இதே போல் கவிதை, இசை, நாட்டியம் ஆகியவற்றைக் படிக்கும் போதும், கேட்கும் போதும், அதே உணர்வை – அதே இன்பத்தைத் துய்க்கின்றேன். இவையெல்லாம் குறிப்பாகத் தமிழ் மரபிலும், தமிழ் தொடர்புடைய மற்ற மாநிலப் பண்பாட்டிலும் காண்கிறேன். அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரச் சிற்பங்களும், கட்டிட அமைதிகளும் என்னைக் கவர்ந்துள்ளன. ஆனால் பிறநாட்டுக்கலைகளிலும், பண்பாட்டிலும் இந்த இன்ப நுகர்ச்சி கிடைக்கவில்லையே ஏன்? இத்தகைய கேள்விகள் என் உளத்தே அடிக்கடி தோன்றுகின்றன. காரணம்

யாதெனில், அவையெல்லாம் அறிவு சார்ந்த அனுபவமாய் இருப்பதால் (brain centric) வியப்பைத் தருகிறது என்று நினைக்கிறேன். அதாவது பயனும் பயமும் கலந்த அறிவியல் அனுபவம் எனக்கு ஏற்படுகிறது. இதையே அனுபவித்துக் கொண்டிருந்து விட்டு வெளிநாடுகளிலிருந்து வருவோரும் இந்த அணுயுகத்திலும் இந்தியக் கலைகளையும் படைப்புகளையும் அவை நல்கும் இன்பத்தையும் அல்லவா கண்டும் கேட்டும் ரசித்திட வருகிறார்கள். இத்தகைய அனுபவத்திற்குப் பெயர் என்ன? என்ற வினாவுக்கு விஞ்ஞான விடை தருவதே இந்த ஐந்திற நூலாகும் என்று தெரிய வருகிறது. ஐந்திற சூத்திரங்கள் அளப்பரிய உயர்வும் ஆழமும் விரிவும் கொண்டிருப்பதே இத்தகைய காட்சிகளுக்குக் காரணம் எனத் தெரியலானேன். அக் கலைப்படைப்புகளில் உயிரோட்டங்களையும் காணலானேன்.

எனக்கு இத்துறைகளில் பல நிலைகளில் பல வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றேன். இவ்வாய்ப்புக்களில் இவற்றை நேரடி அனுபவம் பெறலானேன். உதாரணமாக, மாமல்லபுரக் கட்டிடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியை தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் சார்பில் 1973-ல் இருந்து 1990-வரை அதன் வளர்ச்சித் திட்டங்களைப் பரிசீலித்து, பட்டதாரிப் படிப்புக்குக் கொண்டுவர உதவினேன். அதன் ஏற்றத்தில் ஆர்வம் காட்டியதோடு, அதன் மேல்நிலை வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தேன். மாமல்லபுரக் கல்லூரியின் பாடத்திட்டங்களையும், பயிற்சித் திட்டங்களையும் உற்று நோக்கியும், கலைஞர் வை.கணபதி ஸ்தபதியின் போதனைகளிலும், பயிற்சிகளிலும் ஆக்கப் பணிகளிலும் அவர்தம் ஆற்றலின் வெளிப்பாட்டையும், செயல் வடிவங்களையும் கண்டு ரசித்தவன். அவரோடு பல்முனை உரையாடல் மூலம் பல இரகசியங்களைத் தெரிந்து கொண்டவன்.

கையில் ஏதுமின்றி, ஏடுமின்றி வெற்றிடமாக நம்முள்ளே இருக்கும் ஆத்ம சக்தியைச் செயல்படுத்தும் நெறிமுறைகளையும், வெளிப்பாடுகளையும் கண்டு வியந்தேன். இந்த அடிப்படையில், அந்த வெற்றிடத்தைத்தான் உணர்வு என்றும் consciousness என்றும் அதாவது 'I'ness என்றும் உணர்ந்தேன். கலைஞர் [அ] கவிஞர் ஒருவரின் உளப்பாங்கின் மூலம் கவிதையும், பாடலும், ஆடலும் வெளிப்படுத்துவதை ஒப்பிட்டு நோக்கிப் பரவசம் அடைந்திருக்கிறேன். இயல், இசை, நடம் என்ற முத்தமிழின் பிறப்பிடம் இந்த வெற்றிடமே - அகவெளியே - அதன்

துடிப்பே காரணம் என்பதையும் புரிந்துக் கொண்டேன். முத்தமிழின் இலக்கணமும் சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலை இலக்கணமும் ஒன்றே என ஒன்றித்துக் காட்டும் விந்தைக் கருத்தையும் செயல் நெறிகளையும் உற்று நோக்கினேன். முந்தைய முக்கலைகள் காலத்தின் படைப்புகள் (creative forms of Absolute Time) என்ற கருத்துக்கிணங்க சிற்பமும் கட்டிடமும் காலத்தால் விளைந்த இடத்தின் வடிவங்கள் (Time generated spatial form) என்பதை அறிந்ததோடல்லாமல் இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் எல்லாம் ஓரினப்பட்ட ஐந்தமிழ் என்றும் கண்டேன். இதன் மூலம் மிகப்பெரிய பிரபஞ்ச விஞ்ஞானநுட்பம் தெளிவுப்பட்டதெனலாம். அதாவது ''காலமும் இடமும் ஒன்றே'' என்று சுருக்கிச் சொல்லலாம். (Time and Space are equal). இவையெல்லாம் விஞ்ஞான நிகழ்வுகள் எனவும் அறியலானேன். அதனால், தலைமுறை தலைமுறையாக, தமிழகச் சிற்பியர் உருவாக்கிவரும் சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலை நெறிகளை, கவிதைப் படைப்பின் நெறிகளுக்கு ஒப்பாய் இருப்பதாக உணர்ந்திடலானேன். அதுமுதல் ஸ்தபதியார் தம் உணர்வுகளையும், பயிற்சிகளையும், அவர்தம் வரைப்படங்களையும், வரைந்தவற்றை கனபரிமான முடைய (three dimensional form) – கண்ணால் பார்த்தறியும் ஆற்றல் மிகு பொருள்களாக, அதாவது கலைப் பொருள்களாக – என்னால் பார்க்க முடிந்தது. இதற்கான அடிப்படைச் செய்திகள் ஐந்திறத்தில் சுட்டிக்காட்டியிருப்பதை ஸ்தபதிகள் சொல்ல, ஐந்திறத்தை சிற்பிகள் தம் வேத நூலாகவே உள்ளூரக் காணலானேன். மேலும், இதில் அடங்கிய கணக்கியலையும் ஸ்தபதி சொல்ல, அதனையும் உற்று நோக்கினேன். இக்கணக்கியல், மூலத்தில் (primal source) ஒன்றாய் இருந்து, வெளிப்பட்ட நிலையில் ஐந்து மூலப்பொருள்களாக (gross elements) மலர்ச்சி பெறுவதையும், அவ்வொன்றிலும் உயிர் இருப்பதையும் அப்பொருள்களின் கூட்டுப் பொருள்களே நாம் வாழும் ஞாலத்தின் உயிர்ப் பொருள்களாக வெளிப்பட்டு, வளர்ந்து, வாழ்ந்து, இறுதியில் மறையும் நிலைக்கு வருகின்றன என்பதையும் உற்றறிந்தேன். மேலும், துடிப்பால் உயிர்ப்புள்ள பொருளாய் விளங்கும் இத்தகைய மூலப் பொருளைக் கொண்டு பயன்பாட்டுப் பொருளாக – சிற்பமாக – வீடு மனையாக – கோயில் கட்டிடங்களாக – ஸ்தபதியார் ஆக்குவதையும் கண்ணால் பருகி, உளத்தே நினைந்து உருகினேன். உளமாரப் புகழ்ந்து பேசினேன். எனது உளம் இறுதியில் மகிழ்வதையும் காணலானேன். இன்பம் எனப்படும் இந்த மகிழ்ச்சியே உயிர்புள்ள ஆனந்தம்

எனப்படும் மூலப் பொருள் என்றும், மூல உணர்வு என்றும் கண்டு கொண்டேன். எனவே, 1973-ஆம் ஆண்டு மாமல்லபுரச் சிற்பக் கலைக் கல்லூரி எனது நேரடிப் பார்வையில் வந்த காலம் தொட்டு கடந்த 30 ஆண்டுகளாக ஸ்தபதியாரின் சிந்தனைகளையும், சிந்தனைக்கேற்ற படைப்புகளையும் உற்று நோக்கி இந்தக் கலையை தெய்வக் கலை (divine or spirit centric art) என்று சொல்லி வருபவன் ஆனேன். அதுமட்டுமல்ல, இந்தக் கலையை ஓர் எளிமையான கணக்கியலில் ஐந்திரம் என்ற இந்த நூல் உள்ளடக்கி, எளிய தமிழில் சொல்லுவதையும் உற்றுணர்ந்து அதிசயித்தேன். இதனை அடிக்கடி பிற ஸ்தபதியர்களிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருக்கிறேன். இதன் சுருக்கத்தை – **''கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி''** என்ற ஐந்திர சூத்திரத்தை கட்டிடக் கலைஞனாகிய நான் நன்கு புரிந்து கொண்டேன். உலகப் பொருள்கள் அனைத்தும் கட்டிடங்களே (enclosed spatial form) என்று ஸ்தபதி சொல்லியதின் உட்பொருளையும் உணர்ந்தேன். இந்தக் கட்டுண்ட பொருள் எதுவாயினும், உடலும் உயிரும் ஒன்றித்த பொருளே என்பதையும் நன்கு புரிந்து கொண்டேன். நன்மை தரும் கணக்கியலையும் புரியலானேன். அவர் கட்டும் கோயில் மற்றும் வீட்டுக் கட்டிடத்தை உயிர்ப் பொருள்களே என்பதை ஐயமறப் புரிந்து கொண்டேன்.

இந்த உலகில் இரண்டே பொருள்கள்தான் இருக்கின்றன. ஒன்று துடிப்புள்ள ஆன்மா [உயிர்] என்ற உயிர்ப்புள்ள உடல் தரித்த கனப்பொருள், மற்றொன்று துடிப்பு அடங்கி அமைதி நிலையில் இருக்கும் மூலப் பொருள் என்பதையும் அதுவே கடந்தும் உள்ளும் இருக்கும் கடவுள் தான் என்பார் ஸ்தபதி. இந்நுண்பொருள் ஒரு கணக்குக்கு கட்டுப்பட்டு இயங்கும் என்றும் சொல்லுவார். இதனைக் காலக்கணக்கு என்றும், அதன் சீலம் அழகிய பொருள்களாக திரிபுறுகின்றன என்றும் சொல்லுவார். இக்கருத்துக் கேற்ற சாஸ்திரீயக் கணக்கையும் காட்டுவார். வாஸ்து சிற்ப சாஸ்திரங்களில் இக்கணக்குகள் நிறைந்து காணப்படுவதை அறிவுறுத்துவார். இதனை உற்று நோக்கும் போது, வேத உபநிஷதக் கருத்துக்களை மீறிச் செல்வதாகவும் உணர்ந்தேன். திரு.கணபதி ஸ்தபதியின் மாணாக்கர்களின் புதியபுதிய ஆக்கப் படங்களை (creative designs), மற்றும் ஆக்கப்பணிகளைப் பார்த்து அவர்களோடு கலந்துரையாடி, அவர்தம் சிருஷ்டி நுட்பத்தையும் நன்கு புரிந்து கொண்டேன் என்றால் மிகையாகாது. ஸ்தபதியார் சொல்வது போல, **முழுமுதற் பொருளாகிய**

இறைவனே ஒரு விஞ்ஞானப் பொருள் என்பதையும், அந்த இறைவனின் படைப்பு ரகசியத்தையும், படைப்புக்கு அடிப்படையான கணக்கியலையும் தெரிந்து கொண்ட நிலையில், இந்த ஐந்திரம் என்ற நூலைப் பெரிதும் மதிக்கலானேன். இப்படிப்பட்ட விண்கலைத் தத்துவத்தை பிறகே நன்கு தெரிந்து கொண்ட போதிலும், இந்த ஐந்திர நூலை நானும் படித்து 1986–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் தொழில் நுட்ப இயக்ககத்தின் சிறந்த பதிப்பாக வெளியிடப் பேரார்வம் கொண்டேன். இந்த நிலையில் என்னைக் கவர்ந்திழுத்த மூன்று விண்ணியல் பாடல்களை இங்கே சொல்லிட விரும்புகிறேன். வாசகர்களும் எளிதில் புரிந்து மகிழலாம்.

''ஒளிமுதற்கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற்பாற்றே'' – **மயன்**

''உள்ளமே மூலமாகி உணர்வுறும் கோலமாகி
உள்ளமே ஊக்க மாகி உள்ளமே உணர்வு மாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய ளித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்'' - **மயன்**

''உள்ளுவஉள்ளி உணர்வே ஓங்கி
கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி
சொல்லும் சொல்லே சொற்பொரு ளாகி
தொல்கலை நெறியாய் ஆய்வரல் நெறியே'' - **மயன்**

இதனால் விளைவது என்ன? என்பதை ஒரே வரியில் ஐந்திர மயன் சொல்வதைக் கேளுங்கள். 'கிளவியாக்கம் மெய்ப்பொருள் குறித்தே' என்பான் மயன். இதன் பொருள் யாதெனில், உடலற்ற உயிரை உடல் தரித்த உயிர்ப் பொருளாய் ஆக்குவது தானே. 'சொல்லெல்லாம் ஓவியமே' என்பதின் உட்கருத்தும் இதுதானே? சொல்லில் பொருள் மறைந்திருப்பதால் அன்றோ 'மறை' என்ற சொல் வேதத்துக்கு நிகர்ச்சொல் ஆயிற்று என்ற கருத்து எனக்குப் பளிச்சிட்டது.

இப்போது வெளிவரும் ஐந்திர சூத்திரங்கள் நிறைந்த – கிடைத்தற்கரிய தமிழர் பொக்கிஷத்தை – தமிழர் தந்த அந்த சூத்திரங்களையே பிற்காலத்தில் பிரம்ம சூத்திரங்களாக, அறிஞர்களுக்கு ஆய்வுக்கேற்ற செய்திகளாக இருந்திருக்கு மோ என்று யூகிக்கிறேன். காரணம், இந்த சூத்திரங்களின் மறு பதிப்பாக ஒருசில உபநிடத வாக்கியங்களை, ஸ்தபதி சொல்லும் போது இங்ஙனம் உணரலானேன். தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றெனெ இவர் கூறுவதில் உண்மை உளதென்று யூகிக்கிறேன்.

எழுத்தாலும் கருத்தாலும் ஒன்றிப் போவதை இவர் விளக்குவார். வரலாற்றுச் சான்றுகளையும் காட்டுவார்.

இத்தகைய அகவின் – புறவின் பற்றிய ஒரு வேத நூலை என் வாழ் நாளில் சந்திக்கவும், படிக்கவும், கேட்கவும் இல்லையெனில் மிகையன்று. மேலும், படித்ததை ஸ்தபதியார் தம் பணிகள் மூலம் வெளிக் காட்டிய நிலையை (expression of inner feelings into reality) – எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை – ஒரு பிறவிப் பயனாகவே இன்று நான் கருதுகிறேன். முப்பது ஆண்டுக்காலமாக ஸ்தபதியார் உடனிருந்து வாழ்ந்து, அவர்தம் உணர்விலிருந்து பிறப்பதே அருவநிலை என்றும், அஃதே உருத்தரித்த நிலையை அடைகிறது என்றும் கண்டேன். இறைவனே அருவமாகவும், இறுதி நிலையில் உருவமாகவும் தன்னைத் தானே பிறப்பித்துக் கொள்கிறான் (manifestation) என்ற சிருஷ்டி நுட்பத்தை வாஸ்து சாஸ்திரம் [சகளாதிகாரம்] பேசுவதையும் உறுதிபட அறியலானேன். இதைத் தான் பிரம்ம ரகஸியம் என்று சொல்லிட விழைகிறேன். எனவே இது வரை மாந்தர் இனம் காணாத – ஸ்தபதி சொல்வது போல – ஒரு விஞ்ஞான நூலை தமிழர் வேதமென சொல்லுவதில் தவறொன்றும் இல்லை, மகிழ்ச்சியும் பெருமையும் தருகிறது! இதனால் ஐந்திறத்தை அகவின், புறவின் பற்றிய விஞ்ஞான நூல் என்றும் வாஸ்து சிற்ப நூல்களை ஐந்திறம் காட்டும் இலக்கண நூல்கள் என்றும் ஸ்தபதி சொல்வது பொறுத்தமுடைத்தே எனலாம். அருவ உணர்ச்சிகளுக்கு உருவம் கொடுத்திட உதவும் நூல்களே இலக்கண நூல்கள் என்று சொன்னால் மிகையன்று.மொழி இலக்கண நூல்களும் இவ்வகையினதே என்க. இக்கருத்தில் பிறந்ததே ஸப்தவேதமும், ஸ்தாபத்ய வேதமும் என்கிறார் ஸ்தபதி. இதனைச் சொல்லியல் என்றும் பொருளியல் என்று மேலும் சொல்கிறார் ஸ்தபதி!

இந்த நுட்பங்களை உறுதிபடச் சொல்லுவதற்கு இந்த ஐந்திற சூத்திரங்கள் ஒரு கணித அடிப்படையில் அமைந்திருப்பதே காரணம். இந்தக் கணிதவியலை கேட்டறியாத எவருக்கும் எளிதில் ஐந்திற சூத்திரத்தைப் புரிந்திடுவதற்கு இல்லை. ஐந்திறம் என்பது இலக்கண நூல் என்பதை விட விஞ்ஞான நூல் (Space-Science) என்று சொல்ல வேண்டும். அதாவது Astro physics என்று சொல்ல வேண்டும். பெரும்பாலோர்க்கு இது புரியாமல் போனதால், முற்காலத்திலேயே ஐந்திறம்

மயக்கத்தை ஏற்படுத்தி விட்டது எனக் கருத இடமிருக்கிறது. சுருங்கச் சொல்லின் ஐம்பூதங்களுக்கு (gross elements) அப்பால் உள்ள (subtle elements)ஒலி, ஒளி, காலம் பற்றி நுட்பம் அறிந்த விஞ்ஞானியர்க்கே இஃது உணர்வாகும் என்க. இதனாலன்றோ மணிமேகலைக் காப்பியம் காட்டுவது போல ஓவியச் செந்நூல் என்ற ஒரு விஞ்ஞான நூல் வழக்கொழிந்து போய் விட்டதென இப்போது சொல்லத் தோன்றுகிறதல்லவா?

இப்படிப்பட்ட அரிய ஒரு வேதமாக்கலையானது சங்ககாலத்தில் பிறந்தது என்பதை ஐந்திற நூல்வழி தெரிந்து – ஸ்தபதியார் தரும் விளக்கமும், வரலாறும் கேட்டு, இந்தத் தமிழர் வேதத்தைப் போற்றுவதும் காப்பதும் இன்றளவில் பாரதீய கலாச்சாரத்திற்கு செய்திடும் பெரும் தொண்டு – ஆக்கப்பணி என்பேன். இதனைத் தான் விவேகானந்தர் தேசத்தொண்டு என்றும் கலைத் தொண்டு என்றும் (contribution to spiritual culture) சொல்கிறார் என நினைக்கிறேன்.

விவேகானந்தருக்கும், வள்ளுவருக்கும் நினைவாலயம் கட்டிக் கொடுத்து, அவ்விருவருக்கும் சிலை அமைத்துக் கொடுத்த தொல்பழங்குடியினராகிய விஸ்வகர்மப் படைப்பாளிகளை நீடு வாழ வாழ்த்துகிறேன்.

இந்த நேரத்தில் ஐந்திற சூத்திரத்தை எதிர்வரும் குறட்பா ஒன்றில் ஐயன் திருவள்ளுவன் அடக்கிவிட்டதை நீங்களும் உற்றுணருங்கள். 'எண்' ஏன் முதலில் வந்தது? சிந்தியுங்கள். எண்ணுக்கும் எழுத்துக்கும் என்ன தொடர்பு? எண் என்பது உண்மையில் என்ன? எழுத்தென்பது என்ன? என்று தெளிவுறத் தெரிந்தாலன்றி இக்குறள் புரியாது எனச் சொல்லலாம்.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு' – குறள்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'
– ஔவைப் பிராட்டியார்

இந்த நேரத்தில் இந்த ஐந்திறத்தை உலகமக்களுக்குப் புரிய வைத்திட, திரு.கணபதி ஸ்தபதி செய்திட்ட முயற்சிகளையும், பட்டபாடுகளையும், இன்று வரை அவர் அதற்காக எழுதி அச்சிட்டு வெளிப்படுத்திய சிறு சிறு ஏடுகளையும், செய்திட்ட சொற்பொழிவுகளையும் இந்த நேரத்தில் குறிப்பிடல் தகும் என்று நான் சொல்ல

வேண்டியவனாகிறேன். அவர் இன்று வரை எழுதிய 18 ஏடுகளையும் நான் துருவித் துருவிப் படித்திருக்கிறேன். **'ஸ்தாபத்ய வேதம்'** என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் அவரது பேச்சுக்கள், கட்டுரைகள் எழுத்தோவியமாகவும், எளிய விளக்க உரையாகவும் அமைந்ததைக் குறிப்பிட்டுச் சொல்லலாம் என்க. அவர் எழுதிய ஏடுகளெல்லாம் **ஐந்திரம் நிறைந்த ஏடுகள்** என்று சொன்னால் மிகையாகாது. புரியவிரும்புவோர்க்கே - அக்கறை கொண்டோர்க்கே புத்தகங்களை விற்பார், புரியாதோர்க்கு கொடுக்கமாட்டார். இஃது இவரது விற்பனைக் கொள்கை. பொருளீட்டல் அவர்தம் நோக்கமல்ல ; பொருள் காட்டலே அவர்தம் லட்சியம் எனலாம். 'கிளவியாக்கம் மெய்ப்பொருள் குறித்தே' என்ற மயனாரின் விதிக்கு எடுத்துக் காட்டென இவரைக் குறிப்பிடலாம்.

அது;போல, கணபதி ஸ்தபதியின் நூல்களையும், வாஸ்து நூல்களையும் படித்துணர்ந்து, ஸ்தபதி திரு.சந்தான கிருஷ்ணன் (B.Sc., T.Arch மற்றும் M.A., Sanskrit) எழுதிய **ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்** என்ற கட்டுரையையும் வெகுவாகப் பாராட்டியிருக்கிறேன். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்தவர் பனம்பாரனார் என்பது யாவரும் அறிந்ததே. இதனை எவரும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளாத நிலையில் **'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்'** என்பதை ஆய்வு மூலம் - பல இலக்கண இலக்கிய நூல்களிலிருந்தும் விளக்கி - வெளிக் கொணர்ந்த ஸ்தபதி சந்தானகிருஷ்ணனை வெகுவாகப் பாராட்டுகிறேன். Dr.A.C.பர்னல் என்ற ஒரு பிரஞ்சுக்காரர் 1786ம் கால கட்டத்தில் ஐந்திர வியாகரணத்தைத் தேடி, இந்த ஐந்திரமே பிற மொழி இலக்கணங்களுக்குத் 'தாய்' என்று கண்டு பிடித்திருக்கிறார். இவர் ஆராய்ச்சி செய்த இடமே தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையம் எனத் தெரிய வருகிறது. இந்த ஆய்வு நூல் இப்போது ஸ்தபதியிடம் உளது. பர்னல் அவர்களை நவ வியாகரண பண்டிதர் என்று சொல்லத் தகுந்த நிலையில் பல மொழி இலக்கணங்களை உற்றறிந்து இவர் இப்படிச் சொல்லுகிறார் என்பது குறிப்பிடத் தகுந்தது என்க. பல ஆயிரம் ஆண்டுகளாக இன்னும் பேச்சிலேயே இருந்து வந்த இந்த நுட்பத்தைத் திருவாசகம், திருவருட்பா ஆகிய பிற்கால நூல்களில் கண்டறிந்து, முதன் முதலில் வெளிப்படுத்திய சந்தானகிருஷ்ணனைப் பெரிதும் மதிக்கின்றேன். இப்போது இவர் நான்கு வேதங்களில் இச்செய்திகள் கிடைக்கின்றனவா? என்று ஆய்ந்து வருகிறார். காரணம், ஐந்திரம் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முதல் சங்க காலத்தில்

தோன்றியதென திருமந்திரமணி, துரிசைக்கிளார் என்ற சிதம்பரனார் அவர்கள் அறிதியிட்டு தமது ''காலவரையறையுடன் தமிழ்ச்சங்கங்களின் வரலாறு என்ற நூலில்'' தெளிவுற எழுதியுள்ளார். இதனைப் பொள்ளாச்சி அருட்செல்வர் Dr.N.மகாலிங்கம் அவர்கள் இப்போது பதிப்பித்துள்ளார். வாழ்க மூதறிஞர் அருட்செல்வர். திரு.இராமதுரை என்ற காலக்கணித மேதையொருவர் மூலம் பாரதநாட்டில் நிகழ்ந்த முக்கியச் செய்திகளையும் சங்க காலச் செய்திகளையும் பெற்று கருத்தரங்கங்களின் மூலம் நூல் வெளியீடுகள் மூலமும் பெரும்பணியாற்றி வருகிறார் என்பது நினைத்து இன்புறத்தக்கதாகும். உபநிஷதங்கள் இது வரை பேசிவந்த செய்திகளை ஐந்திறத்தின் விளக்கமென ஸ்தபதி.சந்தான கிருஷ்ணன் இப்போது பேசி வருவதை உற்றுணர்ந்தும், அவர்தரும் செய்திகளை வியந்தும் பாராட்டு கிறேன்.

ஸ்தபதி கடந்த 15 ஆண்டுகளாக நடத்தி வரும் வாஸ்து வேத ஆய்வு நிறுவனதின் நிர்வாக இயக்குனர் என்ற முறையில் நான் ஒரு செய்தியை இங்கே இத்தருணத்தில் சொல்லி, இன்றைய தமிழக அரசியலில் செல்வாக்குப் பெற்று தமிழ்ப் பணியாற்றுவோர்க்கு ஒரு வேண்டுகோளை முன் வைத்திடக் கடப்பாடுடையவனாக நினைக்கிறேன். இறுதியில் சொல்லி முடிப்பேன்.

மேலை நாட்டு விஞ்ஞானியர் கடந்த 200 ஆண்டுகளாக மேலை நாட்டில் வியத்தகு விஞ்ஞான நெறிகளையும், படைப்புக்களையும், உலக மக்கள் உயர் நலம் கருதி, அளப்பரிய உழைப்பை நல்கி வருகிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல புதிய புதிய விஞ்ஞானத் தேற்றங்கள் மற்றும் செயல் முடிவுகள் மற்றும் வெற்றிகள் பெருகிக் கொண்டே போகின்றன. இந்த நிலையில், நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் ஐன்ஸ்டின் என்பவரை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவர் கண்டு சொன்ன அறிவியல் செய்தி என்னவென்று நோக்குவோமானல் Energy என்பது Matter உள்ளிட்ட விஞ்ஞானப் பொருள் (Subtle scientific substance - energy with matter) என்பதும் Matter என்பது Energy உள்ளிட்ட ஒரு விஞ்ஞானப் பொருள் (gross scientific substance - matter with energy) என்பதும் தான். இதனை சூத்திரமாகச் சொல்லுமிடத்து $E= mc^2$ என்றாகிறது. இங்ஙனம் கணித வாயிலாக, இந்தக் கொள்கையை நிரூபிப்பதற்கு அவர் எடுத்துக் கொண்ட பிரயாசைகளை அளவிட முடியாது. என்றாலும், இதனை மாபெரும் கணிப்பு என்று உலகப் பேரறிஞர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர். கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்த விந்தை விஞ்ஞானம் பிறந்தது எனலாம். இஃது இப்படி இருக்க,

இந்த நிலையில், நுட்பக் கருவிகள் யாதொன்றும் இல்லாமல் தன்னந்தனியாக ஒரு தமிழ் மகன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக முதல் சங்ககாலத்தில் விண்ணே மண்ணாகிறது என்றும் அதாவது விண்பொருளே மண்பொருளாக உருமாறுகிறது என்று கண்டு சொன்னான். அதாவது energy யே matter ஆகிறது என்று சொன்னான். இந்த நிகழ்ச்சியானது பாரத நாட்டின் தென்திசையில் நிகழ்ந்ததாய்ச் சொல்லப்படும் பிரளய காலத்திற்கு (deluge) முன்னால் நிகழ்ந்ததென தமிழ் இலக்கியங்கள் வழியாகத் தெரியவருகிறது. சைவாகம சாஸ்திரங்களும் உறுதி செய்கின்றன. இந்தக் கூற்றுக்கும் இந்த விஞ்ஞான மரபுக்கும் உரியவன் மயன் என்று அந்தக் காலத்துச் சிற்பியர் கீழ்க்கண்ட பாடலைச் சான்றாகக் காட்டுவர் .

'நுண்வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம்'

– சிலம்பில் இளங்கோ

இதனைப் பண்டைச் சிற்பியர் புரிந்து கொண்டிருந் தாலும், எப்படிப் புரிந்து கொண்டு என்ன செய்தார்கள் என்பதை மேலாய்வு செய்துதான் கண்டறிய வேண்டும்.[காண்க வைசம்பாயனம்] இருந்தாலும், பிரளயத்திற்குப் பிறகு வந்த மயமத வஸ்து சாஸ்திரம், அதைத் தொடர்ந்து வந்த மானசாரம் என்ற வாஸ்து நூலும் இந்தக் கொள்கையை இரண்டு வரிகளில் நினைப்பூட்டியதோடல்லாமல் [காண்க பக்கம்-12] அதன் விரிவு களையும் கண்டறிந்து விந்தை மிகு ஒரு கட்டிடக் கலை சார்ந்த விஞ்ஞான மரபை நமது சிற்பியர்களுக்குச் சொல்லிச் சென்ற நிலையில் நமது பண்டைய மாமன்னர்கள், குறிப்பாக இராஜ ராஜ சோழனும், அவர் மகன் இராஜேந்திர சோழனும் அந்த நுட்பத்தை அறிந்து, மக்களுக்கு ஆன்ம நலம் ஊட்டும் கோயில்கள், கட்டிடங்கள் முற்றிலும் கல்லால் செய்து வைத்து அந்தத் தத்துவத்தைக் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து நிற்கச் செய்து விட்டார்கள் என்று நமது ஸ்தபதி அடிக்கடி கூறுவதையும், படங்கள் வரைந்து காட்டுவதையும் அதனை ஒரு நூலாக எழுதியதையும் படித்திருக்கிறேன். மிக உன்னதமான இந்த விஞ்ஞானமானது மக்கள் உயர் நலனுக்குச் செயல்படுத்தப்பட்டதே ஒழிய மக்கள் நலிவுக்கும் அழிவுக்கும் பயன்படுத்தவில்லை என்று இங்கு கூறலாம். இது தான் இந்தியக் கலாச்சாரத்தின் தனிச் சிறப்பு என்க. அவையெல்லாம் நமக்கே தெரியாமல், ஆன்ம பலத்தை நல்கி, இருக்கின்றன என்பது இதில் பொதிந்து கிடக்கும் உண்மையும் பயனுமாகும். உயிர்ப் பொருள்கள் அனைத்திற்கும், எறும்பு முதல் யானை வரைக்கும், செடி, கொடி, மரம் மற்றும் மனித இனம் உள்ளிட்ட எல்லோர்க்கும் – அவர்கள் அறிந்திருந்தாலும்,

அறியாமல் இருந்தாலும், மறுத்திருந்தாலும் மறந்திருந்தாலும் எல்லோரையும் காக்கும் ஆற்றல் அந்த மூலப் பொருளுக்கு உண்டு என்பது ஓர் அதிசய விஞ்ஞான உண்மையெனத் தெரிகிறது. அதாவது எல்லோரும் ஆன்மிக வாதிகள் எனலாமோ? ஆம், இதுதான் இயற்கையின் இலக்கணமும் இலக்கியமும் என்க. இதனை இல்லையென எவரும் சொல்ல முடியாது. சிற்பம் மற்றும் கட்டிடம் போன்று இயல் , இசை, நடம் என்ற முத்தமிழும் மக்கள் ஆன்ம வளம் பெற உதவின என்று ஸ்தபதி சொல்லும் போது பெருமை கலந்த உணர்ச்சி பெற்றேன். ஆன்ம ஆரோக்கியமே உடல் ஆரோக்கியத்திற்கு அடிப்படை எனப் புரியச் செய்தவர் எனவும் கண்டேன். எனவே தான், நமது மக்கள் ஆன்மிகக் கலாச்சாரத்தை உயிர் போலக் காப்பாற்றி வருவாராயினர் என்க. இந்த spiritual culture உலகெல்லாம் பரவிடவும் புரியச் செய்திடவும் - ஸ்தபதி அயராது உழைத்து வருவதோடு, தொல்பழம் காலத்தில் இங்ஙனம் பரவியிருந்த நிலையை நமக்குக் காட்டுகிறார். தொல்பொருள் ஆய்வர்களுக்கும் anthropologist களுக்கும் இஃது புரியக்கூடும்.

E எனப்படும் விண்ணாற்றலை அணுகுண்டு என்ற பயங்கர ஆயுதமாகச் செய்து மக்களினத்தை - லட்சக்கணக்கான பேரை - ஒரே நொடியில் மாளச் செய்த துயர வரலாற்றை எல்லோரும் அறிவர். அப்படிக்கில்லாமல், மக்கள் சமுதாயத்தின் உடல் சுகத்திற்கும், ஆன்ம உயர் நலத்திற்கும் ஏற்ற பொருளாக எதையும் அமைத்தது தமிழர் தம் விண்ஞானம் எனச் சொல்லிப் பெருமையுடன் மகிழ்ந்திடலாம்.

ஆக்கப் பணிகளுக்கு விண்ணியல் ஆற்றலைப் பயன்படுத்தியதையும், இந்தத் தேற்றத்தையும் முதலில் சுருக்கிச் சொல்லி, பிறகு சூத்திரத்தை இங்கு விளக்கிடலாம் என்று நினைக்கிறேன். ஸ்தபதி சொல்லியதைத்தான் சொல்லுகிறேன்.

Energy என்பதை இக்கால வாஸ்து சாஸ்திரம் **வஸ்து** என்று சொல்லுகிறது வஸ்து என்பதற்கு நேர்பொருள் யாதெனில், **நிலைப்பொருள்** என்பதாகும். இதனை ஆங்கிலத்தில் Eternal substance or immortal substance அல்லது Existence என்று சொல்லலாம். இதுவே சரியான விளக்கம் எனலாம்.

இந்த வஸ்து என்ற நிலைத்தபொருள் உணர்ச்சியே மயமான பொருள். அந்த நுண்பொருள் தன்னைத்தானே உருமாற்றம் செய்து கொண்டு நாம் காணும் உலகியல்பொருளாக - அறிவியல் பொருளாக - மெய்ப்பொருளாக விளங்குகின்றது. இந்த அறிவியல் பொருளுக்குத் தான் **வாஸ்து** என்று பெயர். இந்த வாஸ்துவாகிய பௌதிகப் பொருளுக்குள் வஸ்து எனப்படும் உயிர்ப் பொருளாகப் பிரம்மம்

உளதென்பதை இக்கால வாஸ்து சாஸ்திரம் கொண்டுள்ளது. இஃதொரு ஆச்சரியமில்லையா?

'प्रासादादीनि वास्तूनि वस्तुत्वात् वस्तु संश्रयात् ।
तान्येव वस्तुरेवेति कथितं वै वस्तुविद्बुधैः ।।'

'ப்ராசாதாதீனி வாஸ்தூனி வஸ்துத்வாத் வஸ்து சம்ஷ்ரயாத் ।
தான்யேவ வஸ்துரேவேதி கதிதம் வை வஸ்துவித்புதை: ।।'

இந்த வஸ்து என்ற நுண் பொருள் வாஸ்துவாக பருப்பொருளாக மாறுவதினால் வஸ்துவே வாஸ்துவாகிறதென்ற சொற்றொடர் வாஸ்து சாஸ்திரங்களில் இடம் பெற்றதோடு வாஸ்து சாஸ்திரப்படிச் செய்யக் கூடிய அத்தனை பொருள்களும் வஸ்துப் பொருள் தான் என்று சொல்லும் அளவிற்கு இந்த ஞாலமெங்கும் பரவிக்கிடக்கிறது. ஜடப் பொருள் என்று ஏதுமில்லை என்கிறார் வாஸ்து விஞ்ஞானியாகிய ஸ்தபதியார். 'இத்தகைய தேற்றத்திற்கு, அதாவது, வஸ்துவே வாஸ்துவாகிறது என்ற சூத்திரத்திற்கு உறுதுணையாக இக்கருத்து இருப்பதோடு, குமரிக்கண்டத்தில் தோன்றிய இந்த உச்ச விஞ்ஞானம் உலகமாந்தர் இனத்திற்கெல்லாம் மேலான இனமாக அன்று பத்தாயிரம் ஆண்டளவில் இந்தத் தமிழினம் விளங்கிற்று என்பது மேலும் உறதிபெறுகிறது . என்றாலும், இன்னும் இக்கருத்து சிலருக்கு விளங்காமல் இருக்கிறது. சங்கத் தமிழும், சங்க இலக்கியமும் தெரிந்த எவருக்கும் சம்ஸ்கிருதம் தெரியாமல் போனதாலும், இந்த விஞ்ஞானத்தைச் சுற்றி கட்டுக் கதைகள் மிகுவதாயின. அதேபோல, சம்ஸ்கிரு மொழியாளரிடமும் நிகழ்ந்து விட்டதென ஸ்தபதி சொல்லுவதே சரியெனப்படுகிறது. இலக்கியத் தமிழிலிருந்தும், இலக்கிய சம்ஸ்கிருதத்திலிருந்தும், கலைத்தமிழும், (technical Tamil) கலைச்சம்ஸ்கிருதமும் (technical Sanskrit) தூர விலகிவிட்டதெனலாம். இதனைத் திராவிட மொழிகள் எனச் சொல்லுதலே பொருந்துமென்று ஸ்தபதி சொல்கிறார். இன்றளவும் இந்நிலைதான் என்க. இதற்கு எழுத்தியலே ஒரு குறிப்பிடத்தகுந்த சான்று எனச் சொல்கிறார் ஸ்தபதி. எப்பொழுது இந்த விஞ்ஞானம் எல்லோர்க்கும் தெரிந்து தமிழ்க் கலாச்சரமும், பாரதீய கலாச்சாரமும் மனசார ஒன்றுகிறதோ (emotionally integrated one) அப்பொழுதுதான் பாரதீய கலாச்சாரம் நிலைத்த கலாச்சாரமாகும் என சொல்லத் தோன்றுகிறது. மாந்தர் இனங்களை ஒன்றாக நினைத்தும், இணைத்தும் பார்ப்பதற்கு ஒரு பாலமாக சங்ககாலத் தமிழன் இருந்தான், இருக்கிறான் என்ற செய்தி எப்படித் தெரியப் போகிறதோ தெரியவில்லை. கடல் கொண்ட குமரிக்கண்டத்தின் அடிவாரத்தில் அனுமன் கட்டிய பாலம் இருப்பதை சேட்டலைட் (Satellite) படம் பிடித்து காட்டியது போல, நம் ஸ்தபதி கடுமையாக முயன்று உணர்வால் - எழுத்தால் - படங்கள் வழிக் காட்டி வருவதை

நாம் பாராட்டுவோமாக! அவர்தம் விடாமுயற்சி வெல்லட்டும், செயல்படட்டும் உலகெங்கும் பரவட்டும் என்று வாழ்த்துவோமாக!

இதில் பிறிதொரு அருமையான செய்தி உளதென்பதைப் பேராசிரியர் ஐன்ஸ்டின் சூத்திரம் காட்டுவதை வாஸ்து சாஸ்திரத்தின் கண்ணோட்டத்தில் ஸ்தபதி விளக்கி வருவதையும் இங்கே குறிப்பிடல் தகும் என்று நினைக்கிறேன். இச்செய்தியை வாஸ்து விஞ்ஞானம் கற்றறிந்த அமெரிக்கர்கள் வெகுவாகப் பாராட்டியதோடு, அந்த நுட்பத்தை அமெரிக்கர்களும் கையாண்டு பெரும் பயன் எய்தி வருவதாக அந்த அறிஞர்கள் Email வழியாக அன்றாடம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இஃது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது; பெருமையளிக்கிறது என்று இங்கே பதிவு செய்ய விழைகிறேன்.

விண்னே மண்ணாகிறது என்று சொல்லும் பொழுது விண்வெளியின் குணங்கள் மண்வெளியின் குணங்களுக்கு ஒத்துப்போக வேண்டும் என்ற கருத்து நமது சிந்தனையில் தோன்றுகிறதல்லவா? ஆம் இஃதே உண்மை. இஃது ஓர் அறிவியல் நிகழ்ச்சி என்று சொல்லலாம். ஒரு பிடி மண்ணை உண்டாக்குவதற்கு நமக்கு அருகதை உண்டா என்று கேட்கிறார் ஸ்தபதி. எல்லாம் இயற்கையின் மாறுபட்ட நிலையே என்கிறார் ஸ்தபதி. இந்த நிலையில் ஒரு physical Phenomena வையும் Spiritual Phenomena வையும் உற்று நோக்குவோம். மனித இனத்தின் பலஹீனமும் அறியாமையும் தெரியவரும். உதாரணமாக, யாதொரு அலைகளும் இல்லாத ஒரு குளத்திலோ அல்லது குட்டையிலோ ஒரு சிறிய கற்துண்டை வீசி எறிந்தால் கற்துண்டு விழுந்த இடத்தில், அதைச்சூழ்ந்து, நீர் அலைகள் வட்டம் வட்டமாகச் செல்வதைக் காணலாம். இந்த அலைகள் அந்தத் தடாகம் முழுவதும் அகன்றகன்று வளையம் வளையமாகச் செல்வதைக் காணலாம். இந்த அலைகள் கல் விழுந்த இடத்தைச் சுற்றி சிறிய வளையமாய் முதலில் தோன்றி, அடுத்தடுத்து வரும் அலை வளையங்கள் ஒரு கணக்கியலில் விரிந்து செல்வதை ஒரு சிறிது உற்றுப்பார்த்தால் தெரியவரும். இதனை ஓர் விந்தையென நாம் சொல்வதில்லை. அந்த அலைகளின் இயல்பு என்று சொல்லி அங்ஙனம் விரிந்து செல்லும் அலைகளை நாம் கணக்கிட்டு அறிந்தோமில்லை தான். இதே மாதிரி, நாம் வசிக்கும் பூமியிலும், பூமியில் உள்ள அல்லது பூமியில் வாழும் உயிரினங்களைச் சுற்றிலும் கண்களுக்குப் புலப்படாத வட்டம்வட்டமாக சக்தி [ஒளி] அலைகள் வெளிப்படுகின்றன என்று வாஸ்து சாஸ்திரம் ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில், மண்வெளிபோல் விண்வெளியிலும் விண்காந்த அலைகள் விரிந்து செல்வதை வாஸ்து சாஸ்திரம் கண்டறிந்து அந்த அலைகள் எவ்வண்ணம், எக்கணக்கில், எவ்வடிவத்தில் விரிகின்றன என்பதை கணக்கிட்டு சொல்லி யிருக்கின்றது. ஆகாயத்தில் ஒரு புள்ளியில் இந்த அலைகள் வெளியாகின்றன என்று அது சொல்லுகிறது. இந்தப் புள்ளிக்குத் தான் கரு என்றும் விண்கரு என்றும் தமிழ் மரபு சொல்லுகிறது. இதையே பிந்து அல்லது விந்து என்று சம்ஸ்கிருத மரபு சொல்லுகிறது. மேலும் இந்த பிந்துவை பிரம்ம பிந்து என்றும் அது சொல்லும். இந்த பிரம்ம பிந்துவை சுற்றிலும் சக்தி அலைகள் ஒரு கணக்கில் செல்லுகின்றன என்று வாஸ்து சாஸ்திரம், வாஸ்து விற்கே உரிய சம்ஸ்கிருதக் கலைச் சொல்லாகச் சொல்லி உள்ளது. இதில் ஒரு விந்தை யாதெனில், பிரம்ம பிந்து எனச் சொல்லப்படும் அந்த புள்ளி சதுர வடிவமாக உளதென்று சொல்லுகிறது. இந்தச் சதுரத்தை தரைப்படமாகக் கொண்ட (Layout) அந்தப் பொருள் கனசதுர வடிவமாக – ஒருகனப்பொருளாக – கனசதுரக் கருவாக உளதென்று சொல்லுகிறது. இந்தக் கரு என்ற நுண்பொருள் சதுரமாக இருப்பதால் அதனைச் சுற்றி விரிந்து செல்லும் அலைகள் அந்த நிலையில் சதுரம் சதுரமாக ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் விரிந்தும் செல்கின்றன என்று வாஸ்து சாஸ்திரம் கண்டறிந்து உளது. உச்சக்கட்டத்தை அடைந்த மேலைநாட்டு விஞ்ஞானமும் இப்படித்தான் சொல்ல வேண்டும் என்று நினைத்தால் அது சரியே என சொல்லத் தோன்றுகிறது. ஒரு சதுர அலைக்கும் அடுத்தடுத்து வரும் சதுர அலைக்கும் (concentric square waves) இடையே வரும் இடைவெளிகளையும் அறுதியிட்டும் அளவிட்டும் கூறுகிறது. அந்த இடைவெளிகள் a, 2a, 3a, 4a, 5a என்று ஒரு சீலத்தில் [ரிதம்] செல்வதாகத் தேற்றம் ஒன்று வாஸ்து நூல் கொண்டுளது. ஆச்சரியமாகத் தெரிகிறதோ? நிற்க.

இத்தகைய சதுர அலைகள் இறுதியில் வட்டமாகச் சுழன்று விரிகிறது என்ற ஒரு கொள்கையை வாஸ்து சாஸ்திரம் மேலும் கொண்டுள்ளது. இந்த அலைகளின் இயல்பான அமைப்பை மண்டலம் என்ற சொல்லால் குறிப்பிட்டு, அது சக்தி நிறைந்த இடமாக இருக்கிறது என்றும் சொல்லி, அதனை வாஸ்து புருஷ மண்டலம் என்று பெயரிட்டுள்ளது. தொடக்கத்தில் வெளிப்பட்ட சதுர அலைகளுக்கும் இறுதியில் வட்டமாக உருமாறிய அலைகளுக்கும் இடையேயும் பல வடிவ அமைதிகள் தோன்றுமெனினும் ஒரு குறிப்பிட்ட நிலையில் அது எட்டுப்பட்ட வடிவமாகவும் ஆகிறது என்று வாஸ்து சாஸ்திரம் கண்டு தேர்ந்துளது.

இஃது இப்படி இருக்க, இந்த நிகழ்ச்சியை மூன்று முக்கியமான நிகழ்ச்சிகளாகக் கண்டு தேர்ந்த அடிப்படையில், சக்தி அலைகள் சதுரமாகவும், எட்டுப் பட்டமாகவும், இறுதியில் வட்ட வடிவமாகவும் ஆகிறது என்ற ஓர் உன்னதத் தேற்றத்தைக் கொண்டுள்ளது. இதனால் விண்கரு கனசதுரமாகவும், மண்கரு கோளவடிவமாகவும் ஆயின எனத் தெரிகிறது. இந்த மூன்று அடிப்படை வடிவங்களைத்தான் archetypal form என்று இன்று ஆங்கிலத்தில் சொல்லி வருகிறோம். நாம் இந்த உலகில் காணும் அனைத்தும், இந்த மூன்று அடிப்படை வடிவங்களுக்குள் அடங்கும் என்பது இதன் உட்கருத்து என்க. இதனை வாஸ்து சாஸ்திரம் **நாகர, திராவிட, வேசர,** வடிவங்கள் என்று சொல்லு கின்றது. இந்த வடிவங்கள் மூலப் பொருளின் குணவடிவங்கள் என்றும் வாஸ்து சாஸ்திரம் சொல்லுகிறது. இந்தக் குணங்களே சாத்விக குணம் [உயிர்ப்புள்ள அமைதி நிலை] (vibrant stillness) என்றும், அதற்கு அடுத்த சுழர்ச்சி நிலையை ராஜச குணம் [வேக குணம்] (vibrant dynamic state) என்றும், இறுதி நிலையை தாமஸ நிலை [அதிவேக நிலை] (aggressively dynamic state) என்றும் அது விளக்கிச் சொல்லுகிறது. இக்கருத்தை உற்றுப்பார்த்தால் அனைத்து உயிரினங்களும் இந்த மூன்று குணங்களைக் கொண்டதாகவே விளங்குவதைக் காணலாம். இந்தக் குணங்களின் விகிதாச்சாரச் சேர்க்கையினால் பல்வேறு குணங்கள் அல்லது குணவடிவங்கள் உண்டாகின்றன என்பது ஒரு விஞ்ஞானத் தேற்றமே. இந்தக் கணக்கியல் விகிதாச்சாரங்களை இக்கால ரசாயன சாஸ்திரத்தில் காணலாம் (உதாரணம்: $H_2 0$, Nacl, $NaSo_4$ etc.). இஃது ஓர் அணுவியல் அல்லவா?

இக்கருத்துக்கள் ஒருபுறம் இருக்க இதையெல்லாம் சொல்லுவதற்கு முக்கிய காரணம் இங்கே உளதென்பதை சுட்டிக் காட்டுகிறார் அன்பர் திரு. கணபதி ஸ்தபதி.

எனவே, மூலப் பொருளாகிய நுண்பொருள் கரு நிலையில் ஓர் உருவம் கொண்டிருக்கிறது என்றும் ஒளி மயமாக இருக்கிறது என்றும் இதனால் நம் கண்களுக்கு அது புலப்படாத நிலையில் இருப்பதாகவும், அதனைக் கண்டறிந்து அதையே நடைமுறை உலகத்தில் அருவம் என்ற சொல்லால் நமது ஞான நூல்கள் சொல்லுவதாக ஸ்தபதி கூறுகிறார். கண்களுக்குப் புலப்படாத அந்த மூலப்பொருள் தன்னிலிருந்து **தானியல் வடிவம்** எனப்பட்டு அதாவது ஒரு சதுர வடிவத்தை – ஒளிமய வடிவத்தை அதாவது ஒளிமய சதுரத்தை – ஒளிமய சதுர அலை வடிவத்தைத் தோற்றிக் கொள்கிறது என்பது வாஸ்து விண்ஞானத்தின் முதல் அறிவியல் தோற்றம் இஃதே என்று வாஸ்து சாஸ்திரம் கொண்டிருப்பதை ஸ்தபதி சொல்லும்போது

ஆச்சரியமே மேலிடுகிறது. இதனை Primal manifest form of the unmanifest என்று ஆங்கிலத்தில் சொல்லிப் புரிய வைப்பார். இக்கருத்தை $E=mc^2$ என்ற பேராசிரியர் ஐன்ஸ்டின் சமன்பாட்டில் காணலாம் என்று ஸ்தபதி சொல்லுவது மிகப் பொருத்தமுடையதாகவும் இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். நிற்க.

mc^2 என்பது material square என்று விளக்கம் சொல்லுகிறார் ஸ்தபதி. அதாவது matter-ஆல் ஆன சதுர வடிவம் என்பது பொருள். இதைத்தான் mc^2 நமக்கு காட்டுகிறது என்று நமக்கு விளக்கம் சொல்லுகிறார். Matter-ம் ஒரு வகையில் Energy தானே? நமக்குத் தெரிந்த அறிவியல் ஞானத்தை வைத்து இதனை ஏற்கலாம் என்று சொல்லுகிறேன். இந்த மூலப் பொருளை மூலத்தில் ஒரு சதுர வடிவமாக உளதென்பதற்கு வாஸ்து சாஸ்திர மேற்கோளையும் காட்டுகிறார். இந்த சதுரத்திற்குள் அடங்கி இருக்கும் மாசக்தியை பிரம்ம சக்தி என்றும் பிரம்மாண்ட சக்தி என்றும் ஒளிரும் சக்தி என்றும் சொல்லுவதற்குத்தான் வாஸ்து புருஷ மண்டலத்தில் ஒரு புருஷ வடிவத்தை – அசுர வடிவத்தை – அடக்கி ஒடுக்கி வைத்து அந்த ஒடுங்கி, அடங்கி கிடக்கும் சக்தியை **புருஷன்** என்ற சொல்லாலும் **நாதன்** என்ற சொல்லாலும் **பூதம்** என்ற சொல்லாலும் வாஸ்து சாஸ்திரம் சொல்லுவதாக கூறுகிறார் ஸ்தபதி. இந்த மாசக்தியை அந்தக் காலத்திலும் சரி இக்காலத்திலும் சரி எப்படித்தான் உணர்த்த முடியும்? இவையெல்லாம் அறிவியல் சொற்கள் என்று கொள்க. இந்த அளப்பரிய சொல்லின் ஆற்றலை பேராசிரியர் ஐன்ஸ்டின் $E=mc^2$ என்ற சமன்பாட்டைக் கொடுத்திருக்கிறார் என்ற ஓர் அரிய விளக்கத்தை ஸ்தபதி சொல்லும் பொழுது அவரது விஞ்ஞான அறிவு மிகப் பெரிதாக உளதென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இத்தகைய பேராசிரியர் ஐன்ஸ்டின் வேறு விதமாகச் சொல்ல முடியவில்லையே! எவரும் அறியார்! இதனை உணர்த்திட நடைமுறையில் இருக்கும் Big Bang என்ற சொல் பொருந்துமோ? இது புரியுமானால் அசுர வடிவமும் பொருந்தும்தானே. ஆனால் மயன் என்ற அந்த மரத்தச்சன் மயாசுரன் என்ற பெயரில் இருந்தவன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்படிச் சொல்லியிருக்கிறான் என்பதைக் கேட்கும் பொழுது அதனைச் சொல்லிப் பெறுமைப்படுவோமாக. Big Bang க்குப் பதிலாக ''தெரித்தல்'' என்ற சொல்லை அவன் சொல்லுவதையும் உற்றறிக. explosion என்பது நேரடி ஆங்கில ஆக்கம் என்றறிக.

அடுத்து c^2 என்பதை c-ஆல் ஆன சதுரம் என்பது ஒரு விளக்கமாகும். இந்த c-யை velocity of light என்று பேராசிரியர் கொண்டிருக்கிறார். மயன் பேசும் light-ம்

Einstein பேசும் light-ம் ஒன்றே என்பதை இதன் மூலம் அறியலாம். c^2 என்பதை ஜியோமிதி வடிவமாகச் சொல்ல முடியுமானால் சதுர வடிவம் □ ஆகுமல்லவா? அதைத் தான் மயன் வாஸ்து புருஷ மண்டலம் என்று சொல்லுகிறான். இந்த சதுர வடிவமானது அணுவுக்கும் அண்டத்திற்கும் ஒன்றே என்பது ஓர் உபரித் தேற்றம் என்று கொண்டால் தொடக்கத்தில் பிண்டங்கள் என்று சொல்லும் அத்தனை உயிர் அணுக்களும் இத்தகைய வடிவத்தைதான் கொண்டுள்ளது என்று சொல்வது விஞ்ஞானவியலைச் சேர்ந்த தேற்றம் எனலாம். இப்போதுள்ள வேத உபநிஷதங்களும் இப்படித்தானே கருத்துத் தெரிவிக்கின்றன.

கடவுள் என்ற ஒளிமயப் பொருள் [உணர்வு மயமான பொருள்] மூல நிலையில் சதுரம் சதுரமாக வெளிப்படுகிறது என்று சொல்லும் பொழுது, இறைவன் எல்லாப் பொருள்களையும் இத்தகைய ஜியோமிதி வடிவத்தில்தான் படைக்கிறான் அல்லது தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறான் என்ற ஒரு தேற்றம் நமக்குக் கிடைக்கிறதல்லவா? இதனால், எல்லையற்று விளங்கும் இந்தப் பிரபஞ்சமே மாபெரும் கனசதுரத்திற்குள் கட்டுண்டு கிடக்கிறது என்று ஸ்தபதியார் கூறுகிறார். எப்படியெனில், இந்தப் பிரபஞ்ச நிகழ்ச்சிகளில் ஒரு வித லயம் (rhythm) இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இதனை discipline [அ] order என்று சொல்ல வேண்டும். இந்தக் கட்டுபாடு தான் குணங்களை விளைக்கின்றன். எனவே,கட்டுண்ட நிலையில் குணமய வடிவமாகத் திகழ்ந்து அந்தக் குணங்களைத்தான் விண், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய பஞ்ச பூதங்களாகவும், பஞ்சபூதக் குணங்களாகிற சப்த, ஸ்பர்ஸ, ரூப, ரஸ, கெந்தம் என்று சொல்லி வருகிறோம். இக்குணங்கள் நிலத்திற்கும் – மண்வெளிக்கும் – உண்டு என்பதை வாஸ்து சாஸ்திரங்கள் கூறுவதை ஸ்தபதி பல இடங்களில் விளக்கிப் பேசி இருக்கிறார். இதன் அடிப்படையில் இந்தக் கனசதுர வடிவம் அமைகிறது, சரிதானே? பரம்பொருளின் இந்தப் பணியை – ஸ்ருஷ்டி நுட்பத்தை God geometrises என்று விஞ்ஞானிகள் இன்று கூறுகிறார்கள். இஃது ஓர் சிருஷ்டி நுட்பம் அல்லவா? இங்ஙனம் ஐந்திறம் கூறும் சிருஷ்டி நுட்ப இலக்கண மாகப் பேசும் விஞ்ஞானத்தின் பாதையிலே சென்று பார்த்தால் யாதொரு ஐயப்பாடும் ஏற்படுவதற்கில்லை என்க. இந்தக் கூற்றை ஆகமம் மற்றும் வேறு பல வாஸ்து நூல்கள் உபநிஷதம் ஆகியவை ‘वास्तु पुरुष: चतुरश्र संस्थ:’ *‘வாஸ்து புருஷ: சதுரஸ்ர சம்ஸ்த:’* [ஸ்தபதியரின் வாஸ்து வித்யா என்ற நூலிலிருந்து] என்றும் இதே கருத்தைக் கூறுவதோடு ஓர் ஆகமம் –

‘प्राणायामेन विकशित हृद् कमलान्तराकाशे ।
वैश्वानरशिखामध्ये चतुरश्रं हेमाभं बिन्दुनासह ॥’

'ப்ராணாயாமேன விகசித ஹ்ருத் கமலான்தராகாஷே ।

வைஸ்வானர சிகாமத்யே சதுரஸ்ரம் ஹேமாபம் பிந்துனாசஹ ॥'

என்றும் நமக்கு அறிவுறுத்துகிறதை உற்றுணர்க. இதன் கருத்து யாதெனில், பிராணாயாமம் செய்யும் போது இதயகமலம் விரிகிறது.அந்த நேரத்தில் அக்கமலத்தின் நடுவில் அக்னி தோன்றி சுடர் விடுகிறது. அச்சுடரின் நுனியில் பொன்னிறமானதும் சதுரவடிவினதுமான பிந்து தோன்றுகிறது. பிந்து என்பது சதுரம் மட்டுமல்ல பொன்னிறமானதென்பதையும் உற்று நோக்குக. இஃது Philosophy அல்ல. இதனை Super Science என்று சொல்ல வேண்டும் என்க. இதுதான் வேதியல் என்ற சொல் உணர்த்துகிறதோ?

Angula Samkhya Table
அங்குல வாய்பாடு

THE UNITS OF TIME AND SPACE
காலம் - இடம் பற்றிய பட்டியல்

Table of Time units
காலக் கூறுகள்

8 Ganam கணம்	1 Lavam லவம்
8 Lavam லவம்	1 Kaashtam காஷ்டம்
8 Kaashtam காஷ்டம்	1 Nimisham நிமிஷம்
8 Nimisham நிமிஷம்	1 Tudi துடி
8 Tudi துடி	1 Kuru கரு
2 Tudi துடி	1 Drutam துருதம்
2 Drutam துருதம்	1 Laghu லகு
2 Laghu லகு	1 Kuru குரு
3 Laghu லகு	1 Puvadam பூவடம்
4 Laghu லகு	1 Kaaka padam காக பாதம்
From :	Taala Deepikai Vol.II of Prof.K.Ramachandran, Sundaram publication, Chennai.

Table of Space units
இடக் கணக்குகள்

8 Anus அணு	1 Car dust தேர்த்துகள்
8 Car dusts தேர்த்துகள்	1 Immi இம்மி
8 Immis இம்மி	1 Ellu (Sesame seed) எள்ளு
8 Ellu எள்ளு	1 Nel (Unhusked paddy grain) நெல்
8 Nel நெல்	1 Viral (Finger measure) விரல்
6 Viral	1 Taalam தாளம்
12 Viral	1 Vitasti விதஸ்தி
24 Viral	1 Thatchu Muzham (Kishku) தச்சு முழம் (கிஷ்கு)
8 Hastam ஹஸ்தம்	1 Dandam தண்டம்
8 Dandam தண்டம்	1 Rajju ரஜ்ஜு
From :	Sthapati's Sirpachennool. Published by the Directorate of Technical Education, Chennai.

Hence Time and Space are equal. காலமும், இடமும் ஒன்றே எனத் தெரிகிறதல்லவா?

''ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே''

ஒலி அணு

காலவாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	– 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	– 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	– 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	– 1 விரல் காலம்

காலவாய்பாடு

[பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி மற்றும்
பேராசிரியர் கே.ராமச்சந்திரன் தாளதீபிகை – 2 (1980)]

8 கணம்	– 1 லவம்
8 லவம்	– 1 காஷ்டம்
8 காஷ்டம்	– 1 நிமேஷம்
8 நிமேஷம்	– 1 துடி
8 துடி	– 1 குரு

[2 துடி – 1 துருதம்; 2 துருதம் – 1 லகு; 2 லகு – 1 குரு]

''எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி''
எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டுத் தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'' – மயன் ஐந்திரம்

ஓர் ஒளி அணு = ஒரு □ சதுரம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	– 1 இம்மி
8 இம்மி	– 1 எள்ளு
8 எள்ளு	– 1 நெல்லு
8 நெல்லு	– 1 விரல்

இப்படிப்பட்ட ஒரு கணித அடிப்படையைக் கால கணிதம் என்றும், காலக் கணக்கு என்றும் ஐந்திறமும், இக்காலத்து வாஸ்து சாஸ்திரமும் கூறுவதை மேலே காண்க [பக்கம் 19].

இந்த வாய்பாடின் மூலம் அணுக்களின் இயல்பான தன் பெருக்க வளர்ச்சி தெரிகிறதல்லவா? ஒலி அணுக்களின் தன் பெருக்கச் சேர்க்கையில் ஒலி இடமும் (Sound Space)ம், ஒளி அணுக்களின் தன் பெருக்கச் சேர்க்கையின் ஒளி இடமும் (Luminous Space)ம் ஏற்படுகிறதல்லவா? இப்படித்தான் சொல்லும் பொருளும் ஒலி, ஒளி அணுக்களால் ஆன இட வடிவங்கள் ஆயின என்கிறான் மயன். **''ஒலியொளிப் பொருளாய் ஓங்கும் எழுத்தே'' ''எழுத்தெல்லாம் ஓவியமே''** என்பது மய விஞ்ஞானம் என்க.

இந்த வாய்ப்பாடு இத்தகைய ஒரு முக்கியமான விண்கணித நுட்பம் கொண்டது என்பதை இதுவரை எவரும் உற்று நோக்கவில்லை என்பது தெரிய வருகிறது. இந்த நுட்பம் தொழில் நுட்பம் என்று சொல்லப்பட்டு காலம் என்றும் தாளம் என்றும் வழிவழியாக வந்துவிட்டது எனலாம்.

இந்தப் பட்டியலைப் பார்க்கும் பொழுது அருவமாய் இருக்கும் பரமாணு [ஒளி மயமான அணு] கண்களுக்குப் புலப்படும் அணுவாக (material atom) சொல்லப் படுவதை உற்றுணர்க. இத்தகைய அணுவே, ஏற்கனவே சொல்லியபடி, பல மூல வடிவங்களைத் தோற்றுவித்துக் கொண்டு இறைப்பொருளின் படைப்புத் தொழில் நடைபெறுகிறது என்று அறிதல் வேண்டும். இத்தகைய அளவுகளைக் கொண்டு இயற்றப்படும் கட்டிடமானாலும் சரி, கோயில்கள் ஆனாலும் சரி, வேறு எந்தப் பொருளாயினும் சரி, மூலப் பொருளின் படிமமானத்தை வாஸ்து சாஸ்திரம் உயிர்த் தேற்றமாகக் கொண்டுள்ளது. இதனால் இந்தக் கணக்கியலை படைக்கும் ஆற்றல் வாய்ந்த ஸ்தபதியர்கள் படைப்புத் தொழிலைச் செய்யும் பரம்பொருள் விசுவகர்மன் என்று சொல்லி அப்பணி செய்வோர் விஸ்வகர்மாக்கள் என்று சொல்லப்படுவாராயினர். **அதாவது இறைவனின் இலக்கணத்தை அறிந்து அதற்கு ஏற்ற இலக்கிய வடிவங்களை சமைத்து வருவதால் இவர்கள் விஸ்வகர்மர் எனப்பட்டனர்.**

மேற்கண்ட கணக்கியல் படி ஒளியணுக்கள் எட்டெட்டாக சேர்வதினால் ஒரு பொருள் உண்டாவதையும், இந்தப் பொருள் மீண்டும் எட்டெட்டாக பெருகுவதினால் மேலுமொரு புதுப் பொருள் உண்டாவதையும், அதுபோல இந்தப் பெருக்கம் நிகழ்வதையும் காணலாம். இந்தப் படிமுறையில் ஐந்தாவது படி, முடியும் நிலையில்

கண்களுக்குப் புலப்படாத அந்தப் பரமாணு கண்களுக்குப் புலப்படும் பருப்பொருளாக ஆவதைக் காண்க.

எனவே 8X8=64 என்ற எண்கணக்கு வாஸ்து சாஸ்திரத்தில் ஒரு முக்கியத்துவத்தை அடைகின்றது என்பதை ஸ்தபதி விளக்கும் போது மெய் மறந்து போனேன். அந்த எட்டைத் தான் எண் என்று திருவள்ளுவர் தமது பாடலில் குறிப்பிடுவதைக் காணலாம். இந்த அணுக்கணக்கியல் சொற்பொருளுக்கும், பருப்பொருளுக்கும் ஒன்றே என்பதையும், அந்தக் குறளில் சுட்டிக் காட்டியிருப்பதைக் கண்டுகொள்க.

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' – குறள்

மேலுமொரு செய்தி. எட்டு அணுக்கள் சேர்வதால் 'எழுத்து' தோன்றுகிறது என்று நாம் கொள்ளும் போது, முதல் எழுத்து 'அ' தானே. (a, अ ,alpha) எனவே 'அ' என்ற எழுத்தை எண்ணளவில் எட்டைக்குறிப்பிட 'அ' என்பது தானே மரபு ? 'அ,இ,உ,எ,ஒ' என்ற உயிரெழுத்துக்களுக்கு நிகராக a,e,i,o,u என்பது எப்படித் தோன்றின? சொல்லுங்கள் பார்க்கலாம். இதன் மூலம் தமிழ்மொழியானது உலகளாவிய மொழியாக உளதெனச் சொல்லலாமா? மயன் தனது ஐந்திறத்தில் தமிழை 'செம்மொழி' என்றும் 'செவ்வியல்' மொழி என்று சொல்லுகிறான்.

''உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செய்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற் கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே'' – 207 [ஐந்திறம்]

நடைமுறையில் இந்த எட்டு என்ற கணக்கு அணுக்கொள்கை எனப்படுகிறது. அணுவியல் என்றும் சொல்லப்படும். அணுவியலை ஒட்டித்தான் தொல்கால தமிழகத்தில் எறும்பும் தன்கையால் எட்டுச்சாண் என்று சொல்லும் வழக்கு இருந்ததை நினைவுபடுத்திப் பாருங்கள். மனித வடிவமும், மனித முகத்தின் அளவினால் எட்டு மடங்கினதாக இருப்பதை வாஸ்து சாஸ்திரம் கண்டறிந்து அதனை human proportionate measures என்று இன்று பேசிவருகிறோம். உச்சந்தலை, கழுத்து, கால்முட்டி, பாதகனம், ஆகிய இந்த உறுப்புக்கள் ஒவ்வொன்றும் கால்முகம் என்று கண்டு தேர்ந்து மொத்தத்தில் எட்டாய் விளங்கும் மனித உயர அளவு ஒன்பதாய்

ஆகிவிடுகிறது. இதனால் மனித உருவம் இடம் விட்டு இடம் செல்ல அதாவது நடந்து செல்ல முடிகிறது என்று வாஸ்து சாஸ்திரம் சொல்லுகிறது. ஒவ்வொரு மனிதனுடைய உறுப்புக்களை இயற்கையானது இந்த விகிதாச்சார அளவில் தோற்றி இருப்பதை வைத்து மனித வடிவமாகவும் தன்னை புலப்படுத்திக் கொண்ட இறைவன் அவனது உருவத்தையும் அதே அளவினால் சிற்பிகள் செய்து வருகிறார்கள். முகத்தின் முட்டுவாயிலிருந்து கேசாந்தம் வரை உள்ள நீள அளவை தாளம் என்று சிற்ப சாஸ்திரம் குறிப்பிடுகிறது. எனவே மனிதவடிவமும் இறைவடிவமும் ஒன்பது தாள வடிவினதாக இயற்றுதல் வேண்டும் என்ற ஒரு பொது விதியே தோன்றி விட்டதென ஸ்தபதி சொல்லுகிறார். [காண்க ஸ்தபதியின் சிற்பச் செந்நூல்] இந்த விகிதாச்சாரப்படி செய்யும் உருவங்கள் நல்ல அளவும் அழகும் வாய்ந்த உருவமாக மிளிர்வதை கற்சிற்பங்களிலும் செப்புத்திருமேனிகளிலும் இன்றும் காணலாம். இதைவிடுத்து, உருவத்தின் அளவியலை சிறப்பித்துக் காட்டுவதற்கு வேறுபல தாள அளவுகளும் தாளம் ஏறிய பல உருவங்களும் உண்டென்பதை ஸ்தபதி சொல்லுகிறார். இங்கே கையாளப்படும் கணக்கியலும் இது வரை சொல்லிவந்த கணக்கியலும் ஒன்றாய் அமைவதை உற்று நோக்குங்கள். இங்கே இயற்கையின் நோக்கமும், இந்த நோக்கு இலக்கியத்தன்மை (aesthetical form) பெறுவதையும் உற்றறிக. இங்ஙனம் வெவ்வேறு தாள வகைகள் உண்டாவதையும் அதனால் ஏற்படும் வடிவங்களையும் பேசும் நூலுக்குத்தான் உண்மையில் சிற்ப சாஸ்திரம் என்று மரபில் குறிப்பிடப்படுகிறது. இந்த நிலையில் அளவை அடிப்படையாகக் கொண்டு, வாஸ்து என்பதும் சிற்பம் என்பதும் ஒன்றே என்பதும் புலனாகிறதல்லவா? ஆம், இஃதே உண்மை. இதை ருசுப்படுத்த நம் ஸ்தபதி கையாளும் சூத்திரங்களையும் உற்று நோக்குக.


विज्ञानं शिल्प कौशल्यं விஞ்ஞானம் சில்ப கௌஸல்யம் – அதாவது சில்பமென்பது விஞ்ஞானமாய் இருப்பது அதன் சிறப்பியல்பாகும் என்பது பொருள். இது மட்டுமல்ல, ஞாலப் பொருள்கள் அனைத்தும் விஞ்ஞானப் பொருள்களே जगत् सर्वं शिल्पमेव என்கிறது சிற்பியர் வசமுள்ள உபநிஷதம். ஏன்? பிரம்மமே விஞ்ஞானப் பொருள் என்று தானே வேதமும் சொல்கிறது विज्ञानं ब्रह्म 'விஞ்ஞானம் பிரம்மம்'.

இந்த அளவு முறையில் தான் இசைத்துறையில் நாம் கையாளும் தாளக் கணக்குகளும் உண்டாயின என்று வாஸ்து விஞ்ஞானிகளாகிற சிற்பிகள் சொல்லுகிறார்கள். இந்த அளவியலை உற்றுணர்ந்த சிற்பியர்கள் எட்டுத் துடிப்புகளை கொண்ட இசைத் தாளத்தை ஆதிதாளம் என்று குறிப்பிடுகின்றனர். ஆதிதாளத்தின்

proportion னை உற்றுநோக்கினால் அந்த எண்கள் 1, 3, 2, 2 என்ற beats [pulses, துடிப்பை] கிடைப்பதை ஒப்பிட்டு நோக்குக. இதைத்தான் சுருக்கி மனிதவடிவம் ஒருஇசைவடிவம் என்று மரபில் சொல்லி வருவதாயிற்று. கோவில் கட்டிடம் சுட இந்த ஆதிதாளத்தில் இயற்றப்படுவதை அருகில் உள்ள படத்தைப் பார்த்து தெளிவுறுங்கள்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்''
"ullam perungkoil unudambu alayam"
प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्र वित्तमः ।

TEMPLE AS A HUMAN FORM



Vertical arrangement of spatial terms in the Temple structure

9 units of Time-Space at Gross level

"उपपीठं चरणाकारं अधिष्टानं जानुमण्डलं, पादवर्गं कराकारं प्रस्तरं बाहुमूलकम्, तत्कण्ठं गलमित्युक्तं शिखरं मुखमेवच, उष्णीषान्तं शिखाचैव महानासीच नासिका, नेत्राणां क्षुद्रनास्यौच विश्वरूपमिति स्मृतम् ॥"

Upapētam caranākāram adhistānam jānumandalam, pādavargam karākāram prastaram bāhu mōlakam, tatkantam galamityuktam shikharam mukhamevaca, ushnishāntam shikhācaiva mahānāsica nāsikā, netrānām kshudranāsyau ca vishwarūpamiti smrutam

Equation between aditālam and human body

Thattu 1	Count 1 Count 2 Count 3	Thattu 1 Veechu 1	Thattu 1 Veechu 1
Head	Torso	Thigh	Leg
1 tāla	3 tāla	2 tāla	2 tāla

7

மேற்சொன்ன விதிகளையும் விதிக்கான சூத்திரங்களையும் சொன்னவன் மயன்என்பதை அறிந்து கொண்ட வேதவியாசன் மயனுக்கு உலகப்படைப்பாளி என்ற பொருளில் விஸ்வகர்மன் என்ற பட்டம் வழங்கினான். அது மட்டுமல்ல, இந்த தொன்மைச் செய்திகளை வழி வழியாக பெற்றிட்ட இளங்கோவடிகள் மயனை கலைமரபுக்கு சொந்தக் காரணாக பிரகடனம் படுத்தினான் என்க.

நுண்வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம்
– சிலம்பில் இளங்கோ

இந்தச் செய்தியை சிலம்பில் காணலாம்.

இதுவரை சொல்லி வந்த காலக் கணக்கை தாளக் கணக்கு என்று சொல்லும் பொழுது இந்தக் காலக் கணக்கே நடைமுறையில் தாளக் கணக்கென பிற்கால கலைஞர்கள் சொல்லுவார் ஆயினர் என்க. இந்தத் தாளக் கணக்கை நாட்டியக் கலையில் வெளிப்படையாகக் காணலாம். நாட்டிய மாடும் ஒரு ஆணோ, பெண்ணோ முதலில் தனது தாளை [பாதத்தின் சுவடு] பூமியில் தட்டி அந்த தாளக் கணக்கை எழுப்பிக் கொள்வதால் தாளம் என்ற சொல்லானது பிறந்தது. இது பற்றி நிரம்பத் தெரிந்தவர்கள் சிற்பிகளே என்றால் மிகையாகாது. ஏன் என்றால் இதே தாளக் கணக்கில் தான் சிற்பங்களும், கட்டிடங்களும் இயற்றப்படுகின்றன. ஏக தாளம் முதல் பத்து தாளம் வரை உள்ள தாள வடிவங்களின் இலக்கணத்தை ஸ்தபதியின் சிற்பச் செந்நூலில் காணலாம். இதில் இருக்கும் நுட்பம் யாதெனில் அந்தத் தாளக் கணக்கானது இசைக்கும், நாட்டியத்திற்கும் எழிலார்ந்த தோற்றத்தை தருவது போல இந்த தாளக் கணக்கானது சிற்பங்களுக்கும், கட்டிடங்களுக்கும் உள்ளார்ந்த எழில்மிகு தோற்றப் பொலிவைத் தருகின்றன எனலாம். சிற்பிகள் தாளத்தை நீட்டல் அளவையாக கொள்கிறார்கள். இந்த அளவையை ஆக்கித்தருவதும் காலம் தானே? கவிதைகளை இயற்றும் கவிஞர்களுக்கும் சந்தம் என்ற பெயரில் இந்த காலக் கணக்கை கையாளுகிறார்கள். அதன் இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகியவற்றைக்கு மூலக் கணக்காக இருப்பது இந்த காலக் கணக்கே தாளக் கணக்காக இருப்பதும் இன்னும் சுருங்கச் சொன்னால்

முற்சொன்ன இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகியவற்றுக்கு மூலமே காலம் எனக் கொண்டிருப்பது ஐந்திறம் வழி வந்த வாஸ்து விற்பன்னர்கள் கணக்கு என்பதை இங்கு சொல்லுவதோடு முத்தமிழோடு சிற்பம், கட்டிடம் என்ற இரண்டு

தமிழும் சேர்ந்து ஐந்தமிழ் ஆயிற்று என்ற ஒரு தொல்மரபுச் செய்தியை ஸ்தபதி பல இடங்களில் விளம்பரப்படுத்தியிருக்கிறார். இந்தக் காலத்தின் இயல்புகளை அடிப்படையாக வைத்து அதனால் விழைந்த ஐந்தமிழை ஐந்திறம் நிறைந்த தமிழ் மரபு என்று சொன்னால் மிகையாகாது. எனவே ஐந்திறம் வாழ்க! ஐந்தமிழ் பெருகுக! என்று வாழ்த்தி எனது ஐந்திறம் நிறைந்த அணிந்துரையை நிறைவு செய்துக் கொள்கிறேன்.

இப்பொழுது இந்த ஐந்தமிழை காத்து வளர்த்திடும் இன்று நாடாளு பவர்களுக்கு இருப்பதால் இந்த ஐந்தமிழையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதனை நான் முடிப்பதற்கு முன் நமது தமிழுக்கு செந்தமிழ் என்ற பெயர் மட்டுமல்லாது செவ்வியல் மொழி **செம்மொழி** என்று முதல் சங்ககாலத்தில் அரங்கேற்றிய ஐந்திறத்திலிருந்து எடுத்துச் சொல்லி தமிழர்கள் அனைவரும் பெருமைப்பட வைக்க விரும்புகிறேன்.

''உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற் கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே'' – 207 [ஐந்திறம்]

வெ. இராமகிருஷ்ண

மடியில் விழுந்த ஐங்கனி

விஞ்ஞான உலகத்தில் இரண்டு மேதைகளை மறப்பதற்கு இல்லை. ஒருவர் தாமஸ் ஆல்வா எடிசன். மற்றொருவர் ஐசக் நியூட்டன். இவ்விருவர்களைவிடுத்து பேராசிரியர் ஐன்ஸ்டீன் என்பவரும் தலைசிறந்த விஞ்ஞானியே என்றாலும் இவருக்கு முந்திப் பிறந்தவர் நியூட்டன்.

இந்த நிலையில் எவரும் எதிர்பாராத, அனுபவிக்காத ஓர் அதிசயச் சம்பவம் ஐசக் நியூட்டனுக்கு வாய்த்தது என்றால், தலைப்பைப் பார்த்த எவரும் அனுமானித்து விடுவர்.

உலகம் தோன்றி எத்தனையேமில்லியன் ஆண்டுகள் சென்று விட்டன என்று காலக் கணித ஆராய்ச்சியாளர்கள் சொல்லி வருகிறார்கள்.

இந்த ஆராய்ச்சிகள் மேலும் மேலும் வலுப்பெறும் நிலையில் காலச் சுவடுகள் மேலும் மேலும் பின்நோக்கிச் செல்வதை இன்று காண்கிறோம். ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், கல்தோன்றி மண்தோன்றி அதன் பிறகு மரமும் தோன்றி இறுதியாக மனிதனும் தோன்றி பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்து விட்டன என்பதனை எவரும் அறிவர். இந்த நிலையில் அக்கால மனிதர்கள் மரத்திலும் மரத் தடியிலும் குஹைகளிலும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் எவருக்கும் கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் மேற்சொன்ன விஞ்ஞானி ஐசக்நியூட்டனுக்கு கிடைத்து விட்டது என்றால் ஆச்சரியமாய் தோன்றுகிறல்லவா? இந்த விஞ்ஞானி நியூட்டனுக்கு ஏற்பட்ட அனுபவம் அவருக்கு முன் எவருக்கும் ஏற்படவில்லையாதலால், இதற்கு கொப்பான - எனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தை இங்கே எழுத வேண்டியவனாகிறேன். இந்த நிலையில் என்னதான் நிகழ்ந்து விட்டது என்ற கேள்வி எழுகிறதல்லவா? ஆம்! கேள்வியோ சிறியது, ஆனால் அஃது உலக நாகரிகத்துக்கு பெரும் பயன் விளைவித்த நிகழ்ச்சி என்று சொன்னால் மிகையெனப்படாது.

ஒருநாள் நியூட்டன் ஒரு தோட்டத்தில் அமர்ந்திருந்த நேரத்தில் ஒரு ஆப்பிள் பழமானது தரையில் விழுந்தது. உண்மையில் அதனைத் தரையில் விழுந்ததாகச் சொல்லுதல் தகாது என்று நினைக்கிறேன். அந்த ஆப்பிள் ஐசக்நியூட்டனின் தலையில் விழுந்தது என்று கவிநயத்தோடு சொல்லுதலே சாலப்பொருந்தும். அந்த

ஆப்பிள் வானத்திலிருந்து விழவில்லை. அது மரக்கிளையிலிருந்து உதிர்ந்து விழுந்ததாம். இந்த விழ்ச்சி நியூட்டனுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தாலும், இந்த விழ்ச்சியானது பிற்கால விஞ்ஞான வளர்ச்சிக்கு ஊட்டமும் ஊக்கமும் தந்த நிகழ்ச்சி எனலாம்.

இந்த ஆப்பிள் ஏன் மேலிருந்து கீழே விழவேண்டும்? கிளையிலிருந்தே வேறோரிடத்துக்கு தள்ளி விழுந்திருக்கலாமே. ஏன் நேராக நமக்குத் தெரியுமாறு விழ வேண்டும் என்று சிந்திக்க வைத்தது இந்த ஆப்பிள் பழத்தின் வீழ்ச்சி என்று சொல்ல வேண்டும்.

இந்த விழ்ச்சியினால் எழுந்த ஆராய்ச்சியும், ஆராய்ச்சியின் பயனாய் விளைந்த விஞ்ஞான தேற்றங்களைத்தான் மேலைநாட்டு விஞ்ஞானக் கல்வி கற்ற அனைவரும் Newton's Law of Motion - Newton's Law Of Gravitation அதாவது நியூட்டனின் இயக்கத் தேற்றம் –ஈர்ப்பு விதி என்று சொல்லுவர். இந்தத் தேற்றத்தின் பின் விளைவுகளும், வளர்ச்சிகளும் நாம் எல்லோரும் அறிந்ததே. எனவே, அதனை இங்கு இப்போது தொகுத்துக் கூற வேண்டிய தில்லை என்க!

நான் விஞ்ஞானி இல்லாவிடினும், ஒரு தொழில் நுட்ப அறிவியல் தெரிந்தவனாக இருந்த மையால், இதுபோல என் முன்னால் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும்ஒரு சேரமைந்த நிகழ்ச்சி யொன்று வாய்த்தது எனச் சொல்லிட விரும்புகிறேன் இந்த நிகழ்ச்சியில் ஒரு கனி தரையில் விழவில்லை தலையிலும் விழவில்லை; என் மடியில் விழுந்தது என்பேன். அந்தக் கனிக்குத்தான் ஐந்திறம் என்று பெயர். இந்தப் பழமானது ஒற்றித்த பழமாக அல்லாமல் ஒரு கொத்தாக விழுந்தது என்று சொன்னால் மிகையாகாது. அந்த இனிமையான பழக் கொத்தைத்தான் ஐந்தமிழ் என்று பல நிலைகளில் பேசியும் எழுதியும் வந்தி ருக்கிறேன். நியூட்டனுக்கு கிடைத்ததோ ஒரு கனி. ஆனால் எனக்குக் கிடைத்ததோ ஒரு கொத்தில் ஐங்கனி. நியூட்டனுக்கு மரத்திலிருந்து ஆப்பிள் தரையில் விழுந்தது. ஆனால் என்னுடைய மடியில் விழுந்ததோ விண்ணின்று இழிந்த ஐங்கனிக் கொத்து, அல்ல ஐந்தமிழ் சொத்து. ஐந்து பழங்களும் அதாவது ஐந்து தமிழ்களும் விண்ணிலிருந்து விழுந்தவைகளாகும் என்று பெருமிதத்தோடு சொல்வேன்.

இப்பழங்கள் எங்ஙனம் இனிக்கின்றன? அவ்வாறு இனிப்பதற்கு காரணங்கள் என்ன? அறிவியல் என்ன? என்று பேசுவதே எதிர்வரும் ஐந்திறவிளக்கம் என்று சொல்லி, உரையினை ஒருசில வார்த்தைகளால் செப்பி, உங்களைச் சிந்திக்க வைக்க விரும்பி எழுதலானேன்.

மாமல்லபுரத்தில் தமிழ் நாடு அரசு தோற்றுவித்த கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் முதல்வராக இருந்த காலத்தில் [1961- 1988], என்னுடைய சிற்பக்கலை மாணக்கர்களுக்கு சிற்ப சாஸ்திரம் மற்றும் வாஸ்து சாஸ்திரம் சொல்லிக் கொடுக்க வேண்டிய நேரத்தில், **மயமதம்** என்ற ஒரு வாஸ்து சாஸ்திரத்தை மாணாக்கர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. அந்த நேரத்தில், அலகாபாத் பல்கலைக்கழக சம்ஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர்.பி.கே. ஆச்சாரியர் என்பவர் தொகுத்து வைத்த Encyclopaedia Of Indian Architecture என்ற நூலில் மயன் என்ற சிற்பியைப் பற்றிய செய்தியைத் தேடலானேன். எதிர்பாராத பலவித செய்திகளைக் கண்ட நான் வாஸ்து சிற்பக்கலைக்கு முன்னவனாகவும், பேறிஞனாகவும் மயன் என்ற அச்சிற்பி விளங்கினான் என்று அதிகார பூர்வமாகத் தெரியலானேன்.

எங்கள் கல்லூரியில், மயமத வாஸ்து சாஸ்திரமானது பாட நூலாக இருந்தாலும் மயனைப்பற்றிய வரலாறு அந்த நூலில் ஏதும் இல்லை. அதற்குப் பதிலாக மயனால் எழுதப்பட்ட சாஸ்திரமாகிய **மயமதம்** என்பதை அறிவுறுத்தி **''மயமுனி விரசிதம் மயமதம்''** என்ற ஒரு குறிப்பு அந்த நூலின் அட்டைப் பக்கத்திலேயே இருந்ததைக் கண்டேன். அதன் பிறகு இந்த மயனைப் பற்றி எந்தெந்த நூல்களில் பேசப்படுகின்றன என்பதைத் துருவித் துருவி ஆராய்ந்து வந்த நிலையில் சிலப்பதிகாரம், சங்க நூலான நெடுநெல்வாடை, மணிமேகலை, மகாபாரதம், இராமாயணம் ஆகிய காப்பியங்களில் இவனது பெயரும் சாதனைப் பட்டியலும் வருவதைக் கண்டேன். சிற்பக்கலையில் துறைபோகிய மேலோன் என்ற செய்திகளைப் பார்த்து வந்த நேரத்தில், சிலப்பதிகாரத்தில் இந்த மயன் சிற்பக்கலை மரபையே தோற்று வித்த முன்னவன் என்ற செய்தி என் கண்ணில் பட்டது **''நுண்வினைக் கம்மியர் காணா மரபின மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம் - சிலம்பில் இளங்கோ''** அந்த நிலையில் எனது கலைத்துறையில் நீண்ட தொடர்பும், அனுபவமும் பெற்ற ஸ்தபதிகளையும் பேரியோர்களையும் அணுகி அவனைப் பற்றிய மரபுச் செய்திகளையும் கேட்டறிந்து அவற்றையும் மனதிலே பதிய வைத்துக் கொண்டேன். அவர்கள் சொல்லிய செய்திகள் அன்று நம்ப முடியாத அளவிற்கு ஏற்ற மிகு வர்ணனைகளாக இருந்தமையால் அப்பொழுது பல ஐயங்கனைத் தோற்றுவித்திட்டன. அவன் கொடுத்த செய்திகளை விடுத்து அதற்கும் மேலான செய்திகளையும் நான் தெரிந்து கொண்டேன். அது முதல் மயன் வழிப் பிறந்த ஆதி நூல்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கொண்டேன். இத்தகைய நேரத்தில் தான்

நான் முன்பு சொன்ன மயன்யாத்த ஐந்திற நூல் இனிக்கும் கனியாக என் மடியில் விழுந்ததாகச் சொன்னேன்.

இந்த வரலாற்றை இந்த நூலுக்கு 1986-ல் எழுதிய முன்னுரையில் விரிவாகவே கொடுத்திட்டேன். காண்க.

இந்த நூலை மேலும் மேலும் புரட்டிப் பார்க்கையில் அரிய பெரிய விண்ஞானச் (science of space) செய்திகள் எண்ணற்றவை இருப்பதைக் கண்டேன்.

அந்த நூலில் சொல்லப்பட்டக் கருத்துக்களைப் படித்தும் பகுத்தும் பார்க்கும் பொழுது நான் இப்பொழுதெல்லாம் பேசி வரும் இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் என்ற ஐம்பொருங் கலைகளுக்குரிய விஞ்ஞான அடிப்படை இருப்பதை கண்டு வியந்தேன். இதனை உறுதி செய்வதற்கு மயனுடைய பெயரில் புழங்கிவரும் மயமத வாஸ்து சாஸ்திரத்தில் அந்த விஞ்ஞானச் செய்திகளுக்கு ஒப்பான குறிப்பு களையும் நுட்பங்களையும் விரிவுகளையும் கண்டேன். ஐந்திற மூலத்தோடு ஒப்பிட்டும் பார்த்தேன். இதேபோல மயன் வழிவந்த வாஸ்து நூல் எனப்படும் மானசாரம் என்ற நூலையும் நூல் கூறும் பல்வேறு கருத்துக்களையும் அளவு நுட்பங்களையும் ஊன்றிக் கவனித்தேன் மயமதத்தில் கட்டிடக் கலை பற்றிய செய்தியே முழுக்க முழுக்க வந்ததை வியந்து பார்த்து அந்நூலில் படிம மானங்கள் இல்லையே என்று ஒரு வினாவை எழுப்பிக்கொண்டு அதற்கான படிமமானங்கள் வேறு நூல்களில் கிடைக்குமா என்று தேடினேன்.

கடந்த 1952 – ஆம் ஆண்டு என் தந்தையார் வைத்தியனாத ஸ்தபதி அவர்களும் நானும் கன்னிமாரா நூல் நிலையத்திற்குச் சென்று மயன் பெயரில் எதாவது நூல் இருக்கிறதா என்று ஆய்வு செய்த நேரத்தில் அவன் பெயரில் நவ தாண்டவம் என்ற சிற்ப நூற்பகுதி ஒன்று இருப்பதைக் கண்டு வியந்து அந்த நூல் நிலையத்திலேயே இருந்து பிரதி எடுத்துக் கொண்டது நினைவிற்கு வந்தது. இதைப் பார்த்த நானும் எனது தந்தையாரும் பிரதிமா இலக்கணக் கூறுகள் ஏதும் இன்றி நவதாண்டவ இலக்கணம் மட்டும் அவன் பெயரில் இருப்பதில் ஏதோ ஒரு முக்கியத்துவம் இருப்பதாக உணர்ந்தோம். இந்த நேரத்தில் எனது தந்தையார் சொன்ன செய்தி இப்பொழுது நினைவிற்கு வருகிறது. இந்த ஆடலான் வடிவத்தின் மூல அமைப்பை – அதற்கான கணக்கியலைக் கண்டறிந்தவன் மயனாகத்தான் இருக்க முடியும் என்று என் தந்தையார் சொல்லியதை அப்போது புரிந்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் இப்போது ஐந்திறம் மட்டுமல்ல அவன் தந்த வேறு பல நூல்களை வாசித்த நிலையில்

என் தந்தையார் கூற்று சரியே என்று தெரியவருவதாயிற்று. அதாவது மூலம் எனப்படும் இயற்கையின் துடிப்பினால் இப்பிரபஞ்சம் உருப்பெறலாயிற்று என்ற மயனுடைய உச்ச விஞ்ஞானம் புலப்படுவதாயிற்று. இதனை மெய்ப்பிப்பதற்கு அவனது ஒரு சில சூத்திரங்களைக் கீழே தருகிறேன். இந்த வாக்கியங்கள் நமக்குத் தெரிந்த அனைத்து வேதங்களையும் தாண்டிச் சென்று ஒரு பார்கோடா ஆராய்ச்சியென அறிஞர் ஏற்பின் சங்கத்தமிழின் விஞ்ஞான மூளையைத் தெரிந்து மகிழலாம். இத்தத்துவத்தை இப்போது சொல்லிட விரும்புகிறேன்.

'அண்ட மூலமாய்ப் பிண்ட மூலமாய்க்
கொண்டிலங் குவெளி வொளியென
விண்ட மூலமாய் விண்ணின் மூலமா
யெண்ணின் மூலமாய் நோக்கமாய்ப்
பண்டி லங்குமொழி யெண்க லைத்திறன்
பண்க லைத்திற னாக்கமாய்க்
கண்ட மாக்கலையின் மூலமா யொளிருங்
கலைநி லைத்திற னுன்னுவாம்'

[மயன் சிற்பமாச் செந்நூல்]

''ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே
நிறையொலி நேரொலி வெளியொலி விண்மொழி
மறையொலி ஓமென வழுத்தற் பாற்றே
மறைமுதல் ஒலி ஓம் அறைதல் மரபே
மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே

அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்
வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்
தானியல் வடிவுறுங் குறியெழுத் தென்ப
குறிகுறி யீடே வரைவென வாகி
அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே

ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே
எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்து மைந்தியல் முறைநெறி வழக்கே
ஐந்தியல் மொழியாய் எண்ணிலை யெழுத்தாய்
வந்ததொல் மரபே முந்துசெந் தமிழாம்'' -[ஐந்திர சூத்திரங்கள்]

அது மட்டுமல்ல, ஓம் என்ற மூல ஒலி ஒன்றைத் தவிர தெரிந்திராத நமது விஞ்ஞானக் கலாச்சாரத்தில் இரண்டு தத்துவங்களை குறிப்பிடுவது இங்கே உச்சி மேல் வைத்து மெச்சத் தகுந்த அறிவியல் உண்மை என்பதைச் சொல்லிட

விரும்புகிறேன். மயன் தனது ஐந்திறத்தில் ஒரு ஓம் அல்ல இரண்டு ஓம்களை அறிமுகப்படுத்துகிறான். ஒரு ஓம் என்பது **ஓம்ஒலி** என்றும் மற்றொரு **ஓம்** என்பது **ஓம்ஒளி** என்றும் தெரிய வருவதாயிற்று. இங்ஙனம் இரண்டு வகையான ஓம்கள் எந்த ஒரு விஞ்ஞான சாஸ்திரமோ அல்லது வேதமோ இது வரை சொல்லிக் காட்டிடவில்லை என்பதை இங்கு குறிப்பிடல் பெருமை தருகிறது என்பேன்.

ஓம்ஒலியானது, காதால் கேட்கும் ஒலியால் ஆன வடிவங்களை ஒளிமய வடிவங்களாக நமது அகத்தே தோற்றுவிக்கிறது என்பதையும், அதே சமயத்தில் ஓம் ஒளி என்பது கண்வழியே அகத்திலே சென்று தங்கி அகம் எனும் திரையில் ஓர் ஒளி வடிவான வடிவத்தை தோற்றுவிக்கிறது என்பதை அனுபவ பூர்வமாக ஏற்க முடிந்தது. இதனைக் கீழ்கண்ட அவனது விஞ்ஞானப் பாடல் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம் **''ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும்; ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்; ஒளிஒளிர் உருவம் தானே, ஆடலான் ஆடலன்றோ''** இதன் எளிய பொருள் யாதெனில், ஒலியால் ஆன ஒலிமயமான பொருள் அதாவது ஒலிப்பொருள் (sound form) ஒளிமயமாகவே நமக்கு பொருளாகிறது அல்லது உணர்வாகிறது என்பது பொருள். இங்ஙனம் ஒலியானது ஒளியாகப் பிறழ்ந்து ஒளிமயக்காட்சி தோன்றுகிறது என்பதே இந்த மயத்தமிழ்த் தேற்றம் தெளிவுறக் கூறுகிறது என்று சொல்லலாம், அவனுடைய வேறுபல ஐந்திறப் பாக்களின் மூலமும் இக்கூற்றை நிறுவலாம். இந்தச் செய்தியை நாம் ஏற்றுக் கொள்வதற்கு பிற்காலத் தமிழ் இலக்கண நூல்களில் இதே செய்தி பேசப்படுவதை வைத்தும் தெளியலாம் என்க.

அது மட்டுமல்ல, மூல ஒலி போல கண்ணால் பார்த்திடும் பொருள்களைக் காண்பதற்கும் உணர்வதற்கும் மூலமாய் இருப்பதே இந்த ஓம் ஒளி என்று மயன் சொல்லுகிறான். இத்தகைய ஒளிக் காட்சியை நாம் அகத்தே கண்ணால் பார்ப்பதற்கு அந்த ஒளியானது ஒளிர்ந்து அதாவது அசைந்து அதாவது துடித்து அத்துடிப்பினால் அசையாகி ஓசை எனப்பபட்டு ஒளி அணுக்கள் ஒரு நெறியில் இணைந்து ஒளிமயக் காட்சியை நமது அகத்தே தோற்றுவிக்கிறது என்பது பொருள். இத்தகைய ஒளிர் நிலையில் ஒரு லயம் இருப்பதால் அதனை நெறி என்று சொல்லி அங்ஙனம் நெறிப்பட்ட ஒளி அணுக்கள் சேர்ந்து(Rhythmic Proportional Measure) ஒளி நடராசனைத் தோற்றுவிக்கிறது என்று அவனுடைய பிற பாடல்கள் மூலமும் தெரியலானேன். இந்தக் கருத்தைத் தான் ஒளிஒளிர் உருவம் தானே ஆடலன் ஆடல்

அன்றோ என்று வியந்து சொல்லுகிறார் மயன். ஆடல் என்பது தாளக் கணக்கியலை அடிப்படையாகக் கொண்ட அமைப்பன்றோ! இது தான் காலக் கணக்கெனப்படுகிறது எனக. இப்பொழுது தெரிந்து கொண்ட பாடல்களை வைத்து, அந்தக் காலத்தில் எனது தந்தையார் நடராசனை வடித்துத் தந்தது மயன் தான் என்பது மெத்தச்சரி எனக் கண்டேன். ஆகையால் ஒன்பது வகையான ஆடல் அமைதிகளை மயன் உருவகித்துக் கொடுத்தான் என்பது சிற்ப்பியர்களுக்கான செய்தி மட்டுமல்லாமல் கலை வரலாற்று அறிஞர்களுக்கும் கிடைத்திட்ட செய்தி என்று கூறி முடிக்கலாம். ஆகவே கணக்கை முந்திச் சொல்லி எழுத்தைப் பின்சொல்லிய அழகை திருவள்ளுவர் தமது குறளில் சொல்லுவதையும் உற்று நோக்குக.

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு' – குறள் 392

இங்கே எண் என்பது Numerical Vibration Or Pulsation ஐ குறிக்கு மன்றோ! ஔவையாரும் ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'' என்று சொல்லவில்லையா? உற்று நோக்குங்கள். இக்கணக்கியல் இவ்விருவருக்கும் தெரிந்திருந்தது என்பதாகச் சொல்லலாம். இக்கருத்து தமிழர்களுக்கு – அவர்தம் அறிவியல் வாழ்க்கைக்கு – அதன் நயத்தைக் குறிக்குமல்லவா? எனவே தான் தமிழர், சங்ககால வாழ்க்கையினை நமது புலவர் பெருமக்கள் உச்சிமேல் வைத்து மெச்சினர் எனக. இக்கால மேலை விஞ்ஞானமும் Computer science or Technology மூலம் இதனைத்தானே அடிப்படையாகக் கொண்டு எழுத்துக்களைத் தோற்றுவிக்கிறது? இக்கருத்தை பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்முதல் சங்ககாலத்தில் அரங்கேறிய ஐந்திறத்திலும் பிற்கால சம்ஸ்கிருத [கிரந்தம்] வாஸ்து சாஸ்திரங்களிலும் காணலாம். ''அணுத்திரள் ஒலியே எழுத்தென்ப்படுமே'' ''அணுத்திரள் ஒளியே எழுத்தின் சிறப்பாம்'' என்று மயனும் ''எழுத்தெல்லாம் ஓவியமே'' என்று கலைநிலைக்கு அந்த மயனே உயர்த்தி விட்டான். இதுதான் ஆன்மிகம் அல்லது ஆன்மவியல் அல்லது அகவியல் என்று கொள்ளப்பட வேண்டும். இந்த ஆன்ம சக்தியின் துடிப்பினால் அன்றோ பறவை பறக்கிறது? ரயில் ஓடுகிறது? நாமும் ஓடுகிறோம், குதிக்கிறோம், தாவுகிறோம், சரிதானே? இந்த ஆன்ம சக்தியான பேராற்றல் பௌதிகப் பொருள்களிலும் உளதல்லவா? விண்பொருளும் மண்பொருளும் (Celestial substance and phycical substance இரண்டையும் பேராசிரியர் Einstein போல மயனும் சங்ககாலத்தில் சொல்லியதோடு

விட்டு விடாமல் வான ஊர்தியையும் படைத்து, பறந்து சென்றான் என்பது கதையல்ல, விஞ்ஞான வரலாறு என்று துணிந்து கூறலாம். பிற்காலத்தில் இந்த இலக்கணத்தைப் புரிந்து கொண்ட சிற்பியர்கள் 108 தாண்டவக் கோலங்கள் உள என்று சொல்வார்கள் ஆயினர். இந்த தாண்டவக் கோலங்களை இக்காலத்து சிற்பங்களில் காணலாம் [சிதம்பரத்தில் இத்தாண்டவ கோலங்கள் சிற்பங்களாக சிற்பியர்களால் செதுக்கப்பட்டிருப்பதைக் காண்க.] இந்த வடிவங்கள் உயிர்ப்புள்ள உருவங்களாக உணரப் பெற்று, வணக்கத்திற்கு நமது சமயம் ஆனது பயன்பாட்டிற்குக் கொண்டுவந்து விட்டன. இது தெரியாதோர் மூடநம்பிக்கையை வளர்த்து விட்டனர் எனலாம்.

மயனுடைய பிற நூல்களைப் பார்த்த நிலையில் 108 தாண்டவங்களை முடித்து 1008 தாண்டவங்கள் இருந்தன என்று தெரியவந்தது. இந்த 1008 தாண்டவங்கள் யாவை என்பதைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இதற்கான குறிப்பை சிவலிங்க வகைகளில் சஹஸ்ர லிங்கம் என்ற ஒரு அமைதி இருக்கின்றது. உண்மையில் அது சஹஸ்ரம் இல்லை. அது 1008 என்பதை அவனது கணக்கிற்கு ஒத்துப் போகிறது என்று கருத முடிகிறது. இந்த நூல் கிடைக்கும் வரை இந்தச் செய்தியை ஏற்போமாக. பன்னிரெண்டு செந்நூல்களைத் தந்திட்ட மயன் பெருநடச் செந்நூல் என்ற ஒன்றை எழுதிக் கொடுத்த செய்தியை அவனே சொல்வதால் இந்த பெருநடச் செந்நூலில் 1008 ஆடல் கோலங்கள் கிடைத்திடும் என்று நம்புவோமாக. அதுமட்டுமல்ல, விண்கலச் செந்நூலும் இருப்பதுவும் இதுவே என்று சொல்லுவதில் தவறில்லை என்பேன்.

வெட்டுவாங்கேணி
சென்னை -41.

டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி.

ஐந்திறம் நிறைந்த

சதுரவியல் – வாஸ்து புருஷ மண்டலம் – காலமாத்திரை, காலவியல், காலக்கணக்கு, தாளவியல், கோலவியல்.


மூலத்தின் தன் உணர்வும், தன் பெருக்கமும்,
பெருக்கமுற்று இமிழ்ந்திடும் தானியல் அலைகளும்
அலைகள் தோற்றிய காலக் கோலங்களும்

ஆங்கிலத்தில் perfection is not of this world என்ற முக்கிய தத்துவக் கருத்து ஒன்றுண்டு. அதாவது குறைவற்றதும் முழுமையானது என மதிக்கப்படுவது இந்த உலகத்தைச் சார்ந்ததல்ல மற்றும் பார்ப்பதற்கில்லை என்பது அதன் பொருள். எனவே, மனித்த வடிவமாயினும் வேறு எப்பொருளாயினும் யாதொரு குறையும் இல்லாத ஒன்று உளதென்று சொல்ல முடியாத நிலையை இந்த வாக்கியம் நமக்கு உணர்த்துகிறது. அப்படியானால் perfection என்பதை perfect form என்பது அதாவது குறைவற்ற பொருள் யாதெனக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? அப்பொருளைத் தான் நாம் பரம் பொருள் என்று ஆண்டாண்டு காலமாய் நினைத்தும் சொல்லியும் வருகிறோம். ஆனால் இந்தப் பரம் பொருளை – முழுப்பொருளை – நாம் பார்த்தோம் இல்லை என்பது தான் உண்மை நிலை.

இத்தகைய முழுப்பொருளாகிய பருப்பொருளை அல்லது பரம்பொருளை எங்கே காணலாம்? சுருங்கச் சொன்னால், அதனை நமக்குள்ளும் நமக்கு வெளியேயும் காணலாம் என்பது தான் ஏற்ற விடையும் விளக்கமுமாகும். அதே சமயத்தில் அந்த முழுப்பொருளை காணமுடியும் என்று உறுதிபடச் சொல்ல முடியுமா என்று வினா எழுப்பினால் எவரும் தக்கதொரு விடை சொல்ல வில்லை என்பதே உண்மை.

இந்தக் காணாத பருப்பொருளை, முழுப்பொருளை கண்டு சொன்னது யாரெனில், மாபெரும் இந்தியக் கட்டிடக் கலை ஞானியும் மயன் என்ற பெயருடைய ஒரு பெருந்தச்சன் என்பது உங்களுக்கு இப்பொழுது தெரிந்தாக வேண்டும். அவன் சொல்லுகிறான், கண்களுக்குப் புலப்படாத அந்த முழுப்பொருள் ஒரு சதுர வடிவமாக

அல்லது கனசதுர வடிவமாக உளதென்று. இந்தக் கனசதுர வடிவத்திற்கு முச்சதுரம் என்றும் சமநீளம், சமஅகலத்தோடு கூடிய வடிவத்தை சச்சதுரம் என்றும் மரபிலும் அவன் சொல்லும் சொல்லிலும் உளதென்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். இங்ஙனம் சதுரமாக இயல்பில் தோன்றும் இந்த முழுப்பொருளானது தன்னைத்தானே புலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் [நேரத்தில்], அது சதுரமாக உளதென்றும் அந்த சதுரத்திற்குள் அளப்பெரிய ஓர் ஆற்றல் உளதென்றும் இந்த ஆற்றலை பிற்கால வாஸ்து நூல்கள் புருஷன் என்றும் கீழ்கண்ட பட விளக்கம் போல உளதென்றும் சொல்லுகிறான்.



வாஸ்து புருஷன் கிடக்கை
(enclosed energy as living organism)
(The lie of Cosmic energy pictographically symbolized into a most powerful human form)

சதுரத்திற்குள் அடைப்பட்ட அப்பொருள் மனித வடிவமாகக் காட்டி, அதையும் ஆண்மகனாகக் காட்டி, அதே சமயத்தில் அதனை இராக்சஷன் என்றும் சொல்லி, அதை மேலும் விளக்கி, வஸ்து புருஷன் என்றும் வாஸ்து நாதன் என்றும் வஸ்து பிரம்மம் என்றும் அவனுக்கு பிற்காலத்தில் நாம் நமது கட்டிடக் கலை தெரிந்த அனைவரும் சொல்லி, அந்தச் சொல்லை வாஸ்து புருஷன் என்று சொல்லி வரப்பட்டு அச்சொல் நிலைத்து விட்டது என்க.

ஒரு சதுரம், அந்தச் சதுரத்திற்குள் கை, கால்களை முடக்கி வைத்துக் கொண்டு இராக்சஷ உருவத்தோடு காணப்படுவதை உற்று நோக்குக. எல்லையற்ற அந்த வாஸ்துவை அல்லது வஸ்து பிரம்மத்தையும் பட விளக்கமாக வேறு எப்படித்தான் ஒரு கலைஞன் அல்லது விஞ்ஞானி உருவகித்திட முடியும்? ஒரு கவிஞன் கூட இந்த ஆற்றலைப் புரியும் அளவுக்கு ஒரே சொல்லால் விளக்கிடவும் முடியாதன்றோ! எனவே, நமக்கு அறிவுறுத்தப்பட்ட அத்விதமான இந்த ஆற்றலை அதாவது உயிர்ப் பொருளை ராக்சஷன் என்று தான் சொல்லி உணர்த்திட முடியும். இக்கால ஆங்கிலச் சொல்கூட ஒரு விஞ்ஞானச் சொல் ஒன்றைச் சொல்லி காட்டிட முடியாது என்று

சொல்லுவேன். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இந்த சதுரத்திற்குள் அடைபட்டிருக்கும் ஆற்றலை demonic power என்றோ அல்லது power packed energetic cell என்றோ energy field என்றோ தான் சொல்லமுடியும். எனக்குத் தெரிந்த வரையில் இதை இக்கால விஞ்ஞானம் nuclear energy என்றும் nuclear energy field என்றும் தான் சொல்ல முடிந்திருக்கிறது. அதாவது இந்த ஞாலம் முழுவதும் பரவிக்கிடக்கும் ஆற்றலை ஒரு புள்ளியில் ஒன்று சேர்த்து அடக்கி வைக்க முடியுமானால் அதுவே nuclear energy என்று சொல்ல முடியும். இந்த சூத்திர மயமான புள்ளியைத்தான் நாம் பிரம்மம் என்றும் பிரம்மபிந்து என்றும் இன்னும் சுருக்கமாக விந்து என்றும் காலங்காலமாய்ச் சொல்லி வருகிறோம். இந்த விந்து ஒரு சுயம்பு – தானாக தோன்றிய பொருள். இது தானாகத் தோன்றியது மட்டுமல்லாமல், தன்னைத் தானாகவே தன் உணர்வால் ஒரு சதுர வட்டத்திற்குள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். இதுவே அதன் இயற்கை ஆற்றல் எனக்கொள்ளப்பட்டு இவ்விடத்திற்கு சதுரவியல் என்று மயன் பெயரிட்டிருக்கிறான் இந்த சதுரவியலை சம்ஸ்கிருத வாஸ்து சாஸ்திரம் வாஸ்து புருஷ மண்டலம் என்று சொல்லுகிறது. வஸ்து என்பது இங்கு சதுரத்திற்குள் அடங்கிய ஆற்றலையும் அந்தப் பொருளையே தன் உணர்வால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சதுரவடிவைப் பெற்ற நிலையில் வாஸ்து புருஷன் என்றும், அவ்வடிவத்தை வாஸ்து புருஷ மண்டலம் என்றும் சொல்லுவதாயிற்று. அதாவது வஸ்து உள்ளிட்ட வடிவம் இந்த சதுரவடிவம் என்பதை இங்கு குறிப்பிட்டு, இதுவே பரம் பொருளின் முதல் வெளிப்பாடு first self manifest form என்ற கருத்தில் இதனை இங்ஙனம் வருணித்து இதை ஏற்பதை தவிர வேறு வழி இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். இந்த மூலப்பொருளை இன்றைய விஞ்ஞானம் கண்டு இப்படி சொல்லியிருக்கிறதா என்பது கேள்விக் குறியே!

இத்தகைய சதுர அமைதியுடைய அணுப் பொருளாகிய மூலப் பொருள் அளவிட்டு சொல்ல முடியா ஆற்றல் மிகு பொருள் என்பதோடு மட்டுமல்லாமல் இஃதொரு இயங்கும் பொருள் என்றும் கொள்ளப்பட்டிருப்பதால் இதனைப் பேரூயிர் என்றும் சொல்லி இந்தப் பொருள் தானாகவே வெடித்தாலும் அல்லது பிரிதொரு யுத்தியால் வெடிக்கச் செய்தாலும் அப்பொருள் அளப்பெரிய தீ யை வெளிப்படுத்தி உலகத்தையே பொசிக்கிடும் இயல்புடையது என்றும் சொல்லலாம். இதைத்தான்

அணுகுண்டின் அழித்திடும் ஆற்றல் (distructing power) நமக்கு இக்காலத்தில் புரிந்திட வைத்திருக்கிறது என்று சொல்லலாம். மீண்டும் சுருங்கச் சொல்லுகிறேன். சதுரத்தில் அடைப்பட்டுக் கிடக்கும் புருஷன் சதுர வடிவம் கொண்டு விளங்கும் நிலையில் வாஸ்து புருஷன் என்ற ஒரு வித புதிய நிலை – ஒருவித புதிய பெயர் தோன்றி விட்டது எனலாம். இதனை வாஸ்து சாஸ்திரம் வாஸ்து புருஷ: சதுரஸ்ர ஸம்ஸ்த: வாஸ்து புருஷ: சதுரஸ்ரய சம்ஸ்த: என்று விளக்கம் தருகிறது. இத்தகைய அடக்க முற்றுக் கிடக்கும் சக்தியை அங்ஙனம் சொல்லிக் காட்டிய விஞ்ஞானிதான் மயன் என்றாகிறான். அவன் தோற்றுவித்த சொல்தான் சதுரவியல். இந்த சதுரவியல் பற்றி ஐந்திரம் மிக நன்றாக விரித்து பல இடங்களில் பேசுகிறது. இதுதான் மூலக்கருவும், மூலக்கருத்தும் என்று கொள்க. இந்தக் கரு தான் கருப்பு நிறமாக பிற்காலத்தில் கொள்ளப்பட்டு black hole என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று யுகித்து அறியலாம். விஞ்ஞானிகள் மேலாய்வு செய்தல் வேண்டும்.

இத்தகைய அணு ஒன்றல்ல, இரண்டல்ல எண்ணற்றவை இந்தப் பிரபஞ்சத்தில் நிறைந்து நீக்கமற உளதென்ற கருத்தை இப்போது உற்றறிந்து மகிழலாம். இந்த சதுரவடிவங்கள் அடுத்தடுத்துச் சேர்வதினால் இடைவெளி இல்லாத பரப்பிடம் தோன்றுமல்லலவா? இதனைத்தான் வெளி என்றும் வெட்டவெளி என்றும் ஆகாஸம் என்றும் சொல்லி வருகிறோம். இப்பொருள் தானும் ஒளிர்ந்து தன்னைச் சேர்ந்த பொருளையும் ஒளிபெறச் செய்கிறது என்ற கருத்து நம்மிடையே நீண்ட காலம் இருந்து வருகிறது. இந்தக் கருத்தை ஒரு சம்ஸ்கிருத சுலோகம் மிக நன்றாக உணர்த்தி விட்டது என்று சொல்லலாம்.

नतत्रसूर्यो भाति नचन्द्रतारकं ।
नेमे विद्युतो भान्ति कुतोयमग्नि : ॥
तमेव भान्तं अनुभाति सर्वं ।
तस्य भासा सर्वमिदं विभाति ॥

இந்த பிரபஞ்சத்தில் இத்தகைய ஒளிக்கதிர்கள் நிறைந்திருப்பதால், அந்த ஒளிக்கதிர்களால் நாமும் நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்களும் உருப் பெற்றிருப்பதால் இந்த பிரபஞ்சத்தில் காணப்படும் அத்தனைப் பொருள்களும் ஒளிப் பொருள்களே என்று சொல்லப்பட வேண்டும் இந்த ஒளிப் பொருளைத் தான் நாம் நமது

material world ல் காண்கிறோம்.


எனவே, இனி விரித்துக் கூறிடில், பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கும் விண் அணுக்கள் அனைத்தும் உயிரிகள் என்பது ஐந்திரக் கொள்கை. எனவே, ஒரு சிறிய அணு, உயிர்ப்புள்ள நிலையில், சதுரம் சதுரமாக வளர்கிறது என்பது ஐந்திரத்தின் பிறிதொரு அடிப்படைக் கொள்கை ஆயிற்று. அதாவது, அணுக்கள் விரிகிறது என்று கொள்ளும் போது ஒரு முக்கியமான விஞ்ஞான நிகழ்வு உணர்த்தப்படுகிறது. இதனை உற்றறிதல் வேண்டும். அதாவது, ஒருவகை தன் பெருக்க நெறியில் இந்த விரிதல் நிகழுகிறது. அதாவது அலை அலையாக ஓர் அதிசய கணக்கொற்றி விரிகிறது என்பது பொருள். இப்படி நிகழும் போது ஏற்படும் அலைகளை உற்று நோக்கினால் மிகப்பெரிய கணித நுட்பம் (mathematical truth) புலப்படக் கூடும்.

விண்ணே - விண் அணுக்களே - விண் கருக்களே மண் கருக்களாகவும், இறுதியில் மண்ணாகவும் திரிபுறுகின்றன என்பது மய விஞ்ஞானத்தின் உச்சி (apex theory of Mayonic science) த் தேற்றம். சுருங்கச் சொன்னால், விண்ணே மண்ணாகிறது என்பது முடிந்த முடிவு என்க. இதை வைத்து பேராசிரியர் ஐன்ஸ்டீனின் $E=mc^2$ என்ற சூத்திரம் சரியே என்று நிறுவிடலாம்; உறுதி செய்திடலாம். பிறகு மேலும் விளக்குவேன்.

விண் நிலையில் (at cosmic level), விண்வெளியில், விண் அலைகள் தன்னியல்பாகத் தோன்றுகின்றன. உற்று நோக்கி எதுவென துருவித் துருவி நோக்கினால் அதனை இயக்குவது நான் சொல்லி வந்த மூலப் பொருள் என்பதே ஆகும். இந்த மூலப் பொருளை இந்த நிலையில் "இயக்கி" என்று கூறலாம் அல்லவா? இந்த இயக்கி என்ற கருத்தில் "இசக்கி" என்ற பெயரில் ஒரு கிராம தேவதையே உளது. கிராமப் பெண்களுக்கும் இத்தகைய பெயர் வைப்பது உண்டு என்பதை நினைவிற் கொண்டு வாருங்கள்.

இப்பொருளைக் காலம் என்றும் காலமூலம் என்றும், மூலக்கனல் என்றும் ஏன் காலமாக் கடவுள் என்றும் கூறுகிறான் மயன். பத்து [அ] நூற்றி எட்டு உபநிஷதங்களில் அடக்கப் படாத ஒரு சிறிய உபநிஷதம் இந்த காலத்தை காலப்பிரம்மன் என்று கூறுகிறது. कालोहि ब्रह्ममिति केचित् वदन्ति என்பது அது தரும் குறிப்பு. இந்த அலைகள் பரமாணு நிலையில் சதுரம் சதுரமாக விரிந்து விரிந்து

அலைகளெனப் பரவி விண்வெளி – ஒளி வெளி – ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் ஒளிமய வெளி ஆயிற்று என்பதைத் தொடக்கத்தில் நான் விளக்கினேன். இதற்கு, இந்தச் சதுர அலைகளின் தன் இச்சையான இயக்க நிலைக்கு மயத் தமிழில் சதுரவியல் என்றும், நடைமுறை வாஸ்து சாஸ்திரத்தில் வாஸ்து புருஷ மண்டலம் என்றும் பெயர். இந்த மண்டலமும் சதுர வடிவினதே.



வாஸ்து புருஷன் கிடக்கை
(enclosed energy as living organism)
(The lie of Cosmic energy pictographically symbolized into a most powerful human form)

இவற்றை நினைவிற்குக் கொண்டு வந்து இனிவரும் செய்திகளை உற்று நோக்குங்கள். இதுவரை எவரும் கேட்டிராத – பார்த்திராத – அனுமானித்துச் சொல்லிடாத ஓர் விண்ஞானச் செய்தியை – கணித வடிவத்தை விளக்கிடப் போகிறேன். இச்செய்திதான் வாஸ்து சாஸ்திரத்தின் உயிர் நாடி [அ] மூலாதாரம் என்று சொல்ல வேண்டும். இக்கருத்தைத் தான் வாஸ்து நூல்கள், உலகியல் வாழ்க்கையில் மாந்தரினம் உய்வதற்கும் ஆன்ம நலம் பெற்று சுக வாழ்க்கை வாழ்வதற்கும் ஏற்ற கட்டிடங்கள் கட்டுவதற்கு பல* விதிகளைக் கூறுகின்றன. நான் முன்பு கூறிய தேற்றங்களை உள்ளடக்கிப் பேசும் நிலையே – போக்கே – வாஸ்து நூல்களில் கணக்கியலாகப் பெரிதும் காணப்படுகின்றது. சுருங்கச் சொன்னால் வாஸ்து நூலானது பிரபஞ்ச இயக்க நுட்பங்களை கணக்கிட்டு விரிவுரையாக விளங்கிடும் கணித நூல் என்பது துலக்கமாகும் என்க. அவை மட்டும் போதா. அவற்றை விடுத்து ஆசான் [குரு] வழி தெரிந்து கொள்ள வேண்டிய நுட்பங்களும் நிரம்ப உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக பிரயோகம் என்ற செய்முறை (practice) ப்படுத்திப் பெற்றிட்ட அனுபவம் நிரம்பத் தேவை என்க. பயிற்சி என்பது உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. ஒருவர்க்கு எந்த நிலையிலும் உழைப்பில்லாமல் ஏதும்

---

* "நுண் வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக்கொடுத்த மரபின இவைதாம்"


நிகழ்வதுமில்லை; கிடைப்பதுமில்லை. இதற்கு உருக்கொடுத்து கைப்படவைப்பதே காலம் [அ] காலத்துடிப்பு ஆகும். இக்கணக்கு ஒரு சீர்த்தி, அதாவது ஒருவகை லயக்கணக்கில் (at rhythmical vibrancy) நடப்பதால் காலக்கணக்கென அறிவுறுத்தப்படுகிறது. அதாவது உழைப்பின் வெளிப்பாடு காலக் கோலமெனப் படுகிறது என்க. இந்த வெளிப்பாட்டை தோற்றுவிப்பதும், இயக்குவதும் உணர்வு என்கிறான் மயனது தேற்றமாகியது. எனவே, உழைப்பே மூலம், உணர்வே காலம் என்பான் மயன்.

கடவுளும் உழைக்கும் பொருள் என்பது உறுதியான மயக் கருத்தாகும். இக்கால விஞ்ஞானியர்களும் கடவுளை Energy என்றும், அக்கடவுள் இரண்டு நிலைகளைக் கொண்டவர் என்றும், ஒரு நிலையில் அதாவது அனைத்து ஆற்றல்களும் ஒன்றித்து அசையா நிலை கொண்ட அமைதிப் பொருளை Potential energy என்றும், பிறிதொரு நிலையாகிய செயல் நிலையில் Kinetic Energy என்றும் சொல்வதையும் உற்று நோக்குங்கள். இந்த Kinetic Energyயின் வெளிப்பாடுகள்தான் (Primal but physical manifestations) பஞ்சபூதங்கள் எனப்படுகின்றன. பூதம் என்ற சொல்லுக்கு தோற்றம் என்றே பொருள். எனவே ஒன்றாய் உள்ள அந்த தனிப்பொருள் கொண்டுள்ள ஐந்து ஆற்றல்களை [அவற்றின் வெளிப்பாடுகளை (manifestations) தோற்றங்களை] ஐந்திறம் என்ற சொல்லால், உணர்த்துகிறான். இவை மேலும் ஐந்தைந்தாக பெருக்கமுறுகின்றன என்பது பிறிதொரு நுட்பம். இஃது எல்லைகளைக் கடந்து இலங்கிடும் நிலை ஆகும்.

தெளிந்த நீர் நிறைந்த தடாகத்தில் ஒரு கல்லைச் செங்குத்தாகப் போட்டால் வட்ட வடிவ அலைகள் தோன்றி, அடுக்கடுக்காக விரிந்து செல்வதைக் காணலாம். இப்படிச் செல்வது நம்மால், நம் விருப்பப்படி நிகழ்வதில்லை. இங்ஙனம் நடப்பது ஒரு phenomenon அல்லது அந்த அலைகளின் [திரைகள் என்பது பிறிதொரு சொல்] இயல்பு ஆகும். இதனை நிறுத்தவோ, ஏன் என்று கேட்கவோ, மாற்றி நடை பெறச் செய்யவோ இயலாது என்று தெளிதல் வேண்டும்.


இந்த நிலையில் உள்ள energy எப்படி matter ஆகிறது என்பது அதிசயமன்றோ! அதை விளக்குவது ஐந்திறத்தின் தலையாய நோக்கமாகவுளது. அதாவது விண் எப்படி மண் ஆவது – விண்ணியல் மண்ணியல் ஆவது – எப்படி என்ற விளக்கத்தை படத்தில் காண்க.

விண்ணில் தோன்றும் அலைகள் சதுரங்களாகும்



சதுரவியல் – **Cosmic energy waves**

மண்ணில் தோன்றும் அலைகள் வட்டங்களாகும்



வட்டவியல் – **Earthly (energy) waves**

(**Material waves** ன் அளவியலை உற்றறிந்து, அந்த அளவியலைக் கொண்டு வடிவங்களாக – லயம் மாறாது – லயத்திற்குக் கட்டுப்படுத்தி – ஆன்மவியல் என்று சொல்லப்பட்டு வரும் உளவியலை (Psychical experience) அனுபவிக்கச் செய்திடலை பெரும் நோக்கமாகக் கொண்டது வாஸ்து விஞ்ஞானம் என்க. இதை ருசுப்படுத்தும் நோக்கில் **वास्तु पुरुष: चतुरश्र संस्थ:** என்பது வாஸ்து சூத்திரமாக உறுதி பெற்று விளங்குகிறது.]

இந்தக் கருத்திலும், இந்தக் கருத்தொத்த படத்திலும் பிறிதொரு தொழில் நுட்பம் உளதென்பதை இங்கே குறிப்பிடுகிறேன்.

முன்பு சொன்ன சதுரவியல் என்பது ஓர் அற்புத மூல வடிவம் ஆகும். நான்கு பக்கங்கள் கொண்ட நிலையில் இச்சதுரம் சாயாமல், சரியாமல், நெளியாமல், நெறியாமல் உருப்பெற்ற நிலையை சச்சதுரம் (Perfect square) என்று சொல்வது சிற்பியர் தொழில் வழக்கு. இந்த நிலையை மூலப்பொருளின் இயல்பான – தனக்கே உரிய ஓர் அமைப்பு [அ] அமைதி என்க. இத்தகைய மூல வடிவத்தை ஆங்கிலத்தில் Archetypal (basic/fundamental) form என்று பெயர் சொல்லுவர் அறிஞர்கள். இந்த மூல வடிவமே ஸ்தூல வடிவத்திற்கு கிடைப்படம் (Layout plan) என்பது வாஸ்து விஞ்ஞானக் கருத்துமாகும். கிடைப்படமே ஸ்தூலமெனப்படும் கனபரிமானப் படத்திற்கு [அ] அழகியல் தோற்றத்திற்குக் காரணம் என்பது நடைமுறை கட்டிடக்கலை விதியாகும். இதற்கும் இலக்கணமும் உண்டு தான். இந்த இலக்கணம் சுவட கணக்கியல் நெறியுடையதே. கட்டிடத்தின் நீள, அகல, உயரம் ஆகியனவும், அடக்க சுருக்கங்கள் மற்றும் நீட்சிகள் அனைத்தும் கலைக்கியல் சார்ந்த இலக்கண

வயப்பட்டதே ஆகும். இந்த அடிப்படை இலக்கணங்களைக் கொண்டே இலக்கிய வடிவங்களைச் [இலக்கியத்திலிருந்து இலக்கணம் அல்ல] சிற்பிகள் தோற்றுவிப்பதால், வருணிக்க இயலா இனிய வடிவங்கள் தோன்றியதோடு ஒரு மயக்கத்தையும் - இயற்கையை மீறிய அழகுடையதாய் மிளிர்வதையும் தோற்றுவிக்கிறது என்பது உண்மையே. இதைப் புரிந்து கொள்ளாத - உலகியல் அழகையே ருசித்து வந்தோர் இலக்கணம் வகுத்து விட்டிருப்பதை மேலை நாட்டினர் தமது உளத்தில் வைத்துக் கொண்டு, இந்தியநாடு வந்து போகிறார்கள்; வியந்து போகிறார்கள். இந்த வியப்புக்குக் காரணம் சொல்வாரில்லாது போனதால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறார்கள்! இதே இயல்புடையது தான் தமிழ் நாட்டின் இயல், இசை, நடம் என்ற முத்தமிழும் ஆகிறது. நான்காவது ஐந்தாவது தமிழாகிய சிற்பம் கட்டிடமும் இவ்வகையின என்பதைத் தான் நான் மேலே விளக்கினேன். சுருக்கிச் சொன்னால் ஐந்தமிழும் ஒரே இலக்கண [காலக்கணக்கு ஏறிய இலக்கணம்] வயப்பட்டு விளங்குவதை பல மேடைகளிலும்,நூல்களிலும் விளக்கியுள்ளேன்! இதனை நம்மவர்கள் கூட சரிவரப் புரிந்து சொன்னாததிற்குக் காரணம் Fine arts நம் நாட்டு அனைத்தும் science centric என்பதனால் தான். உலகியல் உயிரினங்கள் எல்லாம் science centric தான். கலையால் பெறும் சுவையை scientific aesthetics என்று சொல்லித் தான் புரிய வைக்க முடியும் என்க.

அடுத்து விண்ணியலையும், மண்ணியலையும் தொடர்வோம். இடையிடையே நான் பேசும் ஒரு புதியவிழிப்புணர்வை ஏற்படுத்துமென்று நம்பித் தான் பேசி வருகிறேன். நிற்க.

வாஸ்து புருஷ மண்டலம்:

மேற் பத்தியில் நான் குறிப்பிட்ட அந்த மூலச்சதுரமும், அதிலிருந்து விரிந்து செல்லும் பெரிய பெரிய சதுரங்களும் வாஸ்து புருஷ மண்டலம் என்ற பெயரைத் தாங்குகின்றன. இது தான் இயற்கைச் சக்தி செய்யும் - மேற் கொள்ளும் - எளிய geometrical form, ஜியோமிதி வடிவம் எனில் மிகையன்று. மூலமும் சதுரம், விரிந்து செல்லும் அலைகளும் சதுரம். இதேமூலம் உலகியல் நிலையில் (in the material world) வட்டம் வட்டமாகச் செல்வதை முன் சென்ற படங்கள் வாயிலாக இப்போது உணரலாம். சதுர அலைகள் விண்ணிலும், வட்ட வட்ட அலைகள் மண்ணிலும் நிகழ்கின்றன என்பது பொருளும் உண்மையுமாகும். பின்னையதைக் கண் கூடாகக்

காணலாம். முன்னையதை விஞ்ஞானக் கண்களால்தான் காண முடியும். ஆனால் இந்த விஞ்ஞான நெறியை மயமதம் போன்ற கலை நூல்களில் எங்கும் காணலாம். முறையாகப் படித்துத் தெளிவுற்ற சிற்பிகள் நன்கறிவர். ஆனால் விளக்கிச் சொல்வதும் புரிந்து கொள்வதும் கடினமே.

ஒரு புள்ளியாகத் தோன்றிய, ஆனால் கண்ணுக்குத் தெரியாத பரமாணு நிலையில் இந்தச் சதுரவியல் ஆகாஸமெனப்படும் ஒளி வெளியில் நிகழ்கிறது. இதற்குக் காரணம் 'வளி'யின் தாக்கம் என்பது நுட்பம். வளி என்பது இயற்கையின் விசைதான் (spiralling force).

இந்த நுட்பம் வழக்காற்றில் உள்ள வாஸ்து சாஸ்திரங்களிலும் உண்டு தான். எனவே தான் விண் அலையில் சதுரநிலையை உற்றுணர்ந்த சிற்ப விஞ்ஞானிகள் இறைவடிவத்தை சதுர வடிவமான கருவறையில் ஸ்தாபிக்கிறார்கள் என்க. சதுரம் நீண்ட சதுரமாகவும் கொள்ளப்படுவதையும் உற்றுப் பார்த்துத் தெளியலாம். பிறகு மேலும் விவரிப்போம்.

இதிலிருந்து கிடைத்திடும் ஓர் அரிய அறிவியல் நுட்பம் உண்டு. மிகச் சிறிய பரமாணு நிலையில் சதுரமே – சதுரவடிவ பிரம்ம பிந்துவே – ஆற்றலே மயமான சதுரம் என்பதையும், அது பொன்னிறமானது என்றும் முன் பத்தியில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தேன். சுருங்கச் சொன்னால் பிரம்மம் என்று பல்லாண்டு காலமாக அனுமானமாகச் சொல்லி வரும் அந்த சக்திமயப் பொருள் பொன்னிறச் சதுரமாக உளது என்பது பொருளாகிறது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால் உண்மையே!!

இந்தச் சதுரம் என்பது அணுவின் [சிற்றவையின்] two dimensional layout plan ஆகும். பிரம்மம் கனப் பொருளாகையால் இதற்கு பிறிதொரு பரிமாணமும் உளது. அதாவது அதன் உயரம் மூன்றாவது அளவாகும். இதனால் வாஸ்து புருஷ மண்டலம் என்பது கிடைப்படம். ஆனால், பருப் பொருளான நிலையில் மூன்று அளவுகள் கொண்ட (tridimensionally a cube) கனசதுரமாகும் என்பது அதிநுட்பப் பொருளாகும். பிறப்பிலேயே பரமாணுக்கள் கனசதுர அணுக்கள் என்பது அறிவியல் நுட்பம். கனபரிமாண அணு "முச்சதுரம்" என்ற சொல்லால் குறிப்பிடுவதைத் திருமந்திரத்தில் காணலாம்.

இதனைப் புரிந்து போற்றிட ஆங்கிலத்தில் The structure of Brahmam exists

in cubical form என்று பல்லாண்டுகளாக மேடைகளில் பேசியும் ஏடுகளில் எழுதியும் வருகிறேன். இக்கருத்தை என்னிடம் பாடமும் பயிற்சியும் பெற்ற அமெரிக்கத் தொழில் நுட்ப வல்லுநர்கள் என்னை வெகுவாகப் பாராட்டுவதைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போகிறேன். அமெரிக்கர்களும் workshops and seminars நடத்தி இந்த நுட்பங்களை விளக்கி அமெரிக்காவில் அவர்தம் வீடு, வாயில்களை வாஸ்து நெறிப்படி செய்து வருகிறார்கள். பிறருக்கும் சொல்லிக் கொடுத்து, சேவை செய்து நற்பயன்களை E-mail மூலம் எனக்குத் தெரிவித்து மட்டில்லா மகிழ்சியடைகிறார்கள். அவர்கள் மூலம் மயநெறி பரவிடுவதைக் கேட்டுப் பிறவிப் பயன் எனக்குக் கிடைத்துவிட்டதாக எண்ணுகிறேன்.

எனவே, விண்ணில் பரவிக் கிடக்கும் விண் அணுக்கள் அனைத்தும் சிறிய பெரிய கனசதுர ஒளிக்கட்டிகள் நிரம்பிய பேரிடம் என்று சொல்லி வருகிறேன். இன்னும் நுணுகிப் பார்த்தால் அணுவும் கனசதுரம் (cosmos at subtle or smallest micro level) அண்டமும் (cosmos at macro level) கனசதுரமே என்பது கிளைத் தேற்றமாவதை உற்றுணர்க. இப்படியும் சொல்லலாம். நமது ஜீவான்மாவின் வடிவம் micro cube என்றும் பேரான்மாவின் வடிவம் macro cube என்று இறுதிக் கருத்தாகிறது எனலாம். இக்கால விஞ்ஞானிகளின் இறுதித் தேற்றம் ஒன்று வெளிவருமானால், இப்படித்தான் இருக்க முடியும்!

இந்த நிகழ்ச்சிகள், அதாவது It is the phenomenon of micro biological being at meta - physical level, turning or metamorphosing into, macro biological being என்று, உறுதிபடச் சொல்லலாம் என்பது நான் கண்டுணர்ந்த அதிநுட்ப அறிவியல் தேற்றம் என்க.

இதன் Corollary போல, அணுவும் cube மற்றும் அண்டமும் cube என்று சொல்லி வந்தேன். ஒரு சிலருக்கே புரிந்தது. மற்றவர்கள் மௌனமாயினர். சிந்திப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இதை வைத்து, अणोरणीयान् महतो महीयान् என்ற வேதக் கருத்துக்கு ஒரு புதிய விளக்கம் கண்டேன். அறிஞர் முன் பல நேரங்களில் படைத்தேன். அதாவது the structure of OM sound or light is a cube. It does have a well defined form, evident from its orderly dynamism, with all the Sun, Moon, Earth, Stars etc., enclosed by the Cosmic Space or Cosmos.

Big, Bang and Spin theory:

இதனை, இத்தருணத்தில், பிரம்ம ரகசியம் என்பது இதுவே என்று சொல்லத் துணிகிறேன். இந்தக் Cubical micro atom தான் தன் உணர்வாக – தானாக வெடித்து, தான் பெற்ற பிள்ளைகள் போல சிறு சிறு அணுச் சதுரங்களாக (fractals in cublical forms) ச் சிதறி இந்த பிரம்மாண்டமே தோன்றியிருக்கிறது என்று சொல்லி வருபவனானேன். அணுவின் இந்தத் தெரித்தலைத்தான் Big Bang என்று சொல்ல வேண்டும். Big Bang என்பதற்கு மயத்தமிழ்ச் சொல்தான் தெரித்தல் (splitting) என்ற சொல் ஆகும்.

What was there before Big Bang என்ற வினாவுக்கு விடையாக இந்தப் பிரம்மபிந்து (cubical subatom) தான் இருந்தது என்று துணிந்து சுறுவேன். இது தான் கோவில் கருவறை அமைப்பும் ஆகும். விண்கருவின் அமைப்பு [அ] படிமம் என்பது ஒரு விஞ்ஞான விளக்கம்.

How Energy turns into matter or material energy ஆகியது என்ற வினாவுக்கான விடையை இதன் மூலம் காண முடிந்தது. தக்க விடை அடுத்துவரும் பத்திகளில் விளக்கமுறுகிறது. [காண்க: ஸ்தபதியின் "What is a temple?" என்ற நூல்.]

இந்த பிரம்மம் என்ற மூலப் பொருளானது இயல்பாக தன்னைத் தானே முயக்கி, முடுக்கி இடமிருந்து வலமாக சுற்றிக் கொள்கிறது என்பது அடுத்த வினாவுக்கு விடை எனலாம். இதனை Spin theory என்று கொள்ளலாம். இப்படித்தான் இன்றைய விஞ்ஞானியர் கொள்கிறார்கள்.

$E=mc^2$ இன் – சூத்திர விளக்கம்:


மலை முகட்டிலிருந்து செங்குத்தாக விழும் நீர் [அருவி] தரையில் விழுந்து பள்ளம் உண்டாகி அந்தப் பள்ளத்தில் நீர்ச்சுழி ஏற்படுவதைக் கண்டிருப்பீர்கள். ஒரு புள்ளித் துளியானது தன்னைத் தானே சுழித்துக் கொண்டு அணு அளவினதான அலையைத் தோற்றுவித்துக் கொண்டு, அடுத்தடுத்து நீர் சேரச் சேர பேரலைகளையும் தோற்றிக் கொண்டு, அலைமயத் தடாகமாக விரிவதை நடைமுறையில் – உலகியலில் – காணலாம்.

கடலும் கடல் அலைகளும் இப்படித்தான் தோன்றியிருக்க வேண்டும் என்றும் இஃது எப்போதும் தொய்வின்றி நிகழ்வதால் "அலைகள் ஓய்வதில்லை" என்ற

விஞ்ஞானக் கூற்றும் ஏற்படலாயிற்று என்று இப்போது கூறலாம். இந்த வட்டத்தின் விட்டத்தை அடிப்படையாக வைத்து ஒரு சதுரம் வரையப்படுமானால் அச்சதுரம் material square எனப்பட்டு அதே சமயத்தில் விண்ணிடத்தின் பரப்பளவில் மாறுபடாது விண்ணியலை மண்ணியலில் இறக்கி வைத்ததற்கு சமமாகும் என்பதை - அதன் படவிளக்கத்தை அடுத்துக் காண்க.

MECHANICS OF SUBTLE ENERGY TURNING INTO GROSS ENERGY

(The turn of subtle into gross)



The Primal manifest form of the primordeal Vastu.
It is squarish and of minutest particle of space.
Tridimensionally it is the structure of OM - Light and OM - Sound

To put it in modern terminology, these energy cubes are building blocks of the universe and infact those are the material forms of the universe as well.

THE SQUARE (8x8) : the arcehtypal manifest wave form of the unmanifest Supreme Being

turns into

THE CIRCLE (9X9) : the gross material form, the area of both remaining the same

மூலத்திற்கும், மூலத்தின் வழித் தோன்றல்களாகிற பல்வகைக் கோலங்களுக்கும் ஒரே கிடைப்படம் (layout plan) என்றும் அறிவியல் ரீதியாகக் கொள்வாராயினர். இதனை அடியில் வரும் இரண்டு படிமங்களையும் உற்றுப் பாருங்கள். மிகப்பெரிய உண்மை புலப்படும் என்று நம்புகிறேன்.

இதற்குமொரு நுட்ப அறிவியல் உளதென்பதை இப்போது சொல்லிட விழைகிறேன். மூலநிலையில் கனசதுரமாக, தானே உருக்கொண்ட (micro abode/ microbode) நுண்பொருள் மூலநிலையில் கனசதுர ஒளிக் கட்டி தான் என்று சொன்னேல்லவா? இது உணர்வுற்றுச் சிதறிய அறிவியல் நிகழ்ச்சியைத் தான் Big Bang என்றேன்.

சிதறுண்ட முதல் நிலையில், அந்த ஒற்றித்த (single micro cell) பரமாணு 64 சிற்றணுக்களாக (fractals) ச் சிதறி ஒரு சதுர அடைப்பில் தன்னை அடக்கிக் கொள்கிறது. ஏன் எப்படி என்று கேட்கக் கூடாது. இந்த நிகழ்வு அதற்கு இயல்பானது. Question பண்ணுவதற்கு கிஞ்சிற்றும் நமக்கு அதிகாரம் இல்லை. இதற்கு விடை natural phenomenon அல்லது தானியல் வடிவு என்பது பொருள் என்று மயத்தமிழில் சொல்லலாம்.

டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி.
வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்
நிறுவனர் மற்றும் இயக்குநர்.

ஐந்திறம் நிறைந்த

அணுவியல், கணக்கியல், அளவியல்
உருவியல், அழகியல்

அணுக்கொள்கை:

நாம் நமது ஊனக்கண்களால் பார்த்தறியக் கூடிய என்னென்ன பொருள்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் அமர்ந்திருக்கும் (seated) அல்லது சூழ்ந்திருக்கும் (enclosed) இடத்திற்கு தமிழில் **ஞாலம்** என்றும் சம்ஸ்கிருதத்தில் **பிரபஞ்சம்** என்றும் சொல்லப்படும். இந்த ஞாலம் என்ற சொல் ஒரு கலைச்சொல். இதேபோல, பிரபஞ்சம் என்ற சொல்லும் ஒரு கலைச்சொல்லே. இதனை மேலும் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனைப் **பேரிடம்** (macro space) **வெட்ட வெளி** (pure space) என்று சொல்லலாம். வெளி, வளி, தீ, நீர், நிலம், ஆகிய ஐம்மூலங்கள் (five elemental substances) சேர்ந்து இலங்குவதால் இதே இடம் பிரபஞ்சம் எனப்படுவதாயிற்று. இதனை **ஒலி வெளி** என்கிறான் சங்க காலத் தமிழ் விஞ்ஞானி மயன். இந்தப் பேரிடத்தைத் தான் சம்ஸ்கிருதத்தில் **மஹத்** (macro space) என்றும், அந்த மஹத் ஆனது தொடக்க நிலையில் ஒரேயொரு நுண் அணுவாக அதாவது சிற்றிடமாக இருந்தமையால் அச்சிற்றிடத்தை **அணு** இடம் (micro space) என்றும், **சிற்றவை** என்றும் சொன்னான் அந்த விஞ்ஞானி.

ஆதியில் இந்தச் சிற்றிடமானது கனசதுர வடிவினதாகவிருந்தது (Energy in cubical form) என்பது ஓர் உச்ச (Supreme) விஞ்ஞானக் கருத்தாகும். இந்தச் சிற்றவைக்கு microbode என்று பெயரிட்டிருக்கிறேன். சிற்றம்பலம் என்றும் பெயருண்டு. மேற்கண்டவாறு கண்டு சொல்லியது முதன் முதலில் தமிழ் விஞ்ஞான மரபு என்று சொன்னால் மிகையாகாது[1]. அதே நேரத்தில் இக்கொள்கையை வேத காலத்திற்குப்பிறகு வந்த ஓர் உபநிஷதமானது [கடோபனிஷத்] "अणोरणीयान् महतो महीयान्" "*அனோரணீயான் மஹதோ மஹீயான்*" என்று சொல்லுகிறது. **இந்தப் பிரபஞ்சம் அணுவுக்கும் அணுவாய் உளது என்பதும் மஹத் என்ற நிலையில்**

1. நுண்வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம் - இளங்கோ.

பெரிதுக்கும் பெரிதாய் உளது என்பதும் வெளிப்படைப் பொருள். அதே நேரத்தில், இதன் உண்மைப் பொருள் யாதெனில், **அணுவில் இருப்பதே அண்டத்திலும் உளது; அண்டத்தில் இருப்பதே பிண்டத்திலும் [அணுவிலும் அனைத்து உயிரினங்களிலும்]** உளது என்பது அரியதொரு **விஞ்ஞான நுட்பம். அதாவது பிறப்பு, வளர்ச்சி மறைதல் ஆகிய மூன்று நிலைகளும் இரண்டுக்கும் ஒன்றே.**

அணுவே அண்டமாக:

இப்படிக் கண்டு சொன்னது எந்த நூல் எனில் **"சில்பவித்யா ரகஸ்யோபநிஷத்"** என்ற சிற்பியர் வசமுள்ள உபநிஷதமாகும். இது Technical upanishad ஆக இருந்தமையால் ஒதுங்கி நின்று விட்டதெனலாம்.[1] இது தெரியா விட்டால் பிரபஞ்ச ரகசியங்கள் தெரிவதற்கில்லை என்று பொருள்படப் பேசுகிறது. அணுவோங்கி அண்டமாகப் பருத்து, விரிந்து, இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது, என்பதுமொரு கருத்து. ஒரு காலத்தில் அவையெல்லாம் ஒடுங்கிடும் என்பது மேலுமொரு நுட்பம். இயல்பில், அணுவும் அண்டமும் ஒத்த குணமுடையன (Properties and characteristics) என்பதும் ஒரு விஞ்ஞான நுட்பம். இந்த அணுவுக்குள் இருப்பது சக்தி (energy) அதாவது ஆற்றல் [அ] திறம் எனப்படுகிறது. இத்தகைய அணுக்களுக்கும் அண்டங்களுக்கும் இடமாக (Source or seat) இருப்பது ஒளிமயவெளி [அ] ஆகாஸம் என்பது பெயரும் மேலுமொரு விஞ்ஞான உண்மையும் ஆகும். இந்த வெளியானது ஒளிர்ந்திடும் [அ] ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் கணக்கற்ற அணுக்கள் நிறைந்த இடம் (luminous space packed with particles of energy) என்று கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கருத்தே **"அண்ட மூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு ஒளி வெளியென"** என்ற தேற்றம் மேற்சொன்ன விஞ்ஞானியின் உச்சக் கண்டுபிடிப்பாக மிளிர்கிறது. சுருங்கச் சொன்னால், ஆகாஸம் என்பது அணுசக்தியின் இருப்பிடம் என்று உறுதியாகிறது. இதனை நமது விஞ்ஞான மரபில் தோன்றிய அடிப்படை அணுக்கொள்கை எனலாம்.

---

[1] இந்த உபநிஷதைத் தந்தவர் மைசூரில், தொல்லியல் துறையில் central archaeological survey of India (Southern circle) வில் தொல்லியல் ஆய்வராக இன்றும் இருக்கும் [28.10.2004] Dr.N.N.Swamy என்ற, சிற்பியர் இனத் தோன்றல் ஆகும்.

அணுவின் இயல்பு:

இந்த அணுவானது மகத்தான ஆற்றலே மயமானதால், நமது சமய மரபில் மகாசக்தி என்றும், பராசக்தி என்றும் (most powerful substance) சொல்லப்படுவதாயிற்று. [பிரபஞ்ச சக்திகளை மனித வடிவத்தில் உயிர்ப் பொருளாக – உடம்பெடுத்த உருவமாகக் காட்டுவது நமது தமிழகக் கலை மரபாகும் என்க] இந்த நிலையில், மகாசக்திக்கு இலக்கியப் பெண் வடிவமும் கொடுக்கப் பட்டிருக்கிறது. கவர்ச்சியே மயமானதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அணு சக்தியானது நமது இதயத்தின் உள்ளும், அதற்குப் புறத்தேயும் இருப்பதையுணர்ந்து **கடவுள்** என்ற பொதுப் பெயர் கொடுக்கப்படுவதாயிற்று. இப்பொருள் "கடந்தும் உள்ளும்" இருப்பதால் அப்பெயர் பெறுவதாயிற்று என்க. இச்சொல் கருத்தாழமுள்ள விஞ்ஞானச் சொல்லே. God, ஆத்மா, என்ற சொல்லைவிட எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய – தனித் தமிழ்ச் சொல்லாக விளங்குவதை உற்றுணர்க.

இந்தச் சிறிய அணு அளவினதான இடத்தைத்தான் **பரமாணு** (micro Space) என்று சிற்பியர்தம் வாஸ்து சாஸ்திரம் செப்புகிறது. இத்தகைய அணுக்கள் மண்டியுள்ள இடமே அண்டமெனப்படுவதாயிற்று. இந்தப் பரமாணு (subtle substance) என்ற சிற்றணு கண்களுக்குப் புலப்படாத நிலையில் இருந்தாலும் கண்களுக்குப் புலப்படும் நிலை எய்திய அணுவை எளிமையாக அணு (material atom) என்றே வாஸ்து சிற்பசாஸ்திரம் கொண்டுளது. வியப்பு யாதெனில், இந்தப் பரமாணு இல்லாத இடமே இல்லை. இஃது எங்கும் நீக்கமற நிறைந்த பொருள் (all pervasive) என்றும் எப்போதும் **இருக்கும் பொருள்** (substance of eternal existence) என்றும் **நிலைத்து நிற்கும் பொருள்** (everlasting substance) **என்றும் முழுமுதற் பொருள்** (Primal Potential matter) **என்றெல்லாம் வாஸ்து சாஸ்திரம் படித்த சிற்பியர் கூறுவது மிகப் பொருத்தமல்லவா? மேலும், ஞாலத்தில் எங்கும் நீக்கமற நிறைந்த பொருள் என்று சொல்லும் போது, ஓர் அறிவியல் உண்மை உளதென்பது – தொனிப்பது – தெரியவரும். இக்கருத்தை பிறகு மேலும் பார்ப்போம்.**

வஸ்துவும் வாஸ்துவும்:

சிற்பியர் என்போர் என்றுமுள நிலைத்த இந்தப் பொருளை – உயிர்ப்பொருள் என்று கண்டு – **வஸ்து** என்ற சொல்லால் இக்கருத்தை உணர்ந்த நிலையில்,

பரம்பொருள், பரவஸ்து என்றும் **வஸ்துப் பிரம்மம்** என்றும் சொல்வாராயினர். உடல் தரித்த ஒவ்வொரு பொருளிலும் உள் நின்று விளங்கும் உயிர் என்றும் இதனைக் கண்டார்கள். **"உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே"** என்று மொழியியலில் சொல்லப்படுவதை நினைவுபடுத்திக் கொண்டு உற்று நோக்குக. **"மெய்யொலி உயிரொலி சிவணுதல் இயல்பே"** என்றான் முன்குறிப்பிட்ட சங்ககால விஞ்ஞானி (8,000 B.C.). இதனைத்தான் **ஆன்மா** என்றும் **ஆத்மா** என்றும் சொல்லுகிறோம். இக்கருத்திற்றான் **பரவஸ்துவானது பரமாத்மா பரம் பொருள்** எனப்பட்டது என்க. மேலும், அந்தப் பரவஸ்துவானது தன்னைத்தானே , தன் உணர்வால் , தன் திறத்தால், தன் முனைப்பால் - உருமாற்றிக் கொண்ட நிலையில் (meta morphosis or chemical change or extended form of Vastu) அப்பொருளை **வாஸ்து** என்ற சொல்லால் சிற்பியர் உணர்த்தினர். இதனைத் **தானியல் வடிவு [சுயம்பு]** என்பான் முன் சொன்ன தமிழ் விஞ்ஞானி. ஆங்கிலத்தில் self manifest form என்று சொல்லலாம். இந்த நிலையில் மேலும் இக்கருத்தை உற்று நோக்கினால் பல விஞ்ஞான விந்தைகள் - நுட்பங்கள் - நமக்குத் தெரியவரும். பரமாத்மா [அ] பரம்பொருள் எனப்படும் இந்தப் பொருள் ஓர் - உயிர்ப்பொருள் என்றும், இந்தப் பொருள்தான் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துளது என்றும், நமக்கு உணர்வாகிடும். அதாவது, அண்ட பிண்டங்கள் எனப்படும் அனைத்துப் பொருள்களும் - அதாவது விண்மீன்களும், கோள்களும் - இந்த விண்வெளியில் தொங்கிக் கொண்டிருக்கின்ற உயிர்ப் பொருள்கள் என்று சொன்னால் யாதொரு தவறுமில்லை யல்லவா? அதுமட்டுமல்ல , இந்த ஆன்மா எனப்படும் உயிர்ப் பொருள் தான் அனைத்துப் பொருள்களிலும் உள்ளிருந்து இயக்கும் நுண்பொருளாக (dynamic and creative element) உளதென முன்பு சொன்னேனல்லவா? ஆம் இஃதொரு உண்மையே. எல்லாம் உடல்தரித்த உயிர்ப்பொருளே. இந்த அடிப்படையில் உடம்புக்குள் உயிரும் இந்த உயிரைச் சுற்றி உடம்பும் இருப்பதாகச் சுருக்கிச் சொல்லலாமல்லவா? இதைக்கண்ட திருமூலர் என்ற விஞ்ஞானியும் - கவிஞனும் ஆன மகான் ஒருவர் **"உடம்புக்குள் பரமன் இருக்கின்றான். எனவே, உடம்பை ஓம்புகின்றேன்"** என்று அழகுபடச் சொன்னார்.

கட்டிடம் ஓர் உயிர்ப்பொருள்:

இதற்குள் வீற்றிருக்கும் ஒரு விஞ்ஞானச் செய்தியை ஏற்கனவே உற்றுணர்ந்த சங்ககாலத் தமிழ் மகன் விந்தைமிகு உயிர்ப் பொருள்களை இந்த நிலஉலகில்

படைக்கலானான். ஞாலம் முழுவதும் உயிர் பரவிக் கிடப்பதைக் கண்ட அந்த விஞ்ஞானி அந்த உயிர்ப் பொருளை நான்கு சுவர்களில் அடக்கி வைத்து, கட்டிப்போட்டு, அவ்விடத்தைக் கட்டிடம் என்று சொல்லி, கட்டிடக் கலைக்கு தனியொரு அதிசய மரபையே பாரத மண்ணில் தோற்றுவித்துவிட்டான். இதனால் வீடு ஓர் உயிர்ப்பொருளாயிற்று. உயிர் அடைபட்டுப் கிடப்பதால் கட்டிடம் ஓர் உயிர்ப் பொருளாயிற்று என்க. வாஸ்துவும் ஒரு வஸ்துவே என்று சொல்லப்படுவதுமாயிற்று.

"प्रासादादीनि वास्तूनि वस्तुत्वात् वस्तु संश्रयात् ।
तान्येव वस्तुरेवेति कथितं वै वस्तुविद्बुधैः ॥" – மயமதம்

"ப்ராசாதாதீனி வாஸ்தூனி வஸ்துத்வாத் வஸ்து சம்ஸ்ரயாத் ।
தான்யேவ வஸ்துரேவேதி கதிதம் வை வஸ்து வித்புதை: ॥"

மேற்சொன்ன கருத்தின் சுருக்கிய விஞ்ஞானத் தேற்றம் இதுவே என்க. மேலும், இங்ஙனம் இந்த அணுவின் இயல்பைத் தெரிந்து, அவை சேர்ந்திடும் நுண்செயல் (dynamics / Chemical change) அறிந்து, அதன் கணக்கறிந்து, அக்கணக்கைக் கொண்டு, அண்ட பிண்டங்களின் பிறப்பியல்புகளையும் உற்றறிந்திடும் ஆற்றல் பெற்றவர்கள் – அதாவது அத்தகையோரை – இயற்கையின் படைப்பியலறிந்த விஞ்ஞானிகள் (astrophysists or creative genius) ஆவர். இவ்வியல்புகளை அறிந்து பல்வகைப் பயன்படு பொருள்களைச் செய்திட்டோர், மற்றும் செய்திடுவோர் அதாவது – கைவினைஞர்களை – அக்காலத்தில் தொழில்நுட்ப வல்லுநர்களாக பாவித்தார்கள்; இன்றுள்ளோரும் இத்தகைய வல்லுநர்கள்தான். சுருங்கச் சொல்லின், இந்த விஞ்ஞானியர்களை (astrophysists) **ஸ்தபதி** என்று சொல்லிப் போற்றினர். வேதமும் *இச்சொல்லைக் கையாளுகிறது.* "स्थपतिः स्थापनार्हः स्यात् वेदविच्छास्त्रपारगः - *ஸ்தபதி: ஸ்தாபனார்ஹஹ ஸ்யாத் வேதவிச்சாஸ்ரபாரக:* ; இன்னொரு இடத்தில் **स्थपतिः सर्वशास्त्रज्ञः वेदविद्** - *ஸ்தபதி: சர்வசாஸ்த்ரஞ: வேதவித்*" என்று அவரது தகுதி பேசப்படுகிறது. பிற, தொழில்நுட்ப வல்லுநர்களைச் சிற்பிகள் என்றே அழைத்தனர். மேலும், இந்த **ஸ்தபதிக்கே விஸ்வகர்மா** என்று பெயர் உரித்தானது என்று மயமதம் கூறுகிறது. "तेषामेव स्थपत्याख्यः विश्वकर्मेति संस्मृतः - *தேஷாமேவ ஸ்தபத்யாக்ய: விஸ்வகர்மேதி சம்ஸ்ம்ருத:*" – [மயமதம் 5வது அத்யாயம் 23வது ஸ்லோகம்]. இதன் பொருள் யாதெனில், " [சிற்பிகளில்] ஸ்தபதி என்பான் விஸ்வகர்மன் என்று அழைக்கப் படுகிறான்" என்பதாகும். அதாவது resource person என்பதாகும்.

மேலும், கண்களுக்குத் தெரியாத இந்தப் பரமாணுவுக்குள் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன அவற்றின் ஆற்றல்கள் யாவை என்ற நுட்பத்தையும்

கண்டறிந்து, அவற்றை எல்லாம் பகுத்தறிந்து, பகுத்தறிவின் உச்ச நிலையை அடைந்த அவர்கள் **விண்ஞானியர்களாக** முற்காலத்தில் போற்றப்பட்டார்கள் என்க. இந்த விண்ஞானத்தைத்தான் **பிரம்ம ரகஸியம்** என்று சொன்னார்கள். வஸ்து புருஷன், வாஸ்து புருஷன் என்ற இரு விஞ்ஞான உண்மைகள் உள. அவற்றின் நுட்பத்தையும், விரிவையும் பிறகு பார்ப்போம், நிற்க.

மேற்சொன்ன, கண்களுக்குப் புலப்படாத பரமாணுவுக்கு இன்றைய விஞ்ஞானம் கொடுத்த ஆங்கிலப் பெயர் (Sub-atom) என்பதாகும். Dot Cell என்பதும் பிறிதொரு பெயர் ஆகும். இதைத்தான் ஏற்கெனவே பரமாணு என்று சொன்னேன். எனவே, கண்களுக்குப் புலப்படாத அப்பரமாணு விந்தைபல செய்திட்ட – விந்தை பல செய்திடும் – ஒரு நுண் பொருள் [அ] ஆற்றலே மயமான அரிய பொருள் என்க. இந்தப் பரமாணு எப்படிப்பட்டது, என்ன அளவினது, என்பதை யோகிகள் அறிவர் என்று வாஸ்து சாஸ்திரம் கூறும். அப்படியானால் அந்த யோகிகள் என்போர் யாவர்?

परमाणुरिति प्रोक्तं योगिनां दृष्टि गोचरम् ॥
परमाणु क्रमात् वृद्धं मानाङ्गुलमितिस्मृतम् ॥

"பரமாணுரிதிப் புரோக்தம் யோகினாம் திருஷ்டி கோசரம்
பரமாணுக்கிரமாத் விருத்தம் மானாங்குல மிதிஸ்மிருதம்"

– மயமதம்

இத்தகைய பரமாணுக்கள் என்ன செய்கின்றன எப்படி நமது கண்களுக்குத் தெரிவதாயின என்ற விண்ஞானச் செய்திகளை வாஸ்து சாஸ்திரம் கணக்காகச் சொல்லுகிறது. இதற்கு ஒரு படிமுறையாக விளங்கும் – சிற்பிகள் ஒழுகிவரும் ஒரு வாய்பாடை இப்போது சொல்லுவேன். இந்த வாய்பாடை வாஸ்து சாஸ்திரத்தை மொழி பெயர்ப்புச் செய்த மொழி ஆசிரியர்கள் புரிந்து கொள்ளாமல் ஒதுக்கி வைத்து விட்டனர். ஒரு சிலர் எள்ளி நகையாடினர். எள்ளி நகையாடினோர் யார் யார் என்று சொல்லுவேனானால் ஆச்சரியப்படுவீர்கள். இக்காலப் பண்டிதர்கள் – சம்ஸ்கிருதப் பண்டிதர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் ஆவர் என்று சொன்னால் கோபித்துக் கொள்ளாதீர்கள். இது தான் உண்மை. ஆங்கிலம் படித்துவிட்டதால் ஆங்கில அறிவியல் நூல்களைப் புரிந்து கொள்ள முடியாதல்லவா? தமிழில் உள்ள மருத்துவ நூல்களைப் படித்து விளக்கம் சொல்ல இன்றும் முடியாதிருக்கிறதே! பண்டிதப் பெருமக்களுக்கு இலக்கியம் தெரிந்து அறிவியல் தெரியாது போனதால் இக்கலையியல் ஒதுக்கப்பட்டு இன்றும் இதே நிலையிலேயே உளது. எனவே, ஐந்து நுண்கலைகளில் (five fine arts) சிற்பக்கலையும், கட்டடக் கலையும் பிற்படுத்தப் பட்டுவிட்டதின் காரணம் இதுவே. தமிழ் மரபில் **இயல், இசை, நடம், சிற்பம்,**

கட்டிடம் ஆகிய ஐங்கலைகளுக்கு (five fold fine art) அடிப்படையானது ஓர் அதிசய அபூர்வ விஞ்ஞானம் – விஞ்ஞான நிகழ்ச்சி, என்பது மறைந்து போய் – மறந்து போய் – மதச்சார்புடையதாகக் கருதப்பட்டு, பின்னடைந்து போயிற்று. முழுக்க முழுக்க வாஸ்து சாஸ்திரம் அபூர்வ விஞ்ஞானக் கோட்பாடுகள் நிரம்பிய விண்ணியல் மற்றும் மண்ணியல் நூல் என்பது இன்றளவும் தெரியாது கிடக்கிறது. எனவே பண்டிதர்கள் (non technical language pandits) சொல் வளமும் செல்வாக்கும் பெற்ற நிலையில் பண்டிதர் சொல்லுவதையே வரலாற்றுக் கால, மற்றும் அண்மைக்காலப் பொது மக்கள் ஏற்போராக இருந்து விட்டதால் இந்த அரிய விண்ஞானம் மறந்தும், மறைந்தும் போனதோடு, புதைந்தும் போய்விட்டது.

நிலை இப்படி என்றாலும், நமது பண்டைத் தமிழ் மன்னர்கள் நன்றாகவே வாஸ்துத் தொடர்புடைய அறிவியல் தெரிந்திருந்தார்கள் என்ற காரணத்தினால் அம்மன்னர்கள் ஐங்கலைகளைத் துய்த்து வளர்த்துக் காப்பாற்றினார்கள் என்பது மிகையன்று. தமிழ் மன்னர்கள் எத்துணை மேதாவிகள்!!! அதே நேரத்தில், தமிழ் நூல்களும், சமஸ்கிருத நூல்களும், அப்படிப்பட்ட புரியா நிலையிலேயே, அந்த மரபு நூல்கள் கூறும் விண்ஞானச் செய்திகளை ஓரளவு பாதுகாத்து விட்டன என்று இப்போது தெரியவருகிறது. இன்றைய குழப்ப நிலையில் இந்நூல்களில் பல புதையுண்டு உலக நாடுகளின் இருட்டறைகளில் – நூலகங்களில் – கிடக்கின்றன எனலாம். நம் அரசுகள் தேடிக் கொடுக்குமா? மீன்கள் கவ்விக் கொடுத்தவற்றை மனித மீன்கள் விழுங்கி விட்டனவோ? பழைய நூல்களின் பட்டியலை பிற்சேர்க்கையில் காண்க.

எண்ணும், எழுத்தும்:

அய்யன் திருவள்ளுவர் இந்த விஞ்ஞானத்தைத் தெரிந்து வைத்திருந்தார் என்று கூறலாம். இதற்கான ஒரு குறளை மட்டும் இங்கே குறிப்பிடல் தகுமென நினைக்கிறேன். **“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு”** என்பது அக்குறளாகும். இதற்கு என்ன பொருள்? நினைத்துப் பாருங்கள். இதே கருத்தை தமிழ் மூதாட்டி ஔவையாரும் **“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்”** என்றார். எண்ணை முதற்சொல்லி, பின்னர் எழுத்தைச் சொல்வானேன்? இந்த ஒரு குறளானது வள்ளுவனை விண்ஞானியாக உயர்த்தி விட்டது என்பேன். இந்த விண்ஞானத்தைப் பிறகே மேலும் சொல்லுவேன்.

அணு வாய்பாடு:

இந்த நிலையில், வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அரியதொரு – அதிசயமான – அந்த வாய்பாடைக் கீழே தருகிறேன். இந்த வாய்பாடுக்கு நிகரான தொல்பழம் விஞ்ஞானச் செய்தியையும் அதற்குரிய வாய்பாடையும் இங்கே தருகிறேன். தமிழில் சொல்லப்படும் – சூத்திரமாகக் கிடைத்திட்ட – வாய்பாடானது 10,000 ஆண்டுகளுக்கு முன்பே, முதல் சங்க காலத்தில், முன்னர் குறிப்பிட்ட அந்தத் தமிழ் மகனால் சொல்லப்பட்டு விட்டது. இஃது அவன் பெயர் தாங்கிய நிலையில் மயத்தமிழ் எனப்படுவதாயிற்று. முதல் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேறி விட்டது என்பது வரலாறு; – கட்டுக் கதையன்று. இச்செய்தியைச் சொல்லியதோடு விட்டு விடாமல் அந்த வாய்பாடு எங்கெங்கே எப்படி எப்படி முற்காலத்திலேயே பயன்படுத்தப்பட்டு ஓர் அரிய பெரிய விஞ்ஞானக் கலாச்சாரம் தமிழ் மாநிலத்தில் தோன்றியதோடு மட்டுமல்லாது நமது பாரத நாட்டில் எல்லாவிடங்களிலும் பரவி விட்டது என்பதையும், மேலும் அதற்கு உலகளாவிய நிலையும், அப்போதே கிடைத்துவிட்டது என்பதையும் அடுத்தடுத்துச் சொல்லுவேன்; உற்றுநோக்கிப் பெருமை கொள்ளுங்கள். தமிழ் மொழி ஒரு செம்மொழியானது பழைய கதை என்றால் மிகையாகுமா? நெஞ்சாரப் பேசுங்கள்.

சம்ஸ்கிருதத்தில் இருந்துவரும் வாய்பாடை முதலில் சொல்லி அதற்கு அடுத்து, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய – செவ்வியல் தமிழில் சொல்லிய, வாய்பாடையும் தருவேன். இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள் உண்மை அறிவதோடு உவகையும் கொள்வீர்கள்.

இத்தகைய வாய்பாடை இன்றைய விஞ்ஞானக் காலத்தில் வாழும் நீங்கள் எங்கும் காணமுடியாது என்று சொன்னாலும், இன்று கணிப்பொறியில் இந்தக் கணக்கியல் கையாளப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். நேற்று வந்தது கணிப்பொறி! ஆனால், அதற்குரிய எண்ணியலை [0,1] , [0,8] தமிழ்மரபு கண்டு சொன்னது பத்தாயிரம் ஆண்டுக்கு முன்பு என்று நான் சொல்லும் பொழுது நிச்சயமாக அதிர்ச்சியும் வியப்பும் கொள்வீர்கள். தமிழ்க் கலாச்சாரம் என்றும், பாரதீய கலாச்சாரம் என்றும், சொல்லப்படும் இந்தியக் கலாச்சாரம் மிகத் தொன்மையானது; அளப்பரியது; அதிநுட்பமானது, எங்கும் இல்லாதது, அதிசயமானது, அற்புதமானது என்றெல்லாம் போற்றப்படுவதின் உண்மையை, இதைக் கண்டுணரவல்லவா உலகக் கலைஞர்கள் இந்திய மண்ணில் குவிகிறார்கள். இது தான் நமது hertiage ஆகிறது. இதற்கு

உரியோரைக் கண்டு கொள்ளவே வருகிறார்கள். எவரும் காட்டிடவில்லை. இப்போது நிலைமாறி வருகிறது. இப்போது உணர்வீர்கள் என்று சொல்லலாம். இதற்கு அடிப்படையான கணக்கியல் பூஜ்ஜியத்தில் [0] தொடங்கி [8] எட்டோடு முடிவடைகிறது. இதற்கு இயற்கையின் எட்டியல் என்றும் எண்ணியல் என்றும் முன் சொன்ன விஞ்ஞானி பேசுகிறான். இதை உற்றுணர முடியுமானால் மனித சரீரம் ஒரு கணிப்பொறி போல் (human computer) செயல்படுவது தெரியவரும். இந்த human computerக்குச் சிருஷ்டிக்கும் உணர்வு உண்டு; - ஆற்றல் உண்டு; ஆனால் man made computerக்கு அறிவு மட்டுமேயுண்டு என்று இப்போது புரிந்திடும் அல்லவா?

இந்த Zero-வைக் கண்டு சொன்னதே தமிழ் மரபில்தான், மயத்தமிழ்தான். Zero-வுக்கு சுழி, சுழிப்பு என்று பெயர். ஓம் ஒளியும், ஓம் ஒலியும் ஆகிய இரண்டு வகை ஓம்கள் தொடக்கத்தில் அமைதி நிலையில் இருந்தன. இதற்கு மூலநிலை [அ] மூல ஒளி என்று பெயர். இந்த மூலம் உணர்வுற்று எழுச்சி கொள் நிலையில் - முதல் தோற்ற நிலையில் - நீர்ச் சுழற்சிபோல் சுழித்த பின்னரே ஒளி, ஒலி அலைகள் முகிழ்ந்து இறுதியில் ஒளி ஒலிப் பொருள்களாக வடிவம் கொண்டன என்ற அதிநுட்ப விஞ்ஞானம் இதிலே உளதென்றால் என்ன நினைப்பீர்கள்? இதைப்பற்றிய விரிவை பிறகு சொல்வேன். சம்ஸ்கிருதத்தில் உள்ள வாய்பாடை முதலில் கவனிப்போமாக (let us proceed from known to unknown - ie., from gross to subtle). (तमसोमा ज्योतिगमिय)

परमाणुक्रमात् वृद्धं मानाङ्गुलमितिस्मृतम्
परमाणुरष्टाभिः रथरेणुरुदाहृतः ॥
रथरेणुश्च वालाग्रं लिक्षायूका यवास्तथा ।
क्रमशोऽष्टगुणैः प्रोक्तः यवाष्टगुणितोऽङ्गुलम् ॥
अङ्गुलन्तु भवेन्मात्र वितस्तिः द्वादशाङ्गुलम् ।
तद्वयं हस्तमुद्दिष्टं तत् किष्किति मतंवरैः ॥

"பரமாணுகிரமாத் வ்ருத்தம் மானாங்குல மிதிஸ்மிருதம் ।
பரமாணுரஷ்டாபி : ரதரேணுருதாஹ்ருத : ॥
ரதரேணுஸ்ச வாலாக்ரம் லிக்ஷாயூகா யவாஸ்ததா ।
கிரமஷோ அஷ்டகுனை : ப்ரோக்த : யவாஷ்டகுணிதோங்குலம் ॥
அங்குலந்து பவேன் மாத்ரம் விதஸ்தி : துவாதசாங்குலம் ।
தத்வயம் ஹஸ்தமுத்திஷ்டம் தத் கிஷ்க்விதி மதம்வரை : ॥"

- மயமதம் ஐந்தாவது அத்தியாயம்

இதன் பொருள் யாதெனில், பரமாணுவின் வளர்ச்சியே அளவிடும் மானாங் குலம் என்ற (fundamental unit measure) ஓர் அலகு ஆயிற்று (visible or measureable unit) என்பதாகும். எப்படியெனில், பரமாணு எட்டுக் கொண்டது [அதாவது கண்களுக்குப் புலப்படா 8 அணுக்கள் சேர்ந்த நிலையில் அப்பொருள்]

தேர்த்துகள் அளவினதாகும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. இதற்குப் பிறகு அளவிடத்தக்க (measurable) ஒரு படிமுறையையும் தருகிறது. தேர்த்துகள், மயிர் நுனி, ஈர், பேன், யவை ஆகிய ஒவ்வொன்றின் எட்டு மடங்காக அதாவது தன் பெருக்கமாக (square or multiples) தானாகவே வளர்ந்து நல்லதொரு தெரிபொருளாகிறது என்பது அர்த்தம். இதுவே அணுவளர் அறிவியல் நெறியாகும் என்க. யவை என்பது நெல் அளவை நிகர்த்த ஒரு தானியத்தின் பெயர் ஆகும். இதனை பார்லி அரிசி என்போர் சிற்பியர். ஒரு நெல் என்பது யாவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட யவை [நெல்] எட்டுக் கொண்டது விரல் [அ] அங்குலம் எனப்படும். அங்குல அளவானது, மாத்திரை அளவு என்றும் சொல்லப்படும். மா + திரை என்பது micro wave - நுண்ணிய அலை - நுண்ணிய அளவு கொண்ட விரிபொருள் என்று பொருள்படும். பிரபஞ்சமே நுண் அலைகளின் ஆதிக்கத்திற்றானே உளது! இதுதான் கடவுட் பொருள், கடவுட் சக்தி என்றெல்லாம் பிற்காலத்தில் வழக்காற்றில் வருவதாயிற்று.

மேலும் 12 அங்குலம் கொண்ட நீட்டல் அளவு விதஸ்தி [அரைமுழம்] என்றும் விதஸ்தியின் இருமடங்கு ஹஸ்தம் என்றும் சொல்லப்படும். இந்த ஹஸ்தத்திற்கு [24 அங்குலம்] கிஷ்கு முழம் என்றும் பெயராகும். இஃதொரு பொது அளவாகும் (standard measure). "सर्वेषामपि वास्तूनां किष्कुरेवाथवास्मृतः॥" "*சர்வேஷாமபி வாஸ்தூனாம் கிஷ்குரேவாதவாஸ்மிருத:*". மேலும் பல முழ [முழு] அலகுகள் (units) உண்டென்றறிக. அதாவது, 25 அங்குலம் கொண்ட முழம் பிராஜாபத்யம் என்று சொல்லப்படும். இதேபோல் நீண்ட பல முழக் கோல்களும் உண்டு. அவை முறையே 25, 26, 27, 28, 29, 30, 31 அங்குலம் அளவினதாகும். இவற்றுக்கு தனுர் முஷ்டி, தனுர் கிரஹம், பிராச்சியம்,வைதேகம், வைபுல்யம், பிரகீர்ணம் என்று மொத்தத்தில் கிஷ்கு முதல் பிரகீர்ணம் வரை [24 முதல் 31 அங்குலம் வரை] 8 வகையான முழக்கோல்கள் உண்டு. இவற்றை எங்கெங்கே எதுஎதற்காக உபயோகித்தல் வேண்டும் என்ற விவரங்கள் வாஸ்து நூல்களிலும், தொழில் மரபிலும் இன்றும் உண்டு.

வாஸ்து சாஸ்திரம் காட்டும் காலத்தால் - கால விசையால் - நீட்சி பெற்ற (Wave length) பொது வாய்பாடு [மானசார வாஸ்து நூல்]

8 பரமாணு	8^1 - 1 தேர்த்துகள் அளவாகும் [0,1]
8 தேர்த்துகள்	8^2 - 1 மயிர் நுனி அளவாகும்
8 நுனியளவு	8^3 - 1 ஒரு ஈர் அளவாகும்
8 ஈர் அளவு	8^4 - 1 ஒரு பேன் அளவாகும்
8 பேன் அளவு	8^5 - 1 ஒரு யவை அளவாகும் [இது யவாங்குலம் எனப்படும்.][0, 8]
8 யவை அளவு	- ஒரு அங்குலம் எனப்படும் [0, 8^5]

அங்குலீ என்றால் விரல் என்பது பொருள், நடுவயதான ஒரு மனிதனின் நடுவிரல் நடுப் பகுதியின் நீள அளவு அங்குலம் என்று சாஸ்திரம் கூறுகிறது. இப்படிப் பட்ட ஒரு அங்குலம் என்பது $1^3/_8$ ஆங்கில அங்குலத்திற்கு ஈடாகும் என நடைமுறையில் (at technological level) கொள்ளப் பட்டிருக்கிறது. எனவே முழம் என்பது ஆங்கில அங்குலப்படி 33 அங்குலம் ஆகும். அதாவது 1 முழம் = 2'.9" நீளமாகும். மானசாரமும் இங்ஙனமே அளவு கூறும் அணுவியலைக் கொண்டுளது என்க. மேலும், ½ முழம் (1'.4½") என்றும் ¼ முழம் (8¼") என்றும் நடைமுறைத் தொழில் மரபில் உளது. இந்த ¼ முழம் ஆகிய 6 விரல் நீளத்தைத் தாளம் என்றும் கொண்ட ஒரு முழு மனிதனின் உயரம் 9 தாளம் (9 x 8¼" = 7'.¼") எனப்படுகிறது. இதுதான் இயற்கை கொடுத்தருளிய மனிதனின் உயரம் (normal height) என்று கொண்டிடல் சரியாகும். இதுதான் Universal human measure in terms of height என்று அறிதல் வேண்டும். இந்த அளவில் முற்கால மனிதர் இருந்தனர் என்று இன்றைய ஆய்வர்கள் சொல்லவில்லையா? இன்று கூட ஒரு சிலர் இந்த உயர முள்ளோர் இருக்கிறார்களே!

மேற்சொன்ன பரமாணுவானது இயற்கையில் தானாகவே வளர்ச்சியுறும் அளவுகளைக் குறிப்பிடுவதாகும். நாம், வளர்ச்சியின் பருமனை (growth of space) புரிந்து கொள்ள நூலாசிரியன், தேர்த்துகள், பேன், யவை என்ற கண்களுக்குத் தெரியும் பொருள்களைக் கொண்டு அளவை யூகிக்கச் செய்துள்ளான். அவ்வளவு தான். இதற்கும் நுட்பமான அளவுகளைக் காலக் கணக்கில் சொல்லுவேன்; Tridimensional கன அளவுகளையும் சொல்லுவேன் பிறகு பார்ப்போம்.

பரமாணு என்பது இயற்கையில் உணர்வே மயமான மூலப்பொருள் – உயிர்ப்பொருள் – என்பதை மனதிலிறுத்திக் கொள்க. அப்போது தான் இந்தக் கணக்கியல் புரியும் அல்லது நம்ப முடியும் என்று சொல்லிட விரும்புகிறேன். இந்த வாய்பாடை காஷ்மீர் முதல் குமரி வரையும், கூர்ஜரம் முதல் வங்காளம் வரையும் பரந்துள்ள பாரத நாட்டில் வதியும் அனைத்துச் சிற்பிகளும் கையாளும் பொதுக் கணக்கியல் [இதுவே] என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

மீண்டும் பின்னோக்கிச் சென்று பிறகு முன்னோக்கிச் செல்லுவோம். மூலம் என்ற நுண்பொருள் உணர்வுற்ற நிலையில் துடிப்பலைகள் (energetic impulses) வெளிப்படுகின்றன. இந்தத் துடிப்பலைகளுக்குக் கால மாத்திரை [கால + மா + திரை] அதாவது, கால அளவு என்றும், இந்நிகழ்ச்சி ஒரு வகைச் சீலத்தில் இயற்கையாகவே

நிகழ்வதால் இந்தத் துடிக்கணக்கானது சீலக் கணக்கு, சீலக் காலம் என்றும் பெயர் பெறுவதாயிற்று. இதனை ஆங்கிலத்தில் ரிதம் rhythm என்று சொல்லி வருகிறோம். இஃதொரு பிரபஞ்சத்தின் அசைவுறும் நெறி (force or movement of cosmic order) என்க.

திரை என்றால் அலை அல்லவா? இக்காலத்தில் இதனை pulse என்றும் impulse என்றும் vibration என்றும் சொல்லுகிறோம், அவ்வளவுதான். இந்தக் காலக்கணக்கை தமிழ்க் கவிதையிலும் [கவிதை இயற்றுவதிலும்] ஆடலிலும் பாடலிலும் கையாளுகிறோம். இந்தக் காலக் கணக்கு இந்த மூன்று கலைகளுக்கும் ஆதார இயக்கமாக – இலக்கணமாக இருப்பதால் – வடிவமும் வடிவழகும் தருவதால் – முத்தமிழ் என்று கொத்தாகத் தமிழர் கலைமரபு கண்டு சொல்லுவதாயிற்று. முத்தமிழ் என்றால் மூன்று இயல்பான வடிவங்கள் அல்லது இயல்பான தோற்றங்கள் (forms) அல்லது அகக் காட்சிகள் (inner picture, inner vision) என்றுதான் பொருள். இந்த இயல்பை [அ] தூய்மையான பிறப்பை வைத்துத்தான் தமிழைக் கன்னித்தமிழ் என்று சொல்லி வருகிறோம். இந்தக் கன்னித்தமிழ் இதய பூர்வமானது மட்டுமல்ல, வெளியிலிருந்து உள்ளே வந்து அகத்தைத் தொடும் சிறப்பியல்பும் உடையது என்பதும் நமது அனுபவம் தானே! தொடக்கத்தில் இத்தகைய இலக்கணம் [அ] விஞ்ஞான அனுபவம் (Scientific experience) தமிழில் தோன்றி தமிழ் வழி பிறந்திட்ட பிற மொழிகளுக்கும் பரவிடலாயிற்று என்பது கண்கூடு. ஆனால் முத்தமிழ் என்ற சொல் சங்க காலக் கலைச் சொல் என்பதை உற்றுணர்க. சரிதானே? இறுதியில் உள்ளத்திற்கு அனுபவம் ஆவதே அமுது என்றும் இனிமை என்றும் விரிவுரை சொல்லப்படுவதாயிற்று. இந்த அனுபவம்தான் ஆன்மிக அனுபவம் எனப்படுகிறது. இந்த அனுபவம் தான் ஆனந்தம் எனப்படுகிறது. இந்த ஆன்மிக அனுபவம் என்பது இயல், இசை, நடம் என்ற முத்தமிழுக்கும் உண்டு. எனவே மூன்றையும் Trifold spiritual art form என்று சொல்லி வருகிறோம். அசைக்க முடியா உண்மை இஃதென்க. Non technical people இதுவரை சொல்லிவந்த அனுமானக் கூற்றுக்களை சற்றே ஒதுக்கி வையுங்கள்; அப்போது எளிதில் புரிந்திடும்.

இந்த மூன்றையும் அனுபவிக்கக் கொடுத்தவரை பெரிய ஆன்மிகவாதி என்று சொல்வதில் தவறேதுமில்லை, மிகையேதுமில்லை என்பேன். இதில் ஒன்றை அனுபவிக்கத் தெரிந்தாலே போதும் அந்நிலையில் அனுபவமாவதே ஆன்மானுபவம், சுவானுபவம் ஆகிவிடும். இதனைக் கைவழி கொண்டு வருபவனே – வடிவமாக்கிடு வோனே சிற்பி என்பான்; இந்த நிலையே சிற்பியின் கைவண்ணம் எனப்படும். இதனை

சிற்பத்தின் முக மலர்ச்சியில் காணலாம். இதை வைத்து **"स्वात्मारामं मुदित वदनं"** *"ஸ்வாத்மா ராமம் முதித வதனம்"* என்று தக்ஷிணாமூர்த்தத்தின் உருவ வர்ணனையில் வைத்துச் சொன்னார் சங்கரர்.

இந்தக் கணக்கியல் இந்த முத்தமிழோடு நின்றுவிடவில்லை. இந்தக் கணக்கியலானது சிற்பம் மற்றும் கட்டிடம் ஆகிய கலைகளிலும் ஆட்சி புரிகின்றது. இஃது ஓர் உச்ச விஞ்ஞானம் என்பதை முன்னரே தொட்டுச் சொன்ன சங்ககாலத் தமிழ் மகன் - தமிழ் விஞ்ஞானி - **"கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி"** **"Architecture is the supreme achievement of Mathematics"** என்று விதி வகுத்துக் கொடுத்து சிற்பத்தமிழ் என்றும் கட்டிடத் தமிழ் என்றும் மேலும் இரண்டு தமிழைத்தந்து ஒட்டுமொத்தமாக (five fold Tamil) ஐந்தமிழ் என்று அறுதியிட்டுக் கூறுபவனானான். காலமும் இடமும் ஒன்றே - Time and Space are equal - என்ற கருத்து இங்கே செயல்பட்டிருப்பது புரிகிறதா? இல்லையேல், அடுத்துவரும் பக்கங்களில் காண்க.

நம் எல்லோர்க்கும் நன்கு தெரிந்த முத்தமிழை Tri fold aural form என்றும், சிற்பம், கட்டிடம் ஆகிய இரட்டைத் தமிழை Two fold visual form என்றும், இந்த ஐந்தமிழ் தொகுப்பைத்தான் இன்று spiritual arts என்றும் five fold art என்றும், சொல்லி வருகிறோம் என்க. சிற்பியர் மரபிலே இவற்றுக்கு Five fold Veda என்றும் ஒரு பெயர் உளது. இந்த ஐங்கலைகள் - ஐந்து வேதங்கள் - ஒவ்வொன்றும் நமக்குக் கூட்டுவிப்பது ஆன்ம பலமே. எனவே, இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய ஐந்தும், ஐந்து வேதங்களாயின. இக்கருத்து நம் நாட்டுச் சிற்பிகளிடமிருந்தே பரவின என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த ஐந்தமிழ் எங்கே யாரால் பெறப்பட்டது எனில், இந்தப் பிரபஞ்ச மூலப் பொருளிலிருந்து கிளர்ந்தன - பிறந்தன - பெறப்பட்டன - என்று சொல்வதே சாலப் பொருந்தும். இதைத்தான் **தைவிகம்** என்றனர் பிற்காலப் பெரியோர். எனவே, மூலப் பொருளானது தானே உணர்வுற்றுத் துடிப்பதால், அத்துடிப்பு காலம் எனப்பட்டு அந்தக் காலத் துடிப்புகளை அந்த மூலகாலமே [உணர்வே] நெறிப்படுத்தி சீலம் எனச் சொல்லி, அந்தச் சீலமே கோலம் என்ற உருவம் தரித்து, இங்ஙனம் தோன்றிய கோலங்கள் மிளிரும் நிலையில் இந்தப் பிரபஞ்சம் ஞாலம் (Cosmos) எனப்பட்டு ஓர் **ஐந்தியல் விஞ்ஞானம்** இந்தப் பிரபஞ்சத்தில் நிகழ்வதை உற்றறிதல் வேண்டும். இந்த scientific phenomenonஐ வேறு எந்த ஒரு மரபும் இப்படிச் சொல்லவில்லை

என்றும் அறிதல் வேண்டும். நோபல் பரிசுக்குரிய கண்டுபிடிபன்றோ! எனக்கல்ல; அந்தச் சங்க காலச் சிற்பச்சித்தன் மாமுனி மயனுக்கு! இவன்தான் நாம் இன்று வணங்கும் கடவுளைப் படைத்தவன்! இதைச் சொல்லும் இந்த மயன் மகனுக்கு என்ன கொடுப்பீர்கள்? [இவன் பெயரில் மாமல்லபுரத்தில் ஒரு விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்டிவருகிறேன் முடிந்தால் இப்பணிக்கு உதவுங்கள்]

மூலத்துடிப்பை மீண்டும் உணர்வில் ஏற்றி அதன் கணக்கியலை உற்று நோக்குவோம்.

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 பரமாணுத் துடிப்பு	**– 1 தேர்த்துகள் காலம்**
8 தேர்த்துகள் காலம்	**– 1 இம்மிக் காலம்**
8 இம்மிக் காலம்	**– 1 எள்ளுக் காலம்**
8 எள்ளுக் காலம்	**– 1 நெல்லுக் காலம்**
8 நெல்லுக் காலம்	**– 1 விரல் காலம்**

எளிமையான – நமக்குத் தெரிந்த பொருளை வைத்து அரியதொரு விஞ்ஞானக் கணக்கைச் சொல்லிய பண்டை முறையைக் கண்டு துய்க்க. இந்தத் துடியையும் நமக்குப் புலப்படு நிகழ்ச்சியாக நமது தமிழ் மாமுனி கூறுவதைக் காணுங்கள்.

துடிப்பின் பிறப்பு அதன் அளவுயாதென அத்தமிழ் மகன் சொல்லுவதைக் கேளுங்கள். **"கண்ணிமைக் கைந்நொடி கால மாத்திரையே"**. வேறு என்னென்ன துடிப்புறுகிறது என்பதைக் கூறுமிடத்து – **விண்ணும், மண்ணும், எண்ணும், பண்ணும், கண்ணும்** – அதாவது இவ்வைந்தும் இமைக்கின்றன – துடிக்கும் இயல்பின என்று கூறுவதையும் உற்றுணர்க. மேலே, எண் என்பது எண்ணம் [நினைப்பு, உள்ளும் இயல்புடைய உள்ளம்] பண் என்பது இசை [ஒலி] – ஆகிய ஐந்தும் துடிக்கும் நுண் உயிரிகள் [அமைப்புகள்] என்றுணர்க.

"கண்ணிமை விண்ணிமை மண்ணிமை எண்ணிமை
பண்ணிமை ஐந்துங் காலக் கூறே" – **ஐந்திறம்**

காலம் என்பதை time என்று சொன்னால் உடனே புரியாது. இது physical time அல்லது relative time அல்ல. இது absolute time என்றால் ஓரளவு புரியும். ஒவ்வொரு உயிர்க்கும் உரிய காலமே absolute time or independent time என்று சொல்லலாம். இதனை Betrand Russel என்ற கணித மேதை 'Periodicity' என்று உணர்த்துகிறார். இது புரிவது கஷ்டமே. திரும்பத்திரும்பச் சிந்தியுங்கள், புரிந்துவிடும். இந்த நிலையில் Periodicity is the interval between two subtle or time units or time beats என்று சொன்னால் எல்லோர்க்கும் புரியுமன்றோ! (growth takes place during the interval).

இந்தக் காலக் கணக்கு இக்காலத்தில் எல்லா இந்திய மரபுக் கலைகளிலும் கையாளப்படினும், இதன் சிறப்பைத் தமிழ் மரபிற்றான் காண முடியும். தமிழ் மரபுக்கே உரித்தானது என்றும் துணிந்துக் கூறலாம். [காண்க: பிற்சேர்க்கையில் கட்டிடக் கலைஞுனும் விஞ்ஞானியுமாகிற Robert Lawlor என்பாரின் ஆய்வின் முடிவு].

காலமும், தாளமும்:

இந்தக் காலக் கணக்கை உயர் விஞ்ஞான நிலையில் **காலம்** என்றாலும், இதனை நடைமுறையில் பிறிதொரு சொல்லால் – அதாவது நடைமுறைக் கலைத் துறையில் **தாளம்** என்று சொல்லுவோராயினோம். இதனை நாம் வலிந்து - உழைப்பால் செய்கிறோம். எனவே ஊழிக்காலம் என்பதே absolute time என்றாகிறது. இதனையே தொழில்நுட்பத் துறையில் (at technological level) **லயம்** என்ற சொல்லாலும் உணர்த்துகிறோம். **லயமும் தாளமும்** ஒரு செயலின் இரு பெயர்கள் என்று கொள்ளுதல் மரபு. இதனால்தான் மிருதங்கம் போன்ற கருவிகள் **தாளவாத்யம், லயவாத்யம்** என்று சொல்லப் படுவதாயின என்க. மேற்சொன்ன **இந்தக் கால இடை நேரத்தில்தான் இடமும் (Space) தோன்றி**, இடவளர்ச்சியும் இடத்தாலான உருவளர்ச்சியும் ஏற்படுகிறது என்றால் புரிகிறதா? இந்த வளர்ச்சியை இயலிலும் இசையிலும் நன்கு காணலாம் அல்லவா? இங்கே இதற்கு Speech rhythm என்று பெயர். தமிழில் சந்தம் என்று பெயர். "சந்தம் நிறைந்த தமிழ்" என்று அடிக்கடி சொல்லி நாம் பெருமைப்பட்டு வருவதை உற்றுணர்க. அந்த interval-ல்லிலும் sound pulses அல்லது waves நிகழுகிறதல்லவா? இதுதான் 'Spatial growth of sound form' என்று சொல்லப்படுகிறது. (though the form is aural and invisible, we realize it at heart level என்றறிக.] Prof.Stephen Hawkins சொல்லும் History of Timeஐயும் நான் சொல்லும் History of absolute timeஐயும் ஒப்பு நோக்கி நீதி வழங்குக. எனவேதான் **"காலமே எவற்றுக்கும் மூலம்"** என்பான் மயத்தமிழன். அந்தக் காலத்தை உணர்வு (consciousness - awareness) என்பான். இதனைச் சூத்திரமாக்கி **"உழைப்பே மூலம் உணர்வே காலம்"** என்பான் மயன். இந்தக் காலத்தையே இடமாக்கியதும் அந்த மயன் தான்.

காலமும், இடமும்:

அடுத்து இடம் என்ற சொல்லும் அதற்கொருவாய்பாடும் கீழே வருவதை உற்றுநோக்குக. இங்கேதான் பிரம்ம சிருஷ்டி நுட்பம் பொதிந்து கிடக்கிறது என்பேன். இதைப்புரிந்துக் கொண்டால் இயல், இசை, நடம் புரிவோர் பிரம்மன் ஆகிவிடுவர்.

இது புரிந்தாலன்றி "अहं ब्रह्मास्मि, तत्वमसि" "*அஹம் பிரம்மாஸ்மி, தத்வமஸி*" **"நான் பிரம்மமாய் இருக்கிறேன், அதுவாக [பிரம்மமாய்] நீ இருக்கிறாய்"** என்ற மகா வாக்யங்கள் புரியாது என்பேன். என்னுடைய வாக்யங்களையும் உற்றுப் பாருங்கள்: **சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதையாகிறான்.** இதனை நான் சொல்லக் கேட்ட ஆன்மிகக் கவிஞர் புரிந்து பாராட்டினர். சிற்பி அகத்தே உள்ளான். சிற்பம் படிமமாக புறத்தே உளது. அங்ஙனமே கவிஞனே அகத்தே கவி எனப்பட்டு புறத்தே கவிதை புனைகிறான். இருவரும் ஒரே மாதிரிக் காட்சியையே காண்கிறார்கள். இரண்டும் இதனால் ஒரே இலக்கணம் [ஐந்தியல்] பெறலாயிற்று.

இடவடிவத் தோற்ற நிலை:

கோடுகள் இடவடிவங்களாக (Spatial form) மாறுவதே ஒரு விஞ்ஞான நிகழ்ச்சி எனப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கும் ஒரு வளர்ச்சி உண்டு. கோடு என்பது தோற்று வாயில் புள்ளி (Point) எனப்படும். இதனை பிந்து – விந்து (foetus) என்று சொல்லுவோம். இந்தப் பிந்து என்பது ஓர் உயிரி. இந்த நிலையில் புள்ளி, புள்ளிகளால் கோடும், கோடுகளால் வரியும், வரிகளால் வடிவும் வடிவின் இறுதியில் உருவும் தோன்றுகிறது என்பது ஒரு விஞ்ஞான நிகழ்ச்சியாகும்.

"புள்ளிக் கோடே வரிவியல் உருவியல்
தெள்ளு தமிழியல் எழுத்தியல் வகுத்து
விள்ளும் சொற்பொருள் கூட்டணி வகையால்
உள்ளும் ஆற்றலை உரைப்பதிந் நூலே"

– ஐந்திறம்

இத்தகைய படிமுறையில் நமது உள்ளம் என்ற இடத்தில் முதலில் ஒளிப்புள்ளி தோன்றி- ஒளிக் கோடுகளாகி இறுதியில் ஒளிமயக்காட்சி (luminous inner picture) தோன்றும். இதையே புறத்தில் கருவி கொண்டு இடவடிவங்களாக அமைத்துக் காட்டுகிறோம். இப்படித்தான் பிந்து என்ற ஒளிப்புள்ளி உருவங்களாக மாறுகிறது என்பது பிரம்ம சிருஷ்டி (manifest form of the point energy) நுட்பமாகும். 'புள்ளி' என்பதும் ஓர் இடவடிவமே!

மூன்றோ, நான்கோ கோடுகளால் அடைபடுவது இடம் எனப்படும். கண்ணால் பார்த்தறியக் கூடிய அத்தனை பொருள்களும் இத்தகைய புள்ளிகளால் – இடங்களால் ஆன இடப்பொருள் (Spatial form) எனலாம். நமது உடம்பில் உள்ள அணுவை Cell என்று சொல்லுகிறோம். எனவே, அணு என்பதும் இடத்தாலான [அ] இடமே – நுண் இடமேயாகும் அல்லவா? இந்த இடத்தைத் தோற்றுவிப்பது காலத்துடிப்பு

(Creative elemental pulsation) எனப்படும். இஃது உங்கட்குத் தெரியும். இத்தகைய அணு இடமானது துடிப்பினால் உருவாகிறது உருப்படுகிறது என்பது விஞ்ஞான நுட்பம். அணு என்பது ஒரே அளவினதான இடம் - அணுவிடம் (micro space) என்று கொள்ளுதல் வேண்டும். இஃதொரு விஞ்ஞான நுட்பம்!

இடவாய்ப்பாடு [இடக் கணக்கு]

8 அணு சேர்ந்த இடம்	**- 1 தேர்த்துகள் இடம்**(Space equivalent to car dust)
8 தேர்த்துகள்	**- 1 இம்மி இடம்**
8 இம்மி	**- 1 எள்ளு இடம்**
8 எள்ளு	**- 1 நெல்லு இடம்**
8 நெல்லு	**- 1 விரல் இடம்**

அணுவளவு கொண்ட சிறு இடம் ஒன்று (space) அந்த அணுவின் துடிப்பினால் வெடித்து (big bang) சிதறி மேலும் சிறு சிறு அணுக்களாக ஒரே (fractals) அளவினதாகப் பிரிந்து அவற்றின் இணைப்பால் பிறிதொரு பொருளாக உருக் கொள்கிறது என்பது உச்ச விஞ்ஞானமாகும். இத்தகைய துடிப்பானது இயல்பில் துடித்துச் சிதறி மீண்டும் மீண்டும் இஃது இடைவிடாது நிகழ்வதால் பௌதிக வளர்ச்சி - உருப்படுதல் (Physical growth or spatial growth) நிகழ்வதால் - இதனை இடவளர்ச்சி (growth of space) என்கிறோம். இங்ஙனம் வளர்ச்சியுற்ற இடத்தை இடம் [அ] space என்றே சுருக்கிச் சொல்லுகிறோம். அதாவது ஒவ்வொரு அணுக்காலமும் ஒவ்வொரு அணு இடத்தை உண்டாக்குகிறது என்பது பொருள். எனவே காலமும் இடமும் சமமே - ஒன்றே - என ஆகிறது. (Time and Space are mathematically equal. They are directly proportional to each other. This is the history of Time, not so interpreted by contemporary western science. In other words, Time is absolute and absolute time creates life or life forms.) இப்படித்தான் இயற்கையில் ஒரு கணக்கியல் தோன்றுவதாயிற்று. எனவே, காலத் துடிப்பினால் இடம் தோன்றி வளர்கிறது என்பது நுட்பமாகிறது. இப்படித்தான் தாயின் வயிற்றுக்குள் நுழைந்த சக்தி அணுவுக்கு (energy atom) அதாவது பரமாணுவானது அதற்கு இயல்பான துடிப்பினால் சதைப்பற்று (spatial growth) ஏற்படுகிறது என்பது விஞ்ஞானத் தத்துவம் என்க. இந்தக் காலத் துடிப்பினால் ஏற்பட்ட அளவும், அதனால் உருப்பெற்ற இடத்தின் அளவும் ஒன்றெனத் தெரிகிறதல்லவா? ஆம். இதைத் தான் இடவாய்பாடு காட்டுகிறது. இவ்விரண்டு தத்துவங்களுக்கு மூலமாய் இருப்பது காலம் என்று தெரிவதால் **"காலமே எவற்றுக்கும் மூலம்; காலமே கோலத் தோற்றம்; காலமே ஞாலத் தோற்றம்"** என்ற விதி ஏற்பட்டதோடு **"காலமே விந்தை செய்யும்" "காலமே அணுக்கள் ஆயும்"** என்றும் இந்தத் தமிழர் விஞ்ஞானம்

மேலும் இரண்டு தேற்றங்களைக் கொண்டுள்ளது. மீண்டும் வாய்பாடுகளைப் பார்ப்போம்.

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணுக் காலம்	– 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	– 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	– 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	– 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	– 1 விரல் காலம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள் இடம்
8 தேர்த்துகள்	– 1 இம்மி இடம்
8 இம்மி	– 1 எள்ளு இடம்
8 எள்ளு	– 1 நெல்லு இடம்
8 நெல்லு	– 1 விரல் இடம்

அடுத்து வருவது ஐந்திறம் கூறும் இடக்கணக்கு: இது தான் சங்க காலக் கணக்கு எனத் தெரியவந்துள்ளது. இதனை இது நாள் வரை எவரும் கண்டு கொள்ளவே இல்லை.

''எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி''
''எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டுத் தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'' – ஐந்திறம்

[சிலப்பதிகார உரையாசிரியர் இதே வாய்பாடைக் கொடுத்திருப்பதை இப்போதாவது புரட்டிப் பாருங்கள்.]

இந்த வாய்பாடு எதைக் காட்டுகிறது என்பதை மேலும் ஒருமுறை உற்றுப் பார்ப்போம்.

ஏற்கெனவே பேசும் பொழுது, பரமாணு என்பது கண்களுக்குப் புலப்படாத சிற்றணு என்று சொன்னேன். அப்படியானால் கண்களுக்குப் புலப்படும் அணு, என்று ஏதாவது உளதோ என்று இப்பொழுதும் கேட்கத் தோன்றும். ஆம்! என்பதே விடை. கண்களுக்குப் புலப்படாத அணுவும் இருக்கிறது, கண்களுக்குப் புலப்படும் அணுவும் உளது என்பதைத் தான் ஒரு விஞ்ஞான அதிசயம் என்றேன். கண்களுக்குப் புலப்படாத

அணுக்கள் ஒரு கணக்கில் ஒன்று சேர்ந்த நிலையில் அவை கண்களுக்குப் புலப்படு அணுவாக உருமாற்றம் கொண்டு அது செய்திட்ட ஒரு விந்தையை இங்கே சொல்ல இருக்கிறேன். கண்களுக்குப் புலப்படாத அணு என்று சொல்லும் பொழுது, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், நமது கண்கள் ஒரு எல்லை வரை தான், ஒரு எல்லைக்கு உட்பட்ட பொருளைத் தான் – காணமுடியும். அந்த எல்லைக்கு அப்பால் இருக்கக் கூடிய பொருளை (fractals) சாதாரணக் கண் கொண்டு பார்த்திடல் இயலாது என்றும் சொல்லலாம். ஆனால், கண்களுக்குப் புலப்படாத அப்பொருளை [அ] அணுவை **என்றுமுள மூலப் பொருள் – என்றுமுள நிலைப்பொருள்** (ever existing substance) என்பதே உண்மை. இக்கால விஞ்ஞானம் தெரிந்த நம்மவர்கள் அந்த நுட்பத்தை அறிவினாலும், அறிவுக்கு அப்பாற்பட்ட உணர்வினாலும் அறிந்திட முடியும் என்று சொல்லலாம். இத்தகைய அறிவும், உணர்வும் பெற்ற சிந்தனையாளர்களைத் தான் **யோகிகள்** என்று சொல்லுகிறோம். **'யோகம்'** என்றால் இணைப்பு, சந்திப்பு (resonance, union) என்று பொருள். அதாவது நீண்ட சிந்தனைக்குப் பிறகு அந்த சிந்தனையாளர் உண்மைப் பொருளோடு ஒன்றி அல்லது இணைகிறார்கள் என்பது அதன் பொருள். அதாவது அறிவுப் பொருள் ஆனது உண்மைப் பொருளோடு சேரும் – மெய்ப் பொருளானது உயிர்ப் பொருளோடு சேரும் – நிலையில் எழுச்சி கொள்ளும் உணர்வு நிலைக்குத்தான் யோகம் என்று பெயர். பச்சையாகச் சொன்னால் இந்த இரண்டு நிலைகளும் அதாவது அறிவு நிலையும் உணர்வு நிலையும் ஒன்றித்த நிலை ஒன்று உளதென்று கண்டறிந்து, அந்த நிலையைத் தான் யோக நிலை என்று கலைவழி நோக்கிய நமது முன்னோர்கள் அறுதியிட்டுச் சொன்னார்கள். நமக்கும் இந்த நிலை கிடைக்காமல் போவதற்கில்லை. சிந்தனையை உணர்வில் ஆழப்பதியவைப்போர் இதனைக் கண்டறிந்தோர் ஆவர். எனவே, கண்களுக்குப் புலப்படாத பரமாணு யோகிகளுக்குப் புலப்படும் என்று தமிழர் கண்ட சம்ஸ்கிருத மரபும் அறுதியிட்டுக் கூறுகிறது.

"परमाणुरिति प्रोक्तं योगिनां दृष्टि गोचरम् ॥" – மயமதம்

"பரமாணுரிதி ப்ரோக்தம் யோகினாம் திருஷ்டி கோசரம் ॥"

தமிழ் மரபில் உதித்த முன் சொன்ன தமிழ் மகன், **"உளவுறும் நுட்பம் உண்மை கண்டே, கண்டுறும் அளவை கருத்திலிறுத்தி, விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே"** என்று சொல்லுகிறான். முன்சொன்னதையும் பின் சொன்னதையும் வெவ்வேறு இரண்டு பேர் தனித்தனியாகச் சொன்னதாகப் பொருள்

மேலும் இரண்டு தேற்றங்களைக் கொண்டுள்ளது. மீண்டும் வாய்பாடுகளைப் பார்ப்போம்.

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணுக் காலம்	– 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	– 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	– 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	– 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	– 1 விரல் காலம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள் இடம்
8 தேர்த்துகள்	– 1 இம்மி இடம்
8 இம்மி	– 1 எள்ளு இடம்
8 எள்ளு	– 1 நெல்லு இடம்
8 நெல்லு	– 1 விரல் இடம்

அடுத்து வருவது ஐந்திறம் கூறும் இடக்கணக்கு; இது தான் சங்க காலக் கணக்கு எனத் தெரியவந்துளது. இதனை இது நாள் வரை எவரும் கண்டு கொள்ளவே இல்லை.

''எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி''
''எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டுத் தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'' – ஐந்திறம்

[சிலப்பதிகார உரையாசிரியர் இதே வாய்பாடைக் கொடுத்திருப்பதை இப்போதாவது புரட்டிப் பாருங்கள்.]

இந்த வாய்பாடு எதைக் காட்டுகிறது என்பதை மேலும் ஒருமுறை உற்றுப் பார்ப்போம்.

ஏற்கெனவே பேசும் பொழுது, பரமாணு என்பது கண்களுக்குப் புலப்படாத சிற்றணு என்று சொன்னேன். அப்படியானால் கண்களுக்குப் புலப்படும் அணு, என்று ஏதாவது உளதோ என்று இப்பொழுதும் கேட்கத் தோன்றும். ஆம்! என்பதே விடை. கண்களுக்குப் புலப்படாத அணுவும் இருக்கிறது, கண்களுக்குப் புலப்படும் அணுவும் உளது என்பதைத் தான் ஒரு விஞ்ஞான அதிசயம் என்றேன். கண்களுக்குப் புலப்படாத

அணுக்கள் ஒரு கணக்கில் ஒன்று சேர்ந்த நிலையில் அவை கண்களுக்குப் புலப்படு அணுவாக உருமாற்றம் கொண்டு அது செய்திட்ட ஒரு விந்தையை இங்கே சொல்ல இருக்கிறேன். கண்களுக்குப் புலப்படாத அணு என்று சொல்லும் பொழுது, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், நமது கண்கள் ஒரு எல்லை வரை தான், ஒரு எல்லைக்கு உட்பட்ட பொருளைத் தான் – காணமுடியும். அந்த எல்லைக்கு அப்பால் இருக்கக் கூடிய பொருளை (fractals) சாதாரணக் கண் கொண்டு பார்த்திடல் இயலாது என்றும் சொல்லலாம். ஆனால், கண்களுக்குப் புலப்படாத அப்பொருளை [அ] அணுவை **என்றுமுள மூலப் பொருள் – என்றுமுள நிலைப்பொருள்** (ever existing substance) என்பதே உண்மை. இக்கால விஞ்ஞானம் தெரிந்த நம்மவர்கள் அந்த நுட்பத்தை அறிவினாலும், அறிவுக்கு அப்பாற்பட்ட உணர்வினாலும் அறிந்திட முடியும் என்று சொல்லலாம். இத்தகைய அறிவும், உணர்வும் பெற்ற சிந்தனையாளர்களைத் தான் **யோகிகள்** என்று சொல்லுகிறோம். **'யோகம்'** என்றால் இணைப்பு, சந்திப்பு (resonance, union) என்று பொருள். அதாவது நீண்ட சிந்தனைக்குப் பிறகு அந்த சிந்தனையாளர் உண்மைப் பொருளோடு ஒன்றி அல்லது இணைகிறார்கள் என்பது அதன் பொருள். அதாவது அறிவுப் பொருள் ஆனது உண்மைப் பொருளோடு சேரும் – மெய்ப் பொருளானது உயிர்ப் பொருளோடு சேரும் – நிலையில் எழுச்சி கொள்ளும் உணர்வு நிலைக்குத்தான் யோகம் என்று பெயர். பச்சையாகச் சொன்னால் இந்த இரண்டு நிலைகளும் அதாவது அறிவு நிலையும் உணர்வு நிலையும் ஒன்றித்த நிலை ஒன்று உளதென்று கண்டறிந்து, அந்த நிலையைத் தான் யோக நிலை என்று கலைவழி நோக்கிய நமது முன்னோர்கள் அறுதியிட்டுச் சொன்னார்கள். நமக்கும் இந்த நிலை கிடைக்காமல் போவதற்கில்லை. சிந்தனையை உணர்வில் ஆழப்பதியவைப்போர் இதனைக் கண்டறிந்தோர் ஆவர். எனவே, கண்களுக்குப் புலப்படாத பரமாணு யோகிகளுக்குப் புலப்படும் என்று தமிழர் கண்ட சம்ஸ்கிருத மரபும் அறுதியிட்டுக் கூறுகிறது.

"परमाणुरिति प्रोक्तं योगिनां दृष्टि गोचरम् ।।" – மயமதம்

"பரமாணுரிதி ப்ரோக்தம் யோகினாம் திருஷ்டி கோசரம் ॥"

தமிழ் மரபில் உதித்த முன் சொன்ன தமிழ் மகன், **"உளவுறும் நுட்பம் உண்மை கண்டே, கண்டுறும் அளவை கருத்திலிறுத்தி, விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே"** என்று சொல்லுகிறான். முன்சொன்னதையும் பின் சொன்னதையும் வெவ்வேறு இரண்டு பேர் தனித்தனியாகச் சொன்னதாகப் பொருள்

இல்லை. சம்ஸ்கிருதத்தில் சொல்லியவனும், தமிழில் சொல்லியவனும் ஒரே மகன் தான் என்று சொன்னால் இதைப்படிக்கும் உங்களுக்கு என்ன உணர்வாகும் சொல்லுங்கள் பார்ப்போம்.


இப்படிப்பட்ட ஓர் உணர்வும், உணர்வால் வெளிப்பட்ட பொருளே – மீண்டும் சொல்லுகிறேன் – முதல் சங்க காலத்தில் தோன்றிய ஒரு தமிழ் மகனின் கணக்கியல் என்று அறிதல் வேண்டும். அவன் யார், அவன் வரலாறு யாது என்பதைப் பிறகு சொல்லுவேன். [காண்க: வைசம்பாயனம்] முன்சொல்லிய வாய்பாடுகளை மீண்டும் மீண்டும் உற்று நோக்குங்கள்.

இந்த நிலையில், தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றே – ஒரு குடலில் ஜனித்த இரண்டு சிசுக்களே என்பதை நீங்கள் உணர்வீர்கள், நன்றாகவே அறிவீர்கள் என்று நம்புகிறேன். பொறுத்திருங்கள், பிறகு பார்க்கலாம். சொல்லியவனைக் காட்டிலும் சொல்லிய பொருள் மகத்தானது என்பதால் இந்த ஓர் ஏக்கத்தை மட்டும் உங்கள் உள்ளத்தில் விதைத்திருக்கிறேன். இந்த விதையைத்தான் இந்த உலகத்தை விரியச் செய்த பரமாணு என்று தொடக்கத்தில் சொன்னேன். அணுக்களெல்லாம் விண்ணிலும் மண்ணிலும் கொட்டிய உயிர்த்துடிப்புள்ள விதைகளே (Seeds of energy) என்றால் மிகையன்று!வாஸ்து சாஸ்திரம் படியுங்கள். மண்ணியல் அப்போது நன்கு புரியும். ஆகவே வாஸ்து சாஸ்திரம் மதநூல் அல்ல என்றும் அறிவியல் நூல் என்றும் உலகம் பூரா சொல்லி வருகிறேன்.

சாதாரணமாக விதை என்று சொன்னால் அஃகுதொரு காணும் பொருள் என்பது எல்லோருக்கும் புரியும். அதே நேரத்தில், சொல் வழி, காதால் கேட்கும் விதை நிலைப் பொருளைக் [ஒலி அணுக்களால் ஆன சொற்கள்] கண்ணால் காணும் பொருளாக உருமாறிடுவதையும் நாம் அறிவோம். காணாப் பொருளாகிய பரமாணு வானது காணும் பொருளாக மாறும் பொழுது, சாதாரணமாக, அணு என்று சொல்லப்படும். இப்பேர்ப்பட்ட காணும் அணுக்கள் ஒன்று சேறும் நிலையில், தமிழ் மரபில் கணு என்று சொல்லப்படும். இதெல்லாம் விதைகள் (Seeds of energy) தான். அணுவின் அமைப்பியலை – கணக்கியலை – கணுவியலை – வளர்நிலையை – மூங்கில் கணுக்களில், கரும்பின் கணுக்களில், மரத்தின் உடலில் – ஏற்பட்டிருக்கும் வரைகளிலே – அடுக்குகளிலே வெளிப்படையாகக் காணலாம். இவையெல்லாம் காலத்தின் கோலங்கள் என்போம். இந்தக் கருத்தையும், தேற்றத்தையும் வாஸ்து

சாஸ்திரத்தில் தான் காணலாம். இஃதொரு விஞ்ஞான நிகழ்ச்சியன்றோ!

இது வரை நான் சொல்லி வந்த செய்திகளை உற்றுப்பார்க்கின் ஒரு சில செய்திகள் ஆழ்ந்தும் ஒரு சில செய்திகள் மேலெழுந்த வாரியாகவும் இருக்கும் என்று எனக்கே புரிகிறது. காரணம் யாதெனில், மேலெழுந்த வாரியாகப் பேசும் பேச்சுக்கள் எல்லாம் பேச வேண்டிய பொருள் பற்றி ஒரு தூரத்தோற்றம் (aerial view) காட்டுவது என்பதே ஆகும். புரிய முடியாத – முன் பின் கேட்டறியாத – ஒரு விஞ்ஞானத்தை எளிய சொற்களைக் கொண்டு புரியவைத்தல் மிகக் கடினமாகும் என்பதை நான் சொல்லாமலேயே உங்களுக்குத் தெரியக் கூடும். எனவே, அடுத்தடுத்து ஏற்கெனவே கூரியதை திரும்பத்திரும்பக் கூறி நான் செல்லும் பாதையில் அயராது ஒதுங்காது உங்களை அழைத்துச் செல்லுவேன். உங்களை எங்கே அழைத்துச் செல்வேன் தெரியுமா? சுருங்கக் கூரின், உங்களை உலக படைப்பாளியாகிய விஸ்வகர்ம பரப்பிரம்மத்தின் அருகில் உங்களை நிறுத்தி அவனை உற்றுப்பார்த்து மகிழ்ச்சி கொள்ளச் செய்வதே என்க.



விஸ்வகர்மன்

முந்தைய பத்திகளில் காலம் பற்றியும், இடம் பற்றியும் இடங்காலம் பற்றியும், காலம் இடமுறுதல் பற்றியும் இடத்தால் ஆன வடிவங்கள் பற்றியும் என்னால் முடிந்த வரை விளக்கினேன். விஞ்ஞானம் உயர்ந்து ஓங்கி வளர்ந்த காலத்தில் வாழக் கூடிய உங்களுக்கு நான் சொல்லும் செய்திகள் புரியாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன். எனவே, கூறியது கூறல் என்ற ஒரு பழி என் மீது விழாது என்றே நம்புகிறேன். அப்படி விழுந்தாலும் அதை தவிர்க்க முடியாது என்று நான் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். என் நோக்கம் எத்தகையது எனில் நான் நினைத்ததை மற்றும்

அனுபவித்ததை உங்களிடம் பகிர்ந்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சியேயாகும். இதற்கு ஐந்திர சூத்திரங்களையும், வாஸ்து விஞ்ஞானத்தையும் துணைக்கு வைத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான். ஆகவே, மேலும் அத்திசை நோக்கி அடியெடுத்து வைக்க விரும்புகிறேன். உணர்வுகளை அடைவிடம் நோக்கி அழைத்துச் செல்வதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். என்னுடன் வாருங்கள்.

இந்த நிலையில் மரபு தழுவிய விஞ்ஞானத்திற்கு யாதொரு இழுக்கும் வராமல் பார்த்துக் கொள்வேன் என்பதை இப்போதே உறுதி செய்து விடுகிறேன். காரணம், மேலை விஞ்ஞானம் இந்த முடிவை எட்டிவிட்டு அது மக்கட்கு நன்மை செய்வதை விடுத்து அதிகமான தீமை செய்து வருவதை எல்லோரும் அறிவோம். இத்தகைய அறிவியல் செல்வத்தை (Wealth of Scientific Knowledge) உலக மக்கள் அனைவர்க்கும் பொதுச் சொத்தாக ஆக்குவதோடு – இந்த விஞ்ஞான அனுபவம் அதனால் விளையும் ஆன்ம சுகம் எல்லோர்க்கும் கிடைத்திடச் செய்வதே தமிழ் கலாச்சாரத்தில் காலூன்றிய பாரதீயக் கலாச்சாரத்தின் நோக்கம் என்பதை இப்போது இடையிலும் சொல்லிக் கொண்டே சென்று பிறகு இறுதியிலும் சொல்வேன்.

இப்பொழுது விஷயத்திற்கு வருவோம். நான் மேலே சொன்ன கால வாய்பாடு, இட வாய்பாடு இரண்டும் சாதாரண வாய்பாடு அல்ல. பிரபஞ்ச மூலமாகிய பரம்பொருள் எப்படித் தன்னைத் தானாகவே புலப்படுத்திக் கொள்ளத் துடிக்கிறது, புலப்படுத்திக் கொள்கிறது (manifest itself into various substances and ultimately into gross live forms) இதைத்தான் தொடக்கத்தில் பிரம்ம சிருஷ்டி தத்துவம் என்று சொல்லிக் காட்டினேன்.

இப்பொழுது மேற்சொன்ன இரண்டு வாய்பாடுகளை உற்று நோக்குவோம். பரமாணு 8 கொண்டது ஒரு தேர்த்துகள் என்று சொன்னேன். இஃது இடவாய்பாட்டில் முதல் நிலையாகும். எடுத்த எடுப்பில் 8 பரமாணு என்று சொல்லும் பொழுது அந்த பரமாணு நமது கண்களுக்குப் புலப்படாது என்றும், அவை சேர்ந்த பின்னரே அணு அளவினதான ஒரு பொருளாகத் தோன்றுகிறது என்றும் சொல்லி அதற்குக் காரணமும் சொன்னேன். 8 பரமாணு என்று சொல்லும் பொழுது முதல் பரமாணு முதலில் ஒன்று தோன்றி அதற்குப் பின்னால் அடுத்தடுத்து 7 அணுக்கள் பின் தொடர அவை எட்டாகி ஒரு சிறு பொருள் தோன்றுகின்றது என்பது இதன் பொருளாகும். இந்த நிலையில் எட்டு என்பது ஓர் இறுதி நிலையென தெரிய வருகிறது அல்லவா? ஆம் இஃது ஓர்

உச்ச விஞ்ஞான உண்மை. இக்கணக்கு பிரபஞ்சத்தில் ஆகாய வெளியின் துடிப்பென அறிதல் வேண்டும். இதற்கு மேல் உள்ள 9, 10 என்ற எண்கள் இங்கே வரவில்லை என்பதை உற்றறிய வேண்டும். அதாவது எட்டு என்பது ஓர் முடிவான எண்ணாகிறது என்க. தமிழ் மரபில் எட்டு என்பதும், எண் என்பதும் ஒரே பொருளுடைய இரு சொற்கள் (Synonyms) என்க. இதற்கு மேல் வரக்கூடிய 9, 10 எண்களுக்குப் பதிலாக எட்டு ஒன்று, எட்டு இரண்டு, எட்டு மூன்று என்று தான் முற்காலத்தில் சொல்லப்பட்டது. ஒன்பது பத்து என்ற எண்களுக்கு உரிய சொற்களெல்லாம் பிற்காலத்தில்தான் தோன்றின என்பது ஒரு வரலாற்று உண்மை. நம்முடைய பழைய மரபில் எட்டு என்ற எண்ணை மூல அலகு (unit) என்று கொண்டு அதன் விருத்தியை வெவ்வேறு பெயரிட்டுச் சொல்லிவந்த ஒரு வழிமுறையை ஏற்கனவே எழுதிய எனது பத்திகளில் காணலாம். இஃது இந்தக் கணக்கியலின் தொன்மையை மட்டும் கூறிவிட்டதாகப் பொருளில்லை. இதுதான் உண்மையிலும் உண்மை மற்றும் தொன்மையிலும் தொன்மை என்பது ஒரு முடிவு. இதனை Law of Nature or dynamics of time energy என்று சொல்லலாம். நிற்க.

இந்த பரமாணுக்கள் என்று சொல்லப்படும் அருவமான அணுக்கள் சேருகின்றன என்பதை அடுத்துவரும் விஞ்ஞான நுட்பமாகும் என்று சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லப் போவதெல்லாம் நம் உடம்பையும், நம் உடம்புக்குள் இருந்து உணர்வுமயமாக இயங்கும் ஆத்ம சக்தியையும் ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால் நமது அறிவுக்குத் தெளிவு கிடைத்து விடும்.

நமது உடம்பில் ஒரு வகையான சூடு பரவி இலங்குவதை நாம் எல்லோரும் அறிவோம். இந்தச் சூடு எந்தெந்த அங்கங்களில் இல்லாமல் போகிறதோ அந்தந்தப் பகுதிகள் உணர்ச்சி இழந்த நிலையினை நாம் உணர முடியும். அதாவது, அந்தந்த உறுப்புகள் உணர்ச்சியை விடுத்து குளிர்ச்சி பெற்று விடுகின்றன, அதாவது செத்து விடுகின்றன என்பது அந்த நுட்பமாகும். ஆகையால், ஒரு பொருள் [அ] உறுப்பு உணர்ச்சி மயமாக இருக்கிறது என்றால் அப்பொருள் ஒரு சூட்டுப் பொருளாக இருப்பதே காரணம் என்று உணரலாம். இன்னும் சொல்லப் போனால், இந்தச் சூட்டுப் பொருளுக்கு நாம் வைத்த பெயர் உணர்வு, உணர்ச்சி என்று சொல்லப்படுகிறது.
10 எனவே எல்லாவற்றிற்கும் அடிப்படையிலே சூடு என்ற ஒன்று இருக்கிறது என்பது ஒரு விஞ்ஞான செய்தியாகும். இவையெல்லாம் நம்முடன் பிறந்த ஒரு

பொருளாகியதால் இதை நாம் பெரிது படுத்திப் பேசுவதில்லை. இந்த பேச்சுக்கள் இக்காலத்தில் தலைதூக்கி நிற்பதை வாழ்க்கையில் அன்றாடம் காண்கிறோம். சூடு இல்லாமல் நமது கணினி வேலை செய்ய முடியுமா? இத்தகைய சூடு ஆனது **மூலம்** என்ற முழுமுதற் பொருளில் அடங்கிக் கிடக்கிறது. நீர் பூத்த நெருப்புப் போல் இந்தச் சூடு கிடக்கிறது எனலாம். யாதொரு செயலும் செய்யாமல் அமைதி நிலையில் இந்தச் சூட்டுப் பொருளும், சூடு நிரம்பிய பருப்பொருளும் [உடம்பு] அமைதி நிலையை எய்துகிறது என்று அறிவுறுத்துகிறோம். இதனை சாத்விக நிலை என்றும், சாந்த நிலை என்றும், வேதாந்த நிலை என்றும், மேலான நிலை என்றும் புலவர் பெருமக்கள் சொல்லிக் காட்டுவார்கள். இந்தப் பிரபஞ்சத்தை வெளிப்படுத்திய பிரபஞ்ச மூலம் அடிப்படையில் இப்படித்தான் இருக்கிறது. இந்த நிலையில் உள்ள பொருளைத்தான் சிவன் என்று ஓர் உருவம் கொடுத்துச் சொல்லி வருகிறோம். இந்தச் சிவம் என்ற உருப்பொருள் தாங்கி நிற்கும் உணர்ச்சி நிலையை [அ] குண நிலையை **அன்பு** என்று சொல்லுகிறோம். **அன்பே சிவம்** என்றும் **சிவமே அன்பு** என்றும் இரண்டையும் ஒன்றாக்கிப் பேசி வருகிறோம். இதன் பயன் யாது என்று வினவினால் சுகம் என்பது விளங்கும். இந்தச் சுகத்தை அனுபவிப்பது யார் என்று கேட்டால் சிவன் என்று சொல்லுவோம் – இந்த உணர்ச்சிப் பொருள் தன்னைத்தானே சுவைக்கிறது, இன்புறுகிறது என்று சொல்லி முடிப்போம். அதுதான் இறுதிப் பொருள் என்றும் இறுதி நிலை என்றும் "रसो वै सः सो वै रसिकः" அவனே ரசிக்கிறான், அவனே ரசம் என்று இதன் பொருளாகும். அதாவது அந்த மூலப்பொருள் தன்னைத்தானே ரசிக்கிறது என்பது ஓர் உட்பொருள் என்க. இதனை விஞ்ஞான ரீதியாக உணரலாம். இதனை வேதமானது மிகச் சுருக்கமாக **"அவன் ரசிகனாகவும் அவனே ரசமாகவும் இருக்கிறான்"** என்று சொல்லி முடித்துக் கொள்கிறது. இந்தப் பிரபஞ்ச மூலம் இந்தப் பிரபஞ்சத்தை எதற்காக படைத்தது, why this universe என்று இன்று கேட்போர்க்கு இதுதான் இறுதியான விடை என்க. இதுதான் பாரதீயக கலாச்சாரத்தின் முடிவான பொருள் என்று உறுதிபடச் சொல்லலாம். மேற்சொன்ன ரச, ரசிகக் கருத்தில் நம்மை நாமே உற்றுப் பார்த்தால் தெரியாமலோ, புரியாமலோ போவதற்கு இல்லை. இதைத்தான் நமக்கு முன்பிறந்த இந்திய ஞானிகளும், நான் முன்புச் சொன்ன தமிழ் ஞானியும் சொன்னான் என்பதை இங்கே நினைப்பூட்டுகிறேன். இந்த உண்மையைச் சொல்லிய **பரம குருவாக** அந்தச் சங்ககாலத் தமிழ்ச் சிற்பி சொன்னான் என்பதை இங்கே இந்த நேரத்தில் மீண்டும் குறிப்பிடல் தகும் என்று நினைக்கிறேன். என்னிலே

சிற்பம் உண்டு, சிற்பத்தில் நானும் உண்டு என்றான். எனக்கு ஏற்பட்ட அனுபவமும் இஃதே என்பேன். இதை வைத்துத்தான் மாமுனி சங்கரன் **அஹம் பிரம்மாஸ்மி** என்றும் **தத்வமசி** என்றும் நமக்குச் சொல்லிக் கொடுத்தான் என்க. சிற்பியர் மரபில் இப்படிச் சொன்னவன் – நான் அடிக்கடி சொல்லி வரும் சங்ககாலச் சிற்பி என்று சிற்பியர்களால் பேசப்பட்டு வந்தது. இஃது ஒரு பேருண்மை. ஆதலால், சொந்தச் சொல்லால் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டு, தனது கலை மரபைச் சார்ந்த வலது கை முத்திரையால் **பேசாமல் பேசினான்** ஒருவன் என்று சொன்னதை நம் முன்னோர்கள் உருவகித்து நம்மிடம் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். அவனைத்தான் **ஆலமர் செல்வன்** என்றும் **தென்னவன்** என்றும் **தக்ஷிணாமூர்த்தி** என்றும் சொல்லி வருகிறோம். இவன்தான் மயன் என்றும் மயாசுரன் என்றும் சொல்லப் படுபவன். இந்த மயாசுரன் என்ற சொல் அவன் எழுதிய முதல் சூரியசித்தாந்தத்தில் வருகிறது. அதாவது "मयोनाम महातेजो मायावी वानरर्षभ" "*மயோநாம மஹாதேஜா மாயாவி வானரர்ரிஷப*".

சூரிய சித்தாந்தம் பாடல்

மறுபடியும் நமது விஞ்ஞானப் பத்திக்குச் செல்வோம். மேற்சொன்ன மூலச்சூடு இருக்கிறதே அதனை ஆங்கிலத்தில் cosmic energy என்றும், cosmic fire என்றும் தமிழில் மூலச்சூடு என்றும், சம்ஸ்கிருதத்தில் வைஸ்வானர அக்னி என்றும் சொல்லி வருகிறோம். இதைப் பிரணவச்சூடு என்று ஓர் அரிய சொல்லை விஞ்ஞானச் சொல்லாகக் கலை மரபில் சொல்லி வருகிறோம். ஆகையால் இச்சொல் உணர்த்தும் பொருள் தெரியாத நிலையில், மறந்தும் மறைந்தும் போய், இப்போது தலை தூக்கிய நிலை பெற்றிருக்கிறது என்பதை இங்கே சொல்லிட விரும்புகிறேன். இந்தச் சொல்லை வைத்து ஒரு வேதமே பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்டு, **பிரணவ வேதம்** என்ற பெயரைப் பெறுவதாயிற்று. இந்த பிரணவ வேதம் இருந்த செய்தியை வேத வியாசன் தனது பாகவதத்தில் சுட்டிக் காட்டுகிறான். இந்த வேதத்தை சிற்பக் கலை மரபின் சொத்தாக நீண்ட நெடுங்காலம் சிற்பிகள் சொல்லி வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நிலையில் அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதால் சொல்லி வைக்கின்றேன். இந்த வேதம் தமிழ் வேதம் எனத் தெரிந்துவிட்டது.தமிழில் பத்தாயிரம் பாக்கள் கொண்டதாக இன்று தெரியவந்துளது.

இந்த வேதமானது முதல் வேதமாக தோன்றியது என்ற செய்தியையும் அதே வேதவியாசன் சொல்லியிருக்கிறான். அதைச் சுட்டிக்காட்டும் சம்ஸ்கிருதப் பாடலை கீழே தருகிறேன்.

"एक एव पुरा वेदः प्रणवः सर्ववाङ्मयः ।
देवो नारायणो नान्यः एकोऽग्निर्वर्ण एव च ॥"

"ஏக ஏவ புரா வேத: ப்ரணவ: ஸர்வவாங்மய: ।
தேவோ நாராயணோ நான்ய: ஏகோக்னிர்வர்ண ஏவ ॥"

இதற்குப் பிறகு வேத வியாசன் சொல்லி வைத்த வேதச் செய்தியையும் கண்டு கொள்க.

"ऋग्यजुः सामाथर्वाख्यान् वेदान् पूर्वादिभिर्मुखैः ।
शास्त्रमिज्यां स्तुतिस्तोमं व्यधात्क्रमात् ।
आयुर्वेदं धनुर्वेदं वेदमात्मनः ।
स्थापत्यं चासृजद् वेदं क्रमात्पूर्वादिभिर्मुखैः ॥
इतिहास पुराणानि पञ्चमं वेदमीश्वरः ।
सर्वेभ्य एव वक्त्रेभ्यः ससृजे सर्वदर्शनः ॥"

"ருக்யஜு: சாமாதர்வாக்யான் வேதான் பூர்வாதிபிர் முகை: ।
சாஸ்ர மிஜ்யாம் ஸ்துதிஸ்தோமம் வ்யதாத்க்ரமாத் ॥
ஆயுர்வேதம் தனுர்வேதம் வேதமாத்மன: ।
ஸ்தாபத்யம் சாஸ்ருஜத் வேதம் க்ரமாத்பூர்வாதிபிர்முகை: ॥
இதிஹாஸ புராணானி பஞ்சமம் வேதமீஷ்வர: ।
சர்வேப்ய ஏவ வக்த்ரேப்ய: சஸ்ருஜே சர்வ தர்ஷன: ॥"

இஃதொரு வரலாற்று எச்சம் என்று கொள்ளத்தகுந்ததாகும். இதற்குப் பின்னால் இருப்பதே தமிழ் மண்ணின் உண்மை வரலாறு. இதனைக் குறிப்பிட்டுப் பேசியவர்தான் மாணிக்கவாசகப் பெருமான். இவர் காட்டிக் கொடுத்த வேதம்தான் ஆகமம் (heritage) என்ற சொல்லில் பொதிந்துளது எனக. இதோ அவரது மணிவாசகம்.


"மன்னுமாமலை மயேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
கேவேடராகி கெளிரது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தன்னில் மயேந்திரம் அதனில்
உற்ற வைம்முகங்களாற் பணித்து அருளியும்".

– திருவாசகம் கீர்த்தித் திருஅகவல்

இதைத்தான் வேத்வியாசன் தொகுத்துக் கொடுத்தான். வேதத்தை வேத வியாசன் செய்யவில்லை; கண்டு சொன்னான் என்பதை "ऋषयः कवयः मन्त्रद्रष्टारः नतुकर्तारः" *"ருஷய: கவய மன்த்ரத்ரஷ்டார: நதுகர்தார:"* என்று பிற்காலத்தில் ஆய்வர்கள் சொல்வாராயினர்.

இலக்கியத் தமிழோடு மயத்தமிழும் (technical Tamil) சேர்ந்துசெம்மொழி ஆகியுளது. எப்போது? முதல் சங்க காலத்தில். முதற் சங்ககாலத்தில் நிலந்தரு திருவில் பாண்டியன் நிறுவிய தமிழ்க் கழகத்தில் வெளிப்பட்டுவிட்டது. இப்போது இரண்டாவது முறையாக உருவாகியது மகிழ்ச்சியே. எனினும் பிறக்கும் போதே செம்மொழியாகவே பிறந்த மொழி தமிழ் மொழி எனலாம். இதனை உறுதிப்படுத்துவதுதான் ஐந்திறம் தரும் தலையாய செய்தி எனத் தெரியவருகிறது. ஐந்திறம் இதைச் சொல்லியதால் ஐந்திறத்தின் எடை மிகுவதாயிற்று என்க.

பிராளயத்துக்கு முன்



Pre historic lumerian continent

பிராளயத்துக்குப் பின்



Today's Indian Sub Continent

மாயன் நாடாகிய மெக்ஸிகோ நான் சென்றிருந்த போது கிடைத்திட்ட அந்த நாட்டு மியூசித்திலிருந்து பெற்று வந்தேன்.

இப்படி எல்லாம் பேசுவதற்கு உங்களிடம் என்ன மேல்நிலை ஆதாரம் இருக்கிறது என்பதை நீங்கள் கேட்க இருப்பதை என்னால் யூகிக்க முடிகிறது. என்னைப் பற்றி, எனக்கு இந்தக் கலை வாழ்கையில் ஏற்பட்ட தகுதிகள் பற்றித் தொடக்கத்தில் கூறினேன். அவையெல்லாம் உண்மையாயினும், பிறிதொரு ஆதாரம், என்னைப் பொருத்தவரையில், என் மரபைப் பொருத்தவரையில், எனக்கு உண்டு என்பது பல பேருக்குத் தெரியாது. காரணம், அன்றும் இன்றும் இந்தக் கலை மரபில் தோன்றிய நாங்கள் சிறுபான்மையினராகவே இருந்து விட்டதாகும். இந்த நிலையில், ஒரு வரலாற்று உண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்பது எனது விருப்பம். எனினும், இச்செய்தியை பல மேடைகளில் பேசியும் இருக்கிறேன். இதில் ஆச்சரியம் யாதெனில், எவரும் மறுத்துக் கூற முன்வர வில்லை. எனக்குத்

தெரிந்த வரையில் என் கலை மரபு காட்டிய முறையில் இந்த வரலாற்றை உங்கள் திருமுன்பில் மேல் ஆய்வுக்காக வைக்கிறேன்.

முன்னொரு காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கில் அகண்டதொரு நிலப்பரப்பு இருந்தது என்பதை இக்காலத்தில் யாவரும் அறிவர். இக்காலத்து மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களும், ரஷ்ய நாட்டு கடல் ஆராய்ச்சி(oceanic exploration) ஆய்வர்களும் பல நூல்கள் வாயிலாக இந்த நிலையை வெளிப் படுத்தியிருக்கிறார்கள். அதாவது, 30,000 ஆண்டுகளுக்கு முன்பாக [இன்னும் அதிகமாகச் சொல்வதும் உண்டு] இந்த நிலப்பரபின் மீது பனிக்கட்டி மூடியிருந்ததாகவும், இந்தப் பனிக்கட்டிமூடமாக இருந்த காலக்கட்டத்தில் உருகி, எட்டுத் திசைகளிலும் பரவி, கடலாக மாற்றம் கொண்டு, பிறகு அந்தக் கடல் நீர் சிறிது சிறதாக வற்றி, முதன் முதல் நிலப்பகுதியொன்று இந்த இடத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்று விஞ்ஞான ரீதியாக பேசுகிறார்கள். இந்த முதல் நிலப்பகுதிக்குத்தான் மேலை நாட்டினர் லுமேரியன் காண்டினட் (lumarian continent) என்றும், தென்னாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் குமரிக் கண்டம் என்றும், குமரி மாநிலம் என்றும் சொல்லி வந்தனர். இதற்கு முன், ஒரு காலக்கட்டத்தில் நாவலந்தீவு என்றும் சொன்னார்கள். இந்த நிலத்தில் தான் மாந்தர் இனமே முதலில் தோன்றியிருக்கக் கூடும் என்று சொல்லுவோரும் உண்டு. அந்த மாநிலம் குமரிக் கண்டத்திற்கு முன்பாக **பரதக் கண்டம்** என்று சொல்லப்பட்டதாக நமது நாட்டு ஆகம வழிபாட்டு நெறி வழியாகத் தெரிவதாயிற்று. இந்த மாநிலத்தில் தான் தமிழ் பிறந்தது என்றும், தமிழ் மக்கள் தோன்றினார்கள் என்றும், எனவே அவர்கள் மூத்த குடியினர் என்றும் பேசி, இதனைச் சுருக்கி கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழர் என்று சொல்லப்படுவதாயிற்று. அதுமட்டுமல்ல இங்ஙனம் சொல்லும் போது **வாளொடு தோன்றிய மூத்தகுடி** என்று சேர்த்துச் சொல்வோரும் உண்டு. இஃது உண்மையானால் [நான் உண்மை என நம்புகிறேன்] அந்த வாளைச் செய்தவன் ஒரு பெரும் கம்மியன் அல்லது ஒரு கருமானாக - சிற்பியாக - இருத்தல் வேண்டும் என்று இன்றும் பேசுபவர் உண்டு. இதில் என்ன தொனிக்கிறது? தமிழகச் சிற்பக்கலை மரபினர் என்றாலும், குமரிக்கண்டத்தில் தோன்றிய தொல் இனம் தமிழினம் என்றாலும் சிற்பியரும் உடன் தோன்றியோர் ஆவர் என்பது பளிச்சிடுகிறது. இந்த மண்ணிலே தான் நாகரிக வாழ்க்கையும்

தோன்றியிருக்க வேண்டும் என்பதும் நமக்கு ஓர் உபரித் தேற்றமாக கிடைக்கிறது. இந்த நிலையில் தொல்பழங்குடியினர் யார் என்பதை கீழ்கண்ட சம்ஸ்கிருத சுலோகம் அதாவது கோயில் பூசைக்கு முன் சொல்லிவரும் சங்கல்பம் நமக்கு தெரிவிக்கிறது எனில் மிகையல்ல. அந்தக் காலத்து ஆகமப் பிரவீனர் முதல், இன்று திருக்கோயில்களில் பணியாற்றும் சிவாச்சாரியர்கள் வரை, அடுத்துச் சொல்லிய சங்கல்பம் அல்லது உறுதி மொழி அஃது ஆகும். இந்த உறுதி மொழியில் தான் பரதக் கண்டம் என்ற சொல் கையாளப்பட்டு இன்றும் நமது தொல்மரபை, நமது தொல் வரலாற்றை காப்பாற்றி விட்டார்கள் என்று சொன்னால் அம்மக்களை முதலில் வணங்கிய பிறகே கோயிலில் குடியிருக்கும் இறைவனை தொழுதல் வேண்டும் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. பரதவர் வாழ்ந்த இடமாதலால் பரதக் கண்டம் எனப் பெயராயிற்று. இதற்கு முன் நாவல்மரக் காடுகள் அங்கிருந்த செய்தியும் அதற்கு நாவலந்தீவு என்ற பெயரும் [இதற்கு ஜம்பூத்வீபம் என்ற சம்ஸ்கிருதப் பெயரும் உண்டு] இந்தச் செய்தியில் வெளிப்படுகிறது. அந்த சங்கல்பம் பின்வருமாறு.

"अद्य ब्रह्मण: श्वेतवराह कल्पे वैवस्वत मन्वन्तरे, अष्टा विंशति तमे कलियुगे प्रथमो पादे ......
जम्बूद्वीपे भारत वर्षे भरत: कण्ठे मेरो: दक्षिणदिक् भागे ॥" - சங்கல்பம்.

''அத்ய ப்ரம்மனஹ ஸ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே,
அஷ்டா விம்ஸதி தமே கலியுகே ப்ரதமோ பாதே..... ஜம்பூத்வீபே பாரத
வர்ஷே பரதஹ் கண்டே மேரோஹோ தக்ஷினதிக்பாகே''

"இயற்கையிலிருந்து சுயமாகத் தோன்றிய பிரம்மத்தினின்று, வெள்ளை நிறப்பன்றிகள் வசித்து வந்த கல்பத்தில், வைவஸ்வத மனு என்பவர் வாழ்ந்த காலத்தில், 28வது கால ஓட்டத்தில், கலியுகத்தின் முதற்பகுதியில் ..... ஜம்பூத்வீபம் என்ற தீவில்; பாரதவர்ஷம், பரதக் கண்டம் என்ற நிலப்பகுதியில் மேருமலைக்குத் தென் திசையில், தென் பகுதியில்" – சங்கல்பம்

இந்தப் பரதவர் என்ற இனமானது ஒரு காலக்கட்டத்தில் அங்கே தோன்றிய மக்கள் இனத்தை குறிப்பிடுகிறது. பரதவர் என்போர் இன்று நாம் சொல்லிவரும் மீனவர் என்போர் ஆவர். இவர்கள் வாழ்ந்த கண்டம் தான் பரதக் கண்டம் என்று சொல்லப்படுகிறது. இந்த பரதவர் தான் ஆதிக்காலத்தில் இந்த மாநிலத்தை ஆண்டவர்கள் என்பது இப்பொழுது எல்லோருக்கும் புலனாகி விட்டது. இந்த மீனவர்கள் தான் பிற்காலத்தில் பாண்டியர்கள் எனப்பட்டனர். இந்த பாண்டியர் குலத்தை நினைப்பூட்டும் சின்னமாக தமது குலக் கொடியினை மீன் கொடியாக

கொண்டனர் என்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது. ஆகையினால் தான் தமிழ் குடிமக்கள் என்போர் ஆதியில் மீனவர்களாக இருந்தனர் என்பது துலக்கமாகிறது அல்லவா?

உயிரினத்தில் முதலில் நமது கண்களுக்கு புலப்பட்டது மீன் வழிதான் எனவும், மீன் வடிவினதான இந்த உயிரினம் பிறகு மனித வடிவமாக உருமாற்றம் கொண்டு விட்டது என்று இக்கால ஆய்வர்கள் கூறத் தொடங்கி விட்டனர். இதனை வலியுறுத்தி முன்னரே நமது வைணவ சமயிகள் பேசிவிட்டார்கள். இறைக் கொள்கையின் வளர்ச்சிப் படியினை சொல்லும் போது நீர் வாழும் மீனை முதல் அவதாரமாகச் சொல்லுவர் ஆயினர். இதற்கு மச்சாவதாரம்[மச்சம் = மீன்] என்பர். இதில் எவ்வளவு வரலாற்று உண்மை இருக்கிறது என்பதை நமது தசாவதாரக் கொள்கை குறிக்கிறது என்பதை வைணவ நூலிலே எழுதியும், மேடையில் பேசியும் வந்திருக்கிறார்கள். இதனை இத்தோடு நிறுத்தி விட்டு, குமரிக்கண்டம் என்று சொல்லக் கூடிய நேரத்தில் பரதக் கண்டம் என்ற சொல்லை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பிரபஞ்ச தோற்றமும், உயிர்களின் முதல் தோற்றமும் நமக்கு உறுதிபடுமல்லவா? இந்த மீனை தனது தலைமுடியில் ஒரு சின்னமாக, மெக்ஸிகோவில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மாயர் என்போர் சூடினர் என்பதை இங்கே குறிப்பிடலாம்.



இதை உற்று நோக்கும் போது இன்று ஏசு நாதரின் பிறப்பை எல்லையாக வைத்து அவர் பிறக்கு முன்புள்ள காலத்தை கி.மு [கிருஸ்துவுக்கு முன்] என்றும், அவர் இறந்த பின் அக்காலத்தை கி.பி [கிறிஸ்துவுக்குப் பின்] என்றும் கூறும் ஒரு புதிய மரபு

நம்மிடையே இன்றும் இருந்து வருகிறது. இது ஆங்கிலேயர் நம்மை ஆண்ட காலத்திலிருந்து இன்று வரை இருந்து வரும் கால எல்லைகளை காட்டும் காலக் கணக்காகும் என்க.

நான் முன் சொல்லிய நமது காலக்கணக்கை நாம் மாற்றிக் கொள்ள முற்படுவோமானால், நான் ஏற்கனவே சொல்லி வந்த முற்காலத்தை க.மு. [கடல் கோளுக்கு முன்] என்றும், அதன் பிறகு தோன்றிய குமரிக்கண்டக் காலத்தை [க.பி.] என்றும் சொல்வதே நமது நாட்டு வரலாற்றுக்கு ஒத்துப் போகும் என்பதை இங்கே கவனத்தில் கொள்ளுவோமாக. இத்தகைய கடல் கோள் (deluge) என்ற பிரளயங்கள் பெரும்பாலும் தென்னாட்டில் தான் அல்லது தென் ஆசிய கண்டத்தில்தான் நிகழ்ந்திருக்கிறது என்பதை இன்றும் ஆய்வர்கள் சொல்லிவருகிறார்கள். இந்தக் குமரிக்கண்டமானது நான் சொல்லி வந்த பிரளய காலத்தில் பல துண்டங்களாக வெடித்துச் சிதறி இன்று நாம் காணும் கண்டங் களாக மாறிவிட்டன அல்லது பிறழ்ந்து விட்டன என்று சொல்லுவார்கள். இதற்காக நீரியல் ஆய்வும், மண்ணியல் ஆய்வும் உலகப் பேரறிஞர்கள் இன்றும் செய்துவருகிறார்கள். நிற்க.

இந்த நேரத்தில் தான் தமிழ் மொழியும் சம்ஸ்கிருத மொழியும் தோன்றியிருக்க கூடும் என்று என் அறிவுக்கு எட்டிய வரையில் சொல்லிட விரும்புகிறேன். வானோடு முன்தோன்றிய மூத்த குடியைச் சேர்ந்தவன் என்ற நினைப்பு என் மரபணுவில் நின்று விட்டது என்று சொல்ல விரும்புகிறேன். இத்தகைய தொல்மரபைச் சேர்ந்தவன் என்று நினைக்கும் போதெல்லாம் எனது மெய் சிலிர்க்கிறது. இதற்கு மேலுமொரு ருசுவும் உண்டு.

எனவே, என்னைப் பொறுத்தவரையில், என்மரபைப் பொறுத்தவரையில் நான் இந்த நாட்டு தொல் குடிமகன் என்ற நினைப்பு எனக்கு தோன்றித் தோன்றி அமிழ்கிறது. அவை அப்படி இருக்க, இந்த நேரத்தில் பிறிதொரு உண்மைச் செய்தியை துணிந்து சொல்லிட ஆசைப்படுகிறேன். தமிழ் மொழியும் சம்ஸ்கிருத மொழியும் உண்மையில் தொல் மொழிகள் என்று சொல்வது, அதற்காகபாடு பட்டது இக்காலத்தில் எனினும், இந்த இரண்டு மொழிகளும் செம்மொழி என்ற அந்தஸ்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்றுவிட்டது எனச் சொல்லிட ஆதாரம் உளது. இதனை மிகையென சொல்லிடவே தோன்றும். ஆனால் சம்ஸ்கிருதம் என்ற

சொல்லை தமிழாக்கம் செய்திட்டால் (if literally translated), அது நான் முன்பு சொன்னது போல, செம்மொழி என்று பொருள்படும். இந்தச் சொல் தமிழுக்கும் பொருந்தும் என்று சொல்லும் பொழுது இந்தச் செம்மொழி என்ற சொல்லானது பண்டைக் காலத்திலேயே தமிழுக்கு வந்துவிட்டது என்று நான் காட்டி வரும் இந்த ஐந்திறம் செப்புகிறது.

"உள்ளும் புறமும் ஒருவழி நின்றே (அகவியல்/புறவியல்- Spiritual/material)
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே"

எனவே இரண்டு மொழிகளும் செம்மொழிகள் தான் என்று, நான் சொல்லி வரும் பிரளய காலத்திற்கு முன்பே ஆகிவிட்டன என்று சொல்ல விரும்புகிறேன். இப்படிச் சொல்வதே நானாகியத் தமிழ்க் குடிமகன் என்பதை ஏற்றருள்க. எனவேதான் குமரிக்கண்ட ஆய்வை UNESCO யூனஸ்கோ போன்ற உலக முக்கியதுவம் வாய்ந்த நிறுவனம் மேற்கொண்டு விட்டால், உலக மாந்தர் அனைவரும் ஓரினத்தவர் என்றும், இதனைத்தான் திருமூலர் போன்ற பெரியோர்களும், வேத வியாசன் போன்ற அறிஞர்களும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சொற்றொடரை அவர்தம் நூல்கள் வாயிலாக, நமக்கு அறியச் செய்திருக்கிறார்கள். நான் இதுவரை சொல்லி வந்த அத்தனையும் அனுமானப் பிரமாணம் என்று கொண்டால் அறியாமை என்ற பழிக்கு ஆளாவோம். நான் சொல்வதெல்லாம் உண்மைப் பிரமாணம் என்று தெரியுமானால் தேவையற்ற மொழிக் பிணக்குகள், இனப்பிணக்குகள் மாண்டொழியும் எனலாம். இத்தகைய கண்ணோட்டம் ஒவ்வொருவருக்கும் தேவை அன்றோ? இந்தக் கண்ணோட்த்தில் இந்த ஐந்திறத்தையும், ஐந்திறத் தேற்றங்கள் நிறைந்த கலாச்சாரத்தையும் உற்று நோக்கின் ஒரு வரலாறு புதிதாகவே தோன்றிவிடும். இதைத்தான் திருமந்திரமணி துடிசைகிழார் சிதம்பரனார் அவர்கள் தமது மாணவப் பருவத்திலிருந்து சங்ககால வரலாற்றை உற்று நோக்கி உறுதிபட எழுதியதாக சொல்லியிருக்கிறார். நானும் எனது பள்ளிப் பருவத்திலிருந்து என் தந்தை யாரிடமும், எனது கல்லூரிப் பேராசிரியரிடமும் கேட்டுக் கேட்டு தந்தையாரிடம் ஒருவகையான தெளிவும், எனது ஆசிரியப் பெருமக்களிடம்

ஏமாற்றமும் அடைந்தேன். நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்த காலத்தில் எனது சம்ஸ்கிருத ஆசிரியர் histroy of sanskrit literature என்ற தலைப்பில் பத்து வகுப்புகள் எடுத்துக் கொண்டார். இந்த வரலாற்றுக்கு ஆதாரமாக கீத் டுதுடிணுட எழுதிய நூலைவைத்துக் கொண்டிருந்ததால் கடைசி வகுப்பில் என் இருக்கையை விட்டு எழுந்து எனது சம்ஸ்கிருத ஆசிரியரை நோக்கி ஒரே யொரு கேள்வி கேட்டேன். அது யாதெனில், என்னுடைய வாஸ்து சாஸ்திரங்கள் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் இருக்கின்றன. அவையெல்லாம் technical treatises. இந்த நிலையில் என்னுடைய வாஸ்து சாஸ்திரமோ, வாஸ்து விஞ்ஞானமோ, ஆகமமோ, ஆகம நெறிமுறைகளோ ஏதும் இந்த சம்ஸ்கிருத வரலாற்றுப் பாடத்தில் வரவில்லையே, ஏன், என்று கேட்டேன். என்மீது பரிவு கொண்ட இந்த ஆசிரியர் விரைவில் வந்து விடும் என்று சொன்னார். அன்று இருக்கை விட்டு எழுந்த நான் இந்த கேள்விகளுக்கு விடையை தேடிக் கொண்டே இருக்கிறேன். திருப்தியான பதிலை எவரும் சொல்லவில்லை. எனது சம்ஸ்கிருத ஆசிரியர் இன்று [1-10-2004 நாளில் 85 வயதுள்ளவர்.] அண்ணாநகரில் ஆரோக்கியமுடன் மனைவி மக்கள் பேரன், பேத்திகளோடு வாழ்ந்து வருகிறார். இதைக் கேள்விப்பட்ட நான் ஒரு நாள் என் மனைவி யோடு புத்தாடைகள் வாங்கிக் கொண்டு சென்று அவர் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து 1949 -ல் கேட்ட கேள்வியை [எனக்கு இப்பொழுது 1-10-2004 நாளில், வயது 78ல் அடியெடுத்து வைத்தநாள்] - அதே கேள்வியைக் கேட்டேன். இன்னும் வரலாற்றில் ஏறவில்லை என்று அவரே சொல்லக் கேட்டு விசனித்தேன். இனியாயிலும் வருமா என்று கேட்ட நேரத்தில், எனது மரபையும் எனது மரபின் சாதனைகளையும் மீள்பார்வை செய்த நேரத்தில் ஒரு பேருண்மையைப் புரிந்து கொண்டவன் ஆனேன். இதுதான் எனது முடிந்த முடிவு என்பேன். எனக்கு இரண்டு சம்ஸ்கிருதங்களும் தெரியும், புரியும்.

அதுயாதெனில், சம்ஸ்கிருத மொழியானது இலக்கிய சம்ஸ்கிருதம் (literary sanskrit) என்றும், அறிவியல் சம்ஸ்கிருதம் (technical sanskrit) என்றும் இரண்டாகப் பிரிந்து நிற்பதைக் கண்டேன். என்னிடம் உள்ள technical sanskrit யாரிடமும் இல்லை என்று அடித்துச் சொல்வதோடு, அதேபோல தமிழ் மரபில் technical Tamil என்னிடம் இருப்பதை உற்று நோக்கி literary Tamil, technical Tamil என்று பிறிதொரு அமைப்பு இருப்பதையும் கண்டு கொண்டேன். எனவே எனது முடிவு யாதெனில், இன்று வாழும் நமது மக்களிடம் இருந்து ஒதுங்கிய நிலையில் இந்த technical Sanskritம் technical Tamil ம் இருப்பதைக் கண்டு கொண்டேன். இதனால் இலக்கியத்துறையில்

மக்களுக்கு ஏற்பட்ட நாட்டம் அல்லது ஆய்வுணர்வு கலைத்துறையில் ஏற்படாமல் போயிற்று என்பதை தெளிவுற, அய்யமற மேலும் கண்டேன். இது தான் பாரதீய கலாச்சாரத்திற்கு ஏற்பட்டுவிட்ட அவல நிலைக்குக் காரணம் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். அப்படி எனில் technical sanskrit, technical tamil ஆகியவை ஓர் அதிசிய - அறிவியலை உள்ளடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது என்ற ஆய்வு செய்யும் பொழுது தமிழக வாஸ்து நூல்கள் சொல்லும் விண்ணியல் மண்ணியல் என்ற cosmological science தெரிய வில்லை என்பதை முன் பக்கங்களில் தொடர்ந்து உறுதிபடுத்தி வந்தேன். அந்த நிலையில் ஐந்திரத்திற்கு உள்ளே என்ன இருக்கிறது என்ற கேள்வியை நானே கேட்டுக் கொண்டு பல உண்மைச் செய்திகளை உங்களுக்கு, எனது 78 வது வயதில் எழுதிவரும் புதியதொரு நூலில் மேலும் தொடர்ந்து சமர்ப்பிக்கிறேன்.

இதுவரை ஒளி,ஒலி ஆகியவற்றின் தோற்றம் பற்றியும், இத்தோற்றத்திற்கு காரணப் பொருளாகிய காலம் பற்றியும், இந்தக் காலமானது தோற்றிய மூலம் பற்றியும், இந்த மூலமானது காலத்துடிப்பை எங்ஙனம் தன் உணர்வால் சீலப்படுத்துகிறது என்பதைப்பற்றியும், அங்ஙனம் சீலப்படுத்திய ஒளியும் ஒலியும் - ஒளிப்பொருளாக வும்,ஒலிப்பொருளாகவும் மலர்ந்து, இயல்பில் ஐந்து வகைப்பட்டு விளங்குவதையும், அங்ஙனம் ஐந்து நிலைப்பட்ட (five fold stages of evolution) அரிய பொருள்கள் *யாவை என்பது பற்றியும், நமது உலகில் நாம் காணும் உயிர்ப்பொருள்கள் அனைத்தும் அத்தகைய ஐம்பொருள்களாக எப்படி உருவாகின்றன என்பதைப் பற்றியும், சுருக்கமாகச் சொன்னேன். மேலும், உலகத்தில் காணும் அத்தனைப் பொருள்களும் மூலத்தில் விண்பொருளாக(energy) இருந்து இறுதியில் மண்பொருளாக (matter) மாறிய பின்னர் திகழ்ந்திடும் விண்ணும், மண்ணும் அளவிட முடியா பெரும் பொருளாக (Cosmic form with immense dimensions) பிரம்மமாக எப்படித் திகழ்கிறது என்றும், அவற்றுக்கான கணக்கியலையும் ஓரளவு மேலெழுந்த வாரியாகச் சொன்னேன். விண் பிரம்மத்தை வஸ்துப் பிரம்மம் என்றும் மண் பிரம்மத்தை வாஸ்துப் பிரம்மம் என்றும், இன்றைய வழக்காற்றில் ஞானமுள்ள - செயல் திறம் கொண்ட - ஸ்தபதிகள் சொல்லி வருவாராயினர்.

---

*ஐம்பெரும் பொருள்கள்: பஞ்சபூதங்கள், பஞ்சேந்திரியங்கள், ஐம்புலன்கள், ஐந்து ஒலிகள், ஐந்து வண்ணங்கள், முதலியன.

அடுத்து, ஒலியானது எங்ஙனம் ஐவகை ஒலி மூலங்களின் அதாவது அ, இ, உ, எ, ஒ ஆகியவற்றின் சேர்க்கையால் ஒலிப்பொருள்களும் மற்றும் புள்ளி, கோடு, வரி, வடிவு, உருவு என்ற ஒளி மூலங்களின் சேர்க்கையால் ஒளிப்பொருள்களும், இறுதியில் ஒளி ஒலி மூலங்களின் சேர்க்கையால் ஓங்குறும் எழுத்தாகவும், சொல்லாகவும், சொல் உணர்த்தும் பொருளாகவும் அவை அனைத்தும் ஒரு வகை கணக்கியலில் கட்டுண்டு இறுதியில் ஒவ்வொருவரின் சுவை உணர்வுக்கு (aesthetical experience) ஏற்ப ஒரு முழுவடிவம் பிறக்கிறது என்பதையும் தொட்டுக் காட்டியிருக்கிறேன். இதைச் சொல்லிக் காதால் கேட்கும் ஒலிப்பொருளின் இலக்கணத்தையும் அமைப்பியலாகிய எழுத்து, சொல்,பொருள், யாப்பு, அணி பற்றியும் உங்களுக்கு அறிவுறுத்தினேன். இப்போது அவற்றுக்கான ஐந்திறப் பாக்களை உற்று நோக்குங்கள்! புரிகிறதா என்று மனம் திறந்து சொல்லுங்கள். இப்போது நிச்சயமாகப் புரியும் என்பேன்.

"உயிரொலி தோன்றுமுன் மெய்யியல் தோன்றும்" – [ஐந்திறம் – 315]

"மெய்யியல் முயலல் இயல்நிலை கூட்டும்" – [ஐந்திறம் – 316]

"உயிரொலி எழுத்துரு வோங்கி நிற்றல்
உயிரொளித் திறனே உண்மை விளக்கும்" – [ஐந்திறம் – 317]

"உயிரொலியோசை உள்ளகத் தெழுங்கால்
செயிற்று முயற்சி மெய்யியலொலியே" – [ஐந்திறம் – 318]

"ஒலியுறும் திறனும் ஒளியுறும் உருவமும்
கலையுறக் காட்டல் எழுத்தியல் ஆக்கம்" – [ஐந்திறம் – 302]

"ஒலியுறும் ஓசை ஒளியுறும் மெய்நிலை
தெளிவுறக் காட்டும் சீர்பொரு ளாகி
அண்டமும் பிண்டமும் இயல்பெற நிறுத்தி
கண்டதோ ருண்மை கலைபெறக் காட்டி
தெற்றுற விளக்கும் சிற்பத் திறனே" – [ஐந்திறம் – 303]

"அகத்துறு முணர்வே அகத்துறு மொளியாய்
புறத்துறும் உருவம் நிலைபெறக் கூட்டும்" – [ஐந்திறம் – 306]

"ஒளியில் உருவம் ஒலியில் ஓசை
தெளிநிலை யாற்றல் களிகலை நுட்பம்" – [ஐந்திறம் – 307]

"ஒலியின் மூலம் ஒளிநெறித் திறனாய்
ஒளிநிலை யாற்றல் ஒளிக்கலை யியலல்
உயிர்மொழித் திறனாய் மெய்ம்மொழி யேற்றல்
உயிர்மெய் யாக்கம் உய்த்துணர் நெறியே" – [ஐந்திறம் – 314]

"அகவின் ணொளியே அறிகலை மூலம்" – [ஐந்திறம் – 194]

"அகமறி யாதார் புறமறி யாரே" – [ஐந்திறம் – 195]

முதலில், எழுத்துத் தோன்றுவதற்கு ஒலி அணுக்களின் சேர்க்கை காரணம் என்று ஏற்கனவே சொல்லியதை நினைப்பூட்டி, அந்த அணுக்களின் சேர்க்கையினால் குறில், நெடில் எழுத்துக்கள் தோன்றுவதையும் ஐந்திறத்தில் காணலாம்.

காதுவழி நுழைந்த ஒலி, காதுக்குள் சென்றவுடன் உணர்வைத் தொட்டு ஒளிமயப் பொருளாக தெரிநிலை அடைகிறது என்பதை நமது தமிழ் இலக்கணமும் சொல்லுவதை இடையிடையே சொன்னால் உங்களுக்கு தெளிவு ஏற்படும் என்று அதையும் சொன்னேன். மேலும், மெய் எழுத்து, உயிர் எழுத்து என்ற பாகுபாடுகளை வைத்திருக்கும் நிலையில், அவை இரண்டும் சேர்வதினால் எழுத்தே ஓவியம் எனப்படுவதையும், அதாவது எழுத்தெல்லாம் ஓவியமே என்ற தேற்றத்தால் முற்காலத்தில் மயத்தமிழ் எனப்பட்ட இன்றைய தமிழ் "அறிவியல் தமிழ்" எனப்படுவதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்ற தேற்றத்தில்* உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் ஒன்று சேர்வதால் கண்ணால் பார்த்தறியக் கூடிய எழுத்து உருவாவதைச் சொன்னேன். இக்கூற்றினால் ஓவியம் மற்றும் சிற்பங்கள் தோன்றும் இயல்பையும் காட்டினேன். இங்கே உடம்பு என்ற சொல்லால் மெய்ப் பொருளையும், உயிர் என்ற சொல்லால் ஒலிப் பொருளையும் கருத்தில் கொண்டால், மெய்யொளியும் உயிரொலியும் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்தாகும் நிலை ஏற்பட்டு கண்களுக்குத் தெரிந்திடும் எழுத்துருவமாக, அதுவும் ஒரு வகையில் சிற்பமாக மாறும் ஒரு புதுப் பொருளை, ஏற்கனவே சொல்லியதை இங்கே மீண்டும் உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

இவையெல்லாம் ஓம் என்ற மூல ஒலியிருந்து பெறப்படும் மூல எழுத்துக்கள் அ, இ, உ, எ, ஒ என்றும் சொன்னேன். இவையே பஞ்சாக்ஷரங்கள் என்றும்

---

* "மெய்யொளி உயிரொலி சிவனுதல் இயல்பே" – [ஐந்திறம் – 166]

சொல்லப்படும். இவற்றின் நெடில்களாகிய ஆ,ஈ,ஊ,ஏ,ஓ என்ற மேலும் வரும் ஐந்தோடு ஐ, ஔ சேர மொத்தம் உயிர் எழுத்துக்கள் 12 என்பது தமிழுலகம் நன்கறிந்ததே. இவற்றோடு மெய்எழுத்துக்கள் 18ஐயும் சேர்த்து 30 என்றும், ஆய்த எழுத்தாகிய ஃ சேரின் 31 எழுத்து என முடிவு செய்த நிலையில் [ஐந்திறம்] ஐந்திறமானது முதற்சங்ககாலத்தில் இத்தகைய மாற்றத்தைக் கொண்டு வந்தது என்று திருமந்திரமணி என்ற துரிசைக்கிளார் தமது சங்ககால வரலாறு என்ற ஒப்பற்ற ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார். இதற்கு முன்பு 51 அக்ஷரங்கள் தமிழக்கு இருந்தன என்றும் இவற்றைக் குறைத்து செந்தமிழ் மொழியாகக் கொண்டுவந்த சிறப்பு இந்திரனைச் சாரும் என்று சொல்லுகிறார். சிற்பியராகிய நாங்கள் இந்திரனை ஐந்திறன் என்று கண்டு இவனே மயன் எனப்பட்டவன் என்று பன்னெடுங்காலத்திற்கு முன்னரே உறுதி செய்திருந்தோம் என்க. வடலூர் ராமலிங்கனார் ஐந்திரம் என்பதை வல்லினம் சேர்த்து ஐந்திறம் என்றும், மயனை மயன் என்றும் உண்மை அறிந்து, தமது அருட்பெருஞ் ஜோதி அகவலில் குறிப்பிடுகிறார். ஐந்திறத்தையும் அவர் கைவசம் வைத்திருந்தார் என்பது அவர் திருவருட்பா மூலம் வெளிப்பட்டுவிட்டது. இதிலிருந்து தமிழும், சம்ஸ்கிருதமும் [பழைய பெயர் கிரந்தம், பிராகிருதம் எனப்படும்] ஒரே காலத்தில் தோன்றிய இரட்டை மொழிகள் எனப்படுவதாயின. இரண்டு மொழிகளும் சங்ககால மொழிகள் என்பது உறுதிப்படுகின்றன.

இந்த ஓம் ஒலி, ஓம் ஒளி என்ற இரட்டை ஓம்களைப்பற்றி இன்னும் கொஞ்சம் விரித்துச் சொன்னால் கண்ணால் இன்று நாம் பார்த்துவரும் ஐங்கரத்தனாகிய கணபதியின் திருவுருவும் மற்றும் அர்த்த நாரீஸ்வரர் திருவுருவும் உங்கள் உள்ளத்தில் நிழலாடும் என்று நம்புகிறேன். ஐந்து செயல்களை ஐங்கரங்கள் வழியாகவும், அர்த்த நாரீஸ்வரர் உருவத்தை - ஆண் பெண் தத்துவத்தை சமச்சீராக்கி- சொல்லும் பொருளுமாகக் கொண்டு - அதாவது உயிர்ப்புள்ள தெரிவடிவமாகச் சொல்லப் பட்டிருப்பதையும் கொள்ளலாம். [இவ்விரு உருவங்களையும் எழுத்துக்கள் என்று இப்போது சொல்லலாமா? சிற்பியாகிய நான் இப்படித்தான் உணருகிறேன். வாசகர் சிந்தியுங்கள்.] விளக்கத்தை பிறிதொரு இடத்தில் காட்டுவேன். [காண்க: ஸ்தபதியின் சிற்பச் செந்நூல்] இக்கருத்தில், இத்தகைய உருவங்கள், சிற்பக்கலையில் தமிழ் மரபில் இயற்றப்படுகின்றன என்பதையும் இவை இயற்கையே பெற்றெடுத்த தெய்வீகவடிவங்கள் என்று சொல்லி உண்மையில் விஞ்ஞானமய உருவத்தைத்தான் கடவுளர் உருவமென நாம் போற்றி வருகிறோம் என்பதையும் நிறுவினேன். இதனைப்

போற்றுவதோடு போற்றுதலின் வெளிப்பாடாக பூசைகளையும் செய்து வருகிறோம் என்றேன். எளிய, ஆனால் அறிவியல் சார்ந்த பூசை நெறிகளை ஆகமம் வெளியிட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். இந்த உண்மை தெரிந்தால் மனக் குழப்பங்களுக்கும், இனவேறு பாடுகளுக்கும், பிறகு இவை சார்ந்த பிணக்குகளுக்கும் இடமே இராது என்றும் வலியுறுத்தினேன். நிற்க.

மேலும், ஒவ்வொரு எழுத்துக்களின் சேர்க்கையால் எழுச்சி கொண்ட சொல் வடிவங்களை நாம் தெய்வங்களாக கொண்டுள்ளோம் என்றால் நமது கலை வரலாறு கொண்டுள்ள ஏற்றத்தை நன்கு உணர்வீர்கள் என்று நம்புகிறேன். இதைத்தான் சுருக்கமாக, நமது நாட்டுக் கலையை ஆன்மிகம் சார்ந்த நுண்கலை (spiritual art or spirit centric art) என்று சொல்லி வருகிறோம். இதனை விண்கலை என்று சொல்வதே பொருத்தமுடையது என்பது எனக்கு அனுபவம் ஆயிற்று. இந்த விண்ணானது நமது அகத்துக்குள் இருப்பதால், ஒரு கலைஞனின் உள்ளத்தில் அதாவது அகவிண்ணில் தோன்றிய காட்சியே கடவுள் என்ற பெயரை பெறுவதாயிற்று என்று சொன்னேன். அகக்காட்சியே புறக்காட்சியாகக் கொண்ட நுட்பத்தையும் விளக்கினேன்.* அவற்றைப் படிமங்கள் (replicated form) என்றேன். அதற்கான சாத்திரக் கோட்பாடுகளையும் தெரிவிதேன் शिल्पात् प्रतिमा: जायन्ते என்றும் சொன்னேன். இதற்கு அடிப்படையான துடிப்புக் கணக்கையும் தொட்டுக் காட்டினேன்.

ஏற்கனவே, கண்ணால் பார்த்தறியும் ஓர் உருவமானது திடீரென்று வெளிப்படாமல் அகத்திலேயும் புறத்திலேயும் ஒரு புள்ளியில் பிறந்து அப்புள்ளிகள் கோடுகளைத் தோற்றுவித்து, அவை வரி எனப்பட்டு, இவையெல்லாம் மூலத்திலிருந்து வடிந்ததால் வடிவெனப்பட்டு, இவை நான்கும் சேர்ந்து ஐந்தாவது பொருளாகிய உருவு தோற்றம் கொள்கிறது என்பதையும் சொன்னேன். இங்ஙனம் கண்ணால் பார்த்தறியும் தோற்றம் நீடு நிலைத்திருக்கும் தோற்றம் என்றும் இதுவே பிரம்மத்தின் சொரூபம் அல்லது பேரான்மஸ்வரூபம் என்றும் சொன்னேன். இதனைத்தான் கோவில் கருவறையில் மூலவடிவமாகக் (presiding deity) கொண்டிருக்கும் மரபுசார் விதியைச் சுட்டிக் காட்டினேன்.

---

* அகத்துறு முணர்வே அகத்துறு மொளியால்
புறத்துறும் உருவம் நிலைபெறச் சுட்டும் – ஐந்திரம் 306

இத்தகைய பிரம்ம சொருபத்திற்கு மயத்தமிழ் கொடுக்கும் சொல் தானியல் வடிவு என்று சொன்னேன். இதை ஆங்கிலத்தில் self manifest form என்று சொல்லிக் காட்டினேன். மேடைகளில் மேலும் விளக்கி வருகிறேன். இந்தத் தோற்றத்தின் படிமுறையை ஒட்டி எழுத்து, சொல், பொருள், கட்டு, [யாப்பு] அணி என்ற ஐந்து ஒலி நிலைகள் ஓர் சொல்மய உருவத்தைக் கட்டுவதற்கு அடிப்படையான ஐங்கூறுகள் என்று கண்டு தேர்ந்து இங்ஙனம் ஐங்கூறுகளை கொண்ட சொல்லால் ஆன உருவத்தை சொல்லோவியம் என்று சொன்னேன். எழுத்தெல்லாம் ஓவியமே என்ற மயக் கூற்றுக்கு ஏற்ப இப்பொழுது மேற்சொன்ன ஐந்து கூறுகளும் சேர்ந்து ரசிக்கத் தகுந்த சூத்திரமாக, ஒரு ஓவியமாக, ஒரு சொற் சிற்பமாக மிளிர்வதை உற்று நோக்கி ரசியுங்கள். ரசனையே இறுதிப்பொருள் என்றும் அதுவே மூலப்பொருளின் குணம் என்றும் மேலுமொரு விளக்கம் சொன்னேன். சுவையும், அவனே, சுவைஞனும் அவனே என்ற கருத்தை முன்வைத்தேன். கீழ்கண்ட மயத்தமிழ் பாடலை இப்பொழுது உற்று நோக்குங்கள். இதுவே ஆதாரச்சுருதி என்க.

அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்
வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்
தானியல் வடிவுறுங் குறியெழுத் தென்ப
குறிகுறி யீடே வரைவென வாகி
அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே
ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே
எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்து மைந்தியல் முறைநெறி வழக்கே
ஐந்தியல் மொழியாய் எண்ணிலை யெழுத்தாய்
வந்ததொல் மரபே முந்துசெந் தமிழாம் – ஐந்திறம் [5–10]

தமிழகச் சிற்பகலை மரபில் சிற்பியர் செய்து கொடுக்கும் சிற்பங்களை தெய்வ வடிவங்களாக ஏற்று வழிபடும் மரபு இன்னும் 30.10.2004 வரை[முதல் சங்க காலத்திலிருந்து இன்று வரை] சிற்பிகளிடமே இருந்து வருவதை உற்றறிந்து உண்மை தெரிந்திடல் வேண்டுகிறேன். இதைச் சொல்லும் பொழுது கல்லால் ஆன உருவம் மட்டுமல்லாமல் சொல்லால் ஆன உருவங்களும் அதாவது மரபுக் கவிதைகளும் வழிபடு பொருள்களே ஆகும் என்பது தெளிவுறும் என்று நம்புகிறேன்.
11 இத்தகைய நிலையில் சொல்லாக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை "கிளவியாக்கம் மெய்ப் பொருள் குறித்தே" என்ற மயத்தேற்றத்தை இங்கே தருகிறேன். [மெய்பொருள் – material மற்றும் spiritual substance என்று கொள்க].

உலகில் பிறந்து, இறைப் படைப்புகளில் காணப்படும் பல்வேறு குணச்சித்திரங்களைத் கண்டு ரசித்து, சுவையெல்லாம் காலக்கணக்கிற்கு ஒத்தும் மேம்பட்டும் நிற்கும் மரபின் இயல்புகளாகக் கண்டு தேர்ந்து, தன்னைத் தானே ரசித்திடும் உணர்வு பெற்ற நிலையில் அழகியல் தோன்றுவதை உற்றுணர்ந்தவனே மயன் மரபினன் என்று இளங்கோ போன்ற கவிஞர்கள் சொல்லிய விளக்கங்களையும் ஒட்டிவைத்து வள்ளுவனும் ஔவையும் கூறிய பொய்யா மொழிகளையும் ஆய்வுக்குட் படுத்தித் தேர்ந்த நிலை தமிழக சிற்பக்கலை மரபில் மிளிர்வதை வழி வழி வந்த சிற்பியர் பணிகளில் கண்டு துய்த்ததை கீழ்வரும் கவிஞர் கூற்றுக்களில் காண்க. ஐந்திறம் தோன்றிய தொல்பழங்காலத்திலேயே தமிழ் மொழியானது செவ்வியல் செம்மொழி எனப் பேசிட மூலத்தின் எண் கணக்கே அடிப்படை என்பதையும் உற்றுணர்க.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு – ஐயன் திருவள்ளுவர்

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் – ஔவையார்

செம்மொழி என்பதைப் போல் சிற்பக் கலையை செம்மைக்கலை என்றும் அருட்கலை என்றும் கூறலாமல்லவா. இதைத்தான் செவ்வியல் என்றும் ஐந்தியல் என்றும் மயன் கூறுகிறான். இவை அகத்திலும் புறத்திலும் ஒன்றாகச் செல்வதை **"உள்ளும் புறமும் ஒருவழி நின்றே தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்"** என்ற கருத்து சொல்லோ வியத்துக்கு மட்டுமில்லாமல் கல்லோவியத்துக்கும் பொருந்தும் என்றேன். அவனே காவியத்தில் ஓவியமும், ஓவியத்தில் காவியமும் என்று கூறி ஓவியக்காவியம் என்றும் காவியஓவியம் என்றும் சொல்லி இரண்டையும் ஒருங்கிணைத்து சொல்லோவியத்தில் கல்லோவியத்தையும் கல்லோவியத்தில் சொல்லோவியத்தையும் ஒன்றித்து இதனை மயன் விதித்துக் கொடுத்தான் என்பதை சிலப்பதிகாரத்தில் **"நுண்வினைக் கம்மியர் காணா மரபின மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம்"** என்றான்.

மூலமே சுவையாகவும் சுவைப் பொருளாகவும் இருப்பதை **"என்னுளே சிற்பம் உண்டு, சிற்பமுள் நானும் உண்டு"** என்று மயன் உயர்த்திக் காட்டிய நுட்பத்தையும் உற்றுணர்ந்து, இவையே வாஸ்து சிற்ப சாஸ்திரக் கோட்பாடு என்றும் அணியியல் என்றும் உற்றறியலாம்.

இந்த மயன் தந்த மயமதம், மானசாரச் செய்திகளை என்னிடம் பாடம் கேட்டு அனுபவித்த ஓர் அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் வாஸ்து விஞ்ஞானத்தை **"Physics of love"** என்று சொன்ன செய்தி என்னை மெய்சிலிர்க்கச் செய்தது என்று இங்கே பதிவு செய்து வைக்கிறேன். ஐங்கலை – ஐந்தமிழ் – ஆர்வலர்கள் மேல் ஆய்வு செய்ய வேண்டுகிறேன்.

இந்த நிலையில் சிற்பியர்களை **"கவிக் கலைஞர்"** என்றான் மயன். தன்னையும் அங்ஙனமே பெருமையோடு அழைத்து கொண்டான். ஒரு குறை யாதெனில், காலம் காலமாய் கல்லோவியம் நிலைத்து நின்றுவிடுகிறது. ஆனால் சொல் ஆனது வெளிப்பட்ட நிலையில் மறைந்து விடுகிறது. எனினும் காவியங்கள் எழுத்துரு பெற்று நிலைக்காமல் இல்லை என்றாலும், மொழி தெரியாதவர்க்கும் கல்லோவியம் சுவை ஊட்டி விடுகிறதைச் சொல்லாமல், போற்றாமல் இருக்க முடியாது அல்லவா? இதனால் **"அயன் படைப்பு மாறும்"** என்றும் ஆனால் **"மாறாதே மயன் படைப்பு"** என்றும் சொல்லிவைத்தான். இக்கருத்து aesthetics in sculpture என்ற ஆய்வுத் தலைப்புக்கு ஒத்துப்போகும். இதனை மரபுக் கலையின் செவ்வியல் மற்றும் செம்மொழித் தன்மை என்று உறுதிபடச் சொல்லிட வேண்டும்.

ஐந்திறம் என்ற இந்த நூல் ஒரு பெருங்கடல். உங்களைத் தொட்டு கை பிடித்து அழைத்து வந்து, இக்கடலைக் காட்டினேன். இக்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் பொறுப்பு உங்களுடையதே. **இவை போதாதா, ஐந்திற நூல் காட்டும் விண் – மண் ஞானத்தைத் தெரிந்து போற்றிட?** இதைப் புரிந்து கொண்ட பேராசிரியர் ஏசி.பர்னல் என்ற பிரஞ்சு மொழி ஆய்வாளர் ஐந்திற வியாகரணமே அனைத்து மொழிகளுக்கும் மூலமாய் வாய்த்திட்ட இலக்கணம் என்று அறுதியிட்டு உறுதிபடக் கூறினார். இவர் ஆராய்ச்சி செய்த இடமே **தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையமே** என்று அந்தப் பேராசிரியரே [1986] சொல்லும் போது, எத்தகைய உண்மைகள் மறைந்தும் மறந்தும் போயின! **ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்** என்று பரம்பாரனார் சுட்டிக் காட்டிய பாயிர வாக்கியமும் இப்போது மெய்யாகிறது. [காண்க : தனி ஆய்வு நூல்]

வடலூர் இராமலிங்க வள்ளல் பெருமான் ஐந்திரம் என்றல்ல **ஐந்திறம்** என்றும், **மயன்** என்றும் இந்தத் தோற்றுவாயை அந்தத் தனி நூலில் அவர் கைப்பட எழுதிய சொற்களும் [ஐந்திறம், மயன்] வருவதையும் பார்த்திடுக. சம்ஸ்கிருதமும் தமிழும்

ஆங்கிலமும் எனக்குத் தெரிந்திருக்கும் நிலையில், தமிழ்க் கலை நூல்களும் (technical Tamil treatises) சம்ஸ்கிருதக் கலை நூல்களும் (technical Sanskrit treatises) களும் 10 பத்தாயிரம் ஆண்டுகளாக ஒதுங்கி, ஒடுங்கி விட்டன என்று சொல்லத் தோன்றுகிறது. Literary Tamil, Literary Sanskrit மட்டுமே உலகளாவிப் பரந்து விட்டன; ஆனால், இந்த Scientific treatisesகளில் உள்ள விஞ்ஞானச் செய்திகள் புரியாமல் ஒதுக்குண்டு போயின என்பேன். இந்தக் கதி தான் மணிமேகலை கூறும் ஓவியச் செந்நூலுக்கும் ஏற்பட்டு விட்டதை உற்றுணர்க. உன்னதத் தமிழ் மரபுக்கு இஃதொரு பேரிழப்பால்லவா? வேதமானது technical sanskrit ஆக இருந்தும், அவை புரியாத நிலையில் வேதாந்தமெனப்படும் உபநிஷதங்கள் தோன்றியிருக்க வேண்டும் மென்று, - உறுதியான- தெளிவான செய்திகளைத் தரவில்லை யாதலாலும், இந்த ஐந்திரம் என்ற மூலநூல் மற்றும் வாஸ்து நூல் - விண்ஞான / மண்ஞானங்கள் (Science of energy and science of matter) (material energy) புரிந்து கொள்ள முடியா ஒடுக்க நிலை எய்திக்கிடக்கலாயின என்று முடிவாகச் சொல்லுகிறேன். இதனை ஆதாரமாக வைத்துத் தமிழ் மொழியை செவ்வியல் செம்மொழி என்று உறுதி செய்திட முடியும் என்றும் இத்தகைய நிலை தமிழுக்கு 10 ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே கிடைத்து விட்டது என்பதை அடுத்துக் கூறிய பாக்கள் மூலம் அறிக. கூறியது கூறல் என்ற பழியை என்மீது சுமத்தமாட்டீர்கள் என்று நம்பியே மீண்டும் அந்தப் பொன்னான கூற்றுக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே

– ஐந்திறம் 207

இதுமட்டுமல்ல மயனைப் பற்றி அவர்தம் சீடர்கள் வைசம்பாயணம் என்ற அவனது சாதனைகள் கூறும் வரலாற்று நூலில் இந்த ஐந்திறச் செய்திகள் பல காலம் மறைந்து கிடந்து மீண்டும் ஒரு காலத்தில் வெளிப்படும் என்று சொல்லி, அத்தகைய நேரத்தை பொற்காலம் என்றும் கூறுகிறது. இந்த விடியல் 21வது நூற்றாண்டில் பாரத அரசால் உறுதிபெற்றுவிட்டது என்று உவகை பொங்கச் சொல்லி முடிக்கிறேன்.

இதற்குக் காரணங்களாக – பலதியாகங்கள் செய்த தமிழறிஞர்களுக்கு எனது போற்றுதலையும், வணக்கத்தையும், நன்றியையும் புலப்படுத்திக் கொள்கிறேன்.

அற்புதம் விளங்குமிந்நூல் அருட்கலைத் திறன்விளங்கும்
பொற்புதம் காலம் எல்லாம் பொன்னொளி திகழ்ந்திருக்கும்
பற்பல காலம் தோன்றாப் பொற்புடன் மறைந்திருந்து
பொற்புறும் காலம் நேரும் பொழுதினில் விளங்கு மன்றே

வைசம்பாயணம் – [1212]

"ஆரியம் கண்டாய் தமிழ் கண்டாய்
ஆரியமும் தமிழும் ஆனாய் கண்டாய்
ஆரியம் தமிழோடிசையானவன் கண்டாய்"

என்ற நாவுக்கரசரின் உணர்ச்சிபூர்வமான – உண்மைச் செய்தியைப் படித்து தமிழர்தம் விரிந்த உளப்பாங்கை கேட்டறியும் போது நமக்கெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறதல்லவா?

இந்த நிலையில் சங்ககாலப் பூங்குன்றனார் முழங்கிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற இறுதிப் பெரியவாக்கியம் இன்று தமிழர்தம் உளப்பாங்கினை பறை சாற்றுகின்றன!

ஐந்திறம்

வழியொற்றிய விஞ்ஞானக் கலாச்சாரம்

எங்கே பிறந்தன எண்ணும் சுழியும்?

எங்கே பிறந்தன எண்ணும் எழுத்தும்?

எப்படிப் பிறந்தன காலமும் இடமும்?

"கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி"

"காலக் கூறே கணக்கியலாகி"

"சிற்பியே சிற்பமாகிறான் – கவிஞனே கவிதையாகிறான்"

- ஒரு பருந்துப் பார்வை -

உலகத்தில் மக்களால் செய்யப்படும் ஒவ்வொரு பொருளும் அவ்வப் பொருளுக்கேற்ற அளவுகளைக் கொண்டே உருவாக்கப்படுகின்றன. வீடுகளில் பயன்படுத்தப்படும் மட்பாண்டங்கள், பித்தளை மற்றும் வெள்ளியாலான ஏனங்கள், பிற கருவிகள் ஆகிய அனைத்தும் கணக்கால் விளைந்திட்ட பொருள்களே. குடியிருக்கும் வீடுகள், மக்கள் கூடிடும் மன்றங்கள், செல்வர் வாழ்ந்திடும் மாளிகைகள் மற்றும் பல்லடுக்கு மாடங்கள் ஆகிய அனைத்தையும் செய்திட கணக்கியலே ஆதாரமானதாகும். குளங்கள், கிணறுகள், மற்றும் ஏரிகள் காணுதற்கும் அவற்றைக் கட்டுதற்கும் கணக்கியலே அடிப்படை. நாடு நகரங்கள் நிறுவுதல் – அவ்விடங்களில் சாலைகள், வீதிகள், தெருக்கள் மற்றும் சந்துகள் அமைத்தல் ஆகிய அனைத்தும் கணக்கியற்குட்பட்டே செய்யப் படுகின்றன. அங்ஙனமே போர்க்கருவிகள் செய்தல், போருக்கான ஊர்திகள் செய்தல், அன்றாடப் பயணங்களுக்கேற்ற வண்டிகள் மற்றும் கப்பல் கட்டுதல் ஆகிய எதற்கும் கணக்கே அடிப்படையாக இருக்கிறது. ஏன்? மனித நாகரிகமே கணிதத்தால் விளைந்த ஒன்றெனச் சுருக்கிச் சொன்னால் மிகையாகாது! கணக்கில்லாமல் இவ்வுலகத்தில் பயன் தரத் தக்க எதுவும் நடந்திடவும் எதையும் ஆக்கிடவும் இயலாது. நாம் எழுந்து நடமாடுவதற்கும், பேசுவதற்கும் கூட நம்முள் ஒரு வகையான கணக்கே அடிப்படையாக இருந்து வருகிறது.

நமது முன்னோர்கள் இக் கணக்கியலை மிக நுட்பமாக உற்று நோக்கி மிக அதிசயமான – அடிப்படையான – ஆனால் ஓர் எளிமையான கணக்கு முறையைக் கண்டறிந்து பல பணிகளைச் செய்து, வாழ்க்கை வசதிகளைப் பெருக்கி, சுகமும்

இன்பமும் சூழ்ந்த ஒரு நாகரிக வாழ்க்கையினை இந்நிலவுலகத்தில் நடத்தியிருக்கிறார்கள்.

குறிப்பாகக் கலைத்துறையைப் பார்ப்போமானால், அதிலும் சிறப்பாகக் கட்டிடக் கலைத் துறையை உற்று நோக்குவோமானால், மிக நுட்பமானதொரு கணித அறிவைக் கொண்டே வானளாவும் கோபுரங்களையும் விமானங்களையும், அகண்ட மண்டபங்களையும், உயர்ந்த மதில்களையும், கிணறுகள் மற்றும் குளங்களையும், கோயிலைச் சுற்றிலும், நகரத்தைச் சுற்றிலும் அகழிகளையும் குறுக்கே பாலங்களையும் கட்டியிருக்கிறார்கள் என்பது தெரியவரும். நாடு நகரங்களிலும், ஆற்றங்கரைகளிலும், மலையடிவாரத்திலும், மலைச் சரிவுகளிலும் , மலை முகட்டிலும், பூ மரங்கள் நிரம்பிய தோப்புக்களிலும், காடுகளிலும் நகரங்களையும் வீடுகளையும் கோயில்களையும் மிக நுட்பமான கணித அறிவு கொண்டே உறுதிபடக் கட்டியிருக்கிறார்கள். இன்றும் அவற்றில் பெரும்பான்மையின அசையாச் சான்றுகளாக நிற்கின்றன. நாம் இன்று வாழும் பெரும்பான்மையான நகரங்களும் வீடுகளும் நம் முன்னோர்கள் நமக்காக ஆக்கி வைத்துச் சென்ற தொல் அமைப்புகளேயாகும். இருபதாம் நூற்றாண்டில் புதிய நகரங்கள் என்ற பெயரில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிற்றான் அவை உருவாகியிருக்கின்றன. பழைய நகரங்களைச் சுற்றிப் பெரும்பாலும் விஸ்தரிப்புக்களே இன்று மிகுந்திருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட அத்தனைப் பணிகளையும் நம் முன்னோர்கள் கைபோன போக்கில் செய்துவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அத்தனைப் பணிகளையும் செய்திடுவதில் தொழில் நுட்பவியலும், அதற்கடிப்படையான அறிவியலும் இதிலிருந்து கிளைத்திட்ட கணக்கியலும் ஒருங்கிணைந்து பெருமளவில் செயல்பட்டிருக்கின்றன. இவற்றால் விளைந்த நம் நாகரிகமானது பாரத நாடு முழுவதுமட்டுமல்லாமல், பாரத நாட்டிற்குக் கிழக்கிலும் மேற்கிலும் தரைவழியாகவும் நீர் வழியாகவும் சென்று பரவியுமுளது.

அத்தனை காரியங்களையும் செய்திட அன்று நாம் மற்றவர்களிடமிருந்து அறிவியலையோ, கலையியலையோ, தொழில் நுட்பங்களையோ, கணக்கியலையோ கடன் பெற்றோமில்லை. நம்மை அணுகியோர்க்கும் நேசித்தோர்க்கும் இத்தகைய கலைகளையும் நுட்பங்களையும் வாரிக் கொடுத்திருக்கிறோம். ஏனையோர்க்கு அங்ஙனம் வழங்கி வந்த ஒரு பொற்காலம் அக்காலம் எனில் மிகையன்று. ஆனால் இன்றைய நிலையோ ஒரு மாறுபட்ட நிலை.

எதையும் வெளியிலிருந்தே பெற்று வருகிறோம். நமது வேர்களை இப்பொழுது தான் தேடிக் கொண்டிருக்கிறோம். உறுதி மிகுந்த வெற்றியை விரைவில் பெற்றிடுவோம். நம்பிக்கையுண்டு – முயற்சிதான் தேவை.

கலைத்துறை வழியாகக் கிடைத்திட்ட ஆன்மிகச் செல்வங்களை மட்டுமே நாம் பெரிதாகக் கண்டு கொண்டோம், சொல்கிறோம் என்பதல்ல. அறிவியல் சார்ந்த கலைகளையும், கலைசார் தொழில் நுட்பங்களையும் நாம் மிகுதியாகக் கையாண்டே வந்திருக்கிறோம். இது பற்றி மேலும் நுட்பமாகச் சொன்னால், அவற்றுக்கெல்லாம் தேவையான அடிப்படையான – ஆபூர்வமான – கணக்கியலையும் நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நாடு நகரங்கள், வீடு மனைகள், மன்றங்கள் மற்றும் கோயில்கள் ஆகியவற்றைவிடுத்து, மரக்கலம், விண்கலம் போன்ற பயணச் சாதனங்களையும் பெற்றிருந்தோம் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டுமல்லாது, இப்போது இலக்கணச் சான்றுகளும் நூற் சான்றுகளும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றையெல்லாம் பண்டைய மனிதனின் கற்பனைகள் என்று ஒரு காலத்தில் நாமே நமக்குச் சொல்லி நம்மையே சிறுமைப்படுத்திக் கொண்டோம். ஆனால் அவையெல்லாம் உண்மையென இப்பொழுது கண்டு வருகிறோம். மேலை நாட்டினர் நாகரிகம் பெறுவதற்கு முன்னரே நம் பாரத நாடு நாகரிகத்தின் உச்ச நிலையினைப் பெற்றுத் திகழ்ந்திருந்தது என்பதை இன்றைய ஆராய்ச்சிகள் வாயிலாகவும் நாம் உறுதி செய்திடலாம். பரத்வாஜர் என்ற ஒரு தொல் முனிவர் எழுதிய “வைமானிகப் பிரகரணம்” என்ற ஒரு நூல் நம்மிடம் இப்பொழுது இருக்கிறது; விண்ணில் பறந்திடும் விண்கலம் பற்றியது. இஃதொரு சம்ஸ்கிருத நூல். அங்ஙனமே மயன் என்ற பண்டைச் சிற்பி எழுதிய “மரக்கலச் செந்நூல்” “விண்கலச் செந்நூல்” என்ற இரு நூல்கள் இருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது. இவை தமிழ் நூல்கள். இத்தனை செய்தளித்திட நம் நாட்டில் ஒரு மேலான கணித நெறிமுறை இருந்து வந்திருக்க வேண்டுமல்லவா? ஆழ்ந்த கணித நெறியின்றி அவை ஏதும் தோன்றிட இயலாதல்லவா? அளவுகளே பார்த்தறியும் அறிவுப் பொருள்களை ஆக்கிடத்தக்க ஓர் அடிப்படை. அதாவது எண்ணங்களுக்கு எண்களே வடிவம் தருகின்றன. எண்ணம் என்ற சொல்லிலிருந்தே எண் என்ற சொல் தோன்றியதெனலாம். எண் என்ற சொல்லிலிருந்தே எண்ணம் என்ற தோன்றியதென்றாலும் தவறில்லை தான். இஃதொரு அறிவியல் நுட்பம் என்பதை அடுத்து வரும் பத்திகளில் அறிந்திடுவீர்கள். நிற்க.

மேற்குறிப்பிட்ட பல்வேறு பொருள்களை ஆழ்ந்து ஆய்ந்து நான்கு பெரிய தலைப்புகளுக்குள்ளே நம் முன்னோர்கள் அடக்கி வைத்திருக்கிறார்கள். முன்பு சொன்ன அத்தனைப் பொருள்களுக்கும் அடிப்படையாகவும் மூலமாகவும் இருப்பது நாம் இருக்கை கொள்ளும் நிலமே – தரையே – மண்ணே ஆகும். எனவே, மண்ணை மூலப் பொருளாகவும் முதற் பொருளாகவும் கொண்டிருக்கிறார்கள். விண் என்பது எங்ஙனம் மூலப்பொருளோ அங்ஙனம் மண்ணும் மூலப்பொருளே என்க.

விசும்பும் நிலமும் முழுமுதற் பொருளே என்பதும் வெளியிலிருந்து வளியும் வளியிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் வந்தன என்பதும் குறிப்பிடத்தகுந்த நூற் சான்றுகளாகும். அடுத்து, கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலத்திலிருந்து மண்ணும் மண்ணால் செங்கல், கல் மற்றும் உலோகங்களும் கிடைப்பதினால் இவ் அனைத்துக்கும் மண் நிறைந்த நிலமே மூலமாகவிடுகிறது.

கிராமம், நகரம், பட்டணம், ராஜதானி மற்றும் பல்வகைக் கட்டிடங்கள் நிறுவுவதற்கும் அவை இருக்கை கொள்வதற்கும் நிலமே அடிப்படையாகவிருக்கிறது. அவை நிலத்தின் திரிபாகவே அமைகின்றன. அங்ஙனம் இருக்கை கொள்ளும் நாடு, வீடு, அரண்மனை, மன்றில், கோயில் ஆகிய கட்டிடங்களை இரண்டாவது தலைப்பின் கீழ் வைத்திருக்கிறார்கள்.

ஓரிடத்திலிருந்து பிறிதோரிடம் சென்று வருவதற்கு ஊர்திகள் ஆக்கப் படுகின்றன. இவை மூன்றாவது தலைப்பின் கீழும் இறுதியாகப் படுக்கைகள், மேசைகள், நாற்காலிகள், சிம்மாசனங்கள், தொட்டில்கள், கட்டில்கள், ஊஞ்சல்கள் ஆகிய பொருள்கள் நான்காவது தலைப்பின் கீழும் கொண்டு வரப்படுகின்றன. மொத்தத்தில், பொருள்களை நான்கு வகையாகப் பிரித்துச் சொல்லிய ஒரு பொருள் நூல் அல்லது மெய்நூல் Physical science நம்மிடையே தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அந்நான்கில் மூலமான நிலத்தைப் பிரதான வஸ்து என்றும், கட்டிடங்களைப் பிராசாத வாஸ்து என்றும், ஊர்திகளை யான வாஸ்து என்றும், படுக்கைகளை சயன வாஸ்து என்றும் நான்கு வகையாக அந்நூல் வகுத்துக் கொண்டிருக்கிறது. அத்தகைய பொருள் நூலே வஸ்து சாஸ்திரம் என்றும், வாஸ்து சாஸ்திரம் என்றும் மரபுக் கட்டிடக் கலைத்துறையில் சொல்லி வருகிறோம். வாஸ்து சாஸ்திரங்கள் மூலம் கிடைத்திட்ட பொருள்களெல்லாம் கலை சார்ந்த பொருள்களாகி விட்டதால், நமது அன்றாட வாழ்க்கையே கலைத் தொடர்பால் – பண்பட்ட வாழ்க்கையாக அமைவதாயிற்று.

பொருள் என்பதற்கு வஸ்து என்று பொருள். இவ்வஸ்து என்ற சொல்லே பொருளுக்கு நிகர்ச் சொல்லாக தொன்றுதொட்டு வழங்கி வருகிறது. அனைத்துப் பொருள்களுக்கும் மூலப் பொருளான நுண் பொருளையும் இவ் வஸ்து வென்ற சொல்லே உணர்த்தும். கலை சார்ந்த பொருள்களுடன் ஆன்மானுபவம் தழுவிய உன்னதப் பொருள்களும் இடம் பெறுவதாயின. எனவே பொருள் என்ற சொல்லையும், வஸ்து என்ற சொல்லையும் ஆன்மா என்ற நிரந்தர வஸ்துவோடு இணைத்து வைத்து, அழியா ஆன்மிகச் செல்வங்களையும் [நுண்கலைகள் அனைத்தும் ஆன்மத் தொடர்புடையவை] சிற்பங்களையும் நிலையங்களையும் இம்மண்ணில் விளைத்திட நம் முன்னோர்கள் முனைந்திருக்கிறார்கள். வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். அப்பொருள்களே சமயத் துறைப் பொருள்களாக கோயில்களாகவும் – சிற்பங்களாகவும் இன்று நாடு முழுவதிலும் பரவிக் கிடக்கின்றன. இவ்விடத்தில் இன்னொரு முக்கியமான செய்தியும் குறிப்பிடத் தக்கதாகிறது. சமயச் சார்பற்ற கட்டிடங்களிலும் இந்த ஆன்மிக மணமும் தொடர்பும் கலந்தே வருவதாகவும் ஆயிற்று. காரணம் அவையும் அனுபவப் பொருள்களே. இஃது இங்கு நினைவில் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டிய தலையாய குறிப்பாகும். எனவே நாம் கட்டிக் கொண்டிருக்கும் கோயில்கள் மட்டும் ஆன்ம சுகம் காணும் நிலையங்கள் அல்ல. நாம் கட்டி வாழும் வீடுகளிலேயும், அவை இருக்கை கொள்ளும் நாடு நகரங்களிலேயும் ஆன்ம சுகம் பெறுவதற்கு இவ்வாஸ்து மரபு முயன்று வெற்றியும் கண்டிருக்கிறது. இதனைத் தான் வாஸ்து ரகசியம் அல்லது சிற்ப ரகசியம் என்பார் சிற்பிகள். இத்தகைய நோக்கில், வேத காலம் தொட்டு – ஏன் அதற்கு முற்பட்ட காலம் தொட்டு – அந்நியர்கள் நம்மை ஆளத் தொடங்கிய காலம் வரை இந்த வாஸ்து சாஸ்திரங்கள் இந்நோக்கில் செயல்பட்டு சமூகத் தொண்டு செய்து வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கண்டும் செய்தும் நாட்டு மக்கள் அனைவர்க்கும் கொடுத்தவர்கள் நம் நாட்டுச் சிற்பிகளே என்ற செய்தியை இவ்விடத்தில் பணிவுடன் சொல்லிக் கொள்கிறேன். மேற்சொன்ன சிற்ப ரகசியம் அல்லது சிற்ப நுட்பம் கணக்கால் விளைந்திட்ட நுட்பம் என்பதை நமது வாஸ்து சாஸ்திரங்கள் வெளிப்படுத்துகின்றன. இஃதொரு உளவியலும் அறிவியலும் கலந்த நுட்பம். பிரபஞ்ச மூலத்தின் இயல்பான இயக்கக் கணக்கை – இலக்கணத்தை – அடியாகக் கொண்ட கணக்கு இதனைச் சாதித்திருக்கிறது.

இப்பிரபஞ்சத்திற்கு மூலமாக இருப்பதை பிரம்மம் என்றும், பேரான்மா என்றும் அஃதோர் அருவப் பொருள் என்றும் சொல்லுகிறோம். இப்பிரம்மம், நாம் உலகத்தில்

காணும் பொருள்களையும் நம்மையும் படைக்கிறதாகவும் அங்ஙனம் படைத்திட்ட அத்தனைப் பொருள்களிலும் அப்பிரம்மம் குடி கொள்கிறதாகவும் நம்முடைய தொல் நூல்கள் பேசுகின்றன. அந்த பிரம்மத்தைத்தான் வாஸ்து மரபு வழி வந்த சிற்பிகள் வஸ்து என்றும், வஸ்துப் பிரம்மம் என்றும், விஸ்வப் பிரம்மம் என்றும், விராட் விஸ்வப் பிரம்மம் என்றும் சொல்லி வருகிறார்கள். இந்த வஸ்துவாகிய பிரம்மமானது உலகப் பொருள்களைப் படைக்கின்றது என்று சொல்வதற்கு மாற்றாக அப்பிரம்மமே அனைத்துப் பொருள்களிலும் அப்பிரம்மம் அல்லது வஸ்து இருக்கை கொண்டிருப்பதாகவும் கொள்கிறார்கள். இதற்கு எடுத்துக் காட்டாகச் "சிற்பியே சிற்பமாகிறான்" என்றும் "கவிஞனே கவிதையாகிறான்" என்றும் சொல்லுகிறார்கள்.

"என்னுளே சிற்பம் உண்டு; சிற்பமுள் நானும் உண்டு
இணைந்துடன் இன்பம் கண்டு இருபொருள் ஒன்றேயன்றோ"

என்று ஒரு சூத்திரப் பாடலையே சிற்பிகள் சொல்லி வருகிறார்கள். எனவே பிரம்மமாகிய நுண் பொருளை வஸ்து என்று சொல்வதோடு விட்டுவிடாமல் அவ் வஸ்துவே வாஸ்துக்களாக உருமாறுகின்றன என்றும் கொண்டிருக்கிறார்கள். சுருக்கிச் சொல்லிடில், அருவப் பொருளாகிய அவ் வஸ்து அல்லது பிரம்மம் உருப் பொருளாக மாற்றம் கொள்கிறதென்பது தேற்றம். அதுமட்டுமல்ல, அவ் அருவ நிலைக்கும் உருவ நிலைக்கும் இடையே பிறிதொரு இடைநிலையையும் சொல்லுகிறார்கள். அதனைக் குணநிலை என்று தேர்கிறார்கள். அதனை அருவுருவநிலை என்று சொல்லுவார்கள். கருநிலை என்ற பிரிதொரு சொல்லும் உண்டு. இதனைத் தான் விந்து என்றும் வித்து என்றும் சொல்லுகிறோம். உடலற்ற ஓர் உருவ நிலையை அல்லது கருநிலையை இது குறிப்பிடுகிறது. முட்டையும் இந்நிலையிலேயே கொள்ளப்படுகிறது. அக் குண நிலையைக் கடந்து வந்து அதில் தலை, உடல், கை, கால் என்ற உறுப்புக்கள் அமையுமானால் அஃது உருவமாகிறது – உருப் பொருளாகிறது. அந்த மூன்று நிலைகளைப் படிமுறையாகச் சொல்லும் பொழுது அவற்றை அருவம், அருவுருவம், உருவம் என்று தமிழில் சொல்லுகிறோம். இவையே நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் என்றும், அவ்யக்தம், வியக்தாவ்யக்தம், வியக்தம் என்றும், அரூபம், ரூபாரூபம், ரூபம் என்றும் சம்ஸ்கிருதத்தில் சொல்லப்படுகின்றன. சிற்பக்கலை கற்றிடும் மாணாக்கர்களுக்குச் சிற்பிகள் போதிக்கும் முதற் பாடமே இவ் அறிவியல் நுட்பம் தான். இம்முறையானது

சிற்ப மரபில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்பக்கலை நூலின் தொடக்க வரிகளே மேற்சொன்ன அறிவியல் வரிகளாக மலர்ந்து, ஞாலம் தழுவிய அனுபவ நிலையாக உயர்ந்து, இறையியலாக நிலவி, இறுதியில் கலையிலாகச் சிறப்பு எய்துகின்றன.

பிரம்மம் தன்னைத் தானே மாற்றுருக் கொண்டு அல்லது மாற்றுருக்களாகத் திரித்துக் கொண்டு அவ்வுருப் பொருள்களில் தானும் தங்கி, நிலவுகின்ற கருத்தை மேலும் ஒரு சிறிது இங்கு நோக்குவோமானால் நம் நாட்டு கணிதவியலுக்கு அரிய ஓர் அடிப்படையான எண்ணியல் நமக்குத் தெரியவரும். இவ் எண்ணியல் பற்றியே இங்கு பேச விழைந்திருக்கிறோம்.

எது பிரம்மம் எனப்படுகிறது? அஃது எங்கிருக்கிறது? அஃது எத்தன்மையது? அதன் பணி நெறி என்ன? அஃது எங்ஙனம் பொருள்களாக உருமாறுகின்றன? என்பனவற்றை ஒரு சிறிது ஆராய்வோமானால், அவ் ஆய்விலிருந்து ஓர் ஆன்மிகக் கணிதமே அல்லது ஆன்மிகக் கணிதவியலே வெளிப்படுவதைக் கண்டு மிகழலாம்.

இப்பிரபஞ்சத்தில் நாம் இரண்டு வகையான காட்சிகளை அல்லது பொருள்களைக் காணுகிறோம். ஒரு வகையான காட்சியைக் கண்களால் கண்டறிகிறோம். மற்றொரு வகையான காட்சியை காதுகளால் கேட்டறிகிறோம். இருவகைத்தான அக்காட்சிகளை ஆங்கிலத்தில் முறையே visual form என்றும் மற்றொன்றை Aural form என்றும் சொல்லுகிறோம்.

முதலில் காதுகளால் கேட்டறியும் காட்சிகளை அல்லது பொருள்களை ஒரு சிறிது உற்று நோக்குவோம். காதுகள் வழியாக பல சொற்களைக் கேட்டறிகிறோம். அத்தகைய சொற்கள் அனைத்தும் நமது உள்ளத்திலே சொற்களுக்கு நிகரான காட்சிகளை அல்லது பொருள்களையே தோற்றுவிக்கின்றன. அத்தகைய சொற்கள் ஒலியாலானவை என்பதை நாம் அறிவோம். அச் சொற்கள் வெளியில் கலைந்து ஒலியாகி அஃதே ஒரு பொருளை/ பல பொருள்களை உளத்தில் தோற்றுவிக்கிறது. ஒலியை ஒலியாக அனுபவிக்காமல் ஒலியுணர்த்தும் பொருளாகவே அனுபவிக்கிறோம். அதாவது ஒலிக்கு நிகரான பொருளே உணர்வாகிறது.

கண்ணால் பார்த்தறியும் பொருள்கள் இருக்கின்றனவே அவை உள்ளத்தில் எத்தகைய ஒலியைத் தோற்றுவிக்கிறது? கண்ணால் பார்த்தறியும் பொருட்கள் உள்ளத்தில் ஒலியைத் தோற்றுவிக்கவில்லை. ஒலி அங்கு எழுவதுமில்லை; ஒடுங்குவதுமில்லை. அப்பொருள்கள் சொற்களைப் போல் ஒலியாகக் கலைந்து –

கரைந்து - உள்ளத்தில் காட்சியாக அனுபவிக்கப் படுவதில்லை. அதற்கு மாறாக, கண்ணால் பார்த்தறியும் புறப் பொருள்கள் கண் வழியாகப் பாய்ந்து உள்ளத்தில் ஒளியாக மாறுகிறது என்ற ஒரு நுட்பத்தை வாஸ்து மரபு சொல்லுகிறது, அஃது ஒளி நிலையிற்றான் அனுபவமாகிறது என்பது பொருள். அந்நிலையில் உணரப்படுவது பொருளுணர்வு எனப்படும்.

ஏற்கனவே சொல்லிய ஒலிப் பொருள்களாகிற சொற்கள் உள்ளத்திற்கு அனுபவமாகிட, அப்பொருள்கள் ஒளிநிலை எய்தியே பொருளுணர்வை [உள்ளத்தில்] தோற்றுவிக்கின்றன. ஒலியானது ஒளியைத் தாண்டிச் செல்வதில்லை. ஒலி, ஒளியில் ஒடுங்கி இறுதியில் ஒளியே பொருளாக உணரப்படும் என்பது தேற்றம். ஏனெனில் பொருளுக்குத்தான் சொல்லே தவிர சொல்லுக்குப் பொருள் அல்லவே? பொருளுக்கு சொல்லானது நிகர்ச் சொல்லாக அமைவதால் பொருளையும் சொல்லையும் பிரிக்க முடியாது என்று சொல்லுகிறோம். இவ் அறிவியல் நுட்பத்தைத் தான் சிற்பிகள் தம் உளத்தே உணர்ந்து, மகிழ்ந்து அர்த்தநாரீஸ்வரர் வடிவமாகத் தந்திருக்கிறார்கள். **"கிளவியாக்கம் மெய்ப் பொருள் குறித்தே"** என்ற வாஸ்து மரபின் சூத்திரப்படி இயற்கையின் இயல்பையே அவ்வடிவம் சித்திரிக்கின்றது.

இதனை மறுதலையாகச் சொன்னால் நாம் ஆக்கிட நினைத்திடும் அல்லது உணர்வுறும் பொருள், ஒளியாக உள்ளத்தில் முகிழ்ந்து, ஒள்ளிய பொருள் வெளிப்பட கை வழிப்பட்டு குறியாகி - குறியீடாகி - வரைவாகி - வடிவாகி - உருவாகி - வெளியில் தெரிபொருளாக உருப் பெற்று நிற்பதாகிறது. அதுவே சொற் பொருளாக வெளிப்பட வேண்டுமானால், உள்ளத்தில் முதலில் அஃது ஒளியாகத் தோன்றி, நமது முயற்சியால் - அதையொட்டி உள்ளத்தில் ஏற்பட்ட அசைவினால் - ஒளியே அசையாகி ஓசையாகி ஒலியாகி, மேலும் நமது முயற்சியினால் எழுத் தொலியாக இறுதியில் சொல்லொலியாகி - நினைத்த பொருளை உணர்த்திடும் சொல்லாக - நினைத்த பொருளின் நிகர்ச் சொல்லாக - வெளிப்பட்டு நிற்கும். ஒலிப் பொருள் sound form (uttered word) வாய் வழியாகவும், ஒளிப் பொருள் light form கை வழியாகவும் வெளிப்படுகின்றன. ஒலிப் பொருள் எழுத்துருப் பெறுமானால் அவ்வெழுத்துரு ஒளிப் பொருளாக - கண்ணால் கண்டறியும் தெரிபொருளாக - உருமாறி விட்டது என்பதும் ஒரு முக்கியச் செய்தியாகும். இவ் அறிவியல் நுட்பமே ஆன்மிகக் கலை மரபுக்கொரு வித்து ஆகும். ஓவியத்துக்கு இஃதோர் அடிப்படை. **எழுத்தெல்லாம் ஓவியங்களே. ஓவியங்களெல்லாம் எழுத்துக்களே.**

ஒலிமயமான சொல், ஒளியாலானதும் கண்ணால் கண்டறியத் தக்கதுமான நிலைப் பொருளாக – எழுத்துருவாக – நிற்பதைக் காண்க. எனவே **“ஒளியொலி வடிவாய் ஓங்கும் எழுத்தே”** என்ற சூத்திரமும் வாஸ்து மரபில் உயிர்நாடியாக விளங்கி நிற்கின்றது.

மேற்குறிப்பிட்ட ஒளி ஒலியின் செயல் நிலைகளை ஆழ்ந்து உற்று நோக்கும் பொழுது ஓர் உண்மை உறுதிபடக் கூடும். அதாவது ஒளி ஒலிகளின் நிலையினை அனுபவிப்பதும் தோற்றுவிப்பதும் நமது உள்ளமே என்பது அஃதாகும். அதாவது உள்ளமே ஒளியால் விளையும் பொருள்களுக்கும் ஒலியால் விளையும் பொருள்களுக்கும் இடமாகவும் மூலமாகவும் அமைகின்றதென்பது கருத்தாகும். இஃதொரு அறிவியல் உண்மை. எனவே **“உள்ளமே மூலமாகி உணர்வுறும் கோலமாகி”** என்ற சொற்றொடர் இவ்வாஸ்து மரபில் தலையாய சூத்திரமாகக் கொள்ளப்படுகிறது.

எனவே **“உள்ளமானது எதற்கும் மூலம்”** என்ற தேற்றம் இவ்விடத்தில் உருவாகிறதல்லவா? மேலும் இதனை ஆய்வோம்.

நமக்குள்ளே இருக்கும் உள்ளமானது தத்துவ மரபில் ஆகாசமெனப்படுவதை யாவரும் அறிவர். இதனைச் சிற்றாகாசம் என்றும் சிதாகாசம் என்றும் அம்மரபு கூறுகிறது. இதனை அகவெளி என்றும் அகவிண் என்றும் வாஸ்து மரபு சொல்லும். அவையிரண்டும் ஒன்றே. அப்படிப்பட்ட ஆகாஸமானது நமக்குள்ளே மட்டும் இருக்கும் ஒன்றல்ல. அது நம்மைச் சுற்றிலும், நம்மைச் சூழ்ந்துள்ள பொருள்களைச் சுற்றிலும், நமக்கு மேலும், கீழும், எங்கும், நீக்கமற நிறைந்த பொருளாய் விளங்குகிறது. இந்த ஆகாசத்தையே பேராகாசம் என்றும் பரமாகாசம் என்றும் சொல்லி வருகிறோம். வாஸ்து மரபானது நமக்குள்ளிருக்கும் ஆகாசத்தையும் நம்மை சூழ்ந்திருக்கும் ஆகாசத்தையும் ஒரே தன்மையின என்று கொள்கிறது. குடத்திற்குள்ளிருக்கும் ஆகாசத்திற்கும், குடத்திற்கு வெளியே சூழ்ந்திருக்கும் ஆகாசத்திற்கும் எங்ஙனம் வேறுபாடில்லையோ அங்ஙனமே சிற்றாகாசமும் பேராகாசமும் இரண்டற்ற – ஒன்றெனச் சொல்லுகிறது. நமது உள்ளம் எவ்வாறு உள்ளுகிறதோ, அதுபோல பரமாகாசமாகிற பேருள்ளமும் உள்ளும் தன்மையது என்று நிறுவுகிறது. இவ்வுணர்வின் ஆற்றலாய் உள்ளொளி தோன்றுகிறது என்றும் தேர்கிறது. **“உள்ளொளி யன்றோ உணர்வியல் ஆற்றல்”** என்பது தேற்றம். எனவே நாம் உள்ளி, உன்னி ஒலியையும் ஒளியையும் தோற்றுவிப்பது போல

பேருள்ளமும் உள்ளி உன்னி ஒலியையும் ஒளியையும் தோற்றுவித்திடும் என்று சொல்லுகிறது. அதாவது பேருள்ளமானது ஒளிப் பொருளையும் ஒலிப் பொருளையும் தோற்றுவிக்க வல்லதென்பது தேற்றம். நமது உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஒளி ஒலிக்கும் பேருள்ளத்திலிருந்து வெளிப்படும் ஒளி ஒலிகளும் ஒரே தன்மையின என்று சொல்லும் பொழுது, மனிதனும் ஓர் இறைப் பொருளாகவே மதிக்கப் படுகின்றான். இஃது அப்படித்தான் என்பது வாஸ்து மரபின் கொள்கை. உள்ளம் உடையவர்கள், அதாவது அவ் உள்ளத்தின் மூலப் பொருள் பிரம்மம் என்றும், ஆன்மா என்றும், ஒளியென்றும், உணர்ந்தவர்கள் இறைப் பொருளுக்கு நிகரெனக் கொள்ளப்படுவதில் யாதொரு ஐயமுமில்லை; வியப்புமில்லை. கள்ளமில்லா உள்ளத்தைப் பெற்றோரே இங்கு குறிப்பிடப்படுகிறார்கள். பண்பட்ட உள்ளமுடையோரே ஆன்ம அனுபவம் பெறத் தகுதி பெறுகிறார்கள். கள்ளமில் உள்ளத்தைப் பற்றியதொரு வாஸ்து சூத்திரம் இங்கு நினைவு கூறத் தக்கதாயுளது. நினைவிலிறுத்திக் கொள்ள வேண்டிய சூத்திரமுமாகும்.

“உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கி
கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி
சொல்லும் சொல்லே சொற் பொருளாகி
தொல்கலை நெறியாய் ஆய்வரல் நெறியே!”

இத்தகைய உள்ளமானது எத்தன்மையது? என்பது பற்றி வாஸ்து மரபும் வேத மரபும் ஒரே தன்மையில் பேசுகின்றன. வேதமானது பொதுப்படையாக ஆகாசத்தை பிரம்மத்தின் சரீரமாகச் சொல்லுகிறது. “ஆகாச சரீரம் பிரம்ம, பிரம்மன: சரீர: ஆகாச:” என்பது பொருள். அஃது அங்ஙனமெனில், ஆகாசம் பிரம்மத்தின் உடலாகிறதல்லவா? எனவே, அவ்வுடலில் பிரம்மமானது உயிர்ப்பொருளாகப் பரவி நிற்கிறது என்பதும் இங்கே பொருளாகிறது. அதாவது ஆகாசமாகிற பேருள்ளத்தில் நிறைந்திருப்பது – மறைந்திருப்பது – பிரம்மம். அங்ஙனமே நமது உள்ளத்தில் நிறைந்திருப்பதும் உறைந்திருப்பதும் பிரம்மமே என்று உறுதியாகிறது. வாஸ்து மரபும் அப்படித்தான் சொல்லுகிறது. அப்பிரம்மம் எப்போதும் அமைதியுடனும் உயிர்ப்புடனும் இருந்திடும் ஓர் ஆற்றலாகும். இப்பொருளே இறுதியானது – அறுதியானது – உறுதியானது.

இனி, பிரம்மம் என்ற இறுதிப் பொருள் எங்ஙனம் பரவிக் கிடக்கிறது என்பதை உற்று நோக்குவோம்.

ஆகாசத்தில் எண்ணற்ற அணுக்கள் நீக்கமற நிறைந்து கிடக்கின்றன. அவ் அணுக்களுக்கு பரமாணு என்ற பொதுப் பெயர் ஒன்றுண்டு. எவருடைய கண்களுக்கும் இவ்வணுக்கள் புலப்படா. அத்தகைய அணுக்கள் ஒளிமயமானவை - ஒளியாலானவை. ஒளியை உமிழ்ந்து கொண்டிருப்பவை; அதாவது ஒளியையே (Lustre) உடலாகக் கொண்டவை. எனவே அஃது "ஒளியொளிர் ஒளி" என்று சொல்லப்படும். ஒளியை ஒளிரச் செய்யும் ஒளி என்று பொருள்படும். சுருக்கிச் சொல்லும் போது ஒளியணு என்று பெயர் பெறுகிறது. அவ்வளவுதான். இங்ஙனம் அவ்வணுக்கள் ஒளியை வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பதால், நம்மைச் சுற்றிலும் ஒளி சூழ்ந்திருப்பதாக – ஒளிமயமான விண்ணாக நமக்குத் தோன்றுகிறது. இதனால் தொலைவிலுள்ள பொருள்களையெல்லாம் ஊடுருவி நம் கண்களால் பார்த்தறிய முடிகிறது.

இங்ஙனம் ஒளியை உமிழ்ந்துக் கொண்டிருப்பதற்கு அவ் அணுவில் ஒளியைக் கக்கும் பொருள் ஒன்று அடங்கியிருக்கிறது. இக்கருவானது மூலத்தில் சூடாகவிருக்கிறது. இஃதொரு தீப்பொருள். மரத்தில் தீயானது எங்ஙனம் மறைந்தும் உறைந்தும் கிடக்கிறதோ அதுபோல இத்தீயே "சுடாத தீயாக" மூல நிலையில் உள்ளது என்று தெளிவாகிறது. எப்படியெனில் நாம் நமது முயற்சியினால் பேச விழையும் போது முயற்சிக்கேற்ப நம்முள்ளிருந்து ஒலியைக் கிளப்பி, மேலும் மேற்கொண்டிடும் முயற்சியினால் அடி வயிற்றிலிருந்து அவ் ஒலியை மேற் நோக்கியுந்தி, தலையுச்சிவரை ஏற்றிச் சென்று, வாய் வழியாக அசைத்து ஓசையாக்கி அவ் ஒலியைச் சொல்லாக வெளிப்படுத்துகிறோம். அங்ஙனம் முயற்சி செய்து வெளிப்பட்ட நிலையிற்றான் ஒலி என்ற ஒன்று உள்ளிருந்து உமிழப்படுகிறது என்று தெரிய வருகிறது. அதுவரை நம்முள் ஒளியானது மறைந்து, உறைந்து, ஓசையின்றி ஒலியா ஒலியாகக் கிடப்பதாகப் பொருளாகிறது. நாம் பேசாதிருந்தால் நம்மிடம் ஒலி இல்லை என்று சொல்வதற்கில்லையல்லவா? எழுப்பப்படின் ஒலி கிளர்ந்தெழும் இயல்பினது என்று கருத்தாகும். அங்ஙனமே மரத்தைத் தொட்டுப் பார்த்தால், அதற்குள் ஒடுங்கி மறைந்து கிடக்கும் தீயானது சுடுவது இல்லை. அந்நிலையில் ஒலியா ஒலி போல, சுடாத தீயாக அவ் ஒளியானது மரத்தில் உறங்கிக் கிடப்பதாக பொருள். எனவே, இவ் ஒளியணுவுக்குள் உறங்கிக் கிடக்கும் தீ, மூலக்கனல் என்று சொல்லப்படுகிறது. இது மூலத்தில் ஒடுக்கமுற்றுக் கிடக்கும் வெப்பமே.

உள்ளத்தில் நாம் ஒன்றை உள்ளும் பொழுது – எண்ணும் பொழுது – அவ்வெண்ணமே அல்லது உணர்வே, இந்தத் தீயைக் கிளப்பிவிடுகிறது. அதாவது இத்தீயின் முயக்கமே உணர்வாகி அதனால் கிளப்பப்படுவதே ஒளி. இவ்வொளியே ஆற்றலாக விரிந்து வெளிப்பட்டு ஞாலப் பொருள்களாக உருமாற்றம் கொள்கின்றது. **"உள்ளொளியன்றோ உணர்வியல் ஆற்றல்"** என்ற சூத்திரத்தை மீண்டும் இங்கு நினைவு கூறிக் கொள்ளுதல் பொருந்துமன்றோ!

எனவே, இம் மூலத் தீயானது பிரபஞ்சப் பொருள்கள் உருக் கொள்வதற்கு மூலக் கருவாக இருக்கிறது. இத் தீப் பொருளைத் தான் – ஒளியொளிர் ஒளியைத் தான் – சிற்பக்கலை மரபு வஸ்து என்றும், வஸ்து பிரம்மம் என்றும் சொல்லுகிறது. எனவே பிரம்மத்தை ஒளியுள் இருக்கை கொள்ளும் தீயொளி என்றும் சொல்லலாம். எனவே தீயொளியானது பிரம்மம் ஆகிறது; பிரம்மம் தீயொளி எனப்படுகிறது. இதே பொருள்தான் வேத மரபில் அக்னி என்று சொல்லப்படுகிறது. இதற்கே வேதம் என்ற சொல்லும் பொருந்துகிறது. வெப்பமே – வெதுவெதுப்பே வேதமாயிற்று என்று சொன்னால் தவறில்லை.

*வேதம் என்பது ஆன்மச் சூடு என்ற பொருளில் தான் கொள்ளப்பட வேண்டும். அங்ஙனம் சிற்பிகள் கொண்டிருக்கிற செய்தியும் இங்கே பயனுள்ள செய்தியாகும்.

இத்தகைய ஒளியணு ஒவ்வொன்றும் மூல நிலையில் ஒரு வகையான வடிவமே தாங்கிவிடுகிறது. அங்ஙனம் ஒளியானது உருத்தரித்த நிலையிற்றான் ஒளிக்கரு என்று சொல்லப்படுகிறது. இத்தகைய கரு, வேதத்தில் – வெப்பத்தில் – திரிபுற்ற உரு என்று மீண்டும் ஒருமுறை இங்கே சொன்னால் பொருந்துமன்றோ! நிற்க.

வாஸ்து மரபானது அருவப் பொருளுக்கு உருக் கொடுத்திட்ட ஒரு தொல்கலை மரபு. கண்காணாக் கடவுளை – அருவப் பொருளை – நம் கண் முன் நிறுத்திக் காட்டிட்ட தெய்வீக மரபு. அருவமான அப்பொருளின் முதல் தோற்றத்தையும் கண்டு சொன்ன அறிவியல் மரபு. பல அவதாரங்களை எடுத்திட்ட அம் மெய்ப் பொருளானது தன்னை முதற்கண் எவ்வடிவத்தில் புலப்படுத்திக் கொண்டது? இஃதொரு கடினமான வினா. ஆனால் விடை தெரிந்துவிட்டால் மெய் சிலிர்த்துப் போவீர்கள். அப்பொருள் நம் கணக்கியலுக்கு அறிமுகமான ஒரு

---

*வேதம் என்ற சொல், வித் என்ற வேர்ச் சொல்லிலிருந்து முளைத்தது என்று சொல்லி, வித் என்பதை அறி எனப்பொருள் கொண்டு, வேதம் என்பதற்கு அறிவு என்று பொருள் சொல்லப்படுகிறது. இவ் அறிவு துலங்கிடவும் வெப்பம்/சூடு Warmth தேவை தானே. மூளை செயல்படவும் சூடுதானே தேவை?

Geometrical Design ஆகத் தான் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது! இந்த வடிவம் அனைத்து ஜியோமிதி வடிவங்களுக்கும் மூலமான வடிவம் என்று கலை மரபு கொண்டிருக்கிறது!! அந்தத் தலைப்பொருள் தன்னை முதற்கண் □ சதுர வடிவமாகத் தோற்றிக் கொள்கிறது!!! இச் சதுர வடிவமானது, அமைதி நிலையில் அவ்வணு கொள்ளும் வடிவமாகும். (Unaroused state of existence but intrisically vibrant/ potentially energetic/still but alive/ state of supreme bliss/Ananda) அருவ நிலையான சுழி [0] நிலையியருந்து பிறழ்ந்து அருவுருவ நிலையான இரண்டாவது நிலையில் □ வடிவம் தாங்குகிறது. இவ்வடிவம் தான் பரமாணுவின் மூல வடிவம். இல்லையென்று சொல்லத் தக்க நிலையிருக்கும் உள்ளதொரு பொருளின் கிளர்ந்தெழுந்த கலைவடிவம். இஃதே கலை வடிவத்திற்கு – கலை கட்டிடத்திற்கு – மூலப் பொருள்; மூல அளவும் வடிவமும் கூட. இந்த மூல வடிவத்தை வைத்துத் தான் கட்டிடங்களே கட்டப்படுகின்றன! நமது உடலானது பல செல் களால் ஆனது என்று விஞ்ஞானம் சொல்வது போல இவ்வணுக்கள் ஒரு கட்டிடத்திற்கு மூலச் செல்களாக விளங்குகின்றன. அணுவின் □ க் கட்டிட வடிவத்தை மூல வடிவமாக வைத்துத் தான் கோயில் கட்டிடம் கட்டப்படுகிறது. இக்கட்டிடத்திற்குக் கும்பாபிஷேகம் எனப்படும் குடமுழுக்கு முதலிலும் அதற்குப் பிறகே கருவறைக்குள்ளிருக்கும் உருவத்திற்கு வழிபாடும் விழாவும் நிகழ்த்தப் படுகிறது நமது சமய மரபில்.

அருவமான ஒளி அல்லது பிரம்மம் மூலத்தில் சதுரமான வடிவம் தாங்குகிறதெனச் சொல்லும் போது அச்சதுர வடிவத்திற்கு நாற்புறம் என்பது தொல்பெயராகும் என்பதை இங்கே குறிப்பிடல் அவசியமாகிறது. இதுவும் அவ்வொளி யணுவினை இயல்பான வடிவமெனப்பட்டு அவ்வடிவம் நாற்புறத்தியல் என்றே மரபில் சொல்லப்படுவதாயிற்று. அதாவது நாற்புறத்தோடு – நான்கு பக்கங்களோடு – இருப்பது அதன் இயல்பு என்பது தான் அதன் பொருள். [எனவே தான் உடல் தரித்த பொருளாக அம் மூலப் பொருளுக்கு உருக் கொடுத்திட்ட ஆதிச் சிற்பிகள் நான்கு கரங்கள் [பக்கங்கள்] கொண்ட உருவமாகக் கடவுட் படிமங்களை இயற்றியுள்ளார்கள்]. இச் சூக்கும நிலையில் சதுர அணு கனப் பொருளாகவுமிருக்கு மாதலால் ஒரு கனசதுர ஒளிக் கருவாகவே இவ்வடிவு இருப்பதாகவும். இக் கனசதுரக் கருவில் உள் நின்று உயிர்ப்புடன் இயங்குவதே தீப் பொருளாகிய ஒளிப் பொருள் [பிரம்மம்]. இந்தக் கனசதுரத்திற்கு முச்சதுரம் என்று பெயர். [காண்க: திருமந்திரம்]

கருவுக்குள் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் தீப் பொருளைத் தான் சிவப் பொருள் என்றும் சிவம் என்றும் பிறகு செயல் வைத்து, உடல் கொடுத்து சிவன் என்றும் சமயத் துறையில் சொல்லி வருகிறோம். அச்சிவம் ஆடிக் கொண்டிருப்பதால், ஆடலான் என்றும், ஒளியே ஆடுவதால் அவ் ஆடலை ஒளிநடம் என்றும் அதுவே உருவம் தாங்கிய நிலையில் ஒளி நடராசன் என்றும் பல பெயர்கள் ஏற்பட்டுவிட்டன. இப்படித் தான் வாஸ்து மரபு உயிர்ப்புள்ள இவ்வொளியைப் பெயரிட்டுச் சொல்கிறது.

இந்த மூலப் பொருளாகிய ஒளிப் பொருள் உடல் தாங்கிய நிலையில் கனசதுரமாக இருக்கிறது என்பதை வாஸ்து மரபை விடுத்து ஏதாவதொரு தொல் மரபு சொல்கிறதா? அல்லது கொள்கிறதா? அல்லது அனுமானிக்கிறதா? என்று கேட்பின் அதற்கு ஒரு விடையும் இருக்கத்தான் செய்கிறது.

வேத நெறியில் வேள்வி செய்வதற்குத் தீ வளர்க்கப்படும். அத் தீ வெளிப்படுத்திடும் சுடர் ஒளிமயமாக இருக்கும். அச்சுடரில் வெளிரின நீல வண்ணத்தில் ஒரு பகுதி காணப்படும். அப்பகுதியானது, சுடரின் பிற பகுதிகளைக் காட்டிலும் சூடு மிகுந்திருக்கும். அந்தப் பகுதிக்கு வைஸ்வானர அக்னி என்று பெயர். விஸ்வநரத்தின் அக்னி என்று அதன் பொருள். (Cosmic fire) அதாவது அண்டத் தீ என்பது அதன் விளக்கம். அதனைப் பேரொளி என்றும் சொல்வதுண்டு. இவ்வேள்வித் தீயில் ஒளிக்கருக்கள் தோன்றுகின்றன. இதையொத்த தீ தான் நமக்குள்ளும் விளைகிறது. இங்ஙனம் விளைந்த தீக்கரு பொன்னிறமானதென்றும் சொல்லி அதனை விந்து என்றும் பெயரிட்டுச் சொன்னதோடு விட்டுவிடாமல் சதுரஸ்ரமானது என்ற கருத்தும் ஒரு நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. மரீசி என்ற முனிவர் விமானார்ச்சனகல்பம் என்ற நூலை எழுதியிருக்கிறார். அதற்கு மறு பெயர் மரீசி சம்ஹிதை. இஃதொரு வைணவ வழிபாட்டு ஆகம நூல். அந்த நூலில் யோக மார்க்கத்தில் நின்று சகுனத்யானம் செய்திடும் முறையினைக் கூறுமிடத்தில் இக் கருத்து இடம் பெறுகிறது.வைணவ வழிபாட்டு மரபில் விகனசர் என்ற மகரிஷி வழியாகத் தோன்றிய வைகானச மரபு முழுக்க முழுக்க வேத நெறி தழுவிய ஒரு தொல் மரபு என்பதை இங்கு குறிப்பிட்டு வைப்பது மேல்நிலை ஆய்வுக்குப் பயனளிக்கும் என்று கருதப்படுகிறது. **“பிராணாயாமேன விகஸித ஹ்ருத் கமலாந்தராகாஸே, வைஸ்வானர சிகாமத்யே, சதுரஸ்ரம், ஹேமாபம், பிந்துனாசஹ”** என்பது அச்சொற்றொடராகும்.

எனவே, மூலத் தீயானது சதுரமான உடல் தரிக்கிறது என்பது மேலும் உறுதியாகிறது. இங்கே energy ஆனது material form தரிப்பதை நோக்குக. Energy –ஐ மூலம் எனக் கொள்ளக் கூடுமானால் அந்த மூலத்தை vibrant/live matter என்று சொல்லலாம். பரம்பொருள் நிலை இஃதென்றாகிறது. எனவே தான் இந்நுண் பொருளை "வஸ்து" என்று வாஸ்து மரபு கொண்டிருக்க வேண்டுமென்க.

இச்சதுர அணுவானது கன சதுர நிலையில் ஒரு சீலம் நிறைந்த வடிவமாகிறது. Geometrically perfect form நீளம், அகலம், கனம் ஆகிய மூன்று அளவுகளும் எப்பக்கத்திலும் சமம். ஒவ்வொரு பக்கத்தின் பரப்பளவும் சமம். இத்தகைய சீல நிலையை அல்லது சீர்த்தியை அது பெற்றிருப்பது உள்ளிருந்து ஆடிடும் தீப் பொருளின் அசைவின் சீர்த்தியை (Rhythm) உணர்த்துகிறது. அதாவது உள்ளிருக்கும் ஆற்றலின் இயல்பான இயக்கத்தின் ஒழுங்கை அல்லது நெறியை உணர்த்துகிறது. எனவே [கலை வழிப்பட்ட] ஆடல் எனப்பட்டது.

இத்தகைய சதுர வடிவங்களின் சேர்க்கையே ஆகாசமாகிறது. சதுரம் என்று சொல்லும் பொழுது அஃதொரு இடத்தை (space) – ஐ உணர்த்துகிறதல்லவா? ஆம். ஒவ்வொரு அணுவும் ஓர் இடமே – சிற்றிடமே subtle space. இங்ஙனம் பல சிற்றிடங்கள் சேர்ந்த விரிப்பிடமே விரிவே [விண்ணே] ஆகாசம் ஆகிறது. வாஸ்து மரபில் இவ்வாகாசம் இடம் என்றே சொல்லப்படுகிறது. நமது உள்ளமும் பேருள்ளமும் ஆகாசமாகிறதால் இந்நிலையில் உள்ளமும் பேருள்ளமும் இடம் எனப்படுகின்றன. ஆகையினால் உள்ளமே மூலமாகி அஃது உணர்வுற்று, அவ்வுள்ளமே கோலமாகிறது. Spatial form என்று சொல்வதற்கு மாற்றாக "இடமே மூலமாகி அவ் இடம் கொண்ட உணர்வே இட வடிவமாகிறது". Spatial form என்றும் சொல்லலாம் அல்லவா? இதனைச் சுருக்கிச் சொன்னால் இடமே வடிவமாகிறது – அதாவது உணர்வே இடமுறுகிறது என்பது கருத்து. ஞாலப் பொருள்கள் அனைத்தும் இட வடிவங்களே. நாமும் இட வடிவமே. இதுவே பிரபஞ்சத் தோற்ற ரகசியம்.

இச்சிற்றிடம் கனசதுர வடிவமுடையதால், வாஸ்து மரபு ஒரு கலை மரபாகையால் – இதனை ஓர் அறை எனக் கொண்டும் அவ் அறைக்குள் தீப் பொருள் ஆடிக் கொண்டிருப்பதால் அதனை "அரங்கம்" அல்லது "அவை" என்றும் சொல்வதாயிற்று. இதனைச் சிற்றவை என்றும் சொல்லும். இது பொன்னிறமாகவும் இருப்பதாகச் சொல்லி "பொன்னவை" என்றும் பெயர் சூட்டுகிறது. இதுவே பிறகு

சிற்றம்பலம் என்றும் பொன்னம்பலம் என்றும் ஆகியது. எனவே சிற்றம்பலங்கள் சேருவதினால் ஞாலப் பொருள்கள் உருப் பெறுகின்றன என்ற ஓர் அரிய – ஆகாச தத்துவத்தை – அறிவியல் கருத்தை – சிதம்பரக் கோவில் உருவகித்து நிற்கிறது. இது வாஸ்து மரபு கண்டு கொண்ட சிதம்பர ரகசியமாகும். நிற்க.

இடமே வடிவமாகிறது என்று சொன்னால் அஃது எப்படி நிகழ்கிறது என்ற ஒரு வினா எழுகிறதல்லவா? இதற்கு சொல்லிடும் விடை மேற்சொன்ன பிரம்ம இரகசியத்திற்கும் மேலான ரகசியமாகவிருக்கிறது. இந்த இரகசியத்தைத் தான் சிற்ப ரகசியம் என்று தொல் மரபில் கொண்டிருக்கிறார்கள். இது கணக்கியலைச் சார்ந்ததாகும். இதனைச் சிறிது உற்று நோக்குவோம்.

உள்ளம் என்பது ஒளிக் கருக்களால் ஆனது என்று முன்பு கண்டோம். ஒவ்வொரு ஒளிக் கருவும் உயிர்ப்பும் உணர்ச்சியும் கொண்டது என்றும் கண்டோம். எனவே இயல்பில் உள்ளும் தன்மையது என்றும் பார்த்தோம். நாம் உள்ளுகிறோம் என்றால் ஒளிக் கருக்களான உள்ளமே அல்லது இடமே உள்ளுகிறது என்பதுதான் பொருள். அங்ஙனம் உள்ளமானது உள்ளுவதை எண்ணம் என்று சொன்னால் அவ்வெண்ணம் உருப் பெறுவதற்கு இவ்வணுப் பொருள்கள் [செல்கள் போல] இணைய வேண்டும் என்று சொல்லத் தெரிகிறதல்லவா? ஆம். இவ்வணுக்கள் ஒன்று சேருவதினாற்றான் உருத் தேருகிறது. சாதாரணமாக ஒரு பொருளை நாம் செய்ய வேண்டுமானால் அல்லது ஒரு பொருளுக்கு உருக் கொடுக்க வேண்டுமானால் அதற்கு அடிப்படையாக இருப்பது அதற்கான பொருளும், பொருளைச் சேர்ந்திட அளவுகளுமாகுமல்லவா? இங்கே அணுக் கருவே பொருளாகிறது. அவை சேர்ந்திடும் அளவே எண் கணக்காகிறது. இதனை வேறு விதமாகச் சொன்னால் "எண்ணங்கள் எண்கள் ஆகித்தான் உருவங்களாக தோற்றம் கொண்டிட முடியும்" என்று சொல்லலாம். இது முற்றிலும் உண்மையே. எண்களே உருக்களைத் தோற்றுவிக்கின்றன. எண்களால் ஆன உருவை எண்ணுரு என்று மரபு பேசுகிறது. மூலத்தின் அணுக்கள் சேர்ந்திடும் கணக்கே மூலக் கணக்கு அல்லது எண்களால் ஆன எண் கணக்கு ஆகிறது.

அடுத்து, இயல்பாக இந்த அணுக்கள் எக்கணக்கில் அல்லது எந்த எண்ணிக்கையில் சேருகின்றன? என்பதை உற்று நோக்குவோம்.

ஒரே மாதிரியான – தனித்தனியான – இவ்வணுக்கள் உள்ளிய ஒரு பொருளாக மாறுவதற்கு எட்டெட்டாகச் சேருகின்றன என்று வாஸ்து மரபு ஒரு கணக்குச்

சொல்லுகிறது. இங்ஙனம் எட்டெட்டாகச் சேர்வதே அணுக்களின் இயல்பாம். எனவே அஃது அணுவியலாம். அணுக்கள் ஒரே அளவினதாக விருப்பதினால் அவ் ஒன்றின் [ஓர் அணுவின்] எட்டு மடங்கு முதலிலும், இது போல எட்டு மடங்கினது இரண்டாவதும், பிறகு இதைப் போன்ற எட்டு மடங்கினது மூன்றாவதும், இங்ஙனமே ஐந்து நிலைகளை அடைந்த பின் எல்லாம் சேர்ந்து உள்ளிய பொருள் உருப் பெறுமாம். ஒளியால் விளைந்திடும் தெரிபொருளுக்கும் ஒலியால் விளைந்திடும் சொற் பொருளுக்கும் இவ்விதி பொருந்திடும். அதாவது ஒளியணுக்களும் ஒலியணுக்களும் இப்படித்தான் சினைக்கின்றன.

0	0	அருவநிலை
1	8^0	கருநிலை
1 X 8	8^1	முதல் நிலை
8 X 8	8^2	இரண்டாவது நிலை
8 X 8 X 8	8^3	மூன்றாவது நிலை
8 X 8 X 8 X 8	8^4	நான்காவது நிலை
8 X 8 X 8 X 8 X 8	8^5	ஐந்தாவது நிலை [உருநிலை]

இதனை மேலும் உற்று நோக்கினால் மூலத்தில் ஒன்றாக இருந்த இவ்வொளியணு அது போன்ற மற்றொரு அணுவோடு சேர்ந்து இரண்டாகி,பிறகு இவ்விரண்டும் சேர்ந்த கூட்டமானது மற்றொன்றோடு சேர்ந்து மூன்றாகி,பிறகு 4 ஆகி,5 ஆகி,6 ஆகி,7 ஆகி, இங்ஙனம் ஒவ்வொன்றாகச் சேர்ந்து எட்டுவரை தான் கூடும். அதன்பின் ஒரு பொருளாகிறதாம். பிறகு இதைப் போன்று எட்டு மடங்கான நிலையில் மற்றொரு பொருள் தோன்றுகிறது. பிறகு இரண்டாவது நிலையில் அடங்கிய அணுக் கூட்டம் போல் எட்டு மடங்கான மற்றொரு கூட்டம் மேலுமொரு பொருளாக மாறுகிறது. இங்ஙனம் ஐந்து கூட்டு நிலைகள் ஒன்றித்து உள்ளிய பொருளாக மாறுவதற்கு இஃது ஓர் அடிப்படைத் தேவையென்று வாஸ்து மரபு கண்டிருக்கிறது. இதனை அடிப்படைக் கணக்காகவும் கொண்டிருக்கிறது. இதனை அடிப்படையாக வைத்து சிற்ப நூல்கள் கீழ்க்கண்ட வாய்பாடினைச் சொல்லி வைத்திருக்கின்றன. அணுவிலிருந்து தொடங்கும் வாய்பாடு உலகத்திலே நம் வாஸ்து மரபிற்றான் இருந்து வருகிறது! இவ் வாய்பாடு இன்றும் சிற்பிகள் தம் வழக்காற்றில் உள்ளது.

8^1 அணுக்கள் [பரமாணு]	1 தேர்த்துகள்
8^2 தேர்த்துகள்	1 இம்மி
8^3 இம்மி	1 எள்ளு
8^4 எள்ளு	1 நெல்
8^5 நெல்	1 பெருவிரல்
[ஒரு பெருவிரல் [ஒன்னே காலரைக் கால்]	1 3/8 ஆங்கில அங்குலம்]
24 விரல் [இரண்டே முக்கால் அடி]	1 முழம் [2 3/4 ஆங்கில அடி]

இங்ஙனம் எட்டு எட்டாக அணுக்கள் சேருவதை எண்ணின் இயல்பு என்று வாஸ்து மரபு கொண்டுள்ளது என்றும் முன்பு சொன்னோம். இதனை எண்ணியல் என்றும் இந்தக் கணக்கு முறைக்கு கணக்கியல் என்றும் பேசும். இதனால் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, என்ற படிமுறை எண்கள் ஏற்படுகின்றன. இவ்வெண்கள் அனைத்தும் 'ஒன்று' என்ற எண்ணின் வரிசை எண்களாக - ஒன்றின் மடங்கினதாக அமைகின்றன. [1], [1+1], [1+1+1], [1+1+1+1], [1+1+1+1+1] ....[1+1+1+1+1+1+1+1]. இவ்வெட்டு எண்களும் சேர்ந்தவுடன் தெரிபொருள் தோன்றிவிடுவதால் ஒன்பதாவது என்ற ஓர் எண் இவ் அடிப்படைக் கணக்கில் இல்லை என்பதை உற்று நோக்குக. ஒன்பதாவது நிலையில் உருவமே தோன்றிவிடுகிறது. உருவம் ஒன்பதாவது எண் அல்ல. ஆகவே ஒன்பதாவது எண் என்ற ஒன்றே, பழைய கணக்கியலில் கையாளப்படவில்லை. எனவே ஆதி எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 என்பனவே ஆகும். இதிலும் ஒவ்வொரு எண்ணும் தொடக்க எண்ணாகிய ஒன்றின் மடங்காக அமைவதினால் ஒன்று என்ற எண்ணே மூல எண் ஆகிறது. ஆக எட்டு எண்களைச் சுருக்கிப் பார்த்தால், இப்பொழுது ஒன்று [1] என்ற எண்ணானது - நிலையான எண்ணாக - மூல அளவாகக் காட்சி தருகிறதல்லவா? இன்னும் சுருக்கிப் பார்த்தால், இந்த ஒன்று என்ற எண் தோன்றுவதற்கு முன்பாக எண்ணே இல்லை என்ற நிலையும் இருக்கிறது. அதுவே அருவநிலை; இந்த அருவ நிலையே சுழி என்றும், சூன்யம் என்றும், பூச்சியம் [0] என்றும் சொல்லப் படுகிறது. எனவே அருவ நிலைக்கும் உருவ நிலைக்கும் இடைப்பட்ட நிலையில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8 ஆகிய எண்கள் அமைகின்றன. இப்பொழுது இக்கணக்கியலை உற்று நோக்கினால் 0 மற்றும் 1 ஆகிய இரு எண்களே நிலையான - அடிப்படையான எண்களாகத் தெரியவருகிறது. இந்த இரண்டு எண்களை வைத்துத்தான் பிரம்மம் ஆகிய ஒளிப்பொருள் இவ் ஞாலப் பொருள்களை படைக்கின்றனது அல்லது வாஸ்து

மரபு சொல்வது போல ஞாலப் பொருளாக உருமாறுகிறது என்று உறுதியாகிறது.

இக்கணக்கு எவ்வளவு நுட்பமானது! எவ்வளவு எளிமையாகவும் உளது! இத்தகைய நுட்பக் கணக்கைத் தான் தன்னுடைய மூலக்கணக்காக வாஸ்து மரபு கொண்டிருக்கிறது. ஒன்றின் பெருக்கமாக வரும் போது நெடுங் கணக் கென்றும், ஒன்றின் பின்னமாக வரும் போது குறுங்கணக்கென்றும் சொல்லப்படுகிறது. கட்டிடக் கலையில் இந்த எண்ணியலின் தத்துவம் கையாளப்படுகிறது. நெடுங் கணக்கும் குறுங்கணக்கும் வடிவங்களைத் தோற்றுவிக்கும் உறுதி மிகுந்த அளவாகக் கொள்ளப்படுகிறது.

மேலே காட்டப்பட்டிருக்கும் எண் கணக்கின் அமைப்பினை Arrangement உற்றுப் பார்த்தால் ஓர் உண்மைப் புலப்படக் கூடும். முதலில் ஒன்றாக இருந்தது 8 ஆகி, 8 X 8 ஆகி, 8 X 8 X 8 ஆகி, 8 X 8 X 8 X 8 ஆகி, 8 X 8 X 8 X 8 X 8 என்ற எட்டின் மடங்கான ஒரு வளர்ச்சியை multiple of eight உணர்த்துகிறதல்லவா? ஐந்தடுக்கு அலைகளாகவும் விரிந்து விரிந்து செல்வதாகவும் தோன்றுகிறதல்லவா? உண்மையில் இவை அலைகள் தாம். நம் உள்ளத்திலிருந்து புறப்படும் சூக்கும அலைகள் தாம். இந்த அலைகளில் மிதப்பனவே அணுக்கள். இதில் ஒரு லயமும் rhythm/order இருப்பது தெரிகிறதல்லவா? இந்த லயம் உள்ளத்தின் இயக்க லயமாகும். இது நமது சிதாகாசத்தின் (Inner space) லயமட்டுமல்ல, பேராகாசத்தின் லயமுமாகும் என்று வாஸ்து மரபு சொல்கிறது. இதனை Universal order என்றும் பிரபஞ்ச லயம் என்றும் சொல்லலாம். அதாவது பரம் பொருளே இந்த லயத்தில் தான் இயங்குகிறது என்பது பொருள். ஐந்தைந்தாகப் பாய்ந்திடும் அலைகளின் லயத்தை ஐந்தியல் என்றும் ஐந்திறம் என்றும், ஐந்தொழில் என்றும், பஞ்சகிருத்யம் என்றும் வாஸ்து மரபு சொல்லுகிறது. இந்த நிலையில், ஒரு பொருள் விளைந்திடத் தேவையான தொழிலும் பொருளும் இருப்பது தெரிகிறதல்லவா?

இயற்கையானது ஐந்தியல் நெறியில் செயல்படுகிறது. அதன் விளைவாக எட்டியல் நெறியில் அணுப் பொருள்கள் சேருகின்றன. இயக்கத்துக்கு ஐந்தியலும், ஆக்கத்துக்கு எட்டியலும் அடிப்படையாகின்றன.

மேற்குறிப்பிட்ட லயக் கணக்கானது - நுட்பத்தில் - உண்மையில் - என்ன என்பதையும் வாஸ்து மரபு கண்டு சொல்லிவிடுகிறது. 1, 1+1, 1+1+1, 1+1+1+1, 1+1+1+1+1 .... என்ற எண்கள் உண்மையில் நமது உள்ளம் இயங்கக் கூடிய காலத்தின் அளவுகள் என்று சொல்லுகிறது. அக்கால அளவை மாத்திரை என்று

சொல்லுகிறோம். இச்சொல்லை பிரித்துப் பார்த்தால் மா + திரை என்று பிரிந்து சேரும் பொழுது மாத்திரை என்றாகிறது. மா என்பது பெரிய மகத்தான/ வியப்பான என்ற பொருளையும், அளவு என்ற பொருளையும் தரும். திரை என்ற சொல் அலை என்ற பொருளைத் தரும். எனவே மாத்திரை என்பது அளவு அலை ஆகின்றது. அலை காலத்தால் – கால விசையால் – தோன்றுவது. இஃது ஆன்ம சக்தியின் வெளிப்படு விசை அல்லது வேகம் அல்லது ஆற்றலாகும். காலம் என்பது நாம் வெளியுலகத்தில் வழக்காற்றில் சொல்லி வரும் ஐந்து மணி, எட்டு மணி, பத்து மணி, என்ற அளவு அல்ல. இதனை ஒரு சிறிது உற்று நோக்குவோம்.

நமது உள்ளமாகிய சிற்றாகாசத்தில் [மூலத்தில்] நுண்ணணுக்கள் இருக்கின்றனவே அவ்வணுக்கள் தான் நாம் ஒன்றை எண்ணும் பொழுது, முயங்கித் தானாக, உருக்குலைந்து உருகி ஒளியை கிளப்பி ஒளியலைகளை [ஆற்றல்] உமிழ்கின்றது. தொடக்கத்தில் கனசதுர வடிவமாக இருந்து அவ்வணு துடிப்புற்று இந்த அலைகளைத் தோற்றுவிக்கிறது. இவ் அணு துடிப்புறும் நொடியே "காலம்" எனப்படும். 'காலவிசை' என்றும் சொல்லப்படும். இஃது அதிவேகமாக நிகழ்வதாகும். மனோவேகம் என்று சொல்லலாம். இயல்பில் சதுரமாக இருந்த அணு தன்னைத் தானாகவே சுழற்றிக் கொள்வது, எதற்காக? தான் உணர்வுற்ற பொருளை அல்லது சொல்லை அடையவே! இங்ஙனம் சுழற்றிக் கொள்ளும் நேரத்தில் தான் அவ்வணு உருண்டையாகிறது. இஃது இப்படியிருக்க,

இந்த அணு மனோவேகத்தில் சுற்றும் பொழுது ஒளியலை தோன்றி, அவ்வலை முன்னேறி, ஐந்து அலை நிலைகளை தோற்றுவித்துக் கொள்கிறது. நினைத்த ஒரு பொருளை அடைந்திட இந்த ஐந்தலைகள் அடுக்கடுக்காக வளர்ந்து, இறுதியில் ஐந்தும் சேர்ந்து அப்பொருளை தந்துவிடுகிறது. அதாவது மூலத்தில் முகிழ்ந்த கருவானது கருத்தாவதற்கு இந்த ஐந்து அடிப்படையான அலைகள் தேவையாகின்றன என்பது பொருள். இங்ஙனம் ஒவ்வொரு பொருளும் தோன்றுவதற்கு ஐந்து ஒளியலை – அடுக்குகள் அடிப்படையில் தேவையாகின்றன என்று சொல்லும் பொழுது, அந்தப் பொருளுக்கு நிகரான சொல்லும் சம காலத்தில் உருப் பெற்றுவிடுகிறது. அங்ஙனம் அப்பொருளுக்குரிய 'சொல்லைத் தோற்றுவிப்பதே ஐந்தடுக்கு ஒளியலைகள் ஆகும்'. இப்படி ஒவ்வொரு பொருள் உணர்வானது ஐந்தைந்து ஒளியலைகளையும், ஒலியலைகளையும் தோற்றுவித்துச் சொல்லும், சொற் பொருளும் இறுதியில் கிடைப்பதாகின்றன. இவை சமய

அனுமானங்களோ, சமய தத்துவங்களோ அல்ல. இஃதொரு உள்ளத்தின் அடிப்படை விஞ்ஞான நிகழ்ச்சி – உளவியல் எனப்படும்.

இத்தகைய இயக்கத்தின் நுட்பக் காலத்தை எதைக் கொண்டு நாம் அறிவது? அளப்பது? இதுவும் கடினமானது தான். என்றாலும் இதற்கு வாஸ்து மரபு தரும் விடை வியப்பானது மட்டுமல்ல வியத்தகு எளிமையானதும் கூட. நம் உள்ளம் அல்லது அங்குள்ள அணு, அல்லது அணுவின் இயக்கக் காலத்தைக் கொண்டு அளவிட்டுச் சொல்லப்படுகிறது. இக்கால அளவு, கைநொடிப் பொழுதிற்கும் கண் இமைப்பொழுதிற்கும் ஈடாகும் என்றும் சொல்லுகிறது. முன்பு சொன்ன வாய்பாடின் நுண் அளவுகள் காலக் கூறுகளே – மாத்திரைகளே – காலத் துடிப்புகளே (Vibration of inner being).

"கண் இமை கைநொடி கால மாத்திரையே"

"கண்இமை விண்ணிமை மண்ணிமை எண்ணிமை
பண்ணிமை ஐந்தும் காலக்கூறே"

"நொடிநொடி மூலம் நெடிதுறு நோக்கின்
நொடியும் இமையும் காலம் குறிக்கும்"

"காலக் கூறே கணக்கியலாகி"

எனவே, மேலே குறிப்பிட்ட எண்களையெல்லாம் கால மாத்திரைகள் அல்லது காலக் கூறுகள் என்று கொண்டிடல் வேண்டும். ஓர் அணுவின் அளவும் [இடம்] ஒரு நொடியின் அளவும் [காலம்] சமமென ஆகின்றதை உற்று நோக்குங்கள். இப்பொழுது புரிகிறதல்லவா? எங்ஙனம் எண்ணங்கள் எண்களாகின்றனவென்று. எண்ணமே இடம்; எண்ணே காலம். எனவே காலமும் இடமும் ஒன்றே என மாபெரும் விஞ்ஞானத் தேற்றமே உருப் பெற்றிருக்கிறது. இந்தத் தொல்கலை மரபில்.

இதுவரை சொல்லிய கால நுட்பத்தைச் சுருக்கிச் சொன்னால், எண்கள் அனைத்தும், எண்ணங்கள் உருக்கொள நாம் மேற்கொண்ட அசைவால் விளைந்திட்ட, ஆற்றற் கூறுகளே – காலக் கூறுகளே என்பது தெளிவாகும். இவ்வாற்றற் கூறுகளே கலை என்ற சொல்லால் மரபு விளக்கிக் கொள்கிறது. இவ்வெண்கள் ஒரு சீலத்துக்கும் உட்பட்ட எண்கள் ஆகும். நடைமுறை உலகியலில் எண்கள், ஒன்று முதல் பல கோடி வரை செல்லுமானாலும், ஒரு பொருள் தோன்றிட அடிப்படையான எண்கள் அல்லது எண்ணளவை ஒன்று முதல் எட்டு வரை தான்

என்பது இங்கே நினைவில் கொள்ளத் தக்க கருத்தாகும். எனவே காலமும் கால அளவும், Discipline / order அதன் சீலமும் தான் என்பதையும் தோற்றுவித்திடும் ஆற்றல் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆனால் இக் காலத்தைத் தோற்றுவிப்பது அதனைக் கட்டுப்படுத்தி அழகு பெறச் செய்வதும் [சீலப்படுத்துவதும்] நமது உள்ளமாகிய மூலமே. எனவே தான் உள்ளமே கோலமாகிறது என்று சொன்னோம். உள்ளம் ஒரு நிலைப் பொருளாகையால் அதனை ஒதுக்கி வைத்துவிட்டுக் காலமே எதற்கும் மூலம் என்றும் சொல்லி வருகிறோம். காலத்தை நாம் கட்டுப்படுத்திச் சீலப்படுத்தினாலும் காலம் என்பது தன் விசையோடு மேலும் மேலும் விரைந்து சென்று கொண்டே இருக்கும். உலகப் பொருள்களை மாற்றிக் கொண்டேயிருக்கும். எனவே தான், தோன்றிய ஒரு பொருள் காலத்தின் சேட்டையால் இறுதியில் அழிந்து போகிறது. சிதைவுறும் அத்தகைய காலத்தைக் கலையுள்ளம் கட்டுப்படுத்திச் சீலப்படுத்திவிடுகிறது. இதனால் கலைப் பொருள்கள் நிலையான பொருள்கள் ஆகின்றன. அந்த நிலைப் பொருளே 'இடம்' எனப்படும் உள்ளம் ஆகும். இந்த நிலையில் நமக்கு உணர்வானது இடவுணர்வு எனப்படும். இடவுணர்வே பிரம்மானுபவம் எனப்படும். அதாவது பிரம்மமே நமக்கு உணர்வாகிறது என்பது பொருள். மேலே குறிப்பிட்ட வாய்பாடு பிரம்மத்தின் இயக்கக் கூறுகள். இயக்கக் கணக்கு; இயக்க இலக்கணம். இவ் இலக்கணத்திற்கு இலக்கியமாகச் சிற்பங்கள் இயற்றப் படுவதால் இவ் இலக்கியம் இலக்கணத்தையே சுட்டிக் காட்டிடுமல்லவா? எனவே சிற்பத்தை - சிற்பக் கட்டிடத்தை இறைப் பொருளாக - கடவுளாக ஏற்று வழிபடுகிறோம். இக்கொள்கை இன்றும் உள்ளது தானே! என்றுமுள

---

* மயனைப் பற்றி மகாபாரதத்தில் சிறப்பாகக் காணுகின்றோம். இவன் தென்னாட்டில் இருந்து வடநாடு சென்று பல நாடு நகரங்களை, மாளிகைகளை, பல விந்தைகளைச் செய்தவன். அர்ச்சுனன், மயனை ஒரு தீ விபத்திலிருந்து காப்பாற்றினான். அதற்கு நன்றிக் கடனாக அர்ச்சுனனுக்கு ஏதாவதொரு கலைப்பணி - தொண்டு செய்து ஈடுகட்ட விழைகிறான். அப்போது தன்னையும் தன் ஆற்றலையும் வெளிப்படுத்திக் கொள்கிறான். அவன் படைப்பாற்றல் மிக்கவன் மட்டுமல்ல. ஒரு கவிஞனாகவும் இருந்திருக்கிறான் என்பதும் தெரிய வருகிறது. அவன் பெயரில் 'மயமதம்' என்ற ஒரு வாஸ்து நூலும் உளது. இன்றும் உயிர்ப்புடனிருக்கும் ஒரு நூல். இருபதாவது நூற்றாண்டில் பிறந்த சிற்பியாகிய நானும் எனது மாணவர்களும், மற்றும் தலைமுறைச் சிற்பிகளும் கையாண்டு வரும் ஓர் உன்னதச் சிற்ப நூல் - மரபு கண்ட முதல் நூல்.

இராமாயணத்தில், மகாபாரதத்தில் 'சிலப்பதிகாரத்தில்' அவன் வளர்த்துவிட்ட மரபே பேசப்படுகிறது - 'மயன் விதித்துக் கொடுத்த மரபின இவைதாம்' என்று வட நாட்டிலிருந்து திரும்பி வந்த சேர மன்னன், கலைப் பொருள்களை சுட்டிச் சொல்லுகிறான்.

கலை நுட்பம் இஃதெனில் மிகையன்று.

இதே இலக்கணத்தால் அல்லது மூலக் கணக்கால் ஆனதே கவிதை, இசை, நடம். இவை ஐந்தியல் கணக்குக்கும் எட்டியல் கணக்குக்கும் உட்பட்டவையே. எனவே இவை தோற்றுவிப்பதும் இடவுணர்வே அல்லது பிரம்மானுபவமே.

எனவே நுண்கலைகள் ஆத்மானுபவக் கலைகளாக நம் மண்ணில் தோன்றுவதாயின. இத்தகைய ஆன்மிகக் கலை மரபைத் தோற்றுவித்தவன் மயன் என்ற ஆதிச் சிற்பியாவான். சிற்பத்தை இசையிலும், கட்டிடத்தை நடத்திலும், ஓவியத்தைக் கவிதையிலும் காண வைத்தவன் இவனே*. இன்னும் சற்று உயர்த்திச் சொன்னால், கணிதத்தில் சிற்பத்தைப் பார்த்தவன். எண்ணுருவாகவே பிரம்மத்தைக் கண்டவன். எண்களைப் பிரம்மத்தின் கூறுகளாக உணர்ந்தவன். நிற்க.

இந்த மூலக் கணக்கில் மேலுமொரு நுட்பம் இருக்கிறது. எண்களை 1, 2, 3, ... என்று இக்காலத்தில் நாம் எழுதுவது போல, முற்காலத்தில் எழுதியதில்லை. எண்களுக்கு மாற்றாகப் புள்ளி இட்டும், பிறகு புள்ளிகளைச் சேர்த்துக் கோடிட்டும் எழுதிக் காட்டும் நெறியொன்றிருந்தது. புள்ளியின் நெருக்கமே – அணுக்கமே – கோடாகிறது என்ற ஒரு தேற்றமும் உண்டு. இப்புள்ளி தான் பரமாணுவின் வடிவம். இப்புள்ளி தான் நுண் சதுரம். ஆனால் நடைமுறையில் இப்புள்ளியானது • என்றே குறிக்கப்படுகிறது. இப்புள்ளியை நாம் முயன்று வைப்பதால் [இது காலத்தால் – கால விசையால் ஏற்படுவதால்] சிறுவட்டமாகவே இப்புள்ளி அமைகிறது. ஆனால் சூக்குமமான புள்ளி சதுர வடிவம் என்பது கொள்கை. கொள்கை மட்டுமல்ல, இயல்பும் கூட என்று சொல்கிறது மரபு. எனவே இது புள்ளியல் என்றும் சொல்லப்படும்.

இந்தச் சதுர வடிவமான மூலப் பொருள் – ஒளி அணு – வெளிப்பட்டு 'ஒன்று' என்று ஆக்கம் பெற அல்லது உருப் பெற, அதாவது கருவாகிட, இதற்கும் உள்ளே ஏதாவது நிகழ்ந்திருக்க வேண்டுமல்லவா? இல்லாவிடில் எப்படி இக்கரு சதுர வடிவம் பெற்று வெளி வந்து நிற்க முடியும்? இஃதும் அதி நுட்பமானதுதான். இந்தக் கரு தோன்றுவதற்கு மூலத்தினுடைய ஆற்றல் – முயக்கம் அல்லது இயக்கத்தின் ஐந்தியலே காரணம் என்று தெரிகிறது. மூலம் முயங்கித் தன்னைத் தானே சுழித்துக் கொண்டு ஐந்தியலுக்கு உட்பட்டுக் கரு நிலைக்கு வருகிறது அதாவது இந்த மூலத்திற்குள் நிகழும் ஐந்தியலாற்றான் அணுவானது சதுர வடிவக் கருவாகிறது.

இவ்வைந்தியல் மரபைத் தான் இலக்கியத் துறையில் நடைமுறை வழக்காக, 'எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி' என்று ஐந்தாகச் சொல்லி வருகிறோம். கலை மரபிலோ இவ் ஐந்தியலானது – புள்ளி, கோடு, வரி, வடிவு, உருவு என ஐந்து உருநிலைகள் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலைகள் தோன்றிட உட் கணக்காக எட்டியல் கணக்கு அமைகிறது.

எனவே வெளிப்பட உருக் கொடுக்கக் கையாளும் எட்டியல் கணக்கே சிற்ப நூல் தரும் வாய்பாடில் இடம் பெறுகிறது. வாய்பாடில் ஐந்தியலும், அதற்குள் எட்டியலும் அடக்கப் பட்டிருப்பதைக் காண்க.

எழுத்தும் உருவமாவதால் எழுத்துரு கொடுப்பதில் – எழுத்தால் எழுதுவதில் – ஒரு ஐந்தியல் மரபு தோன்றுவதாயிற்று. ஒன்றுக்கு ஒரு ● புள்ளி, இரண்டுக்கு●● இரண்டு புள்ளி, மூன்றுக்கு ●●●மூன்று புள்ளி, நான்கிற்கு ●●●● நான்கு புள்ளி, ஐந்துக்கு ——ஒரு கோடு, ஆறுக்குப் புள்ளியும் கோடும் <u>●</u> என்றும், ஏழுக்கு <u>●●</u> , எட்டுக்கு <u>●●●</u> , ஒன்பதுக்கு <u>●●●●</u> , பத்துக்கு ═══ இரண்டு கோடு. பத்தை இரண்டு இணை கோடுகளாகப் பிரித்துக் காட்டுவதை உற்று நோக்குக.*

மீண்டும் சொல்லுவோம். ஐந்தியல் ஆனது எழுத்துரு முறையில் பிரதிபலிக்கிறது. எட்டியல் ஆனது எண் முறையில் பிரதிபலிக்கிறது. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் என்பதின் பொருள் இப்போது புரிகிறதல்லவா? எண் இல்லாமல் எழுத்தில்லையாதலால் எண்ணுக்கு முதலிடம் கொடுத்தனர் அறிஞர் பெருமக்கள்.

இஃது இங்ஙனம் இருக்க, வழக்கில் 1, 2, 3, ...8, 9, 10, 11,12, 13, ... என்ற தொடர் எண்கள் நிரம்ப இருப்பினும் ஒரு பொருளுக்கு உருக் கொடுத்திட அடிப்படையில் 8 எண்களே கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே சொல் வழக்கில்

---

* "மாப்புள்ளி ஒன்றே யன்றோ ஒன்றுமா எண்ணே காட்டும்
மாப்புள்ளி இரண்டே யன்றோ இரண்டுமா எண்ணே காட்டும்
மாப்புள்ளி மூன்றே யன்றோ மூன்றுறு யெண்ணே காட்டும்
மாப்புள்ளி நான்கே யன்றோ நான்குறு யெண்ணே காட்டும்"

"மாப்புள்ளி ஐந்தே யன்றோ ஐந்துமா எண்ணுங் காட்டும்
மாப்புள்ளி கோட்டி னாலே இரண்டுறு மாக்கங் காட்டி
மாவியல் திறத்தி னாலே பத்தறு மாக்கங் காட்டும்
மாவியல் திறத்தி னாலே எண்முதற் பொருளு மாய்வாய்"

- கணிதமாச் செந்நூல் [மயன்]

தொடக்கக் காலத்தில் ஒன்பதை எட்டொன்று என்றும் பத்தை எட்டிரண்டு என்றும் இங்ஙனமே எட்டு மூன்று என்றும் சொன்னார்கள். எனவே சுருக்கிப் பார்த்தால், ஏற்கனவே சொன்னது போல, 0, 1 [சுழியும் மாப்புள்ளியும்] என்ற இரு எண்களே மூலமானவை. இவ்விரண்டை வைத்தே முழுமுதற் பொருளாகிய பிரம்மன் [Computer போல] இவ்வுலகத்தைச் சிற்பியாக இருந்து நிருமானிக்கிறான். இந்தச் ஜெகச் சிற்பியே **"விசுவகர்மன்"** என்று சிற்பக்கலை மரபில் சொல்லப்படுகிறான். மயன் என்றும் விசுவகர்மன் என்றும் இரண்டு பெயர்களைக் கொண்டு ஆதிச் சிற்பியாய் விளங்கிய மயன் தான் இந்த சுழி பற்றியும் எண் பற்றியும் பேசுகிறான். இவன் கோட்பாடு இன்றளவும் நமது சிற்பக்கலை மரபில் இருந்துவிட்டன. ஆனால் சுழி, எண் ஆகியவற்றின் பிறப்பிடத்தை இன்னும் கணித வரலாறு தேடிக் கொண்டு தானிருக்கிறது. பாரத நாடு முழுவதும் பரவி நிற்கும் வாஸ்துக்கலை மரபு **'மயன் விதித்துக் கொடுத்த மரபு'** தான் என்பதையும் செய்திக்காக இங்கே இணைத்து வைக்கின்றேன்.

நடைமுறையில் ரூபாய் ஒன்றை 2 எட்டணாவாகக் கொள்வதும், அதன் பின்னங்களை 1/8, 2/8, 3/8, 4/8, 5/8, 6/8, 7/8, 8/8 [அல்லது 1] என்று கொள்வதும் நீண்ட காலம் நம்மிடையே இருந்து இப்போது மறைந்துவிட்டதை நினைத்துப் பார்த்து இஃது எத்தகைய பேரிழப்பு என்பதை உணர்க.

இங்ஙனம் அகத்திலே நிகழும் லயத்தை நாம் செய்திடும் புறப் பொருள்களிலே நடைமுறைப் படுத்துகிறோம். அதாவது இயற்கை எப்படி ஞாலத்தைக் காலத்தால் – காலக் கணக்கால் – படைக்கின்றதோ, அங்ஙனமே மயன் வழித்தோன்றல்களாகிற – இந்திய மாயர்களாகிற – தலைமுறை தலைமுறையாக – வாழையடி வாழையென வந்திட்ட தமிழகச் சிற்பிகள் தமது படைப்புச் செயல்களைப் புரிகின்றனர். இது மிகையல்ல.

இத்தகைய கணக்கியலைக் கொண்டே கோவிலும், கட்டிடங்களும் கட்டப்படுவதால், கோவிலும் வீடுகளும் உயிர்ப்பொருள்களாக விளங்குவதாயின. இப்படி உயிர்ப்புள்ள கோவில்களைத் தான் சாந்நித்யம் என்ற சொல்லால் இன்றும் சொல்லி வருகிறோம். இதனை எய்திட, அனுபவித்திட, உதவுவதே கணிதம் ஆகிறது. கடவுளே கணக்கில் அடங்கி நிற்கிறான். இப்படிக் சுவடச் சொல்லலாம். கணக்கிற்கு மறுபெயர் கடவுள் என்பதே ஆகும்.

ஆகமம் என்பது இத்தகைய கணக்கில் கட்டுண்ட கோவிலையும் கடவுட்படிமங்களையும் வீடு, நாடு, நகரங்களையும் உயிர்ப்புள்ள இடவடிவங்களாகக் கொண்டு அவற்றை அர்ச்சிக்கின்ற விஞ்ஞான நெறி முறையைப் பேசும் பிறிதொரு technological treatise என்பதைக் கண்டு கொண்டால் நமது சமயமரபு [சமயம்=காலம்] உலகத்தில் தோன்றிய அனைத்து கலை மரபுகளுக் கெல்லாம் உச்சக் கலைமரபு (Supreme tradition) எனக் கொண்டிடல் தவறாகாது, மிகையாகாது.

இக்கலை வளர்த்துத் தந்த மரபு தான் உண்மையான ஆன்மிகமரபு. இதில் இயல், இசை,நடம், சிற்பம், கட்டிடம் என்ற ஐந்து மரபுகள் ஏற்றத் தாழ்வின்றி ஓரே வகையான ஆன்ம இன்பத்தையும் ஆன்ம சுகத்தையும் நல்குகின்றன என்றால் மிகையல்ல. நூற்றுக்கு நூறு உண்மையே! [வாழ்க ஐங்கலைகள்! வாழ்க ஐந்திறம்! வாழ்க ஐந்தமிழ்! வாழ்க ஐந்தமிழ் கலாச்சாரம்!!]

இத்தகைய தேற்றங்களையும் செயல்பாடுகளையும் மீண்டும் அடுத்து ஓரளவு ஆழமாகவே உற்றுப் பார்ப்போம். இஃதொரு தொலை நோக்குத் தான்!

இந்த ஐங்கலைகள் தமிழுக்கு உரியதாகி விட்டதால், ஐந்தமிழ் Five Fold Tamil என்ற சொல், தமிழ் மரபுக்கே உரித்தாகி விட்டது. இதற்குள் இயல், இசை, நடம் ஆகிய முத்தமிழும் அடங்கி விட்டதை உற்றுணர்க. இதையொட்டி இதே கணக்கில் கட்டிடமும் சிற்பமும் இயற்றப்படுவதால் எல்லாம் சேர்ந்து ஐந்தமிழ் என்பது தமிழக மரபுச் சொல்வழக்காயின. இத்தகைய பெருமையானது முதல் சங்க காலத்தில் தமிழுக்கு ஏற்பட்டு விட்டது. தமிழ் என்ற சொல்லுக்கு 'உருவம்' என்பது தான் இயல்பான பொருள் என்று இப்போது தெளிவாகிறதல்லவா? தமிழுக்கு இனிமை உயிர் என்பது பொருள் எனப்படுவது அடைமொழிகளே. உணர்வு நிலையில் அருவமாக இருந்த தமிழுணர்வு அறிநிலையில் ஐந்து தமிழாக உருப் பெற்று விட்டதை எண்ணி எண்ணி மகிழ்க!

இந்த எட்டு அணுக்களின் திரள் சேர்ந்த தொடக்க நிலையில் ஐந்து இடவடிவங்கள்(Spatial forms) தோன்றுகின்றன. இதனையே "புள்ளி, கோடு , வரி, வடிவு, உருவு" ஆகிய ஐந்தியல் அமைப்பு என்று கொண்டு நோக்கினால், ஒளிப்புள்ளிக்கு நிகரான ஒலிப்புள்ளிகள் சேர்ந்திடில் எப்படி அமைவுறும்? இவை தான் மொழியின் அ,இ,உ,எ,ஒ என்ற மூலஒலிகளாகவும், எழுத்துக்களாகவும் இவற்றையே இக்காலத்தில் "சரிகபத" என்ற [ஐந்து மூல ஸ்வரங்கள்] இசையொலிகளா, முன்னையதை மூல ஐயொலிகள் என்றும், எழுத்துக்கள் நிலை

அடைந்த நேரத்தில் ஐந்தெழுத்து [அ] பஞ்சாக்ஷரம் என்றும் நமசிவாய என்பது [ஸ்தூல பஞ்சாக்ஷரம்] என்றும் ஆகம மரபிலும் சொல்லப் படுவதின் உட்பொருளை உற்றுணர்ந்து பறை சாற்றுக! இந்த ஐந்தமிழை வளர்த்தாலும் இடம் கொடுத்தும் நமது தமிழகக் கோயில்களே என்றால் மிகையல்ல!

இவற்றுக்கெல்லாம் மனித உருவம் இயற்றித் தந்ததே, மூலப்பொருளின் தெரிவடிவங்கள் ஆகி அவை நமது கோயில்களில் கடவுளர்களாக ஆராதிக்கப் படுகின்றன!

இத்தகைய மூலத்தையும் ஸ்தூலத்தையும் உணர்ந்து செயலாற்றிய மயனை வேதவியாஸன் விஸ்வகர்மன் உலகத் தொழிலாளி அல்லது உலகப் படைப்பாளி என்று பெயரிட்டுப் போற்றியது எத்தகைய ஏற்றமிகு விருது? இக்கண்டு பிடிப்பு (discovery) எத்தனை நோபில் பரிசுக்கு ஏற்றதென சொல்ல முடியுமா? எல்லாம் விண்ஞான வடிவங்கள் என்றோ!

எல்லாவற்றுக்கும் மூலத்துடிப்பின் ரீதியை [நெறியை] க்கண்டு அதற்குக் கொடுத்திட்ட ஒளிநடராசனாகிய ஆடலான் படிமத்தைத் தந்தவனும் மயனே! இது தான் மூல வடிவமும் முதல் படிமமும் என்க. இதற்குக் கண்டு கொண்ட கணக்கே மூலக்கணக்கு இதுவே காலக் கணக்கு. இக்கணக்கு மறுபெயர் துடிப்பளவு. துடிப்புக்கு மூலம் உணர்வு (Conscious ness or awareness) இது தான் காலம் எனப்படுகிறது. இந்தக் காலம் உழைப்பின் வெளிப்பாடு. இறுதியில் உழைப்புத் தான் தெய்வம் ஆகிறது. அதை விட்டு விடாது காத்த பெருமை மற்றும் அருமை இந்திய மாயர்களாம் சிற்பிகளுக்கு உரித்தாகுமல்லவா?

எனவே 0,1,8 என்ற எண்களையும் எண்ணுருவாகிய - எட்டியல் வடிவினனாகிய ஆடலானையும் படைத்துத் தந்தது தமிழ் மரபே என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்.....

ஸ்தபதி.S.சந்தானகிருஷ்ணன், B.sc.,(T.Arch),M.A.,(Sanskrit)
வாஸ்து வேத ஆய்வு நிறுவனம், சென்னை.

தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் - தொண்டை மண்டல வரலாற்று நான்காம் கருத்தரங்கினை விழுப்புரத்தில் 2004 ஆம் ஆண்டு நடத்தியது. தொன்மைத் தடயங்கள் குறித்த அறிஞர்களின் தேடல்கள், கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் இக்கருத்தரங்கில் அரங்கேறின. அக்கருத்தரங்கில் ஆய்வர்கள் முன்னிலையில் இக்கட்டுரை சமர்ப்பிக்கப் பட்டது. தமிழ்நாடு தொன்மை இயல் ஆய்வு நிறுவனம் வெளியிட்ட "பண்டைத்தடயம்" என்னும் நூலில் இக்கட்டுரை இடம் பெற்றது.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடி" என்றும் மூத்த மொழி என்றும் கணக்கிட முடியாத கால அளவை அச்சொல் மேல் ஏற்றி பழந்தமிழரின் தொன்மையைப் பறை சாற்றுவதோடு நம்மவர் நின்று விட்டனர் எனலாம். மேலும், பழந்தமிழரின் வரலாறு மொழி இவற்றின் தொன்மையை ஆய்ந்திட எவரும் முன்வரவில்லை. தொல்லியல் துறையினரோ கல்வெட்டு களையும், செப்பேடுகளையும் ஆய்வு செய்வதோடு மட்டுமே நின்று விடுகின்றனர். வரலாற்றுக்கு முன்தோன்றிய இனத்தையும், மொழியையும் ஆய்வு செய்திடக் கல்வெட்டு ஆதாரங்கள் மட்டுமே உதவிடும் எனக் கூற இயலாது. ராஜாராணிக் கதைகளோடு நின்று விட்டனர். ஓருசிலர் கண்ணால் பார்த்திடும் பண்டங்களையும், கருவிகளையும், ஓவியங்களையும் பார்த்து தமது உலகியல் ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

பழந்தமிழர் தம் மொழி, கலாச்சாரம் இவைகள் வளர்ந்து ஓர் உச்சக்கட்ட நிலையை அடைந்திட்ட காலம் ஒன்று உண்டு. அது நிகழ்ந்த இடம் தற்போது நாம் காணும் பாரத நாடு அன்று. ஒரு காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கே பரந்து கிடந்த நிலப்பரப்பாக இருந்த அந்தப் பகுதி குமரிக்கண்டம் என அழைக்கப்பட்டது. தமிழர் தம் கலாச்சாரம் ஓர் உச்ச கட்ட நிலையை அடைந்த இடம் தான் இந்தக் குமரிக்கண்டம். இந்தக் குமரிக் கண்டம் கடல் கொண்டு போன பின்பு மீண்டும் நமது கலைகள் உயிர்பெற்று எழுந்தன எனலாம். ஆகையால், நமது நாட்டிற்கு இரண்டு வரலாறுகள் உண்டு. ஒன்று கடல் கோளுக்கு முன் இருந்தது. மற்றொன்று கடல்கோளுக்கு பின் உள்ளது.

ஆகையால் நாம் தற்போது குறிப்பிடுவதைப்போல கி.மு, கி.பி என்று குறிப்பிடுவதை விட கடல் கோளுக்கு முன், கடல் கோளுக்குப் பின் என நமது வரலாற்றைப் பார்த்தால் அது சரியாக இருக்கும். சிலப்பதிகார காடுகாண் காதையில் இளங்கோவடிகள் கூறுவது யாதெனில்,

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

இவ்வாறு குமரி நிலப்பரப்பானது கடல் கோள் கொண்ட பிறகுதான் நமது பாரத நாட்டின் எல்லையை வடக்கே இமயமலை முதல் தெற்கே குமரிவரை உள்ளதாகக் கூறுகின்றார். காஸ்யபம் என்ற வாஸ்து நூலும் "हिमाद्रि कन्यकोरन्तर्गतं देशमिति उदाहृतम् ॥" அதாவது இமயம் முதல் கன்னியாகுமரி வரை விரிந்துள்ள இடமே நமது நாடு ஆகும் என்று சொல்லி இக் கருத்தை உறுதி செய்கின்றது.

ஆகையால், கலைகள் வளர்ந்த அந்த இடம் குமரிக்கண்டமே அது ஐம்பூத்வீபம் என்றும் நாவலந்தீவு [நாவல் மரங்கள் அடர்ந்த தீவு] என்றும் குறிப்பிடப்படுகிறது.

இந்நிலையில் தொல்காப்பியத்தையே தமிழர் தம் மூல நூலாகக் கொண்டு இன்று வரை கூறிவருகிறோம். இந்தத் தொல்காப்பியத்தின் பாயிரத்தில் குறிப்பிடும் "ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம்" என்ற பனம்பாரனார் வரிகள் மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். கடல் கோளுக்குப் பிறகும் நாம் நமது பழைய நாகரிகத்தின் எச்சங்களைப்பா பற்றிக் கொண்டிருந்தோம் என்பதை அந்த வரிகள் குறிப்பிடுகின்றன. இந்த ஐந்திறம் என்ற நூல் முதல் சங்க காலத்தில் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற அரசனின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது என்றும் தெரிய வருகின்றது.

இந்நிலையில் 1986ம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத்தமிழர் கூடிய பேரரங்கத்தில் ஐந்திறம் என்ற ஓர் ஐந்தமிழ் இலக்கண நூல் சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தாரால் வெளியிடப்பட்டது. இந்த நூல் தான் முதல் சங்க காலத்தில் அரங்கேற்றப் பட்ட ஐந்திற நூல் என்ற செய்தி வியப்பைத் தருகின்றது. கடல்கோள்களுக்கு முன் இருந்த நமது நாகரிகத்தின் உச்சத்தைக் காட்டுகின்ற நூல் அல்லவா இந்த ஐந்திறம்! அப்படி இருக்க, அந்த நூலைப் படித்து அந்த நூல் காட்டும் தமிழர்தம் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை அறிந்திடவே இந்தச் சிறிய கட்டுரை எழுதப்படுகிறது. ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம் என்ற பனம்பாரனாரின் கூற்று எவ்விதம் தற்போது உள்ள இந்த ஐந்திறத்தோடு ஒத்துப் போகின்றது என்பதை அறிந்திட ஐந்திறத்தில் உள்ள மேற் கோள்கள் மட்டுமின்றி தற்போது நடைமுறையிலுள்ள வாஸ்து சாஸ்திரங்கள், உபநிடதங்கள், திருவாசகம், திருஅருட்பா முதலிய நூல்களின் துணை கொண்டு ஐந்திறத்தை ஆய்ந்திடும் வேளையில் கிடைத்திட்ட செய்திகளே இக்கட்டுரையாகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல குமரி மாநிலம் தான் இந்தக் கலைகள் தோன்றி வளர்ந்திட்ட இடம் என்பதை உறுதி செய்ய

"குமரி மாநிலம் நெடுங்கலை ஆக்கம்"

– ஐந்திரம் – பக்கம் 231

என்று ஐந்திர நூல் குமரி மண்ணின் தொன்மையை உறுதி செய்கின்றது. அது மட்டுமன்றி, இந்நூல் தோன்றிய இடமும் கடல்கோள்களுக்கு முன் இருந்த அந்த குமரிக்கண்டமே என்க. மேலும் வைசம்பாயனம் என்ற மற்றொரு நூல் மயனின் வரலாற்றைக் கூறும் போது இச்செய்தியை மேலும் உறுதிப்பட தெரிவிக்கின்றது.

"குமரிநன் நிலத்திலன்று குணமுறும் கலைகள் ஆய்ந்து
குமரியாள் அருளினாலே கூர்மதி நனிவிளங்க
அமர்பொருள் கருவி கண்டான் ஆற்றலும் ஆண்மை மிக்க
அமர்நிலை வீரம் ஓங்க அருங்கலை வளர்த்தான் அன்றே." -வைசம்பாயனம்-102

ஆகையால் இக்கலைகள் தோன்றி வளர்ந்திட்ட இடம் குமரிக்கண்டம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த ஐந்திர நூல் என்னென்ன விஷயங்களைப் பேசுகின்றது என்று ஆயந்திடும் போது பொருள் மட்டுமின்றி பிரபஞ்ச சிருஷ்டி விஞ்ஞானத்தையும், இப்பிரபஞ்சத்தில் நாம் காணும் எல்லாப் பொருள்களும் விஞ்ஞானப் பொருள்தான் என்றும் கூறுகின்றது.

"ஐந்திரம் காட்டும் விண் மண்ணாகும் விஞ்ஞான நிகழ்வு."

விண்ணே மண்ணாகிறது என்ற சொற்றொடர்கள் இந்த ஐந்திர நூலில் நிறைய இடங்களில் காணப்படுகிறது. விண்ணை முதற் பூதமாகவும் சிருஷ்டி களுக்கெல்லாம் ஆதாரமான இடமென்றும் ஐந்திரம் கூறுகின்றது. அது மட்டுமின்றி இந்த வெளியை "ஒளிவெளி" என்றும் "வெளிஒளி" என்றும் கூறுகின்றது. அதாவது ஒளிமயமான விண் என்பது பொருள்.

"அண்டமூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு வெளி ஒளியென"
என்று மய சூத்திரமும்,

"விண்நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்" –
என்று திருவாசகமும்,

"விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய் அண்ணி நிறைந்த
அருட்பெரும்ஜோதி" என்று திருஅருட்பாவும் பேசுவதைக் காண்க.

மேலும், நமக்கு வெளியில் இருக்கும் ஆகாஸத்தைப் போல நமது உடலுக் குள்ளும் ஓர் ஆகாசம் இருக்கிறது என்கிறது ஐந்திரம் இதனைச் சிற்றவை என அழைக்கின்றது. ஐந்திரக் கூற்றின்படி சிருஷ்டி நிகழும் இடம் பரவெளியாகிய

ஆகாசம் மற்றும் நமது உள்ளத்தில் உள்ள சிற்றாகாசம் [சிற்றவை] ஆகிய இரு இடங்களும் தான். இதனை **அகச் சிற்றம்பலம்** என்றும் **புறச்சிற்றம்பலம்** என்றும் கூறலாம். அதாவது சிற்றம்பலம் பேரம்பலம் என்க.

நாம் காணும் இவ்வுலகமும் ஏன் மனிதனும் கூட ஆகாசத்திலிருந்து தோன்றியவர்கள் என்றே நமது உபநிஷதங்கள் பதில் சொல்கின்றன.

"तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः ॥
आकाशात् वायुः वायोरग्निः अग्नेरापः अद्भ्यः पृथिवी ॥
पृथिव्या ओषधयः ओषधीभ्योऽन्नम् अन्नात्पुरूषः ॥"

*"தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச ஸம்பூத: ||
ஆகாசாத்வாயு: வாயோரக்னி: அக்னேராப: அத்ப்ய: ப்ருதிவீ ||
ப்ருதிவ்யா ஓஷதய: ஓஷதீப்யோன்னம் அன்னாத்புருஷ: ||"*

(தைத்திரீயோபநிஷதம் 2-1)

இவ்விதம் ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் தோன்றியதாக தைத்திரீயோபநிஷதம் கூறுகின்றது. மேலும் நிலத்திலிருந்து தாவரங்களும் தாவரத்திலிருந்து உணவுப் பொருள்களும் உணவிலிருந்து புருஷனும் [ஆற்றலும்] உண்டாகின்றன என்றும் கூறுகின்றது.

"விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்" என திருவாசகமும் விண்ணை முதற்பூதமாகக் கூறுவதைக் காணலாம். இவ்வாறு விண்ணிலிருந்து மண் தோன்றியது என்றால் வெறும் வெளியாக இருக்கின்ற இந்த விண்ணில் என்ன தான் இருக்கிறது என்ற கேள்விக்கு ஐந்திரம் இந்த விண்ணில் ஒளி அணுக்கள் உள்ளன என்று கூறுகிறது. இதனை விண் கரு என்றும் அக்கரு ஒளியால் ஆன கரு என்றும் ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் கரு என்றும் கூறுகிறது. அவ்வாறு கண்டு கொண்ட ஒளிக்கருக்குள் கருவுக்கும் கருவாய் மற்றொரு ஒளி இருப்பதாக கூறுகின்றது. இத்தகைய ஒளியை, ஒளிரும் ஒளி என்றும் ஒளியினை உமிழும் ஒளி என்றும் கூறுகிறது. இந்த ஒளியையே நிலையான பொருள் என்றும் கூறுகிறது. இதனை வாஸ்து சாஸ்திரம் வஸ்து என்று கூறும் வஸ் என்ற தாதுவிலிருந்து वसु to dwell, exist என்று அதாவது existence என்று கூறுவதைக் காண்க.

"ஒளிபரம் பொருளே யாகி ஒளிமுதற் பொருளே யாகி
ஒளிக்கலைப் பொருளே யாகி ஒளிநிலைப் பொருளே யாகி
ஒளியெழில் ஆற்ற லாலே ஒளிஒளி நிலையி னாலே
ஒளிஒளி யாய்வி ளங்கும், ஒளியொளிர் ஒளியே போற்றி"

-மயன் உரைப்பாடல்

"ஒளிவளர் உயிரே உயிர்வளர் ஒளியே ஒளியுயிர் வளர்தரும் உணர்வே
வெளிவளர் நிறைவே நிறைவளர் வெளியே வெளிநிறை வளர்தரு விளைவே
வளிவளர் அசைவே அசைவளர் வளியே வளியசை வளர்தரு செயலே
அவிவளர் அனலே அனல்வளர் அளியே அளியனல் வளர்சிவ பதியே"
– திருஅருட்பா

"ஒளியாகி உள்ஒளியாய் உள்ஒளிக்குள் ஒளியாய்
ஒளிஒளியின் ஒளியாய் அவ் ஒளிக்குளும் ஓர் ஒளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேல் பெருவெளியாய்ப் பெருவெளிக் கோர் வெளியாய்"
– திருஅருட்பா

ஆகையால் இந்த விண்ணில் இருப்பது ஒளிக்கருவே என்று கூறுகின்றது. மேலும் இதனை ஒளி அணு (light atom) என்றும் ஒலி அணு (sound)என்றும் கூறுகின்றது. அதாவது ஒளியில் இருந்து ஒலி தோன்றுகிறது என்பதாகும். ஐந்திர கூற்றின் படி இந்த ஒளி, ஒலி அணுக்களே இப்பிரபஞ்ச உற்பத்திக்குக் காரணம்.

மேலும் ஆகாஸத்திலிருந்து பூமியானது தோன்றுகிறது என்று கூறும்போது இக்கருத்தை

"வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனறவகுத்த வருட்பெருஞ்ஜோதி
நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த வருட்பெருஞ்ஜோதி"
என வள்ளலார் பெருமகனாரும்

"பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விறைந்தாய் போற்றி
யளி பவருள்ளத் தமுதே போற்றி"
என திருவாசகமும் இக்கூற்றை உறுதி செய்கின்றது.

அது மட்டுமின்றி இந்த மூல ஒளி அணுக்கள் பேருள்ளமாகின்ற பேராகாசத்தில் மட்டுமின்றி நமது உள்ளமென்ற சிற்றாகாசத்திலும் இருப்பதாக ஐந்திரம் கூறுகின்றது. இவ்வொளியணுக்கள் எப்போதும் துடிப்புடனே இருப்பதாகவும் கூறுகின்றது. இந்தத் துடிப்பைத் தான் "காலம்" என்ற பெயரில் ஐந்திரம் குறிப்பிடுகிறது. இதனைத்தான் வரிசைப் படுத்திச் சூத்திரச் சொற்களாக-மூலம் காலம், சீலம், கோலம், ஞாலம் என ஐந்தாக-ஐந்திரமாக-ஐம்மூலங்கள் இயற்கையின் ஐந்து ஆற்றலாக ஐந்திரம் வரையரைத்துளது. ஆகையால், நமது உள்ளமாகின்ற

சிற்றாகாசத்தில் உள்ள இந்த அணுக்களின் துடிப்பே இயல், இசை, நடம், கட்டிடம், சிற்பம் முதலியன இத்துடிப்புக்கணக்கியலால் ஐங்கலை களாக வெளிப்படுகின்றன. இதையே ஐந்தியல் என்று ஐந்திறம் கூறுகின்றது. இந்த ஐந்தியல் எவ்விதம் ஐந்து கலைகள் தோன்றக் காரணமாகின்றது என்பதின் விரிவை பிறகு குறிப்பிடுவோம்.

இந்த அணுக்களைப் பற்றி குறிப்பிடும் போது இந்த அணுக்களின் வடிவத்தை கனசதுர வடிவமுள்ளதாக ஐந்திறம் கூறுகின்றது. ஐந்திற நூலில் இச்சதுர வடிவத்தை நாற்புறத்தியல் என்று சங்கத்தமிழ் சொல்லாக குறிப்பிடுவதைக் காண முடிகின்றது. இதிலிருந்து ஒரு நுட்பத்தை நன்கு அறியலாம். அதாவது அருவ நிலையில் ஒளியாக [தீயாக] உள்ள அந்த மூலப் பொருள் ஆனது. அருஉருவ நிலையில் கனசதுர வடிவமாகி மாறி விடுகிறது. அதாவது அருவப் பொருள் பெற்ற ஒரு கரு வடிவம் தான் இந்த கனசதுரம் வடிவம். இன்னும் சொல்லப் போனால் இந்தக் கரு உடலாகும், அதன் உள்ளிருக்கும் ஒளி உயிராகும். பிறகு உருவ நிலையில் இவ்வுலகில் நாம் காணும் எல்லாப் பொருள்களாகவும் மாறுகிறது. இக்கருத்தை உற்று நோக்குகையில் இந்த மூலப் பொருளானது தீ அல்லது வெப்பம் [சூடு] எனப் பொருள் படுகிறது. இதனை **மூலக்கனல்** என்றும் **மூலச்சூடு** என்றும் **பிரணவச்சூடு** என்றும் ஐந்திறம் கூறுகின்றது. ஆகையால் கடவுள் அருவ நிலையில் சூடாக இருக்கிறான் என்பதே ஆகும். இதனையே வள்ளலார் **ஒளிவளர் உயிரே உயிர் வளர் ஒளியே ஒளியுயிர் வளர் தரும் உணர்வே** எனக் குறிப்பிடுகின்றார். இந்தச் சொற்குவியலே அருமையில்லையா?

அது மட்டுமின்றி அருவ நிலையில் ஒளியாக உள்ள கடவுள் அருஉருவநிலையில் கனசதுர வடிவம் பெற்று உருவ நிலையில் இவ்வுலகில் காணும் எல்லா பொருள்களிலும் உறைந்து கிடக்கின்றான் என்பதே ஆகும். ஆகையால், கடவுள் தன்னைத் தானே உருமாற்றிக் கொள்கின்றான் என்ற விஞ்ஞான நுட்பம் நன்கு தெரிகிறது. இக்கருத்தை தெளிவுப்படுத்தும் வகையில் வாஸ்து நூல்கள்

"सकल निष्कल मिश्र विभागत: त्रिविधमेव वपु परमेष्टिन: ।
विधिमिमं सकलस्य यथोदितं शशिधरेण तथा कथयाम्यहम् ॥"

- அகஸ்திய சகளாதிகாரம் 1

என்பதாக சகள, நிஷ்கள, மிஸ்ர நிலையிலுள்ள பரமேஸ்வரரின் வடிவ இலக்கணங்களை கூறுகின்றேன் எனத் தொடங்குகிறது.

"உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள்நிலை தெரிந்த அருட்பெருஞ்ஜோதி"
– திருஅருட்பா

என வள்ளலார் பெருமகனார் குறிப்பிடுவதைக் காண்க. ஆகையால் கடவுளின் மூல வடிவம் சதுரமே. இக்கருத்தை முதலில் கூறிய விஞ்ஞான நூல் ஐந்திறம் என்றால் அது மிகையாகாது. எனவே மூலமாக இருக்கின்ற கடவுள் சதுரமாகையில் அதிலிருந்து வெளிப்படும் எல்லாப் பொருளும் கனசதுர வடிவமுடையதே. கடவுளின் மூல வடிவம் சதுரம் என்று வள்ளலாரும் கூறுவதைக் காண்க.

"சதுரப்பேரருள் தனிப்பெரும் தலைவனென்று
எதிரற்று ஓங்கிய என்னுடையத் தந்தையே"
– திருஅருட்பா 1151

இவ்வாறு அருஉருவ நிலையில் உள்ள கனசதுர வடிவமான உடலுக்குள்ளே, உடலற்று நூல் வடிவில் நடுக்கமுற்று நடம் புரிவதே சத்திமயமான ஒளிப் பொருள். இப்பொருளுக்கு ஐந்திறன் ஆகிய மயன் சூட்டிய பெயரே ஆடல்வல்லான் என்ற நடராஜனின் உருவமாகும். இந்த நூல் வடிவினதான அப்பொருள் ஒரு லயத்தில் இயக்கம் கொள்வதை உற்றறிந்து இந்த இயக்கத் தன்மையை அல்லது லயத்தை ஐந்தியல் என ஐந்திறம் குறிப்பிடுகிறது. இதைத்தான் ஐந்தொழில் என்றும் பஞ்ச கிருத்தியம் என்றும் சொல்லப்படுவதாயிற்று. இந்த ஐந்தொழிலானது நமது சிற்றாகாசத்திலும் [சிற்றவை] பேரூள்ளத்திலும் [ஆகாசம்] நடப்பதாகச் சொல்கிறது. இவ்வாறு அருஉருவ நிலையில் கனசதுர வடிவினதாக அப்பொருள் நுண்ணிய நிலையில் இருக்கிறது என்றும் அதற்கு வாஸ்து மரபு சூட்டிய பெயர் பரமாணு என்பதாகும்.

இவ்விதம் அருஉருவநிலையில் கனசதுர வடிவமாக உள்ள இந்த அணுக்கள் நமது சிற்றாகாசத்திலும்,பேராகாசத்திலும் உறக்க நிலையில் இருக்கின்றது. நமது உள்ளத்தில் எழும் உணர்வே இவ்வணுக்களை இயங்கிட செய்கிறது. இயக்கம் கொண்ட அணுவே வேறு பல அணுக்களோடு ஒரு வகையான கணக்கில் சேர்ந்து தெரிபொருளாக மாறுகிறது.

நமது உள்ளமெனும் சிற்றாகாசத்தில் இந்த மூல வடிவமான கனசதுரம் எவ்விதம் தோன்றுகின்றது என்பதை மரீசி சம்ஹிதை என்ற வைஷ்ணவ ஆகமத்தில்,

"प्राणायामेन विकसित हृद्कमलान्तराकाशे ।
वैश्वानर शिखामध्ये चतुरश्रं हेमाभं बिन्दुनासह ।।"
– மரீசி சம்ஹிதை

நமது உள்ளத்தில் நிகழும் இந்த நிகழ்ச்சியைக் கூறுகின்றது. அதாவது பிராணாயாமம் செய்யும் போது இதயம் எனும் தாமரையானது விரிகின்றது; வெளித் தோன்றுகிறது என்றும், அந்த நேரத்தில் தோன்றும் வைஸ்வான அக்னியின் உச்சியில் (crest ல்) பொன்னிற மானதும் சதுர வடிவினதான ஒரு பிந்து தோன்றுகின்றது என்பதாகும். இந்த நிகழ்வை சற்று உற்றுநோக்கி அருவநிலையில் உள்ள ஆகாஸ ஆன்மா தன் உணர்வால் தன் சூட்டில் தானே உணர்வுற்று சின்னப்பட்டு கருவாக மாறுகின்றது அந்தக் கரு வடிவமே பொன்னிறமான சதுரம். என்க.

இதனைவலியுறுத்தும் போக்கில் வாஸ்துவித்யை என்ற கட்டிட நூலில் கீழ்க்கண்ட செய்தி மேலுமொரு ஆதாரம் ஆகும் என்பதைச் சொல்லிட விரும்புகிறேன். வாஸ்து சாஸ்திரங்களில் வஸ்து, வாஸ்து, வாஸ்து புருஷன் என்ற மூன்று சொற்கள் விஞ்ஞானச் சொற்களாகையினால் அவைமுறையே absolute energy [வஸ்து] material energy [வாஸ்து] and the subtle energy [புருஷன்] contained in the material form [வாஸ்து புருஷன்] என்று பொருள் கொள்ளப்படும். இந்த விளக்கத்திலே வாஸ்து புருஷன் ஒரு சதுரவடிவத்தில் அடங்கிக்கிடப்பதை வாஸ்து வித்யை என்ற வாஸ்து விஞ்ஞானநூல் वास्तु पुरुषः चतुरश्र संस्थः என்று விளக்கம் தருகிறது. இதனைத் தான் Microbode என்று கணபதி ஸ்தபதி சொல்லியதைவாஸ்து சக்தியானது ஒரு சதுரத்தில் அடங்கிக் கிடக்கிறான் என்பது அந்த வாக்கியத் தின் பொருளாகும் என்க.

மேலும், இந்நிகழ்வை ஐந்திற நூல்

"விரிந்து விளங்கும் விண்ணிலைச் சிற்றவை
புரிந்து நோக்கின் எண்ணிலைச் சிற்றவை
உணர்வினாய்ந்து ஒளியாற் கண்டே
உணர்கலைச் செழுந்தமிழ் சிற்பமெண் கலையே"
– ஐந்திரம் 658

என்பதாக கூறுகின்றது. அதாவது அருவநிலையிலுள்ள ஆகாஸ ஆன்மா தன் உணர்வால், ஒளியால் தானே கருவாக மாறுகின்றது என்றும் அக்கரு [64 சதுர] ஒளி அணுக்களால் ஆனது என்றும் கூறுகின்றது. அத்துடன்

"உள்ளூறும் உணர்வே உறுகலை உணர்வால்
தெள்ளூறும் நிலைகலைச் சிற்றவை நோக்கி
அறுபான் நான்கியல் அமைவுறக் கண்டே
உறுநிலை நாற்புறத் தியலைத் தியல் நெறி
கணக்கியல் மாநெறி கலைநெறித் தேர் நிலை
பிணக்கறும் தூநெறி பெருநெறி தேர்ந்தே
பெருவளியியலும் கரு வெளி திறனும்
உருவெளி ஆக்கம் ஒளிநிலை தேர்ந்தே"

– ஐந்திறம் 856

என்று நமது உள்ளமெனும் சிற்றவையின் அமைப்பினையும் செயல்பாடுகளையும் விளக்குகின்றது.

இந்தச் சிற்றாகாசத்தை [சிற்றவை] பற்றி உபநிஷதங்கள் என்ன சொல்கின்றது என்று பார்க்கும் போது தைத்திரீய உபநிஷதம் ?

स य एषोऽन्तर्हृदय आकाशः । तस्मिन्नयं पुरुषो मनोमयः ।
अमृतो हिरण्मयः ॥ ६.१ ॥

ஸய ஏஷோ ऽந்தர்ஹ்ருதய ஆகாச : தஸ்மின்னயம் புருஷோ மனோமய:
அம்ருதோ ஹிரண்மய : 6.1

அதாவது இதயத்தின் உள்ளே வெளி ஒன்று உள்ளது அதில் ஆன்மா விளங்குகின்றது. அது உணர்வு மயமானது, அழிவற்றது, பொன்னொளி வீசுவது என்பதாகக் குறிப்பிடுகின்றது. அது மட்டுமின்றி நாராயண ஸூக்தம் இதய வெளியைப் பற்றி குறிப்பிடுகையில் இதற்கு 3 அடையாளங்களை குறிப்பிடுகின்றது. ஒன்று தொப்புளுக்கு மேலே ஒரு சாண் தூரத்தில் உள்ளது என்றும். பௌதீக இதயமும் அதே தூரத்தில் தான் உள்ளது. ஆனால் அது சற்று இடது புறம் உள்ளது என்றும். ஆனால் இந்த வெளியானது நடுவில் உள்ளது. இரண்டாவது, இது சுடர் வரிசையில் சூழப்பட்டுள்ளது. மூன்றாவது அந்த இதயமும் பிரகாசிக்கிறது என்பதாக 3 அடையாளங்களைக் குறிப்பிடுகின்றது. இது பௌதீக இதயத்துக்கு பொருந்தாது.

अधो निष्ट्या वितस्त्यान्ते नाभ्यामुपरि तिष्ठति ।
ज्वालमालाकुलं भाती विश्वस्यायतनं महत् । सन्ततं शिलाभिस्तु
लम्बत्याकोशसन्निभम् । तस्यान्ते सुषिरं सूक्ष्मं तस्मिन् सर्वं
प्रतिष्ठितम् । तस्य मध्ये महानग्निर्विश्वार्चिर्विश्वतोमुखः । सोऽग्र-
भुग्विभजन्तिष्ठन्नाहारमजरः कविः ॥ ७-८ ॥

மேலும் நாராயண ஸுக்தம் 4.10.13ல் இந்த இதயத்தின் உள்ளே உள்ளது ஒரு வெளி என்றும், தாமரை மொட்டுப் போன்ற இதயம் நாற்புரங்களிலும் நாடிகளால் சூழப்பட்டு தொங்குகிறது. அதன் உள்ளே நுண்ணிய ஆகாஸம் உள்ளது. அனைத்தும் அதில் நிலை பெறுகின்றன என்றும் கூறுகின்றது.

சாந்தோக்ய உபநிஷதம் 8.11.3 ல் இதைப் பற்றி என்ன கூறுகின்றது என்பதை நோக்குகையில் இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறு மாளிகை உள்ளது அதனுள் அகவெளி உள்ளது. அதில் இருப்பதைத் தேட வேண்டும்.[புறத்தில் காணப் படுகின்றன] வெளி எவ்வளவு பெரியதோ, இதயத்தில் உள்ள வெளியும் அவ்வளவு பெரியது. வானுலகும், பூவுலகும் இதனுள் அடங்கும் அக்னி, வாயு, சந்திரன், சூரியன், மின்னல் நட்சத்திரங்கள் இன்னும் இந்த உலகில் என்னென்ன உண்டோ, என்னென்ன இல்லையோ அவையெல்லாம் இதனுள் உள்ளன என்பதாக கூறுகின்றது. மேற்கூறிய இக்கருத்துகளை உற்று நோக்கும் போது ஐந்திற நூல் நமது உள்ளமெனும் சிற்றாகாசத்தையும் [சிற்றவை] அதன் இயல்புகளையும் இந்த சிற்றாகாசத்தில் உள்ள இந்த அணுக்கள் ஒன்று சேர்ந்து 64 சதுரங்களான ஒரு மண்டலமாக மாறுவதாக குறிப்பிடுகின்றது. இதற்கு உணர்ச்சியும், ஊக்கமும் இன்றியமையாததாகும்.

"எண்ணமும் உணர்வும் எழுதரும் ஆற்றலும்
திண்ணமும் நேர்மையும் சீர்மையும் உள்ளோர்
விள்ளும் இயலால் உண்மை உணர்வோர்"

- ஐந்திறம் 31

"உறுதியும் உண்மையும் உழைப்பும் உணர்வும்
பெறுவதைக் கலைத்திறன் பெற்புற நல்குமே"

- ஐந்திறம் 8

எனவே நமது உள்ளமாகிய இந்த சிற்றாகாஸம் ஒரு கணக்கியல் வடிவம் பெற்று ஏன் ஒரு கணிப்பொறி போல செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது.

"ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருவிய அருட்பெருஞ்ஜோதி"

- திருஅருட்பா 11

மேலும் உபநிஷதம் கூறும் கருத்தை உற்று நோக்கும் போது இதயத்தில் உள்ளே வெளி உள்ளது என்றும் அதில் பொன்மயமான ஆன்மா விளங்குகின்றது என்று தைத்திரீயோ உபநிஷதமும், சாந்தோக்ய உபநிஷதமும் கூறுகின்றன. மேலும், இந்த உடம்பினுள் தாமரை போன்ற சிறுமாளிகை உள்ளதாகவும் அதனுள் அகவெளி

உள்ளது, அதில் இருப்பதைத் தேட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றதே ஒழிய இந்த சிற்றவையின் வடிவம், கணக்கியல் நுட்பத்தை அறியவில்லை எனக் கூறலாம். ஆனால் இதயத்தில் ஒரு வெளி உள்ளது என்றும் அது மிக இன்றியமை யாதது என்ற கருத்து உபநிஷதங்களில் உள்ளதை யாரும் மறுக்க முடியாது. இப்படி இருக்க இது போன்ற ஆய்வுகள் நடைபெற்றிருக்கின்றன என்றும் தெரிகின்றது. இதனை உற்று நோக்கும் போது ஐந்திர நூல் இந்த உபநிஷதங்களுக்கெல்லாம் மேலாக, முற்பட்டதாக விளங்குகிறது என்பதை மறுக்க முடியாது.

இக்கருத்துக்களிலிருந்து நமது உள்ளமாகிய அகத்தில் நடக்கும் செயல்பாடுகளே பேருள்ளமாகிய புறத்திலும் நடைபெறுகின்றது. மேலும் நாம் நம் உள்ளத்தில் ஒன்றை உன்னி-உன்னிய அப்பொருளையோ அல்லது பொருளுக்கு நிகரான சொல்லையோ தோற்றுவிக்கிறோம். அவ்விதம் பேருள்ளமாகிய பேராகாசமும் தன் இயல்பிலே உள்ளூறும் தன்மையுடையாதாயிருக்கிறது. அவ்வியல்பினாலேயே அதுவும் உன்னி - உன்னிய பொருளையும், பொருளுக்கு நிகரான சொல்லையும் வெளிப்படுத்துகின்றது. இவ்விதம் இரு வெளிகளும் [அகவெளி, புறவெளி ஒன்றை ஒன்று ஒத்த இயல்புடைதாகின்றது.]

“உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கி
கள்ளமில் உவத்தால் கருத்தே எண்ணி
சொல்லும் சொல்லே சொற்பொருளாகி
தொல்கலை நெறியாய் ஆய்வரல் நெறியே”

- ஐந்திரம் 63

இன்னும் சொல்லப் போனால் உணர்வுற்ற ஒளியணு உணர்வுக்கொத்த பொருளை வெளிப்படுத்திடும் நோக்கில் தன்னைத்தானே முதலில் முடிக்கிக் கொண்டு விசையுடன் இடமிருந்து வலமாக சுழற்சி கொள்கிறது. இச்சுழற்சியினால் வளி தோன்றுகிறது. வளியும், வெளியும் சேர்ந்தசைந்து ஓம் ஒலி என்ற மூலவொலி பிறக்கிறது. இத்தகைய மூலவொலி நம் அகவிண்ணிலும், புறவிண்ணிலும் ஒரே இயல்பில் தோன்றுவதாகும். இதுவே ‘ ஓ ’ என்ற முதல் ஒலி.

“உள்ளூறும் ஒளியே உணர்நிலைத் திறத்தால்
தெள்ளூறும் ஒளியாய் ஓசைத் திறமாய்
விள்ளூறும் சொற்பொருள் ஓங்கத் தெரிந்தே
தெள்ளூறும் மொழிநிலை கலைநிலையியலே”

- ஐந்திரம் 85

“உள்ளுவ உள்வி உள்வொலி தேர்ந்து
விள்ளுவ மொழித்திறன் மெய்க்கலை மூலம்
கொள்ளுவ கொண்டே பெருங்கணிப் பார்ந்தே
உள்ளல் எண்ணெழுத் தியல்பின் நெறியே”

- ஐந்திரம் 122

"உள்ளும் புறமும் ஒரு வழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதல் கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்தியலாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே"

– ஐந்திறம் 207

"ஒலியும் ஓசையும் உள்ளுவ வோர்ந்தே
ஒளியும் வெளியும் முறையும் நோக்கி
தெளிவுறும் உணர்வால் செந்தமிழ் ஐந்தியல்
ஒளிமிகும் ஐந்திறம் உரைப்பதிந் நூலே"

– ஐந்திறம் 43

"மொழி முதல் ஒலி ஓம் முறையின் உணர்த்தி
விழுமிய பொருளை விளக்கிச் செறிந்தே
செழுந்தமிழ் மூலம் ஐந்தியல் கோலம்
முழுமை விளக்கும் ஐந்திற நூலே"

– ஐந்திறம் 42

இதன் பிறகு அவ்வணு மேலும் எழுச்சியும் சுழற்சியும் கொள்வதால் மூல ஒலிகளான அ,இ,உ,எ,ஒ ஆகியவை தோன்றுகின்றன. இங்ஙனம் இம் மூலவொளிகள் விண்ணிலும் நம்மிலும் தோன்றுவது இயற்கையின் இயல்பு என ஐந்திறம் கூறுகின்றது. ஐந்திற கோட்பாடுகளின்படி தமிழ் மூத்த மொழியாதலால் தமிழுக்கே இது முதலில் வாய்த்தது. எனவே இயல் மொழி என்று தமிழுக்குப் பெயராயிற்று. இயற்கை முதன் முதலில் பேசிய மொழி தமிழ் மொழி, அது மட்டுமல்ல இது விண் பேசிய மொழி இன்னும் சொல்லப் போனால் இது ஒளி பேசிய முதல் மொழி.

"விண்ணொளித் தமிழாய் விளங்குறு முண்மை
எண்ணொளித் திறனுறும் எண் விளக்கும்மே"

– ஐந்திறம் 463

மேலும் ஒளி முதன் முதலில் விண்ணில் இதனைத் தோற்றுவித்ததால் விண்ணொலி என்றும் ஓசை என்றும், அது வெளியில் படர்ந்ததால் அல்லது எதிரொலித்தால் வெளிமொழி என்றும் அங்ஙனம் முதலில் ஒலித்தது "ஓம்" என்று ஐந்திறம் கூறுகின்றது.

"ஒளி முதல் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே"

– ஐந்திறம் 1

இது தான் ஐந்திற நூலின் முதல் சூத்திரமாகும். மேலும், இந்த ஓம் ஒலியானது ஆகாசத்தில் நிறைந்திருக்கும் ஒலியாகையில் நிறையொலி என்றும், சுருதி போல்

ஒரே இயல்பில் ஒலிக்குமென்பதால் நேரொலி என்றும், வெளியில் முகிழ்ந்த ஒலியாகையால் அதாவது வெளியே ஒலியாக மாறுவதால் இது வெளியொலி என்றும், விண் பேசிய மொழியாதலால் விண்மொழி என்றும், உணர்த்தக் கூடிய பொருளைத் தன்னகத்தே மறைத்து அதனை ஒலி வடிவாய் உணர்த்துவதால் [அதாவது ஒலியுணர்த்தும் பொருள் நம் கண்களுக்கு புலப்படாமல் மறைந்திருக்கிறது என்பது பொருள்] ஆகையால் இது மறையொலி என்றும் பல பெயர்களால் ஐந்திரம் அழைக்கின்றது.


“நிறையொலி, நேரொலி, வெளியொலி, விண்மொழி

மறையொலி ஓமென வகுத்தற் பாற்றே” – எனக் கூறுகின்றது. இவ்விதம் “ஓம்”என்ற மூல ஒலிக்கே இயல்பில் ஐந்து பண்புகள் சொல்லப்படுவதைக் காண்க.


எனவே “ஓம் ஒலி”யானது மறை முதலாயிற்று மற்றும் மொழி முதலும் ஆயிற்று. தமிழுக்கு அடிப்படை ஒலி “ஓம்” என்பதை ஐந்திரம் வலியுறுத்துகிறது. இஃது அனைத்து உலக மொழிகளுக்கும் வாய்த்திட்ட இயற்கை நிலைதான். எனினும் தமிழ் மூத்த மொழியாகையால் இப்பெருமை அதற்கு முதலில் ஏற்ப்பட்டு விட்டதென ஐந்திர பாக்களால் புலனாகின்றது. இவ்விதம் ஓம் ஒலியை மேலும் வலித்து அசைப்பதால் ஒலியணுக்கள் ஒன்று கூடி எழுத்தொலிகளை வெளியில் உமிழ்கிறதாம். ஆகையால் தான் ஐந்திரம் சூத்திரம் **“அணுத்திறள் ஒளியே எழுத்தொலிச் சிறப்பாம்”** என்று இந்த எழுத்தொலிகள் அதாவது அ,இ,உ,எ மற்றும் “ஓ” இவற்றுடன் ஐந்தொலிகளாக தோற்றம் கொள்கின்றது. இது தான் உயிரொலிகள் என்று [உயிர் + ஒலிகள்] இலக்கணத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதிலிருந்து தமிழுக்கு இயல்பாக வாய்த்திட்ட உயிரொலிகள், அடிப்படை ஒலிகள், ஐந்து என்று ஐந்திரம் கூறுகின்றது. இவ்விடத்தில் ஓர் முக்கிய செய்தியைக் குறிப்பிட வேண்டும்.

ஓர் அனுபவமானது நமது இதயக் குகைக்குள்ளே ஓர் அணு அளவினதான புள்ளியில் முதல் காட்சியாக மலர்ந்து அங்ஙனம் மலர்ந்த உளக் காட்சியானது ஐந்து படி நிலைகளை– ஐந்து அலைகளை [ஐந்து அடுக்கடுக்கான அலைகளைப் படியாகக் கொண்டு] சுயமாகவே தோற்றுவித்துக் கொள்கிறது என்று சொல்லும் நிலையில் அந்த ஐந்து நிலைகள் முறையே அமிழ்தல், இமிழ்தல், குமிழ்தல், உமிழ்தல் இறுதியில் எல்லாம் சேர்ந்து தமிழ்ந்து தமிழாகும் என்பது ஐந்திர விஞ்ஞானம். இதனால் உணர்வின் இறுதி நிலை “தமிழ்” எனப் பெயராயிற்று. அதாவது உணர்வு மயமான எண்ண அலைகள் பிரமிடு போன்ற அமைப்பைத் தருகின்றன. அதாவது இந்த உயிரணு முதலில் அந்தராகாசத்தில் சதுர அலைகளாகத் தோன்றி அடுக்கடுக்காக

மேல் நோக்கி எழுச்சி பெற்று, அஃதொரு பிரமிடு காட்சியாக மாறுகின்றது. ஆகையால் இந்த பிரமிடை ஆன்மிக விஞ்ஞான வடிவம் என்று மேடைகளில் முழங்கியவர் டாக்டர்.வை.கணபதி ஸ்தபதியார். ஆகையால் நமது உள்ளத்தில் தோன்றிய உணர்வின் வடிவமே இந்த பிரமிடாகும். இன்னும் சொல்லப் போனால் இந்த உணர்வின் முதல் வடிவம் இஃது என்பதால் இது சிற்பம் எனப்படும். சிற்பம் என்ற சொல்லை "சித்பம்" என்று குறிப்பிட்டதொரு காலம் உண்டு எனவும் சிற்பம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்லாக "சித்பம்" என்று தமிழ் அகராதிகளில் குறிப்பிடுவதையும் சுட்டிக் காட்டுகிறார் டாக்டர்.வை.கணபதி ஸ்தபதியார் அவர்கள்.



தவளை மாநெறி



தவளைமாடத்துச்சி

ஆகையால் நம் உள்ளத்தில் தோன்றிய அனுபவமே இந்தப் பிரமிடாகிய சிற்ப வடிவம் இதன் பொருட்டே தமிழையும் சிற்பம் என்ற சொல்லால் ஐந்திரம் அழைக்கின்றது.

"சிற்பச் செந்தமிழ் சிற்றவை எண் தமிழ்
பொற்புற் றாய்தல் பெருநெறி மரபே"

– ஐந்திரம் 797

இன்னும் சொல்லப் போனால் உள்ளமாகிய சிற்றவை பெற்ற அனுபவமே ஐங்கலைகள் ஆவதால் இயல்,இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய இந்த ஐங்கலைகளையும் சிற்பம் என்றே ஐந்திரம் அழைக்கிறது.

சிற்பம்

இயல் இசை நடம் சிற்பம் கட்டிடம்

இப்போது பாருங்கள் "जगत् सर्वं शिल्पमेव भवति" என்ற சில்பவித்யா ரகஸ்யோநிஷத்தின் கூற்று நன்கு விளங்கும்.

அதாவது உலகில் உள்ள எல்லாம் சிற்பமாக இருக்கிறது என்கிறது உபநிஷதம். அப்படியானால் உலகில் உள்ளது எல்லாம் ஆடாமல் அசையாமல் சிலையாக இருக்கிறது என்று பொருளாகாது. மேற்கூறிய கூற்றை ஏற்றுக் கொண்டால் இந்த உபநிஷதத்தின் வரிகள் நன்கு புலப்படும்.

இவ்விடத்தில் மற்றுமொரு செய்தியை சொல்ல ஆசைப்படுகின்றேன். இந்த உள்ளமாகிய சிற்றவை என்ன செய்கின்றது என்ன வடிவம் பெறுகின்றது என்று குறிப்பிட்டோம். இச்செய்தியை மேலும் வலு சேர்க்க ராமலிங்க அடிகளாரின் வரிகளை இங்கே குறிப்பிடுகிறோம்.

"அயனும் மாலும் தேடித் தேடி அலந்து பேயி னார்
அந்தோ இவன் முன் செய்த்தவம்யா தென்ப ராமினார்
மயனும் கருதமாட்டாத் தவள மாடத்துச்சியே"

– திருஅருட்பா 1818

இந்த உபநிடதங்கள் கூட தேட வேண்டும் என்று குறிப்பிட்ட அந்த மெய்பொருளும், அயனும் மாலும் தேடி அலைந்த மெய்ப்பொருளும் ஐந்திறம் குறிப்பிட்ட **"தவளை மாநெறி"** தான் அதாவது 8 x 8 = 64 சதுரங்கள் கொண்ட மண்டலமாகிய தவள மாடத்து உச்சி தான் என்று அடிமுடி காண முடியாத அந்த பரம்பொருளின் வடிவத்தை, அதாவது பிரமிடாகிய அந்த சிற்ப வடிவத்தை குறியிட்டு பேசுகிறார் வள்ளலார் பெருமகனார். ஆனால் சிற்பிகளாகிய நாங்கள் இத்தோடு விட்டு விடவில்லை. அந்த பிரமிடு வடிவத்தை ஏன் இந்த சிற்ப வடிவத்தை நாம் காணும் ஆலய வடிவங்களில் அதாவது கருவறையாகிய அந்த வீட்டை சிற்றவையாகவும் அந்த சிற்றவையின் மேல் படிப்படியாக வளர்ந்து விளங்கிடும் உச்சியையே ஆலயத்தின் விமானமாகவும் படைத்துக் காட்டி அந்த ஆலயத்தையே வணங்கிடும் படி செய்தவர்கள் ஆனோம். இந்தச் சிற்பிகளை வரலாற்றில் மறைத்ததால் தான் அடி முடி தெரியாமல் போய்விட்டீர்கள்.

இதன் பொருட்டே "प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्र वित्तमः" என்று வாஸ்து நூல்கள் ஆலயம் மனித வடிவம் அதற்கு பூஜை செய்யுங்கள் என்று கூறுவதை உற்று நோக்குங்கள். இவ்விதம் அகத்தில் தோன்றிடும் உணர்வானது ஐந்துப் படிகளாக வெளிப்பட்டது. ஆகையால் உள்ளத்தில் தோன்றிய இந்த அடிப்படை ஒலிகளும் ஐந்தாகின்றது. இவ்வாறு அகத்தில் தோன்றிய உணர்வு கோட்டுருவாய் நிலை பெறுகின்றது. அதாவது கோட்டுருவாய் குறிக்கப்படுவதால் இது குறி எழுத்தாகும். இந்த குறியாக அல்லது கோடாக மாறியது எது என்றால் ஒலியே ஆகும். அந்த

கோட்டில் ஒலி மறைந்துள்ளது. ஒலித்தால் தான் ஒளியாகும் இல்லாவிடல் அது வெறும் கோடாக அதாவது பொருளற்ற கோடாக இருக்கும். இதனால் தான் நமக்கு தெரியாத கோட்டு வடிவங்களை [மற்ற மொழிகளை] ஒலிக்க முடியாமல் போகின்றோம்.

அத்தகைய எழுத்துருக்களைத் தருவது "ஒளி" என்கிறது, ஐந்திரம். ஒளிதான் ஒலிக்கும் முதல் என்கிறது ஐந்திரம். "ஒலி முதல் ஒளி" என்கிறது. அதனை

"ஒளி ஒலி வடிவாய் ஓங்கும் எழுத்தே"

"ஓம் ஒளி"என்றும் கூறுகின்றது. எனவே உரு தான் சொல்லுக்கு முதல் என்கிறது ஐந்திரம். பொருளுக்குத் தான் சொல்லே தவிர சொல்லுக்குப் பொருளில்லை. ஆகையால் நம் உள்ளமானது சொல்லைக் கொண்டு பொருளை உணர்கிறது. எனவே "ஓம்" என்பது ஒலி (sound) மட்டுமல்ல. ஓம் என்பது ஒளியுமாகும் (light) என்பதே ஐந்திர நூலின் மிக உயர்ந்த விஞ்ஞான நுட்பம்.

**"ஒளி முதல் மொழியாய் ஒலி முதல் திறனாய்
உள்ளொளித் திறனுற உயிரொளி ஓங்கி
உள்ளிருந் தெழுதரும் உமிழ்தரும் ஒலியாய்
தெள்ளுறும் தமிழாய் திகழ் வொளி மொழியே"**

- ஐந்திரம் 104

ஆகையால் ஒளிதான் முதல் மொழி. அதாவது மொழிக்கு ஆதியாக இருப்பது ஒளி பிறகு நம் திறத்தினாலேயே அல்லது முயற்சியாலே அவ்ஒளியானது ஒலியாகிறது. முதல் திறத்தினால் வெளிப்படுவது ஒலி. எனவே ஒலி முதல் திறனாகிறது.

இவ்விடத்தில் ஓர் செய்தியைக் குறிப்பிடல் இன்றியமையாததாகும். நமது உள்ளமாகிய சிற்றவை 64 சதுர ஒளி அணுக்களால் ஆனது என ஐந்திரம் குறிப்பிடுகிறது நம் திறனால் முயற்சியால் இவ்வொளி அணுக்கள் ஒலி வடிவினதான உயிரொலிகளை உமிழ்கின்றது என்று பார்த்தோம். ஐந்திரத்தில் ஒரு செய்யுள் இருக்கிறது. இதை காண்க.

**"உயிர்நிறை முயற்சி உள்வளித்திறனே
செயிரற எழும் அணுத்திரளொலி ஆற்றல்
உரமும் கண்டமும் உச்சியும் மூக்கும்
வரவே இதழ் நாப் பல்வகைத் தொழிலாய்
வேறுவே றெத்தொலி யாய்வரல் நெறியே"**

- ஐந்திரம் 62

எனக் குறிப்பிடுவதைக் காண்க. உயிர் நிறை முயற்சி உள்வளித்திறனே என்ற சொற்றொடர்களை "பிராணாயாமேன விகசித" என்ற அந்த சமஸ்கிருத

சொற்றொடர் களோடு இணைத்து பாருங்கள் இரண்டும் ஒன்றாக தெரியும். அதாவது மூச்சை யிழுத்து விடுவது பிராணாயாமம் எனப்படும். இங்கு இச்சொல் உயிர்நிறை முயற்சி உள்வளித்திறனே எனக் கூறப்படுகிறது. ஆகையால் சிற்றவையில் தோன்றிய சதுர வடிவினதான ஒளி அணுக்கள் ஒன்று சேர்ந்தே எழுத்தொலிகளை வெளிப்படுத்து கிறது என்பதே இந்த ஐந்திர சூத்திரம் காட்டும் விஞ்ஞானமாகும். இதே போல் நன்னூல் செய்யுள் பேசுவதைக் காண்க.

"நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும் அணுத் திரள்உரம் கண்டம் உச்சி
மூக்குஉற்று இதழ்நாப் பல் அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்து ஒலி யாய்வரல் பிறப்பே"

- நன்னூல் 74

மேலும் ஓம் ஒலியானது அ,இ,உ,எ,ஒ என்ற உயிரொலிகளாக வெளிப்பட்டது போல ஓம் ஒளியானது வளி,தீ, நீர், நிலம் ஆகிய மூலப் பொருளாக உயிரொளிகளாக வெளிப்படுகிறது. அத்துணையும் வெளியே செய்வதால் அல்லது வெளியே உருமாற்றம் கொள்வதால் வெளியையும் சேர்த்து ஐம்பொருள்கள் என்றும் ஐம்பூதங்கள் என்றும் சொல்லுகிறோம். இவ்வெளி யெனப்படும் ஆகாசமே ஒவ்வொன்றிலும் இருக்கிறது. அதாவது ஆகாசம் தானே இந்த பஞ்ச பூதங்களாக மாறுகிறது. இது குறித்தே,

"மண்ணினி லைம்பூ வகுத்ததி லைத்திறம்
அண்ணுற வமைத்த அருட் பெரும் ஜோதி"

- திருவருட்பா 371

என வள்ளலார் குறிப்பிடுவதைக் காண்க. ஆகையால் தான் இந்த பேராகாசம் பெற்ற ஒளி பொருட்களை அல்லது ஐம்பூதங்களை இந்நூல் கூறுவதால் இது ஐந்திறம் என்று பெயர் பெற்றது.

"ஐந்திறம்" என்ற சொல்லையே தீண்டப் பயந்த புலவர்கள், ஞானிகள் மத்தியில் இந்த வரிகள் செய்தது புரட்சிதான். இந்நூல் **ஐந்திரமா? அல்லது ஐந்திறமா?** என்று எழுந்த அந்த கேள்விகளுக்கு பதில் தந்து **ஐந்திறமே** எனக் காட்டிவிட்டார் வள்ளலார் பெருமகனார்.

ஓம் ஒலியால் சொற்பொருள்களும், ஓம் ஒளியால் தெரிபொருள்களும் அவையிரண்டும் ஒரே பொருளை - ஒரே மூலப்பொருளை உணர்த்துகின்றன என கண்டோம். அவற்றை ஒலிப்பொருட்கள் என்றும், ஒளிப்பொருட்கள் என்றும் ஐந்திறம் குறிப்பிட்டு பேசுகின்றது.

சொற்பொருளோ அல்லது உருப்பொருளோ ஆக்கப்படுவதற்கு மூலப்பொருள் வேண்டுமல்லவா? அந்த மூலப் பொருள்கள் தான் ஒளியணுக்கள். இந்த ஒளியணுக்கள் தான் உள்ளத்தின் முயக்கத்தால் ஒலியணுக்களாகவும் மாறுகின்றன.

"ஒளியணுத் திரளும் ஒலியணுத் திரளும்
ஒளிருற நோக்கி ஒளிநிலை யுணர்ந்தே
ஒளியே மூலம் ஒளிக்கலை யாய்ந்தே
வெளியுறும் நிலைதெரி ஒலியணு வாய்ந்தே
ஒளிஒலி நுட்பம் மெய்ப்பொரு ளுணர்ந்தே
தெளிவுறக் காண்டல் ஒலிநிலை யோர்தல்
ஒலிப்பொருள் மூலத் தெரிநிலை யாய்தல்
ஒலிஒளித் திறனா யோங்குறும் நிலையால்
உணர்ந்துறு மாற்றல் உணர்த்துறும் நிலைக்கலை
உணர்வுற வோங்கிச் செய்முறை யாய்ந்தே
நோக்குறும் நோக்கும் இயற்றுந் திறனும்
ஆக்குறும் ஆற்றல் மெய்க்கலைத் திறனே"

– ஐந்திரம் 485

இந்த ஒளி அணுக்கள் ஒன்றோடொன்று அணுக்கமாவதால் உரு தோன்றுகின்றது. அப்படியானல், எத்தனை அணுக்கள் ஓர் உருவை தோற்று விப்பதற்குச் சேர்த்திடல் வேண்டும் என்ற மற்றொரு வினாவும் உடன் எழுகிறதல்லவா? அவ்வணுக்கள் எட்டெட்டாகச் சேர்ந்து பிறகு எட்டின் மடங்காக விரிந்து செறிகிறது என்கிறது ஐந்திரம். இங்ஙனம் எட்டெட்டாக அணுக்கள் கூடுவது இயற்கையாகிய அவ்வணுக்களின் இயல்பு. மேலும், எட்டெட்டாக இந்த அணுக்கள் சேர்வதை வரிசை என்று சொல்லலாம். இந்த வரிசை என்பதற்கு "சீரியல்" என்ற ஓர் அழகான தமிழ்ச் சொல்லை ஐந்திரம் கூறுகின்றது. எனவே ஆக்கத்திற்கு அடிப்படையான கணக்கை எட்டியல் என்று குறிப்பிடுகிறது. இயக்கம் ஐந்தாகவும் அதன் ஆக்கம் எட்டாகவும் இயற்கையில் நிகழ்வதாக ஐந்திரம் கூறுகின்றது.

"எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி"

– ஐந்திரம் 675

"எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டென் னொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்

உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருந்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே”
– ஐந்திறம் 676

ஆகையால் இந்த ஒளி அணுக்களும் ஒலி அணுக்களும் சேர்ந்தே ஐங்கலைகளாகின்றன.[காண்க அட்டவனை]. ஆகையால் தான் அணுத்திரள் ஒளியே எழுத்தொலிச் சிறப்பாம் என்று ஐந்திறம் கூறுகின்றது.

“எட்டுறும் எண்ணே எண்ணிலை இயக்கம்
எட்டியல் திண்மை எட்டுறும் நுண்மை
எட்டுறும் வண்மை பன்மொழி யாக்கம்
எட்டுறும் நிலைநெறி ஐந்திசை யாக்கம்
எட்டுறுங் கலைநெறி ஏழிசைக் கலையாய்
எட்டுறும் உறுப்பியல் முகத்தளவியலாய்
எட்டுறுங் கையள வியல் நெறித் தன்மை
அணுதேர்த் துகளும் இம்மி எள்ளாய்
அணுகுதல் கைவிரல் எட்டெட் டெட்டாய்
கண்டுறும் நுட்பம் கணிநிலை நுட்பம்
விண்டுறும் நுட்பம் காலமா நுட்பம்
உணர்நிலை அறுபான் நான்கியல் விரிவால்
புணர்நிலை மூச்சுங் காற்றும் எண்ணெண்
நுட்பம தறிந்தே ஒட்பமுற் றாய்ந்தே
திட்பத் தியலுணர் சீர்நெறி யாண்டும்
எட்டிடன் இயலறி எண்கூர் மாந்தர்
நுட்ப மறிந்தே நுண்ணுணர் வோரே”
– ஐந்திறம் 695

மேலும் இந்த ஐந்திற செய்யுள்கள் தொல்காப்பியத்திலும் அதுமட்டுமல்ல நன்னூலிலும் காணப்படுகிறது. [காண்க அட்டவனை].

ஆகையால் ஒளி, ஒலி அணுக்களே இந்த ஐங்கலைகளாகின்றன. இப்போது கீழ்க்கண்ட வரிகளைப் படியுங்கள்.

“அணுத்தருத் தன்மையிலையோன் காண்க” – திருவாசகம்

“அணோரணியான் மஹதோ மஹியான்” – கடோபநிஷதம்

இப்போது இந்த வரிகளின் அர்த்தம் நன்கு புரிந்திருக்கும். பரம் பொருள் எங்கும் உண்டு எதிலும் உண்டு என்பதும் ஓசை ஒளியெல்லாம் ஆனாய் நீ உலகிற்கு ஒருவனாய் நின்றாய் நீ என ஏன் கூறுகிறோம் என இப்போது அறியலாம். அதாவது பரம்பொருள் தன்னை தானே அணுவடிவமாய் மாற்றிக் கொண்டு இக்கலைகளில் உறைந்து கிடக்கின்றான்.

மேலும் ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம் என்பதற்கு இங்கே மற்றொரு ஆதாரம் உள்ளது. தொல்காப்பிய நூலுக்கு பல பேர் உரை எழுதி உள்ளார்கள். இவற்றில் இராமலிங்கர் பணி மன்றத்தின் மூலம் தொல்காப்பிய ஆய்வு நூல் வெளியிடப் பட்டுள்ளது. இந்நூலில் ஆராய்ச்சியாளர்கள் திரு.மு.இராமலிங்கம் மற்றும் திரு.பகீரதன் ஆகிய இருவரும் தொல்காப்பியத்தை ஏன் இந்த தமிழ் மொழியை ஓர் விஞ்ஞான மொழி என்று குறிப்பிடும் வகையில் இன்றைய அறிவியல் கருத்துக்களோடு ஒப்பிட்டு இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். இது இந்த தமிழ் மொழிக்கு அவர்கள் செய்த மிகப்பெரிய தொண்டாகும். தொல்காப்பியத்தில் முடிவு பெறாமல் இருக்கின்ற செய்யுளை எல்லாம் முழுமை பெறும் படி அந்த வரிகளை முடித்துக் காட்டி உள்ளார்கள்.

இதில் மாத்திரை அளவைப் பற்றி குறிப்பிடும் ஒரு செய்யுள் உள்ளது.

“கண் இமை நொடி என அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே”

என்று இரண்டு செய்யுள் அடிகள் மட்டும் இருக்கிறது. ஆகையால் முற்றுப் பெறாமல் இருக்கின்ற இச்செய்யுளைக் கீழ்க்கண்டவாறு -

“கண்இமை நொடி என அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே
நுண்ஒலி உனல்முதல் நந்நான்கு என்ப”

என்று முடித்தும் காட்டியிருக்கிறார்கள்.

ஆனால் ஐந்திறம் என்று சென்னை தொழில் நுட்ப கல்வி இயக்கத்தாரால் வெளியிடப்பட்ட இந்த ஐந்திற நூலில் இச் செய்யுள் முடிவு பெற்றே உள்ளது. இதை நான் பார்த்த போது எனக்கு ஏற்பட்ட ஆச்சரியம் சொல்லிமாளாது. ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம் என்ற பனம்பாரனாரின் வரிகளுக்கு உயிர் வந்து விட்டதாக நான் உணர்கிறேன்.

அச்செய்யுளைக் கீழே காண்க.

“கண்ணிமை நொடிக்கலைக் கால மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் நுண்மதி யுற்றே
கண்ணிமை கூட்டும் காலத் தியலால்
எண்தரு கலைபல மியல்விளக் கும்மே”

– ஐந்திறம் 319

அதாவது கண்ணிமைக் காலம், நொடி எனப்படும் காலக்கூறுகளை நுண்மையாக உணர்ந்தவர்கள் கூர்மையான அறிவாற்றல் பெறுவர். அவ்வாற்றல் கண்ணிமைப் பொழுதாகிய சிறிய கால அளவைக்குள்ளேயே எண்ணிக்கை மிகுந்த பல கலை ஆற்றலைப் பெறும் தன்மையை விளக்கும் என்பதாக அந்த செய்யுள் கூறுகின்றது. ஆகையால் தொல்காப்பியத்தில் முடிவு பெறாமல் இருக்கும் செய்யுளை இந்த ஐந்திர நூலின் மூலம் முற்றுப் பெற்றதாக மாற்றுங்கள். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம் என்ற பனம்பரனாரின் சிறப்பாயிரத்துக்கு மேலும் சிறப்பு சேருங்கள்.

இவ்விடத்தில் மற்றுமொரு முக்கியச் செய்தியை குறிப்பிடல் இன்றியமையாத தாகும். ஐந்திரம் மற்றும் தொல்காப்பியபொருளதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள இச்செய்யுள்களைக் காண்க.

“காலமும் இடமும் நுண்ணிதின் நோக்கி
மூலமும் பொருளும் ஆய்தல் மரபே”– ஐந்திரம் 21

“முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிய இயல்புணர்ந்றோரே.”
– தொல் பொருள்:4

அதாவது காலமும் இடமும் முதல் பொருட்கள் என்பதாக இச்செய்யுள் கூறுகின்றது. ஐந்திர நூல் மிக இன்றியமையாததாக குறிப்பிடுவது காலம் மற்றும் அந்த காலம் தோற்றுவிக்கும் இடத்தைப் பற்றிய செய்திகள் தான் இதைப் பற்றி கீழே விரிவாக பார்ப்போம்.

கோடுகள் இட வடிவங்களாக (Spatial form) மாறுவதே ஒரு விஞ்ஞான நிகழ்ச்சி எனப்புரிந்து கொள்ள வேண்டும். இதற்கும் ஒரு வளர்ச்சி உண்டு. கோடு என்பது தோற்று வாயில் புள்ளி (Point) எனப்படும். இதனை பிந்து – விந்து (foetus) என்று சொல்லுவோம். இந்தப் பிந்து என்பது உயிரி. இந்த நிலையில் புள்ளி, புள்ளிகளால் கோடும் கோடுகளால் வரியும், வரிகளால் வடிவும் வடிவின் இறுதியில் உருவும் தோன்றுகிறது என்பதை ஐந்திர நூல் கூறுவதைக் காண்க.

புள்ளிக் கோடே வரிவியல் உருவியல்
தெள்ளு தமிழியல் எழுத்தியல் வகுத்து
விள்ளும் சொற்பொருள் கூட்டணி வகையால்
உள்ளும் ஆற்றலை உரைப்பதிந் நூலே – ஐந்திரம்37

காலமும் இடமும் கருத்துற நோக்கி
மூலமும் ஒளியும் முயன்றினி தாய்ந்தே
ஞாலமும் விண்ணும் நவையற நோக்கி
கோலத் தமிழியல் குறிக்குமிந் நூலே – ஐந்திரம் 32

இத்தகைய படி முறையில் நமது உள்ளமாகிய சிற்றாகாசத்தில் ஒளிப்புள்ளி தோன்றி – ஒளிக்கோடுகளாகி இறுதியில் ஒளிமயக்காட்சி தோன்றும். இதையே புறத்தில் கருவி கொண்டு இடவடிவங்களாக அமைத்துக் காட்டுகிறோம். இப்படித் தான் பிந்து என்ற ஒளிப்புள்ளி உருவங்களாக மாறுகிறது என்பது பிரம்ம சிருஷ்டி நுட்பமாகும். 'புள்ளி' என்பதும் ஓர் இட வடிவமே!

மூன்றோ, நான்கோ கோடுகளால் அடைபடுவது இடம் எனப்படும். கண்ணால் பார்த்தறியக் கூடிய அத்தனை பொருள்களும் இத்தகைய புள்ளிகளால் – இடங்களால் ஆன இடப் பொருள் (Spatial form) எனலாம். நமது உடம்பில் உள்ள அணுவை Cell என்று சொல்லுகிறோம். எனவே, அணு என்பதும் இடத்தாலான [அ] இடமே – நுண் இடமேயாகும் அல்லவா? இந்த இடத்தைத் தோற்றுவிப்பது தான் காலத்துடிப்பு எனப்படும். இத்தகைய அணு இடமானது துடிப்பினால் உருவாகிறது உருப்படுகிறது என்பது விஞ்ஞான நுட்பம். அணு என்பது ஒரே அளவினதான இடம் – அணுவிடம் (micro space) என்று கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே கண்ணால் பார்க்க முடியாத அத்தகைய சிறு அணுவானது காலமாகிய துடிப்பால் அத்துடிப்பின் அளவால் ஒன்று சேர்ந்து அந்த துடிப்பின் அளவிற்கு ஒத்த இட அளவை தோற்றுவிக்கின்றது என்பதே ஐந்திர நூல் காட்டும் ஓர் உச்ச கட்ட விஞ்ஞான நிகழ்வாகும்.

அதாவது அணுவளவு கொண்ட சிறு இடம் - (Space) ஒன்று அந்த அணுவின் துடிப்பினால் வெடித்து (Explotion - Big Bang) சிதறி மேலும் சிறு சிறு அணுக்களாக ஒரே அளவினதாகப் பிரிந்து அவற்றின் இணைப்பால் பிறிதொரு பொருளாக உருக் கொள்கிறது. இத்தகைய துடிப்பானது இயல்பில் துடித்துச் சிதறி மீண்டும் மீண்டும் இஃது இடைவிடாது நிகழ்வதால் பௌதிக வளர்ச்சி – உருப்படுதல் (physical growth or spatial growth) நிகழ்வதால் – இதனை இட வளர்ச்சி (growth of space) என்கிறோம். இங்ஙனம் வளர்ச்சியுற்ற இடத்தை இடம் [அ] Space என்றே சுருக்கிச் சொல்லுகிறோம். அதாவது ஒவ்வொரு அணுக்காலமும் ஒவ்வொரு அணு இடத்தை உண்டாக்குகிறது என்பது பொருள். எனவே காலமும் இடமும் சமமே – ஒன்றே – என ஆகிறது.

இவ்விடத்தில் மேலும் ஓர் செய்தியை குறிப்பிடல் வேண்டும். நமது உள்ளத்தில் கட்டுண்டு கிடக்கும் ஆகாசத்தையே "அகம்" என்றும் நம்மைச் சுற்றிலும் நம்மை சூழ்ந்தும் வெளியே உள்ள ஆகாசத்தை "புறம்" என்றும் ஐந்திரம் குறிப்பிடும். அதாவது உள்ளும், புறமும் உள்ள ஆகாசத்தில் நிரம்பியுள்ள அணுக்களே

இடவடிவங்களை அல்லது ஞாலப் பொருட்களை தோற்றுவிக்கிறது என்பதாகும் இதன் பொருட்டே ஐந்திரம் அகத்தையும், புறத்தையும் ஒன்று என்றும், ஒத்த இயல்பிலுள்ளது என்றும் குறிப்பிடும். ஆகையால் அகம், புறம் என்பதை இந்த கருத்தில் தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வள்ளலார் பெருமகனாரும் இதே போன்று பேசுவதைக் காண்க.

அகத்தானைப் புறத்தானை அணுவா னானை
அணுவினுக்குள் அணுவானை அதனுள் ளானை
மகத்தானை மகத்தினும்ஓர் மகத்தா னானை
மாமகத்தாய் இருந்தானை வயங்கா நின்ற
சகத்தானை அண்டமெலாம் தானா னானைத்
தனிஅருளாம் பெருங்கருணைத் தாயா னானை
இகத்தானைப் பரத்தானைப் பொதுவில் ஆடும்
எம்மானைக் கண்டுகளித் திருக்கின் றேனே. – திருஅருட்பா

மேலும் அணுவாகிய இடமே, காலமாகிய துடிப்பால் ஞாலப் பொருட்களை தோற்றுவிக்கின்றது என்ற கருத்தில் கீழ்க்கண்ட திருவாசகம் கூறும் செய்தியையும் படியுங்கள்

மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே, எனை ஆட் கொண்ட கூத்தனே,
ஞாலமே, விசும்பே! இவை வந்து போம்
காலமே! உனை என்று கொல் காண்பதே? – திருவாசகம்
அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க! – திருவாசகம்

ஆகையால் பிரம்ம சிருஷ்டி நுட்பத்தை அறிந்தவர்கள் தமிழர்களே என்று உறுதிப்பட கூறிட முடியும்.

இங்கு இது வரை நான் பேசிய ஐந்திற செய்திகளுக்கு உறுதுணையாக இருவர் கூறியதை மேற்கோளாக குறிப்பிட்டேன். ஐந்திற நூல் பேசுவது போன்றே இருவரும் பேசுகிறார்கள். யார் இவர்கள் - **“மன்னுமாமலை மயேந்திரமதனில் சொன்ன ஆகமம்”** என்று திருவாசகத்தில் குறிப்பிட்ட மாணிக்க வாசகர் மற்றவர் ஒளிவழிபாடு கண்ட இராமலிங்க அடிகளார் ஆகிய இருவரும் தான். ஏன் இருவரைப்பற்றி குறிப்பிடுகிறேன் என்றால் மாணிக்கவாசகர் குறிப்பிட்டது போல இந்த ஆகமம் மயேந்திர மலையில் சொல்லப்பட்டது. கடல்கோளின் போது அந்த ஆகமங்கள் கடலில் மூழ்கியதாகவும், அவ்வாறு மூழ்கிய ஓலைகளை மீன்கள் வாயால் கவ்வி எடுத்தன வென்றும், அம்மீன்கள் மீனவர்கள் வீசிய வளையில் அகப்பட்ட போது இந்த ஆகமங்களும் கிடைத்தன என்பது பொருள்.

இவ்வாறு கடல்கோளுக்கு முன் இருந்த தமிழர் தம் ஆகமங்கள் எல்லாம் மீண்டும் பெறப்பட்டுவிட்டது. பெறப்பட்ட ஆகமங்கள் இருவருக்கு கிடைத்திருக்கிறது. அவர்கள் இருவர் தான். மாணிக்கவாசகரும், வள்ளலாரும் ஆவர். அப்படி இருக்க இந்த மயேந்திர மலையில் இருந்தது யார்? இந்த ஆகமங்கள் யார் சொன்னது? என்றால் அது தான் இதுவரை நான் ஐந்திரம் என்று பேசி வந்த நூலின் ஆசிரியர் மயன் என்ற குமரிக்கண்டம் பெற்றெடுத்த செல்வமாகும். இந்த ஐந்திர நூலும் கடல்கோளில் அழியாமல் நமக்கு கிடைத்திருக்கிறது. ஆகையால் ஒரு காலத்தில் வளர்ந்து உச்ச நிலை அடைந்திட்ட நாகரிகத்தின் பொக்கிஷப்பொருள் தான் இந்த ஐந்திரம் என்ற விஞ்ஞான நூல்.

இந்த ஐந்திர நூலை இருவரும் படித்ததாக எனக்குத் தெரிகின்றது. எவ்வாறு உறுதிப்பட கூறுகிறேன் என்றால், இந்த ஐந்திர நூலில் குறிப்பிடும் ஐந்திரம், ஐந்தியல், எட்டியல், அணுவியல் போன்ற செய்திகளை அதிகமாக குறிப்பிட்டவர் இராமலிங்க அடிகளார் ஆவார்.

இந்த ஐந்திர நூலை படித்து பிரபஞ்ச சிருஷ்டி விஞ்ஞானத்தை நன்கு அறிந்தவர். அதன் பொருட்டே சாஸ்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்கிறது என்று கூறுகின்றார். அந்த செய்யுள்களை காண்க.

"சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போல்காட்ட நேராவே – நேத்திரங்கள்
சிற்றம் பலவன் திருவருள்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து"

– திருஅருட்பா 1511

"வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் – சூதாகச்
சொன்னவலால் உண்மைவெளி தோன்ற
உரைக்கவிலை என்ன பயனோ இவை"

– திருஅருட்பா 1512

மேலும் ஐந்திரத்தில் ஒரு சொல் அதிகமாக உபயோகப் படுத்தப்படுகின்றது. அச்சொல் தண்டமிழ் என்பதாகும் அதாவது இனிமையான தமிழ் மொழி என்பது தான். இச்சொல் ஐந்திர நூலுக்கே உரியது எனச் சொல்வேன். அந்த ஐந்திர செய்யுளைக் காண்க.

"தண்டமிழ் மொழியே ஐந்தியல் மொழியாய்
விண்டுறும் கலைத் தொழில் விளக்குறும் தொன்னெறி

மரபியல் செறித்தும் எண்கலை நிலைத்திறன்
வரம்புறும் இயலே ஐந்திற மெய்நூல்" - ஐந்திரம் 224

"தண்டமிழ் என்று ஐந்திரம் குறிப்பிடும் இச் சொல்லை
தண்டமிழ் மறை மொழி தருத்தனி முதலே" - திருஅருட்பா 40

எனக் குறிப்பிடுவதைக் காண்க. ஆகையால் தண்டமிழ் மறைமொழி எனக் குறிப்பிட்டது ஐந்திற நூலாக இருக்கலாம் என்பதே என்னுடைய கூற்று.

அதுமட்டுமல்ல "பெட்டியினுள்ளே பெரும் பொருள் உண்டு" என அப்பெருமகனார் குறிப்பிடுகிறார். இரண்டு கனசதுரமான பெட்டிகள் செய்து அதில் பெரும்பொருள் உண்டு என வள்ளலார் குறிப்பிடுகிறார். அப்பெருமகனார் பெரும் பொருளாக நினைத்தது இந்த ஐந்திற நூலாகக் கூட இருக்கலாம். மேலும் ஞான சித்தர் காலத்தில் வெளிப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். அந்த பொற்புறும் காலம் நோக்கி காத்திருப்போம்.

மேலும், இந்த ஆகாசமானது சப்தத்தைக் குணமாகக் கொண்டது என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் திருவாசகமும், திருஅருட்பாவும் இது ஒளி நிறைந்த இடம் என்று கூறுகின்றன. கீழ்க்கண்ட மயசூத்திரமும், திருஅருட்பா திருவாசகமும் ஒரே மாதிரி பேசுவதை காண்க.

"அண்டமூலமாய் பிண்ட மூலமாய்
கொண்டிலங்கு வெளி ஒளியென"

– என்று மய சூத்திரம்,

"விண்நிறைந்து மண் நிறைந்து
மிக்காய் விளங்கு ஒளியாய்"

– என்று திருவாசகமும்,

"விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி"

– என்று திருஅருட்பாவும் பேசுகின்றது.

ஆகையால் இந்த கருத்தரங்கம் நடக்கும் இவ்விடத்தில் அந்த ஒளிபரம் பொருளின் வடிவான வள்ளலார் இருந்திருந்தால் இந்த சிற்சபையை பொற்சபை யாக்கிப் பார்த்திருப்பார்.

பனம்பாரனார் இங்கு இருந்திருந்தால் "ஐந்திரம் நிறைந்த உலகம்" எனச் சிறப்பாயிரம் செய்திருப்பார்.

வேத வியாசர் இங்கிருந்தால் "ஜகத் சர்வம் ஐந்திர மேவ பவதி" எனக் கூறியிருப்பார்.

ஆகையால் 15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றிய அந்த மயன் எழுதிய இந்நூல் தான் ஐந்திரம். இதற்கு முன் 64 நூல்களையும் 12 செந்நூல்களையும் எழுதி கடைசியில் மயன் எழுதிய இந்த நூல்தான் ஐந்திரம். இந்நூலை உலகிற்கு மயன் அளித்து பெற்ற மகிழ்ச்சியைக் காண்க.

"அவைக்களங் கண்டே அகமகிழ்ந் தின்பால்
நவையறுஞ் சிற்ப நற்றமி ழோவியம்
ஐந்திர நூற்பா முந்துறுந் திறத்தால்
வந்தசெந் தமிழொளி ஆடலான் அருளால்
அகமகிழ்ந் தின்புற் றைம்புலத் தொன்றி
மிகுமொளி யுணர்வால் பன்னிரு செந்நூல்
மூலவைந் தியலால் முறைமையிற் றெரிந்தே
கால மியக்கும் ஆடலான் அருளால்
ஐந்தியற் செந்தமி ழழகுற வியற்றினன்
செந்தமிழ்ச் சான்றோர் சீரவை சேர்ந்தே
ஏட்டெழுத் தியற்றமிழ் ஐந்திரம் அளித்தனன்
நாட்டுணர் வோங்கும் நறுந்தமி ழுணர்வால்
இருகை குவித்தே இன்புற் றளித்தனன்
திருவுறும் ஆடலான் அருள்நிலை சிறந்தே
ஆன்றவிந் தடங்கும் அருந்தமிழ்ச் சான்றோர்
ஏன்றுள மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே
அயல்நெறிச் சாராத் தமிழொளி யுணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே"
– ஐந்திரம் 892

இதுநாள் வரை மறைந்து வாழ்ந்த இந்நூலை இனியும் மறைத்தால் அல்லது அறியாமல் போய் விட்டால் நாம் எல்லாம் வரலாற்றில் மறைந்து விடுவோம்.

"வாழ்க மயன், வாழ்க மயன் ஐந்திரம், ஓங்குக விண்மொழி தமிழ்" எனக் கூறி சிறியேன் நான் கூறிய கருத்துகளில் உண்மை இருக்கிறது ஏற்றுக் கொள்ளுங்கள். பிழை இருந்தால் மன்னித்தருளுங்கள் எனக் கூறி விடை பெறுகிறேன்.

நன்றி வணக்கம்.

❋❋❋❋❋

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
எழுத்து மொழிமுதல் ஓமொன் றுரைத்தல் வழக்கே 4 'அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்' 5 ஒளி ஒலி வடிவாய் ஓங்கும் எழுத்தே ஐ.சூ.16 எழுத்தே முதல் சார் பென்றிருவகைத்தே.17 குறிலே நெடிலென் றோசை இரண்டே 19 "உயிரும் உடலும் எழுத்தீர் இயலே" 26 "உயிர் ஐங்குறிலே ஓசை நிறைமொழி" 152 "ஐங்குறில் ஆக்கமே எழுநெடில் ஓசை" 153 "உயிர் பன்னிரண்டே ஒளிதரும் உருநிலை" 154 "எழுத்தெலாம் புள்ளி இயலல்மா நெறியே" 167 அணுத்திரள் ஒலியாம் எழுத்தியல் ஓர்ந்தே அணுக்கலை நுட்பம் ஒலியொளித்திண்மை அணுக்கலைநோக்கும்அறிமுறைப் பயனும் நிறைவுற நல்கும் அணுக்கலை நூலே 100 அணுவணுக் கூற்றி னாய்நிலை தேர்ந்தே எழுத்தொலி நெறிமுறை இயல்பினுணர்ந்து வழுத்து மோசை மாத்திரை யுணர்ந்தே நெறிப்படக் கிளந்து குறிநிலை குறித்து அறிநிலை எழுதலின் எழுத்துரு வோங்கி அணுத்திரளாக்கம் மெய்மைப் பொருள் நிலை நுணுக்குற நோக்கி நுவலுறும் நுட்பம் எழுத்துறும் மாக்க இயல்நிலையறிந்தே எழுமணுத் திரளொலி நுட்பத் தெரிந்தே எழுத்தியல் நெறியே இயம்புதல் மரபே 468 அணுத்திரள் ஒலியாம் எழுத்தியல் ஓர்ந்தே அணுக்கலை நுட்பம் ஒலியொளித்திண்மை அவைக்கூறுஇயலும் அணுமுதற் பொருளும் அணுக்கலை நோக்கமும் அறிமுறைப் பயனும் நிறைவுற நல்கும் அணுக்கலை நூலே 100	**எழுத்து** "எழுத்தெனப்படுப அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே" தொ.எ.1 குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன – தொ.எ.2 <u>எழுத்துப் புறநடை</u> எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து, சொல்லிய பள்ளி எழுதரு வளியின் பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து, அகத்துஎழு வளிஇசை அரில் தப நாடி, அளபில் கோடல் அந்தணர் மறைத்தே. அஃது இவண் நுவலாது எழுந்துபுறந்து இசைக்கும் மெய்தெரி வளிஇசை அளபுநுவன்று இசினே.	**எழுத்து** மொழிமுதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து அது முதல் சார்பு என இருவகைத்தே 58 உயிரும் உடம்புமாம் முப்பது முதலே நன்.எ.59 அம்முத லீரா றாவி கம்முதல் மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர் 63 அவற்றுள் அஇஉஎ ஒக்குறி லைந்தே 64 ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில் 65 உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள பஃகிய இ உ ஐ ஔ மஃகான் தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும் நன்.எ.60

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
எழுத்துக்களின் வகை "அஇ உ எ ஒக்குறில் ஐந்தும் ஆஈ ஊஏ ஐஓ ஔ நெடில் ஈரா றுயிர் நிலை எண்ணித் தேர்ந்தே மூவா றாறும்மெய் முன்னி புணர்ந்தே உயிர்மெய் நிலைக்கலை மெய்யுயிர் எழுத்தாய் செயிரற நோக்கித் திருவுறக் காண்டல் எழுத்தியல் நுட்ப மெழுங்கலைத் திட்பம் எழுத்துறும் நெறிநிலை குறிநிலை வரைவே" [671]	எழுத்துக்களின் வகை 'ஔகார இறுவாய்ப் பன்னீரெழுத்தும் உயிரென மொழிப' தொ.எ.8 'னகர இறுவாய்ப் பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப' தொ.எ.9 "வல்லெழுத் தென்ப கசடதபற" தொ.எ.19 "மெல்லெழுத்தென்ப ஙஞணநமன தொ.எ.20 "இடையெழுத் தென்ப யரலவழள தொ.எ.21	எழுத்துக்களின் வகை "அம்முதலீரா றாவி கம்முதல் மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர் நன்.எ.63 அ, இ, உ, எ ஒக்குறி லைந்தே நன்.எ.634 ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில் நன்.எ.65 வல்லினங் கசடறதபற வெனவாறே நன்.எ.68 மெல்லினம் ஙஞணநமன வெனவாறே நன்.எ.69 இடையினம் யரலவழள வெனவாறே நன்.எ.70
"ஐந்தெழுத்து இயல்உறும் ஆற்றலால் திகழும் செந்தமிழ் உயிர் எழுத்து ஐந்திறத்தால் அறி" – 108 எழுத்தே முதல் சார்பென்றிரு வகைத்தே ஐ.சூ.17 "வல்மெல்லிடையே மூவின ஓசை" 18 உயிர் ஐங்குறிலே ஓசை நிறைமொழி 152 ஐங்குறில் ஆக்கமே எழுநெடில் ஓசை 153 உயிர்பன் னிரண்டே ஒலிதரும் உருநிலை 154 வல்மெல் லிடையே மூவன வோசை 18 உயிரும் உடம்பும் எழுத்தீர் இயலே 26 அ, இ, உ, எ, ஒ, ஐங் குறிலே 164 "ஒண்தமிழ் ஐங்குறில் எழ்நெடில் தெரிந்து "வல்லின மெல்லின இடையினந்தோற்றித் தொல்மரபு இயல்உரை விளக்குறும் நெறியே 181 வல்லின மெல்லினத்து இடையினது ஆற்றல் தொல்நெறி விளக்குபு சொற்பொருள் விளக்கி இடையுறக் கிளத்தல் இயைபுறு மரபே 210		

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
மாத்திரை "கண்ணிமை கைந்நொடி கால மாத்திரையே 14 இமைநெடி அளவே எண்தரும் காலம் [23] "கண்ணிமைப் பொழுதும் கைந் நொடிக் காலமும் எண்ணியல் நெறியால் காலம் ஓர்ந்து திண்ணிய உளமும் உழைப்புணர்வு உற்றே நண்ணுவர் காலத்து இயல்அறி மக்கள் 93 கண்ணிமை நொடிக்கலைக் கால மாத்திரை நுண்ணிதி னுணர்ந்தோர் நுண்மதி யுற்றே கண்ணிமை கூட்டும் காலத் தியலால் எண்தரு கலைபல மியல்விளக் கும்மே 319 குறிலெழுத் தொன்றே நெடிலெழுத் திரண்டே அறிநிலை அளவை மாத்திரை வழக்கே 20 மாத்திரை அளவே எண்நிலை அளவாய் மாத்திரை இயல்நெறி காலக் கூறாய் மாத்திரை ஒலியே எழுத்துறும் அன்றோ 172 "நொடிநொடி மூலம் நெடிதுற நோக்கின் நொடியும் இமையுங் காலங் குறிக்கும்" 175 நொடிநிலைப் பொழுதே நுட்பம் நுவலும் 465 காலத்திண்மை கணக்கியல் அறிந்தே கால நுட்பமும் ஓசை மாத்திரையால் கணக்கறி நுட்பம் வழுத்து மாநெறியே 203 கண்ணிமை கைந்நொடிப் பொழுதே ஊழியாய் விண்ணிமைப் பொழுதும் மண்ணிமை ஆற்றலும் நுண்ணிதின் உணர்ந்தே றுவலரும் ஆற்றல் எண்கலை உணர்த்தும் இயல்பிற்று என்ப 320	மாத்திரை "கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை" நுண்ணதின் உணர்ந்தோர் கண்ட வாறே தொ.எ.7 அ இ உ எ ஒ வென்னும் அப்பால் ஐந்தும் ஓரள பிசைக்கும் குற்றெழுத் தென்ப தொ.எ.3 ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் அப்பால் ஏழும் ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப தொ.எ.4 நீட்டம் வேண்டின் அவ்வள புடைய கூட்டி யெழுஉதல் என்மனார் புலவர் தொ.எ.6	மாத்திரை மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே குறிலோ டையௌக் குறுக்க மொற்றள பரையொற் றிஉக் குறுக்க மாய்தங் கால்குறள் மஃகா னாய்த மாத்திரை நன்.எ.99 இயல்பெழு மாந்த ரிமைநொடி மாத்திரை நன்.எ.100

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
<u>மொழியின் பெயர் முறை தொகை</u> 'பல்பொருள் கிளவியும் ஒரு பொருள் கிளவியும் தொல்மரபு இயலுறும் தொகைநிலை ஆய்ந்தே கிளக்குறும் சொற்பொருள் ஒலிமொழித் திறனாய் வளர்கலைப் பொருளுரைத் தொழிற் பொருள் என்ப" 220 காலக் கூற்றே கணக்கியல் ஆகி சீலம் குறிக்கும் எட்டெட்டியன்றே மூலமும் ஞாலமும் முறைமையின் விளக்குபு எட்டியல் பெருக்கம் அளவை இயலே 176 காலத்து இயலைக் கணக்கறிந்து உணர்ந்தே கண்ணிமை கைந்நொடி மாத்திரை அளவாய் சீலத்து உள்ளி ஒலிஇசை நெறியைக் கோலக் கட்டியல் குறிப்பது மரபே	<u>மொழியின் பெயர் முறை தொகை</u> ஓர் எழுத்து ஒருமொழி ஈரெழுத்து ஒருமொழி இரண்டு இறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே தொ.எ.45.	<u>மொழியின் பெயர் முறை தொகை</u> 'உயிர்மவில் ஆறும் தபநவில் ஐந்தும் கவசவில் நாலும் யவ்வில் ஒன்றும் ஆகு நெடில் நொது ஆங்குறில் இரண்டொடு ஓரெழுத் தியல் பதம் ஆறேழ் சிறப்பின 129
<u>புணர்ச்சி</u> "மெய்யொலி உயிரொலி சிவணுதல் இயல்பே" 166	<u>புணர்ச்சி</u> நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு குறித்துவருகிளவி முதலெழுத்தியைய பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும் தொலொடு பெயலரைப் புணர்க்குங்காலும் தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும் மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே தொ.எ.109 "புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது மெய்யோடும் சிவனும் அவ்வியல் கெடுத்தே" தொ.எ.139 எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் தொ.எ.141	<u>புணர்ச்சி</u> மெய்யுயிர் முதலீ றாமிருபதங்களுந் தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப் பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிகள் இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே 151 உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே 204

ஐந்திரம்	தொல்காப்பியம்	நன்னூல்
பிறப்பியல் "உயிர்நிறை முயற்சி உள்வளித் திறனே செயிர்அற எழும் அணுத்திரளொலி ஆற்றல் உரமும் கண்டமும் உச்சியும் மூக்கும் வரவே இதழ்நாப் பல்வகைத் தொழிலராய் வேறுவே றெழுத்தொலி யாய்வரல் நெறியே" 62 உள்ளகத் தெழும்பும் தெள்ளறும் உணர்வால் விள்ளுறும் மொழிமுதல் முயற்சிமா வலியால் மெய்முதல் தோற்றம் உயிருறத் தேற்றம் எழுத்தொலி யோங்கி யியலல் மரபே 206 உள்ளகத் தெழுதரும் ஒருபெரும் முயற்சி விள்றுறும் ஓசை ஒலிமுதலாகி மெய்யொலி கிளர்த்தும் மெய்ப்பொருள் நோக்கி மெய்யுண ரெழுத்தொலி யுயிரொலி யியலே 327 "உச்சியும் உரமும் கண்டமும் மூக்கம் எயிறும் நிலையும் நாக்குறும் திறனும் ஒலியிசை கிளத்தல் உற்றுணர் கலையே" 390 உயிரொலி தோன்றுமுன் மெய்யியல் தோன்றும் 315 உயிரொலி ஓசை உள்ளகத் தெழுங்கால் செயிரறு முயற்சி மெய்யியல் ஒலியே 318 உள்ளகத்து எழுதரும் ஒருபெரும் முயற்சி விள்ளுறும் ஓசை ஒலிமுதல் ஆகி மெய்யொலி கிளர்த்தும் மெய்ப்பொருள் நோக்கி மெய்யுணர் எழுத்தொலி உயிரொலி இயலே 327	பிறப்பியல் உந்தி முதலா முந்துவளி தோன்றித் தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான் உறுப்புற்றமைய நெறிப்பட நாடி எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப் பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல திறப்படத் தெரியும் காட்சியான தொ.எ.83 பன்னீ ருயிரும் தந்நிலை திரியா மீசற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் தொ.எ.84	பிறப்பியல் நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின் வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே நன்.எ.74

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
சொல் கிளவியாக்கம் மெய்ப்பொருள் குறித்தே 355 நுவலல் நுதலல் ஒருபொருட் கிளவி 374 பொருள் உணர்வு ஓங்கும் செஞ்சொல் தமிழே 53 உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கிக் கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி சொல்லும் சொல்லே சொற்பொருள் ஆகித் தொல்கலை நெறியால் ஆய்வரல் நெறியே 63 பல்பொருள் கிளவியும் ஒருபொருள் கிளவியும் தொல்மரபு இயலுறும் தொகைநிலை ஆய்ந்தே கிளக்குறும் சொற்பொருள் ஒலிமொழித் திறனாய் வளர்கலைப் பொருளுரைத் தொழிற்பொருள் என்ப 220	சொல் உயிர்திணை என்மனார் மக்கட் சுட்டே அஃறிணை என்மனார் அவரல பிறவே ஆயிரு திணையின் இசைக்கமன சொல்லே தொ.சொ.1 பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லின் ஆகும் என்மனார் புலவர் தொ.சொ.153 எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே தொ.சொ.155 சொல்லெனப் படுப பெயரே வினையென்று ஆயிரண்டென்ப அறிந்திசினோரே தொ.சொ.158	சொல் ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும் மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின் வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே 259 ஒருமொழி ஒரு பொருளனவாம் தொடர்மொழி பலபொருளன பொது இருமையும் ஏற்பன 260 எழுத்தே தனித்துத் தொடர்ந்தும் பொருடரிற் பதமா மதுபகாப்பதம் பகுபதமென இருபாலாகி யியறு மென் ந.சொ.128
காலம் மூவகை காலமும் 38 மூவகைக் காலமும் மெய்ம்மையின் ஆய்ந்தே 69 காலக்கூறு இமைநொடி அளவே எண்தரும் காலம் 23 விண்ணிமை மண்ணிமை நுண்ணிலைக் காலம் 24 காலமா மியலும் செந்நெறிக் காலமும் காலங் கருதி கணக்குற நோக்கின் காலமே படைக்கும் காலமே அளிக்கும் காலமே நுடைக்கும் கணிப்பில் ஓர்ந்தே காலக் கருமை கருத்துற் றோர்ந்தே காலம் நொடிநொடி இமைப்பொழு தாய்ந்தே கைநொடிப் பொழுதும் கண்ணிமைப் பொழுதும் மெய்ந்நிலைக் கலையாய் மெய்ப்பொருள் உணர்த்தும் கால நுட்பம் கருத்தி லோர்ந்து காலங் கருதி மூலம் மாய்ந்து கோலங் குறித்தே சீலச் செயலாய்	காலம் காலந்தாமே மூன்றென மொழிப தொ.பொ.196	காலம் இறப்பு எதிர்பு நிகழ்வெனக் காலம் மூன்றே 382

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
ஏமலங் கருதி உழைப்புறும் உணர்வலை உண்ணி உண்ணி மெய்ந்நிலை மாய்தல் பன்னுசெந் தமிழ்நெறி பயனிலை முடிவே காலமே கணிக்கும் காலமே கூட்டும் காலமே அருளியல் திருநிலை வகுக்கும் காலமே பொருளியல் பயன்நெறி நோக்கும் காலமே தெருளியல் சீர்நிலை வகுக்கும் காலமே மருளியல் மயலறம் யோக்கம் மயன்நெறி ஒன்றே மதிநெறி கூட்டும் 816 திணை "அகமும் புறமும் திணை இரண்டாமே" 58 அகத்திணை "இயற்கை இயலல் இயல்நிலை வானியல் வியனிலை மாமழை நீரியல் வளநிலை மலர்பூஞ் செடியும் மலர்க்கொடி மலர்மரம் அலர்விரி நிலைமலர் அணியுறும் நிலந்திகழ் பச்சிலை மூலிகை பயன்தரும் தழைமியல் உச்சி மாநிலை ஓங்கு பெருமரம் தழைநிலை தழைத்து தளிர்க்கொடி முல்லை தழைநிலை நன்னிலம் முல்லை மாநிலம்" 783 நீர்வீழ் அருவி நெடிதுயல்வெற்பும் கார்தீண் டுச்சி கவின்வரை எழிலும் வண்ணப் புள்ளினம் வடிவுகொள் விலங்கும் வண்ணத் தியலா மியலுறும் பல்லுயிர் மலர்விரை கமழும் மலைமிட நடுவண் புலர்பொழு தயல்[illegible] [illegible]றுநிலை யாக்கம் பன்மலர் வண்ணம் செறிந்து காட்டும் நன்மலர் குறிஞ்சி நீள்நிலத் தியலே" 784 "நீர்வளத் தியலால் நெறிதரு நிலவளம் ஏர்வளம் பயிர்வளம் உயிர்வளம் ஆக்கும் கார்வளம் கெழுகும் கவினுறுந் தோற்றம் தேர்வளப் பொழிலும் சீர்நிலை மஞ்ஞை சீர்நிலை தாமரை குவளை நறுமலர் நேர்நிலை அணியில் நிகழும் மருதம் பொற்புறும் நிலத்தியல் பொங்கும் வளமும் கற்புறும் மக்கள் கவினிய நிலமே" 785 "விரிநிலைத் தழ்குருசெய் ஆழ்கடல்	அகத்திணை "மாயோன் மேய காடுறை உலகமும் சேயோன் மேய மைவரை உலகமும் வேந்தன் மேய தீம்புனல் உலகமும் வருணன் மேய பெருமணல் உலகமும் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே தொ.பொ.5	

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
பரப்பும் பரிநிலைக் கலைநிலை அறிவியல் நோக்குமும் கலைநிலைக் கதிர்நெறி கதிரொளி கதிர்க்கலை நிலைநெறி பொழுதுறும் நெறிநிலை ஆழம் உணர்வின் ஆற்றல் உயிர்க்கலை அறிந்தே உணர்திற மதியால் உழைப்புறும் திறமும் ஆழ மாக்கடல் உயிர்த்தொகை யாய்ந்து ஆழத் தெளிவும் அகழ்நிலை ஆய்வும் கொண்டுறும் மக்கள் குடிப்பிறப் பாய்ந்தே தொண்டுறுங் கடல்சார் நெய்தல்மா நிலமே" 786 "முல்லையுங் குறிஞ்சியும் முறைமை மாறி ஒல்லையில் இருநிலம் திருநிலை ஆழ்ந்தும் தொல்லை வேறுவே திருநிலை மாறி வல்லை கடுமை கோடை வெயில்நிலை புல்செடி கொடிநிலை மாற்றமும் வீழ்ச்சியும் நல்மரம் அற்றுறும் நீர்நிலை யற்றுறும் நிலத்தியல் நீரியல் நெறிமுறை சாரா நிலமுறும் பாலை நெறிமுறை நிலமே" 787 குறிஞ்சி முல்லை மருதல் நெய்தல் வறியமாப் பாலை ஐந்நிலப் பகுப்பும் நிலத்திறை நிலத்தியல் நில்பொருள் நெடுநிலை புலத்தியல் கருப்பொருள் பருப்பொருள் உரிப்பொருள் இயல்நிலை முழுதும் மொழியியல் கூறும் மயன்நெறி ஆடலான் அருள்திறத் தியலால் மயன்கலை மயன்தமிழ் ஐந்திறத் தாக்கம் வியனொளி விண்ணொளி நெறிகலை முதலாய்		
மயன்வகு நெறித்தமிழ் பாத்தமிழ்க் கலையே 866 <u>ஐந்திணை</u> ஐந்திணை செந்தமிழ் வாழ்வியல் நெறியே 208	<u>புறத்திணை</u> வெட்சிதானே குறிஞ்சியது புறனே தொ.பொ.59 வஞ்சிதானே முல்லையது புறனே தொ.பொ.64 உழிஞைதானே மருதத்துப் புறனே தொ.பொ.66	

ஐந்திறம்	தொல்காப்பியம்	நன்னூல்
	தும்பைதானே நெய்தலது புறனே தொ.பொ.70 வாகைதானே பாலையது புறனே தொ.பொ.73 காஞ்சிதானே பெருந்திணைப் புறனே தொ.பொ.76 பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே தொ.பொ.78	
<u>செய்யுளியல்</u> "எழுத்து அசை சீர் தளை அடியென் றைந்தாய் வழுத்தும் இயலால் தொடைநிலை நோக்கிச் செழுநிலைப் பாலே சீர்உற்று ஓங்கும்" ஐ.சூ89 எழுத்தும் சொல்லும் பொருளும் விளக்கி வழுவிலா கட்டு அணி வளம்உற வகுத்துச் செழுமலர் ஐந்தமிழ் செம்மலர் என்ன முழுத்தமிழ் ஐந்தியல் நூல்நெறி அன்றோ 36 "அசைப்பொருள் சீர்நிலை ஆய்நிலை காண்டுழி நசைப்பொருள் நீங்கலும் நன்னிலை நெறியே 218 "எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென வழுத்தும் ஐந்தியல் முறைநெறி வழக்கே" 9 அசையும் சீரும் அமைவுறத் தெரிந்தே	செய்யுளியல் "அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி வகுத்தனர் உணர்த்தல் வல்லோர் ஆறே" 319 "மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ யாத்த சீரே அடியாப் பெனாஅ மரபே தூக்கே தொடைவகை எனா அ திணையே கைகோள் பொருள்வகை எனாஅ பயனே மெய்ப்பா டெச்ச வகை எனாஅ முன்னம் பொருளே துறைவகை எனா அ மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகைமின் ஆறு தலைமிட்ட அந்நாலைந்தும் அம்மை அழகுதொன்மை தோலே விருந்தே இயைபே புலனே இழைபெனா அப் பொருந்தக் கூறிய எட்டொருந்தொகைஇ கல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே தொ.310	
நசைமின் நீக்கி நல்லவை தெளிந்தே ஒலிமுறை எழுத்தின் உண்மை ஒளியே நிலையுறக் காண்டல் நெறிக்கலை முறையே 87 <u>பொழுது</u> "சிறுபொழுது தோர்ந்தே பெரும் பொழு தெண்ணி உறுபொழு தாங்குறின் உவப்புடன் உன்னி காலம் ஒன்றே கலைபல உணர்த்தும் 254 சிறுபொழுது இயலும் பெரும்பொழுது ஆற்றல்	<u>பொழுது</u> காரும் மாலையும் முல்லை தொ.பொ.6 குறிஞ்சி, கூதிர் யாமம் என்மனார் புலவர் தொ.பொ.7 பனி எதிர் பருவமும் உரித்தென மொழி தொ.பொ.8 வைகறை விடியல் மருதம் தொ.பொ.9 வைகறை விடியல் மருதம் தொ.பொ.9 ஏற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும் தொ.பொ.10	

ஐந்திரம்	தொல்காப்பியம்	நன்னூல்
உறுநிலை குறித்து ஆங்கு உணர்வன உணர்ந்தே நொடித்திறன் ஆக்கம் நுண்ணிதின் ஓர்ந்து கொடித்திற வழியில் சுர்மதி நோக்கி தேர்ந்துகட் பொழுதே ஆர்ப்புற ஆய்ந்து கைவிரல் பொழுதியல் கலைநிலை நோக்கி மெய்யுணர்ந்து அறிதல் மேலோர் இயல்பே" 330 காலம் பொழுதே நாளிர வாகி காலை உச்சி மாலை நட்பம் கோலத் திரவின் குறிப்பும் நோக்கி மூலப் பொருள்நிலை முன்னி யுன்னி கதிரொளி நாள்நிலை உழைப்புறும் ஆற்றல் மதியொளி இரவில் அறிவுறும் ஆற்றல் நாட்பொழுதுழைத்து நண்ணிய நாடி நாட்டமும் நோக்கமும் நன்னிய அழைப்பே 494	நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலோடு முடிவுநிலைத் மருங்கின் முன்னிய நெறித்தே தொ.பொ.11 பெரும்பொழுது பின்பனி தானும் உரித்தெனமொழிப தொ.பொ.12	
மரபு "எப்பொருள் எந்நிலை எந்நெறி எக்கலை ஒப்பிலாக் காலம் உயர்வுற நோக்கினும் மூலம் ஒன்றே முன்னுறும் நெறியால் காலத் தியல்நெறி வருத்தல் மரபே". 565	மரபு மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும் தொ.பொ.637 மரபுநிலை திரியா மாட்சியா வாகி உணரபடு நூல்தாம் இருவகை நிலைய முதலும் வழியுமென நுதலிய நெறிமின தொ.பொ.639 மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற் பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும் கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென் றொன்பதும் குழவியொ டிளமைப் பெயரே" தொ.பொ.545	மரபு "எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" 388

ஐந்திறம் நிறைந்த திருஅருட்பா

"அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!!"

மேற்கண்ட வாக்கியங்களை விஞ்ஞானச் சொற்றொடர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. எப்படி எனில், இப்பிரபஞ்சம் மற்றும் இப்பிரபஞ்சத்தில் நாம் காணும் பொருட்கள் எல்லாம் பேராகாசமாகிய விண்ணிலிருந்து தோன்றின என்பதே திருஅருட்பாவின் முக்கியச் செய்தியாகும்.

[1]"வானிடைக் காற்றும், காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்ஜோதி" – திருஅருட்பா

இவ்விதம் இந்த ஆகாசம் தான் இந்த உலகையும் இந்த உலகில் நாம் காணும் பொருட்களையும் படைத்தது என்றால், அந்த ஆகாசத்தில் என்ன இருக்கின்றது என்ற கேள்விக்கு இந்த ஆகாசத்தில் ஒளி அணுக்கள் நிரம்பியுள்ளன என்ற செய்தியையும் அருட்பாவின் மூலம் அறிய முடிகின்றது.

[2]"விண்ணினுள் விண்ணாய் விண்ணடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி" [-திருஅருட்பா]
"விண்ணுறு விண்ணாய் விண்ணிசை விண்ணாய்
அண்ணி வயங்கு அருட்பெருஞ்ஜோதி" [-திருஅருட்பா]

அப்படியிருக்க அருட்பெருஞ்ஜோதி என்றால் என்ன? இது எந்த அருளைக் குறிக்கின்றது? எந்த அருள் இப்பிரபஞ்சம் தோன்ற காரணமாயிருக்கிறது? என்ற கேள்விகளுக்கு பதில் அறியும் முன்னர் **அன்பு, அருள், அறிவு** ஆகிய சொற்கள் மூன்றையும் அருட்பாவின் வழி நின்று அறிதல் வேண்டும்.

[3]"அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே" என்கிறது

---

1 "तस्माद्वा एतस्मादात्मन आकाशः सम्भूतः ॥
आकाशात् वायुः वायोरग्निः अग्नेरापः अद्भ्यः पृथिवी ॥
पृथिव्या ओषधयः ओषधीभ्योऽन्नम् अन्नात्पुरुषः ॥"
*"தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச ஸம்பூத: ॥
ஆகாசாத்வாயு: வாயோரக்னி: அக்னேராப: அத்ப்ய: ப்ருதிவீ ॥
ப்ருதிவ்யா ஒஷதய: ஒஷதீப்யோன்னம் அன்னாத்புருஷ: ॥"*
(தைத்திரீயோபநிஷதம் 2-1)

2 "விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த வருமுறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினா னின்றாரை யெதிர்காட்டி
யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத் திருமொழியால்" - [பெரியபுராணம் – 1972]

3 காலமாக் கடவுளின் அருங்குணம் மற்றும் ஒரே குலம், எங்கும் நிலை பெற்ற நிறையொளி என்று இங்கே உணர்த்தப் படுகிறது.

திருஅருட்பா. அதாவது, இந்த விண்ணில் ஒளி அணுக்கள் நிரம்பி உள்ளன என்றும், அவ்விதம் உள்ள அந்த அணுவினுள் அன்பாகிய பேரொளி இருக்கின்றது என்பதே இதில் சூக்சமமான [நுட்பமான சிட்பமான] விஷயம்.

மேலும் இந்த அன்பாகிய பேரொளி எவ்விதம் அருள் செய்கின்றது என்பதற்கான

"உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள் நிலை தெரித்த[1] அருட்பெருஞ்ஜோதி" –திருஅருட்பா

என்று அணுவின் உள்ளே உள்ள பேரொளியே உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமுமாகி அருள் செய்கின்றது என்ற செய்திகள் நமக்கு நன்கு புரியும். இதன் பொருட்டே அருட்பெரும் ஜோதி என்பதாக விண்ணில் நிரம்பிய அணுவில் உள்ள அன்பாகிய பெரும்ஜோதி இப்பிரபஞ்சத்தையும் அதிலுள்ள பொருட்களையும் படைக்கின்றது. ஆகவே அருட்பெரும்ஜோதி என்ற சொற்றொடர் ஒரு விண்ஞானச் சொல் என்று குறிப்பிடுவதில் தவறேதுமில்லை.

திருஅருட்பா முழுவதுமாக விண்ஞானச் சொற்கள் நிரம்பி இருக்கின்றது அப்படி இருக்க, அந்த **விண்ஞானம்** எல்லோருக்கும் புரிந்ததா! பிரபஞ்ச சிருஷ்டி நுட்பத்தை திருஅருட்பாவில் எவ்விதம் கையாளுகின்றார்? ஆகாசம் சப்த குணகம் என்று வேதங்கள் பேசிட, ஆகாசம் ஒளியைக் குணமாகக் கொண்டது என்றும் அந்த ஒளியே/ ஒலியாக மாறியது என்ற செய்தியையும் இவர் குறிப்படுவதைப் பாருங்கள்.

"வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில் குயில் ஆச்சுதடி........."

இந்த அருட்பாவின் வரிகளுக்கு எவ்விதம் பொருள் சொல்வீர்? அதாவது, பார்க்கும் பொருளாக இருக்கும் ஒளியானது கேட்கும் பொருளான ஒலியாக மாறுகின்றது என்ற விண்ஞானச் செய்தியை இவர் குறிப்பிடுகிறார். அதாவது **மயில் ஆடிப்பார்க்கலாம், குயில் பாடிக் கேட்டகலாம்.** எனவே, ஆகாசத்தில் உள்ள ஒளியே ஒலியாக மாறுகின்றது என்ற கருத்து மிக இன்றியமையாததாகும். இதன் பொருட்டே நாராயணஸூக்தம் என்ற உபநிஷதமும் உலகம் முழுவதிலும்

---

1 Primal manifest quality of the Supreme power, which exists in the micro atom or paramanu. This is Vastu, the ever lasting substance of the cosmos [ஞாலமூலம்]. இதனைத் தான் அருட்பெருஞ்ஜோதி என்கிறார் அடிகளார். மேலும் அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்பசாஸ்திரமானது

सकल निष्कल मिश्र विभागतः त्रिविधमेव वपुः परमेष्ठिनः ।
विधिमिमं सकलस्य यथोदितं शशिधरेण तथा कथयाम्यहम् ॥

என்பதாக மூலப் பொருளானது உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் மூன்று நிலைகளில் தன்னை உடம்பெடுத்த பொருளாகப் புலப்படுத்துவதைக் காண்க.

காணப்படுவது எதுவாயினும் கேட்கப்படுவது எதுவாயினும் அவை அனைத்தையும் உள்ளும் புறமும் வியாபித்தபடி நாராயணன் இருக்கிறார் என்பதாக அதாவது ஒளி, ஒலிப் பொருளாக இறைவன் இருக்கிறான் என்றும் கூறுகின்றது.[1] மேலும் மயன் கூறும் ஐந்திரச் செய்யுளையும் காண்க. மூலத்தின் தோற்ற நிலையை தானியல் வடிவு

"ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஒசை
வெளிமொழி ஒமென விளம்பற் பாற்றே" - ஐந்திரம் - 1

என்று மயத்தமிழில் சொல்வதை ரசித்திடுக. Self mainfest primal form என்க.

மேலும், "ஆகாச சரீரம் பிரம்ம"[1] என்று உபநிஷதம் ஆகாசமே பிரம்மத்தின் சரீரம் எனக்குறிப்பிட்டதன் காரணம் என்ன? வேதம் ஆனது, "ஆகாசத்தின் குணம் சப்தம்" என்றும் வேதாந்தமாகிய உபநிஷதம், "பிரம்மத்தின் சரீரமாக இருப்பது ஆகாசம் என்றும் குறிப்பிடக் காரணம் என்ன? ஆகாசத்திலிருந்து உலகம் தோன்றியது என்றால் ஆகாசத்தின் குணமான சப்தத்திலிருந்து மட்டுமே எவ்விதம் உலகம் தோன்றிட முடியும், ஒலிப்பொருள் மட்டும் தானே தோன்றிட முடியும். அவ்விதம் தோன்றியிருந்தாலும் கேட்கும் பொருள் மட்டும் தானே [ஒலிப்பொருட்கள்] இருந்திட முடியும், பார்க்கும் பொருட்கள் இருந்திட இயலாது [ஒளிப்பொருள்கள்] அல்லவா? இந்த முரண்பாடுகளுக்குக் காரணம் என்ன? இந்த வேற்றுமை ஏற்பட என்ன காரணம் என்று பார்க்கும் போது "கடல்கோள்" என்ற ஒரு நிகழ்ச்சிதான் இந்த வேறுபாடுகள் ஏற்படக் காரணம் எனக் குறிப்பிடலாம். [இது குறித்து விரிவாகப் பின்னர் குறிப்பிடுவோம்].

தமிழ்ச்சங்கங்கள் பல இம்மண்ணில் தோன்றினும் அந்த நூல்கள் நமக்கு கிடைத்திட்டதா? என்ற கேள்விக்கு மாணிக்க வாசகர் இதற்கு ஒரு தெளிவான பதிலைச் சொல்கின்றார்.[2] அந்தச் செய்தியைக் குறிப்பிடும் முன், நமது வரலாற்றை சற்று பின்நோக்கிப் பார்ப்போம்.

---

1 । यच्च किञ्चिज्जगत्सर्वं दृश्यते श्रूयतेऽपि वा ।
अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः ॥ (நாராயணஸூக்தம்-5)

2 "மன்னுமாமலை[1] மயேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
கேவேடராகி கெளிரது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தன்னை மயேந்திரத்து இருந்து
உற்ற வைம்முகங்களாற் பணித்து அருளியும்"- திருவாசகம் - கீர்த்தித் திரு.அகவல்

[1]அதாவது தற்போது நாம் பெற்றிருக்கும் இந்த நூல்கள் எல்லாம் மயேந்திர மலையில் சொல்லப்பட்டது எனவும் பிரளயத்திற்கு பின்னர் இந்த நூல்களை எல்லாம் மீனவர்களால் கிடைக்கப் பெற்றதாகவும் கூறுவதை அறிய முடிகின்றனது. பாகவத்தில் வேதங்களை தொகுத்துச் சொன்ன வேத வியாஸரும் மீனவர் குடும்பத்தில் பிறந்தவர் என்ற கருத்தையும் மாணிக்கவாசகர் சொன்ன செய்தியையும் ஒப்பிட்டு அறிஞர்கள் ஆய்வு செய்திடுக தங்களால் கிடைக்கப் பெறும் செய்திகள் மிக இன்றியமையாததாக அமையும்.

பழந்தமிழர்களாகிய நமது மொழி, கலாச்சாரம் இவைகள் வளர்ந்து ஓர் உச்சக் கட்ட நிலையை அடைந்திட்ட காலம் ஒன்று உண்டு. அது நிகழ்ந்த இடம் தற்போது நாம் காணும் பாரதநாடு அன்று. ஒரு காலத்தில் பரந்து கிடந்த நிலப்பரப்பாக இருந்த அந்தப்பகுதி "குமரிக்கண்டம்" என்று அழைக்கப்பட்டது. தமிழர் தம் கலாச்சாரம் ஓர் உச்சக் கட்ட நிலையை அடைந்த இடம் தான் இந்த குமரிக்கண்டம். இந்த குமரிக்கண்டமானது கடல் கொண்டு போன பின்பு மீண்டும் நமது கலாசாரமும் உயிர்ப்புற்று வந்தது எனலாம். அதாவது, பழந்தமிழர் தம் வரலாற்றின் எச்சங்களை நாம் பற்றிக் கொண்டிருக்கிறோம் என்பது உண்மையே[1]. ஆகையால் நமக்கு இரண்டு வரலாறுகள் உண்டு. ஒன்று, கடல் கோளுக்கு முன்னது, மற்றொன்று கடல் கோளுக்கு பின்னது என்று இரண்டாகச் சொல்லலாம்.

இந்த கடல்கோளுக்கு முன் குமரிக்கண்டத்தில் வாழ்ந்த ஒரு சிற்பி தான் "மயன்" என்பவனாவான். மயன் வாழ்ந்த இடமே மகேந்திர மலை என்பதாகும். மகேந்திர மலை பற்றிய செய்திகளும் வர்ணனைகளும் வால்மீகி இராமயணத்தில் காணலாம். மயன் என்பவர் ஒரு "சிற்பி" என்றே தமிழ் இலக்கியங்கள் வர்ணித்த சமயத்தில் இவர் சிற்பி மட்டுமல்ல ஒரு "மஹாகவி" என்ற செய்தியையும் நமக்கு தருவது மகாபாரதம் போன்ற காவியங்களே. இவர் படைத்திட்ட நூல்கள் என்னென்ன நூல்கள் என்பது பற்றிய செய்தியும் நமக்கு ஆங்காங்கே கிடைக்கின்றது. சுமார் 12 செந்நூல்களை மயன் இயற்றியதாக அறிய முடிகின்றது.

01. ஓவியச் செந்நூல்
02. சிற்பமாச் செந்நூல்
03. கட்டிடச் செந்நூல்
04. நிலமனைச் செந்நூல்
05. மனைநிலச் செந்நூல்
06. வானியல் செந்நூல்
07. பெருநடச் செந்நூல்
08. மூலிகைச் செந்நூல்
09. கணிதமாச் செந்நூல்
10. மரக்கலச் செந்நூல்
11. விண்கலச் செந்நூல்
12. ஏழிசைச் செந்நூல்

மேற்கண்ட 12 செந்நூல்களை மயன் இயற்றியதாகத் தெரிகின்றது. இவற்றுள்

1 "வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசைக் யாண்ட தென்னவன் வாழி"
– என்பதாக சிலப்பதிகாரமும் இச்செய்தியை உறுதி செய்கின்றது.

ஒன்றான ஓவியச் செந்நூலை பற்றிய செய்தியை மணிமேகலையில் காணலாம்[1].

அதுமட்டுமல்ல "சூரியசித்தாந்தம்" என்ற வானியல் நூலின் ஆசிரியர் மயனே என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மயன் எழுதிய நூல்களில் மிகவும் இன்றியமையாதது "ஐந்திரம்" என்ற நூலாகும். நிலந்தரு திருவிற்பாண்டியன் நிறுவிய அவைக்களத்தில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்ட தென்பதும், அந்நூல் வழி தெரிகின்றது. இக்குமரி மண்டலமானது பஃறுளி ஆற்றுடன் 7 X 7 =49 நாடுகளாகக் கொண்டதாகும். ஐந்திரம் என்ற நூல் முதுகுடுமித் தமிழ்ச்சங்க காலத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்று தமிழ்ச் சங்கங்களின் வரலாறு என்ற நூலில் ஆசிரியர் திருமந்திரமணி துடிசைக்கிழார் அ.சிதம்பரனார் அவர்கள் குறிப்பிடுகிறார். [இந்நூலில் ஐந்திர நூலாசிரியர் இந்திரனார் என்று ஆசிரியர் குறிப்பிட்டதைப் பற்றி பின்னர் தெளிவு செய்வோம் [அ] தானே தெளிவாகிவிடும்.]

இந்நிலையில் 1986ம் ஆண்டு மதுரை மாநகரில் நடைபெற்ற உலகத்தமிழ் பேரறிஞர் மாநாட்டில் ஐந்திரம் என்ற ஓர் இலக்கண நூல் சென்னை தொழில் நுட்ப கல்வி இயக்ககத்தாரால் வெளியிடப்பட்டது. இந்த நூல் தான் முதல் சங்க காலத்தில் அரங்கேற்றப்பட்ட ஐந்திர நூல் என்ற செய்தி வியப்பைத் தருகின்றது. அப்படி இருக்க, அந்த நூலைப் படித்து அதில் கூறிடும் செய்திகளை அறிந்திடும் வேளையில் கிடைத்திட்ட செய்திகள் மேலும் வியப்பானதாகும். ஏற்கனவே **"ஐந்திரம்"** என்ற நூல் முதுகுடுமித் தமிழ்ச்சங்க காலத்தில் வெளியிடப்பட்டது என்றும் அந்த நூல் ஆசிரியர் இந்திரனார் என்றும் தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனார் **"ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்"** என்று குறியிட்டது, இந்த நூலைப்பற்றித் தான் என்பதும் ஒருபுறமிருக்க, யார் இந்த இந்திரனார் என்பதை அறிந்திட முற்படும் வேளையில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்

"கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டு இயற்கையின் விளங்கக் காண்பாய்"

என்று ஓர் முக்கியமான வரலாற்றுக் குறிப்பை நமக்குத் தருகின்றார். அதாவது

---

1 நாடக மகளிர்க்கு நற்கனம் வகுத்த
ஓவியச்செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறை போகிய பொற்கொடி நங்கை. [மணிமேலை]

சிலப்பதிகார காலத்தில் இந்நூல் வழக்கில் இருந்தது என்ற செய்தி நமக்குத் தெரிகின்றது. இந்தியாவில் இந்திர விழா எடுத்த வரலாற்றுச் செய்தியானது தமிழகத்தின் தொன்மைக் கால உச்ச நிலைக்கு ஒரு முக்கிய எடுத்துக் காட்டாகும். இத்தகைய இந்திரவிழா எடுத்ததும் இங்கு தான் [தமிழ்நாட்டில் பூம்புகார் என்ற காவிரிப் பூம்பட்டினத்தில்] என்பதும் அனைவரும் அறிந்ததே. அப்படியிருக்க இளங்கோவடிகள் "கப்பத்து இந்திரன் காட்டிய நூலின் மெய்ப்பாட்டு இயற்கையின் விளங்கக் காண்பாய்" என குறிப்பிட்டதன் காரணம் என்ன? ஐந்திர நூலுக்கும் இயற்கைக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்விக்கு பதிலறிய முற்படுகையில் திருஅருட்பாவில் தெளிவாக பதில் தருகிறார் வள்ளலார் பெருமகன்.

"மண்ணினில் ஐம்பூவகுத்த அதில் ஐந்திறம்
அண் உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி"

என்பதாக கூறி "ஐந்திறம்" என்று [வல்லின 'ற' சேர்த்துத்] தெளிவாகக் குறிப்பிடுகின்றார். மேலும் திருஅருட்பாவில் பிரிதொரு இடத்தில் மயனையும் குறிப்பிட்டு பேசுவது ஐந்திற நூலின் ஆசிரியர் மயன் தான் என்பதும் இந்த மயன் மகேந்திர மலையில் இருந்த காரணத்தால் "மகேந்திரன்" என்றும் அதுவே பின்னாளில் [கடல் கோளுக்குப் பின்] மயனே இந்திரன் என அழைக்கப்பட்டான் என்றும் தெளிவாகின்றது. வால்மீகி ராமாயணத்தில் இந்திரன் மகன் வாலி என்பதும் வாலி, சுக்ரீவன், அனுமன் போன்றவர்களை குரங்கு மனிதர்களாக சித்தரித்து அதாவது குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கருத்தின் அடிப்படையில், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய பழங்குடியினர் என்ற கருத்தை தெளிவுபடுத்த கவிஞரான வால்மீகி இக்கதாபாத்திரங்களை படைத்தார் என்று சிற்பியான கணபதி ஸ்தபதி கூறுவது உண்மையே: இன்றளவும் பாரம்பரிய சிற்பியர் இனக்கொடியில் அனுமன் தானே பொறிக்கப் பட்டிருக்கிறார். இராமனும், அனுமனும் முதன் முதலில் சந்தித்துப் பேசும் போது அனுமனின் சொல்லாற்றலையும், அனுமன் பல வ்யாகரணங்களைக் கற்றவன் என்ற செய்தியையும் ராமனே கூறுவதைக் காணலாம். அனுமன் ஒன்பது வியாகரணங்களையும் கற்றுத் தேரியவன் என்பதும் அதன் பொருட்டே "நவவ்யாகரண பண்டிதன்" என்ற பெயர் பெற்றான் என்பதும், அதில் முதலாவது "ஐந்திர வ்யாகரணம்" என்பதையும் கருத்தில் கொள்ளும் போது பழந்தமிழர் தம் மூல நூலாக "ஐந்திறம்" இருந்திருக்கின்றது என்று குறிப்பிடுவதில் தவறேது மில்லை. பாரம்பரியச் சிற்பிகள் தங்கள் குலக் கொடியில் அனுமனை வைத்துக் கொண்டதின் காரணம் இஃதே என்க.



மேலும், சிலப்பதிகாரக் காலத்தில், ஆசிரியர் இளங்கோவடிகள் இந்நூல் இருந்த செய்தியைக் குறிப்பிடுகின்றனர். அதாவது சமணர்கள் இந்நூலை படித்தவர்கள் என்ற செய்தியை அறிய முடிகின்றது. சிலப்பதிகாரத்திலும் விண்ணவர் கோமான் என்று குறிப்பிடுகின்றார். அதாவது சிலப்பதிகார கதை நடந்த [அ] எழுதிய காலம் ஒன்று, நடந்ததாக சொல்லப்பட்ட காலம் வேறொன்று என்பது தெளிவுறுகிறது. இந்தக் கால மாற்றத்தினால் மட்டுமே ஆசிரியர் ஐந்திறம் என்ற நூல் இருந்த செய்தியை அறிந்திருந்தாலும் அந்த ஆசிரியர் மயன் தான் என்பதை அறிந்திடவில்லை. எனினும் ஆசிரியரும் சமணராக இருந்த காரணத்தால் ஐந்திற நூல் பற்றிய செய்தியை தன்னுடைய படைப்பில் ஒட்டி வைத்தார் என்பது தெளிவாகின்றது. மேலும் ஐந்திற நூல் இயற்கையின் [பிரபஞ்சத்தின்] நுட்பங்களை பேசியநூல் என்று தெளிவாக குறிப்பிடுகின்றனர். இவர் தான் சிற்பியர் தம் மரபை [நுண் வினைக் கம்மியர்] தோற்றுவித்தவன் மயன் என்று குறிப்பிடுகிறார்[1]. ஆகவே, புகழ் பெற்ற மனிதர்களையும், நூல்களையும் தன்னுடைய படைப்பில் வெளிக் காட்ட வேண்டும் என்ற நோக்கம் கவிஞர் தம் இயல்பு தானே.

இந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்ட காரணம் என்ன என்று அறிந்திட முற்படுகையில் ஐந்திற நூலின்படி ஓம் ஒலியானது அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து உயிரெழுத்துக்களாக வெளிப்படுகிறது என்றும், இது போலவே ஓம் ஒளியானது வெளி, வளி, தீ, நீர், நிலம் ஆகிய ஐந்து மூலப் பொருளாக – உயிரொளிகளாக

---

[1] "நுண்வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம்" – இளங்கோ

வெளிப்படுகின்றது என்றும் அத்துணை வெளியே உருமாற்றம் கொள்வதால் [வெளியையும் சேர்ந்து] "ஐம்பொருள்" என்றும் "ஐம்பூதங்கள்" என்றும் கூறுகின்றது. இவ்வெளி எனப்படும் ஆகாசமே அந்த ஒவ்வொரு ஒளிப்பொருளிலும் இருக்கிறது. அதாவது ஆகாசம் தானே இந்த பஞ்ச பூதங்களின் தோற்றுவாய் என ஆகிறது. இந்த ஒளி, ஒலிப் பொருட்களின் வெளிப்பாடுகளை - செயல்பாடுகளைப் பேசுவதால் இந்நூலை"ஐந்திறம்" எனக் குறிப்பிட்டனர். ஆகையால் இந்திரனால் செய்யப்பட்டது என்பதால் இந்நூலை "ஐந்திரம்" என்று ஆசிரியர் பெயர் சொல்லி கூறுவதை விட ஐந்து திறத்தினை [ஒளி, ஒலிப் பொருட்கள்] ஆகிய ஐந்து நுண் ஆற்றல்களை இது பேசுவதால் இது "ஐந்திறம்" என்று பெயர் பெற்றது. இது குறித்தே வள்ளலார் பெருமகனார் "ஐந்திறம்" என்று தெளிவாகக் குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

அதாவது, ஓம் ஒலியால் சொற்பொருள்களும், ஓம் ஒளியால் தெரி பொருள்களும் அவையிரண்டும் ஓரே மூலப்பொருளை உணர்த்துகின்ற இரண்டு ஓம்கள் என்பதே ஐந்திர நூலின் கோட்பாடு. இது குறித்தே "ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம்" என்று பனம்பாரனார் கூறி உண்மை விளக்கம் செய்திருக்கிறார். என்க. இதற்கு எடுத்துக்காட்டாக ஐந்திற நூலிலிருந்தும், தொல்காப்பியத்திலிருந்தும் இரண்டு செய்யுட்களை கீழே காண்க.

"நீர், நிலம், நெருப்பே வான்காற் றைந்தும்
தேர்நிலைக் கலைத்திறன் சீர்நெறி முடிபே" - ஐந்திறம் 226

"நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"
- தொல்காப்பிய பொருளாதிகாரம் 90.

என்பதாக இந்த ஐந்தும் கலந்த மயக்கம் என்பது தான் "ஐந்திறம்" என்றாயிற்று என உறுதியாகக் கூறிட முடியும்.

இந்த ஐந்திற நூல் 1986ம் ஆண்டு வெளியிடப்பட்ட போதிலும் யாவருக்கும் இந்நூலின் பொருள் புரியாததன் காரணம் என்ன? எல்லோரும் இந்நூலின் சொற்களையும் எழுத்துக்களையும் பற்றிய இலக்கண ஆய்வுகளை செய்து குறிப்பிட்டனரே ஒழிய பொருளை பற்றி யாரும் அறிந்திட முன்வரவில்லை. பொருளை அறிந்த சிலரும் இதைப்பற்றி கூறிடவில்லை. திருஅருட்பாவில் உள்ள பாக்களுக்கு அனைவராலும் பொருள் கூறிட முடியுமா? என்றால் தமிழ் அறிந்த தமிழர்கள் பலபேருக்கு இப்பாக்களுக்கு பொருள் கூறிட முடியாது. ஐந்திறமும்,

திருஅருட்பாவும் ஒரே செய்தியைத்தான் பேசுகின்றன என உறுதியாகக் கூற முடியும்.

ஐந்திர நூலில் கூறியுள்ள பிரபஞ்ச சிருஷ்டி மற்றும் எண்களும், எழுத்துக்களும் தோன்றிய முறையினை கீழே விரிவாகக் காணலாம். இதற்கு ஆதாரங்களாக ஐந்திரம், திருஅருட்பா, திருமந்திரம், உபநிஷதங்களிலிருந்தும் மேற் கோள்களையும் பிறகு குறிப்பிடுவோம்.

ஐந்திர நூலில், "விண்ணே மண்ணாகின்றது" என்ற செய்தி காணப்படுகின்றது. விண்ணை முதற் பூதமாகவும் சிருஷ்டிகளுக்கெல்லாம் ஆதாரமான இடமென்று ஐந்திரம் கூறுகின்றது. இந்த விண்ணை அதாவது வெளியை "ஒளிவெளி" என்றும் "வெளி ஒளி" என்றும் கூறுகின்றது[1]. அதாவது ஒளிமயமான வெளி என்று பொருள். அதுமட்டுமல்ல நமக்கு வெளியே இருக்கும் ஆகாசத்தைப் போல் நமது உடலுக்குள்ளும் ஓர் ஆகாசம் இருப்பதாக ஐந்திரம் கூறுகின்றது. இந்த ஆகாசத்தை "விண்கரு" என்றே ஐந்திரம் அழைக்கின்றது. அக்கரு ஒளியால் ஆன கரு என்றும் ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் கரு என்றும் கண்டு "ஒளிக்கரு" என்றும் கூறுகின்றது. இவ்விதம் உள்ள இந்த ஒளிக்கருவுக்குள் கருவுக்கும் கருவாய் மற்றொரு ஒளி இருப்பதாக கூறுகின்றது. இத்தகைய ஒளியை "ஒளியொளிர் ஒளி" அதாவது ஒளியினை ஒளிரும் ஒளி, ஒளியினை உமிழும் ஒளி என்று கூறுகின்றது.

"ஒளிபரம் பொருளே யாகி ஒளிமுதற் பொருளே யாகி
ஒளிக்கலைப் பொருளே யாகி ஒளிநிலைப் பொருளே யாகி
ஒளியெழில் ஆற்ற லாலே ஒளிஒளி நிலையி னாலே
ஒளிஒளி யாய்வி எங்கும், ஒளியொளிர் ஒளியே போற்றி"

–மயன் உரைப்பாடல்

"ஒளிவளர் உயிரே உயிர்வளர் ஒளியே ஒளியுமிர் வளர்தரும் உணர்வே
வெளிவளர் நிறைவே நிறைவளர் வெளியே வெளிநிறை வளர்தரு விளைவே
வளிவளர் அசைவே அசைவளர் வளியே வளியசை வளர்தரு செயலே
அளிவளர் அனலே அனல்வளர் அளியே அளியனல் வளர்சிவ பதியே"

– திருஅருட்பா

"ஒளியாகி உள்ஒளியாய் உள்ஒளிக்குள் ஒளியாய்
ஒளிஒளியின் ஒளியாய் அவ் ஒளிக்குளும் ஓர் ஒளியாய்
வெளியாகி வெளிவெளியாய் வெளியிடைமேல் வெளியாய்
மேல்வெளிமேல் பெருவெளியாய்ப் பெருவெளிக் கோர் வெளியாய்"

– திருஅருட்பா

---

[1] வெளியை அறிந்து வெளியின் நடுவே
ஒளியை அறியின் உளிமுறி ஆமே
தெளிவை அறிந்து, செழுநந்தியாலே
வெளியை அறிந்தனேன் மேல்அறி யேனே – திருமந்திரம்

மேலும் நமது உடலுக்குள்ளும் ஆகாசம் இருக்கிறது என்றோம். அந்த இடத்தை சிற்றவை என்று ஐந்திரம் அழைக்கின்றது. ஆகவே, பேராகாசமாகிய விண்ணே மண்ணாகவும் [பூமியையும்] சிற்றாகாசமாகிய சிற்றவையிலிருந்து எண்ணும், எழுத்தும் தோன்றின என்பதே ஐந்திர நூலின் முக்கியச் செய்தி. அப்படி இருக்க இவ்விரண்டு ஆகாசமும் ஒரே இயல்புடையதாக இருக்கிறது என்றும் ஐந்திரம் கூறுகின்றது. இவ்விரு ஆகாசத்தையும் முறையே **அகச்சிற்றம்பலம்**, புறச்சிற்றம்பலம் என்று கூறலாம். [சிற்றவை / பேரவை]

மேலும் "ஒளியொளிர் ஒளி" என்று குறிப்பிட்டோம் அல்லவா? அஃது இங்கே "தீ" அல்லது வெப்பம் எனப் பொருளாகிறது. இதனை "மூலக்கனல்" என்றும் "மூலச்சூடு" என்றும் "பிரணவச்சூடு" என்றும் ஐந்திரம் கூறுகின்றது. இந்தத் தீப் பொருள் தான் ஒளியெனப்படுகின்றது. இத்தீப் பொருளையே ஓர் அறிவியல் பொருளாக – மூலப்பொருளாக – ஐந்திரம் கூறுகின்றது.

இத்தீப் பொருளே கண்களால் பார்த்தறியப்படும் வெளிப் பொருள்களாகின்றன என்றும் தீயணுக்கள் சேர்ந்தே அவை தெரிபொருளாக திரிபுறுகின்றன. தீயணுக்களின் அணுக்கமே ஆக்கத்திற்கு காரணமாகிறது. இத்தீப்பொருளையே சிற்பக்கலை மரபில் "வஸ்து" என்று கூறிவருகிறார்கள் பழந்தமிழ் சிற்பிகள். இதற்கு நிகரான தமிழ்ச் சொல் "பொருள்" என்பதாகும். சிற்பக்கலை மரபு மட்டும் தான் இப்பிரபஞ்சத்தின் நுட்பமான ஒன்றை மிகத் துணிச்சலோடு "பொருள்" என்றும் அப்பொருளுக்குரிய நிகர்ச்சொல்லை "வஸ்து[1]" என்றும் சொல்லி வருகின்றது. ஆகையால் இந்த நூல்களை பொருள் நூல்கள் [வஸ்து நூல்கள்] எனக் கூறலாம்.

மேலும், மேற்குறிப்பிட்ட மூலத்தீயான ஒளிப்பொருள் ஒரு லயத்தில் அதிர்வதாக கூறி அந்த ஒளியின் அதிர்வைத்தான்[2] உருவகித்து ஆடல் வல்லான் என்று ஐந்திரம் கூறுகின்றது. மூல ஒளியின் அதிர்வைத் தான், துடிப்பைத் தான் [அதனை மனித வடிவமாக அமைத்து] நடராசனாகக் காண்கிறது ஐந்திரம். அதாவது மூலத் தீப் பொருளானது ஒரு லயத்தில் இயக்கம் கொள்வதை உற்றறிந்து அவ்வியக்கத்தை உள்ளூர அளவிட்டு அதன் இயல்பை – இயக்கத் தன்மையை – லயத்தை – ஐந்தியல்

---

[1] வாஸ்து - திண்பொருள் / வஸ்து நுண்பொருள்

वस्तुरेव वास्तु !! - வஸ்துவே வாஸ்துவாகின்றது. அதாவது கண்ணால் பார்க்க முடியாத நுண்பொருளாகிய அந்த தீப் பொருள் [மூலப்பொருள்] கண்ணால் பார்த்தறியும் திண்பொருளாக மாறுகின்றது. ஆகவே வாஸ்து சாஸ்திர கொள்கையின்படி எல்லாப் பொருளும் உயிர்ப்பொருளே.

[2] அதிர் என்பது சதிர் எனப்பட்டதென்க.

என்று மேலும் ஐந்திறம் கூறுகின்றது. அவற்றைத் தான் ஐந்தொழில் என்கிறது. நமது அகவிண்ணிலும், புறவிண்ணிலும் அதே தன்மையில் இயங்குவதாக கூறுகின்றது. நமது அகமும் – [உள்ளமும்] புறமும் ஐந்தொழில் செய்வதாகக் கூறுகின்றது.

இவ்வொளியைத் தான் பரம்பொருள் என்றும், முதற்பொருள் என்றும், முழுப்பொருள் என்றும் உறுதி செய்து அப்பொருள் பிரபஞ்ச பொருள் அனைத்திலுமிருப்பதாக கூறுகின்றது.

"உரிய துரிய பெரிய வெளியில்
ஒளியில் ஒளிசெய் நடனனே
பிரிய அரிய பிரியம் உடைய
பெரியர் இதய படனனே" – திருவருட்பா

இந்த மூலத்தீயான, மூல ஒளியின் அணுக்கள் நமது உள்ளமென்ற சிற்றாகாசத்திலும், பேருள்ளமென்ற பேராகாசத்திலுமிருப்பதாக ஐந்திறம் கூறுகின்றது. இவ்வெளி அணு எப்போதும் துடிப்புடனே இருப்பதாகக் கூறி ஒளி நிலையில் அல்லது கருநிலையில் சதுர வடிவினது எனக் கூறுகின்றது. இதனை "மூலச் சிற்பம்" என்றும் கூறுகின்றது. [கடவுளின் மூல வடிவம் சதுரம் என்பதாகும்.] இதுவே ஆகி விட்டது. மிகப்பெரிய அறிவியல் இதுவன்றோ!

அருவநிலையில் தீயாக – வெப்பமாக – இருந்த மூலப்பொருள், தன்னை கருநிலையில் சதுரப் பொருளாக புலப்படுத்திக் கொள்கிறது. அதாவது விண்ணில் நிறைந்த மூலத்தீயானது அருவ நிலையில் சதுரவடிவானது, அதாவது "விண்கரு சதுர வடிமுடியடையது" என்பதாகும். இஃது அவ் அருவப் பொருளின் அருவுருவ நிலையாகிறது. இது அருவநிலையிலிருந்து கருநிலைக்கு மாறிய நிலையாகும். இக் கருதான் இறுதியில் உரு ஆகின்றது. மூலத்தீயான அருவப்பொருள் பெற்ற இடையுருவமே இந்த சதுர வடிவினதான அருவுருவநிலை. அருவப் பொருளுக்கு இந்நிலையில் [அருவுருவ நிலையில்] கிடைத்திட்ட உடலானது சதுர வடிவினதாகும். அதாவது கன சதுர வடிவமாகும். தலை, உடல், கை, கால் முதலியன வாய்க்கப் பெறாத வடிவம். அதாவது உடலற்ற உருவமாகின்றது. மேலும் சுருக்கிக் கூறின் "கரு" உடலாகும். உள்ளிருக்கும் "தீ" அல்லது "ஒளி" உயிராகும். உயிரும் உடலும் போல ஒளியும் கருவும் இருக்கிறது. இன்னும் சுருங்கக் கூறின் ஒளியே கருவாக திரிபுறுகின்றது. எனவே இது "ஒளியாலான கரு" எனவே "ஒளிக்கரு" என்றழைக்கப் படுகின்றது.

இவ்விதம் சதுர வடிவினதாக அப்பொருள் நுண்ணிலையில் இருப்பது அதன் இயல்பு. ஆகவே தான் பரம்பொருள் எங்கும் உண்டு. எதிலும் உண்டு. எல்லா பொருள்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் எனக் கூறுகின்றோம். இவ்விதம் நுண்பொருளாக இருந்தால் தானே எல்ல இடங்களிலும் நிறைந்திருக்க முடியும். மூல நிலையில் – உறக்க நிலையில் – தூண்டப்படாத நிலையில் மூலப் பொருளான அத்திப்பொருள் நமது உள்ளத்தில் பரவிக் கிடக்கின்றது என்றும் உள்ளத்தில் தானாக முகிழ்ந்திடும் உணர்வே பிறகு இவ்வணுவை இயங்கிடச் செய்கிறது என்றும் இயக்கம் கொண்ட அணுவே வேறுபல அணுக்களோடு ஒரு குறிப்பிட்ட கணக்கில் சேர்ந்து தெரிபொருளாக மாறுகின்றது. இவ்விதம் மூலப்பொருளான அத்தீப்பொருள் பெற்ற அருவுருவ நிலை சதுரம் என்று கூறினோம். இப்பொருளை [அருவுருவப் பொருளை] அணுக்கள் என்று ஐந்திரம் அழைக்கின்றது. இந்த அணுக்கள் தனித்தனியாக இருந்த போதிலும் எவ்விதம் ஓர் அணு மற்றொரு அணுவுடன் சேர்க்கின்றது என்ற கேள்விக்கு இந்த அணுவில் உள்ள மூலமாகிய தீப்பொருள் தான் [கனல்தான்] இந்த அணுக்களை ஒன்றுடன் ஒன்று ஒட்டி வைக்கின்றது. இங்ஙனம் உருகி ஒட்டி வளர்ந்த – வார்த்த – வடிவே நடராசத் திருமேனியாயிற்று. இன்றும், நடராசனை வார்ந்துத் தானே உருக் கொடுக்கிறார்கள் சிற்பிகள்!

தூண்டப்படாத நிலையில் [உறக்க நிலையில்] இருந்திடும் அணுவின் சதுர நிலையை – சதுரமாக இருக்கும் இயல்பை – நாற்புறத்தியல் என்று ஐந்திரம்[1], கூறுகின்றது.

ஆகவே வள்ளல் பெருமகனாரும் மூலமான அத்தீப்பொருள் செய்த அருள் தான் சதுரவடிவினதான பொருளாக மாறுகின்றது என்று கூறுவதைக் காண்க.

> **"சதுரப்பேரருள் தனிப்பெரும் தலைவனென்று**
> **எதிரற்று ஓங்கிய என்னுடையத் தந்தையே"**
> **– திருஅருட்பா 1151**

சதுரம் என்ற சொல்லுக்கு நிகராக நாற்புரம் என்பது மயன் சொல், மயத்தமிழ் சொல்லாகும். இந்த சதுரமான உடலுக்குள்ளே, உடலற்று நடுக்கமுற்று [தொல் பழஞ்சொல்] நடம் புரிவதே ஒளிமயமான ஒளியென்கிறது ஐந்திரம். இந்த ஒளியின் கலை வடிவம் [ஒளித்துடிப்பின்] தான் மயனால் ஒளிநடசராசன் எனப்படுகிறது. இந்த நடம் ஒவ்வொரு உயிர்ப் பொருளிலும் தனித்தனியாக நடைபெறுவதால் "தனி நடராசன்" என்றும் கூறுகின்றது.

---

[1] சதுரன் என்ற சொல்லை மாணிக்கவாசகமும் கூறுவதை காணலாம்.

அதாவது, நடராசன் என்ற ஞான மூலத்தை, பழுதில்லா உருவின் கோலத்தை ஒளிவடிவாகக் கண்டவன் மயனே. இது குறித்தே ஐந்திற நூல் முழுவதுமாக ஆடல்வல்லானை ஒளிப் பொருளாகத் தான் காண்கிறனே ஒழிய ஒரு சமயப் பொருளாக, சமயத்தின் அடையாளச் சின்னமாக காணவில்லை. திருஅருட்பாவில் வள்ளலார் பெருமகனாரும் நடராசனை அக்கூத்தை ஒளிநடம் என்றே குறிப்பிடுகின்றனர். ஓர் சமயப் பொருளாக அவர் காணவில்லை. பிரளய காலத்திற்குப் பிறகு வரலாற்றுக் காலத்திற்றான் சமயப் பொருளாக ஆனது என்க.

எண்ணுதற்	கரிய கோலம்	எழுதுதற்	கரிய கோலம்
நண்ணுதல்	செறிய கோலம்	நவையுறும்	ஆடல்வல்லான்
புண்ணிய	திருக்கோலத்தை	பொற்புற	அமைத்த லாலே
திண்ணமாம்	அருள்பெற்றோங்கும்	திருமயன்	சிற்ப மென்னே

[வை:633]

பரம்பொருள்	எங்கும் உண்டு	பெருங்கலை	யாண்டும் உண்டு
பரம்பொருள்	உணர்வினாலே	ஒளிவழி	பாடு கண்டேன்
பரம்பொருள்	அருளினாலே	திருநட	ராசன்கண்டேன்
பரம்பொருள்	அருளினாலே	பெருங்கலை	படைத்தேன்காண்பீர்

[வை:1166]

இங்கு ஒரு முக்கியமான செய்தியைக் குறிப்பிடல் வேண்டும். நடராஜன் என்ற வடிவமே [ஒளி நடமே] பிரபஞ்சத்தில் தோன்றிய முதல் வடிவம் [மூலச் சிற்பம்] என்பான் மயன், இன்னும் சொல்லப் போனால் இது குமரிக் கண்டத்தில் மயனால் சொல்லப்பட்ட, செய்யப்பட்ட முதல் சிற்பம். இச்சிற்ப வடிவினை தென்னாட்டினைத் தவிர வேறு எங்கும் காண இயலாது. அப்படியே கண்டாலும் அங்கும் மயனது வரலாற்றுச் சுவடுகளைத் தான் காண முடியும். இதன் பொருட்டே ஒளியை முதல் பொருளாகப் பேசிய மயன் வழித் தோன்றியவர்கள் "நடராசனை" மட்டுமே மூல வடிவம் என்றும், மூலப் பொருள் என்றும் பேசுவதைக் காணலாம்.

இவ்வாறு அருவ நிலையில் ஒளியாக வகுத்தறிந்த மூலப் பொருள் அருவுருவ நிலையில் சதுரவிடிவினதான அணுப்பொருளாக – நம் உள்ளமாகிய ஆகாசத்திலும், பேருள்ளமாகிய பேராகாசகத்திலும் நிறைந்திருக்கின்றனன். ஆகையால் தான், சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமே அதே தெய்வம் என்பதாகும் என்ற தொனியில் தனி நடராஜன் என்றும் சிற்றாகாசமான நமது உள்ளத்தில் நிரம்பிய அணுக்களில் நடம் புரியும் மூலப் பொருளாக வள்ளலார் பெருமகனார் கூறுவதைக் காணுங்கள்.

"சிற்சபை நடுவே திருநடம் புரியும் அற்புத

மருந்தென்னும் ஆனந்த மருந்தே." – திருஅருட்பா

நாம் நம் உள்ளத்தில் ஒன்றை உள்ளி – உன்னி – உன்னிய அப்பொருளையோ அல்லது பொருளுக்கு நிகரான சொல்லையோ தோற்றுவிக்கின்றோம். அவ்விதமே பேருள்ளமாகிய பேராகாசமும் [இயற்கையும்] தன் இயல்பிலே, உள்ளும் தன்மையுடையதாயிருக்கின்றது. அவ்வியல்பினாலே அஃதும் உள்ளி உன்னி, உன்னிய பொருளையும், பொருளுக்கு நிகரான சொல்லையும் வெளிப் படுத்துகின்றது.

எனவே, திருவருட்பாவில் கண்ட செய்திகள் அனைத்தும் ஐந்திறம் நிறைந்த செய்திகளே என்று முடிவு கட்டலாம்.

அறிவியல் படித்த மேலோர் இனியாவது ஐந்திறத்தைப் படியுங்கள், தமிழனின் அறிவியல் ஏற்ற நிலையைப் போற்றுங்கள் என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன்.

ஐந்திறம் நிறைந்த வேதம், ஆகமம், சில்பம் ஆகியவற்றை புரிந்த நம் முன்னோர் visual commentaries என்ற நிலையில் சிறப்பான பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். நம்மிடையே விட்டுச் சென்றிருக்கிறார்கள். இச் செய்திகளை – அறிவியல் நுட்பங்களை – உள்ளடக்கி டாக்டர்.ஸ்தபதி அவர்கள் கடந்த 40 ஆண்டுகளாக ஆய்வு செய்து மக்கள் தம் கவனத்தை ஈர்த்தும், பாராட்டுகள் பல பெற்று வந்ததோடு, அந்த அறியில் நுட்பங்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் பட விளக்கங்களோடு – எழுதி வெளியிட்ட முதல்வர் என்பதை இங்கு கூறிடல் சாலப் பொருந்தும் என தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எழுதிய பட விளக்கங்களோடு கூடிய – முதல் நூல் தான் **"சிற்பச் செந்நூல்"** ஆகும். இரண்டாவது பெரிய நூல் **"ஸ்தாபத்ய வேதம்"** என்பதாகும். இரண்டு நூல்களும் உலக அரங்கில் நல்ல வரவேற்பைப் பெற்றவை என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

எனவே ஐந்திறம், மற்றும் பிரணவவேதம் ஆகிய தமிழ் அறிவியல் நூல்களுக்கும் ஆங்கிலத்திலும் தமிழிலும் உரை எழுதி வருகிறார்.விரைவில் அந்நூல்களும் பட விளக்கங்களோடு வெளி வர இருக்கின்றன என்ற நற்செய்தியினையும் இங்கே தெரிவிக்க கடமைப் பட்டவனாவேன்.

ஸ்தபதி.S.சந்தானகிருஷ்ணன்,

B.sc., (T.Arch), M.A(Sanskrit)

குமரிக் கண்டத்தில் காலமும், வானியல் கணிதமும்

–டாக்டர்.எஸ்.பத்மநாபன்

நான் குமரி மண்ணைச் சார்ந்தவன். கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியான குமரி மாவட்டத்தைச் சார்ந்தவன். குமரி மாவட்டத்தில் கழிந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கடல் கொண்ட குமரிக் கண்டம் பற்றி கள ஆய்வுசெய்து வருபவன் என்ற நிலையில் எனக்குக் கிடைத்த சில தகவல்களை இன்று உங்களோடு பகிர்ந்துகொள்ள வருகை தந்துள்ளேன். தமிழ் இனம்தான் இந்த உலகத்திலேயே தொன்மையான இனம். இந்த மண்ணுலகில் முதன் முதலில் மனித இனம் தோன்றிய பகுதி கடல்கொண்ட குமரிக்கண்டம் என்பது ஆய்வாளர்கள் பலர் கண்டறிந்த உண்மை. இன்ற குமரியின் தெற்கே காணப்படும் இந்துமாக் கடல் என்னும் நீர்ப்பரப்பு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலப்பரப்பாக இருந்தது. அந்த நிலப்பரப்புதான் தமிழ் இலக்கியங்களில் வரும் குமரிநாடு என்பர். எர்னார்டு ஹெக்கல்,ஸ்காட் லான்சர் உட்பட மேல்நாட்டு வரலாற்று ஆய்வாளர்கள் பலரும்,சோமசுந்தர பாரதியார், பூர்ண லிங்கம் பிள்ளை, அப்பாத்துரையார், தேவநேயப் பாவாணர் உட்பட கீழை நாட்டு ஆய்வாளர்கள் பலரும் குமரிக்கண்டக் கோட்பாட்டை வலியுறுத்தியவர்கள். குமரிக் கண்டக் கோட்பாட்டை வலியுறுத்திப் பல்வேறு ஆய்வரங்குகளில் இன்று பேசி வருபவர் அருட்செல்வர் டாக்டர் மகாலிங்கனார். அப்பெரியவர் நடத்தும் இக் கருத்தரங்கில் கலந்து ஆய்வுரை நிகழ்த்த வாய்ப்புக் கிடைத்தை நான் மிகவும் பெருமையாகக் கருதுகிறேன்.

பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள என்ற சிலப்பதிகார வரிகள் தமிழனின் தாயமான குமரிக் கண்டத்தையும் அது கடல்கொண்ட நிகழ்ச்சியையும் பறைசாற்றி நிற்கின்றன. கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியை மேலும் கடல் கொள்ளாதிருக்கவே அன்னை பாரசக்தி கன்னியாக,குமரியாகத் தவக்கோலத்திலே நின்று நம்மைக் காத்து அருள்புரிகின்றார் என்பதை மனதிற்கொண்டு தான் அமரகவி பாரதியார் நீலத்திரை கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி என்று பாடிச் சென்றார். இதேக் கருத்தை மனதிற் கொண்டுதான் குழந்தைக் கவிஞரும் தொல்லியல் அறிஞருமான கவிமணியவர்கள்

தென்னெல்லை காத்தாளும் தேவி! குமரி! நின் பொன்னடியைக் கும்பிட்டு போற்றுகின்றேன் என்று குமரித்துறையில் நின்றருளும் தேவிக்கு பாமாலை சூட்டுகிறார்.

இறையனாரின் அகப்பொருளுரை, அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரை ஆகிய நூல்கள் இன்றைய கன்னியாகுமரியின் தெற்கே நாற்பத்தொன்பது நாடுகள் இருந்தன என்றும், அந்த நிலப்பரப்பில் இரண்டு தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றன என்றும் பல தகவல்களைத் தருகின்றன.பௌத்த நூலான மகாவம்சத்திலும் கிறித்தவர்களின் வேதநூலிலும் கடல் பொங்கிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் குமரிமுனைக்கும் தெற்கு நீண்டு பரந்ததொரு நிலப்பரப்பு இருந்தது என்பதையும் தெளிவுபடுத்தும் படி அமைந்துள்ளன. இத்தகவல்கள் குமரியின் தொன்மையையும் பெருமையயும் நிலைநாட்டி நிற்கின்றன. இத்தகவல்களை இலக்கியப் புனைந்துரைகள் என்று நாம் ஒதுக்கி விட முடியாது. இலக்கியம் தருகின்ற பல செய்திகளை மண்ணடி ஆய்வுகளும், கடலடி ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. அண்மைக்கால ஆழ்கடல் ஆய்வுகள் கடல் கொண்ட குமரிக் கண்டக் கோட்பாட்டை மேலும் உறுதி செய்கின்றன. இந்துமாக் கடலில் முறையாக, விரிவான முறையில் ஆழ்கடல் ஆய்வு நடத்தினால்தான் தமிழகத்தின் உண்மையான வரலாறு, தொன்மையான வரலாறு தெரியவரும்.

பண்டையத் தமிழ் இலக்கியங்கள் தரும் தகவல்களின் அடிப்படையில் நோக்கும் போது மயன் கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் வாழ்ந்தவன் என அறிய முடிகிறது. அந்த மயன் பரம்பரையில் வந்தவர்கள் தான் தமிழகத்திலுள்ள இன்னறய சிற்பிகள். கேரள மாநிலத்தில் சிற்பிகளை இன்றும் மயாச்சாரியர் என்றுதான் அழைப்பர். அதுமட்டுமல்ல தமிழ்நாட்டில் ஸ்தபதி என்று அழைக்கப்படும் தலைமைச் சிற்பிகளை கேரளத்தில் பெருந்தச்சன் என்றுதான் இனிய தமிழலே அழைக்கின்றனர். இன்னறய கேரள மாநிலத்தை அதாவது அன்றைய சேரநாட்டை ஒதுக்கிவைத்து தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதினால் தமிழகத்தின் வரலாறு முழுமைபெறாது என்பதை நாம் உணர வேண்டும்.

கடல்கொண்ட குமரிக்கண்டத்தை இலெமூரியா என்று கூறுவது தவறு என்பது எனது கருத்து. இலெமூர் என்றால் காட்டில் வாழ்கின்ற ஒரு குரங்கு இனம்.

அவை இன்றும் ஆப்பிரிக்கவில் வாழ்கின்றன. ஆனால் குமரிக் கண்டத்தில் வாழ்ந்தர்கள் பண்பட்ட ஒரு காலச்சாரத்திற்குச் சொந்தக்காரர்கள் அவர்களைத் தான் தென்புலத்தோர் என்றும் தென்புலச் சீரோர் என்றும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் அழைக்கின்றன.புலம் என்றால் நிலம் என்று பொருள். தென்புலத்தோர் என்றால் கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்த பண்பட்ட ஒரு காலச்சாரத்திற்கு உரிய நமது மூதாதையர் என்று பொருள் கொள்வதே பொருத்தமானதாகும், இதை விடுத்து தென்புலத்தோர் என்றால் இறந்தவர்கள் என்று எளிதாகப் பொருள் கூறுவது பொருத்தமுடையதல்ல. தென்புலம் என்ற சொல்லின் பின்னால் ஒரு சிறப்புமிக்க தொன்மையான பாரம்பரியம் மிக்க வரலாறே அடங்கியுள்ளது. என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்தவர்கள். உயர்ந்ததொரு பண்பாட்டில் சிகரத்தல் வாழ்ந்தவர்கள். அவர்களைக் குரங்கினாகக் கருதுவது பொருந்தாது என்பேன்.குமரிக்கண்டத்தில்வாழ்ந்த தமிழ்ர்கள் இலக்கியம்,இலக்கணம்,அறிவியல், வானியல்,சோதிடம், மருத்துவம், தத்துவம், நுண்கலைகள், கைவினைக் கலைகள் ஆகிய பல்வேறு துறையில் தேர்ச்சிபெற்று விளங்கினர் என்று அறிய முடிகிறது.

தமிழ்ச் சங்கங்கள்

கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் இரண்டு கடல்கோள்கள் நடைபெற்ற தகவலையும்,அங்கு இரண்டு தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்ற தகவலையும் பண்டைய தமிழ் இலக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. முதல் தமிழ்ச்சங்கம் தென்மதுரையிலும்,இரண்டாவது தமிழ்ச்சங்கம் கபாடபுரத்திலும் நடைபெற்றன என்றும், இந்த இரண்டு சங்கங்களும் கடல்கோளினால் அழிந்த பிறகு இன்றைய மதுரையில் மூன்றாவது தமிழ்ச்சங்கம் நடைபெற்றது என்றும் பண்டைய நூல்கள் கூறுகின்றன. இதனை முதல்,இடை,கடைச்சங்கங்கள் என்று கூறுவர். தமிழின் வரலாறே இந்தச் சங்கங்களின் அடிப்படையிலே எழுந்ததுதான்.தங்கள் மொழியை அவர்கள் தங்கள் வாழ்கையோடு ஒட்டி வளர்த்தனர். முதல்,இடை,கடை இவை தவிர மகேந்திரம்,மணிமலை,பொதிகை ஆகிய மலை உச்சிகளிலும் தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்ற தகவல்களை இராமாயணம்,திருவாசகம் ஆகிய நூல்கள் கூறுகின்றன. கடல்கோளுக்கு அஞ்சி மலை உச்சியில் சங்கம் அமைத்திருக்க வேண்டும்.மட்டுமல்ல,கடல்கோளுக்கு அஞ்சி பண்டைய தமிழ்கள் வடதிசை

நோக்கி குடிபெயர்ந்தாகவும் கூறுப்படுகிறது. அதனால்தான் பாரத நாட்டின் வடக்கே பேசும் பிராகுவே,முண்டா மொழிகளில் தமிழ்மொழியின் தாக்கத்தை நாம் காண முடிகிறது. இந்த அடிப்படையிலே சிந்துவெளி நாகரிகம் திராவிட நாகரிகம்தான் என்று ஆய்வாளர்கள் கூறுவர்.

முதல் தமிழ்ச் சங்கத்தில் அகத்தியர் எழுதிய அகத்தியமும்,மயன் எழுதிய ஐந்திறமும், முதன்மையான ஆதார நூல்களாகத் திகழ்ந்தன என்று தெரிய வருகிறது. கடல்கோளினால் முதற்சங்க நூல்கள் அழிந்தது போக,அகத்தியத்தின் சில பகுதிகளும்,ஐந்திறத்தின் முழுப்பகுதியும் நமக்குக் கிடைத்துள்ளன. இவை தமிழ் இனத்திற்கு இறைவன் தந்த கருவூலங்களாகும். அகத்தியத்தின் ஒரு வரிதான் இலக்கியம் இன்றேல் இலக்கணம் இல்லை என்பது. மயன் எழுதிய ஐந்திறம் டாக்டர் கணபதி ஸ்தபதியாரின் பெருமுயற்சியால் 1986- ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு சார்பில் அன்றைய முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஐந்திறம் என்ற விஞ்ஞான சூத்திரப்பாக்கள் நிறைந்த ஏட்டுச் சுவடியிலிருந்து தொகுத்த ஓர் அறிய நூலை தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் வெளியிட்டார்.

முதல் தமிழ்ச்சங்கம் நடைபெற்ற தென்மதுரை அழிந்த பின்னர் இரண்டாவது தமிழ்ச் சங்கம் கபாடபுரத்தில் நடைபெற்றது. இரண்டாவது தமிழ்ச் சங்கத்திலே தோன்றிய நூல்களில் தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியம் மட்டும் நமக்குக் கிடைத்தது. மற்ற நூல்கள் அனைத்தும் அழிந்து விட்டன. கபாடபுரம் அழிந்த பின்னர் இன்றைய மதுரையில் மூன்றாவது தமிழ்ச்சங்கம் நடைபெற்றது. அங்கு தோன்றிய நூல்கள்தான் பத்துப்பாட்டும்,எட்டுத்தொகையும்.இது தான் தமிழ்ச்சங்கங்களின் சுருங்கிய வரலாறு.

அகத்தியமும்,ஐந்திறமும் முதல் தமிழ்ச்சங்கத்தில் தோன்றிய நூல்கள். தொல்காப்பியம் இரண்டாவது தமிழ்ச் சங்கத்தில் தோன்றிய நூல்,அதாவது கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தோன்றிய மூன்று நூல்கள் இன்று நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவை அகத்தியம்,ஐந்திறம்,தொல்காப்பியம் ஆகியவை. அவற்றுள் அகத்தியத்தில் சில பகுதிகள் நமக்குக் கிடைத்துள்ளன.இந்த மூன்று நூல்களும் கடல் கொண்ட குமரிக் கண்டத்தல் தோன்றிய நூல்கள் என்பதால் குறிப்பிடும் தகவல்கள் கடல் கொண்ட குமரிக் கண்டத்தைப் பற்றியத் தகவல்களாகத்

தானே இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் எழுதப்பட்டதுதான் குமரிக் கண்டத்தில் காலமும் வானியல் கணிதமும் என்ற எனது ஆய்வுரை.

முதல் தமிழ்ச் சங்கத்தில் அகத்தியம் இலக்கியத்திற்கு இலக்கணமாகவும், ஐந்திரம் கலைக்கு இலக்கணமாகவும் இருந்திருக்க வேண்டும். ஐந்திரம் என்பது இந்த பிரஞ்சத்தின் இரகசியங்களை விஞ்ஞான ரீதியாக விளக்குகின்ற ஓர் அரிய தமிழ் நூலாகவும் திகழ்கின்றது. தமிழ் உலகில் அகத்தியன் என்ற பெயரில் பலரும்,மயன் என்ற பெயரில் பலரும் இருந்திருக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தை வளர்க்க அகத்தியர் பீடமும்,தமிழ்க் கலைகளையும் விஞ்ஞானத்தையும் வளர்க்க மயன் பீடமும் இருந்திருக்க வேண்டும். சங்கரர் பீடத்தை அலங்கரிப்பவர்கள் சங்கரசாரியார் என்று அழைப்பது போல அகத்தியர் பீடத்தை அலங்கரித்தவர் அகத்தியர் என்றும் மயன் பீடத்தை அலங்கரித்தவர் மயன் என்றும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். என்ற கருத்து இங்கே சிந்திக்கத்தக்கது. அகத்தியார் பீடம் பற்றி முதன் முதலில் ஆய்வுசெய்து வெளியிட்டவர் அருட்செல்வர் டாக்டர் மாகலிங்கனார்தான் என்பதை இங்கேக் குறிப்பிட விரும்புகின்றேன். கடல்கோளுக்கு அஞ்சி இந்த பீடங்கள் மலையுச்சியில் நடந்திருக்க வேண்டும். இவ்வாறு இலக்கிய பீடத்தைத் தலைமை தாங்கிய அகத்தியர் மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழ்ந்து வந்த இடம் இன்று அகத்தியர் கூடம் என்று அழைக்கப்படுகிறது. அகத்தியர் கூடம் இன்று கேரள மாநிலத்தில் ஒரு புண்ணியத்தலமாக விளக்குகின்றது. அதே போன்று கலையையும்,விஞ்ஞானத்தையும் வளர்த்து வந்த மயன் வாழ்ந்து இடம் இன்று மயன்பறம்பு என்று அழைக்கப்படுகிறது.மயன்பறம்பு தமிழகத்தில் குமரி மாவட்டத்திலே மகேந்திரகிரியில் உள்ளது. மகேந்திரகிரியின் உச்சியையும், மயன்பறம்பின் உச்சியையும்,நாடுகாணிகணவாய் பிரிக்கின்றது. மகேந்திர பர்வதத்தை கம்பன் மயேந்திரமா நெடுவரை என்று தான் குறிப்பிடுகிறார். அகத்தியர் கூடம் மற்றும் மயன்பறம்பு பற்றி விரிவாக களஆய்வு செய்தால் அகத்தியன் மற்றும் மயன் பற்றிய புதைந்துபோன பல வரலாற்று உண்மைகள் வெளிவரும் என்பது திண்ணம்.

இரண்டாவது தமிழ்ச் சங்கத்தில் கலந்துகொண்ட தொல்காப்பியர் முதல் தமிழ்ச் சங்கத்தில் தோன்றிய அகத்தியத்தையும்,ஐந்திரத்தையும் நன்கு கற்றுத்தெரிந்து தொல்காப்பியத்தை எழுதியிருக்க வேண்டும்.அதனால்தான் பன்னிரு

படலமும்,புறப்பொருள் வெண்பா மாலையும் தொல்காப்பியத்திற்கு அகத்தியத்தை முதல் நூலாகக் கூறுகின்றன. ஆனால் தொல்காப்பியப் பாயிரம் மயன் எழுதிய ஐந்திறத்தைத் தான் தொல்காப்பியத்திற்கு முதல் நூலாகக் கூறுகிறது ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம் என்பது தொல்காப்பியப்பாயிரம் தரும் தகவல். தொல்காப்பியத்திற்குஉரையெழுதிய இளம்பூரணார், நச்சினார்க்கினியர், சேனாவரையர் ஆகியோர் ஐந்திறம் தான் தொல்காப்பியத்திற்கு முதல் நூல் என்று கூறியுள்ளனர்.

ஐந்திரத்தை ஐந்திறம் என்பார் டாக்டர் கணபதி ஸ்தபதியார். பிற்காலத்தில் அந்த ஐந்திறத்திலுள்ள வல்லறை கரத்தை இடையின ர கரமாக்கி,ஐந்திறத்தை ஐந்திரமாக பெயர் மாற்றி,இந்திரன் எழுதிய நூல் ஐந்திரம் என்று நூலாசிரியர் பெயரை மாற்றி விட்டனர்.இதுதான் ஐந்திறம் ஐந்திரமாக மாறிய வரலாறு . இன்று ஐந்திரம் ஐந்திறமாக பேசப்பட்டு வருகிறது. அருட்பிரகாச வள்ளலார் ஐந்திரத்தை ஐந்திறம் என்றே எழுதுகிறார்.

1974-ஆம் ஆண்டு ஐந்திறம் பற்றி ஒன்று எழுதிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர். க.ப. அறவாணன் அவர்கள் ஐந்திறம் பற்றியும் அதன் ஆசிரியர் மயன் பற்றியும் விரிவான ஆய்வு தேவை என்று கூறியுள்ளார்[மயன் டாக்டர். க.ப. அறவாணன் பக்கம்-7]. மயனைப் பற்றியும் அவன் எழுதய நூல்கள் பற்றியும் விரிவான ஆய்வு செய்தவர் டாக்டர் கணபதி ஸ்தபதியார்தான். அவரது ஆய்வின்படி குமரிக் கண்டத்திலே வாழ்ந்த மயன்தான் இந்த உலகின் முதல் சிற்பி,கலைக்கு இலக்கணம் வகுத்த முன்னோடி,முதல் வாஸ்து விஞ்ஞானி,முதல் வானியல் நிபுணர்,முதல் தத்துவ ஞானி. மயன் எழுதிய சூரிய சித்தாந்தம் தான் வானியல்துறை பற்றி எழுதப்பட்ட நூல்களின் முன்னோடி. தமிழ்நாட்டு மயன் நாகரீகம்தான் அமெரிக்க நாட்டின் மாயன் நாகரீகமாகத் திகழ்கிறது. தென்னகத்தைச் சார்ந்த மயன் கடல்கோளிற்குப் பின்னர் கேரளம்,மைசூர் வழியாக வடபுலம் சென்றான் என்றும்,மயாசுரன் ஊர்தான் மைசூர் ஆயிற்று என்றும் மாயன் சதாரோதான் மோகன்சதாரோ என்று மாறிது என்று டாக்டர் ஸ்தபதியார் கூறுகின்றார். இதுபோன்று மயன் பற்றிய புதைந்துபோன வரலாற்று உண்மைகளை டாக்டர் கணபதி ஸ்தபதியார் வெளிக்கொணர்ந்துள்ளார். மயன் எழுதிய பல அரிய நூல்கள் டாக்டர் கணபதி ஸ்தபதியாரிடம் உள்ளன. அவை யாவும் வெளிவர

வேண்டும். அவை வெளிவரவில்லை என்றால்,மயன் தமிழிலே எழுதிய மயமதம் திருவனந்தபுரம் அரண்மனை நூலகத்திலிருந்து மறைந்துபோல் டாக்டர் ஸ்தபதியார் பாதுகாத்து வரும் மயன் எழுதிய நூல்கள் அனைத்தும் மறைந்துவிடும்,அழிந்து விடும்.அவற்றை அழியாமல் பாதுகாப்பது நமது கடமையாகும்.

The major portion of the manuscript of **Mayamatha** was traced out from the Palace Library at Thiruvananthapuram along With its **Tamiledition.** The maunscript in Sanskrit was published in a book form by the Government of Travancore in the year 1919 through its department of publication of Sanskrit Manuscripts, Thiruvananthapuram. The manuscript in Tamil is not yet published and its Where abouts are not known at present. It is not Clearly known that the Original manuscript was written in Tamil or Sanakrit. It is a matter for further research - Mayan in Kumari Continent Page.(This is an extract appeared in the research paper on **"Mayan in Kumari Continent"** Which was presented by Dr. S. Padmanadhan in the second International Seminar on Mayonic Science and Technology held at Thiruvananthapuram in jan.1997)

ஐந்திறம் ஐந்திரவியாகர்ணம் என்ற சமஸ்கிருத நூலின் தமிழாக்கம் என்பர் சிலர். ஆனால் உண்மை அதுவல்ல என்பதை மயன் திருவாக்கால் நாம் அறியலாம். **அயல்நெறிச் சாராத் தமிழ்மொழியுணர்வால் மயத்தமிழ்ச் சிற்பி அளிந்தனன் மகிழ்ந்தே** என்பது மயன் ஐந்திறத்தில் கூறிய வரிகள். அந்நூல் மொழிபெயர்ப்பல்ல. அசல் தமிழ் நூல்தான் என்பதை இது உறுதிசெய்கிறது.[ஐந்திறம் பாடல் - 892] தனிதமிழ் இயக்கத்தை முதல் முதலில் தொடங்கியவனே மயன் தான் **செந்தமிழ் இயக்கம் கண்டேன்** என்பது மயன் திருவாக்கு. தமிழிமொழியை இயல், இசை,நாடகம் என்று முத்தமிழாக வகுக்கின்றான் மயன். தொல்காப்பியத்தில் இவை இயல்,பண்,கூத்து என்று தனித்தனியே இடம்பெற்றுள்ளன.

மயன் இயற்றிய ஐந்திறம் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்,பாலை என ஐந்தாகப் பிரித்து,வாழ்க்கைமுறையை ஐந்திணைகளாக பிரித்துக் கூறுகிறது. ஐந்திறம் ஐந்திணைகளை முதல் பொருள் கருப்பொருள்,உரிப்பொருள் என மூன்று தலைப்புகளில் வகுக்கின்றான்.

மயன்.காலமும்,இடமும் இங்கே தலைமை வகிக்கின்றன. காலமும் இடமும் கணக்கியல் ஆற்றி, காலமும் உணர்வும் கணக்கிட்டு உணர்ந்தே காலம் காண்பது இயல் நெறி மரபே என்பது மயன் கூற்று. இதைத்தான் தொல்காப்பியரும் கூறுகிறார். வாஸ்து விஞ்ஞானத்தின் அடிப்படை இதுவே,இதைத்தான் மயன் தந்த ஐந்திறமும்,தொல்காப்பியர் தந்த தொல்காப்பியமும் கூறுகின்றன.காலமே ஆக்கும் , காலமே காக்கும்,காலமே துடைக்கும் என்பது மயன் திருவாக்கு. முதலெனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பென மொழிய என்பது தொல்காப்பியர் கூற்று. ஆக வாஸ்து சாஸ்திரம் கடல்கொண்ட குமரிக் கண்டத்திலே தோன்றியது எனத் தெளிவாகிறது. இதனை முதல் முதலில் மயனும்,பின்னர் அவன் வழிவந்த தொல்காப்பியரும் கூறிச்சென்றனர். இவர்கள் இருவருமே கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்தவர்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

வாஸ்துவின் அடிப்படை காலமும் கணக்கும்தான். காலம் என்ற சொல் ஐந்திறத்தில் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன. காலமும்,கணக்கும் இரண்டறக் கலந்தே காணப்படும் என்பது மயன் கோட்பாடு. கலை,விஞ்ஞானம் ஆகியவற்றின் அடிப்படை கணக்குதான். சிற்பக்கலைக்கும்,கட்டிடக்கலைக்கும் அடிப்படை கணக்குதான். கட்டிக் கலையே கணக்கியல் உச்சி, [பாடல் 707] காலக்கூற்றே கணக்கியல் மூலம் [பாடல் 351] என்பவை மயன் திருவாக்குகள். இந்த அடிப்படையின் மூலம், காலம், சீலம், கோலம்,என்ற சொல்நயம். சொல் அடியும் வாய்ந்த விஞ்ஞான அடிப்படையில் ஓரு தனி விஞ்ஞானத் தோற்றத்தைத் தொகுத்து ஐந்திறம் என்ற பெயரில் ஓர் இலக்கணத்தை வகுத்துள்ளான் மயன். காலமே கோலத்திற்குக் காரணமாகிறது. என்பதை காலத்தை காலமாக் கடவுள் என்பான் மயன். ஐந்திறத்தில் காலம் இடம்(**Time and Space**)என்ற விஞ்ஞான நுட்பங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. காலமும் மூலமும் சீலக்கோலமாய் ஞாலத்திறனும் நலவயறத் தெரிந்தே நுட்பங் காண்பர் நுண்ணுணர்வோரே என்பது மயன் கூற்று [பாடல் 397].

பஞ்சபூதக் கோட்பாடு

நம் உலகம் எப்படி உள்ளது? அதன் தன்மை என்ன என்று ஆய்ந்துணர்ந்த நம் மூதாதையர் அது பஞ்சபூதங்களால் ஆனது என்ற கருத்தை வெளிப்படுத்தினார்கள்.

நாம் உயிர் வாழ்வதற்கு மகவும் ஆதாரமாக இருக்கும் நீர்,நிலம்,நெருப்பு,வான்,காற்று என்ற ஐந்தும் பஞ்சபூதங்களாக் கருதப்படுகின்றன. பஞ்சபூதக்கோட்பாட்டைத் தனது ஐந்திறத்தில் பல இடங்களில் மயன் குறிப்பிடுகிறான். **நீர், நிலம், நெருப்பே,வான்காற்றைந்தும்,தேர்நிலைக் கலைத்திறன் சீர்நெறிமுடியே** என்பது மயன் திருவாக்கு [ஐந்திறம் பாடல் 28,41,95]. அதனைத் தொடர்ந்து தொல்காப்பியரும் நிலம்,தீ,நீர்,வளி,விசு'போடைந்தும் கலந்த மயக்கம் உலகம் [மரபியல் 61] என்று எடுத்துரைக்கிறார். புறநூனூறு [2],மதுரைக் காஞ்சி [453-454] திருக்குறள் [271] ஆகிய நூல்களின் பஞ்சபூதங்களை இறைவனின் உறைவிடமாகக் கருதி நமது முன்னோர்கள் வழிபட்டனர்,இன்றும் வழிபடுகின்றனர். இத்தகவல்களிலிருந்து குமரிக் கண்டத்தில் வாழ்ந்த தமிழர்கள் பஞ்சபூதக் கோட்பாட்டை நன்கு அறிந்திருந்தனர் என்பதும்,அந்த அடிப்படையிலே எழுந்ததுதான் தமிழ்நாட்டில் அமைந்துள்ள பஞ்சபூதத் தலங்கள் என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கதாகும். காஞ்சியிலே நிலமாகவும்,திருவானைக்காவில் நீராகவும் ,காளஹஸ்தியில் வாயுவாகவும்,திருவண்ணாமலையில் நெருப்பாகவும்,சிதம்பரத்தில் விண்ணாகவும் சிவ பெருமாள் காட்சி தருகிறார். கேரள மாநிலத்தில் ஓச்சிறையில் பஞ்சபூதங்கள் வழிப்பட்ட தலம் குமரிமாவட்டத்திலுள்ள பூதப்பாண்டி,அதனால் அங்குள்ள மூலவர் பூதலிங்கம் என்று அழைக்கப்படுகிறார். பஞ்சபூதக் கோட்டை மயனைத் தொடர்ந்து தொல்காப்பியரும் அவர்களைத் தொடர்ந்து தொல்காப்பியரும் அவர்களைத் தொடர்ந்து கடைச்சங்கப் புலவர்களும் எடுத்துரைத்தனர்.

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்புதை வரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்தியற்கை

என்பது புறநானூற்றுப் பாடல் [புறம் 2]. இவ்வுலகம் திண்மையான நிலத்தையும் **(Earth),** நிலத்தைச் சுற்றி உயரே பரந்து அகன்று சூழ்ந்துள்ள வெளியாகிய வானத்தையும் **(Space),** வானத்தைத் தழுவி நிலவும் காற்றையும்**(Air),** அக்காற்றை முதன்மையாகக் கொண்டு எரியும் நெருப்பையும்**(Fire),** அந்த

நெருப்போடு மாறுபட்டதாகிய நீரையும் **(Water),** அடுக்கடுக்காக இப்பாடல் குறிப்பிடுகிறது.இவ்விதம் தொடர் அடுக்கடுக்காக கூறப்பட்டுள்ள வானியல் கலந்த அறிவியல் கருத்துகளை எண்ணிப் பார்த்தால் நம் முன்னோர்கள் வானியல் கலந்த அறிவியல் கொள்கைகளை முறைப்படியாகக் கற்றுள்ளனர் என்று அறிய முடிகிறது.

வானியல்

அறிவியல் துறையில் தொன்மையானதும்,இன்றும் புதுமையுடையதும்,என்றும் வியப்பினைத் தருவதும் வானியல் ஆகும். இன்று பல்வேறு தொலைநோக்கிகளைக் கொண்டு ஆய்வதோடன்றி, விண்வெளியில் ஆராயச்சி நிலையங்கள் அமைத்தும்,காற்றிலேறி விண்ணை அறியும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவற்றை நம் தமிழ்ச் சான்றோர்கள் எவ்வித கருவிகளின் துணையுமின்றி தம் ஆற்றல்மிகு அறிவுக் கண்களாலேயே ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளனர்.

வானியல்துறை சார்ந்த அறிவியல் கருத்துக்களை குமரிக் கண்டத்தில் வாழ்ந்த தமிழ்ப்பேரறிஞர்கள் தம் நுண்ணுணர்வால் அறிந்து வெளிப்படுத்தியுள்ளனர். அப்பேரறிஞர்களில் உழைப்பின் பயனாக அவர்கள் அறிவுறுத்திய உண்மைகள் சில இன்று நமக்குக் கிடைத்துள்ள சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.பண்டு உணரப்பட்ட அந்த உண்மைகள் எல்லாம்,தற்போது பல்வேறு நவீன கருவிகளின் துணைகொண்டு ஆய்ந்தறியப்பட்ட உண்மைகளுடன் பெரிதும் ஒத்திருக்கக் காண்கின்றோம். இந்த உலகத்தினையும் அதனைச் சூழ்ந்த வெளியாகிய வானத்தின் இயல்பினையும் குமரிக் கண்டத்தில் வாழ்ந்த நம் மூதாதையர் ஆய்ந்து உணர்ந்து வெளியிட்டுள்ளனர்.

இந்த உலகில் வானியல் பற்றி முதன் முதலில் எழுந்த நூல் மயாசுரன் எழுதிய சூரிய சித்தாந்தம் என்றும்,அவன் மெச்சிகோவிலிருந்து பாரதநாடு வந்தவன் என்றும் மகாராஷ்டிர மாநிலத்தைச் சார்ந்த பொறியாளர் மற்றும் விஞ்ஞானி ஆர்.ஆர். கர்னிக் பண்டைய பாரதத்தின் தொழில்நுட்பங்கள்**(Ancient Indian Technologies)** என்ற நூலிலேக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மெச்சிகோவிற்கு நேரிலே சென்று மாயன் நாகரிகம் பற்றி கள ஆய்வு செய்த டாக்டர் கணபதி ஸ்தபதியார் அந்நூலின் அணிந்துரையில் இதனை மறுத்து எழுதுகிறார். மயாசுரன் கடல்கொண்ட குமரிக்

கண்டத்தைச் சார்ந்தவன் என்றும்,கடல்கோளினால் அவன் வடபுலம் சென்றான் என்றும்,மயனின் சீடர்களால் மயன் பெயரில் உருவாக்கப்பட்டதுதான் மெக்சிகோவில் சிறப்புற்று விளக்கும் மாயன் நாகரிகம் என்றும்,கண்டநிலப் பிளவினால்**(Continental Drift)** மெக்சிகோ குமரிக் கண்டத்திலிருந்து பிரிந்து தனி நாடாக மாறியது என்றும் மயனால் உருவாக்கப்பட்ட பிரமிடுதான் மெக்சிகோவில் காணப்படும் மாயன் பிரமிடு என்றும்,விஞ்ஞானக் கோயிலான சிதம்பரத்தை மனதிற் கொண்டுதான் மாயன் பிரமிடின் மேல் தளம் சிலம்பலம் என்று அழைக்கப்படுகிறது.என்றும் வியப்பூட்டும் பல அரிய தகவல்களை டாக்டர் கணபதி ஸ்தபதியார் தருகிறார்.மெக்சிகோவில் உள்ள மாயன் பிரமிடுகள் மயன் விதித்துத் தந்த சிற்ப மரபாகும். மாயன் பிரமிடின் இலக்கணத்தை மயன் எழுதிய பன்னிருசாரம் என்ற நூலிலே நாம் காணலாம்.**அடித்தளம் விரிந்ததாகி அவை மேலே குறுகிச்செல்ல,படித்தளம் போல் விளங்கும் படித்தளமாகி நின்று** என்பது மயன் கூறும் பிரமிடு வடிவத்தின் இலக்கணம்.ஆக குமரிக் கண்டத்து மயன்தான் மெக்சிகோ மாயன் நாகரிகத்தின் தந்தை என்றும்,அவன்தான் வானியலை முதன் முதலில் ஆய்வு செய்தவன் என்றும், விஞ்ஞானக் கோயிலான பிரமிடு தத்துவத்தை உருவாக்கியவன் என்றும் தெரிய வருகிறது.கேரளா மாநிலத்திலுள்ள திருக்கோயில்களின் கூம்பிய விமானம் பிரமிடு தத்துவத்தில் எழுந்தவைதான். தஞ்சை பெரிய கோயிலின் விமானம் பிரமிடின் மறுவடிவம்தான். மெக்சிகோ பிரமிடுபோல குமரி மாவட்டத்தில் திங்கள் சந்தையில் காணப்படும் படிகளுடன் கூடிய பிரமிடு அந்த வட்டார மக்களால் இன்றும் வணங்கப்படுகிறது.இங்கே குறிப்பிடத்தக்கது.

மயன் தொடங்கிவைத்த வானியல்துறை சங்ககாலத்தில் சிற்ப்புடன் திகழ்ந்தது.வானியல் அறிவை சங்க காலத்திலேயே தமிழர்கள் பெற்றிருந்தனர் என்பதை கணியன் பூங்குன்றனார் என்ற புறநானூற்றுக் கவிஞரின் பெயராலும், ஞாயிறு, திங்கள் ஆகியவற்றின் நிலையையும், இயக்கத்தையும் பற்றிய சில பாடங்களில் வரும் குறிப்பாலும் அறியலாம்[புறம் 30]. வான மண்டலத்தில் உலவிவரும் கோள்களின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்கள் எவ்வாறு நில உலகில் மழை முதலாகிய நிகழ்ச்சிகளை பாதிக்கும் என்று உய்த்தறிந்தனர் என்ற செய்தி புறநானூற்றில் காணப்படுகிறது.சனிக்கோளானது இடபம், சிங்கம்,மீனம் என்ற கோள்களோடு மாறுபட்டாலும், தூமகேது என்னும் வால் நட்சத்திரம் தோன்றினாலும்,

வெள்ளிக்கோளானது தென்திசை சொன்றாலும் நம்நாட்டில் மழைவளம் குறையும் என்ற செய்தி புறநானூற்றிலும் [117], சிலப்பதிகாரத்திலும்[10 :102] இடம்பெற்றுள்ளன. மழை பெய்யும் முறைபற்றி புறநானூற்றுப் பாடல் ஒன்றும் [161] அகநானூற்றுப் பாடல் ஒன்றும் [374] கூறுகின்றது. இப்பாடலில் மழை உருவாவதிலிருந்து மழை பெய்யும்வரை நடைபெறும் அனைத்து அறிவியல் செய்திகளும் இடம் பெற்றிருப்பது இன்றைய வானிலை அறிக்கையை ஒத்துக் காணப்படுகிறது. இப்பாடல்களிலிருந்து பழந்தமிழரின் வானியல் அறிவு தெளிவுற விளக்கும்.

வாயு மண்டலத்தைகம் கணித்தறிதல் என்பது எளிதானதல்ல. இது வானியல் மற்றும் புவியியல் தொடர்பான ஒரு பரந்த ஆய்வாகும்.இது அறிவியல் கோட்பாடு.

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக

என்ற புறநானூற்றுப் பாடலில் [66] வெளிப்படுகிறது. இப்பாடலில் குறிப்பிட்டுள்ள வளிதொழில் ஆனால் என்பது காற்று மண்டலத்தைக் கணித்தறிந்த சங்காலத் தமிழரின் அறிவியல் திறனைக் காட்டுகின்றது.

செஞுஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்புலமும்
வளி திரி தரு திசையும்
வறிது நிலை இய காயமு மென்றிவை
சென்றளந்தறிந்தோர் போலவென்றும்
இனைத்தென் போகும் உளரே

என்ற புறநானூற்றுப் பாடல் [புறம் 30] வானியல் தரும் அரிய தகவல்களை எடுத்துரைக்கின்றது. இப்பாடலின் சூரியனின் இயக்கமும்,அதனுடைய ஈர்ப்பாற்றலும்(**Gravitation**)அந்த ஆற்றலால் இழுக்கப்பட்டு சூரியனைச் சுற்றி வரும் இப்பூமியின் காற்று வீசும் திசையும்,வானம் காற்றில்லாமல் இருந்தாலும் வானத்தில் உயரே சென்று பார்க்கும்போது காற்றின் அடர்த்தி (**Density**)குறைந்து கொண்டே செல்வதையும்,ஒரு குறிப்பிட்ட எல்கைக்கு மேல் காற்று அறவே இல்லை என்பதும் இன்றைய அறிவியல் அறிஞர்கள் செய்த ஆய்வினால் உறுதி செய்யப்பட்ட

உண்மைகள். இந்த உண்மைகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சங்கால தமிழ் மக்கள் வானியல் பயிற்சியில் எத்துணை அளவுக்குச் சிறப்புற்று விளங்கினர் என்பதை அறிய முடிகிறது.

இன்னொரு சிறப்பும் இங்கே உள்ளது.அதாவது வானியல் உண்மைகளை எல்லாம் அங்கங்கே சென்று நேரிலே கண்டறிந்தவர்கள்போல் சென்ற காலத்து இவ்வாறு இருந்தன,இப்பொழுது இன்ன நிலையில் உள்ளன. இனி எதிர்காலத்து இன்ன தன்மையை அடைவன என்று மூன்று காலத்திற்கும் அறுதியிட்டுச் சொல்லும் அறிவியல் பார்வை கொண்ட பண்டைய தமிழர்கள் வானியல் பேரறிவு போற்றுதற்குரியதாகும்.

பண்டையத் தமிழர்களின் வானத்தை உற்றுநோக்கி அதில் ஒளிவிசுகின்ற பொருட்களை மீன்கள் எனப் பெயரிட்டு அழைத்தனர். அவற்றுள் தம்பாலுள்ள இயற்கை ஒளியால் விட்டுவிட்டு மின்னுவன நாள்மீன்கள் **(Stars)** என்றும் பிறவற்றின் ஒளியைக் கொண்டு விளங்குவன கோள்மீன்கள் **(Planets)** என்றும் அவர்கள் பெயரிட்டு அழைத்தமை மிகவும் போற்றுதற்குரியது.இத்தகைய வானியல் கலைச்சொற்கள் தனித்தமிழ்ச் சொற்களாகவே அமைந்துள்ளன என்பதும், இங்கே குறிப்பிடத்தக்கது. சூரியனை மையாகக் கொண்டு சூரிய வழியை 12 சம பாகங்களாகக் பகுத்து 12 ராசிகள் **(Zodiac)** எனப் பெயரிட்டு சோதிட இயலார் வழங்குகின்றனர். மேடம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளுக்குள் 27 நட்சத்திரங்கள் அடங்கும். அதன்படி ஒரு ராசிக்குள் 21/4 நட்சத்திரங்கள் அமைகின்றன.

சங்காலப் புலவரான கூடலூர் கிழார் சேரமன்னன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும் பொறைக்குத் தீங்குண்டாகும் என்று ராசி நட்சத்திர பெயர்ச்சியின் அடிப்படையில் கூறியதாகவும்,அதற்கேற்ப புலவர் கூறிய ஏழாவது நாளில் அம்மன்னர் உயிர்நீத்தார் என்றும் புறநானூற்றுப் பாடல் [எண். 229]ஒன்று கூறுகின்றது. ஆக சோதிடயியலை சங்ககாலத் தமிழர்கள் அறிந்திருந்தனர். என்ற தகவலை புறநானூற்றுப் பாடல் மூலம் நாம் அறியலாம். இவ்வாறு குமரிக் கண்டத்திலே தோன்றிய சோதிடக்கலை சங்ககாலத்தில் வளர்ச்சிபெற்றுத் திகழ்ந்தது.

கணிதவியல்

இன்றைய உலகில் அறிவியல் துறையில் நாம் அடைந்திருக்கும் வளர்ச்சி அனைத்தும் கணிதத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். கணிதம் என்பது எண்களின் செயல்பாடு. கணிதம் இன்றி அறிவியல் இல்லை. நியூட்டனின் விதிகளும்,ஐன்ஸ்டீனின் தேற்றமும் கணிதமொழியில் அமைந்தவைதான். இன்று மனிதவாழ்வில் பெரிய புரட்சியை ஏற்படுத்தி,நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும் கண்பொறி பூஜ்ஜியம்,ஒன்று என்ற இரண்டு எண்களின் அடிப்படையில் செயல்படுகிறது. இதனை எண்கணினி என்பர். இதில் முழுவதுமாக எண்ணை அடிப்படையாகக் கொண்ட குறியீட்டு மொழிகளைத்தான் பயன்படுத்துகின்றனர். இது இன்றைய நிலை. ஆனால் தொல்காப்பியத்தில் கணித இயல் கோட்டுபாடுகள் காணப்படுகின்றன. எண்களைப் பற்றியும் அவற்றின் புணர்ச்சி விதிகளைப் பற்றியும் விரிவாக கூறுவதிலிருந்து பண்டையத் தமிழர்கள் கணிதத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தனர். என அறிய முடிகிறது. ஒன்று,இரண்டு,நூறு , ஆயிரம்,போன்ற எண்களின் பெயர்களையும்,அரை [தொல்,எழுத்து 170] போன்ற அளவுப் பெயர்களையும்,கலம் [தொல் ,எழுத்து 170] போன்ற நிறைப் பெயர்களையும்,தொல்காப்பியம் குறிப்பிடுவதால் பண்டையத் தமிழர்கள் கணிதத்திற்குக் கொடுத்த முக்கியத்தும் தெரிய வருகிறது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்,கண்ணென்ப வாழும் உயிர்க்கு என்பது குறள். இங்கு எண் என்பது கணிதம்,எழுத்து என்பது இலக்கியம். கல்வித்துறையில் கணித இயலுக்குத்தான் வள்ளுவர் முதலிடம் தருகிறார். அறிவியலுக்கு கணிதவியலே அடிப்படை என்று உணர்ந்து அவர் எழுதுகிறார். திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில் நான்கு இடங்களில் எண் ஆனாய்!எழுத்தானாய்! என்றும் எண்ணும் எழுத்தும் என்றும் எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி என்றும் கூறுகின்ற இடங்கள் அனைத்திலும் எண்ணுக்கே அதாவது கணிதவியலுக்கே முதலிடம் தந்துள்ளார். கணிதத்திற்கும், கணிதத்தின் அடிப்படையான இலக்கம் எனும் குறியீட்டிற்கும் எண் என்ற ஒரே சொல்லைப் பண்டையத் தமிழர்கள் பயன்படுத்தியிருப்பது அவர்களது அறிவியல் பார்வைக்கு ஒரு சிறந்த சான்றாகக் கருதலாம். இவற்றிற்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்பவர் கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தோன்றிய மயன் என்ற வானியல் வல்லுநர்தான்.

நீட்டல் அளவை

பொறியியலுக்கு அடிப்படையான அளவை நீட்டல் அளவுகளாகும். 8 நெல் -ஒரு விரல், ஆறு விரல் -ஒரு சாண்,இரண்டு சாண் - ஒரு முழம், இரண்டுமுழம் -ஒருகோல்,நான்கு கோல் - ஒருதண்டம், ஐநூறு தண்டம் - ஒரு சுவப்பிடு தூரம்,நான்கு சுவப்பிடு தூரம் - ஒரு காதம் அதாவது நான்கு மைல் 220 அடி. நான்கு காதம் - ஒரு யோசனை. அதாவது சுமார் 16 மைல். அந்த நீட்டல் அளவைகள் நமது கோவில் சுவர்களில் பொறக்கப்பட்டு இன்றுவரை நமக்குத் துல்லியமாகக் கிடைக்கின்றது.

பின்ன வாய்ப்பாடு

தமிழர்களின் கணிதப் புலமைக்கு பெருஞ்சான்று அவர்களது பின்ன வாய்ப்பாடாகும். ஆங்கில மொழியில் குவார்ட்டர்(**Quarter**) அதாவது கால் என்ற பின்னத்தை விடச் சிறிய பின்னத்தைக் குறிக்கும் சொல் இல்லை. ஆனால் தமிழில் அதனைவிட மிகச்சிறிய எண்களைக் குறிக்கும் சொற்கள் உள்ளன. பின்ன வாய்ப்பாடு என்பது முழு எண்ணை பாதி பாதியாகப் பகிர்ந்து கொண்டே செல்லுதல். இது ஒன்று,அரை,கால்,அரைக்கால்,மாகாணி,முண்டாணி என விரிந்து கொண்டே போகும். முந்திரி என்ற சொல் ஒன்றின் கீழ் முன்னூற்றி இருபது ஆகும்.[1/320] முந்திரி என்னும் பின்ன அளவை தமிழனின் ஓர் அரிய கண்டுபிடிப்பாகும். தமிழனின் அறிவியல் திறனுக்குச் சிறந்ததோர் சான்றாக அமைந்துள்ளது.பண்டைய தமிழர்கள் முழு எண்ணை பத்தாகப் பகுக்காமல் இருபதாகப் பகுத்தனர்.பத்தினை கால் பகுதியாகப் பிரித்தால் ஒரு முழு எண்ணாக வராது. அதனால் இருபதினை எடுத்துக் கொண்டனர். ஒன்றின் கீழ் 20 என்பதை ஒரு மா என்று பெயரிட்டனர். ஒன்றின் கீழ் இருபது [1/20] ஒன்றின் கீழ் பதினாறு [1/16] இந்த இரண்டுவகை பின்னங்களிலும் அடங்காததவை எதுவுமில்லை. எனவே இவ்விரண்டு பின்னங்களையும் சேர்த்து உருவாக்கியதே முந்தரி என்ற பின்ன அளவையாகும். முந்திரி என்பது 1/120 பெருக்கல் 1/16. [1/120 X1/16] அதாவது ஒன்றின் கீழ் முன்னூற்றி இருபது [1/320]. மேலும் இந்த பின்னம் கீழ்முந்திரி[1/320 X 1/320] என்றும் கீழ் முந்திரி [1/320 X 1/320 X 1/320] என்று தொடங்கும். இந்த பின்ன அளவை வேறெங்கும் கிடையாது. முந்திரி என்ற பின்ன அளவை தமிழனுக்கு மட்டுமே

உரிமையானதாகும். தமிழில் மிகமிகச் சிறிய எண்களைக் குறிக்கும் சொல் கோண் என்பதாகும். இது அணுவின் 1 / 10 பகுதியாகும். அணுவைப் பத்தாகக் கூறிட்டு ஒரு கூறுக்குக் கோண் என்று பெயரிட்டார் கம்பர். இவ்வாறு மிகச்சிறிய எண்ணிற்கு பெயரிட்டு வழங்கிய பண்டையத் தமிழர்கள் மிகப்பெரிய எண்ணிற்கும் பெயரிடத் தவறவில்லை. ஆங்கில மொழியில் மிகப்பெரிய எண்களைக் குறிக்க பில்லியன் என்ற சொல்லைப் பயன்படுத்துவர். அது பத்துகோடிக்குச் சமம். இதனை விட மிகப்பெரிய எண்ணைக் குறிக்கும் சொல் தமிழல் உள்ளது. இதனைப் பதுமம் என்று கூறுகிறது தொல்காப்பியம்.

கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியே இன்றைய குமரி மாவட்டம் என்பதற்குச் சான்றுகள் பல கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று குமரிமாவட்ட மீனவர்களின் கணியம் பார்க்கும் வழக்கம். குமரி மாவட்ட மீனவர்கள் நடுக்கடல் சென்று தூண்டிலில் ஜரிகையை இணைத்துப் போட்டு விட்டுத் திரும்பி விடுவார்கள். [இந்த வழக்கத்தைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் - குறள் எண் 931] அடுத்த நாள் விண்மீன்களையும்,கரையிலுள்ள மலைச் சிகரங்களையும் குறிவைத்து நோக்கி தூண்டில் போட்ட இடங்களை எளிதில் கண்டுபிடிப்பதை கணியம்பார்த்தல் என்று அங்குள்ள மீனவர்கள் கூறுவார்கள். கணியம் பார்ப்பதில் குமரி மீனவர்கள் மிகவும் வல்லவர்கள் என அறியலாம். குமரிக் கண்டத்தில் தோன்றிய வானியல் கணிதம் தான் குமரி மாவட்டக் கடலோர மீனவர்களின் கணியத்திற்கு அடிப்படையாகும். இவ்வாறு கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் வாழ்ந்த நம் முதாதையர்கள் காலத்திற்கும்,வானியல் கணிதத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து அத்துறைகளில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர் என்று அறிய முடிகிறது. அதன் தாக்கம் தான் கடல்கொண்ட குமரி கண்டத்தின் எஞ்சிய பகுதியான இன்றைய குமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் கணியம் பார்த்தல் என்ற பெயரில் வானியல் துறையில் வல்லவர்களாகத் திகழ்கின்றனர்.

"ஐந்திறம் ஓர் அறிவியல் தமிழ் நூல் முதல் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறிய நூல்"

"This is a mayonic technical treatise on Astro physics and Astro dynamics"

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

"தமிழுக்கு அமுது என்று பேர்
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"


"தமிழ்க் கடவுளை முருகன் என்று அழைப்பது ஏன்?"

ஐந்திற சூத்திரங்கள்

[மேல் விளக்கத்தை உள்ளே காண்க]

ஐந்திற சூத்திரங்களின் விரிவையும், ஆழத்தையும் ஒரு பார்க்கோடா நிலையில் நின்று உற்றுப்பார்த்திடில் இந்த ஐந்திற நூல் ஓர் அபூர்வமான அறிவியல் நூலாகத் தோன்றுவது அல்லாமல், இந்த அறிவியல் சூத்திரங்கள் உலகம் முழுவதும் பரவிக்கிடந்த காலம் ஒன்று இருந்தது என்று வரலாற்று அறிஞர்க்கு புலனாகிடும். குறிப்பாக தவளைமாநெறி, [புனிதமாநெறி], மனிதமா நெறி என்ற "வாஸ்து புருஷமண்டல" கிடைப் படம் (Energy grid plan) உலகம் முழுவதும் பரவி இருந்தது என்ற குறிப்புகளை நான் சேகரித்து, என்னுடைய பிற ஏடுகளில் குறிப்பிட்டு இருக்கிறேன். ஒரு சிலவற்றை, அடிப்படையான படத்தோடும் கருத்தோடும் கீழே காட்டிட விரும்புகிறேன். உற்று நோக்குக.


ENERGY GRIDS
Vaastu Purusha Mandala




"அண்டமூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு வெளி ஒளியென"
- சிற்பமாச் செந்நூலில் மயன்

"விண்நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்"–திருவாசகம்

Mohenjo-daro
மயன் தரை





PLAN OF CITADEL **TYPICAL HOUSE**

Courtesy: History of Architecture by Banister Fletcher

தென்அமெரிக்காவில் கௌதமாலா என்ற நகரம், அங்கு வதிந்த மாயன் என்ற ஒரு அறிவியல் மேதை கண்டு சொன்ன இந்த Energy grid plan படி அந்த நகரமே உருவாகி இப்போதும் அந்த நகரம் உயிர்ப்புடன் இருந்து வருகிறது. – ஸ்தபதி

இக்கருத்து சரியானதா இல்லையா? என்ற ஒரு ஐயப்பாடு எவர்க்கும் தோன்றுவது இயல்புதான் என்றாலும், தமிழ் மரபு சார்ந்த இந்த Energy grid plan மொகஞ்சதாரோ' மற்றும் திருக்கோவில்களில் கையாளப்பட்டிருப்பதைக் கண்டு இந்த ஐந்திர அறிவியல் நுட்பம் ஒரு காலத்தில் உலகளாவிப் பரவி இருந்த செய்தி மெய்யாகிறது.

இக்கருத்துக்கு ஒப்ப 2006 ஆம் வருடம் மே மாதம் 1ஆம் நாள் வெளியான ஜீனியர் விகடனில் வெளியான கட்டுரை ஒன்று திராவிட நாகரிகத்தின் தொன்மை மற்றும் இந்திய நாட்டில் எல்லா இடங்களிலும் பரவியிருந்த திராவிட நாகரிகத்தின் தொன்மை மேலும் உறுதிசெய்கிறது.

மேலும், எதிர் வரும் இக் கட்டுரையில் ஒரு கற்கோடரியில் **முருகு** [முருகன்] என்ற சொல்லை குறிப்பிட்டிருப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். இச்சொல்லைப் பற்றிய ஒரு சில செய்திகளை ஆய்வர்களுக்கு தெரிவித்திடல் மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ் மரபாகிய இந்த வாஸ்து மரபானது அருவப் பொருளுக்கு உருவம் கொடுத்திட்ட ஒரு தொல்கலை மரபு. கண் காணாக் கடவுளை - அருவப் பொருளை - நம் கண் முன் நிறுத்திக் காட்டி வெற்றி கண்ட தெய்வீக மரபு. அருவமான அப்பொருளின் முதல் தோற்றத்தையும் கண்டு சொன்ன அறிவியல் மரபு. பல அவதாரங்களை எடுத்திட்ட அம்மெய்ப் பொருளானது தன்னை முதற்கண் எவ்வடிவத்தில் புலப்படுத்திக் கொண்டது? இஃதொரு கடினமான வினா. ஆனால் விடை தெரிந்து விட்டால் மெய் சிலிர்த்துப் போவீர்கள்.

நமக்குள்ளே இருக்கும் உள்ளமானது தத்துவ மரபில் ஆகாசமெனப் படுவதை (inner space) யாவரும் அறிவர். இதனைச் சிற்றாகாசம் என்றும் சிதாகாசம் என்றும், இதனையே ஐந்திர நூலானது அகவெளி என்றும் அகவின் என்றும் குறிப்பிடும். அப்படிப்பட்ட ஆகாஸமானது நமக்குள்ளே மட்டும் இருக்கும் ஒன்றல்ல. இது நம்மைச் சுற்றிலும், நம்மைச் சூழ்ந்துமுள்ள பொருள்களைச் சுற்றிலும், அவற்றினுள்ளும் நமக்கு மேலும், கீழும், எங்கும் நீக்கமற நிறைந்த பொருளாய் விளங்குகிறது. இந்த ஆகாசத்தையே பேராகாசம் (macro space) என்றும் பரமாகாசம் என்றும் சொல்லி வருகிறோம். ஐந்திர நூலானது நமக்குள்ளிருக்கும் ஆகாசத்தையும் நம்மை சூழ்ந்திருக்கும் ஆகாசத்தையும் ஒரே தன்மையின என்று கொள்கிறது.

"விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்" என்று திருவாசகமும், ஆகாச சரீரம் பிரம்ம என்று வேத நெறியும் ஒருமித்துப் பேசுவதைக் காண்க. அஃது அங்ஙனமெனில், ஆகாசம் பிரம்மத்தின் உடலாகிறதல்லவா? எனவே, அவ்வுடலில் பிரம்மமானது உயிர்ப்பொருளாகப் பரவி நிற்கிறது என்பதும் இங்கே பொருளாகிறது.

இவ்விதம் பிரம்மமானது ஆகாசத்தை சரீரமாக கொண்டுள்ளது என்று அறியும் போது, அந்த ஆகாசத்தில் என்ன இருக்கின்றது என்ற கேள்விக்கு ஐந்திர நூல் ஆகாசத்தில் எண்ணற்ற அணுக்கள் நீக்கமற நிறைந்து கிடக்கின்றன என்று கூறுகின்றது. அவ்வணுக்களுக்கு வாஸ்து மரபில் பரமாணு என்ற பொதுப் பெயர் ஒன்றுண்டு. இவ்வணுக்கள் எவருடைய கண்களுக்கும் புலப்படா. அத்தகைய அணுக்கள் ஒளிமயமானவை -

---

1மொகஞ்சதாரோ - என்ற சொல்லில் மயன் சதரா - மயன் தரா [தரை] - மயன் நிலம் என்று விளக்கம் தருவது பொருந்துமென்று மலையாள மனோரமா என்ற ஓர் இதழில் ஒரு ஆய்வாளர் எழுதியது நினைவுக்கு வருகிறது. ஆய்வர் தம் மேலாய்வுக்கு சமர்ப்பிக்கிறேன். - ஸ்தபதி.

ஒளியாலானவை - ஒளியை உமிழ்ந்து கொண்டிருப்பவை; அதாவது ஒளியையே (Lustre) உடலாகக் கொண்டவை. எனவே அஃது "ஒளியொளிர் ஒளி" என்று சொல்லப்படும். ஒளியை ஒளிரச் செய்யும் ஒளி என்று பொருள்படும். சுருக்கிச் சொல்லும் போது ஒளியணு என்று பெயர் பெறுகிறது. இங்ஙனம் அவ்வணுக்கள் ஒளியைவெளிபடுத்திக் கொண்டேயிருப்பதால், நம்மைச் சுற்றிலும் ஒளி சூழ்ந்திருப்பதாக - ஒளிமயமான விண்ணாக நமக்குத் தோன்றுகின்றது. இதனால் தொலைவிலுள்ள பொருட்களையெல்லாம் ஊடுருவி நம் கண்களால் பார்த்தறிய முடிகிறது.

இங்ஙனம் ஒளியை உமிழ்ந்துக் கொண்டிருப்பதற்கு அவ்வணுவில் ஒளியைக் காக்கும் பொருள் ஒன்று அடங்கியிருக்கிறது. இது **கரு** எனப்படும். இது **விண்கரு** என்றும் சொல்லப்படும். இக்கருவானது மூலத்தில் சூடாகவிருக்கிறது. இஃதொரு தீப்பொருள். எனவே, இவ் ஒளியணுவுக்குள் உறங்கிக் கிடக்கும் தீ, மூலக்கனல் என்று சொல்லப்படுகின்றது. இது மூலத்தில் ஒடுக்க முற்றுக் கிடக்கும் வெப்பமே. இதைத் தான் ஐந்திறம் **மூலக்கனல்** என்று குறிப்பிடுகின்றது. இந்த வெப்பமே 'வேது' 'வேதம்' என்ற சொல்லின் வேர் எனக் கொள்ளஇடமுளது!

இது வரை பிரம்மத்தின் சரீரமான ஆகாசத்தையும் அந்த ஆகாசத்தில் நீக்கமற நிறைந்துள்ள அணுக்களையும் அந்த அணுக்களில் உறையும் வெப்பத்தையும் குறிப்பிட்டோம்.

இந்த வாஸ்து மரபானது மூலமாகிய பி ்மம் தன்னை அருவமாகவும், அருவுருவமாகவும் உருவமாகவும் வெளிப்படுத்திக் கொள்கின்றது என்று குறிப்பிடும். சகளாதிகாரம் என்ற வாஸ்து சாஸ்திரத்தில் முதல் ஸ்லோகமே இது தான்[1]. இவ்விதம் அருவநிலையில் வெப்பமாக உள்ள அந்த தீப்பொருளின் அருவுருவ நிலையைத்தான் ஐந்திற நூல் நாற்புறம் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது. அதாவது சதுர வடிவம் தான் மூலப் பொருள் பெற்ற அருவுருவநிலை. பிறகு உருவ நிலையில் வெளிப்பட்டு சூலப் பொருளாக உருமாற்றம் கொள்கின்றது.

இங்கு அருவுருவ நிலையில் நான்கு பக்கங்கள் உள்ளதாக வெளிப்படும் மூலப்பொருள். [அதாவது நான்கு பக்கங்களும் ஒளி நிறைந்த முகங்கள்] உருவ நிலையில் கன சதுர வடிவமுள்ளதாக ஆறுமுகங்களைக் கொண்ட முழுமையான வடிவைப் பெருகின்றது. (Six fold dimensional form). இந்த ஆறு முகங்கள் கொண்ட இந்த வடிவை **"அறுசுடர்ப்பேரொளி"** என்று ஐந்திறம் கூறுகின்றது. அதாவது ஒவ்வொரு முகங்களையும் ஒவ்வொரு ஒளியாகக் குறிப்பிட்டு பூரணமான அந்த வடிவை **முருகொளி** என்று குறிப்பிடுகின்றது. இதன் பொருட்டே தமிழ்க் கடவுளாகிய முருகனுக்கு ஆறுமுகங்கள் வைத்து சிற்ப மரபில் வழிபடு படிமமாக ஆறுமுகக் கடவுளைத் தோற்றுவித்த நுட்பத்தை அறிக. இந்த கன சதுர வடிவமான அந்தப் பொருளை **"சிற்றவை"** (microbode) என்றும் ஐந்திறம் குறிப்பிடுகின்றது. இதோ அந்தப் பாடல்:

தண்டமிழ் இயலே தனிப்பெருங் கலைத்திறன்
வண்டமிழ் மொழியியல் வளங்கெழும்மொழியியல்
ஒண்டமிழ் மூலத் தொளிநிலை ஆற்றலாய்
எண்டமிழ் எண்ணிலை இயலுவ நோக்கி

---

1 सकल निष्कल मिश्र विभागतः त्रिविधमेव वपुः परमेष्ठिनः ।
विधिमिमं सकलस्य यथोदितं शशिधरेण तथा कथयाम्यहम् ॥

அண்டமும் பிண்டமும் ஆய்ந்தறி நுட்பம்
அண்டம் அளக்கும் அருந்தமிழ் மொழிக்கலை
கோளமும் கோளும் குறித்தறி நெறியால்
நாளும் காலமும் நவையற நோக்கிக்
காலம் உழைப்பாய்க் காலமே உணர்வாய்
கால மூலமும் மூல காலமும்
குறிப்புற் றாய்ந்து கூர்மதி யியலாய்
நெறிமுறைச் சிற்றவை நீள்நிலை யாய்ந்தே
பெருவெளி யுறுநெறி முருகுறும் பேரொளி
ஒருவெளி அகவின் னொளிதரும் முருகொளி
அறுசுடர்ப் பேரொளி அறுநிலத் தியல்நிலை
உறுநெறி முருகுறும் ஓமுறும் ஒளிக்கலை
ஓம்நெறி ஓம்உரு ஓம்ஒளி ஓம்ஒலி
ஓம்இயல் ஓம்கலை ஓம்மறை யியலாய்
தண்டமிழ் மூலம் தனித்தமிழ்க் காலம்
எண்டமிழ் அளவை விரைவியல் சுழல்நெறி
ஐயைந் தியலால் அமைவுறும் ஆற்றல்
மெய்யுணர் மேனிலை முருகுறும் பேரொளி
அகவொளி அகலொளி அமைவுறக் கண்டே
மிருமொளித் திறனால் மென்றமிழ் உணர்ந்தே
இன்றமிழ்க் கலைநெறி இயல்புற் றாய்ந்தே
தென்றமிழ்ச் சிற்றவை முருகுறும் இயலேஐந்திறம் - 798

முருகே மூலப் பேரொளி சீரொளி
முறுகுறும் பெருவெளி சிற்றவை ஆய்ந்தே
திருவுறும் எண்ணெண் ணியலுறும் சீர்நிலை
உருவுறும் பேரழ கொளிநிலை நோக்கி
மூலக் கனலால் மூட்டும் அனற்பொறி
காலங் காட்டுங் கனிநிலைக் கனலொளி
ஒளிநிலை ஆறும் ஓமுறும் ஒலியும்
வெளிநிலை அகவின் னொளியுற நோக்கின்
செழுந்தமிழ் மெய்ப்பொருள் சீர்நெறி திருநெறி
எழுந்தமிழ் கலைத்தமிழ் சிற்ப மாத்தமிழ்
சிற்றவைப் பெருவெளி திருநெறித் தீந்தமிழ்
பெற்றுறுங் கலைநிலை பைந்தமிழ் பூந்தமிழ்
உணர்வின் ஓங்கி ஒளியின் நோக்கி
உணர்நிலைக் கலையால் ஓசையு மாய்ந்தே
ஒளிஒலி யியற்றிறன் உள்ளத் தோர்ந்தே
வெளிஒளிக் கலையால் விண்ணெறி யாய்ந்தே
ஓம்மறை ஓம்நெறி உணர்வின் நோக்கி
ஓம்கலை யியல்தெரி செந்தமிழ் மெய்க்கலை
தென்கலை தென்மொழி தென்னிசைச் சிற்பம்
தென்றல் தென்புலம் தென்றமிழ் ஓவியம்
தென்னிலை சீர்நெறி திருநெறிக் கட்டிடம்
தென்னியல் கலையால் செறிதரும் செந்தமிழ்
தென்றிசை மொழியால் இயல்தரும் தமிழிசை

மன்றுறும் ஆடலான் மாநெறி நோக்கி
ஐந்தியல் ஐங்கலை ஐந்நெறி நோக்கி
வத்துறும் மூலத் தமிழியல் நெறியே ஐந்திறம் -799

மேலும் ஆகாசத்தைக் குறிப்பிடும் போது உள்ளும், புறமும் இருப்பது ஒத்த இயல்புடைய ஆகாசம் தான் என்ற கருத்தில் உள்ளமாகிய இந்த சிற்றாகாசத்தில் நாம் ஒன்றை உள்ளும் பொழுது - எண்ணும் பொழுது அவ்வெண்ணமே அல்லது உணர்வே, இந்தத் தீயைக் கிளப்பி விடுகின்றது. அதாவது இத்தீயின் முயக்கமே உணர்வாகி அதனால் கிளப்பப் படுவதே ஒளி. இவ்வொளியே ஆற்றலாக விரிந்து வெளிப்பட்டு ஞாலப் பொருள்களாக உருமாற்றம் கொள்கின்றது. **"உள்ளொளியன்றோ உணர்வியல் ஆற்றல்"** என்ற ஐந்திற சூத்திரத்தை இங்கே நினைவு கூறுதல் இன்றியமையாததாகும்.

இதே போன்றே பேராகாசமாகிய அந்த ஆகாசமும் தனது உள்ளத்தில் ஒன்றை உன்னி உன்னிய பொருளுக்கு நிகரான ஞாலப் பொருள்களாக உருமாற்றம் கொள்கின்றது. இக்கருத்தை உறுதி செய்யும் தைத்திரீயோபநிஷத சுலோகத்தைக் காண்க.

तस्माद्वा एतस्मादात्मन आकाश: सम्भूत: ॥
आकाशात् वायु: वायोरग्नि: अग्नेराप: अद्भ्य: पृथिवी ॥
पृथिव्या ओषधय: ओषधीभ्योऽन्नम् अन्नात्पुरूष: ॥
தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச ஸம்பூத: ॥
ஆகாசாத்வாயு: வாயோரக்னி: அக்னேராப: அத்ப்ய: ப்ருதிவீ ॥
ப்ருதிவ்யா ஓஷதய: ஓஷதீப்யோன்னம் அன்னாத்புருஷ: ॥

(தைத்திரீயோபநிஷதம் 2-1)

இவ்விதம் சிற்றாகாசமும், பேராகாசமும் ஒரு வழியில் நின்று ஞாலப் பொருள்காளாக உருமாறுகின்றது என்பதை ஐந்திற சூத்திரம் விளக்குவதைக் காண்க.

"உள்ளும் புறமும் ஒரு வழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்'
ஒளிமுதல் கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்தியலாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே"

- ஐந்திறம் 207

இவ்விதம் அறிவியல் சூத்திரங்களை தன்னகத்தே கொண்ட அறிவியல் நூல் தான் ஐந்திற நூல் என்பதும் பின் வரும் கட்டுரை செய்திகளைப் போல் இனி வரும் காலத்தில் வெளிப்படும் செய்திகளுக்குப் பிறகே ஐந்திற நூலின் பெருமை உலகிற்குத் தெரியவரும்.

இந்நாகரிகத்திற்கான அடிப்படைக் கருத்தை ஆய்ந்து சொன்னவன் மயன் என்ற அறிவியல் மேதை என்ற செய்தி முன்சொன்ன கட்டுரைகளில் இருந்து தெளிவாகும். இந்த ஜீனியர் விகடன் கட்டுரை தமிழர் நாகரிகம் உலகளாவி இருந்ததை உறுதிப்படுத்துகிறது. விகடனுக்கு உளமார்ந்த நன்றி கூறி இக்கட்டுரையை அப்படியே கீழே தருகிறேன்.

---

1 செம்மொழிக்கு அழகிய மற்றும் அறிவியல் விளக்கம் இதுவன்றோ! செந்தமிழுக்கும் இது பொருந்துமன்றோ! - ஸ்தபதி.

தமிழுக்கு தலைமை!

செம்பியத்தில் கிடைத்த 'சிந்து' சான்று....

2006 ம் வருடம் மே மாதம் 1ம் தேதி திங்கட்கிழமையன்று அனைத்துத் தமிழர்களுக்கும் கேட்காமலே ஒரு பொக்கிஷம் கிடைத்திருக்கிறது.... அதுவும் சாதாரண பொக்கிஷமல்ல, நமது சரித்திரப் புத்தகங்களை எல்லாம் மாற்றிப் புதிதாக எழுத வேண்டிய சூழ்நிலையை உருவாக்கவல்ல பொக்கிஷம் அது!

இந்தியாவின் தொன்மையான நாகரிக சமுதாயம் எனப்படும் சிந்து சமவெளியின் மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவில் வாழ்ந்த பூர்வீக குடிகள் ஆரியர்களா, திராவிடர்களா என்ற சர்ச்சை இன்னும் முடிவு பெறாமல் நீண்டுகொண்டு இருக்கிறது. அதற்கு ஒரு முடிவுகட்டப் போகும் பொக்கிஷம்தான் இப்போது கிடைத்திருக்கிறது.

காவிரி கரைபுரண்டோடும் மயிலாடுதுறை நகருக்கு அருகிலுள்ள செம்பியம் கண்டியூரில் உள்ள தனது வீட்டுக் கொல்லையில், வாழைக் கன்று ஒன்றை நடுவதற்காக நிலத்தைத் தோண்டிய ஆசிரியர் சண்முகநாதனுக்குக் கறுப்பாக, பளபளப்பாக ஒரு கல் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு ஒருவித எதிர்பார்ப்புடன் தன்னுடைய நண்பர் முத்துசாமியைத் தேடி ஓடினார் அவர்.

ஆசிரியர் சண்முகநாதன், நாகை மாவட்டம் குத்தாலம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி வருகிறார். நண்பர் முத்துசாமி தமிழக தொல்பொருள் துறையில் பணியாற்றி வருபவர். அதனால் சண்முகநாதனுக்கும் தொல்பொருள் விஷயங்களில் ஈடுபாடு உண்டு.தனதுவீட்டுத் தோட்டத்தில் கிடைத்த அந்தக் கல், கண்டிப்பாக சரித்திர முக்கியத்துவம் மிக்கதாகத் தான் இருக்கும் என்ற நம்பிக்கையில் தான் தனது நண்பரைத் தேடி ஓடினார் சண்முகநாதன்.

படம் நன்றி 'தி இந்து'



தரங்கம்பாடி கோட்டை அருங்காட்சியக காப்பாளராக இருக்கும் முத்துசாமியும் அதைப் பார்த்து வியந்து போய், உடனே அந்தக் கல்லைத் தனது உயரதிகாரியும் ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான ஸ்ரீதரனிடம் ஒப்படைக்க, அதன் பிறகு அந்தக் கல்லின் மகத்துவம் வெளியுலகுக்குத் தெரிய வருந்திருக்கிறது.

ஆசிரியர் சண்முகநாதனுக்குக் கிடைத்த அந்தக் கல், புதிய கற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பயன்படுத்திய கற்கோடாரி! சுமார் 4000 வருடங்களுக்கு முந்தைய அந்தக் கற்கோடாரியில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள், சிந்து சமவெளி நாகரிக காலத்தில் உள்ள எழுத்துக்களை ஒத்து இருந்திருக்கிறது. இதன் மூலம் இந்தியாவின் புகழ்பெற்ற நாகரிகமான சிந்து சமவெளி நாகரிகத்தை ஏற்படுத்தியவர்கள். வெளியிலிருந்து வந்த ஆரியர்கள் அல்ல, அது இங்கேயே தோன்றிய திராவிட நாகரிகமே என்பது நிரூபணமாக ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் தான் இது இந்த நூற்றாண்டில் கிடைத்த ஒரு பொக்கிஷம் என்கிறார்கள் வரலாற்று ஆய்வாளர்கள்.



சித்திர எழுத்துக்கள்!

ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட சிந்து சமவெளி சித்திர எழுத்துக்களை இதுவரை யாவரும் முழுமையாக படித்தறிந்ததில்லை என்ற கருத்து பரவலாக இருக்கிறது. ஆனால், அந்த எழுத்துக்களை படிக்க முடியும் என்று 1938-ல் ஹீராஸ் பாதிரியார் நிரூபித்திருக்கிறார். அதில் உள்ள வேல் போன்ற எழுத்தை வைத்து 'அது வேலர்களை குறிக்கும் சொல். அதாவது வேல் வைத்திருப்பவர்களை குறிக்கும் சொல். இது தமிழ் எழுத்து தான்' என்று அவர் கூறியுள்ளார்.

அவருக்கும் முன்பாக இந்த சித்திர எழுத்துக்களை ரஷ்யா, சீனா என்று பல்வேறு மொழி எழுத்துக்களோடு ஒப்பிட்டு பலரும் படித்துள்ளனர். அதை எல்லாம் மெய்ப்பிக்க போதுமான ஆதாரங்கள் கிடைத்ததில்லை. ஆனால், முதன் முறையாக தமிழகத்தில் இந்த எழுத்துக்கள் கிடைத்திருப்பதால் ஹீராஸ் பாதிரியாரின் கருத்துக்கு முக்கியத்துவம் கிடைத்திருக்கிறது.

இந்த சித்திர எழுத்துக்களை படிக்கமுடியும் என்று தற்போதைய கால கட்டத்தில் நிரூபித்திருப்பவர்களில் ஐராவதம் மகாதேவனும் ஒருவர். நீண்ட காலமாக இந்த எழுத்துக்களை படிக்கும் முயற்சியில் இறங்கிய அவர், அதில் முன்னேறிக் கொண்டிருக்கும்போதே பலருக்கும் இது குறித்து பயிற்சிகளை அளித்தார். அப்போது, 'இது ஒரு நீண்ட கால முயற்சி. என் காலத்தில் நிறைவேறாவிட்டாலும் எதிர்காலத்தில் இந்த முயற்சி நிறைவேறும். நிச்சயம் சித்திர எழுத்துக்களில் பொதிந்திருக்கும் விஷயங்கள் உலகுக்கு தெரியவரும்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால், ஒரு கட்டத்தில் அவரே அந்தச் சித்திர எழுத்துக்களை படிக்க ஆரம்பித்து விட்டது தான் சுவாரஸ்யம்.

இந்தக் கல் கோடரியை ஆராய்ந்தவர்களில் ஒருவர், தொல்லியல் ஆய்வாளரான சென்னையைச் சேர்ந்த ஐராவதம் மகாதேவன். அவரைச் சந்தித்து இதுகுறித்து கேட்டோம். [இவர் தினமணி நாளிதழின் ஆசிரியராக இருந்தவர்].

"இதில் என் பங்கைவிட இது யாரிடமிருந்து கிடைத்ததோ அவருக்குதான் இந்தப் பெருமை எல்லாம் போய் சேரவேண்டும். நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திராவிட மக்கள் வேட்டையாடுவதற்குப் பயன்படுத்திய ஆயுதம் தான் இது. கைப்பிடியும் கூரான முனையும் உள்ளதாக இது இருக்கிறது. பழைய கற்கால கருவிகள் கரடுமுரடாக இருக்கும். ஆனால், இந்தக் கோடரி மெருகூட்டப்பட்டு பாலீஷ் செய்யப்பட்டு, கிரானைட் கல் போல இருக்கிறது! கிரானைட் கல் தென்னிந்தியாவில் தான் கிடைக்கும். அதுவும் கிருஷ்ணகிரி, தர்மபுரி, கொல்லி மலை போன்ற பகுதிகளில்தான் அதிகம் கிடைக்கிறது.

இதற்கு முன் தைமாபாத் என்கிற கோதாவரிக் கரையில் கிடைத்த சிந்து சமவெளி சித்திர எழுத்துக்களின் ஆவணத்துக்குப் பிறகு, அதே சிந்துவெளி சித்திர எழுத்துக்கள் உள்ள கோடரி தமிழகத்தில் தான் கிடைத்திருக்கிறது. இந்தக் கோடரியில் நான்கு எழுத்துக்கள் இடமிருந்து வலமாக உள்ளது. இதில் 'முருகு' என்ற சொல்லுக்கு முதுகு வளைந்து முழங்காலைத் தூக்கி அமர்ந்திருக்கும் ஒரு படமும் 'அன்' என்ற சொல்லுக்கு கைப்பிடி உள்ள ஜாடியின் படமும் இதில் உள்ளது. இந்த நூற்றாண்டில் கிடைத்திருக்கும் மிகமிக முக்கியமான திராவிட மொழிக்கான ஆவணம் இது. புதிய கற்கால தமிழர்களும் சிந்து சமவெளியில் வாழ்ந்தவர்களும் பேசிய மொழி ஒன்றுதான் என்பதை இந்தக் கோடரி மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தப் போகும் ஆதாரம் இது" என்று குஷிபொங்கச் சொன்னவர், மேலும் தொடர்ந்தார்...

"நான் இந்தக் கோடரி குறித்த விஷயங்களையும் அதில் உள்ள எழுத்துக்களையும் பின்லாந்தில் இருக்கிற உலகின் மிக முக்கியமான தொல்லியல் ஆய்வாளரான அஸ்கோபார் போலா என்பவருக்கு அனுப்பியிருக்கிறேன். உலக அளவில் சிந்துவெளி பற்றிய இவருடைய ஆய்வுகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் வெளியிட்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இப்போது கிடைத்திருக்கும் இந்த அரிய ஆவணத்தை வைத்து சர்வதேச அளவில் பலவிதமான ஆய்வுகளை மேற்கொள்வார்கள்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது ஆய்வாளர்கள், தனிநபர்கள் இதில் காட்டுகிற ஆர்வத்தைவிட, தமிழக அரசு இதில் தனியான அக்கறை காட்ட வேண்டும் என்பது தான். இப்போது கிடைத்திருக்கும் ஆதாரத்தைக் கொண்டு புதிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். உலக அளவில் ஒரு மாநாடு நடத்தி அதில் அறிஞர்களை அழைத்து விவாதித்து, தமிழின் வரலாற்றுப் பொக்கிஷங்களைத் தேடியெடுக்க வேண்டும். அதற்கு இதுதான் தருணம்" என்றார் மகாதேவன்.

கண்டியூரில் கண்டெடுக்கப்பட்டுள்ள கோடரி ஆதாரம் குறித்து உ.பி-யில் உள்ள அலிகார் மூஸ்லீம் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற உலகப் புகழ்பெற்ற பேராசிரியரான டாக்டர் இர்பான் ஹபீப்பிடம் பேசினோம்...

"சிந்து சமவெளி நாகரிகம் திராவிடர்களுடையது என முதன்முதலில் வரலாற்று ஆய்வாளரான ஹீராஸ் பாதிரியார் தான் கூறினார் [முன்னாள் தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியனின் ஆசிரியர் இவர்]. ஆனால், அவரால் அதை முழுமையாக நிரூபணம் செய்ய முடியவில்லை. எனினும் இது திராவிட நாகரிகத்துடன் அதிகம் பொருந்துவதாகப் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏனெனில், ஆரியர்களின் ரிக் வேதத்தில் திராவிடர்களை 'தசா' அல்லது 'தஸ்யூக்கள்' எனக் குறிப்பிட்டு, இவர்கள். தங்கள் முன்னோடிகள் எனும் அர்த்தத்தில் கூறியுள்ளனர். இதன் மூலம் சிந்து சமவெளி நாகரிகம், திராவிடர்களுடையதாக இருக்கலாமே தவிர, ஆரியர்களுடையதாக இருக்க வாய்ப்பே இல்லை. தொடர்ந்து இது போன்ற அகழ்வாராய்ச்சி ஆய்வுகள் தமிழகத்தில் செய்வதன் மூலம் இதைக் கண்டிப்பாக நிரூபிக்கலாம்" என்றார்.

இதே அலிகார் பல்கலைக்கழகத்தில் தென்னிந்திய வரலாற்றைப் போதிக்கும் டாக்டர் எஸ்.சாந்தினி நம்மிடம் கூறுகையில், "இந்தியாவின் பூர்வீக குடிகள் திராவிடர்களே என்ற கருத்தை ஆராய்ந்து தமிழகத்தில் தேவநேயப் பாவாணர், பி.டி.ஸ்ரீநிவாச ஐயங்கார் மற்றும் கனகசபை பிள்ளை உள் பட பல தமிழக அறிஞர்களும் கூறியுள்ளனர். ஆனால், இவை அந்தக் காலங்களில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் படாமல் தமிழிலேயே தங்கி விட்டதால், இதற்கு உலக அளவில் ஒரு அங்கீகாரம் கிடைக்காமல் போனது. அதே போல், சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் குருமூர்த்தி, 'தென்னிந்தியாவில் கிடைத்த பழங்கால பானை ஓடுகளில் இருந்த கிறுக்கல்கள் சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்களோடு இணைந்து போகிறது. மேலும் இவை வெறும் கிறுக்கல்கள் அல்ல. அது ஒரு மொழி' என கண்டுபிடித்தார்.

இதற்கேற்றாற்போல 'புலியை முறத்தால் துரத்திய பெண்' எனும் சங்கத் தமிழ் கூற்றுக்கு உதராணமாக ஒரு காட்சி சிந்து சமவெளி சிற்பங்களில் பொறிக்கப் பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கண்டியூரில் கண்டுபிடிக்கப்பட்ட ஆய்வையும் நம் முன்னோர்கள் தமிழில் எழுதிய ஆதாரங்களையும் ஆங்கிலத்தில் தொகுத்து அரசு வெளியிடுவதன் மூலம், உலக வரலாற்று அரங்கில் திராவிடர்கள் தான் நம் நாட்டில் முதல் நாகரிக பூர்வ குடிகள் எனப் பதிவு செய்யலாம்" என்றார்.

தமிழ் 'செம்மொழி' என்கிற அந்தஸ்தைப் பெற்றிருக்கும் இந்தக் காலகட்டத்தில், இந்தியாவுக்கே நாகரிகம் கற்றுக் கொடுத்தது திராவிட இனம்தான் என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்க ஓர் அரிய பொக்கிஷம் கையில் கிடைத்திருக்கிறது.

– ஆர்.ஷஃபிமுன்னா,
டி.அருள்எழிலன், கரு.முத்து

ஐந்திறம் தழுவிய


பிறிதொரு அதிசய அறிவியல் செய்தி

வாஸ்து விஞ்ஞானப் படி நம்மை சூழ்ந்துள்ள பஹிராகாசமாகிய ஒளியை (Luminous space)ல் கனசதுர விண் அணுக்கள் அடர்ந்து கிடக்கின்றன என்று பலமுறை பலகட்டுரைகளில் சொல்லி வந்தோம்.

அத்தகைய விண் அணுவானது ஆறு பக்கங்களைக் கொண்டது எனவும், அந்த ஆறு பக்கங்கள் ஒவ்வொன்றிலும் பிரம்ம பிந்து எனப்படும் 9 புள்ளிகளும் இருக்கின்றன என்பதைக் காட்டினோம். அத்தகைய 9 அணுவுக்குள் இருக்கும் அணுசக்தி உள்ளே துடிப்புற்று நாம் நினைத்ததை உருவங்களாகக் காட்டும் என்று ஓர் அபூர்வச் செய்தியையும் வெளிப்படுத்தினோம். அத்தகைய கனசதுர அணுவுக்குச் சிற்றவை என்றும் Microbode என்றும் பல இடங்களில் சொல்லி வந்தோம்.

தினத்தந்தி இலவச இணைப்பு | 24-1-2004

வித்தியாசமான சேமிப்பு



ஓட்டை விழுந்த பாத்திரத்தில் தண்ணீர் சேமித்து வைக்க முடியுமா? என்று கேட்டால்,

நூலோ... என்ன கிண்டல் பண்றீங்களா? என்று முறைப்பீர்கள்.

ஆனால் ஓட்டைகள் நிறைந்த ஒரு சதுர வடிவத்தில் மின் காந்த அலைகளை சேமித்து வைக்க முடியும் என்கிறார்கள் ஜப்பான் நாட்டின் ஓசாகா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.


மின் காந்த அலைகளை சேமித்து வைக்கும் திறன் கொண்ட சதுர வடிவம் (கியூப்) 27 மில்லி மீட்டர் அளவு கொண்டது (பார்க்க - படம்) இபாக்ஸிலின் ரெசின் (Epoxyline Resin) மற்றும் டைட்டானியம் ஆக்சைடு மூலம் இது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சதுர வடிவத்துக்குள் செலுத்தப் படும் மின் காந்த அலைகளை ஒரு வினாடியில் 10-ல் ஒரு பங்கு நேரம் சேமித்து வைக்க முடியும். இந்த சதுர வடிவத்துக்கு "மெஞ்ஜர் ஸ்பாஞ்ச்" (Menger Spopge) என்று பெயரிட்டுள்ளனர். மின் காந்த அலைகளை சேமித்து வைக்கும் சதுர வடிவம் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இதன் மூலம் பல புதிய மின்னியல் கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இதை ஒட்டிய அதிசயச் செய்தியை 24.01.2004 தேதியிட்ட தினத்தந்தி நாளிதழ் 'மெஞ்சர் ஸ்பாஞ்ச்' என்ற ஒரு அபூர்வ கன சதுர பெட்டியில் நிகழ்ந்த ஒரு விஞ்ஞான அதிசயத்தை வெளியிட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்பது துவாரங்களை தக்க இடங்களில் செய்து அந்த பெட்டிக்குள் மின்காந்த அலைகளைப் புகுத்தும் பொழுது அந்த பெட்டிக்குள் மின்காந்த சக்தி உள்ளே கொஞ்ச நேரம் தங்கியிருந்து வெளியேறுகிறது என்ற செய்தியை அந்த தினத்தந்தி செய்தி தெரிவிக்கிறது. இந்த Micro bode போன்ற பெட்டியை கண்டுபிடித்தவர்கள் ஜப்பான் நாட்டு ஓசாகா பல்கலைக் கழகம் எனத் தெரிகிறது. எனவே, இந்த கனசதுர அணுவை உயிர்ப்பொருள் என்று கொள்ளும் பொழுது, அதற்குள் அடங்கி கிடக்கும். ஆன்ம சக்தி அல்லது பரம்பொருள் அல்லது உயிர் தங்கியிருப்பதாக நாம் உறுதி செய்யலாம்.

ஏன் மனித உடம்பாகிய நமக்கும் நவத் துவாரங்கள் இருப்பதாக நமது மரபும் பேசும் அல்லவா? நமக்குள் அடைப்பட்டு கிடக்கும் ஆன்ம சக்தி நமது உடம்பை

விட்டு வெளி வராமல் சிறிது காலம் தங்கியிருந்து பிறகு ஏதாவது ஒரு துவாரத்தின் வழியாகத் தானே வெளியே சென்று விடுகிறது என்ற கருத்தை இந்த விஞ்ஞான நிகழ்வு தெரிவிக்கிறது அல்லது ருசுப்படுத்துகிறது எனலாம்.

இச்செய்தி தொடர்பான சூத்திரங்களை ஐந்திற நூலிலும், ஐந்திற சூத்திரங்களின் பிரதிபலிப்பாக விளங்கிடும் திருஅருட்பாவிலும் காணமுடிகின்றது. அச்சூத்திரங்களையும், பட விளக்கங்களையும் கீழே காண்க.




கால நுணுக்கம் கட்டிடக் கலைத்திறன்
கால விரைவியல் கடிதின் ஓர்ந்தே
காலங் கூட்டலும் காலஞ் சேர்த்தலும்
மூலம் நோக்கலும் முன்னி யுணர்ந்தே
உடற்கட் டுணர்ந்தே உறுதிறன் நோக்கி
அடற்கட் டுணர்ந்தே ஆற்றல் பெருக்கி
கட்டுறும் இயல்நிலை கட்டிடத் தியல்நெறி
எட்டுறும் திறத்தால் உடலடல் கட்டிடம்
ஒன்பது வாயில் எண்ணிலை யளவாய்
நன்றுறும் நிலைநெறி மெய்நெறி யோர்ந்தே
கட்டிடக் கலையே கணக்கியல் ஆற்றலாய்
எட்டியல் நெறியால் இயல்பின் ஆய்ந்தே
விட்டிடம் வெற்றிடம் கலைமிடம் சீரிடம்
தெட்டிடம் உணவிடம் சீர்நிலை யறிந்தே
முன்றில வாயில் முகப்பே நோக்கி
தென்திசை வாயில் தென்னிலைக் கலைதெரி
தென்றற் காற்றுறும் தெரிநிலை வாயில்
நன்றுறும் முறைதெரி குடபுலத் தியல்நெறி
ஒன்றுறும் கீழ்பால் உயர்நிலை நோக்கி
நன்றியல் வடபால் நெறிமுறை யோர்ந்து
எண்திசை யியல்நிலை எண்கணக் கியலாய்
விண்டுறும் கூடம் மாடம் நோக்கி
உள்ளுறும் வெள்ளி வியாழ மாடமும்
தெள்ளுறும் கலைநிலை வேழமா மாடம்
எள்ளுறும் எண்ணிலை எண்ணியல் ஆற்றல்
விள்ளுறும் வேயா மாடத் தெண்ணிலை
தாமரை மாடம் தனிநிலை மாடம்

பூமலர்க் கூடம் பதினா றிதழ்நிலை
மாமணி மாடம் தூமணித் திரள்நிலை
மாக்கலைக் கூடம் எழுநிலை மாடம்
எட்டுறும் திறநெறி ஒன்பதின் ஓங்கி
நெட்டுறும் நிலைதெரி நெட்டியல் நீளம்
தெட்டுறும் வளைநிலை சீர்சால் கலைநிலை
ஒட்டியும் ஒட்டா ஒன்றுறும் திறமுறும்
எட்டுறும் புறமதிற் சுவர்நிலை யியற்றிறன்
விட்டுறும் சுடுமண் சுவர்திறன் நெறிநிலை
எண்ணிதின் ஓர்ந்து இயலாற் றாய்ந்தே
நுண்ணிதின் நோக்கி நுவலுறும் திறத்தால்
உடற்கட் டாய்ந்து அடற்கட் டாய்ந்து
இடக்கட் டிடநிலை எண்ணியல் கலையால்
கட்டிடக் கலைநிலை எட்டியல் ஐந்தியல்
கட்டிட கலைநிலை மாநெறி ஆற்றலே – ஐந்திறம் 749

இச்செய்தி தொடர்பாக வாஸ்து சாஸ்திரங்கள் என்ன கூறுகின்றது என்று பார்த்திடில், தவளை மாநெறி, மனித மாநெறி என்ற இரண்டு விதமான பதங்களை மிக இன்றியமையாததாக வாஸ்து நூல்கள் பேசுகின்றன. அதாவது "பதவிந்யாசம்" என்ற தலைப்பில் 1 முதல் 32 வரை பதங்களை முறையே ஒவ்வொரு பெயருடன் கூறி இவற்றுள் மண்டூகம் [தவளை மாநெறி], சண்டிதம் அல்லது பரமசாயிகம் [மனிதமாநெறி] என்ற இரண்டு பதங்களை மிக இன்றியமையாததாக குறிப்பிட்டு, மண்டூக பதமானது உலகியல் வாழ்விற்கும் மேலான வாழ்வை அடைய விரும்புகின்ற ஞானிகளுக்கு உரியது என்றும் பரமசாயிகபதமானது உலகத்தில் உள்ள எல்லா உயிரினங்களுக்கும் ஏற்றது என்று குறிப்பிடுகின்றது.

ENERGY GRIDS
Vaastu Purusha Mandala



"அண்ட மூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு வெளி ஒளியென"
– சிற்பமாச் செந்நூலில் மயன்

"விண்நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்" – திருவாசகம்

மானசார வாஸ்து நூலில் காணப்படும் அச்செய்தியை கீழே காண்க.

पदानामपि सर्वेषां मण्डूकं चापि तत्परम् ।
चण्डितं सर्व वस्तुनामाहत्यं च यतस्ततः ।।

Of the thirty two types of spaces ranging from 1x1, 2x2, 3x3 .... 8x8, 9x9 .... 31x31, and 32x32, the types of 8x8 called mandooka pada and 9x9 called Chandita pada (also called Paramasayika pada) are said to be good for all creative forms.

இக்கூற்றின் படியே மனிதன் இன்புற்று வாழ்வதற்குரிய வீட்டின் தரைப்படத்தை பரமசாயிகபதத்தின் படி அமைத்து அந்த கட்டடத்தை உயிர்ப்புள்ள பொருளாக ஆக்குவிக்கிறது இந்த வாஸ்து சாஸ்திரங்கள் என்று குறிப்பிடல் இன்றியமையாததாகும்.

மேலும் நான்கு சுவற்றுக்குள் அடைபடும் ஆகாசமே உயிர்ப்புள்ள இடமாகின்றது என்பது வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படைக் கருத்தாகும். கட்டுடல் – கட்டிடம் என்க. இதே போல் மனித உடலாகிய கட்டிடத்தில் கட்டுண்ட ஆகாசமே “ஆன்மா” வாக உயிர்ப்புள்ள மனித வடிவாக திகழ்கின்றது. மனித உடலிலும் ஒன்பது துவாரங்கள் இருப்பதை அறிக. மேலும் நாராயண ஸீக்தம் என்ற உபநிஷதமானது இக்கருத்தை உறுதி செய்து அந்தர் ஹிருதயத்தில் ஆகாசம் உள்ளதென்றும் அதில் உள்ள புருஷனாகிய ஆற்றல் பொன்நிறமுடையது என்று குறிப்பிடுவதைக் காண்க.

स य एषोऽन्तर्हृदय आकाशः । तस्मिन्नयं पुरुषो मनोमयः ।

अमृतो हिरण्मयः ॥ ६.१ ॥

மூலமாகிய அப்பரம்பொருள் தன்னை அருவ நிலையில் சூடாகவும் [கனல்], அருஉருநிலையில் சதுர வடிவினதான பொருளாக வெளிப்படுகின்றது அல்லது தன்னையே மாற்றிக் கொள்கின்றது என்ற செய்தியை மேற்கண்ட கட்டுரைகளில் வழியாக நன்கு அறிவீர்கள். அருவுருவ நிலையில் வெளிப்படும் அப்பொருளை சதுர வடிவம் தாங்கியது என்றும் இதனை ஐந்திறம் “நாற்புறத்தில்” என்றும் கூறுகின்றது. வாஸ்து சாஸ்திரமானது இச்செய்தியை वास्तु पुरुषः चतुरश्र संस्थः என்பதாக வாஸ்து புருஷன் சதுரத்தினுள் கட்டுண்டு கிடக்கிறான் என்று குறிப்பிடுகின்றது. அதாவது சதுர வடிவமான அப்பொருளினுள் கட்டுண்டு கிடக்கும், உயிர்ப்புத் தன்மையை – ஆற்றலை – புருஷன் என்று குறிப்பிடுகின்றது. நாராயண ஸீக்தமும் புருஷன் என்ற சொல்லையே குறிப்பிடுவதை காண்க. இன்னும் சொல்லப் போனால் ஆன்மாவின் வடிவமே சதுரம் என்பதும், அதன் நிறமோ பொன்னிறம் என்பதையும் நன்கு அறியலாம்.

இச்செய்தியை மேலும் உறுதிப்படுத்த மரீசி சம்ஹிதையில் கூறப்படும் சுலோகத்தையும், அதற்கு நிகரான ஐந்திற சூத்திரத்தையும் கீழே காண்க.

“प्राणायामेन विकसित हृद्कमलान्तराकाशे ।


वैश्वानर शिखामध्ये चतुरश्रं हेमाभं बिन्दुनासह ॥”

– மரீசி சம்ஹிதை

"விரிந்து விளங்கும் விண்ணிலைச் சிற்றவை
புரிந்து நோக்கின் எண்ணிலைச் சிற்றவை
உணர்வினாய்ந்து ஒளியாற் கண்டே
உணர்கலைச் செழுந்தமிழ் சிற்பமெண் கலையே"

– ஐந்திறம் 658

ஜப்பான் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்ட இந்த சதுர வடிவமான பெட்டியில் ஆறு பக்கங்களிலும் ஓட்டைகள் இருந்தும் அதனுள் செலுத்தப்படும் மின் காந்த அலைகளை அப்பெட்டி சிறிது நேரம் தக்க வைக்கின்றது என்பதே முக்கிய கருத்து. இதே போன்றே வாஸ்து சாஸ்திர பரமசாயிக பதவிண்யாசப்படி அமைக்கப்பட்ட வீடும் உயிர்ப்புத் தன்மையை தக்க வைக்கும் என்ற செய்தியைவாஸ்து சாஸ்திரங்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறி அதன் படி கட்டப்பட்ட வீடுகளையும், வீடுகளில் முற்றம் [வெளி] போன்ற அமைப்புகளையும் மொகஞ்சாதாரே போன்ற இடங்களில் கட்டப்பட்ட வீடுகளின் அமைப்பிலிருந்தும் அறியலாம்.



மூலமாகிய பிரம்மம் தன்னை எவ்விதம் உருமாற்றிக் கொள்கின்றது என்ற உண்மையை அறிந்து அந்த பிரம்மமானது எந்த வித கணக்கின் வழியே தன்னை உருமாற்றி ஞாலப் பொருட்களில் உறைந்து கிடக்கின்றது என்பதை அறிந்து அந்த கணக்கியல் நுட்பங்களை கட்டடங்களிலும், சிற்பங்களிலும் புகுத்தி உலகத்துயிர்கள் இன்புற்று வாழ கணக்கியல் நுட்பங்களை கூறிய அறிவின் முதல்வனாகிய மயனின் பெருமையை நாம் அறிந்திடல் வேண்டும்.

இச்செய்தியையும் அறிவியல் ஆய்வர்கள் மேலும் உற்று நோக்குவார்களாக. இச்செய்தி வாஸ்து விஞ்ஞானச் செய்திகளை பலப்படுத்துகிறது என்பதையும் அறிக.
– ஸ்தபதி.

பிரளய காலத்திற்கு பிறகு வெளிவந்த வாஸ்து சாஸ்திரம் என்ற அறிவியில் நூல்கள்

வாஸ்து சாஸ்திரங்கள் பின்வருமாறு. நடப்பில் உள்ளதை நட்சத்திரக் குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

*1.	विश्वकर्मीयम्	விஸ்வகர்மீயம்
2.	विश्वम्	விஸ்வம்
3.	विश्वसारम्	விஸ்வசாரம்
4.	प्रबोधम्	ப்ரபோதம்
5.	वृत्तम्	வ்ருத்தம்
*6.	मयमतम्	மயமதம்
7.	त्वष्टातन्त्रम्	த்வஷ்டாதந்த்ரம்
*8.	मनुसारम्	மனுசாரம்
9.	नलम्	நளம்
10.	मानविधि	மானவிதி
11.	मानकल्पम्	மானகல்பம்
*12.	मानसारम्	மானசாரம்
13.	बहुश्रुतम्	பஹுச்ருதம்
14.	शृष्टम्	ச்ருஷ்டம்
15.	मानबोधम्	மானபோதம்
16.	विश्वबोधम्	விஸ்வபோதம்
17.	आदिसारम्	ஆதிசாரம்
18.	विशालाक्षम्	விசாலாக்ஷம்
*19.	विश्वकाश्यपम्	விஸ்வகாஸ்யபம்
20.	वस्तुबोधम्	வஸ்துபோதம்
21.	महातन्त्रम्	மஹாதந்த்ரம்
22.	वास्तुविद्यापति	வாஸ்து வித்யாபதி
23.	पारासरीयकम्	பாராசரீயகம்
24.	कालयूपम्	காலயூபம்
25.	चैत्यम्	சைத்யம்
26.	चित्रम्	சித்ரம்
27.	आवर्यम्	ஆவர்யம்
28.	साधकसार संहिता	சாதகசார சம்ஹிதா

29.	भानुमतम्	பானுமதம்
*30.	ऐन्द्रमतम्	ஐந்திரமதம்
31.	लोकघ्नम्.	லோகக்னம்
32.	सौरम्	சௌரம்

பட்டியலில் இல்லாத மேலும் சில நூல்கள்:

*1.	वास्तुविद्या	வாஸ்து வித்யா
*2.	मनुष्यालय चन्द्रिका	மனுஷ்யாலய சந்திரிகா
*3.	सारस्वत चित्रकर्म शास्त्रम्	சாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம்
*4.	ब्राह्मीय चित्रकर्म शास्त्रम्	ப்ராஹ்மீய சித்ரகர்ம சாஸ்திரம்
*5.	सकलाधिकारम्	சகளாதிகாரம்
*6.	शिल्परत्नम्	சில்பரத்னம்
*7.	सनत्कुमार वास्तु शास्त्रम्	சனத்குமார வாஸ்து சாஸ்திரம்
*8.	शिल्परत्नाकरम् (मयवास्तु)	சில்பரத்னாகரம் (தமிழ்)
*9.	सर्वार्थ शिल्पचिन्तामणि	சர்வார்த சில்ப சிந்தாமணி (தமிழ்)
*10.	शिर्पच्चेन्नूल्	சிற்பச்செந்நூல் (தமிழ்) (1977 ம் ஆண்டு அரசு வெளியிட்ட வை.கணபதி ஸ்தபதியின் நூல்)

32 வாஸ்து சாஸ்திரத்தில் மனுசாரம் என்ற வாஸ்து நூலில் 18 வகையான நூல்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1.	ईशानम्	ஈஸானம்
*2.	चित्रकाश्यपम्	சித்ரகாஸ்யபம்
*3.	प्रयोगमञ्जरी	ப்ரயோக மஞ்சரி
4.	पेरूहितम्	பேருஹிதம்
5.	बौद्धमतम्	பௌத்தமதம்
6.	गौतमम्	கௌதமம்
7.	कुलालम्	குளாளம்
8.	वाशिष्टम्	வாசிஷ்டம்
9.	मनोकल्पम्	மனோகல்பம்
10.	भार्गवम्	பார்கவம்
11.	मार्कण्डम्	மார்கண்டம்
12.	गोपालम्	கோபாலம்
13.	नारदीयम्	நாரதீயம்
14.	नारायणीयम्	நாராயணியம்
*15.	काश्यपम्	காஸ்யபம்
16.	चित्रयामलम्	சித்ரயாமலம்

17.	चित्रबाहुल्यम्	சித்ரபாஹுல்யம்
18.	देशिकम्	தேஸிகம்

<u>வட இந்தியர்களால் கையாளப்படும் வாஸ்து நூல்கள்:</u>

*1.	वास्तु राजवल्लभम्	வாஸ்து ராஜவல்லபம்
*2.	समराङ्गण सूत्रधारम्	சமராங்கன சூத்ர தாரம்
*3.	रूपमण्डणम्	ரூபமன்டனம்
*4.	कोदण्ड-मण्डणम्	கோதண்ட மன்டனம்
*5.	शिल्प प्रकाशम्	சில்ப ப்ரகாஸம்
*6.	अपराजितपृच्छा	அபராஜிதப்ருச்சா
*7.	प्रतिमा मान लक्षणम्	ப்ரதிமா மான லக்ஷணம்
*8.	क्षीरार्णवम्	க்ஷீரார்னவம்
*9.	दीपार्णवम्	தீபார்னவம்
*10.	शिल्प शास्त्रम्	சில்ப சாஸ்திரம்

மேற்குறிப்பிட்ட நூல்களை கையாண்டோர்தான் விசுவகர்மர் எனப் பெயர் பெறுவாராயினர்.

பிரளய காலத்திற்கு முன் வந்த [10 ஆயிரம் ஆண்டளவில் முதல் சங்க காலத்தில் எழுதிய] மூலத் தமிழ் நூல்கள் பின்வருமாறு:

<u>மயனின் தொழில்நுட்ப நூல்கள் (எல்லாம் தமிழ் நூல்கள்):</u>

1.	ஓவியச் செந்நூல்
*2.	சிற்பமாச் செந்நூல்
3.	கட்டிடச் செந்நூல்
4.	நிலமனைச் செந்நூல்
5.	மனைநிலச் செந்நூல்
6.	வானியல் செந்நூல்
7.	பெருநடச் செந்நூல்
8.	மூலிகைச் செந்நூல்
9.	கணிதமாச் செந்நூல்
10.	மரக்கலச் செந்நூல்
11.	விண்கலச் செந்நூல்
12.	ஏழிசைச் செந்நூல்

ஐந்திறம்

நூலாசிரியர்:
சங்க கால சிற்பச் சித்தன் மாமுனி மயன்

ஒரு முக்கியக் குறிப்பு

1986ம் வருடம் வெளியிட்ட ஐந்திற நூலின் அரசுப்பதிப்பில் எதிர்வரும் ஐந்திற நூற்பாக்கள் அச்சேற்றப்பட்டு புலவர் பெருமக்களுக்கு நூல் வடிவில் வழங்கப்பட்டது. அதைப் படித்த அறிஞர் ஒரு சிலர் பாக்களின் வைப்பு முறை சரி செய்யப்படாமல் இருப்பதால் ஒரு வகையான குழப்பம் ஏற்படுகின்றது என்று சொன்னார்கள். அத்தகைய குறைபாடு இந்தப் பதிப்பில் நீக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இந்தத் தொகுப்பில் எந்த ஒரு பாவும் விடுபடவில்லை என்றும் புதிய பாக்கள் ஏதும் சேர்க்கப் படவில்லை என்றும் உறுதி கூறுகிறோம்.

இதன் மூலம் இந்த ஐந்திறத்தில் உட் கிடையான விண்ணியல், மண்ணியல் செய்திகளைப் புலவர் பெருமக்கள் நன்கு புரிந்து கொள்வர் என்று கருதுகிறோம்.

பிறதொரு முக்கியச் செய்தி யாதெனில், வைப்புமுறை திருத்தி அமைக்கப் பட்டிருப்பினும் மூலப்பாக்களின் எண்களை மாற்றமால் அந்த எண்களையேஒவ்வொரு தலைப்புக்கு நேரே தந்திருப்பது மேற் சொன்ன எமது கூற்றை மெய்ப்பிக்கும் என்று சொல்லிட விரும்புகிறோம்.

பதிப்பாசிரியர்.

சங்க காலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் அருளிய ஐந்திற பாக்களின் தொகுப்பு அட்டவணை

மூலப்பதிப்பில்	தொகுக்கப்பட்டப் பதிப்பில்
மொத்தப்பாக்கள்:-892	மொத்தப் பாக்கள்:- 892

ஒளி, ஒலி

ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே 1

நிறையொலி நேரொலி வெளியொலி விண்மொழி
மறையொலி ஓமென வழுத்தற் பாற்றே 2

மறைமுதல் ஒலி 'ஓம்' அறைதல் மரபே 3

மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே 4

அணுத்திறள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம் 5

ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே 8

ஒளிநெறி யாற்றலால் உளத்தியல் ஆய்ந்து
வெளிநெறிக் கலைநெறிச் செந்நெறி உணர்ந்தோர்
தெளிகலை ஆற்றல் செந்தமிழ் உணர்வால்
ஒளித்தமிழ் ஐந்தியல் ஓர்ந்துணர் வாரே 34

ஒலியும் ஓசையும் உள்ளுவ வோர்ந்தே
ஒளியும் வெளியும் முறையும் நோக்கி
தெளிவுறும் உணர்வால் செந்தமிழ் ஐந்தியல்
ஒளிமிகும் ஐந்திறம் உரைப்பதிந் நூலே 43

ஒளிமுதற் கண்ட விண்தமிழ் ஓசை
வெளிவளர் ஓமென விளம்பல் கேட்டே
தெளிதமிழ் மொழியியல் ஐந்தியல் வரம்பாய்
ஒளிவளர் ஐந்திறம் உரைத்தனன் நன்றே 45

எண்ணெழுத் தியலொலி மூல நுட்பமும்
விண்மண் மூலமும் ஒலிகுறிக் கும்மே 47

ஒலிநிலை உணர்ந்தோர் உயிருணர்ந் தோரே 49

தொல்லை நெறிநிலை ஒளிநெறி நோக்கி
வல்ல திறத்தால் உள்ளும் புறமும்

விள்ளலும் ஆய்தலும் ஒளிநூல் வழக்கே 97

நூலின் நுண்பொருள் நுவலுந் திறனால்
நாற்கலை சிறந்து ஒளிமொழி ஓங்கும் 99

எண்ணியல் கலையின் நோக்குறும் உணர்வால்
எண்ணமும் உணர்வும் இணையுறத் தெரித்தே
ஒளிநிலைக் கலைத்திறன் ஒலிபெறத் தெரிந்தே
மெய்க்கலை ஆய்முறை வினைமுதற் றென்ப 102

எண்எண் கலையின் இலங்குறும் புள்ளி
திண்ணியல் மூலம் சீர்பெறத் திகழ்ந்து
நிலைபெறும் விண்ணொளி ஒலிநிலை விளக்கி
கலைபெறும் மொழியே கவினொளி மொழியாம் 105

உள்ளுவ உள்ளி உள்ளொலி தேர்ந்து
விள்ளுவ மொழித்திறன் மெய்க்கலை மூலம்
கொள்ளுவ கொண்டே பெருங்கணிப் பார்ந்தே
உள்ளல் எண்ணெழுத் தியல்பின் நெறியே 122

மெய்யொலி உயிரொலி சிவணுதல் இயல்பே 166

எண்ணெண் கலைத்திறன் நுண்ணிதின் நோக்கி
எண்வகுத் தியலா லிருகூ றாக்கி
எண்நிலை நாற்புறத் தியலுற வாய்ந்தே
விண்ணொளி ஓசை ஒலித்திறத் தெழுத்தாய்
தண்டமிழ் ஐங்குறில் தானியல் நெறியே 168

நினைப்பே உணர்வே ஒளிநிலை திகழ்ந்தே
கனைப்பே மெய்யொலி முயற்சிய தாகி
சினையியல் உயிரொலி யாய்வரல் பிறப்பே 179

ஒளியே உணர்வே பேரறி வாகி
தெளிநிலைக் கலைத்திறன் உணர்த்து மென்ப 180

நெறியே அறுபான் நான்குறும் இயலால்
அறிநிலைக் கலையாய்க் கணக்கியல் தெரித்தே
குறிப்புறும் எழுத்தியல் ஒலிமுறை நோக்கி

அறிவுணர் நிலைகலை மாத்திரை விளக்கி
உயிரியல் ஒளியியல் ஒலியியல் இயைந்தே
செயிரறத் தெரிக்கும் திண்நிலைக் குறிப்பே 182

புள்ளி யாற்றல் பொருந்த வுணர்ந்தே
தெள்ளிய கோடு வரிவியல் உருவியல்
உள்ளும் வடிவியல் ஒளிநிலை ஓர்ந்து
வில்லும் கலைநிலை மெய்விளக் கும்மே 183

ஓசை ஒலிதிகழ் ஆற்ற லுணர்ந்தே
ஒணூச ஒலிஒளி உருவடி வோர்ந்து
வடிவியல் தோற்றம் உருவியல் ஆற்றல்
கடிதுறும் ஒலிநிலை ஒளிதிகழ் தேற்றம்
அறுபான் நான்கின் எண்கலை நுணுக்கம்
உறுகலை எண்நிலை பிறழ்நிலை மாறி
ஒமென ஒன்பான் திறமென ஒளிரும்
தூமொழி ஒலிநிலை செப்பற் பாற்றே 186

ஒளியே ஒலியே அலைஅலை நுணுக்கம்
ஒலியசை ஓசை விரிநூல் உரைக்கும் 187

உள்ளொளித் திறனாய் உற்றுணர் வோங்கி
வில்லூறும் விண்ணொளி நோக்குறு மெய்த்திறன்
அண்ட மூலமும் பிண்ட மூலமும்
தண்டமிழ் மூலமும் விண்கலை மூலமும்
எண்ணிலைப் பிறழ்வின் நெறிநிலை மூலமும்
தெண்கலைப் புள்ளி மூலமும் சிறக்குமே 196

நினைவறல் இல்லா நெறிநிலை யோங்குபு
முனைவுறும் ஆற்றல் ஒளிஒலி யோங்கும் 211

ஒளியால் உணர்கலை ஒங்குறும் நெறிநிலை
வெளிமொழி விண்கலை எண்கலை மொழித்திறன்
தெளிநிலைச் சீர்மதி செய்நிலை தொழிற்கலை
விளிமுறைத் தெருண்நிலை விளக்கம் இயல்பே 229

ஒளிஒலி உயிரியல் வெளிமுறை ஆய்ந்தே

களித்தமிழ் காண்பர் கற்றவல் லோரே 238

ஒளிதரும் உணர்வே கலைநெறித் தேற்றம் 285

மொழியியற் கலைநெறி முறைமையின் முன்னி
எழுதரும் இயலா லறிவிய லெண்ணியல்
ஒளிஒலி வடிவுரு நிலைதெரித் தியலாய்
களிநிலை வகுக்கும் ஐந்திறத் தியலே 287

குறிகுறித் தியலும் குறிப்புறும் நோக்கம்
குறியால் குறிகுறி யியல்நிலை நோக்கிக்
குறித்தறி யாநிலை குறிப்பினி துணர்த்தும்
நெறிமுதல் எண்கலை நிலைபெற நிறுத்துபு
ஒளியே உருவிற் றோன்றுறும் ஆற்றல்
ஒளியே ஒளிநிலை காட்டுறும் தோற்றம்
தெளிவுறத் தேர்ந்தே சீர்நெறி நோக்குழி
ஒளிஒலி நுட்பம் உண்மை யியங்கல்
ஒளியுள் உருவம் ஒலிநிலை ஒளியும்
அளிநிலை ஆய்தல் அறிநிலை விளக்கும் 297

மாநெறித் தேர்ந்துணர் மெய்க்கலை நுட்பம்
பாநெறிப் பெருங்கலை எழுத்தியல் ஒலிசேர்
கலையொளி எழுத்தெலாம் காட்டுறும் திறனிலை
நிலையொளி எண்ணிலை நிறுத்துபு நிறீஇ
எண்ணியல் மருங்குறும் எழுத்தொலி நாற்புறத்
தெண்ணியல் நடுவண் இயங்குறும் நுணுக்கப்
புள்ளி புள்ளியல் மூலத் தார்த்துறும்
தெள்ளுறும் சீர்த்திறன் சிருற நோக்கின்
விள்ளுறும் கலைத்திறன் விளங்குறும் எண்மை
தெள்ளுறும் இயல்மொழி ஓமியல் நெறியாய்
ஒலியே உரைக்குறும் ஒலிப்பொருள் உணர்த்திலும்
ஒளியே உருவங் காட்டல் உண்மையே 298

ஒலிநிலை ஓசையால் மொழிப்பொரு ளுணர்த்தி
ஒளிநிலை அகமுறும் உருவங் காட்டும்
ஓமுறும் ஒலிநிலை உரைக்குங் காலை
ஓம்ஒளி அகத்துணர் உருவெடுத் தியங்கும் 299

ஒலிதரும் ஒளியே ஒளிதரும் உருவே
ஒளிநிலை முலம் உய்த்துணர் தேற்றம் 300

ஒலியுறும் ஓசை ஒளியுறும் மெய்நிலை
தெளிவுறக் காட்டும் சீர்பொரு ளாகி
அண்டமும் பிண்டமும் இயல்பெற நிறுத்தி
கண்டதோ ருண்மை கலைபெறக் காட்டி
தெற்றுற விளக்கும் சிற்பத் திறனே 303

ஒலிநிலை யியலால் உண்மை யோர்ந்தே
ஒளிநிலை யியலால் உருவங் காண்டலால்
ஒளியளி ஒளியும் ஒளிதரும் ஒலியும்
ஒலியின் முலம் ஒளிநிலை முலம்
ஒளியின் முலம் ஒளிநெறி முலம்
தெளிவுற வுணர்தல் சீரறித் திறனே 305

ஒளியில் உருவம் ஒலியில் ஓசை
தெளிநிலை யாற்றல் களிகலை நுட்பம் 307

ஒலியியல் நுட்பம் ஒளிதருந் திட்பம்
கலைநிலை நெறியாய்க் கருத்துறும் நெறியே 326

ஒளியே வளர்த்தல் ஓசை கிளர்தல்
ஒளிநிலை முலம் ஒலித்திற னோசை
ஒளிநிலை யியலும் நிறைநிலை நவிலல்
கலைநிலை யாய்தல் கருத்துறும் நெறியே 328

தோன்று மிடத்தே சார்ந்துறும் ஒலிபோல்
ஏன்றுறும் ஒளித்திறன் இயல்நிலை யோர்ந்தே
ஆன்றுறும் மெய்த்திறன் கலையறிந் தறிவோர்
ஊன்றுறும் முயக்கம் உய்த்துணர் வாரே 334

ஓமுறும் வடிவம் ஒளிகுற நோக்கி
ஒளியும் ஒலியும் இயல்நிலை தேர்ந்து
ஓமுறும் விண்ணெறி யெண்ணெறி நோக்குபு
ஓம்முதல் நெறிநிலைக் கலையிய லாய்ந்தே
மாநெறிக் கலைத்திறன் மெய்யுணர் வோங்கித்
தூநெறித் தமிழியல் துலங்குறு மியலே 381

ஒலியியல் நுட்பம் ஒளிக்கலை நுட்பம்
கலைநெறி நோக்குபு கவினுறக் கண்டே
நிலைநெறி யுணர்வால் எண்ணெண் கலைத்திறன்
மலைவற நிற்றல் மாநெறி வழக்கே 384

ஒலியே ஒளியியல் ஒலியிசை நெறியும்
ஒலியிரந் திசைக்கும் அளபெடை நெறியும்
ஒலியிய லோசை ஒலிக்கலைத் திறனாய்
நிலையுற விளக்கம் ஐந்தியல் நெறியே 387

வெளிமொழி ஓம்ஒலி மூலத் தியலாய்
மூல மாப்பொருள் புள்ளிக் கூற்றே
மூல நுட்பம் முறையுற நோக்குபு
காலமுங் கனியும் கருத்துறும் ஒளிநிலை
ஞாலத் தியல்நெறி நுண்ணுற நாடி
ஐம்பெருந் திறனா யகத்துணர் வோங்கச்
செம்மை மாநெறிச் சீர்சால் கலைநெறி
ஒளிநெறித் திகழ்ந்தே ஓங்குறும் எண்ணியல்
தெளிந்துணர் நிலைக்கலை செப்புவ மாநெறி
நெறிமுதற் குறியாய் நிலைபொரு ளோங்கி
குறித்துணர் பொருளைக் குறிப்பின் குறித்தே
குறியாக் குறியால் குறிகுறி யிட்டால்
நெறிமுத லோர்ந்து நிலையியல் நாடி
கலைத்திறன் காண்போர் கருத்துற விளக்கி
நிலைத்திறன் மொழியால் நவிலுமிவ் வியலே 408

எழுத்திய லசையும் ஒலியும் ஒளியும்
வழுத்தும் பொருளும் உணர்நிலைத் திறனும்
சொற்பொருள் நெறியாற் றுலங்கு மாப்பொருள்
கற்பவை கண்டே கருத்துறத் தேர்ந்தே
நிற்பவை நிறீஇ நவிலு மாக்கலை
சொற்றிறப் பொருளியல் துலங்க நாடி
உற்றறி திறத்தால் உள்ளுள் ளுணர்ந்தே
மெய்க்கலை மெய்ப்பொருள் மெய்யுணர் நிலையால்
உய்யு மாநெறி ஒளித்தமிழ்க் கலையே 412

ஒலிஒளி யியல்நிலை ஓங்குற உணர்ந்தே
ஒலியியல் ஓசை இசைக்கலை ஆய்ந்து
ஒளிமுதற் பொருளூறும் மெய்நிலைக் கலையால்
ஒலியிசை நுட்பம் உரைக்கப் படுமே 443

ஐம்பொரு ளைந்நெறி யியல்பி னோர்ந்து
செம்பொருட் சீர்நெறி தெரிநிலைத் திறத்தால்
உள்ளூறும் விண்ணொளி ஒளியியல் நுட்பம்
விள்ளூறுந் திறநிலை விரித்துறும் ஆற்றல்
மெய்மொழி அருங்கலை யுணர்வியற் கலையாய்
மெய்ப்பொருள் நுகர்நெறி வாழ்விய லாய்வோர்
ஒளியுட லொளியுயிர் சீர்பெற நோக்கித்
தெளிவுறுங் கலைநெறித் திண்மையி னோர்ந்தே
ஒளிக்கலை மூலம் ஓங்குறும் நுட்பம்
நிலைபெறக் கண்டே நெடிதுணர் வாரே 444

ஐயைந் தியலா லறியு மாநெறி
ஐந்நெறிச் சீர்மை எண்ணியல் நோக்கிச்
செந்நெறிச் சுழலல் சீர்மை யாய்ந்தே
மெய்ந்நெறிப் பொருளுரை மெய்க்கலை மெய்த்திறன்
உய்முறை யாய்வோர் ஒம்தெரி யாற்றல்
நிலையுறக் கண்டே நெறியுற வுணர்ந்தே
கலையுறத் தெளிவர் கருத்துணர்ந் தோரே 448

நிறைமொழி யோசை நேரிதின் கிளந்தே
மறைமொழி யோசை மெய்யொலி திகழ்ந்தே
ஓமுறும் இயல்நிலை ஒண்பொரு ளாய்ந்தே
ஓம்ஒலி ஓம்ஒளி நெறிமுறை யோர்ந்து
இமிழொலி யோசை இன்னிசை நிரல்நிலை
உமிழொலி யாக்க முறுபொருள் தேர்ந்தே
தமிழொலி யோசை இசைநெறி யாயல்
அமைவுறு முணர்வா லாய்ந்துணர் நெறிக்கலை
ஓம்முதற் பொருளா யொருமொழித் திறனாய்
காமுறுங் கருத்தால் கற்றறி நோக்கி
உணர்வொளித் திறனா யோங்குறு மாற்றல்

மெய்க்கலை யுணர்வொளி மூல மறிந்தே
விண்ணொளித் தமிழாய் விளங்குறு முண்மை
எண்ணொளித் திறனுறும் எண்விளக் கும்மே 463

ஒளிமுதற் காண்டல் மெய்ம்மைப் பொருளே 470

ஐந்நெறி ஐந்தியல் ஐங்கலை நுட்பம்
செந்நெறி யுணர்வால் சீரறி வுற்றே
ஓம்நெறி மெய்ப்பொருள் உள்ளுற வோர்ந்தே
ஓம்கலை ஓம்மொழி ஒருமொழித் திறனாய்
ஓம்ஒளி ஓம்ஒலி இயல்பி னுணர்ந்தே
ஓமுறும் நிலையறி மெய்ப்பொருள் திறத்தால்
ஓம்முதற் பொருளே செம்மொழி யாகி
மெய்ம்மொழிப் பொருண்மை மெய்ந்நிலை துலக்கி
மெய்ப்பொருள் மூலம் ஒளிநிலை தோன்ற
விளக்குறு முண்மை விரிநிலைத் திறனாய்
துளக்கற வுணர்த்தும் தூநெறி யுணர்ந்தே
எட்டின் பிறழ்நிலை முட்டறத் தேர்ந்தே
விட்டுறு மிடைநிலை மெய்ப்பொரு ளோர்ந்தே
ஆடலான் கலைநிலை யாடுறு மாடல்
நாடுறும் வையச் சுழல்நிலை யோர்ந்தே
காலத் தியலறி விரைவுறு மாற்றல்
மூலப் பொருளால் முன்னிய முன்னி
எண்ணிலை மறுபான் நான்குறும் திறத்தால்
உண்ணோர் விளங்கி விண்ணே நோக்கி
விண்முகத் தியலால் எண்முகத் தீர்ப்பும்
உண்முகத் தொளிதரும் மெய்ந்நிலை யோர்ந்தே
தெண்முகம் நோக்கிச் சீர்நெறி துலக்கும்
நன்னிலை மெய்த்திறன் நவையற வுணர்ந்தே
தொன்னிலைக் கலைநிலை எண்ணியல் மரபென
உன்னி யுன்னி உள்ளுறுந் திறத்தால்
பன்னிப் பன்னிப் பகர்நிலை யாய்ந்தே
வென்றி மாத்திறன் மெய்க்கலை யுணர்வால்
நன்றுறும் திறனிலை ஒளிமிய லோர்ந்தே

இன்றுறும் நாளை நெருநலு மோர்ந்தே
பொன்றாக் காலம் பொருந்த வுணர்ந்தே
கண்ணிமைக் கைந்நொடிக் காலங் கருதி
எண்ணுறுந் திறத்தால் ஏற்பவை ஏற்று
விண்ணொளித் திறத்தா லூழிமாப் பொருளும்
மண்ணுறு மியல்நிலை மாக்கலை தேர்ந்தே
உள்வெளிப் புறவெளி இயல்நிலை நோக்கி
உள்ளொளி யுணர்வால் ஓம்நிலை நோக்கி
மூலத் துறு நிலை முன்னுந் திறத்தால்
காலத் தியல்நிலை விரைவுறு மாற்றல்
எட்டி னியலால் நிலையுறத் தெரிந்தே
முட்டறு மொழிக்கலை முன்னி யுணர்ந்தே
வானிய லொலித்திறன் வகையுறக் கிளந்தே
வான்நெறி யோர்ந்து மெய்ம்மொழி கிளத்தல்
முதற்பொரு ளாயுறும் ஓம்நிலை மொழியே
முதன்மைப் பொருண்மை ஒளித்திறன் நோக்கி
ஐந்தவி யான்றோர் அகத்துற வுணர்ந்தே
முந்துறும் மெய்ப்பொருள் உரைநவில் திறமே 473

ஒளிக்கதிர் நோக்கி ஒண்கலை யுணர்ந்தே
வெளிவளித் திறனிலை மூலம் ஆய்ந்தே
ஒளியின் இயலுறும் ஒண்மை யுணர்ந்தே
ஒளிக்கலை நூலுரை மெய்ம்மை போதர
விரித்துண ராற்றல் ஒளிநிலைக் கலையே 476

பொருண்மை சுட்டித் தெருண்மை விளக்கி
மருண்மை நீக்க லொளிக்கலைத் திறனே 477

ஒளிக்கதிர் நிலைதெரி ஒளிநிலை யறிவால்
ஒளிதரும் நுட்பம் ஒலிதரும் இயலும்
வெளிநிலைக் கலையும் மெய்யுற வுணர்ந்தே
ஒளிநிலை நுட்பக் கதிருறுங் கீற்றும்
தெற்றென வுணர்ந்தே தெரிநிலை யாய்ந்துபு
உற்றறி யுணர்வா லுன்னி யுன்னி

தோன்று மியலும் தோன்றா நெறியும்
ஒன்றுறும் பொருள்நிலை யிலங்கத் தெரிந்தே
செய்முறை காண்டல் தெளிவுற நோக்கல்
உய்த்துண ரறிவா லுழைப்பியல் நெறியால்
ஒளிக்கலை யாய்தல் மெய்ப்பயன் தருமே 479

ஒளியியல் நுட்பம் ஓங்குற வுணர்ந்தே
ஒளியின் ஒளிநிலை உள்ளுறு மாற்றல்
ஒளிக்கலை மூலத் தியல்நிலை யோர்ந்தே
ஒளியா ஒளிநிலை ஒளிதரும் ஒளியாய்
ஒளியுள் ஒளியும் உட்பொரு ளாய்ந்தே
ஒளிநிலை மூலக் கலைநெறி யாற்றல்
ஒளிநா லுரைக்கும் இயல்பின தாகி
ஒளியுணர் வோங்கி வெளிப்படுந் திறனாய்
ஒளிக்கலை நுட்பம் உணர்ந்துறு மாற்றல்
ஒளிநிலை யியலே மெய்க்கலைப் பயனாய்
ஒளிநிலை யுருவங் காட்டல் நெறியென
ஒளியே உருவும் உணர்ந்த லியல்பாய்
ஒளிநிலை மூலத் தியல்தெரி யாற்றல்
தெளிவுற வுணர்ந்தே ஆய்தல் நெறியே 484

ஒளியணுத் திரளும் ஒலியணுத் திரளும்
ஒளிநுற நோக்கி ஒளிநிலை யுணர்ந்தே
ஒளியே மூலம் ஒளிக்கலை யாய்ந்தே
வெளியுறும் நிலைதெரி ஒலியணு வாய்ந்தே
ஒளிஒலி நுட்பம் மெய்ப்பொரு ளுணர்ந்தே
தெளிவுறக் காண்டல் ஒலிநிலை யோர்தல்
ஒலிப்பொருள் மூலத் தெரிநிலை யாய்தல்
ஒலிஒளித் திறனா யோங்குறும் நிலையால்
உணர்ந்துறு மாற்றல் உணர்ந்துறும் நிலைக்கலை
உணர்வுற வோங்கிச் செய்முறை யாய்ந்தே
நோக்குறும் நோக்கும் இயற்றுந் திறனும்
ஆக்குறும் ஆற்றல் மெய்க்கலைத் திறனே 485

ஓங்குறு மொளியா லுணர்நிலை யறிந்தே
தேங்குறு முயிரொளிச் சீர்நிலைக் கலையால்
ஆங்குறு மெண்ணென் கலைத்திறன் நோக்கி
ஈங்குறும் நெறிமுறை இவண்நிலை சுட்டி
ஊங்குறுந் தனித்திற னொண்மை யறிந்தே
சுட்டுப் பொருளும் சுட்டாப் பொருளும்
முட்டறத் தேர்ந்தே ஒளிநிலை மூலம்
புள்ளி யியலாய்ப் பொருந்தக் கண்டே
தெள்ளுறு முணர்வாற் சீர்நிலை யறிதல்
ஒளிநிலை மூலத் தியலறி நெறியே 489

எண்ணியல் நெறித்திற னைந்தியல் மூலம்
எண்கலை எண்ணெறி எண்முறை இயலாய்
ஒருங்குறு முணர்வா லுள்ளொளி நோக்கி
மருங்குறும் அகவின் னொளிக்கலை யியலாய்
உன்னுவ உன்னி உள்ளுவ தோர்ந்தே
துன்னுஞ் சுழல்நிலை மெய்க்கலை மூலம்
நிலையறித் திறத்தால் நேருணர் வுற்றே
கலையறித் திறத்தால் கணக்கிய லாய்ந்துணர்
ஐந்திய லைந்நெறி மெய்யியற் றிறமும்
ஐங்கலைத் திறனா லியல்பட நிறீஇ
செந்தமி ழொளிநிலைச் சீரறி வுற்றே
முந்துறும் முச்சுறும் முந்நெறி நோக்கி
மூலத் திறனா லொளிநிலை யாய்ந்தே
காலத் தியலும் விரைவுறும் மெய்ந்நிலை
உணர்வின் திகழ்ந்து ஒளிநிலை யியலால்
புணர்நெறித் திறனும் பொருந்துவ நோக்கி
ஐங்குடில் முத்திப் பேரொளி காண்டுபு
செங்குடிச் சிறுகுடிப் பைங்குடி யியலே
ஒன்றினி னொன்றாய் உறுநிலை நோக்கி
ஒன்றினின் னொன்றே ஒளியிய லாக்கம்
மேலெழுந் தியம்பும் மெய்க்கலை நோக்கிக்
காலெழுந் திறனுறுங் கணக்கிய லாய்ந்தே

அகவின் னொளிர்தரு மொளிஒலிச் சுடரும்
மிகுமுறை நோக்கி மெய்யுணர் திறத்தால்
விண்ணொளி தோன்றி மண்ணுறப் பொருந்தி
விண்ணொளிக் கூடும் விண்ணினை எய்தும்
விண்ணில் தோன்றும் ஒளிமண் ணொன்றே
விண்ணுறுந் திறனும் ஒளிநிலை யாற்றல்
நுண்ணுணர் திறனால் நெறியிய லாய்ந்தே
ஐங்குடி யாக்கம் ஐம்புலன் நெறியும்
தங்குறும் நிலைநெறி அகப்புற மாய்ந்தே
நோக்குவ நோக்கி ஆய்நிலை யாய்ந்து
ஆக்குறுந் திறமுறும் வண்மை தெளிந்தே
செய்முறை யியற்றல் தெளிந்தோ ரியல்பே

கட்புலன் தோன்றுங் கருவிழி இருவிழி
விட்புலத் தியலொளி ஒளிநிலைச் சுடராய்த்
தெரிநிலை தோன்ற எரிநிலை மெய்யொளி
விரிவுறுந் திறத்தால் விண்ணொளி நோக்கால்
பரிவுறும் உணர்வால் பெருநிலை நோக்கி
விரிவுறுங் கலைத்திறன் எண்ணெண் ணியல்தெரி
புள்ளியிற் புள்ளி பொருந்த நோக்கி
புள்ளித் திறனே இயங்கலும் இயக்கலும்
இயங்குறுந் தன்மை இனிதி னோர்ந்து
உள்ளிருந் தெழுதரும் ஒலியலை அலையிசை
தெள்ளுறும் திறனொலி ஒலியலை இயலாய்
ஒலிஒளி யாற்றல் ஓங்குறத் தெரிந்தே
ஒலிமுதற் பொருளுறும் ஓசை யறிந்தே
ஓசை யியற்றிறன் உன்னுறுந் திறத்தால்
ஓசை மெய்யொலி இயல்பினிற் றிகழ்ந்தே
அணுத்திரள் ஒலியின் அணுக்கூ றியலும்
அணுவணுக் கூறியல் நுட்ப மாய்ந்தே
ஒலியியல் நுட்பம் ஒழுங்குறு மாக்கம்
ஒலியியற் றிறநெறி மெய்யுணர் கூட்டும்
சீரொலி நேரொலி தெளியொலி நிறையொலி

ஒரொலி யாற்றல் ஒமெனத் தேர்ந்தே
ஒமுறும் உருவம் உள்ளுணர் வாய்ந்து
ஒமுறும் ஒலியியல் கேட்டுறும் ஆற்றலால்
ஓம்ஒளி ஓம்ஒலி விண்மொழித் திறனாய்
ஓமிய லாற்ற லகவெளிப் புறவெளி
வெளியியற் றிறனும் விண்ணுறும் மூலம்
ஒளிமுதற் பொருளெனத் தெளிநிலை யியல்பே 491

ஒருகலை இருநிலை முத்திறன் நாற்புறம்
பெருநிலை யைந்தா யொளியியல் நோக்கி
மூலத் திண்மை முயற்சியி னோக்கிக்
கோலத் தியலாற் குறித்துறு மாற்றல்
கண்ணொளிக் கதிரொளி விண்ணொளிக் கதிரொளி
எண்ணுறுந் திறனு மியைபுறுந் திறனும்
தெண்ணிதின் நோக்கி நுண்ணிதின் ஆய்ந்தே
ஒண்ணிதின் கலையொளி ஒக்கப் பொருத்தி
ஒருங்குறக் கண்டே மிக்குறுந் திறத்தால்
பெருக்கத் தியல்நெறிக் கட்புலம் மேவும்
விட்புலத் துள்ளொளிக் கட்புலங் கூடும்
திட்பமும் நுட்பமும் செறிநிலை யுணர்வால்
உணர்ந்துறு மாற்ற லொளிநிலை யோங்கிப்
புணர்நிலை இயலறிப் பொருந்த நோக்கி
விண்ணொளிக் கண்ணொளிப் புணர்நிலை யாய்ந்தே
எண்ணுறும் உணர்வா லெண்ணெண் கலைத்திறன்
நுண்ணுணர் வாலறி நுட்பமும் பெற்றே
கண்ணொளி நோக்குநர் கலைதெரி யறிவரே 492

ஒளிக்கலை இயல்தெரிப் பெருங்கலை நுட்பம்
வெளிக்கலை நெறியென மெய்ந்நிலை யோர்ந்தே
வெளியின் ஒளியால் மேவுறுந் திறனிலை
ஒளியின் வெளியால் ஆக்குறுங் கலைத்திறன்
ஒளிக்கதி ரொளிநிலை யியல்பிற் றிகழ்ந்தே
ஒளிநிலை மூலக் கருக்கதி ராய்ந்தே
கதிரொளி யியல்நிலை ஒளிக்கதிர் துணுக்கால்

கதிரொளிக் கிற்றின் சிரியல் நுட்பம் 498

ஓர்ந்துண ராற்றல் ஒள்ளிதின் பெருக்கி
தேர்ந்துண ரறிவர் சிரொளி கண்டுழி
தேற்றம் ஏற்றம் தெரிநிலை சூர்ந்தே
தோற்றும் ஒளிநிலை ஒலிநிலை யாய்ந்து
என்னென் கலைத்திறன் இயல்பினின் ஆய்ந்து
நுண்ணிலை யியலால் எட்டும் ஆய்தல்
உணர்வோர் கலைத்திறன் ஒளிமுதல் ஆய்திறன்
உணரறிக் கலையே ஓங்குறும் நெறியே
என்னின் நெறியால் இலங்கல் மரபே 499

ஒலியிசை நுட்பம் ஒல்லையில் உணர்வோர்
ஒளியிசை நுட்பம் தெள்ளிதி னோர்ந்து
ஒளிஒலி இயற்றிறன் நுட்பமு மாய்ந்து
ஒளிஒலி நுணுக்கம் மெய்ந்நிலை யாய்ந்தே
ஒலியிசை நுட்பத் தியலறி வாற்றல்
ஒளிக்கலை மூலம் நுட்பந் தேக்கி
விண்ணொளி யியலால் பொருள்நிலை மேவும்
கண்ணொளி யியலால் கலையுணர் வோங்கி
ஒலியிசை பெருகி ஒளியிசை இவர்ந்தே
ஒளிஒலி நுட்பம் ஆய்தலும் நெறியே 501

என்கலை இயல்தரும் நுண்ணறி வாற்றல்
நுண்கலை நெறியுறும் விண்கலை ஓர்ந்தே
ஒளிமுதற் பொருளுறும் நெறிநிலை யாய்ந்து
ஒளியிய லொளியியல் ஓங்குற வுணர்ந்தே
அகவொளி நுட்பத் தியல்தரு மாற்றல்
மிகுமொளிக் கலைதிகழ் மெய்ம்மை விரித்தே
நூலறி வாற்றல் நுட்பத் திறனாய்
நூலுணர் நெறியால் மெய்ந்நிலை மூலம்
உள்ளுள் ளறிந்தே உறுபயன் நோக்கி
விள்ளுறும் மூலக் கலைநிலை யாற்றல்
தெள்ளிதி னுணர்ந்தோர் சீரறி வுற்று
ஒள்ளிய ஒளிக்கலை இயல்பறி வாரே 514

ஒளியியல் திறனிலை உணர்வுற் றறிந்தே
வெளியியல் பொருள்நிலை மெய்யியல் ஒர்ந்தே
விண்ணியல் பொருள்தெரி இயல்நிலை வினையால்
எண்ணிய லுற்றே ஒளிநிலை காண்டலும்
என்கலை நிலைதிகழ் உணர்வுற் றிலங்கி
எண்ணிலைத் தமிழ்நிலை உயிர்மெய் யாய்தல்
திண்ணிய மாந்தரின் சீர்நெறி யியலே 521

ஒளிமொழித் தென்றமிழ் ஒண்தமிழ்க் கலைநெறி
வெளிமொழி ஒம்முதல் தெளிவுறத் தொடங்கி
அளிமொழி கலைமொழி தலைமொழி நோக்கி
அளித்திறன் ஆற்றுறும் நெறியமைப் பியலே 527

ஒம்மொழித் திறனாய் ஒம்நெறி யிலங்கி
ஒமொழி யுறுநிலை ஒளிநிலை விளக்கும்
ஒவிய மெய்க்கலை தெரிநெறிக் கலையே 529

ஒளியியல் உணர்ந்தே உட்கலை ஒர்ந்தோர்
வெளியியல் முழுதறி விண்ணறி வோங்கி
எண்ணறிக் கலைதெரி யியல்திற நுணுக்கம்
திண்ணிதின் நோக்கி செழுங்கலை யியல்நெறி
உற்றறித் திறனால் ஒங்குறும் மெய்த்திறன்
தெற்றென் றுணர்வார் சீர்நிலைக் கலையே 530

பொருண்மை சுட்டும் மெய்ந்நிலைக் கிளவி
தெருண்மை யுணர்த்தும் சீர்நிலைக் கிளவி
ஒளிநிலை உணர்த்தி ஒண்பொருள் கூட்டி
வெளிநிலை யியற்கலைத் தெற்றெனத் தோற்றும்
ஒளிஒலி நிலைத்திறன் ஒருங்குணர்த் தும்மே 533

ஒமெழுத் தொளிர்கலை ஒளிகலை ஒலிநிலை
ஒமெழுத் துள்ளுறும் ஒண்பொருள் ஆக்கம்
ஒமியல் ஒமியம் ஒளிநெறித் திறனே 540

மாநெறி மாக்கலை மாஇயல் ஒர்ந்தே
தூநெறி எண்ணெண் ணியல்தெரித் தேற்றம்

பாநெறி இசையியல் ஒளிஒலி யசைவும்
மாநெறி நுணுக்கத் தியல்நெறிக் கூறாய்
ஓங்குறும் ஐந்திசை ஏழிசை யாய்த்திகழ்
ஆங்குறும் நுண்மை அறிகலைத் திறனால்
ஒளிமொழி யுண்மைச் சிற்பக் கலைத்திறன்
வெளிமொழி ஒலியியல் ஒள்ளொளி நுட்பம்
கலையுற் றோர்ந்தே கணக்கியல் ஆய்ந்தே
நிலைபெறக் காண்டல் நெறியியல் நிலையே 544

ஓசை ஒலியியல் ஒளியியல் வெளியியல்
ஓமெழுத் தியலுறும் நெறிமுறைத் திறனிலை
ஆய்ந்துணர் திறத்தால் அகப்பொரு ளோர்ந்தே
ஆய்தல் நெறிமுறை எண்ணிலைக் கலையே 545

எழுநிலைக் கலைநிலை இனிதி னறிந்தே
எழும்ஒளி யியல்நிலை எண்ணின் ஓர்ந்தோர்
பழுதிலா நெறிக்கலை பார்நிலை ஆய்ந்து
விழுமிய பொருள்நெறி வேண்டுவ அறிவரே 556

ஒளிக்கதி ரியல்நெறி ஒண்மை யுணர்ந்தே
வெளிஒளித் திட்பம் விண்ணொளி நுட்பம்
உள்ளுற் றுணர்ந்தே உற்றறித் திறனால்
தெள்ளுறும் சீர்நிலை செயிரறத் தெரிந்தே
மெய்யியல் நிலைநெறி கதிர்க்கலை ஓர்ந்து
ஐயமுந் திரிபும் அற்றுறும் உணர்வால்
கதிரொளிக் கலைக்கதிர்க் கதிர்க்கிற் றியலும்
மதியொளித் திறனுறும் மாண்பா லறிந்தே
ஒளிக்கிற் றியலுறும் ஒளிநிலை உண்மை
வெளிஒளி யியல்நிலை உள்வெளி ஆய்ந்தே
ஓங்குறும் நிலையில் ஒளிர்பெற் றாய்ந்தே
ஆங்குறும் நெறிநிலை ஈங்குறும் திறனிலை
ஊங்குறும் நெறிமுதல் ஒருபொருள் உன்னி
தேங்குறும் ஒளிக்கிற் றியல்நிலை நுட்பம்
கதிரொளிக் கலையறிப் பேரறி வாற்றல்
கதிரியல் கதிர்க்கூற் றியலுறும் மூலம்

ஒளிக்கதிர் நிலையுறி மூல நுணுக்கம்
ஒளிக்கதிர்க் கணுக்கம் கதிர்க்கீற் றொளிநிலை
உண்மை யறியும் வன்மை நோக்கி
எண்மை எண்ணிலை இயல்நெறி மூலம்
நுகர்வும் உணர்வும் நுவலுறும் தன்மை
பகர்தல் இயற்றல் காண்டல் ஆய்ந்தே
ஒளிஒலி நுட்பம் ஒளியால் அறிந்தே
ஒளிக்கீற் றொளிநிலை இயல்அறி நிலையே 564

கதிரொளி நிலையுறும் ஒளிக்கதிர்ப் பெருவலி
கதிரியற் கீற்றொளி காண்டல் இயலே 574

தொல்லியல் உயிர்க்கலை உயிர்நிலை உணர்ந்தே
நல்லியல் புல்செடி கொடிமரத் தியல்நெறி
மூலமும் தோற்றமும் முறைமையின் உணர்ந்தே
கோலமும் குறிப்பும் குறிப்பின் உணர்ந்து
வித்தும் முளையும் விளைநிலை ஓர்ந்தே
முத்தும் ஒளியும் மூலத் தியலும்
கண்டுழி நிலைக்கலை கருத்தியல் ஆக்கம்
விண்டுழி உயிரினம் விதிமுறை நிலையியல்
நெல்லும் உயிரே நீரும் உயிரே
புல்லும் கல்லும் பெருநிலை உயிரே
செடிகொடி மரநிலை சீருயிர் ஓர்ந்தே
படிமிசை உயிரினம் உயிர்க்கரு மூலம்
உள்ளுற் றோரின் ஓவியம் சிற்பம்
தெள்ளுறுந் தமிழ்க்கலை தெளிமுறை தெரிந்தே
உயிர்நெறி உயிர்க்குறி உயிர்க்கலை உயிரியல்
உயிரினத் தோற்றம் மூல மெய்ப்பொருள்
திண்ணிதின் ஓர்ந்து செப்புவ கலைநிலை
நுண்ணிதின் உயிர்நெறி நுவலுங் காலை
உயிர்ப்பொருள் ஒன்றே ஒளிப்பொருள் ஒன்றே
உயிரும் ஒளியும் ஒன்றென் றுணர்ந்தே
மாற்றமும் ஏற்றமும் கண்டறி யாவுயிர்
ஆற்றல் சிறந்தே அமைவுறும் நல்லுயிர்

தொல்லுயிர் நல்லுயிர் ஒளியுயிர்த் தன்மை
வெல்லுயிர் விறுயிர் வெளியுயிர் உண்மை
எங்கும் விளங்கும் உயிர்த்திறன் அறிந்தோர்
பொங்கு செந்தமிழ்ப் பெருநிலை அறிவரே 579

உயிர்க்கரு மூலம் வித்தும் முளையும்
செயிரறத் தெரிந்தோர் சீர்சால் அறிவரே 580

வித்தும் முளையும் முளையுள் ளுயிரும்
நத்தி யறிந்தோர் நெறிநிலை அறிவரே 581

கல்லும் புல்லும் கலையறி வூட்டும் 584

நெல்லும் எள்ளும் நிலையறி வூட்டும் 585

செங்கதிர் ஒளியியல் சிருறத் தேர்ந்தே
பொங்கொலிப் பேரியல் பொருந்த உணர்ந்தே
ஒளிஒலி யியல்நிலை உற்றறி மதியால்
தெளிவுறத் தேர்ந்தே சிறொலி ஆயல்
ஒளிநிலைக் கலையுணர் உற்றுறும் திறனே 588

கருநிலை யியல்நெறிக் கணக்கறிந் தெண்ணும்
திருநிலைப் பேரியல் ஒளிநிலை உன்னி
பிண்டத் தியல்நிலை பெருங்கலை உணர்வோர்
அண்டத் தியல்நிலை மூலமென் றுணர்ந்து
அண்டமும் பிண்டமும் மெய்நிலைக் குறியியல்
கொண்டிலங் குறுநிலை ஒளிவெளி அறிவரே 594

முப்பொருள் முந்நெறி முக்கலை உணரின்
செப்பரும் மூலத் தியல்நிலை நுட்பம்
ஒப்புறத் தெரிந்தே உண்மை உணர்வொளி
எப்புறுந் திறனால் எய்தலு மாகி
ஒளிஒலி யியல்நிலை ஓங்குறும் ஆற்றல்
வெளிஒலிக் கலைநிலை அறிதலும் எளிதே 595

ஒருபொருள் ஒளிப்பொருள் ஓங்குறும் பொருளும்
வருபொருள் இயற்பொருள் எண்பொருள் நிலையும்
தெள்ளத் தெளிந்தே திண்ணிதின் உணரின்

வில்லூறும் ஒலியே பெருநிலை மூலம்
ஒளியால் பல்பொருள் உயிர்ப்பொருள் நுண்மை
வெளியா லறிந்தே உள்ளூற் றுணர்ந்தே
தெளிகலை இயற்கலை இயல்நெறி சேர்ந்துறும்
ஒளிமொழி யியல்நிலை உரைநெறி முறையே 597

தொழிலியல் நெறிக்கலை தொன்மை துலக்குபு
எழிலும் வனப்பும் இயற்றிறன் ஆய்ந்தே
ஓவியம் புனைதிறன் ஒளிமுதல் செழுங்கலை
மேவுறும் சிற்பம் நல்லியல் காலம்
ஒளியால் நிலையுறும் ஒலியலை ஓசை
தெளிவுறும் இசைநிலை செவியுறுங் காலம்
தேர்த்துகள் பொழுதின் எட்டுறும் ஒருகூர்
நேர்நிலைக் காலம் நிலைபொழு தியலென
தெளிவுணர் வுற்றே சிறுபொழு தியலும்
ஒளியுணர் வோங்கிப் பெரும்பொழு தறிந்தே
ஒலியியல் ஓசை ஒளியியல் இசைநிலை
களியுறக் கூர்ந்தே கலைநிலை ஆய்ந்தே
காலங் கண்டுணர் கருத்தறி வுற்றே
மூலப் பொருண்மை முன்னுவ நாடி
நாடுறுங் கால நுண்மை யறிந்தே
தேடுறுங் குறித்திறன் செயல்நிலை உணர்வு
உழைப்பியல் நெறியே தொழிலியல் மூலம்
உழைப்புறும் பெரும்பயன் தொழிலியல் நெறியே 598

ஒளிமுதற் பொருளாய் நிலைக்கலை யாய்ந்தே
வெளிமொழி யியல்நிலை ஒலித்திற னோர்ந்தே
களிமொழி நுட்பங் கணக்கியல் தெரித்தே
வெளிஒளித் திறனிலை மெய்யிய லோர்ந்தே
நுட்பங் காண்டலும் திட்பம் பொருத்தலும்
ஒட்புறுங் கலைதெரி ஒள்ளிய நுணுக்கமே 625

ஒளியறி வுற்றே எழுத்தியல் நாடி
வெளியறி வுற்றே எண்கலை யாய்ந்து
ஒளிவெளி யறிவா லெண்ணிலை தேர்ந்தே

ஒளியுணர் மூலம் உட்கலை நுட்பம்
களிமொழி இசைநிலை ஐந்திசைத் தெரிவும்
ஒளிமொழி ஏழிசை உணர்வா லறிந்தே
ஒலியிசை நுட்பம் இசைக்கலை மெய்த்திறன்
ஒலிஒளி யலைநிலை மெய்யுறத் தேர்ந்தே
ஒளிமுதல் நிலையென் றுன்னுறுந் திறத்தால்
மெய்யியல் மெய்க்கலை நுண்ணிதி னோர்ந்தே
உய்வகை நெறிக்கலை உணர்தல் வழக்கே 626

மூலப் புள்ளிச் சுழலும் நுண்பொருள்
கால விரைவின் கணக்கிய லறிந்தே
இம்மிப் பொழுதும் இயல்நிலை யோர்ந்து
செம்மைப் பொழுதியற் கால மறிந்து
ஒளியா லுணரும் ஒண்கலை நுட்பம்
வெளியால் நோக்கும் எண்கலைத் திட்பம்
ஒர்ந்துணர் நெறியால் எண்ணெழுத் தியற்கலை
நேர்ந்துறும் நிலைக்கதிர்க் கலைக்கதி ரொளியியல்
ஒளிநிலை ஒளித்திறன் ஒளியிய லாய்ந்தே
ஒளியுள் ளொளியாய் ஓங்குறுந் திறனாய்
ஒளிநிலை மூலத் தெழுதருங் கலையாய்
வெளிஒளி இயல்நிலை விளக்கம் ஆய்ந்தே
அகவெளிப் புறவெளி நுட்பந் தேர்ந்தே
மிகுஒளிக் கலைநிலை மாண்புறுந் திறத்தால்
ஓவியங் காண்டல் சிற்பம் படைத்தல்
மேவு நல்லிசை இசைத்திறன் காணல்
செந்தமி ழைந்தியல் முந்துறும் மரபாய்
வந்துறும் பல்கலைத் தொழில்நிலை யாயல்
தொழிற்கலை மொழியியல் தொழிலியல் எழிலியல்
விழியியல் வெளியியல் விண்ணியற் கலையென
எண்ணியற் கலையால் எழில்பெற நோக்கிக்
கண்ணுற் றொளிதருங் கதிர்நிலம் ஆய்ந்தே
விண்ணுறும் ஒளிக்கதிர் நிலைநலம் தேர்ந்தே
எண்ணுறும் இசைநிலை ஓவியக் கூறொளி

ஓவிய மூலம் ஒளிதருஞ் சிற்பம்
மேவுறும் ஐந்திசை மிகையிலா நெறியால்
ஐந்தெழுத் தியலா லமைந்துறுஞ் செந்தமிழ்
ஐந்தியற் கலையாய் நெறிதரு மாற்றல்
அறிவியற் கலையாய்க் குறிநெறித் திறனாய்
நெறியினின் றுணர்ந்து மியல்தரு மாற்றல்
ஒதற் கெளிதாய் உணர்வொளி யாற்றல்
ஒதரும் பொருள்நிலை உணர்த்து மெய்ப்பொருள்
மெய்யியற் கலைதெரி மெய்ந்நெறி கண்டாங்
குய்வகை யுணர்ந்தே உய்த்துணர் நெறியாய்
காண்டல் செத்தமிழ்க் கலைநிலை யொளியென
ஆண்டுறும் ஒளிநிலை ஈண்டுறுங் கலைநிலை
வேண்டிய நோக்கி விரைவின் எய்தல்
ஈண்டுறுந் திறத்தால் அகவொளித் திறனால்
உயர்விண் முகிழ்க்கும் ஒளிநிலைப் பெருங்கலை
உணர்வுறும் மாத்தமிழ் ஒளிநிலை உரைக்கும் 632

செழுங்கதி ரியலொளி எழுநிலை யாய்ந்தே
விழுநிலை இயல்தெரி யாற்றலு மோர்ந்தே
பழுதிலா யுணர்வால் பேரறி வுற்றே
விழுப்பொருள் நிலைக்கதிர்க் கதிரொளி நோக்கி
ஒளிக்கதி ராற்றல் கலைக்கதி ரியல்திறன்
வெளியொளி நுணுக்கம் நெறியியற் கலையாய்
ஒளியின் மூலம் ஒங்குறுந் திறனிலை
ஒளியியற் பெருங்கலை நுண்கலை நுணுக்கம்
செழுங்கதிர் வண்ணம் எழுநிலைக் கதிர்நிலை
விழுமம் நோக்கி மெய்த்திறக் கணிநிலை
இயல்பி னோர்ந்து எண்ணுறத் தேர்ந்தே
மயலறு ஒவியமோ மாக்கலை நுட்பம்
கதிரொளி யாற்றல் கணக்கியல் நிலைதெரி
கதிர்நிலை இயலால் கிற்றொளி யாக்கம்
அகத்தி னுணர்ந்தே அகப்புறம் விரித்தே
மிகுநிலை காண்டல் சீரறி வாற்றல்

பேரறி வுற்றே பெருங்கலை யொளியியல்
நேரறி நுட்பம் நிலைநெறி நவிலும் 636

எண்ணெறி நுட்ப மியைபுறக் கண்டே
எண்ணின் றிறனறி மெய்க்கலை யியலும்
விண்கலை மூலம் மெய்ப்பொரு ளாய்ந்துணர்
விண்கதி ரொளியியல் மெய்யுறுந் திறனாய்
ஒளிநிலைக் கதிரியல் உணர்ந்துறு மாற்றல்
ஒளியியல் வண்ண மோங்குறும் மெய்க்கலை
ஒளியுணர் திறனா யொளிப்பொருள் மூலம்
ஒளிக்கலை யியற்கலை யொலிக்கலை யிசைக்கலை
தெளிவுற் றோர்ந்தே சிரறி வுற்றே
ஒளிமொழி யிசைக்கலை மெய்ந்நெறி நுட்பம்
தெளிவுறக் காண்டல் சீர்த்தகு நெறியாய்க்
கலைநெறி நுணுக்கம் அறுபான் நான்கியல்
நிலைநெறி யியலாய் நெறிமுறை யோர்ந்தே
மொழிநிலைக் கலைநிலை முட்டறத் தேர்ந்தே
மொழியி னியலொளி ஒலிநிலை யார்ந்தே
ஒளிஒலித் திறனிலை உணர்வா லறிந்தே
வெளிநிலைத் திறனிலை உண்மை யாயலும்
கலைமொழி மாந்தர் கருத்தறிந் தியலும்
நிலைமொழி யாற்றல் நெறிப்படக் கிளந்தே
தலைமொழி யியல்தெரித் தன்னிலை சாற்றுமே 642

ஒளிமதி யாற்றல் கலைநெறி நல்கும் 664

எண்பொருள் இலங்குறும் நுண்பொருள் காண்டுழி
விண்பொருள் ஒளிநிலை விளங்குற ஆய்ந்தே
தெரிநிலை யியற்பொருள் தெள்ளிதின் விளங்கும்
விரிநிலைக் கலைநிலை அறுபான் நான்கும்
ஒங்குறும் நெறித்திறன் உள்ளு ளுணர்ந்தே
தேங்குறும் ஒளிப்பொரு ளொலிப்பொருள் தேர்ந்துழி
மெய்நிலை மெய்ப்பொருள் மெய்யுணர் வோங்கி
மெய்யியல் நிலைபெறும் விரிநிலை ஆற்றல்
பொருந்தக் கண்டே பெருக்கலும் சுருக்கலும்

ஒருநிலை ஆற்றல் விரிவுறும் திறனே
அறுவகை நிலைகலை ஆக்கமுள் ளோர்ந்தே
உறுவகைப் பயன்தெரி ஒளிநிலை தெரிந்தே
பெறுபய னைந்திய லெண்ணிலை யாக்கம்
உறுநிலை மூலத் தெழுநிலை நோக்கி
ஐங்குடி யியலறிச் செங்குடி பைங்குடி
ஐங்கூர்க் கருங்குடி வெண்குடி யாகி
கோல நிலம் குறிக்கு மாக்குடி
மூலத் தியலால் முயன்றினி தோர்ந்தே
ஐவணத் தியல்பும் ஐங்குடி மாண்பும்
ஐந்நெறி மூலம் செந்நெறி யாய்ந்தே
அறுவகைத் திறநிலை இயல்நிலை உன்னி
உறுநிலை ஆறில் மெய்நிலைச் சேயொளி
தாயொளி தீயொளி சேயொளி நோக்கிச்
சேயொளி யியல்நிலை மூன்றுறுஞ் சுடரொளி
நோக்குபு நோக்கி நுணுக்குற் றெண்ணி
ஆக்குறு மியலா லறுபா னான்கில்
பெருவெளி மூலப் பெருங்கலை ஆர்ந்து
தருவெளி ஐந்நிலைக் கருத்துறத் தேர்ந்து
சிற்றலை எண்ணெண் கலைநிலை தேர்ந்து
உற்றுறும் மெய்க்கலை உண்மை யுணர்ந்தே
பன்மொழி படைக்கும் மென்மொழி தமிழொலி
நன்மொழி நற்றமிழ்ச் சிற்பமா மொழியொலி
தொன்மொழி ஒவியச் சிற்பத் தமிழொலி
தென்மொழி ஒம்மொழி விண்மொழி யியலாய்
கண்டுணர் கருத்தால் கொண்டுண ராற்றல்
விண்டுணர் மெய்மொழி விளங்கக் கேட்டே
உய்த்துணர் நெறியா லொருபொருள் நெறிநிலை
மெய்க்கலை மெய்ந்நெறி யியல்நிலை ஆய்ந்தே
செம்பொருள் செந்நெறி சீர்மை நோக்குபு
ஐம்பொருள் ஆற்றல் அகப்பட நிறீஇ
எழுத்தொலி எழுத்தொளி இயைபின் அறிந்தே

வழுத்து மாநெறி விளம்புமெய்க் கலையே 679

விண்மண் ணியல்நிலை வெளிநிலைக் கலைத்திறன்
எண்கலை நுட்பம் எளிதி னுணர்ந்தே
எண்ணிய லெண்திற னெண்மொழி யாக்கம்
திண்ணிதி னுணர்ந்தே சீரறி வுற்றே
நேர்மை சீர்மை நிலைபெற் றுணர்ந்தே
ஓர்ந்துறு மாற்ற லொளிபெறும் நிலையால்
அகவிண் ணியக்கம் அறிந்துணர் ஆற்றல்
மிகுகலைத் திறனாய் மெய்யறி வுணர்த்தி
எண்ணிலை ஐந்தியல் நுண்ணெறி கூட்டும்
விண்ணொளி நோக்கல் விரத் தியலாய்
பொறிபுல னியனிலை பொற்புறத் தெரிந்தே
நெறிநிலை கலைநிலை முறைமையி னுணர்ந்தே
அறிகலை உண்மை ஆக்கஞ் செறிந்தே
ஒளித்திற நுட்பம் ஒலித்திற நுட்பம்
ஒளியெண் கலையி லோங்குபு ஓங்கி
ஓங்குறும் ஓம்மொழி ஓம்கலை ஓம்இசை
ஓங்குறும் ஓம்ஒலி உயிரொளி ஓம்ஒலி
ஆங்குறும் ஈங்குறும் அமைவுற் றறிந்தே
ஊங்குறுந் திறனிலை உன்னி உள்ளி
அறுபான் நான்கின் நிலைநெறி யாய்ந்தே
உறுமுறையி யற்கலை உன்னுவ துள்ளி
எண்ணெண் ணியலின் மூல நுட்பம்
எண்ணியல் நாற்புறத் தியல்நெறி விளக்கம்
நோக்குறும் நோக்காய் நுட்ப முதற்றாய்
ஆக்குறும் கலைநிலை அறுபான் நான்கே 681

எழுநிலை எழும்ஒலி எழுங்கலை எழும்ஒளி
எழும்உண ரைந்நிலை யியல்பிற் றெரிந்தே
எழுகலை யுணர்வொளி எழுநெறி யாற்றல்
எழுஞ்சுட ராக்கம் எண்ணிலை ஆயல்
எண்ணெண் கலைத்திறன் நுண்ணிதின் உணர்ந்தே

எண்ணத் துணர்வே இயல்நெறி இலங்கி
எழுச்சி எழுதல் உணர்நிலை முதலாய்
எழுங்கலை நெறிதரும் செழுங்கயல மொய்ப்பொருள்
உள்ளு ளுணர்ந்தே உறுபயன் தெரித்தல்
விள்ளுங் கலைத்திறன் மெய்யுணர் வுற்றே
மூலப் புள்ளி முயலுறுந் திறனிலை
காலங் குறித்தே கணக்கியல் நோக்கல்
மூலத் தியலால் வலமிடச் சுழல்நெறி
கால மாவிசை விரைவியல் குறிக்கும்
செம்பொரு ளுண்மை ச்சீருறத் தெரிந்தே
செம்மை மாநெறி செறிநிலை யோர்த்தே
நிலைநெறி ஆற்றல் நெறிப்பட நிறீஇ
கலைநெறி மெய்ம்மொழி கருத்துற் றோர்ந்தே
தலைமொழிச் செந்நெறி தன்னிலை யுணர்ந்தே
நிலைமொழி வருமொழி மொழியியல் கூர்ந்தே
எழுமுணர் வொன்றே மொழிக்கலை ஆற்றல்
எழுந்திறன் நெறிநிலை எண்கலை உணர்த்தும்
எழுமொளி எழுமொலி எழுமுணர் வாய்ந்தே
விழுமிய தமிழ்மொழி மூலத் தியலே 682

ஒளிப்பொருள் மூலத் தியல்வெளி யாய்ந்தே
வெளிப்பொருள் ஒளிநிலை விரைவுற நோக்கி
ஒளிமொழி ஓசை ஒலியியல் கருதி
வெளிமொழி ஓம்நிலை விளங்கக் கருதி
கருத்துறும் ஓம்உரு ஓமியல் ஆற்றல்
பொருந்த நோக்குழி எட்டுறுங் கலைநிலை
எண்ணெண் ணியலா லியலுற நோக்கி
எண்ணு மெழுத்து மியைபின் ஆய்ந்து
பண்ணு மொலியும் நெறிமுறை கூர்ந்து
கண்ணுங் கருத்து மொன்றுறும் ஆற்றலால்
நுண்ணிதி னுணர்ந்து நோக்குபு நோக்கி
ஆணிற் பெண்ணும் பெண்ணி லாணும்
காண்நிலை உயிர்நெறி ஒன்றென் றோர்ந்து

கருநிலை இயல்நிலை கருத்துற் றாய்ந்து
ஒருநிலை பிண்டம் அண்டம் உன்னி
வருநிலை அண்டம் பிண்டமும் நிலைநெறி
பெருநிலை யியலால் பெட்புற நோக்கி
அறுபான் நான்குறும் ஆற்றல் மூலம்
உறுநெறிக் கலைஒளி உண்மை விளம்பி
மூல முதலா யாறும் நோக்கிக்
கோலத் தெழிலக விண்ணெறி நோக்கி
குறிப்பி னுணர்ந்து குறிப்பி னாய்தல்
நெறிமுதற் கலைநெறி எண்ணெறி வழக்கே 684

எண்டிசை மூலத் தென்றிசை மக்கள்
அண்ட நுணுக்கமும் பிண்டத் தியலும்
கொண்டுணர் குறிப்பின் கூர்த்த மாமதி
விண்டுணர் அறிவோர் மெய்த்தக வாற்றல்
கொண்டுணர் தென்றிசை தென்புலச் சிரோர்
சீரோர் சீரறி சீர்மைச் செந்நெறி
நேரோர் நெறியால் நிலைபெற நோக்குபு
அண்ட முணர்ந்தும் அறிவறி வாய்தல்
மண்டுபே ரறிவன் மாக்கலை உணர்வே
விண்ட மாக்கலை விள்ளுநற் றமிழ்க்கலை
பண்டுறுங் கோள்நிலை கோளம் ஞாலம்
அண்டம் வானம் விண்ணாடு விண்ணிலை
மண்டும் வெளிப்புற ஒளிநிலை ஆற்றல்
வானம் வானத் தொலியிடை ஓசை
வான மூலமும் வகையுற் றாய்ந்தே
விண்ணி ளியல்நெறி விண்ணொளிக் கலைநெறி
விண்கதி ரொளிநிலை வெளிநிலை ஒளியிடை
ஒளியுறு மொலியு மொலியுறு மொலியும்
ஒளியிடை நுட்பம் ஒலியிடை நுட்பம்
ஒளிஒலி மூலக் கருநிலை நுட்பம்
ஒளிஒலி ஓசை ஒலியியல் ஆற்றல்
கருநிலை மூலக் காற்றியல் ஆற்றல்

பெருநிலை காலக் கணிநிலை தேற்றம்
கொண்டுணர் குறிப்பால் விண்டுற நோக்கின்
அண்டம் ஆய்தல் அறிவர் கலையே 699

ஓவியா லுணரும் மெய்க்கலைச் செந்நெறி
வெளிமொழி ஓம்நிலை ஓம்கலை ஓம்மறை
தெளிவுறத் தேர்ந்தே செந்நெறி யாற்றலால்
ஒளிக்கலை ஒலிக்கலை நிலைநெறி தேர்ந்தே
மூலத் திறத்தியல் முன்னி யுணர்ந்தே
காலப் பெருநிலை கணிப்பின் ஆய்ந்தே
செவ்வி யியல்நிலை தெரிமுறை ஓர்ந்தே
ஒளிநிலைத் திறனா லுணர்வுறும் மெய்நெறி
வெளிநிலை யியல்கலை விளம்பற் பாற்றே 713

ஒளியியல் நெறிக்கலை வெளியியற் றிறனுறும்
ஒளிக்கலை ஒலியியல் ஒளியொளி யுணர்ந்தே
அகவொளி மூலம் புறவொளி யாய்ந்து
மிகும்ஒளி புகும்ஒளி நேரொலி ஆய்ந்தே
ஒளியால் எழும்திறன் ஒலிநிலைத் திறனாய்
ஒளியே மூலம் ஒளியே ஆக்கம்
ஒளியே நுட்பம் ஒளியே திட்பம்
திட்பம் நுட்பம் செறிந்துணர் ஒளியால்
முட்டறும் ஒலிநிலை ஓசை உருவாய்
எழுத்தியல் ஆக்கம் வரியியல் கோடே
வழுத்தும் கோடே நேர்க்கோட் டியல்நெறி
கோட்டுறும் ஒளியியல் எழுத்தியல் நெறியாய்க்
கோட்டுறுங் குறியொலி எழுத்தியல் ஓசை
எழுத்தியல் ஒலிநிலை ஒளிக்கலை மூலம்
வழுத்து மாவிண் முறைநெறி தேர்ந்தே
எண்ணெண் ணியலறி கலைநெறி மூலம்
விண்ணொளி விண்ணொலி மிகுநிலை நோக்கி
ஓசை ஒலித்திறன் ஒளிக்கலை மூலம்
மாசறத் தெரிக்கும் ஒளிக்கலை யாக்கம்
எழுத்தியல் சிற்பம் எழுத்துறும் மெய்க்கலை

எழுத்திய லொளிநிலை ஒளியியல் நிலையாய்
குறிகுறி நிலையியல் வரைவிய லெழுத்தாய்
குறிஎழுத் துறுநிலை எழுத்தியல் சிற்பமாய்
நெறியறி முறையால் மரபியல் வகையால்
அறிகலை ஒளியென வரைவதும் வழக்கே 721

ஐந்துறும் நிலைநெறி அறுவகை ஆநிலம்
முந்துறும் முறைக்கலை இயைபுற் றோர்ந்தே
வந்துறும் கலைவளர் நெறிக்கலை யியலால்
தந்த மாக்கலை தனித்திறன் நோக்கி
எண்ணியல் எண்ணெண் கலைத்திறன் ஆக்கம்
தெண்ணிலை மூலத் தெழுநிலை சிர்த்திறன்
மூலக் கனல்நிலை முன்னிய நெறியால்
காலத் தியல்நெறி கணக்கிய லாய்ந்தே
உள்ளுறும் விண்ஒளி உள்ளுற் றோர்ந்தே
தெரிந்துறும் அறுவகை ஆநிலம் ஆய்ந்தே
விண்ணுறுங் காற்று முச்சுறும் நிலையால்
தெரிந்துறும் மெய்க்கலை சிர்நிலைத் திறந்தால்
செங்குடி பைங்குடி சிறுகுடி பெருங்குடி
நுண்குடி கருங்குடி குடிநிலை மூலம்
ஐங்குடி யியலால் அறுநிலை யாகித்
தங்குறும் ஆறு ஆநிலத் தியல்நெறி
நுணுக்கம் ஆய்ந்தே நுவல்நிலை யோர்ந்து
கணுநிலை ஆறு ஆநிலத் தாய்ந்தே
உடலொளி உயிரொளி உயிர்ப்புற் றாய்ந்தே
அடலொளி நேரொளி ஆய்கலைத் திறனாய்
ஒளிநிலை மூலம் ஒளிநிலை தேர்ந்து
வெளிவளி யியல்நிலை மெய்நெறி ஓர்ந்து
ஒளிக்கலை யியலா லுள்ளியல் தெரிநிலை
ஒளிநிலை மூலத் தியல்நிலைப் பொருளே 725

ஐந்திசை ஏழிசை செந்தமி ழிசைக்கலை
முந்துறும் சிற்பம் ஓவிய மரபியல்
வந்த தொல்கலை வளரிசை நோக்கி

செந்தமிழ்ச் சிற்பம் சீரியல் ஐந்திசை
இசைநிலைக் கலைநிலை எண்ணியல் திறத்தால்
வசைதீர் மொழிநிலை ஒலியியல் ஆற்றல்
இசைக்கலை ஒலிநிலை ஒளிநிலை இயலறி
இசைஒலி இசைநெறி முறைநெறி யாய்ந்தே
ஒன்றிரண் டைந்திசை ஏழிசை நுட்பம்
நன்றுறும் மூலத் தெழுமிசை காலம்
காலம் தாளம் கருத்துற் றொன்றல்
மூலத் தெழுநிலை முறையின் ஒர்ந்து
ஒன்றல் உணர்தல் ஒன்றிய நிலையுறல்
நன்றுறும் உணர்நிலை ஒளிநிலை தோற்றி
ஒளிநிலை தோற்றுறும் ஒலிநிலை எழுப்பி
வெளிநிலை ஒலிக்கலை விரைவுறும் நல்ஒலி
இசைநிலை மூலம் எழுநிலைக் காலம்
இசைமுறை எண்ணிலை இயலறி வார்ந்தே
ஓம்ஒளி ஓம்ஒலி ஓம்கலை ஓம்நெறி
ஓம்இயல் இசைநிலை ஒளிநிலைக் கலையே 737

ஒளிஒலித் திறனிலை ஓங்குற வாய்ந்தே
வெளியியல் விண்ணியல் விரிநிலை உணர்ந்தே
தெளிநிலைக் கலைத்திறன் சீரியல் நோக்கால்
ஒளிஒலி யியற்றிறன் ஓங்குறும் நேர்நிலை
ஒள்ளிய நுண்கலை நுணுக்கம் ஒர்ந்துழி
தெள்ளுறும் உணர்நிலை சீருறஞ் செயலால்
கலைநிலை அறுபான் நான்கியல் ஒர்ந்தே
நிலைநெறி எண்ணியல் நவிலல்மா நெறியே 789

தண்டமிழ் இயலே தனிப்பெருங் கலைத்திறன்
வண்டமிழ் மொழியியல் வளங்கெழும் மொழியியல்
ஒண்டமிழ் மூலத் தொளிநிலை ஆற்றலாய்
எண்டமிழ் எண்ணிலை இயலுவ நோக்கி
அண்டமும் பிண்டமும் ஆய்ந்தறி நுட்பம்
அண்டம் அளக்கும் அருந்தமிழ் மொழிக்கலை
கோளமும் கோளும் குறித்தறி நெறியால்

நாளும் காலமும் நவையற நோக்கிக்
காலம் உழைப்பாய்க் காலமே உணர்வாய்
கால மூலமும் மூல காலமும்
குறிப்புற் றாய்ந்து கூர்மதி யியலாய்
நெறிமுறைச் சிற்றவை நின்நிலை யாய்ந்தே
பெருவெளி யுறுநெறி முருகுறும் பேரொளி
ஒருவெளி அகவின் னொளிதரும் முருகொளி
அறுசுடர்ப் பேரொளி அறுநிலத் தியல்நிலை
உறுநெறி முருகுறும் ஒமுறும் ஒளிக்கலை
ஒம்நெறி ஒம்உரு ஒம்ஒளி ஒம்ஒலி
ஒம்இயல் ஒம்கலை ஒம்மறை யியலாய்
தண்டமிழ் மூலம் தனித்தமிழ்க் காலம்
எண்டமிழ் அளவை விரைவியல் சுழல்நெறி
ஐயைந் தியலால் அமைவுறும் ஆற்றல்
மெய்யுணர் மேனிலை முருகுறும் பேரொளி
அகவொளி அகலொளி அமைவுறக் கண்டே
மிருமொளித் திறனால் மென்றமிழ் உணர்ந்தே
இன்றமிழ்க் கலைநெறி இயல்புற் றாய்ந்தே
தென்றமிழ்ச் சிற்றவை முருகுறும் இயலே 798

முருகே மூலப் பேரொளி சிறொளி
முறுகுறும் பெருவெளி சிற்றவை ஆய்ந்தே
திருவுறும் எண்ணெண் ணியலுறும் சீர்நிலை
உருவுறும் பேரழ கொளிநிலை நோக்கி
மூலக் கனலால் மூட்டும் அனற்பொறி
காலங் காட்டுங் கனிநிலைக் கனலொளி
ஒளிநிலை ஆறும் ஒமுறும் ஒலியும்
வெளிநிலை அகவின் னொளியுற நோக்கின்
செழுந்தமிழ் மெய்ப்பொருள் சீர்நெறி திருநெறி
எழுந்தமிழ் கலைத்தமிழ் சிற்ப மாத்தமிழ்
சிற்றவைப் பெருவெளி திருநெறித் தீந்தமிழ்
பெற்றுறுங் கலைநிலை பைந்தமிழ் பூந்தமிழ்
உணர்வின் ஒங்கி ஒளியின் நோக்கி

உணர்நிலைக் கலையால் ஓசையு மாய்ந்தே
ஒளிஒலி யியற்றிறன் உள்ளத் தோர்ந்தே
வெளிஒளிக் கலையால் விண்ணெறி யாய்ந்தே
ஓம்மறை ஓம்நெறி உணர்வின் நோக்கி
ஓம்கலை யியல்தெரி செந்தமிழ் மெய்க்கலை
தென்கலை தென்மொழி தென்னிசைச் சிற்பம்
தென்றல் தென்புலம் தென்றமிழ் ஓவியம்
தென்னிலை சீர்நெறி திருநெறிக் கட்டிடம்
தென்னியல் கலையால் செறிதரும் செந்தமிழ்
தென்றிசை மொழியால் இயல்தரும் தமிழிசை
மன்றுறும் ஆடலான் மாநெறி நோக்கி
ஐந்தியல் ஐங்கலை ஐந்நெறி நோக்கி
வத்துறும் மூலத் தமிழியல் நெறியே 799

உள்ளுணர் வோங்கி உயிரொளி நாடி
தெள்ளு மாத்தமிழ் இசைநிலை யறிந்தே
விள்ளுபே ரறிவால் ஓம்ஒளி நாடி
தெள்ளிசை ஓமிசை ஓம்ஒளி கூடி
அகவிண் ணொளியியல் ஐம்புலத் தாய்வோர்
மிகுபே ரறிவால் மென்றமிழ் உணர்வரே 807

தென்றமிழ் ஐந்தியல் பண்டுறும் மாத்தமிழ்
தென்றிசை எண்டிசை மூலமென் றோர்ந்தே
தென்மொழி பன்மொழி மூலமென் றாய்ந்தே
நன்மொழி உயிர்க்குல முதன்மொழி தமிழென
தென்றமிழ் ஓம்ஒளி ஓம்ஒலி அறிந்தோர்
நன்றுறும் உணர்வால் நவிலுவ தியல்பே 810

ஒளிக்கலைத் திறணிலை உள்ளுற் றாய்த்தே
ஒளிவெளி யியல்நிலை நுட்பம் தேர்ந்தே
அண்டமும் பிண்டமும் அமைவுறக் காட்டி
விண்கலை நுட்பம் மண்கலைத் திட்பம்
எண்கலை யாற்றலால் இனிதின் நாடி
தண்டமிழ் ஒளிநெறி சாற்றல்மா நெறியே 826

நெறிப்பொருள் ஆய்ந்து நிலைப்பொருள் தேர்ந்து
குறிப்பொருள் நோக்கிக் குறிநிலைக் கலையாய்
அறிகலை இயல்நெறி ஆற்றலும் உணர்வும்
அறிவுற் றாய்ந்தே மெய்க்கலை தேர்ந்து
எழுத்தியல் மூலத் தென்னிலை ஆய்ந்து
வகுக்கு மாநெறி அறுபான் நான்கியல்
செந்தமிழ்ச் சீர்நெறி செழுங்கலைத் திறனாய்
முந்துறும் செந்தமிழ் மெய்க்கலை மூலம்
ஓங்கலை ஓம்நெறி ஓம்ஒளி ஓம்ஒலி
ஓம்குறி ஓம்நெறி உற்றினி தோர்ந்தே
மொழிமுதல் மூலம் ஓமெனத் தேர்ந்தே
மொழிக்கலை விண்மொழி எண்மொழி ஓமென
ஓம்மறை ஓம்நெறி ஓமியம் ஓவியம்
ஓமியல் பொருளாய் ஓவியம் சிற்பம்
ஓவிய மூலம் சிற்பமாக் காலம்
தேவியற் கலையாய்ச் செந்தமிழ் நெறிக்கலை
செந்தமிழ் ஓவியம் நெறித்திகழ் சிற்பம்
வந்த மாக்கலை தொல்மர பியலாய்
மயன்நெறி நோக்கும் மாண்கலைத் தமிழ்நிலை
மயன்கலை அறிவியல் விண்கலைத் தமிழே 836

செழுந்தமிழ்க் கலைத்திறன் சீர்சால் ஐந்தியல்
எழுமுணர்க் கலைநிலை இயல்புற நோக்கி
ஐயியல் நிலையால் உணர்நிலை ஆக்கம்
மெய்க்கலை மூலப் பொருள்நிலை தேக்கம்
எழுத்தும் சொல்லும் பொருகட் டணியும்
வழுத்துமைந் தியலாய் வகையுறு மைந்தியல்
மொழியியல் நுட்பம் முன்னுறும் திட்பம்
மொழிக்கலை யாக்கம் மூலமா முதலாய்
தென்னிலம் தென்கலை தென்னிலை இயலாய்
தென்புலம் தென்றமிழ் தென்றல்மா நெறியாய்
இயற்றமிழ்க் கலைநிலை இசைநிலை கலைத்தமிழ்
மயலற நோக்கி மதியுணர் வுற்றே

அகப்பொருள் புறப்பொருள் ஆய்ந்துறும் உணர்வால்
அகப்பொருள் மூலம் அகவின் ஒளிநிலை
நேருற நோக்கி நிலையுறக் கண்டே
சீருறத் தெரிந்தே திகழியல் தன்மை
ஏருறும் இயல்நிலை எண்ணிலைக் கலையாய்
மொழிநிலை மூலம் முப்பொருள் ஆக்கம்
மொழிநிலை கலையே மெய்ப்பொருள் இயலாய்
சிற்பமும் சீர்சால் திருநெறி கலைநெறி
ஒப்பிலாத் தவளை மாநெறி இயலாய்
சிற்றவைச் செழுங்கலை செழுந்தமிழ்ப் பொருளாய்
உற்றபே ரறிவால் ஓங்குறும் நுட்பம்
தமிழ்க்கலை யியலென தமிழ்நிலைப் பேரியல்
தமிழ்த்திறத் தாக்கம் தன்நிலைக் கலையாய்
உள்ளொளி நோக்கி உணர்வியல் ஆய்ந்தே
தெள்ளொளிச் சீரொளி பேரொளி ஈறாய்
உள்ளுதற் கரிய விறோளி ஈரொளி
ஒள்ளொளி ஒளிஒலி ஒளிமுதல் கலையாம்
ஒளியே மூலம் ஒளியே காலம்
ஒளிக்கலைப் பொருளாய் ஒளிமுதல் இயலாய்
ஒளிமுதல் காலம் இடம்பொருள் ஆற்றல்
ஒளிநிலை ஆய்ந்தே ஒலியியல் தேர்ந்தே
ஒளிஒலி இயற்றிறன் நுட்பம் தாய்ந்தே
வெளிஒளிக் கலைநிலை விண்ணிலை மண்ணிலை
வெளிநிலை வானிலை விசும்பியல் ஆய்ந்தே
ஒளிக்கதிர் கதிரியல் கதிர்க்கலை தேர்ந்தே
கதிரொளி கதிரியல் கதிரலை கதிர்நிலை
கதிருறும் ஆற்றல் கலைநிலை அறிவியல்
ஒளிக்கதிர் நுட்பம் ஒளிக்கதிர் திட்பம்
ஒளிஒலி மூலத் தியல்நிலை ஆய்ந்தே
ஒளிக்கலை இயலால் பெருங்கலை நுட்பம்
ஒளியியல் நெறியாய் உரைக்குமா நெறியே 837

அசைநிலைக் கலைநிலை நசைதீர் ஒலியும்
அசையொல் அலையசை அசைஅசை ஒலியியல்

ஒலிநிலை நோக்கி ஒசை உணர்ந்தே
ஒலியியற் பொருள்நிலை உணர்வுறுந் திறத்தால்
கலைநிலை முழுதும் கணக்கியல் ஆய்ந்தே
நிலைநெறி யியல்தெரி எண்ணியல் மூலம்
மூலம் காலம் முறைமையிற் றேர்ந்தே
கோலப் பொருள்நிலை குறிப்பின் ஓர்ந்தே
எட்டெட் டியல்நிலை எண்ணிலைக் குறிநிலை
எட்டே யியலாய் ஐந்நெறி சூர்ந்தே
மெய்ப்பொருள் தெரிநிலை விளக்கமும் நுணுகி
மெய்யியல் மூலம் அணுஅணு ஆய்ந்தே
ஒருநிலை இருகலை முந்நெறி நாற்புறம்
திருவுறும் ஐந்தியல் திருநெறி நோக்கி
ஐயைந் தியலும் ஆற்றலும் விரைவும்
ஐங்கலை ஐந்நெறி அமைவுறத் தெரிந்தே
நுட்பமும் திட்பமும் நெறிக்கலை நுணுக்கம்
எட்டுறும் திறனிலை விளக்கங் கண்டே
நிலையும் கலையும் நெறியாற் றேர்ந்தே
மலைவற வோர்ந்து மயநெறி நுட்பம்
ஒலிஒளி மூலம் ஒளிஒலி யாய்ந்து
கலைத்திறன் நோக்கிக் கணக்கியல் நுட்பம்
கருத்துற் றோர்ந்தே உள்ளூறும் நிலைநெறி
பெருநிலைக் கலைநிலை அறுபான் நான்கியல்
சிற்றவை மூலத் தெரிநிலை இயற்றிறன்
உற்ற கால விரைவியல் அசைநிலை
ஒங்குற உணர்ந்தே உள்ளுள் இலங்கும்
தேங்கு மாநெறி சீர்நிலை இயலே 846

கண்ணுங் கருத்தும் கலைநெறி யாகி
எண்ணும் எழுத்தும் இயல்நெறித் திறனாய்
பண்ணும் ஒலியும் பாநெறி நோக்கால்
விண்ணும் மண்ணும் எண்ணியல் நெறியால்
நிலையுற நாடி நெறியுற நோக்கிக்
கலையுற் றாய்ந்தே கணக்கியல் கண்டே
வெளிநிலை யியல்நெறி வியனெறி நோக்கி

ஒளிநெறி யாற்றல் ஓங்குறும் நீர்மை
ஓர்த்துணர் நெறியால் ஒருகலைத் திறநெறி
தேர்ந்துணர் திருநெறி பெருநெறி ஆக்கம்
நுட்ப மாக்கலை நுவல்நெறி யியற்றிறன்
திட்ப முலமும் செறிகலைத் தேக்கமும்
ஐந்தியல் நெறியால் அறிவுற் றாய்ந்தே
வந்துறும் முல மாநெறிக் கலையியல்
எண்முறை யியற்றிறன் எண்ணெறிக் கலைத்திறன்
விண்முறை வெறிநிலை வான்நெறிக் கலையாய்
ஒம்மொழி ஒம்ஒளி ஒம்ஒலி ஒம்மறை
ஒம்நெறி யோர்ந்தே ஒளித்தமிழ் ஆக்கம்
கருத்துற் றியலும் கணக்கியல் மாநெறி
விருப்புறும் மெய்நிலை யியலலும் உயிர்நிலைக்
கலைத்திறன் நோக்கிக் கலைநெறி யாய்ந்தே
நிலைத்திற மதியால் நவிலு மாநெறி
நுட்பக் கலையாய் நுவலுவ தோர்ந்தே
பெட்புறும் சீர்நெறி புகல்மர பியலே 854

அம்மையும் அப்பனும் சேயு மாய்த்திகழ்
செம்மைத் திருநிலை ஆட லான்உரு
அருளும் அன்பும் அறிவும் விளக்கும்
தெருளும் கூட்டி மருளும் போக்கும்
தென்முக நோக்கும் விண்முக நோக்காய்
தென்றிசைத் தென்னியல் தென்கலை தென்றல்
எண்ணெண் ணியலால் சிற்றவை நிலைதெரி
எண்ணெண் கணக்கியல் பெருவெளி மன்றே
ஆடலான் ஒளிதிகழ் கலைநிலை யியலாய்
ஆடலான் உருநிலை ஆயிரத் தெண்ணிலை
கலையுரு வாயுறும் கணக்கியல் ஆக்கம்
நிலையுரு வொளிநிலை வானியல் நோக்கம்
அருளியல் உருவம் அறிவியல் வடிவம்
தெருளியல் படிமம் சீர்நிலை நோக்கி
ஒளியா லுறுநிலை ஒளியுரு நிலையே

ஒளியா லுறும்உரு ஒம்ஒளி யுருவே
ஒளியா லுறும்ஒலி ஒம்ஒலி நிலையாய்
ஒளிநிலை மூலம் வெளிநிலை யியலாய்
வான்பொரு ளாயுறும் பேரொளி தாயொளி
வான்கலை உணர்த்தும் சேயொளி கலைநெறி
மூவொளி கூட்டும் பேரியல் தன்மை
மூவியல் முக்கலை முந்நெறி நோக்கி
ஆடலான் கலைநெறி தமிழ்நிலைத் திருநெறி
ஆடலான் நிலைநெறி வான்பொருள் இயலே 876

மதியொளி நோக்கி ஒளிமதி யாய்ந்தே
விதிமுறை மாற்றி ஊழினை வெல்லும்
கால நுட்பமும் காலமா நெறியும்
மூலப் பொருளால் முன்னி யோர்ந்தே
காற்றும் மூச்சும் கணக்கியல் நெறியும்
ஆற்றலும் அறிவும் அருங்கணக் கியலும்
எண்ணொளி இயலொளி எழிலொளிச் சிறொளி
விண்ணொளி விறொளி வியனொளி பேரொளி
கூரொளி குவியொளி கவினொளி காரொளி
நேரொளி நிலையொளி நிடொளி நோக்கி
ஒளிக்கலை யியல்நெறி ஒளிநெறித் திறனாய்
வெளிக்கலை விண்ணெறி ஒளியலை நோக்கி
சிற்றலைச் சிரலை நுண்ணலை எண்ணலை
பெற்றுறும் பேரலை கூரலைக் குவியலை
அலையலை நிலையலை ஒலியசை யாக்கம்
நிலையுற நோக்கி நெறியொளி ஒளிமதி
மதியொளித் திறனால் மன்னிய நோக்கி
விதிமுறை ஆற்றல் கால நுட்பமும்
கணக்கியல் நிலைதெரிக் கலையியல் நுட்பம்
கணக்குறும் நெறித்திறன் எண்கலை நுட்பம்
விண்முறை வெளிநெறி வியன்நெறி யாய்ந்தே
நுண்ணறி வுற்று விண்ணெறி யோர்ந்தே
எண்ணறிக் கலைத்திறன் இயலுவ கருதி

எண்முறை ஒளிக்கலை ஒளிமதி யாய்ந்து
மதியொளி நோக்கி மாக்கலை மாநெறி
விதிமுறை மாற்றலும் காலத் திறனே 877

உயிர்க்கலை உயிர்நெறி உயிரினம் உயிர்நிலை
செயிரற நோக்கிச் சீர்நெறி யாய்ந்து
பயிர்க்கலை செடிகொடி மரநிலை உயிர்நிலை
உயிரினம் புள்ளினம் விலங்கினம் உன்னி
நிலம்வாழ் உயிரும் நீர்வாழ் உயிரும்
நிலபுலத் தியல்நெறி நிருள் ளுயிரும்
பெருவளி யியலும் பெருவெளி இயலும்
பெருங்கலை நுண்திறன் அருங்கலைத் திறனும்
கருக்கலைக் கருநிலை கருதுறும் நுட்பமும்
உருநிலை உயிர்நிலை உயிரொளி உடலொளித்
திருநிலை மதியால் செந்நெறி யாய்ந்து
திருநிலை யாக்கம் செய்முறை யாய்ந்து
கலையுறும் நுட்பம் கருத்தினி தோர்ந்து
நிலையுறு மதியால் அண்டமும் பிண்டமும்
நோக்குமா மதியால் நுண்கலை ஆய்ந்து
ஆக்குமாத் திறனால் எண்கலைத் தேர்ந்து
செய்முறைத் திறனால் விண்கலை நுட்பம்
ஐவினை இயற்றிறன் ஐங்கலை ஐந்நெறி
செய்வினைச் சீர்வினைத் திருவினைப் பெருவினை
உய்வினை யாற்றல் ஒளியுற நோக்கி
உயிர்க்குல நெறிமுறை உயிரொளித் திறனால்
உயிர்நெறி ஆய்ந்து உரைத்தல்மா நெறியாய்
ஒன்றே உயிரினம் என்றெறன் றுன்னி
ஒன்றே ஒளிக்கலை உரைக்கும் உண்மையே 879

செங்கதிர்க் கலைத்திறன் செவ்வொளிச் சீரொளி
பைங்கதிர் ஒளித்திறன் பாரொளி விண்ணொளி
தங்குறும் பேரொளி தனியுறும் நேரொளி
அங்குறும் சீரொளி இங்குறும் கூரொளி

உங்குறும் பேரொளி ஒளிஒலி இயலாய்
திங்கள் பேரொளி மினொளி வானொளி
அண்டப் பேரொளி எழுகதிர் வண்ணம்
அண்ட மாயியல் பிண்ட மாநெறி
கண்டுறும் கதிரொளி விண்டுறும் மதியொளி
கண்டுறும் விண்ணொளி ஒளிநிலை யியலாய்
பெருவெளி நிலையொளி பேரொளித் திறனும்
கருவெளி நிலையொளி கலையொளி நுட்பம்
ஒளிமுதல் மூலமும் வெளிநிலைக் கோலமும்
ஒளிவின் னாக்கம் உற்றுணர்ந் தாய்ந்து
ஒளியே நிலைக்கலை ஒளியே இடைநிலை
ஒளிநிலைக் காலம் உணர்முறை நோக்கி
அறிவியல் கலைத்திறன் அண்டமும் ஆக்கும்
அறிவியல் நெறித்திறன் இயல்நெறிக் கூட்டும்
நுட்பமும் திட்பமும் மாசற வுணர்ந்தே
பெட்புற் றாய்ந்தே பெருமதி நோக்கி
கட்புலத் திறனால் கருத்துணர் வுற்றே
பெட்புறும் இயல்தெரி நுட்பமாக் கலையும்
அறிவா லறிந்து உணர்வுற் றாய்ந்து
நெறியாற் றெரிதல் ஒளிநிலைக் கலையே

உணர்வியல்

உழைப்போர் உணர்வின் உள்ளொளித் திறனாய்
கழைப்பைத் தவிர்த்தே கலைநிலை ஆய்ந்தே
வில்லு மாக்கலை மெய்த்திறக் கூற்றே
உள்ளுணர் ஐந்திறத் தியல்நெறி நுட்பம் 46

கட்புலன் நோக்கும் கருத்தே குழுமி
விட்புலன் ஆயும் மெய்நிலை அன்றோ 48

உள்ளும் உணர்வே உயர்கலை விரம் 52

உட்புலம் நோக்கல் விட்புலம் ஆய்தலே 54

அகவுணர் வொன்றே அறிகலை நுணுக்கம் 55

உயிர்ப்பும் உணர்வும் ஒருவழி நிலையே 56

உள்ளுவ உள்ளி உணர்வே ஓங்கி
கள்ளமில் உளத்தால் கருத்தே எண்ணி
சொல்லும் சொல்லே சொற்பொரு ளாகி
தொல்கலை நெறியாய் ஆய்வரல் நெறியே 63

இயற்கை யுணர்வால் எழுச்சியும் உணர்வும்
மயலறப் பொருந்தி கற்பனை திகழ்ந்தே
பற்பலர் புகழப் பாங்குறும் வகையில்
பொற்புறப் பாடுவோன் பாடவல் லவனே 70

உணர்வின் திறமே பெருந்திறல் வலிமை 77

உணர்வுற் றோரே உழைப்புறு மக்களாய்
உணர்வால் ஞாலம் விண்ணும் ஆய்வரே 78

உள்ளொளி யன்றோ உணர்வியல் ஆற்றல் 82

பொருளை நாடிப் பொருளறிந் தியலால்
முதலுறும் உணர்வும் தெள்ளொளித் திறனும்
காலமும் மூலமும் கடிதுற நோக்கிக்

கோலமும் சீலமும் நவையறப் புரிந்து
ஞாலங் காணும் நல்லறி வாளரே 83

உறுதியும் உண்மையும் உழைப்பும் உணர்வும்
பெறுவகைக் கலைத்திறன் பெட்புற நல்குமே 88

ஐயமுந் திரிபும் நீங்கிய உணர்வால்
மெய்ப்பொருள் உரைத்தலும் ஆய்தலும் நெறியே 101

கோட்டுரு வண்ணம் குறிப்பின் உணர்ந்தே
நீட்டுரு நெறிநிலை நவிலல் வழக்கே! 119

உள்ளுற இலங்கும் ஒளிபெறு ஞாலம்
தெள்ளுறக் கருத்துறச் சீர்பெற ஆய்ந்தே
ஞாலம் படைக்கும் நற்றிற வாற்றல்
சீலமாய் விளக்கு முதறி வன்றோ 140

இயற்கைநுண் ணறிவால் எழுநிலை ஆய்ந்தே
மயலறுங் கலையுணர் மதியொளி நுகர்வால்
இயலறி கலைநிலை அறிவியற் கலையே 200

உள்ளுவ உன்னுவ நோக்குவ நுவல்திறன்
விள்ளுவ நுகருவ வகைநிலை யாகி
உழைப்புறும் முயல்வே ஊழினை நீக்கும் 201

உள்ளகத் துறுதியும் உணர்வெழும் திறனும்
விண்ணுறும் நினைவுறல் மிகுவலி கூட்டும் 212

கருநிலை மூலக் கருத்துறும் ஆற்றல் 213

கற்றல் ஆய்தல் உணர்தல் நோக்கல்
சொற்றிறம் பொருளுறும் தொன்மை அணிநிலை
இயலுறத் தெரித்தல் விழுப்பொருள் உணர்த்தல்
மயலறத் தெரித்தல் மாண்நிலை விளக்கல்
அறிவிய லாற்ற லணிபெறச் சுட்டி
குறிபெற நிறுத்திக் குறிப்பின் உணர்த்திப்
பொருண்மை சுட்டித் தெருண்மை விளக்குவர்
பகுப்பொருள் ஆயும் விழுப்பொருள் மேலோர் 239

உள்ளுறும் எண்ணெண் கலைநிலை ஓர்ந்து
உள்ளுறும் சுழல்நிலை மெய்நிலை தேர்ந்தே
வையம் விரைவுறும் கால மாஇயல்
உய்வுறத் தெரிந்தே உணர்கலை தேர்ந்து
உணர்வொளி நிலையுறும் கலைநிலை ஆய்வர்
உணர்நெறி தண்டமிழ்க் கலைநெறி மேலோர் 251

முற்றுறும் வினைத்திறன் முடிபொரு ளுணர்த்தும் 269

உள்ளுவ உள்ளி உணர்வாற் றெரிந்தே
தெள்ளுநற் றமிழின் ஐந்திறச் சீரே 284

கண்டவை கருத்தில் கலைபெற நிறுத்தி
விண்டுறும் ஒளிநிலை யுருவந் தோற்றி
வனப்பெழில் வண்ணம் நினைப்பினின் ஓர்ந்தே
கனைப்புறத் தீட்டல் ஓவியத் திறனே 304

விண்ணே யெட்டே யெண்ண முணர்த்தும் 321

அசைநிலை யறிதலும் சீர்நிலைத் தேற்றலும்
நசையற வுணர்ந்தே நாடலும் நாடி
கோடலுங் கோடிக் குறிப்பின் உணர்ந்தே
தேடல் ஆய்வர் சீர்நெறி யாய்வோர் 322

ஒழிவில் ஒடுக்கத் துண்மை தெரிந்தோர்
எழுதருங் கலைதெரி யியலுறு மறிவரே 349

உணர்தலும் இயற்றலும் ஒளிக்கலை யாற்றலே 358

உணர்வின் உணர்தலும் உணர்த்தலும் நோக்கலும்
உணர்வொளித் திறனால் மெய்யியல் நோக்கி
அகவொளி நிலைநெறித் திண்ணெறிக் கலையால்
மிகுத்துறும் மிநெறி மெய்ந்நிலை தேர்ந்தே
விண்ணொளித் திறனா யிலங்குறும் நற்கலை
எண்ணெண் ணியலே நெறிப்படுத் தியக்கும் 371

ஒங்குறு முணர்வால் உடலொளி யுயிரொளி
ஆங்குறு மியைபே சைநிலை யாற்றல்

காற்றுறும் கலைநிலைக் கணக்கியல் தெரிந்தே
ஆற்றுறு மாற்றல் அறிமதி யோர்ந்தே
எண்ணெண் கலைத்திறன் இயல்புற் றிலங்கி
திண்ணமு முணர்வும் சீர்நிலைத் தேர்ந்தே
நாடுவ நாடி நன்னிலை யறிவர்
கூடுவ குடியின் குடிநிலை யோர்ந்தே
ஐம்பெருங் குடியின் செந்நிலை தேர்ந்தே
செம்பொருள் மூலத் திறனறி யாற்றல்
மெய்ப்பொரு ளுணர்வால் கண்டன வாகி
செய்முறை விளக்கம் சிறிதியம் பினனே 409

உற்றுறு முணர்வால் பெற்ற மாநெறி
சொற்றிறத் தாலறி நுட்ப மாக்கலை
எண்ணெண் ணியல்திறன் இனிதுற வோர்ந்தே
எண்ணியல் மூலத் தெழுபொரு ளாய்ந்து
எழும்பொருள் மூலத் தியல்நிலை யோர்ந்து
செழும்பொருள் நோக்கிச் சீர்நிலை தேர்ந்தே
இடையிடை யிடைவெளி என்னுறத் தேர்ந்தே
கடைமுத லிடையும் கணக்கியல் தெரிந்தே
அடைவுறத் தெரிந்துணர் மிடைபடா நோக்கே
உடலுயயிர்க் கலைத்திறன் உள்ளுவ வுணர்ந்தே
உயிர்செறி மூலம் ஒளிக்கலை யுன்னிச்
செயிரற நோக்கித் தியொளி யோர்ந்து
உன்னுறுந் திறத்தால் பன்னுவ ஆய்ந்து
தன்னகுந் திறத்தால் தகைபெற வோர்ந்து
செந்நெறி முந்நெறி சீருறத் தேர்ந்தே
இந்நிலை யந்நிலை யியல்பினில் கூட்டி
நிலையுறுங் கலைத்திறன் நெறியுறத் திகழ்ந்தே
கலைமொழித் தமிழொளி காண்டகு நெறியே 410

மெய்க்கலை யுணர்வொளி நண்ணுறுந் திறத்தால்
மெய்புயிர் நெறித்திற னியல்பினிற் றெரித்தே
தெரிநிலை விளங்கும் இயலுறு மாற்றலால்
விரிவுற நோக்கி விண்ணிலை யாய்ந்து

விண்ணொளி ஒலிநிலை மெய்யுற விளங்குபு
எண்ணொளிக் கலையின் எழிலுறுந் திறத்தால்
ஆற்ற லைந்தியல் ஐந்நெறி நோக்கித்
தேற்றமும் தோற்றமும் பொலிவுற நோக்கி
முலத் தியலெழும் முப்பொருள் தேற்றி
முல வைம்பொருள் ஐங்குடித் திறனாய்
நெறிமுறை யோர்ந்து நிலைக்கலைத் திறத்தால்
குறிகுறித் தியலும் உண்மை யாய்ந்துணர்
மரபே யியலெனும் மெய்ம்மை யுணர்ந்தே
மரபியல் வமுத்தினன் மெய்ம்மொழி தேர்ந்தே 419

நன்றும் தீதும் நலனுறத் தெரிந்தே
பொன்றாப் புகழும் பொருளும் நோக்கி
குன்றுறும் மெய்வலி குன்றெனத் திகழ்ந்தே
நன்றுறு மியல்பின் நாடுறும் நாட்டம்
உணர்வொளித் திறனு மோங்குறும் மெய்யுயிர்
உணர்நெறி யியலால் செய்வினை யாற்றுபு
வினைத்திற முயற்சியும் வென்றியும் மெய்மையும்
நினைப்புறுந் திறனும் நவிலலும் நோக்கலும்
உயிரொளி யுணர்வின் செயிரறும் திருவினை
அயிர்ப்பற நோக்கி யாளல் நெறியாய்
நெறிமதி யாளர் நிலையுறக் காண்பரே 421

ஒளிநிலை மெய்ந்நெறிப் பெருங்கலைத் திறத்தால்
வெளியும் மண்ணும் விளைநிலை யறிந்தே
கருத்துறுங் கருப்பொருள் கருத்துறத் துலங்கி
பருப்பொருள் பார்நிலை விழுப்பொருள் நோக்கி
உருப்பொருள் தோன்றா உணர்வினிற் றிகழ்ந்து
அருங்கலைச் செழும்பொருள் விண்ணொளித் திகழ
உண்முகம் நோக்கி அகவொளித் திறத்தால்
எண்முகத் திர்ப்பியல் நண்ணுவ நெறியே 423

எண்ணிலைக் கலைத்திறன் எண்ணெண் திறனாய்
விண்ணொளி மேவும் மெய்ப்பொருள் குறித்தே
எண்ணெண் கலைதரும் ஒளிநிலைக் கலைதெரி

திண்ணமு முணர்வும் நன்னுறுங் குறிப்பால்
மூலத் தெழுங்கலை இயல்புற நோக்கிக்
காலமும் பொருளுங் கருத்துறக் கண்டே
இடமுறுந் திறத்துண ரெண்ணியற் கணக்கும்
அடலா லியற்றி யறிவா லறிந்தே
உணர்வினின் நோக்கி ஒருபெருந் திறத்தால்
உணர்நிலைக் கலையா யுரைத்தல்மா நெறியே 427

உற்றறித் திறனும் ஊர்ந்தறி வலியும்
கற்றுறுந் திறனும் கலையொளித் திறனால்
ஓரறி வுயிர்நிலை மெய்க்கலைத் தேற்றம்
ஈரறி யியல்நிலை மூவியற் றிறனாய்
சீரறி வுற்றும் ஈரி யியல்நிலை
நேரறி வுற்றே ஐயியல் நோக்கி
ஆறறித் திறனா யைங்கலை நுனுக்கம்
சீரறிந் தியலால் பேரறி வுற்றே
நேரறிக் கலையொளி நுண்ணிதின் நோக்கி
உணர்நிலை திகழ்ந்தே ஒளிநிலை யோங்கி
உணர்வா லறிந்தே அறிவுயி ராற்றல்
உயிரறித் திறனை உயர்வுற நோக்கிச்
செயிரறச் செப்பல் மாநெறிக் கலையே 429

தன்னிலை பெருக்கித் தருமெண் ணாற்றல்
நன்னிலை மாநெறி மெய்க்கலை யுணர்ந்தே
ஓங்குறு முணர்வால் எண்கலை விண்கலை
ஆங்குற நோக்கி யகத்துணர் வுற்றே
மெய்ந்நிலை காண்டல் மெய்ப்பொரு ளுணர்தல்
செய்ந்நிலைக் கணக்கியல் சீர்த்திற மாய்தல்
எண்ணெண் கலைதகு மியற்றிற நெறியே 432

செம்பொருள் மெய்த்திறன் சீர்நெறி நோக்கி
ஐம்பொருட் கலையே நெறிமுறைத் திறனாய்
உணர்வால் உந்துறும் ஒருமுறைப் பொருளாய்
உணர்கலை வடிவா யுருவங் காட்டுபு
செய்முறைச் செய்ந்நிலைத் தேற்றென விளக்கி

ஐவகை யியலா லெண்ணிலை யாய்தல்
எண்ணே மூலம் எழும்பொரு ளாய்ந்து
திண்ணிய வுணர்வால் செப்புமைந் தியலும்
நண்ணிய மூலத் தியலெழு மாற்றல்
உண்ணோர் விளங்கி யுணர்வுறக்
நண்ணி யுரைத்தனன் நவையறுங் கலையே 438

நினைப்புறுந் திறனே நெறிநிலை யியலாய்
முனைப்புறும் ஆற்றல் முகிழ்நிலை உணர்வாய்
உணர்வே ஒளியாய் உற்றுறும் திறனெறி
உணர்கலை யாற்றல் உழைப்புறும் மெய்த்திறன்
செவ்விதின் ஓர்ந்தே திருவினை யாற்றல்
அவ்வயின் வென்றி ஆங்குறும் நிலையாய்
உணர்வொளி ஒன்றே உறுதுணை யாற்றல்
உணர்நிலை உயிர்த்திறன் மெய்யிய லாய்ந்தே
செந்நெறித் திறத்தால் சீரறி வுற்றே
மெய்நெறி அறிதல் கலைநெறிப் பண்பே 441

உலையா முயற்சி பெருவலித் திறனெண்
ணிலைபெறும் உணர்வால் நெறியுற நின்றே
உண்முக நோக்கி ஒலியியல் ஆய்ந்தே
விண்முக நிலைத்திறம் வேட்டுபு வேண்டி
நோக்குறும் நோக்கால் எண்ணெண் கலைத்திறன்
ஆக்குறும் திருவினை அறிகலை அறிந்தே
உய்த்துணர் நெறியா லுழைப்பிய லுற்றே
செந்நிலை யியற்றல் நெறிநிலைப் பண்பே 442

கண்ணுற நோக்கிக் காணுறு முற்பொருள்
எண்ணுறு முணர்வால் உள்நிலை நோக்கி
உள்ளுறு முணர்வின் நெறிவழித் தோற்றும்
தெள்ளுறுஞ் சீர்நெறிப் புனைந்துறுந் தொழிலாய்
ஓவியத் தோற்றம் ஒளிநிலை யோச்சி
மேவுறுங் கலைத்திறன் விளங்கலு மியல்பே 451

செவ்வி யறிந்தே சீர்நிலை யோர்ந்து

செவ்வித் திறனாய் மெய்யிய லாக்கம்
மெய்ப்பொருள் ஒளிக்கலை மெய்யுற வுணர்ந்தே
ஐயம் நீக்கிய மெய்யுளம் பொருத்தி
உணர்வி னோக்கி அறிவா லறிந்து
உணர்ந்துரு மெய்க்கலை நெறிமுறைத் திறனே 475

நுண்ணுணர் வோங்கின் விண்ணுணர் வோங்கும் 478

செங்கதிர்ச் செவ்வொளித் திறனுற நோக்கிச்
சேய்மை யண்மை நோக்கிற் றெரித்தே
ஆங்குறும் ஒளிநிலை ஏழ்நிலை யாய்ந்தே
ஒங்குறும் திறத்தால் வண்ணத் தியலும்
மெய்ம்மை யறிந்தே மெய்ப்பொருள் நோக்கி
உய்யும் ஒளிநிலை உன்னுந் திறத்தால்
வண்ணம் ஒவியம் வனப்புறும் எழிலும்
நண்ணுங் கலைத்திறம் நாடுவ நாடி
கதிர்வர வுறுநிலைக் கவினிலை யாய்ந்தே
கதிரொளிக் கிற்றின் மெய்மை யுணர்ந்தே
எழுநிலை வண்ணம் இயல்பின் உணர்வோர்
பழுதறு மோவிய மெய்ப்பொரு ளுணர்ந்தே
கண்ணுங் கருத்தும் கவின்பெறத் துலங்கி
எண்ணமு முணர்வு மிணைபெற் றிலங்கி
கைவினைத் திறனும் மெய்வினை யாற்றல்
செய்வினை யோங்கிச் சிறப்புறுந் திறமே 480

ஒவியத் திறனுறும் ஒண்மை தெரிந்தே
நாவிய லாற்றல் நயனுற வோர்ந்தே
ஒவிலா துழைத்தல் உணர்நிலை யாற்றல்
மேவுறும் பொருண்மை மெய்ப்பொருள் சிறந்தே
ஆவலாய் நாடி யதும்பொரு ளாக்கம்
மேவக் கண்டே வடிவும் உருவும்
எழிலும் வனப்பும் இயைபுறத் தோற்றி
ஒழிவில் முயற்சியும் உன்னுந் திறனும்
அமைவுறும் நோக்கும் அகத்துணர் வுற்றே

இமையா நாட்டம் இயல்புறப் பொருத்தி
உணர்வுறுந் திறனா லொளிபெறத் தீட்டி
உணர்நிலை தெரிக்க நிலையுறுக் காட்டல்
ஒவிய இயலென மெய்ப்பொரு ளுரைக்கும் 481

எழும்ஒளி எழும்ஒலி எழுங்கலை யெழுந்திறன்
எழுமறை நோக்கி எழுநிலை மாடம்
எழுமுணர் திறத்தால் உழைப்புறும் நெறியே
எழுமிய லுற்றே ஆர்த்தலும் நோக்கலும்
கூர்மதி யாளர் குறிப்பின் உணர்ந்தே
நேர்மதி வல்லோர் நினைப்பிற் றிகழ்ந்தே
உள்ளூறுங் கருநிலை உன்னுவ தோர்ந்தே
உள்ளூறும் உணர்வால் மாடக் கருநிலை
எழுநிலை மாடம் இயல்புறும் உண்மை
எழுமுணர் வாலறி நிலைக்கலை யாய்ந்தே
கட்டுறும் இயக்கம் கலைநெறிக் கலைதிகழ்
கட்டிடம் இயல்நெறிக் கலைநெறி மரபே 500

எழுநிலை எண்ணிலை இயல்பை யறிந்தோர்
எழுங்கலை யொளிநிலை நெறியறிந் தோரே
எழுநிலை மூலம் எண்ணிலைக் கோலம்
எழுங்கலை யுணர்வால் செழுங்கலைத் திறனுறும்
எழுமுணர் வாலறி நேரறி வுற்று
எழுமதித் திறனால் சீரறி வாரே 504

கோலும் நூலும் குறிக்கும் உண்மை
காலமும் பொழுதும் காட்டியல் வண்மை
வேலும் வாளும் விளக்குறும் மெய்ந்நெறி
மாலற வுணர்ந்தோர் உணர்வொளித் தெரிவரே 519

நீர்நிலம் நெருப்பும் காற்றும் வானும்
தேர்நிலைக் கலைத்திறன் செப்புறும் திறனும்
ஓர்நிலை யுணர்வால் ஒள்ளிதி னோர்ந்து
சீர்நிலை மக்கள் உடலும் உயிரும்
நேர்நிலை இயலறி நெடிதுணர் வோங்கிக்

கூரறி வுற்றுக் குறிப்புற நோக்கிச்
சீரறித் திறத்தால் தெள்ளிதின் ஆயின்
வையமும் விண்ணும் சிற்பமும் உயிரும்
மெய்ப்பொருள் நிலையெனக் கலைநிறை வோங்கி
உணர்வால் அறிந்துறும் எண்ணிலை திகழ்ந்து
உணர்கலை ஆற்றல் ஓங்குறும் நெறியே 523

உணர்வும் உழைப்பும் ஓங்குறுங் காலம்
உணர்வொளி மெய்த்திறன் நிலையியல் நெறியே 536

நெறியே நிலைபெறும் காலப் பொழுதியல்
குறியே நோக்கிக் குறிப்புறும் திறனால்
உணர்வொளி யோங்கி உண்மை நோக்கல்
உணர்கலை நெறியோர் ஆய்தல் மரபே 541

நுணுக்கம் நுட்பம் நுவலறித் திறனும்
அணுக்கம் இயலல் நெறிமுறை ஆற்றலும்
ஒடுங்க உணரின் ஒள்ளியல் நெறியே 542

தூநெறிக் கலையியல் மதியுற் றறிந்தே
மாநெறிச் சீர்கலை சீரறி வுற்றே
நெறியால் கண்டுணர் நிலைக்கலை தேர்ந்தே
குறியுணர் உண்மை குறிப்பறிந் தியல்நிலை
ஆயுந் திறனறி மெய்யுணர் வுற்றே
ஏயக் காண்டல் ஒண்ணிலைத் திறனே 560

பொழுதறி வுணர்வால் காலமா நுட்பம்
பழுதற் றுணர்ந்தே பெருஞ்செயல் புரிந்தே
விழுமிய மெய்ப்பயன் எண்ணிலை காண்நெறி
கெழுமுணர் வுறுநெறி அறிவர் செயலே 563

பண்பியல் உணரின் உண்மை முகிழ்க்கும் 570

மூவியல் நெறித்திறன் முன்னி யுணர்ந்தே
முப்பொருள் முந்நெறி ஆய்ந்துணர் நெறியே 575

மரபியற் கலைநெறி மாண்புறத் தெரிக்கினும்
உரத்தியல் உணர்வும் நுகர்வும் இயலாய்

காண்பன கண்டுணர் கலைநெறித் திறமும்
கேட்பன கேட்டுணர் நெறிமுறை தெரிந்து
அறிவியல் ஆக்கம் எய்துவ முறையே 577

உயிர்மெய் யுணரின் உட்பொருள் தேற்றம்
மெய்யுயிர்க் கலைநிலை முலப் பொருளே 587

ஒருநிலை உள்ளம் உள்ளூறும் உணர்வே
கருநிலை முலம் காண்டல் இயலும் 593

முலத் தெழுநிலை முலம் உணர்ந்தே
கோலமும் குறிப்புங் குறிப்புற் றுன்னி
கால விரைவியல் கருத்துற் றோர்ந்து
ஞாலத் தியலும் விண்ணெறிச் சீர்மையும்
உன்னி உன்னி உள்ளூற் றாய்ந்து
துன்னும் பேரியல் தூநெறி நோக்கி
ஐங்குடி யியலுறும் அருநிலை முலம்
செங்குடி பைங்குடி திருநிலை ஓர்ந்து
எண்ணுற் றாய்வுறும் மெய்நிலை தெளிந்தே
நண்ணுவ நாடி நிலைநெறி ஆய்தல்
எண்ணிலை இயல்நெறி முறைக்கலை மரபே 603

உள்ளத் துணரும் உருவிய லாய்ந்தே
விள்ளு மாமொழி நிலையறி வுற்றே
தெள்ளும் வடிவியல் சீர்நிலைத் திறத்தால்
ஒள்ளிய மாக்கலை உரைத்தலும் நெறியே 629

நேர்க்கோட் டியலே நிலைநெறி யுணர்த்தும் 633

ஒங்குறு முணர்வே தேங்குறுங் கலையாய்
ஐந்திய லருங்கலைப் பெருங்கலை நுட்பம்
ஐவகை யியல்தெரி நெறிமுறை யோர்ந்தே
மெய்த்திறப் பொருள்நிலை முகிழ்நிலைத் தன்மை
மெய்யுணர் திறனால் முற்றுறு முணர்வால்
மெய்க்கலை யொளிநிலை முழுநிலை யாய்ந்தே
உய்வகைத் திறனு மொளிமதி யாற்றலும்

ஆக்குறுந் திறனா லைந்திய லைந்நெறி
நோக்குறும் முலப் பொருள்நிலை நோக்கி
மெய்த்திறங் காண்டல் எண்ணிலைக் கலைநிலை
மெய்ப்பொருள் நெறியே எண்ணெண் கலைத்திறன்
முற்றுற வுணர்ந்தே தெற்றெனத் தெளிதல்
உற்றுறு முணர்வின் நெறிதரும் ஆற்றலே 640

அயரா துழைப்பின் அருங்கலை யோங்கும் 650

உற்றறி யுணர்வே பெற்றவா லறிவாய்
சொற்றிறம் பொருள்திறம் தெற்றெனத் தேர்ந்தே
இற்றுறு மாற்றல் இலங்குறுந் தேற்றம்
கற்றுறும் கலைநிலைக் கருத்துறும் முலம்
ஓர்ந்துறு மாற்ற லொளியுணர் கலையால்
தேர்ந்துறும் நெறித்திறன் சீரறி நிலையே 657

கலைதெரி நுட்பங் கணக்கியல் முறையால்
நிலையுறும் நெறியியல் நெடிதுறுந் திறனிலை
உள்ளி யுள்ளி யுணர்வுறுந் திறத்தால்
தெள்ளு மைந்திய லைங்கலைச் சீர்நெறி
விள்ளுறுங் கலைநிலை மெய்த்தக லாற்றல்
தெள்ளு மாக்கலை யியல்பினிற் றேர்ந்தே
உணர்வொளி யாற்றல் ஓங்குறும் நெறிமுறை
உணர்வே விழியாய் மெய்க்கலை நோக்கிப்
புலமுறுந் திறத்தியல் பொருந்தக் காண்டுழி
நலமுறு மெண்ணெண் கலைநிலை நவிலுமே 659

கலைநெறி உணர்வே நிலைநெறி யுணர்த்தி
தலைமொழி மெய்யியல் நிலையியல் சாற்றும் 668

ஒளிநிலை எழுத்தி னொலிநிலை உணரின்
ஒளிமொழித் திட்ப முணரப் படுமே 672

உணர்வறித் தியல லொதுநெறிக் கலையென
உணர்வா லறிந்தே ஒளிநெறிக் கண்டே
உணர்வின் தெரிக்கும் அகவின் னோர்ந்தே

உணர்கெழும் நெறிநிலைக் கலையென் றோர்ந்தே
எண்ணெண் ணியல்திற னினிதின் நோக்கி
எண்ணியல் நாற்புறத் தியல்நிலைச் சூழல்
முலை முலம் நாற்புறத் தியல்நெறி
முலை விளிம்பே மெய்நெறி நோக்கி
ஐந்நிலை யியல்நிலை விரைவி னாற்றல்
செந்நெறிக் கால மாவிரை வாம்நெறி
காலத் தியல்நெறி கணக்கின் ஓர்ந்து
முலப் பேரியல் முன்னியுள் நோக்கி
எட்டின் பிறழ்நிலை இனிதி னோர்ந்து
எட்டுறும் நெறிநிலை ஒன்பான் நிலைநெறி
ஒளிக்கலை யுணர்திறன் ஒருங்கு நோக்கி
வெளிக்கலை வெளிமொழி ஓர்தல்மா நெறியே 677

நிலையுங் கலையும் நெறியும் குறியும்
நிலைமுதற் பொருளும் நெறிவுற் றோர்ந்தே
நெறிநிலைக் குறியுங் குறிநிலை நெறியும்
அறிவிய லாக்க மைந்தியல் மொழியும்
கல்லுஞ் சொல்லுங் கலையும் பொருளும்
நெல்லும் எள்ளும் அளவியல் நெறியும்
செடிகொடி மரநிலைச் சீர்நெறி உயர்நிலை
வடிவுறும் பொருளியல் வரைவுறும் பொருளும்
உணர்வின் நோக்கி மெய்நிலை தெரித்தே
உணர்வியல் உணர்வொளி உணர்நிலைக் கும்மே 688

எண்ணும் கலைநெறி மெய்யியல் வழக்காய்
உன்னுவ தோர்ந்தே உணர்நிலைக் காண்டுழி
மன்னு மாக்கலை நெறிமுறை வழக்கே 692

கலைநிலை நெறியா லறுபான் நான்கின்
நிலைநெறி எண்ணெண் ணியல்நிலை நோக்கி
ஐந்தியல் முலம் பெரும்பொரு ளுணர்ந்தே
ஐந்நெறி செந்நெறி முலத் தியலால்
ஆறு ஆநிலை முச்சுடர் அறுசுடர்
வேறு வேற்றியல் நிலைதெரி இருசுடர்

செங்குடி பைங்குடி சீர்நிலை அறிந்தே
ஐங்குடி மெய்நிலை உண்மை யோர்ந்தே
மூலத் தெழுகலை முறைமையி னோர்ந்து
காலத் தியற்கலை கணக்கிய லாய்ந்தே
நொடிநொடி இமைநிலை நுட்பந் தேர்ந்தே
கொடிநிலைத் தேர்க்கலைக் கால முணர்ந்தே
காலத் தியல்தெரி மெய்நெறி நுணுக்கம்
கருத்துற் றாய்ந்தே உண்மை இயலால்
பெருநிலை நுண்ணிலை இயற்கலை திட்பம்
உள்ளூற் றுணர்ந்து ஒருபயன் நோக்கித்
தெள்ளூறும் சீர்நிலைக் கலைநிலைத் திறனால்
மெய்யியல் நுட்பம் உணர்வுற் றோர்ந்து
உய்முறைக் காண்டல் அறுபான் நான்கின்
மெய்த்திறக் கலைநிலை ஒளிநிலைக் கூறென
உய்த்துணர் நெறியால் உண்மை விளங்கும் 700

உணர்வின் திறமே மெய்க்கலை யாக்கம் 711

மெய்நெறி மெய்ப்பொருள் மெய்க்கலை யுணர்வால்
மெய்யியல் நிலைதெரி பொருண்மை யியலறி
நோக்க நுண்மதி விண்மதி எண்மதி
நோக்குறும் நிலைதெரி உள்ளுணர் நோக்கால்
அகவிண் ணொளிநிலை உணர்வின் ஆய்ந்து
அகத்துணர் இயல்நிலை மெய்நிலை ஓர்ந்தே
கலைநிலை நுண்ணறி யியல்நிலை உண்மை
நிலைநெறி ஐந்தியல் எண்ணெண் கலைதெரி
ஐந்துறும் உண்மை இயல்நெறி யோர்ந்து
முந்துறும் மரபியல் கலைத்தொழில் உன்னி
உழைப்புறும் உணர்வும் ஒங்குறும் ஆற்றலும்
இழையும் இம்மியும் துளியும் ஓர்ந்தே
கால மெய்த்திறன் கடுகி யோர்ந்தே
கோலங் குறிக்கும் குறிப்பியல் நெறியால்
ஒளிநிலை மெய்மொழி ஒங்குறுந் திறனால்
தெளிகலை ஐந்நெறி சீர்நெறி யாய்ந்து

நுட்பமும் திட்பமும் நுனுகி யாய்ந்தே
பெட்புற் றெழுதரும் பேருணர் வாக்கம்
கண்டுணர் கலைநெறி கேட்டுணர் நிலைநெறி
விண்டுணர் தலைநெறி விளம்பல்மா நெறியே 732

காலம் முன்றும் கருத்தறி வுற்று
காலம் இடம்பொருள் வரிநிலை ஆய்ந்து
நோக்கமும் குறிப்பின் நுண்ணிதின் தேர்ந்து
ஆக்கமுங் கேடும் அறிமுறை ஆய்ந்து
கண்டுணர் தெளிவும் கேட்டுணர் ஆய்வும்
விண்டுணர் மொழித்திறன் வெளிநிலை இயலால்
இன்சொல் இன்மொழி நன்பொருள் இயம்பலும்
இன்முகம் குறிப்பறி நிலைநெறி யியலல்
கலைப்பொருள் உண்மை மரபியல் வண்மை
நிலையுணர் வுற்றுறும் உள்ளமும் ஓங்கி
நாடும் மொழியும் இருவிழி யென்றே
நாடுறும் உளத்துணர் நெறிநிலை யோங்கி
அறிவர் பொருளர் வறியவர் ஆண்பெண்
குறியர் நீளர் உருநிலை நோக்கா
உளநிலை நோக்கி அன்புறும் உணர்வும்
வேந்தன் மக்கள் என்றுணர் நிலையும்
வேந்தும் மக்களும் ஒன்றுணர் நெறியும்
வேந்தன் வேட்ப நடுநிலை உண்மை
வேந்தன் நிலைநெறி நாட்டின் கலைநெறி
அறத்திறன் மாறா நெறியுரை யாற்றும்
அறநெறி யியலே அமைச்சியல் நெறியே 744

உணர்வும் உள்ளமும் ஒருநிலை யுற்றே
உணர்வினின் றெழுதரும் மெய்த்திறன் நோக்கி
தறுகண் ஆண்மை காலமும் இடமும்
உறுநிலைப் பொருளும் மெய்யறி விலங்கி
நெறிமுறை ஐம்பொறி ஐம்புலன் நிலையியல்
குறிமுறை மாறாக் கூர்மதித் திறத்தால்
செயலுறும் சீர்நெறி விரமா யியலாய்

முன்னவன் முன்னறி முயன்றினி தாய்ந்தே
நன்னெறி யியல்தெரி நவையிலா விரம்
கண்டுணர் வாழ்வியல் கேட்டுணர் தெளிவும்
பண்டுணர் மரபும் விண்டுணர் இயலும்
நன்றுறும் நெறியால் நிலையுற் றாய்ந்து
தென்றிசை நிலமர பியலெனப் படுமே 745

உணர்வுறும் செந்நெறி ஓங்குறும் ஆற்றல்
உணர்கலைத் தெளிவால் ஊழ்நிலை ஆய்ந்தே
காலங் காண்டலும் கணக்கியல் ஆய்தலும்
மூலம் உணர்த்தும் மெய்நிலை ஓர்ந்தே
முப்பொருள் முந்நெறி முக்கலை மூவியல்
செப்புறும் சீர்நெறி சீரறி வுற்றே
ஓங்குறும் நிலைக்கலை உண்மை யறிந்தோர்
தனிநிலை யுற்றே பெருநெறி ஆற்றலாய்
நனியுணர் வோங்கி நிலைநெறி ஆய்ந்தே
இடம்பொருள் காலம் எண்ணு மாற்றலால்
இடநிலை யாற்றல் இயல்நிலை யோங்கி
உண்மைத் தெருநிலை உறுகலை விளக்கி
எண்மை யாற்றலால் எண்ணிய எய்தி
காண்டுறும் காலத் தியல்நிலை நோக்கி
வேண்டும் மெய்ப்பயன் முழுநிலை கண்டே 767

நுட்ப மாமதி நுண்ணறி வாற்றலால்
பெட்புற் றோர்ந்து வினையியல் ஆற்றலால்
நிறைபய னெய்தி நெறிநிலை யாற்றலால்
நிறைமதி யொளிநிலை நெறிபுகழ்க் கலைநிலை
விரமும் உணர்வும் குறிநிலை நோக்கி
விரத் தியல்நிலைக் காலங் கருதி
செய்முறை யறிந்தே செய்கலை நோக்கி
செய்திற னுற்றலால் உய்தி பெற்றுறும்
உணர்வால் மெய்ப்பய னோங்குறுந் திறனிலை
உணர்கலை யாற்ற லோங்குறும் நெறியே 768

எட்டெட் டியலே இயலுறுஞ் செந்தமிழ்
தெட்டுறு மையைந் தியல்நிலைச் சீர்நெறி
உணர்வுறுந் திறனெறி மெய்க்கலை மெய்ப்பொருள்
உணர்நிலை மாக்கலை இயல்நெறித் திறனாய்
கலைநிலை யோர்ந்து கணக்கியல் நெறியால்
நிலைநெறி யியற்றிறன் ஆக்கங் காண்டுழி
உள்ளியல் வெளியியல் உண்மை மாநெறி
தெள்ளுறும் நிலைநெறிச் சீரறி நுட்பம்
மெய்க்கலை யறுபான் நான்கியல் நிலையாய்
மெய்யுணர் வுறுநிலை யெண்ணிலை யாக்கம்
காலரைக் கால்நிலை யரைநிலை முக்கால்
நாலரை யியல்நிலை நெறிமுறை யோர்ந்தே
ஒன்றிரண் டுறுநிலை மூன்றுநாள் கைந்தாய்
நன்றுறு மாறே ழெட்டுறும் நிலையும்
உணர்நிலை யறிவால் உன்னுவ உன்னி
உணர்வின் மெய்த்திறம் மெய்க்கலை நாடிக்
கலையறித் திறனுறும் எண்ணிலை யாய்ந்தே
எண்முறை யியற்றிறன் எளிதில் நாடி
விண்ணெறி நிலைக்கலை வியனுறு மாற்றலால்
கண்கலைக் கவின்நிலைக் கருத்துற் றாய்ந்து
திண்ணிலை நுண்ணிலைச் சீர்பெற் றிலங்கி
உள்ளுறும் மெய்க்கலை உணர்வழி யாற்றலால்
தெள்ளுறும் சீர்சால் நெறியுறு மாக்கலை
கலைநெறி யொன்றிரண் டியலுறும் நெறியால்
நிலைநெறி மறுபான் நான்கியல் நவிலுமே 772

உணர்வுங் கலையும் விரமும் ஆண்மையும்
உணர்நிலைத் தெளிவும் சொன்னிலை வாய்மையும்
மெய்யியல் மெய்ம்மையும் பொருண்மையும் நெறியும்
பொய்யறு குறிக்கோள் நெறிமுதற் பொருளும்
கலைக்குடிப் பண்பும் நிலைக்குடி யன்பும்
தலைக்குடி வீரமும் தறுகண் ஆண்மையும்
உளமொருங் குறுநிலை மெய்ந்நிலைத் திறனும்

களமுங் காலமும் பொருளுங் கருதிச்
செய்முறைச் செய்ந்நிலை சீர்த்தக வோர்ந்தே
மெய்ந்நிலை இயற்றல் அறிவர் கடனே 773

எள்ளள வளவை இயன்றினி தாய்ந்து
விள்ளுறும் கால நுணுக்கந் தேர்ந்து
சிற்றவை நிலைதெரிச் சீருறும் உணர்வால்
உற்றுறும் மெய்யுணர் வியல்நிலை ஓர்ந்தே
நாற்புறத் தியல்நெறி தன்னிலை கூர்ந்தே
ஏற்றுறும் இடைஒளி புள்ளியும் ஆய்ந்து
ஐந்தியல் நெறியென் றறைதரு மாற்றல்
முந்துறும் கால விரைவியல் ஆற்றலால்
ஞாலஞ் சுழலல் காலஞ் சுழலல்
கோலங் கூட்டும் சீலம் நாட்டும்
ஞாலத் தின்னெறி நுண்ணெறி யார்ந்தே
மூலக் கனலால் முன்னி யோர்ந்தே
அகவின் நிலைதெரி மெய்க்கலை யியற்றிறன்
மிகுமொளி புகுமொளி விண்ணொளி நுண்ணொளி
ஒளிநிலைக் கலைநிலை ஒலிநிலை நோக்கி
வெளிமொழி ஓம்கலை ஓம்மொழி ஓம்இசை
தெற்றெனத் தேர்ந்து செந்தமிழ்க் கலைநிலை
முற்ற வுணர்ந்தே முதறி வுற்றே
சிற்றவை எண்ணியல் தெள்ளிதின் ஆய்ந்தே
ஒன்றோன் றுறுநிலை எண்ணியல் திறத்தால்
மெய்க்கலைத் திறனெறி மெய்யியல் புறுநிலை
உய்த்துணர் உயிர்க்கலை ஒளிநிலை ஒலியாய்
அகமும் புறமும் உணர்நிலை தேர்ந்தே
மிகுகலை யுணர்வும் புகுநெறிக் கலையும்
வகுத்துறும் எண்ணியல் வகைகலைத் திறனும்
வகுத்துறும் உணர்வால் உற்றமா நெறியே 790

எழுத்தியல் இலங்கி எண்ணெறி துலங்கி
வழுத்து மாநெறி வளர்கலை விளங்கி
முழுத்தமிழ் முந்நெறி செந்நெறி ஐந்நெறி

விழுமிய ஐம்மறை செம்மறை மும்மறை
ஓமெழுத் தியல்கலை ஒளிதரும் ஆற்றல்
ஓமுறும் முதல்நிலை எழுத்தியல் நோக்கி
விண்மொழி எண்மொழி வியனிலை யுணர்ந்தே
தென்மொழி தண்டமிழ் செந்தமிழ்க் கலைநிலை
மூல மாத்தமிழ் முந்நெறி முத்தமிழ்
சீல மாயியல் எட்டின் பிறழ்நிலை
கோலம் ஓம்குறி ஓம்நெறி யாய்ந்தே
ஞாலத் தியல்நிலை நன்கினி தோர்ந்தே
மூலம் அகவெளி புறவெளி யியலாய்
காலத் திண்மையும் நுண்மையும் கருதி
ஒலிநிலை யாற்றல் ஒலிநிலைத் தேற்றம்
ஒலியியல் ஒளியியல் உற்றுறும் நாட்டம்
நிலைமொழி தலைமொழி நேரிய தமிழாய்
தலைமொழி உண்மை தனிக்கலை நிலையென
சிற்றவை விளக்கும் அறுபான் நான்கியல்
தெற்றெனத் தேர்ந்தே செந்தமிழ் நிலையியல்
உற்றுறும் உணர்வே ஒளிநிலைக் கலையென
தெற்றுறும் மாநெறி சீர்நிலை வழக்கே 792

பெருஞ்செயல் புரியினும் பேருணர் வுறினும்
அருஞ்செயல் ஆற்றினும் அறிவுறும் முயற்சி
குன்றி தாண்மை குறைவற வோங்கி
என்றும் பயனுறும் திருவினை யியற்றல்
நன்றுறப் புரியினும் பெரும்பகை சூழும்
அன்றே நீங்கும் அரும்புகழ் ஓங்கும்
நெறிமுறை மாறா நினைப்பின் ஓங்கிக்
குறிமுறை தவறாக் குறிப்பின் ஆய்ந்தே
விழ்ச்சியை மாற்றும் விரமும் ஓங்கி
சூழ்ச்சியை மாற்றும் தூமதி பெருகி
விழிப்புணர் வுற்றே பெருமதி யாற்றல்
விழிநிலை நோக்கும் உணர்நிலை விரம்
ஈரத் துள்ளம் எண்ணிய முடித்தல்

ஆரமும் முத்தும் மணியும் அறியும்
அறிவோர் திறனிலை அகமுற் றாய்ந்து
செறிமதி யியலாய் சீர்நிலை நோக்கி
முழுப்பயன் எண்ணி விழுமிய செயலாய்
பழுதற வியற்றிப் பாங்குறப் புரிதல்
அருஞ்செயல் கலைதெரி ஆற்றலிர் உணர்வோர்
பெருஞ்செயல் ஆற்றல் பெருநெறித் திறனே 794

ஆற்மதி யுணர்கலை ஊழினை வெல்லும் 802

கலைநெறி நுட்பம் நிலையுணர் வோங்கும்
நிலைமதி யாற்றல் நெறியியல் கூட்டும் 809

எழுவகை யுயிரும் எழுநிலைக் கலையும்
வழுவறும் உணர்வறும் வளமதி நிலையும்
விழுமிய செழும்பொருள் எழும்பொருள் எண்பொருள்
கெழுமிய மாப்பொருள் கலைப்பொருள் பகுப்பொருள்
விரிப்பொருள் நுண்பொருள் உரிப்பொருள் நோக்கி
விரிவுறும் மதியால் நன்கினி தாய்ந்தே
உயிரொளி நாடி உணர்வொளி கூடி
செயிரறுங் கலையால் உடலொளி யாய்ந்தே
ஒளிஒளிக் கலைத்திறன் மதியொளி யாற்றலால்
வெளியுற நோக்கி விறுற் றெழுதரும்
கலைத்திறன் நுட்பம் அறிவியல் கலைத்தமிழ்
நிலைத்திறன் அறிவியல் பொறியியல் நிலையியல்
அருளியல் நாடுறும் தெருளியல் மதியும்
பொருளியற் கலையும் மெய்ப்பொருள் நோக்கமும்
உளத்தினி தோர்ந்தே உள்ளூற் றாய்ந்தே
களமும் காலமும் கணித்தினி தாய்ந்தே
மூல முழுப்பொருள் முற்றுற நோக்கி
கோலக் குறிப்பும் குறித்துறும் இயல்பால்
சிற்றவை மாநெறி சீர்மா இயலால்
உற்றறி உணர்வால் உணர்த்துவ தியல்பாய்
தூநெறி மாநெறி துலங்கிக் காட்டும்
மாநெறி யியலால் வழுத்தல் மரபே 811

மூலப் பொருளை முன்னி உணர்ந்தே
மூலம் நோக்கி முப்பொருள் ஆய்ந்தே
கால விரைவியல் கணக்கின் ஓர்ந்தே
காலம் கடுகி கடுவினை முடுகி
கடுவினை உழைப்பால் அடுவினை தேர்ந்தே
படுவினைத் திறனால் கடுவினை நீக்கி
தொடுவினை இயற்றி முடிவினை நோக்கி
கடுவினை இயற்றி ஆக்கமும் கூர்ந்து
செய்வினை உழைப்பே சீர்சால் நெறியென
கைவினை நுட்பம் கருத்தியல் திட்பம்
ஐவினை ஐங்கலை ஐநெறி ஐமுறை
உய்வினை உணர்த்தலும் உறுபொருள் நோக்கி
அறிவியற் கலையே ஆக்கமும் நிலையும்
குறுநெறிக் கலையாய் கூர்த்த மதியுறும்
தொழிலியல் கலைத்திறன் சீர்நெறி நோக்கி
எழிலியல் வண்ணம் ஓவியம் சிற்பம்
பயிலியல் கலையாய் பயிலவும் நோக்கி
முயலல் முன்னல் முடிவினைக் காணல்
அயர்விலா உழைப்பால் அருங்கலை நுட்பம்
மயர்வறக் கண்டே மதியொளி நோக்கி
ஒளிமதித் திறனால் ஒள்ளியல் இயலாய்
வெளியியல் கலையாய் விண்கலை ஆக்கம்
அளிநிலைக் கலைத்திறன் அறுபான் நான்கியல்
ஒளிவெளி நோக்கி வயங்குறு மாற்றல்
களிகொளக் கூர்ந்தே கலைநிலை யுணர்ந்து
ஒளிக்கலை மூலம் உள்ளகம் நோக்கி
மூலத் தெழுங்கனல் முக்கனல் ஒளியின்
கால விரைவியல் நாற்புறத் தைந்தியல்
எட்டின் பிறழ்வே இயல்நிலை யாற்றல்
எட்டே எண்ணிலை எண்ணெறி யாக்கம்
எட்டுறும் நிலைக்கலை இயல்புறத் தேர்ந்தே 832

முயற்சி காலம் முப்பொருள் கூட்டும்

முயற்சி மூலம் நெறிப்பொருள் ஆக்கும்
முயற்சி தீவினை முறியடித் தியலும்
முயற்சி நல்வினை ஆக்கம் கூட்டும்
முயற்சி நெறியால் முன்னிய தோர்ந்தே
முயலல் முயலல் முன்னுறு நெறியாய்
அயர்விலா துழைக்கும் அறிவியல் ஆக்கம்
முயற்சி யொன்றே மெய்ப்பயன் கூட்டும்
உணர்வில ரேனும் முயற்சி யொன்றால்
உணர்நெறி கலைநெறி எய்துவர் உண்மை
எத்தகு வினைக்கும் இயலுறு முயற்சி
நத்துறும் நெறியால் நற்பயன் கூட்டும்
முயற்சி யொன்றே வீரம் நல்கும்
முயற்சித் திறனே ஆண்மை கூட்டும்
முயற்சி வலியே ஐம்புல வலிமை
முயற்சி யுற்றோர் மயல்நெறி யுழலார்
முயற்சி யியலால் மயன்நெறி கண்டே
உயர்ச்சி ஆக்கம் உறுபொருள் பெற்றே
இயற்கை யாள்வலி செயற்கை யறிவலி
செயற்கை நோக்கி இயற்கை யாய்ந்தே
மயலறும் உளத்தால் மதிநிலை வுற்றே
ஆள்வினைத் திறனுறும் அறிவுறும் முயற்சி
சூள்நிலை வாள்நிலை நூல்நிலை தேர்ந்தே
கோள்நிலை மாற்றி காலம் வென்றே
நாள்நிலை வெற்றி நண்ணும் பெற்றி
உற்ற மாந்தராய் வாழ்வியல் நோக்கிக்
கற்றபே ரறிஞர் கலைத்திறன் தெரிந்தே
முயலல் மாந்தர் முதல்நெறி யியலாய்
காலமும் இடமும் பொருளும் ஆய்ந்து
காலங் கணித்தே உழைப்புறும் முயற்சி
நண்ணிய கூட்டும் நன்னிலை முயற்சி
நண்ணிய கூட்டும் இயல்நிலை முயற்சி
உற்றுறும் அறிவால் முயற்சி நாடல்
வெற்றி காண்டல் பெருநெறி யியல்பே 853

உறுதியும் முயற்சியும் உழைப்பும் உணர்வும்
அறுதியிட் டறைநிலை ஆக்க முடிபெனாஅ
எண்ணமும் எழுச்சியும் இயல்பிறப் பென்றே
என்னுறுங் கலைநிலை நெறியியல் ஆய்ந்தே
உள்ளக் கிளர்ச்சி உற்றுணர் மலர்ச்சி
உள்ளல் உன்னல் ஓங்கிக் கருதல்
நீள நினைதல் நெடிதின் ஆய்தல்
நீளமும் அகமும் நெறியுற் றாய்தல்
கடிதின் உணர்தலும் நெடிதின் நோக்கலும்
படிநிலை யுன்னிப் பாங்குற் றாய்தல்
அசைவிலா முயற்சி நசையறு வீரம்
வசையிலாப் பெரும்புகழ் வளைவியல் கூட்டும்
திறமும் அறமும் செயலும் முன்னி
மறமும் இயலும் உணர்வும் பெற்றே
வாளும் தூளும் வகையுற் றாய்ந்தே
தூளும் உழைப்பும் திருவுற நோக்கி
நாள்நிலை நீக்கி நவையறுஞ் செயலால்
கோள்நிலைக் காலம் குறித்துறா தாக்கம்
எண்முறை எண்ணி இயல்புறும் மெய்வினை
திண்ணம் உணர்ந்து செய்முறை செய்வோர்
காலமும் வாழ்வியல் வளமுங் கருதி
ஞாலம் ஆள்நெறி காண்டல்மா நெறியே 855

வீரமும் உணர்வும் வெற்றியின் ஆக்கம்
ஈரமும் பண்பும் உளத்தியல் பாங்கே 859

துடிப்புணர் வோங்கி தூயமா நிலையறி
வெடிப்புணர் வோங்கி வினையியல் ஆய்ந்தே
உணர்வின் மெய்த்திறம் உழைப்புறும் காலம்
உணர்கலைக் காலம் செய்முறை ஆக்கம்
காலமும் மூலமும் கடிதின் நோக்கி
காலக் கணக்கியல் கருதுமா நெறியால்
உணர்வுறும் ஆற்றல் உழைப்பியல் திறனிலை
உணர்நிலைக் கலைநெறி உன்னியல் மதிநிலை

ஆறுபே றறிவால் ஐவகைத் திறமுறும்
கூறுகூ றியலும் குறித்துறுந் திறனே
வாழ்வியல் கலையால் வளமுற வகுத்து
ஆழ்மதி அகல்மதி கூர்மதி ஆய்ந்தே
உன்னல் உள்ளல் கருதல் நோக்கி
முன்னல் துன்னி முன்னியாங் குணர்தலும்
அறுவகை யறிவால் ஐங்குடி நிலையும்
உறுவகைத் திறனால் விண்ணொளி நோக்கி
எண்வகை யியல்தெரி கலைநிலை யாக்கம்
விண்வகை முதலாய் விளங்குற நோக்கி
இடமும் பொருளும் காலமும் ஆய்ந்து
இடத்துறுந் தன்மை இயல்புற் றாய்ந்தே
ஒளிப்பொருள் ஒலிப்பொருள் ஒங்குற் றுணர்ந்தே
வெளிநிலை யியலால் மெய்யறி வார்ந்தே
உணர்வால் ஒளியும் அறிவால் இயலும்
உணர்கலைத் திறனால் உழைப்பியல் நாடி
உழைத்துழைத் துன்மை நாடுறும் இயலால்
உழைநிலை நுட்பம் உணர்த்தல்மா நெறியே 861

உள்ளக் கிளர்ச்சி எழுச்சி மலர்ச்சி
உள்ளல் உன்னல் ஓங்கிக் கருதல்
நெடிதின் நினைந்தே கடிதின் உணர்தல்
படிநெறி நோக்கிப் பார்நிலை ஆயல்
குடிநிலை நோக்கிக் கூர்த்தமா மதியால்
விடிவும் முடிவும் வியநிலை நோக்கிக்
கருங்குடி வெண்குடிச் செங்குடிப் பைங்குடி
அருங்குடி நோக்கி ஐங்குடி நுட்பம்
கருநிலை மூலத் தியனிலை ஆய்தல்
ஒருநிலை யியலால் உள்ளகப் பெருவெளி
அகவின் ஆற்றல் அகவெளி தேற்றம்
மிகுநெறி நோக்கி மெய்நிலை உணர்தல்
உணர்நெறி மூலம் உணர்கலை அறிந்து
உணர்வே ஆற்றல் உயிர்க்கலை நிலையாய்

உணர்வே பேரொளி உள்நிலை நோக்கி
உணர்ந்துறும் மெய்க்கலை மெய்ப்பொருள் நாடி
அகத்துறும் வையம் புறத்துறும் ஞாலம்
மிகுத்த பேரொளியால் வகுத்துறும் மாற்றம்
கலையே யியலால் கருத்துறும் திறனால்
தலைநெறி கலைநெறி தனிநெறித் தன்னெறி
ஐந்தொழில் ஐங்கலை தொழிலியற் கலையாய்
ஐந்துறும் எழிலியல் ஒளியியல் நோக்கி
வண்ணமும் எண்ணமும் வகையுற நோக்கித்
திண்ணமும் முயற்சியும் செறிவுற் றோங்கி
உள்ளத் துணர்வே ஒருபெரும் மூலம்
உள்ளல் அகவெளி மூலமா நெறியே 867

ஊழை வெல்லும் உறுதியும் உண்மையும்
ஆழ்மதி உணர்வும் அகலுறும் உணர்வும்
பாழ்மதி நீக்கி வாழ்மதி தேக்கி
விழ்மதி மாய்த்து வளர்மதி நோக்கி
குறுமதி யழித்தே பெருமதி வளர்த்தே
உறுமதி பெருக்கி உற்றுறும் உணர்வால்
மதிஒளி ஆற்றல் மாண்புறத் தெரிந்தே
மதிநிலை யுணர்வும் உணர்மதி யாற்றலும்
கலைமதி யொளியும் நிலைமதி யறிந்தே
தலைமதித் திறனும் தனிமதி நுட்பமும்
நிலையுளம் நெறிமுறை நேர்பெற் றிலங்கி
கலையுளம் விரமும் உணர்வும் இலங்கி
காலமும் மூலமும் கணக்கின் ஆய்ந்தே
மூலப் பொருள்நிலை இடநிலை தேர்ந்தே
உழைப்பியல் நெறித்திறன் உன்னுவ உன்னி
உழைப்புறும் உண்மை ஊழினை வெல்லும்
முயற்சி பெருந்திறல் நல்குவ தியலாய்
அயர்வினை நீக்கி ஆற்றலும் ஆண்மையும்
செயிரறும் மதியும் தீதுதீர் செயலும்
மயலற நோக்கி மயன்நெறி ஓர்ந்து

அயன்நெறி யாற்றும் ஆற்றலும் ஆண்மையும்
செயலால் காண்டல் சிரொளிக் கலைநிலை
நுட்பம் என்றே நுண்ணிதின் உணர்ந்தே
பெட்புற் றாய்தல் அறிவோர் நெறியே 883

ஒளியுணர் நிலையால் வெளியுணர் வோங்கி
அளியுணர் நிலைகலை ஆக்கமுங் கருதி
வளியுணர் திறத்தால் வண்மை உணர்ந்தே
களிநிலை யியற்கலை கருத்துற் றாய்ந்தே
வெளியுணர் திறத்தால் விளம்பல்மா நெறியே 887

அறிவியற் கலையும் அருளியல் நெறியும்
பொறியியல் நெறியும் தெருளியற் குறியும்
நெறிமுறை தொழிற்கலை பொருளியல் நுட்பமும்
குறிமுறை யுழைப்புறும் குறியுணர் வோர்க்கே 888

எண்ணம் எழுச்சி கிளர்ச்சி மலர்ச்சி
திண்ணம் உணர்வே சிரறி வுற்றே
அகநோக் குணர்வுறும் ஆண்மையும் ஆற்றலும்
மிகுநோக் கொளிநலம் மெய்யியற் றிறனே 889

மூலக்கனல்

மூலக் கனலை முன்னி யறிந்தே
கோலப் பைங்குடி செங்குடி யாய்ந்தே
ஐங்குடி நிலையுங் கலைநிலை தேர்ந்தே
பொங்குறு முணர்வா லோங்குறு மாற்றல்
ஓம்ஒலி யாகி ஓம்ஒளி யாகி
ஓமிசை யோங்கலை ஓம்மொழித் திறனாய்
விண்மொழித் தமிழ்நிலை எண்மொழித் தமிழ்நிலை
விண்வெளி மொழிநிலை ஓம்ஒலி யிசையாய்
கண்டுறு மாற்றல் கலைநிலைத் தெரிவாய்
விண்டுறும் மூலக் கலைநிலை யாய்ந்தே
மூலம் மூலத் தியல்நிலை யாய்ந்தே
மூலம் மூலத் தியல்நிலை யாய்ந்து
கோல வானி னோசையுந் தேர்ந்து
வானிய லொலியுந் தானிய லொளியும்
வான்கலை மொழியென விண்வெளி தேர்ந்தே
அகவிண் ணகவெளி மெய்ந்நிலை யுணர்ந்து
மிகுமொளி மூலக் கனல்நிலை தேர்ந்து
உற்று நோக்கி னுள்ளூறும் நெறிவிண்
தெற்றெனத் தெரியின் சீர்நிலை புறவிண்
இருவிண் ணோசைப் பெருநிலை யொலியாய்
ஒருநிலை ஓம்ஒலி ஓம்ஒளி யியலாய்
ஓசை மொழியா யொலிஒளித் திறனாய்
மாசறத் தெரிக்கும் இயல்நெறி முறையே 646

மூலம் கனல்தெரி மெய்ம்மை ஆற்றலால்
மூலப் புள்ளி மாநெறி தெரிந்தே
மூலம் முற்றும் முழுமை அறிந்தே
மூலத் தியல்நிலை எண்ணெண் கலையால்
கால வியல்தெரிக் கலைநிலை நுணுக்கம்
காலக் கணிநிலை முறைமையினோர்ந்து
மூலப் புள்ளி யியல்நிலை ஆற்றல்

மூல் துண்பொருள் மேவுறுங் கலைநெறி
எண்ணொண் கலைத்திறன் இயல்நிலை ஆற்றல்
எண்ணே எட்டே நெறிமுறை விளங்கி
விண்ணே ஒளியே வியனிலை நோக்கி
விண்ணொளி நெறிநிலை அகவின் ணொளிக்கலை
எண்ணொளி இயலொளி கணிநிலை ஆய்ந்தே
கோளக் குறிப்பின் கூர்நிலை ஆய்ந்தே
நீளம் அகலம் நெடுமை குறுமை
எண்ணிலைக் கணிநெறி இயல்புற் றோர்ந்து
தெண்ணிலை மையம் வையமுந் தேர்ந்து
அறுபான் நான்கியல் இருகூற் றியல்நெறி
உறுமுன் றியலாய் ஐயைந் தியற்கலை
உற்றறி வுற்றே உறுநெறி தேர்ந்தே
சிற்றறி வியலும் பேரறி வாற்றலும்
நுணுக்கம் கணுக்கம் குறுக்கம் இயல்நிலை
துணுக்கமும் கால்அரை முக்கால் அரைக்கால்
காணிமா காணி கணிநிலை இயலின்
காணிக் கூர்நிலை கலைநிலை ஒட்பம்
ஒன்றே இரண்டே மூன்று நான்கே
நன்றுறும் ஐந்து மாறே ழெட்டே
எட்டே ஏழே ஐந்துமுன் றொன்றே
எட்டுறு மியல்நிலை நெறிமுறை கூர்ந்து
அளவை ஆற்றல் அறிவுறத் தெரிநிலை
அளவிய லொன்றுறு மாக்கமு மாய்ந்து
கலைநிலை நெறிமுதல் கருத்தென் றோர்ந்து
நிலைநெறி இயக்கம் நினைப்பி னுணர்ந்தே
எண்ணு மெழுத்து மியல்தெரி வுற்றே
விண்ணும் மண்ணும் வெளிப்பட வுணர்ந்தே
உள்நிலை இயக்கும் உறுமுறைக் கணிநிலை
தெளிநெறித் தேர்ந்து எண்ணிலை மூலம்
நுண்ணிதின் முயன்று மூலமுங் கணிநிலை
எண்ணெறி ஆற்றல் எண்ணொளி மூலம்
கண்டுணர் நுட்பம் கருத்துணர் திட்பம்
விண்டுண ரியல்நெறி விளக்க மாநெறி 693

அணுவியல்

அணுத்திரள் ஒலியாம் எழுத்தியல் ஒர்ந்தே
அணுக்கலை நுட்பம் ஒலியொளித் திண்மை
அணுக்கூ றியலும் அணுமுதற் பொருளும்
அணுக்கலை நோக்கும் அறிமுறைப் பயனும்
நிறைவுற நல்கும் அணுக்கலை நூலே 100

அணுவணு வாய்ந்தே அணுப்பொருள் தேர்ந்தே
அணுமுலக் கலைதெரி யாற்றல்
அணுவுள் எணுவறி யருங்கலை நுட்பம்
அணுக்கலை நுணுக்கம் கணுக்கமு மாய்ந்தே
நுணுக்கத் தியலறி பான்மை யறிந்தே
அணுநெறி யாய்தல் அருங்கலை யியல்லே 488

அணுஅணு இயல்நிலை அகத்துள் உணர்ந்தே
அணுவுள் எணுவும் ஆர்ப்புறும் மெய்நிலை
ஒர்ந்து நோக்கின் காலத் துறுபயன்
இடம்பொருள் எண்மை இயல்பெறத் தோன்றும் 543

எண்கலை நுட்பம் இயல்புற் றாய்ந்தே
விண்கலை இயல்தெரி விளக்க மாநெறி
நுண்கலை உணர்வால் முலப் புள்ளி
விண்தெரிச் சீர்நிலை உள்விண் நோக்கி
ஒளிஒலிக் கூர்நிலை ஒலிஇய லாய்ந்து
வெளிவளித் திறனிலை மெய்ம்மை இயலாய்
அணுத்திற னாக்க மாய்வுறும் முறைநிலை
அணுஅணுக் கூறியல் அணுக்கதிர் இயக்கம்
அணுஒலி அணுஒளி அணுநிலை அறிந்தே
அணுத்திரள் நிலைத்திறன் இயல்புறுந் திறத்தால்
ஒருநிலைக் கலைநிலை இருநிலை முச்சே
வருநிலைக் காற்றியல் வகையுற் றாய்ந்தே
அகவிண் ணோக்கி ஒளிநிலைத் தெளிகலை

மிகும்ஒளி ஒலிநிலை உற்றறி திறத்தால்
எட்டெட் டியல்நிலை இனிதுற் றோர்ந்தே
முட்டறும் மெய்நிலை உணர்வுறுந் திறத்தால்
கலைநிலை நெறிமுறை கருத்தறி இயக்கம்
நிலைமுறை ஆய்ந்து நெறிகுறி இயற்கலை
உலைவிலா முயற்சி உணர்வுறுந் திறனெறி
நிலைஎழும் மெய்த்திறன் எண்ணெறித் திறத்தின்
உற்றறிச் சீர்நெறி உள்ளு ளுணர்ந்தே
தெற்றென உணர்தல் மாநெறி இயலாய்
அறுபான் நான்கின் ஆக்கமா மூலம்
உறுநிலைக் கலையியல் உண்மை வழக்கே 701

நுணுக்கம் நோக்கல் அணுத்திறன் ஆக்கம் 851

கணக்கியல் மூலம் கலைநிலை யுன்னி
கணக்கியல் காலம் நோக்குபு நோக்கி
கணக்கியல் ஆற்றல் கருத்துறும் தேற்றம்
பிணக்கறும் அறுபான் நான்கியல் பெருநெறி
அண்டமும் பிண்டமும் அமைவுற் றாய்ந்து
கொண்டுணர் பெருங்கலை கூர்மதித் திறத்தால்
விண்டுணர் நெறிக்கலை வெளியியல் அணுத்திறன்
கண்டுணர் கலைநிலை கூரணு நேரணு
சிற்றணு செறியணு திருநிலை யணுத்திறன்
உற்றுறும் பேரணு அணுக்கலை நெறியால்
அணுஅணுத் திரள்நெறி ஆய்முறை ஆய்ந்தே
அணுஅணுக் கலைநெறிக் கலைத்திறன் மூலம்
நடுவுறும் திறநிலை நன்னும் திறனெறி
நடுநிலை மையம் புள்ளி யோர்ந்தே
ஒருநிலைக் கணக்கியல் ஐந்துறும் திறங்கூர்
வருநிலை மெய்க்கலை அறிவுற் றோர்ந்தே
கணக்கியல் எண்ணிலை கலைநிலை யியலாய்க்
கணக்குங் கலையும் அளவும் நோக்கி
அளவியல் நிலைதெரி அறுவகைத் திறனும்
அளவுறும் நுட்பம் அருங்கலை நுண்ணியல்

எண்ணிலை யியலால் இயங்கு மாநெறி
நண்ணுறும் மூலத் தியல்நெறி யாற்றல்
தொன்மை மாக்கலை தூநெறி யாய்ந்தே
தென்கலைச் சிற்றவை மாநெறி நட்பம்
தென்றமிழ்ச் சிற்பம் எண்ணெண் ணியலே 873

எண்கலை நுட்பம் இயற்றிறன் நோக்கி
எண்கலை விண்மொழி வெளிநிலை வெளியியல்
ஒளிநிலை யாக்கம் ஒலிநிலைத் தேற்றம்
ஒளிக்கலை மூலம் ஒளிவெளி யாற்றல்
உணர்முறை உணர்ந்து கலைத்திறன் நோக்கி
உணர்கலை யாற்றல் உன்னுவ உன்னி
ஒளியும் ஒலியும் வெளியும் வளியும்
அளியியல் கலையியல் களியியல் கருதி
நோக்குறும் ஆற்றல் மெய்நிலை மாநெறி
ஆக்குறும் கலைத்திறன் அறிகலை இயல்நெறி
அணுத்திரள் அணுக்கலை அணுக்கூர் ஆக்கம்
அணுஅணு நேரணு கூரணு சீரணு
அணுக்கலை யியலால் அண்டமும் ஆக்கும்
அணுக்கலை யியலால் பிண்டமும் கூட்டும்
பருநிலை மூலம் பெருநெறி நோக்கி
ஒருநெறி உன்னி ஐங்கண் ஆக்கம்
கருநெறி யியலால் குய்யம் மேலாய்
பருநெறி யியலாய் ஐங்கண் நிலையுறும்
மெய்நிலை நோக்கி உய்நிலை ஆய்ந்து
செய்நிலைக் கருதி இயல்வினைத் திறனால்
நுட்பங் கருதி நுணுக்கம் ஆய்ந்து
நுட்பம் ஆய்தல் ஒளிநிலைக் கலையே 878

நாற்புறத்தியல்

நாற்புறத் தியல்தொறும் ஐங்குறி யாகி
நாற்புறத் தெண்ணெண் இயல்கலை யோங்கி
வலமுறும் ஆக்கம் வளிநிலை சுழன்று
நலமுறும் நிலைக்கலை நெறிமுதற் றென்ப 157

அறுபான் நான்கும் அமைவுறக் கண்டே
அறுபான் நான்குறும் ஐந்தியல் ஆய்ந்தே
உறுநிலை எழுத்தியல் ஒளிமுறை தெளிந்தே
பெறுமுறை நாற்புறத் தியல்தொறும் அமைத்து
அறுபான் நான்கியல் நிலையுறத் தேர்ந்தே
உறுகலை நாடல் உயிர்நெறித் திறனே 160

புள்ளிக் குறிநிலை பொருந்த வறிந்தே
தெள்ளும் நாற்புறத் தியலறி வாற்றல்
வின்ளூறு மைந்தாய் வெளியியல் சுழலல்
தெள்ளூறுங் கலைநிலை விரைவுறு மாற்றல்
நுண்ணிதின் உணர்ந்தே நவையறத் தெரியின்
விண்கலை நாட்டம் விளங்குற விளங்கும் 329

அண்டம் ஆழி அணிகிளர் வெற்பும்
மண்டும் பெருநிலம் வளைநிலை யாறும்
செடிகொடி மரநிலை சிருயிர் பேருயிர்
இடியுறும் மின்னல் பெருமின் னொளியியல்
மின்னொளி யியல்நிலை தன்னொளிக் கலைநிலை
தென்றல் வளிநிலை தென்றிசை யியல்நெறி
நாற்புறத் தியல்நிலை நன்னிலை ஞாலம்
நாற்புறத் தெண்ணிலை தொன்னிலைக் கோளம்
கல்மண் பெருமணல் நுண்மணல் சிறுகல்
வல்நிலைப் பாறைச் செம்மண் கருமண்
மண்ணியல் ஆய்வும் விண்ணியல் ஆய்வும்
எண்ணியற் கலையும் நுண்ணியல் நுட்பமும்

எரியுறும் வளிநிலை வளியுறும் எரிநிலை
தெரிநிலை அனல்புனல் கனலெரி யாக்கம்
நீர்நிலம் விண்வளி எரிநிலை ஐந்தும்
தேர்நிலை உண்மை செங்கதிர் தண்கதிர்
விண்மீன் விண்ணொளி விண்ணொலி விண்ணியல்
அண்டமும் பிண்டமும் ஆருயிர் சீருயிர்
நேருயிர் நிலையுயிர் நெறியுயிர் குற்றுயிர்
காருயிர் கனியுயிர் உயிரினக் கூட்டம்
புள்ளினத் துயிரும் விலங்கினத் துயிரும்
உள்ளுறும் மக்கள் உயிரும் நோக்கி
பல்வகைப் பேருயிர் சீருயிர் அறியுயிர்
தொல்லுயிர் நல்லுயிர் நுட்பங் கருதி
உயிர்நெறி யாய்ந்து உணர்நெறி நோக்கி
மயல்நெறி நீங்கல் மயனெறி மரபே 881

காலக் கணக்கியல்

திண்ணிய உளமும் உழைப்புணர் வுற்றே
நண்ணுவர் காலத் தியலறி மக்கள் 93

காலக் கூறும் நிலத்தியல் பிரித்து
ஞாலக் கோலம் நன்னெறி நோக்கி
மூலம் உரைத்தல் மெய்நெறி வழக்கே 96

காலத் தியலை கணக்கறித் துணர்ந்தே
கண்ணிமை கைந்நொடி மாத்திரை யளவாய்
சீலத் துன்னி ஒலிஇசை நெறியை
கோலக் கட்டியல் குறிப்பது மரபே! 112

காலமும் பொழுதும் கணக்கியல் நெறியாய்
மூலமும் பொருளும் மெய்ப்பொருள் இயலாய்
கோலமும் சீலமுங் குறித்துக் காட்டும்
ஞாலத் தியலின் நுண்ணுணர் கலையே 130

எட்டெட் டியலால் இலங்கி மையம்
திட்பமெட் டெட்டுமாய் நுட்பமெட் டெட்டுமாய்
காலம் விளக்கும் கணக்கியல் நுண்மை
சீலம்ஐந் தைந்தும் தெளிந்துணர் நெறியின்
ஞாலம் சுழலும் காலம் அறிந்து
கால நுட்பங் கணித்தறி மக்கள்
கால முணர்மதி நுண்ணிய ராவரே 131

மூலப் பொருளே நிலையியல் நெறியாய்
கால நுட்பங் கருதரும் உளத்தால்
சீலம் இயற்றும் கோலத் திறனாய்
ஞாலம் ஆள்வதும் எட்டெட் டியலே 132

காலத் தியலைக் கணக்கறிந் தாய்ந்தே
சீலம் மூலம் கோலமுற் றுணர்ந்தே
ஞாலந் தெரிவரே நற்றமிழ் ஓம்ஒளி
கோலத் தமிழால் குறித்தறி வரே 143

நொடிநொடி மூலம் நெடிதுற நோக்கின்
நொடியும் இமையுங் காலங் குறிக்கும் 175

காலக் கூறே கணக்கிய லாகி
சீலங் குறிக்கும் எட்டெட் டியன்றே
மூலமும் ஞாலமும் முறையின் விளக்குபு
எட்டியல் பெருக்கும் அளவை யியலே 176

காலத் தியல்பொழு தாமுறை நோக்கி
கால நுண்கலை கைநொடி தேர்த்துகள்
மூலமும் அளவை முயன்றினி தாங்கு
மூலம் மூலத் தியல்நெறி நுட்பமும்
கோலத் தன்மை குறிப்புறக் கிளக்குபு
சீலம் ஆய்வரல் பொருண்மை சுட்டி
கோடுறும் வரிவியல் குவிப்புறக் கூட்டி
நாடுறும் மெய்ப்பொருள் எண்ணிலை நெறியால்
வையம் கூட்டும் வளர்கலை ஆற்றல்
மெய்ப்பொருள் நுண்மை அறுபான் நான்கென
எண்ணெண் ணியலால் எண்கலை நுண்ணிதாய்
எண்கலைப் பருநெறி பெருநெறி ஓர்ந்தியல்
நுண்ணிதின் நுட்பம் நுவன்றன வாக
எண்ணிதின் ஒளிக்கலை உணர்வுறும் திறனே 189

காலத் தின்மை கணக்கியல் அறிந்தே
கால நுட்பமும் ஒவைமாத் திரைளால்
கணக்கறி நுட்பம் வழுத்துமா நெறியே 203

காலப் பொழுதைக் கணக்குற வாய்ந்தே
கருத்துறுஞ் செஞ்சொல் பொருளும் நுணுக்கம்
ஒருபொருள் பல்பொருள் பெரும்பொருள் நுண்பொருள்
பருப்பொருள் கருப்பொருள் விழுப்பொருள் நோக்குழி
பொருளுறுந் திறனே புகல்நிலை என்ப 219

காலமுங் களமுங் கருத்திற் கொண்டே
நூலுணர் விரிவுரை நுவலுவ ராகி
ஞாலமும் விண்ணும் நவையறத் தெரிப்பர்
சீலம் சிறக்கும் செந்தமிழ் மேலோர் 243

நொடிப்பொழு தியல்நிலை நெடிதுறக் கண்டே

கடிதுறும் கால வரைநிலை யோர்ந்து
காலத் தியலல் எண்ணெறிக் கூற்றென
மூலத் தின்மை நன்குணர்ந் துன்னி
உள்ளுறும் ஆற்றலால் உள்ளுவ உள்ளி
தெள்ளுறும் சீர்நிலை நேரசை ஆய்ந்தே
விள்ளல் தேர்த்துகள் காலம றிந்தே
துள்ளல் தேர்க்கொடி இயல்நிலை ஓர்ந்தே
காலமா தெறிநிலை கருதுதல் மரபே 250

காலத் துடிப்பே கலையுணர் வோங்க
மூலத் தெழுமியல் முன்னெறி வகுக்கும் 252

காலம் வகுக்கும் இடமும் பொருளும்
கோலத் தெண்ணிலை குறிப்பின் தெரித்தே
மூலப் புள்ளி முன்னிலை கூட்டும்
சீலம் உணர்ந்தே தெள்ளிதின் நாடி
வகுத்தியல் காலம் வகையுற வுணர்ந்தே
வகுத்தியல் நெறிமுறை திருவினை புரிவோர்
ஊழை வென்று உள்ளொளி காண்பரே 255

காலத் தாலறி நுட்பமும் திட்பமும்
ஞாலங் கூட்டும் நெறிமுறைத் திறனே 256

காலஞ் சுழல்நிலை விரைவுறும் திறனறி
சீல நுணுக்கச் செயலறி மக்கள்
மூலம் உணர்ந்தே முன்னுவ எய்துவர் 257

காலஞ் சுழல்நிலைக் கணக்கியல் வகுத்தே
மூலத் தொளிநிலை முன்னியாங் கோர்ந்தே
சீலத் தெண்ணியல் எண்கலை நுட்பம்
கால விரைவியல் வரைவியல் தெரிவதே 258

சிற்றவை யொளிரும் ஐந்தைந் தியலும்
உற்றறி வாலறி நுண்ணறி யோர்ந்தே
கற்றறி வுணர்கலை நெறியுணர் திறனால்
பெற்றுறும் பேரறி வுற்றுக் கிளர்ந்தே
அறுபான் நான்கியல் அமைவுறத் தெரிந்தே

உறுமுறை விழுமதி யாற்றல் ஓங்கி
என்னோ என்னிலை என்கலை எட்டின்
விண்ணிலை கூட்டும் மெய்க்கலை ஒளிர
அசைவின் திறமுணர் ஆற்ற லுணர்ந்தே
நசையிலாக் காலம் நெடிதுணர் வாரே 259

கால முணர்ந்தே கருத்துறும் அறிவர்
மூலப் புள்ளி முற்றினி தோர்ந்தே
எண்ணொண் இயலுறும் அசைநிலைத் திறத்தால்
விண்மண் நிலையறி விரைவினி துணர்ந்தே
எண்ணுறுந் திறனும் எழுத்தறி நுட்பமும்
கண்ணுங் கருத்துமாய்க் கலைநுகர் வாரே 260

நொடிநொடிப் பொழுதும் ஐந்தொழில் இயங்கும் 267

கண்ணிமை வழிக் கலையுணர் காலம் 268

வினைத்திறன் இயல்நிலை தொழிலுணர் நிலையால்
நினைப்புறுந் திறமே நெறிமுறை யாகி
காலக் கூறே கருத்துறத் தோற்றி
கோலமும் குறிப்பும் குறிப்பின் உணர்த்தி
மூலத் தொளிரும் மெய்நிலை கூட்டும்
கால விரைவின் கடிதுறும் ஆக்கம் 270

காலச் சுழலுறும் தென்றிசை நிலையே
கால மூலம் தென்நிலை கண்டே
எண்ணொண் கலையியல் வலமிடச் சூழலை
திண்ணறி வுணர்த்தும் மெய்க்கலை நுட்பம் 274

காலமும் இடமும் கண்ணெறி தேற்றம்
மூலப் புள்ளி முன்னெறி கூட்டி
சீலம் விளக்கும் கோலம் கிளக்குபு
ஞாலத் தியல்நெறி நன்னிலை யறிதலே 283

கால நுணுக்கம் கருதரும் தேற்றம்
சீலத் தியல்நெறி கலையுணர் வோங்கி
எண்முறைக் கலையின் இனிதுறும் ஆய்வால்

விண்ணெறி ஆற்றல் வியப்புறும் துணிவே
மூலம் காண்டல் முன்னிய முன்னி
ஞாலத் தியல்நெறி நவில்வதும் மரபே 289

கண்ணிமை நொடிக்கலைக் கால மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் நுண்மதி யுற்றே
கண்ணிமை கூட்டும் காலத் தியலால்
எண்தரு கலைபல யியல்விளக் கும்மே 319

கண்ணிமைக் கைந்நொடிப் பொழுதே ஊழியாய்
விண்ணிமைப் பொழுதும் மண்ணிமை யாற்றலும்
நுண்ணிதின் உணர்ந்தே நுவலரு மாற்றல்
எண்கலை யுணர்த்தும் இயல்பிற் றென்ப 320

காலமுங் களமும் கருத்துற நோக்கி
சீலமுந் தேற்றமும் தெரிந்துணர் நெறியால்
மூலமும் ஞாலமும் முயன்றினி தாயக்
கோலங் குறித்தல் குறிப்புறுந் திறனே 324

இமையா நோக்கே அமைவுறுங் காலம்
காலமும் பொழுதும் கணக்கியல் நெறியாய்
மூலம் துலங்க மெய்க்கலை யுணர்நிலை
சிறுபொழு தியலும் பெரும்பொழு தாற்றல்
உறுநிலை குறித்தாங் குணர்வண வுணர்ந்தே
நொடித்திற னாக்கம் நுண்ணிதி னோர்ந்து
கொடித்திற வலியியல் கூர்மதி நோக்கி
தேர்த்துகட் பொழுதே ஆர்ப்புற வாய்ந்து
கைவிரற் பொழுதியற் கலைநிலை நோக்கி
மெய்யுணர்ந் தறிதல் மேலோர் இயல்பே 330

குறிநிலைக் காலம் குறித்துறு மியலால்
அறிபொழு தியல்நிலை விரைவுறுந் திறனிலை
குறித்தியற் காலம் குறிப்புற நோக்கி
நுண்கலைத் திறத்தால் நுண்ணிதின் உணர்தல்
எண்கலைத் திறமுறும் இயல்நெறி யாற்றலே 340

காலக் கூறே நாளிர வாகி

கோலங் காட்டுங் குறிப்பிற் றென்ப 341

கால மியற்றும் கலைநிலை யோர்ந்தே
காலங் கூட்டும் இடநிலை தேர்ந்தே
மூல நுண்பொருள் முயன்றுறு மாக்கம்
சிலத் தெளிவாற் றேர்ந்துறும் அறிவியல்
கோலக் குறிப்ஞ்பின் குறிநிலை காட்டும் 343

ஓங்கலும் ஒடுங்கலும் நாளிர வாக்கம் 344

ஒடுக்கம் உணர்ந்தோர் இடுக்கண் தீர்வார்
நாட்பொழு தோங்கி நவையெலாம் நீங்கி
கூட்டுறும் காலக் கூற்றிய லறிவரே 345

இரவுறும் உணர்வே திறைகலை யாகி
கரவா நெறியுறும் மெய்ப்பயன் நல்கி
ஒடுக்க நுண்மையும் ஓங்குறும் எண்மையும்
வடுவியல் காலம் வளநிலை யாற்றலும்
காலத் திண்மை நுண்மை நோக்கி
சிலங் காண்டல் மெய்த்திறன் நெறியே 346

செஞ்ஞா யிற்றின் சிரெழு வண்ணமே
உஞற்று மெழுநாள் காலக் கூறே 347

கால மெய்வலி கடிதினி லுணர்ந்து
சிலக் குறிப்பின் தெரிமுறை தேர்ந்தே
ஞாலமும் விண்ணும் நவையற நோக்குபு
கோலத் தெண்ணெழுத் தியலறி வாரே 348

எண்ணுறுங் காலம் இயைபுறு மாற்றல்
எண்ணுறுந் திறத்தால் இயற்கைய தாகி
நுண்ணுறும் மூலம் நூன்முறை யாய்வோர்
எண்கலை நுட்பம் இயல்நிலை யறிவரே 350

ஓரெழுத் தொருமொழி ஒண்பொரு ளாய்ந்தே
தேர்க்கலை நுட்பம் பொழுதியல் கூர்ந்தே
காலக் கூற்றே கணக்கியல் மூலம்
கோலக் குறிப்புறும் எழுத்துணர்ந் தியைபால்

சீலம் தெரிக்கும் செறிநிலை யோர்ந்தே
மூலம் அறிவர் மொழிநிலை தெரிவரே 351

மூலமும் பொருளும் புள்ளியும் ஓர்ந்தே
காலமு மிடமும் பொருளும் வகுத்தே
கோலக் குறிப்பின் இயல்நிலைச் சீலம்
ஞாலத் திண்மை நயந்து காண்போர்
ஒளிக்கலை மாண்பை உய்த்துணர் வாரே 354

மூலம் நோக்கலும் முப்பொரு ளாய்தலும்
காலத் துணர்தலும் கருதருஞ் செயலால்
சீலங் குறித்தலும் கோலம் நோக்கலும்
ஞாலத் திண்மையால் நயப்புற நயத்தலும்
விண்ணொளிக் கலையின் மேவுறு மாற்றலால்
உண்முகம் நோக்கி உள்ளொளிர் தோற்றமும்
எண்முகத் திர்ப்பே இயைபுறு மாற்றலாய்
நண்ணுறும் நுட்பம் நவையறத் தேர்ந்து
அறுபான் நான்குறும் ஐங்கலை யியலும்
உறுநிலை யையைந் தியல்நெறித் தேர்வும்
காலங் கருதிக் கருத்துற நோக்கி
மூலத் திண்மை மெய்யுற விளக்கும் 367

காலமும் பொருளும் இடமுறத் தேர்ந்தே
மூலங் காண்டல் நெறிமர பியலாய்
கோலங் குறித்தே குறிப்புறும் நிலையாய்
காலங் காண்பர் கருத்துணர்ந் தோரே 386

இடமுங் காலமும் பொருள்நிலை துலங்க
இடத்துறும் பயனும் காலத் தாற்றலும்
பொருளுறுஞ் சிறப்பும் பொருந்த நோக்குகி
திருவினை யாற்றல் அறிவர் நெறியே 394

ஒளிநிலைக் கலையுணர்ந் தியலுறும் ஆற்றல்
வெளிநில விண்ணெறி மெய்ப்பொருள் உணர்த்துறும்
உள்ளுணர் திறத்தறி எண்ணெண் ணியலும்
தெள்ளுற நோக்கிக் காலத் தியல்நெறி

விரைவுறும் சுழல்நிலை விளங்குற விளங்கி
திறமறிந் தாய்வர் சீரறி வோரே 402

கால நுட்பங் கடிதின் உணர்ந்தே
மூலத் தியலறி முப்பொருள் தெளிந்தே
கலைநெறி ஓர்தல் நிலைநெறி மரபே 403

காலங் கருதாக் கருத்துணர் வோங்கி
மூலத் தியல்நெறி முனைப்புறுந் திறனால்
என்னுறு மெண்ணே எண்ணத் துணர்வாய்
விண்ணுறு மொளித்திறன் மேவுறு மாற்றல்
கண்ணொளி விண்ணொளி கலந்துற வாகித்
திண்ணொளி நோக்கிச் சீர்நிலை யுணர்ந்தே
கால விரைவின் கணக்கிய லாய்ந்து
சில மாநெறிச் சீருறத் தெளிந்தே
மூலம் நோக்குவர் வளர்நெறி யோரே 411

காலச் செவ்விக் கலைநிலை யுணர்த்தும்
மூலச் செவ்வி முப்பொரு ளியக்கும்
காலமும் மூலமும் கடிதுற நோக்கிக்
கால நுட்பம் கருத்திடிய லாக்கம்
மூலப் பொருள்நிலை யைந்தறிந் தியங்கல்
ஐயைந் தியலால் விரைவுறுங் காலம்
மெய்யுணர் திறத்தால் காலப் பொழுதியல்
நொடிநொடி நோக்கி இமைநிலை யறிந்து
நொடியாற் காலச் செவ்வி நோக்குவோர்
படிமிசை யெண்ணெண் கலைதரு நுட்பம்
குடியுறக் காண்டலும் குறித்தல்மா நெறியே 431

இடமும் பொருளும் காலமும் நோக்கி
இடமுறுந் திறத்தால் வலித்திற னோர்ந்து
பொருளறி திறத்தால் மெய்யியல் நுணுக்கம்
கருத்துறுத் தேர்ந்தே கணக்கியல் நோக்கிக்
காலத் தியலால் நெறிமுறை பெருக்கி
ஞாலத் தியல்நெறி நன்னிலைத் தேர்நெறி

விளக்குற நோக்கி ஐங்கூர்ப் பெருக்கம்
எண்ணெண் நிலைத்திறன் கலைத்திற னொலியால்
எண்ணிலை யியலால் இயல்புமா நெறியே 434

காற்றறி நுட்பம் காலக் கூறாய்
நூற்றெரி பான்மை மெய்யுற நோக்குபு
காற்றுறும் முச்சே கடுகி விரைவுறும்
ஆற்றலு முணர்வுங் கலையியற் காலம்
காற்றுறும் வரவுங் கரப்புஞ் செலவும்
தோற்றமும் நோக்கித் தெள்ளிதி னுணர்ந்து
பெருநொடிச் சிறுநொடிக் குறுநொடிக் காலம்
ஒருநொடி யியல்பி னுள்ளுறு முணர்வே
ஊழிக் காலத் தியல்பென நோக்கி
ஆழ்நிலை யுணர்வால் கடுகுறுங் காலம்
கடிதும் நெடிதுங் கருத்துற நோக்கி
முடிபுற் றுணர்தல் மூவகை நோக்கி
ஐவகை யியலும்அறுவகைத் திறனும்
மெய்வகை யுயிர்நிலை யிலங்குறுங் தன்மை
கருத்துற நோக்குபு காலங் கண்டுழி
உருத்தெரித் தோற்றம் உள்ளுற நோக்கி
யுயிரொளி யுணர்வா லுண்மை காண்டல்
செயிரறச் செப்பினன் காற்றியற் கணக்கே 435

நொடிநிலைப் பொழுதே நுட்பம் நுவலும் 465

உடலு முயிரு மொருநிலைப் பொருளாய்
அடலுறுங் கலையா லறிநிலை யுணர்ந்தே
இடம்பொருட் காலம்நோக்குறு மாற்றலால்
உடலுயி ராற்ற லொருங்குணர்ந் துன்னி
ஆய்ந்துணர் நெறியா லகவுணர் வோங்கி
நோக்குறும் மெய்த்திற னொளிநிலைக் கலையால்
சீர்மை விளக்கிச் செறிநிலை கூட்டும் 466

ஊழி இமைநொடி பொழுதியல் ஒர்வோர்
ஊழை வென்றறித் திறனுறு வாரே 493

கால நுண்மைக் கருத்துணர் வோங்கி
மூலப் பொருளை முன்னி யாய்ந்தே
காலம் நல்கும் கருவினைத் திறனிலை
மூலம் கூட்டும் பெருவினை ஆற்றல்
காலத் தியலறிக் கலையை யுணர்ந்து
காலங் காண்டல் மெய்யுணர் வோர்தல்
காலப் பொழுதியல் கண்டுணர் நெறியால்
ஞாலங் கருதி நெறியுணர் வுற்றே
குறியுணர் வோங்கிக் குறித்துறும் நிலைநெறி
நெறிநிலை யியங்கும் நெறிமுதற் பொருள்நிலை
நினைப்பின் நினைந்து உள்ளூறு முணர்வால்
முனைப்பின் மாறா முதுணர் வோங்கிக்
கனைப்பி னியற்றுங் கடுவினை ஒன்றே
முனைப்பி னோங்கும் பெருந்திரல் நல்கும்
காலம் நுணுகுங் கணிமதித் திறனால்
காலத் தியலறி மெய்நிலை கூட்டி
எண்கலை மூலம் இயலுற வோர்ந்தே
விண்கலை நற்றிறன் மேவுறும் ஆற்றல்
இமைப்பொழு தியல்நிலை எண்நிலை ஆய்ந்து
இமையா நோக்கின் இயல்பின வாகி
நொடிநிலைப் பொழுதின் நுட்ப மறிந்து
காலப் பல்துளி கண்டுறு முணர்வால்
காலக் கூற்றியல் முற்றறி உணர்வே
காலம் பொழுதே நாளிரவாகி
காலை உச்சி மாலை நுட்பம்
கோலத் திறவின் குறிப்பும் நோக்கி
மூலப் பொருள்நிலை முன்னி யுன்னி
கதிரொளி நாள்நிலை உழைப்புறும் ஆற்றல்
மதியொளி இரவில் அறிவுறும் ஆற்றல்
நாட்பொழு துழைத்து நண்ணிய நாடி
நாட்டமும் நோக்கமும் நண்ணிய துழைப்பே!
இரவுறும் பொழுதில் உள்ளூற் றோர்ந்து
உரவுறும் அறிவுணர் நெறிகலை ஆய்தல்

ஒய்வறி யாநிலை உழைப்பின் திறத்தின்
ஆய்வுறும் நோக்கே மெய்நிலை மெய்க்கலை
காலக் கூற்றியல் கால வினையியல்
கால மியற்றுங் கருந்திறன் மெய்வினை
ஒர்ந்து தெரிந்து உறுபய னோக்கி
ஆர்ந்த காலத் தியல்நெறி நுட்பம்
உணர்மதி ஆற்ற லொளிபெற் றோங்கி
உணர்வுறும் மெய்நெறி நாடுவ நாடி
காலங் காண்டல் காலம் நோக்கல்
காலத் துழைப்பே மெய்ப்பயன் நல்கும்
எண்ணிலை திறனுறக் காலம் நோக்கி
கால மெய்யியல் நுணுக்கி ஒர்ந்து
காலங் குறிக்கும் பொருள்நிலை உணர்ந்து
குறிநிலைக் காலம் குறிநெறி நின்று
அறிகலை இயலா லாய்ந்து தெளிந்து
காலம் அறிந்தோர் மெய்ப்பயன் பெறுவரே 494

ஐயமுந் திரிபும் நீங்கி உளத்தால்
வையமும் மையமும் வகையுற வோர்ந்தே
மையத் தியல்நிலை நூலறித் திறனும்
வையமும் விண்ணும் வளர்நிலை நுட்பம்
நுண்ணிதின் உணர்ந்து நோக்குற நோக்கி
எண்ணுறுந் திறத்தா லியல்பினின் ஆய்ந்து
ஞால மாநெறி நடுவுறுந் திறனும்
கோல மூலம் குறித்துக் காண்டுழி
காலமும் மூலமும் கருத்தினின் ஒர்ந்தே
காலத் திடைவெளி மூலங் கருதி
நோக்குற நோக்குபு நுண்மதி யாய்வின்
ஆக்குறுந் திறனா லறிநிலை யோர்ந்து
அறிகலை யுணர்விய லகமுறத் தேர்ந்து
குறியாற் குறித்து நெறியால் நிலைத்தே
காலத் தூண்நிலைக் கருதிக் கருதி
மூலத் தூணியல் முன்னியு முணர்ந்தும்

எண்கலைத் திறனுறு மியல்நெறி யாற்றல்
எண்ணெண் ணியற்றிறன் இனிதி னோர்ந்தே
வையமும் மையமும் வகையெளி தாக்கி
மெய்ந்நிலை பொருந்த நாலறித் திறனால்
எண்ணிலை மாறா மியல்நெறி யோர்ந்தே
உண்ணிலைத் திறத்தா லுணர்வினா லாய்ந்தே
நன்றுறுங் காலத் தாணியல் நுட்பம்
ஒன்றுறும் மூலத் தாணியல் ஒட்பம்
பெட்புறுந் திறத்தால் பேரறி வுற்றே
திட்பம் நோக்கிச் சிரறித் திறனால்
கலைநெறிக் கழறும் நிலைநெறி நோக்கும்
தலைநெறி சாற்றும் மெய்ம்மை யுணர்ந்தே
உள்ளுறுந் திறனுறும் ஒங்குமெய்க் கலையே 495

தேர்க்கலை யாயின் சீர்க்கலை கூடும் 516

தேர்க்கலை நுட்பம் காலமா நெறியாய்
தேர்த்துகட் பொழுதியல் தேர்க்கொடிக் காலம்
சீர்மதி யுற்றுத் தெளிவுற் றாய்வர்
நேர்மதி யுற்று நிலையுணர் பெறுவரே 517

நாட்கூ றியலை நண்ணி யுணர்ந்து
வாட்கூ றியலை வகையுறத் தெரிந்தே
நாளும் வாளும் கால முணர்த்தும்
கோளறு பொழுதே குறிப்பின் உணர்த்தும்
நாளும் இரவும் ஒருநிலைத் தாகி
நாளே காலம் மூல முணர்த்தும்
காலங் காட்டும் மெய்ப்பொரு ளோர்ந்து
வானொளி நாளொளி வகையுறத் தெரிந்தே
வானொளி மெய்யொளி வகையறி வாரே 518

மூலப் புள்ளி முறைமையின் ஆய்த்து
கால நுட்பங் கருத்துற் றோர்வோர்
கலைநெறி மாண்பின் நிலைபே றறிவரே 535

காலங் கருதல் மூலம் ஓர்தல்

ஞாலத் தியல்தெரி எண்ணிலை நோக்கி
அறுபான் நான்கின் முறைமை யுணர்ந்து
உறுபொருள் உணர்த்தும் உண்மை ஒளியே 537

மெய்ப்பொருள் மெய்நெறி மெய்க்கலை நிலையென
மெய்யிய லுயிரிய லொலியிய லொளியியல்
எழுத்துறுங் கலையியல் வடிவியல் ஆய்ந்தே
வழுத்துஞ் சொற்பொருள் கட்டணி உணர்ந்தே
ஐம்பொரு ளைந்திய லைங்கலை ஐந்நெறி
செம்பொருள் மெய்த்திற நிலையுற் றாய்ந்தே
சிற்ப மாத்தமிழ்ச் செயிரற வுணர்ந்தே
பொற்புறும் ஓவியம் பிறங்கு தொல்லிசை
தெற்றென் றுணர்ந்தே தெளிமுறை ஆய்ந்தே
உற்றறி நெறிமுறை உள்ளுணர் வுற்றே
அகவெளி புறவெளி இயலுறத் தேர்ந்தே
மிகும்ஒளி மிகும்ஒலி எழும்ஒலி எழும்ஒளி
வகையுற வகுத்து வளமுறக் காண்டல்
மிகையிலா நெறிநிலை எண்ணெண் கலைநெறி
ஓவியம் சிற்பம் ஒலிஒளிச் செந்தமிழ்
மேவுறும் நுண்பொருள் எண்பொருள் விளங்கி
விண்பொருள் ஒளிநிலை காண்டலுங் கருத்தாய்
எண்ணுள் தோன்றி எண்ணமும் உணர்வும்
விண்ணும் மண்ணும் தீநீர் காற்றும்
எண்ணுறும் எண்வகை இலங்குற் றிலங்கி
கண்ணொளி விண்ணொளி கலந்துறும் திறனே
மூலத் திறனாய் முப்பொருள் தோக்கும்
கோலங் காட்டும் குறிபொருள் நெறியாய்
காலத் தியல்நெறி முறையில் ஓர்ந்து
காலங் காண்டுழி மெய்ப்பொருள் விளங்கும்
காலச் சீர்மை கருத்துறக் கண்டே
காலம் இயலல் கடும்உழைப் பியலென
மூலப் பொருள்நிலை முன்னி ஓர்ந்தே
காலச் சீர்நெறி உழைப்புறுந் திறனாய்

இமைநொடிக் காலத் தியல்நிலை விளக்கும்
கால நுண்பொருள் கடிதுறக் கண்டே
மூலம் இயங்கல் முப்பொருள் முக்கலை
ஓர்ந்துணர் நெறியா லொருபொருட் டிறநிலை
நேர்மொழி ஓமியல் நெறியுறும் திறமே 549

மண்ணிமைக் காலம் மாண்புறத் தெரிந்தோர்
விண்ணிமை கண்ணிமை நெறியறி வாரே 554

மண்ணிமைக் காலம் பார்நிலை ஆய்ந்தே
எண்ணால் ஆயம் இயல்புற வகுத்தே
என்னும் இயலும் நுண்ணிதின் நாடி
சீர்பெற் றுணர்ந்தோர் நேரறி பவரே 555

நிலமறிந் தோரே நீர்வளம் நீரியல்
புலத்தியல் பொருந்த முறைநெறி காண்டுழி
வாழ்மனை வளர்மனை எண்ணொண் நிலையால்
ஏழ்நிலை மாடத் தியலறிந் துணர்வரே
தொலைநோக் குணர்வுற் றுள்ளுள் உணர்ந்தே
நிலைநோக் குறுநெறி நீள நினைத்தே
கலைநெறி நாடி விண்ணொளி நோக்கி
நிலைநெறி கூடி நெறியறிந் தியலாய்க்
காலங் கருதி காலங் காண்டல்
காலம் உணர்வோர் நெறியறித் திறனே 559

காலப் பொழுதியல் கணக்கியல் நெறியே 562

எப்பொருள் எந்நிலை எந்நெறி எக்கலை
ஒப்பிலாக் காலம் உயர்வுற நோக்கினும்
மூலம் ஒன்றே முன்னுறும் நெறியால்
காலத் தியல்நெறி வகுத்தல் மரபே! 565

எண்ணியல் நெறியால் எண்கலைத் தினனெறி
நுண்ணிதின் ஓர்ந்தே நுவலதும் மூலம்
புள்ளித் தோற்றம் பொருந்த உணர்ந்தே
தெள்ளுங் காலத் தெரிந்துணர் நிலையால்

காலத் தூணியல் லருத்தறி வுற்றே
மூலத் தூண்நிலை உற்றறி திறத்தால்
உண்மை உணர்ந்தே உள்ளொளி ஓங்குபு
எண்மை நுண்மை இயலறி வாற்றல்
காலத் தூண்கலை கருத்துற் றுணரின்
கால இயக்கம் சீலத் திறமும்
கோல மாநெறி குறிப்பி னுணர்ந்தே
மூலத் தூண்நிலை முன்னி யுணர்ந்தே
மூலத் தாற்றல் நிலையறி திறனே 589

நெறியறி மக்கள் நிலையுணர் வுற்றே
குறியுறுந் திறனுறக் குறிப்பறி வுற்றே
மூலத் தெண்ணிலை முன்னி யோர்ந்து
காலங் கருதல் நெறிமுறை யியலே 591

தொழிலியல் ஆக்கம் பொருளுறுந் தெரிநிலை
ஒழிவிலா துழைப்புறும் பெருநெறி ஆற்றல்
செழுங்கலை வண்மை திறமுறுந் திறனாய்
காலக் கலையைக் கடிதின் உணர்ந்து
காலம் ஊட்டும் உண்மை யறிந்தே
சிறுபொழு தாற்றல் செவ்வி தெரிந்து
உறுபொழு தியல்நிலை உண்மை நோக்கி
பெரும்பொழு தாற்றல் பெட்புற் றுணர்ந்தே
வரும்பொழு தியலுங் கால மாநெறி
கணக்கிய வுணர்ந்த கணக்கியல் வகுத்தே
கணக்கியல் மாறாக் கால மாநெறி
நெறியுற் றாய்ந்தே நீள நினைந்தே
குறியுறுந் திறமுணர் குறிப்பின் நின்று
காலச் செயலே கருத்துணர் வாற்றெரி
மூலமும் பொருளும் முன்னி யுணர்ந்தே
நெறிமுறை இயற்றல் அறிவோர் திறனே 599

காலமும் பொருளும் கருத்துற நோக்கிக்
காலமும் இடமுங் கணக்கிய லாற்றெரி

காலமும் உணர்வும் கணக்கிட் டுணர்ந்தே
காலங் காண்ப தியல்நெறி மரபே 614

கோளங் குறுக்கங் குறிப்பி னோர்ந்து
காலமும் பொழுதுங் கணக்கி னோர்ந்து
காலமுங் கணக்கும் ஒன்றெனத் தேர்ந்து
சிலஞ் செப்புந் தாளம் முகமும்
செவ்விதி னோர்ந்து சீர்மை யுணரின்
ஒவ்வுங் கலைநிலைக் காலக் கணக்கே 648

நெடிது நினைத்தலும் கடிதி லுணர்தலும்
கடிதுணர் காலக் குறிப்பறி வாற்றலாய்
படிநிலை விண்ணிலை ஒளிநிலைக் கலையியல்
கடிநிலைக் காலம் கால மாநெறி
துடிப்புறும் உணர்வுறும் தூய மாக்கலை
நடிப்புறும் இயற்கலை கால மாநெறி
நெறிவினை நிலைக்கலை மெய்ம்மை தேற்றமும்
அறிகலை உணர்வினின் ஐந்நெறி சேர்நெறி
காலம் உணர்நிலை கால மூலமும்
காலமா நெறியாய்க் களிப்புறுங் குறிநிலை
காலங் காண்டல் மூலத் தெழுநிலை
காலம் நோக்கல் கலைநிலை நோக்கல்
கால விசைநிலை கருவினை புரிநிலை
கால மாயியல் கருத்திற் கருதி
காலத் திண்நெறி கடும்உழைப் பியல்நெறி
ஞாலமும் விண்ணும் நன்னிலை யியலால்
காலப் பொழுதியங் கடிதி னோர்ந்தே
காலம் முயற்சி காலம் ஆய்நிலை
காலம் உழைப்பெனக் கடிதி னோர்ந்து
காலங் கருதிக் கடுவினை புரிவோர்
காலம் உழைப்பெனக் கருத்துணர்ந் தறிவரே 731

கலைநிலை நோக்கல் காலத் தியலே
நிலைநெறி ஆற்றல் நெறிமுதற் பொருளாய்

தலைக்கலை தனிமுதல் தமிழ்முதற் பொருளாய்
நிலையியல் ஐந்துறும் எண்ணிலை ஓர்ந்து
நிலையுணர் வுற்றே நெறியுறு மாக்கலை
குறிநெறி யாக்கம் குறிப்புற் றுணர்ந்தே
நெறிநிலை தன்னிலை நிலைபெ றாய்ந்தே
வென்றுறும் கலையியல் ஒலிக்கலை எண்கலை
நன்றுறும் திறனிலை நவையற வுணர்ந்தே
மூலம் கண்டே மூலம் ஆய்தல்
மூலப் பெருந்திறன் முன்னி யோர்ந்தே
கால மாவலி விசைநிலை யோர்ந்தே
காலத் தூணியல் கலைநிலை யோர்ந்தே
மூலத் தூணியல் நூற்கலை யறிந்தே
மூலப் பொருள்நிலை மெய்நிலை யார்ந்தே
மூலம் இயங்கல் முப்பொருள் இயக்கம்
மூலம் இயக்கம் முப்பொருள் இயக்கம்
மூலம் இயக்கம் காலமா விசையே
மூலம் காலம் விளைநிலை யுன்னி
கால மாவிசை கடிதின் உணர்ந்தே
மூலத் தியல்நெறி ஆநிலத் தாறும்
மூல மாப்பொருள் முக்கனல் ஒளிநிலை
மூல முதலாய் முளைத்தெழும் ஆறும்
மூல மாக்கனல் இயல்நிலை தெரித்தே
மூல மூலமும் மூலத் தூண்நிலை
காலத் தூணியல் கலையுறக் கண்டே
காலங் கருதி கருதிக் கருத்தின்
கருத்துறும் உணர்வால் கலைபல நோக்கி
கருத்துணர் கலைநெறி நிலைநெறி யியலால்
நாளும் இரவும் நன்னிலை ஆய்ந்து
கோளம் கோள்நிலை குறுநிலை ஓர்ந்து
அறுபான் நான்கியல் ஒளிநிலை இயலே
உறுநிலை காலம் உழைப்பின் றோர்ந்து
உறுநிலை யுணர்வுற் றறிநிலை யாய்ந்து
பெறுநிலை இயற்கலை எண்ணிலைக் கலையே 736

கலைமதி உணர்வால் நிலைமதி யுற்றே
தலைமதித் திறனுறும் தன்னியல் ஓர்ந்தே
கால மூலங் கருத்திற் கொண்டே
காலத் தியலறி நுண்ணறி வாற்றல்
கால நுணுக்கமும் உழைப்பியல் ஆற்றலும்
மூல மாக்கலை முந்நெறித் திறனும்
காலமு மிடமும் பொருளறி நிலையும்
கால விரைவியல் கருதுங் கணக்கியல்
எண்ணெண் கலையால் இயலுறத் தேர்ந்தே
நுண்ணியல் அறிநிலை கலைநிலை உளத்தால்
மாசறத் தெரிக்கும் எண்ணியல் எழுத்தியல்
மாநெறி இயலால் தூநெறி யோர்ந்தே
பாநெறிப் பாவியல் எழுத்தியல் ஓர்ந்தே
கலைநெறி எண்ணியல் காற்றியல் ஒலியியல்
நிலைநெறி ஒளியியல் நெறியுற விளக்கி
ஒலியும் ஒளியும் ஒளிருற் றோங்கும்
ஒளிநிலை மொழிக்கலை உருநிலை உன்னி
எழுத்தியல் ஒலியியல் இயல்நிலை ஐந்தியல்
வழுத்தியல் கலையுறும் வளர்நெறி மாநெறி
நுண்ணிதி னோர்ந்து நுவலரும் திறத்தால்
எண்கலைக் கலைமதி இயற்றுவ திறனே 738

மூலம் கண்டே முன்னிய தோர்ந்தே
காலப் பொருள்நிலை கடிதி னுணர்ந்து
கோலமுங் குறிப்பும் குறிப்புற் றுணர்ந்து
ஞாலம் காண்டல் மெய்நிலை யியலாய்
சீரியல் எண்ணிலை எண்ணியல் வழக்கே
காலமுங் கால நுட்பமும் நோக்கி
காலத் தியற்பொருள் கடிதி னுணர்ந்து
கால அளவை யியல்தெரி நுட்பம்
காலக் கூற்றின் பொருள்தெரி திட்பம்
ஒட்பத் தியலாய் ஒன்பான் நெறியே
பெட்புற நோக்கி பெருநிலை யாய்ந்து

எட்டியல் எண்ணெண் கலைக்கூர் நோக்கி
எட்டியல் நாற்புறத் தியல்நெறி ஐந்தின்
மூலப் புள்ளி விரைவுறும் சுழல்நிலை
காலங் கூட்டும் மெய்நிலை ஆக்கம்
கலைநிலை நெறிமுறை கணக்கியல் கூர்ந்து
நிலைநெறி கலையியல் நெடுங்கணக் கியலாய்
அறுபான் நான்கின் ஐயைந் தியல்நெறி
உறுமுறை நோக்கி உணர்வுறும் கலைத்திறன்
வையம் இயல்தெரி அளவியல் ஆக்கம்
மையம் நுட்பம் மாக்கலை இயலால்
உள்நிலை நோக்கிப் புறநிலை ஆய்ந்து
தெள்ளுறும் சீர்நெறி மெய்நிலைக் கலையால்
எட்டெட் டியல்தெரி நெறிமுறை யாக்கம்
விட்டுறும் நிலைமுறை விரிநிலை யோங்கி
தெட்டுறும் எண்ணியல் கலைநெறி மரபே 743

மூலப் பொருள்நிலை முன்னுற் திறத்தால்
காலங் குறுக்கலும் நீட்டலும் ஓர்ந்தே
காலம் வகுத்தே உணர்வின் றிறத்தால்
காலம் நோக்கி இயல்நிலை தெரிந்தே
காலத் தனுநிலை மெய்நிலை யாக்கம்
மூலப் பொருள்நிலை மெய்நிலை தேர்ந்தே
கோலங் குறிக்கும் குறிப்புறும் திறநிலை
கால மூலமும் மூல காலமும்
மூலத் தியல்நெறி முப்பொரு ளாக்கம்
செம்பொருள் செழும்பொருள் பருப்பொருள் உரிப்பொருள்
செம்மைச் சீருறும் விழுப்பொருள் நுண்பொருள்
கலைபொருள் கண்டுறும் நிலையறி வாற்றல்
நிலைப்பொருள் நோக்கும் தலையறி வாற்றல்
உணர்வின் நோக்குழி ஒருபொரு ளியலாய்
கணந்தொறும் நோக்கி காலத் தியல்நிலை
மெய்நிலை இயலறி எண்ணெண் ணியலே 755

காலமும் பொழுதும் கணக்கறி யியலாய்

மூலமும் ஆற்றலும் மூவியல் நோக்கி
மெய்ப்பொருள் நிலைதெரி யியலியல் தேர்ந்தே
மெய்நிலை யியல்தெரி நெறிப்பொருள் ஆய்ந்தே
கால நுண்ணியல் கணக்கியல் விரிநிலை
காலப் போரியல் கருதுறுங் கருத்தால்
கால நுணுக்கின் காலங் காண்டலும்
கால மாஇயல் மாநெறித் திறனிலை
எட்டெட் டுறுநிலை யியல்புற் றோர்ந்தே
எட்டுறும் நிலைநெறி யுள்ளூற் றியல்நெறி
மூல மாநெறி முந்நெறி யியலால்
ஞாலந் தெரிந்து நன்னு மாஇயல்
கால விரைவியல் கணக்குறும் ஆற்றல்
காலத் திண்நிலை நுண்நிலை கணக்கியல்
எண்நிலை இயலால் இமைநெடிப் போதுறும்
விண்ணெறி மூலத் திண்ணியல் நுட்பம்
எண்ணெறி இயல்கலை எழுத்தியல் திட்பம்
நுண்ணெறி மாக்கலை மாநெறி ஓர்ந்து
காலங் கருதி கடிதின் நோக்கி
கால விரைவியல் ஆற்றல் உணர்ந்தே
காலங் காண்டலும் காலங் கருதலும்
கால மெய்ப்பொருள் கணித்துறக் காண்டலும்
காலங் கருதிக் கருத்துற் றாய்ந்தே
கால மூலம் இயலறி நுட்பம்
மூலம் உணர்ந்து அறுபான் நான்கியல்
மூலம் ஆய்தல் மாநெறி வழக்கே 764

காலம் நல்கும் பேரறி வாற்றல்
காலம் மல்கும் பேருணர் நிலைக்கலை
காலம் மல்கும் நுண்ணுணர் நெறிக்கலை
கால நுட்பங் கடிதின் நோக்கி
மூல மாப்பொருள் முன்னுணர் வாலறி
நெறிமுறைக் கலைத்திறன் நிவ நினைந்தே
குறிமுறைக் குறிப்பொருள் குறிப்பின் ஆய்ந்தே

கால விரைவியல் மெய்ப்பொருள் நுணுகிக்
காலஞ் சுழலல் கணக்கின் ஆய்ந்தே
எண்ணெண் கலைத்திறன் இயல்பிற் றெரிந்தே
நுண்ணிணறி வியலால் நுணுக்கங் கண்டே
விண்கலை யியற்றிறன் விரிநிலை நோக்கி
எண்ணெண் கலைத்திறன் திட்பம் ஓர்ந்தே
நுணுக்கம் இயல்நிலை நெறிமுறை திகழ்ந்து
அணுக்கம் அணுவணு இயல்நிலைத் திறனெறி
ஒன்றி னின்றொன் றுருநிலை காண்டல்
நன்றுறும் நெறித்திறன் நாடுவ நாடி
நுட்பமுந் திட்பமும் நுவல்முறை யாய்ந்தே
ஒட்பமும் ஒருநிலை யுணர்வும் ஒங்குறும்
ஒம்கலைத் திறனுறும் எட்டின் பிறழ்நிலை
ஒம்நெறி மூலத் தியல்நிலை யாற்றலாய்
காலமா நுட்பம் கணக்கியல் நெறியாய்
காலங் காண்டல் மாநெறி யியலே 775

மூலப் பொருளும் காலத் தியலும்
மூல மூலமுங் கால மூலமும்
மூலத் தியலால் முன்னி யோர்ந்தே
மூலத் தைந்தியல் நாற்புறத் தைந்தியல்
ஐயைந் தியலுறும் அருங்கலை நோக்கி
ஐநெறி ஐயியல் செந்நெறி நிலையியல்
எண்ணிலை யியலால் எண்கலை நெறியால்
எண்ணெண் கலையுறும் இயற்றிறன் நோக்குழி
உறுபயன் அகவிண் ணொளியுள் ளொளிநிலை
பெறுநிலை ஒலிஒளி மெய்ப்பயன் கருதி
தென்றிசைச் சுழலல் சுழல்பணி யாக்கம்
நன்றுறும் எட்டில் பிறழ்நிலை நோக்குறும்
பிறழ்ந்தே உறழ்ந்தே பெருநிலை யாடி
உறழ்நிலை மூலம் ஒருபொருள் கூட்டும்
மூலம் தெரிந்தே மூலம் நோக்குழி
காலம் இயற்றும் கடுவினை யியலும்

அருவினைப் பயன்தெரி ஆக்கமும் நோக்கமும்
சுடுவினை படுவினை பெருவினை யியலால்
தெற்றெனத் தெரிந்தே தீதுதீர் இயலால்
உற்றுறும் தன்மை ஒருபொருள் இயலாய்
மூவியல் முந்நெறி முப்பொருள் ஓர்ந்தே
மூவியல் அறுபான் நான்கியல் உணர்ந்தே
மூலம் காலம் முயல்நிலை அறிதல்
ஞாலம் அறிவோர் நன்னெறி யியலே 793

ஒளிக்கலை நுட்பம் கலையியல் திட்பம்
வெளிக்கலை மூலம் வியநிலை ஆக்கம்
அளிநிலை அசைநிலை ஒலியியல் திறனாய்
களிமொழித் தமிழாய் கலையியல் திறனாய்
மாத்திரை யளவில் மாத்திரை நோக்கி
மாத்திரை மூலம் கணக்கியல் நோக்கி
ஓரள வாக்கம் உணர்கலை நோக்கம்
கூரள வியலால் கூர்மையும் நுட்பமும்
ஒளிவெளி வியலால் ஓங்குறும் நுட்பம்
வெளிஒளி நிலைக்கலை மெய்ந்நிலைத் திட்பம்
ஓங்குறும் திறத்தால் ஓங்கலை ஓம்நெறி
பாங்குறும் திறத்தால் பைந்தமிழ் இயல்நிலை
தேங்குறும் அசைநிலை சீரசை நேரசை
தேரசை சீரிசை நேரிசை இயலாய்
ஓரசை ஈரசை கணக்கியல் உன்னி
கூரசை நுட்பம் குறித்துறும் ஒலியியல்
நேரசை மூலம் நிரையசைக் காலம்
காலமும் இடமும் பொருளும் கணித்தே
காலமா யியலும் செந்நெறிக் காலமும்
காலங் கருதி கணக்குற நோக்கின்
காலமே படைக்கும் காலமே அளிக்கும்
காலமே அழிக்கும் காலமே மறைக்கும்
காலமே துடைக்கும் கணிப்பியல் ஓர்ந்தே
காலத் தருமை கருத்துற் றோர்ந்தே

காலம் நொடிநொடி இமைப்பொழு தாய்ந்தே
கைநொடிப் பொழுதும் கண்ணிமைப் பொழுதும்
மெய்ந்நிலைக் கலையாய் மெய்ப்பொருள் உணர்த்தும்
கால நுட்பம் கருத்தி லோர்ந்து
காலங் கருதி முலம் மாய்ந்து
கோலங் குறித்தே சீலச் செயலாய்
ஞாலங் கருதி உழைப்புறும் உணர்வால்
உன்னி உன்னி மெய்ந்நிலை யாய்தல்
பன்னுசெந் தமிழ்நெறி பயனிலை முடிவே 815

காலமே எவைக்கும் களிப்பயன் நல்கும்
காலமே கணிக்கும் காலமே கூட்டும்
காலமே பெருநிலை பெருவழி நல்கும்
காலமே அருளியல் திருநிலை வகுக்கும்
காலமே பொருளியல் பயன்நெறி நோக்கும்
காலமே தெருளியல் சீர்நிலை வகுக்கும்
காலமே மருளியல் மயலறப் போக்கும்
மயன்நெறி ஒன்றே மதிநெறி கூட்டும்
மதிஒளித் திறனாய் ஒளிமதி நோக்கி
மதிஅறி வுற்றே மாணுறும் திறத்தால்
ஒளிக்கலை நுட்பம் உணர்வுற் றாய்ந்தே
ஒளிபெற நோக்கி உள்ளொளி காணல்
அகவிண் புறவிண் அருங்கலை யாய்தல்
அகத்துணர் திறனால் அறிவியற் கலைநிலை
நோக்குறும் திறத்தால் நுணுக்கமுற் றாய்ந்தே
ஆக்குறும் கலைநிலை அறிவியல் அறிவரே 816

வீரமும் கலையும் வெற்றியும் ஆற்றலும்
ஈரமும் உணர்வும் இயல்நிலைக் கருத்தும்
உணர்வறி வாற்றலும் உள்நிலை ஓங்கலும்
உணர்நிலைத் திறனால் ஞாலம் தேர்தலும்
காலக் குறிப்பால் கடுவினை யாற்றலும்
கால நெறியால் படுவினை தேர்தலும்
கால நுணுக்கம் உழைப்பியல் தேர்ந்தே

காலத் தியல்தெரி நுட்ப மாக்கலை
சிறுபொழு தியல்நிலை உள்ளுற நோக்கி
கணம்கணம் ஆய்ந்து கால விரைவியல்
கணமும் காட்டும் காலப் பொழுதியல்
பொழுதறி நுட்பம் பேரறி வாற்றல்
உழைப்புணர் ஆற்றல் மெய்யியற் கலையாய்
களைப்பிலா துழைக்கும் கலைநிலை ஓர்ந்தே
காலங் கருதி கருத்துற நோக்கி
மூலங் கருதி முப்பொழு தாய்ந்து
கோங் குறிக்கும் குறிநிலை தேர்ந்து
ஞாலம் தெரிதல் அறிவோர் திறனே 824

கணக்கியல் நுட்பம் கருத்துறத் தேர்ந்து
காலத் தருமை கணந்தொறும் எண்ணி
மூலம் நாடி முக்கலைத் தேர்தல்
கோலம் குறித்தே குறிப்பின் ஆற்றல்
சீலம் தெரிந்தே செய்நெறி நோக்கி
உழைப்பின் திறனை உன்னி உன்னி
களைப்பிலா துழைப்பின் காலம் கூட்டும் 828

உழைப்புறும் திறத்தால் காலங் கருதி
இழைஇழைக் காலம் இம்மியும் முடிவும்
காலத் தருமை அறிநிலை நோக்கால்
காலம் விரைந்து மெய்ப்பயன் நல்கும்
காலமும் இடமும் பொருளும் நோக்கி
மூலத் திறத்தால் முயற்சியும் உழைப்பும்
செய்நிலை செய்பொருள் தெரிநிலை ஓர்ந்தே
மெய்யுணர் வுற்றே உழைப்பியல் திறத்தால்
சிற்ப மாக்கலை ஓவியப் பெருந்திறன்
பொற்புறும் சித்திரம் பொருந்தக் கண்டே
கலைநிலை ஒளிக்கலை கணக்கியல் நிலையாய்
நிலைநெறி எண்ணியல் நெறியுற் றாய்ந்தே
ஓங்குறும் திறத்தால் பாங்குறும் கலைத்திறன்
ஓங்கியல் ஒலித்திறன் உள்ளுணர் நெறித்திறன்

ஆங்குறும் மூலம் ஈங்குறும் காலம்
ஊங்குறும் ஞாலம் ஒளிமுதற் கண்டே 835

காலக் கணக்கியல் மூலங் கருதி
கால மூலம் கருத்தின் ஓர்ந்து
காலத் தியல்நெறி ஆக்கத் திறத்தால்
காலமும் பொருளும் இடமும் நோக்கி
எண்வகைத் திறமும் ஐவகை யியலும்
விண்வகை நோக்கமும் வெளிவகைத் திறனும்
உள்ளூற் றோர்ந்தே ஒருமொழித் திறனால்
தெள்ளூறும் சீர்கலை நோக்கமும் குறியும்
ஒன்றும் மூன்றும் ஐந்தும் ஏழும்
நன்றும் எட்டும் நலமுறக் கண்டே
எண்ணே எண்ணியல் எண்கலை நுணுக்கம்
எண்ணுறும் மூலம் இயல்புறும் மொழியாய்
நெடுங்கணக் கியலும் குறுங்கணக் கியலும்
அடுமுறை ஆய்ந்து விடுங்கணக் கியலும்
தொடுங்கணக் கியல்நெறி தொன்மை ஆய்ந்தே
அடுதலும் விடுதலும் அமைவுற நோக்கி
நெறியும் குறியும் நிலையின் ஆய்ந்து
அறிகுறி அறிகலை அகத்துணர் வுற்று
நிலைமுறை தேர்ந்து கலைமொழித் திறனால்
தலைமொழி அளவை தனிநிலைக் கலையாய்
மலைவற ஓர்ந்தே மதித்தெளி உற்று
உலையா முயற்சி உழைப்புறும் திறனால்
கலையுறும் உணர்வால் கைவினை நோக்கி
நிலையுறும் தொழிற்கலை நவிலல் இயல்பே 840

காலமும் விரைவும் கணக்குறுந் திறத்தால்
கால நுட்பம் கணித்தினி தாய்ந்தே
நொடிநொடி இமைப்பியல் இம்மியும் கருதி
கடிதுறும் கால விரைவியல் ஆக்கம்
தேர்த்துகள் பொழுதும் ஏர்க்கலை நொடியும்
சீர்க்கலை நுண்மை திருநெறி ஆய்ந்தே

காலத் தியல்நெறி கணித்துறும் நுட்பம்
மூலத் திருநெறி முன்னுறும் ஆற்றல்
எண்ணியல் ஐந்நெறி இயல்புற நோக்கி
விண்ணிமைக் காலம் வியப்புற் றோர்ந்து
பண்ணிமைக் காலம் பாங்குற நோக்கி
எண்ணிமைக் காலம் இயல்புற் றாய்ந்து
மண்ணிமைக் காலம் மயலறத் தெரிந்தே
கண்ணிமைக் காலங் கருதி யுணர்ந்தே
காலச் சுழல்நிலை அறுபான் நான்கியல்
மூலம் ஐயைந் தியல்நெறி நோக்கி
சிற்றவை எண்ணிலை எட்டெட் டியலாய்
உற்ற மாநெறி ஓங்குறுந் திறநிலை
எண்ணொண் ணியல்தெரி கலையியல் ஆக்கம்
விண்கலை நுண்கலை வியனுறத் தெரிந்தே
எண்கலை யியலால் எண்முறைத் தெரிந்தே
நுண்கலை நுட்பம் நுவலு மாக்கலை
காலத் தியல்தெரி கணக்கியல் உன்னி
மூலமும் பொருளும் அறிதல்மா நெறியே 874

வீரமும் உணர்வும் குளுரை யாற்றலும்
ஈரமும் நெறியும் இயற்கலை யுணர்தலும்
வாள்வலி வில்வலி வேல்வலி நோக்கலும்
தோள்வலி சூள்வலி நாள்வலி யாற்றலும்
ஆள்வினைத் திறனாய் நாள்உழைப் பியற்றலும்
ஆள்வினைத் திறனால் இரவுறும் உணர்வும்
காலமும் இடமும் பொருளும் நோக்கி
மூலமும் முயற்சியும் முன்னுறும் வினையும்
நேருணர் வுற்றே நிலையுணர் வோங்கிச்
சீருணர் வுற்றே செயல்முறை யோங்கி
உழைப்பே உயர்வின் உறுநிலை யாற்றல்
களைப்பே தாழ்வின் சிறுநிலை யாற்றல்
உன்னி உன்னி உள்ள வலிமையும்
உள்ளுறும் ஆற்றலால் உணர்கலை நெறியால்

தெள்ளுறும் மொழியியல் நுட்பம் தேர்ந்தே
ஒள்ளிய ஒளிக்கலை நெறிக்கலை யாய்ந்தே
காலமா நுட்பம் கருதிக் கருதி
காலங் கணித்தே செயல்நெறி யாற்றல்
காலம் மூலம் கோலமும் சீலமும்
ஞாலமுங் கருதி நன்னெறி தொன்னெறி
பன்னெறி கண்டே புன்னெறி நீக்கி
மன்னெறி நிலையியல் மதியுறப் படைத்தல்
வீர மாக்கலை வீர மாநெறி
வீரத் துணிவும் வென்றியும் நோக்கி
துணிவே உழைப்பே வீரமுற் றிலங்கல்
கணியுறும் காலம் இயல்தரும் வலியே 882

கால மறிந்தே இடமு முணர்ந்தே
மூலம் உணர்ந்தே முன்னிய நாடி
உழைப்புறும் திறனும் அறிவுறும் முயற்சியும்
இறையும் பிறழா நெறிநிலை நோக்கமும்
குறிப்பால் உன்னி குறிப்புற நோக்கிப்
நெறியியல் தன்மை நிலைபெற் றுணர்ந்தே
பொருள்வர வறிந்தே பொருளியல் நோக்கி
பொருட்கலை பொன்னியல் நிலத்தியல் கூர்ந்து
பொருள்நெறி யாய்வே மெய்ப்பொருள் நெறிநிலை
பொருளியல் மெய்ப்பொருள் இயல்நெறி கூட்டும்
தெருளியல் மதியால் சீருணர் வுற்றே
மருளியல் சேரா மாண்புறும் மதியால்
உள்ளுள் ளுணர்வால் உறுகலைத் திறமும்
தெள்ளுறும் சீர்சால் சீர்நெறி யாய்ந்தே
காலமும் காலக் கூறியல் ஆக்கமும்
மூலமும் மூலப் பேறியல் நோக்கமும்
இடம்பொருள் எண்ணி எண்முறை யியலால்
இடத்துறும் ஆக்கம் எண்ணுறும் நோக்கும்
அயரா உழைப்பும் மயர்வறு நோக்கும்
உயர்வுறும் உணர்வும் உட்கலை யியலும்

நோக்குபு நோக்கி நுணுகுவ அணுகி
ஆக்குறும் கலைத்திறன் பொருளியல் நெறிநிலை
பொருளியல் நூலே பொருளுறப் புகலும்
பொருட்கலை கூறும் பெரும்பொருள் மரபாய்
பொருளியல் நாடி பொருளியல் ஆய்தல்
தெருளியல் மதியோர் சீரறி நுட்பமே 884

எண்ணியல்

எண்முத லாயுறும் எண்ணியற் கலையே
எண்ணெண் கலைவிரி வியலல் வழக்கே 64

எண்கலை நூற்றியல் எண்முறை ஆய்ந்தே
விண்கலை நோக்கிக் கோளமும் நுணுகி
நுண்கலை நுகர்முறை ஆய்முறை தெரிந்தே
எண்கலை ஆய்வன் எண்ணறி வாளனே 73

கற்பன யாவும் உள்ளுளே உணர்ந்து
பொற்புறும் ஆற்றலால் ஐந்தியல் நோக்கி
சொற்பொருள் உண்மை திறமுறத் தெரிந்து
முற்றுறும் உணர்வால் மூலத் தியலால்
நாடி நாடி நலமுறத் தெரிவோன்
ஈடில் அறிவனாய் எண்ணெழுத் துணர்வனே 75

எண்ணிலை மூலம் எண்ணியல் கலையும்
எண்கலைத் திறனும் எண்முறை ஆற்றலும்
திண்ணமாய் உணர்ந்து செயல்புரி திறத்தால்
எண்வினை நுட்பத் தியலறி வாளனே 76

எண்ணியல் எண்முறை எண்கலை எண்ணி
எண்ணெண் இயல்திறன் புள்ளிக் கூற்றும்
விண்ணிலை மூலம் ஞாலத் தியல்திறன்
எண்ணுற விளக்கும் எண்ணூல் வழக்கே 110

எண்ணின் நுட்பம் எளிதில் அறிந்தே
விண்ணளந் தறியும் மெய்க்கலை ஓர்ந்து
மண்ணியல் ஞாலம் மரபறிச் செயலே
விண்ணொளி மூலம் காண்பதும் நெறியே 111

எண்கலைத் திறனியல் எட்டெட் டியன்றே
நுண்கலை மூலம் புள்ளித் திறனாய்
ஐயைந் தியலால் மெய்க்கலை நுணுக்கம்

வைநெறி தெரிந்துணர் திட்பமும் ஒர்ந்தே
ஞாலம் இயலும் நெறிநிலை ஆற்றல்
கோலமா நுட்பம் குறித்தியல் மெய்யே 127

எண்ணெறி இயலல் விண்கலைத் திறனாய்
நுண்ணெறிப் புள்ளி நுவலலும் மூலமே 128

எண்ணொண் ணியலால் எண்ணிலை யாக்கி
எண்ணொண் நெறியால் நாற்புறத் தியல்தொறும்
எண்குறித் திறனாய் ஐந்தியற் புள்ளி
எண்ணொளி மேவ நடுவியற் புள்ளி
எண்ணொண் நிலைச்சுழல் பிறழ்நிலை ஒர்ந்து
விண்ணொளி ஆடல் மெய்ஒம் நிலையே 159

அறுபான் நான்கும் இருகூற் றாற்றலாய்
உறுநிலைக் குறிப்பின் உட்கலை நுணுக்கம்
மூவின வகைநெறி முறைமையிற் கிளக்கும் 174

எண்ணிலைக் கலையின் எழுத்தியல் ஒர்ந்தே
விண்ணிலை ஒளிஒலி ஒம்கலை அறிந்தே
எண்ணுறுங் காலத் திமைப்பொழு தியலை
நுண்ணுறும் மூலத் திண்பொரு ளாய்ந்தே
எண்பொருள் எண்ணின் எண்ணமும் உணர்வும்
திண்கலைத் தெள்ளிதின் சீருறும் வகைத்தே 188

மிகுகலை மூலம் பொருளுணர் விந்து
எண்கலை இயல்திறன் முழுமதி நல்கும் 193

எண்பொரு ளியலே இலங்குறும் பிறழ்வால்
நுண்பொருள் ஒமென நிலைநல மொழியால்
விண்பொருள் ஒளிநிலை விளங்கக் கண்டுழி
எண்ணியல் தமிழ்நிலை இனிதிற் காண்பரே 217

அசைப்பொருள் சீர்நிலை ஆய்நிலை காண்டும்
நசைப்பொருள் நீங்கலும் நன்னிலை நெறியே 218

எண்ணொண் கலைஇயல் நிலையுறும் நுட்பம்
எண்ணிலை எண்ணி இயலுற நோக்குபு

விண்மொழித் தமிழியல் ஐந்துறும் முலமும்
ஒண்மொழிச் சொற்பொருள் உரைநிலை கூடும் 230

இயல்பே இயலல் இயற்கைச் செந்நெறி
இயலுறும் நெறிமுறை தெரிவுற விளக்குபு
இயற்கைப் பொருள்மேல் நுண்மைச் சுட்டுபு
இயற்கை நெறியியல் கலைநெறி எண்திறன்
எண்ணெண் நிலைசேர் நண்ணிய காட்டுறும்
திண்ணுறும் கணக்கியல் மொழிநிலை நுட்பமே 233

தொன்மை எண்ணிலை எண்கலை எண்ணே
ஒன்பது நிலைநெறி உற்றறி விண்ணே 234

எண்மை யியற்கலை விண்மை முயங்கல்
எண்கலைத் திறமுறும் இயல்மொழி இயலல்
இயற்கைப் பொருண்மை மெய்பெறச் சுட்டி
இயல்நெறி ஆய்ந்துணர் நெறிமுறை நுட்பமே 237

முந்துறக் கிளத்தல் விண்ணெறி எண்ணே 247

பிந்துறக் கிளத்தல் விண்ணுறுத் திறனே 248

அறுபான் நான்கியல் மெய்க்கலைக் கூறே
உறுநிலை ஐந்தியல் ஒளிநிலை கூட்டி
ஐந்தைந் தியலா யகப்புற முணர்த்தி
வந்துறும் நெறிமுறை வலமுறச் சுழலல்
காலத் தியல்நெறி விரைவா யுறுநிலை
சீலத் தெரிவோர் எண்ணிலை உணர்வரே 265

எண்வகை விரிவே விண்விரி வாற்றல் 271

நுண்ணிதின் எண்வகை நுவலற நுவன்றே
திண்மதிச் சீர்நெறி பயனுறத் தெரித்தே
ஒடுக்கத் திறமறி உள்ளுணர் காலை
இடுக்கண் நீங்கி இயல்நிலை தெரிக்கும் 272

ஒழிவில் ஒடுக்கம் பகுதறத் தெரிந்தே
விழுமிகு பொருளுணர் திறனறிக் கூற்றால்

பொருளறி மூலம் பயனுறத் தெரித்தே
தெருளுணர் கலைநிலை எண்ணிலை கழறி
விழுப்பொருள் செம்பொருள் கலைநெறி பயக்கும் 273

எண்ணெறி நுணுக்கம் எண்கலை இயக்கம்
நுண்ணெறி திறனுற நுவலுறத் தெரித்தே
திண்ணெறிக் கலைத்திறம் ஐந்திறத் துண்மை
எண்ணெழுத் தியலல் அறுபான் நான்கே 275

கலைநெறி இயலின் கருத்துறும் ஆற்றல்
நிலைநெறி அறுபான் நான்கின் நெறியே 290

எண்ணிலை எண்ணெறி விண்ணிலை மூலம்
எண்ணுவ வாற்றல் எழுங்கலை தருமே 291

எழுங்கலை உணர்வொளி எண்கலை தருமே 292

எண்கலை நுட்பம் இயல்புறத் தெரிந்தே
நுண்கலை மூலம் எண்ணெண் ணியலறி
நுணுக்கத் தேர்ந்தே நாற்புறத் தியலுறும்
அணுக்கத் தாற்றல் நடுவண் தோன்றும்
ஐந்தா யியலும் சுழல்விரை வாற்றல்
ஐயைந் தைந்தாய் வலமிடத் துறுமே
கால விரைவின் கடிதுறு நோக்கம்
மூலப் புள்ளி இயல்நிலை மாறா
தேற்றமும் தோற்றமும் ஏற்றுறும் ஆற்றல்
காற்றுநீர் நிலத்தீ வானுறும் ஐந்தாய்
எண்ணிலை மூலம் திண்ணுற வறிந்தே
நுண்ணிலை வையம் நவையறக் கண்டே
புறத்துறும் ஞாலம் பொருந்த நோக்குபு
திறத்துறும் செழுமை எழுத்தியல் ஆய்ந்தே
அறுபான் நான்கும் எழுத்துறுந் தன்மை
உறுபுறம் எண்ணிலை உயரறி வுற்றே
திருந்த நோக்குபு சீருறும் விளக்கம்
பொருந்தக் கண்டுழி புலமுறும் ஆற்றலே 293

எண்ணிலை எண்ணியல் இயல்நிலை ஓர்ந்தே
எண்முக ஈர்ப்பியல் எளிதுறக் கண்டே
விண்ணகத் தியற்கலை வெளியிடைத் தோன்ற
உள்ளகத் துறுநெறி உவப்புறத் தெரிந்தே
உள்ளூறும் எண்முகத் தீர்ப்பியல் நுனுகி
விள்ளூறும் நுணுக்கம் விளம்பற் பாற்றே 294

உட்கலை எண்ணிலை எண்கலை சுழலல்
நுட்பம் நுண்ணிதின் நன்குறத் தேர்ந்தே
திட்பச் சீர்நெறி ஐந்தியல் ஆக்கம்
எட்டே நிலையுறும் விரைவுறும் சுழற்சி
வளைநெறி யாக்குறி வந்துறும் திறனிலை
திளைத்துறும் காலம் சீர்குறிக் கும்மே 295

சீரறி நுட்பம் பேரறி வுணர்த்தும் 296

எண்ணெண் கலையே நுண்ணுணர் வாற்றல் 308

நுண்கலைத் திறனே விண்கலை நோக்கம் 309

எண்ணியல் மருங்கின் எழுத்தொலி யியைபாய்
விண்ணிய லார்ப்பின் உள்ளூறத் தேர்ந்தே
எண்முகத் தீர்ப்பியல் திண்ணமும் நெறியும்
எண்ணுறு மாற்ற லியல்நெறித் திறனாய்
விண்கலை விண்ணுறும் எண்முகத் தீர்ப்பியல்
திண்ணம் செப்பும் சீர்நெறி யாய்ந்து
உள்ளூறும் எண்முகத் தீர்ப்பிய லாற்றலும்
தெள்ளூறும் விண்ணிலை எண்முகத் தீர்ப்பும்
கருதிக் கருதிக் கலைநிலை யுற்றே
பொருந்த நோக்குபு விண்கலைத் தேற்றம் 310

விண்கலை யறிந்தோர் மெய்ந்நிலை மேலோர் 331

எண்கலை யுட்கலை யியல்நிலை யோர்ந்தோர்
விண்கலை யாயும் மெய்த்தகு சான்றோர் 332

குறியால் குறித்து நெறியால் விளக்கும்
குறிகுறி யாவகை ஒலியொளித் தன்மை

நெறிபெற முயங்கின் நீடுறும் தோற்றம்
அறிகலை யுணர்வே யெண்ணிலை விளக்கும் 335

எண்ணிலை யெழுத்தாய் எண்ணியற் பொருளாய்
அண்ணுறுங் கலைத்திறன் அறிவுறும் ஆக்கம் 338

எண்ணியற் பொருளுறும் இலங்குறுந் திறனே
விண்ணுறும் நிலைக்கலை நெறிமுறை யாற்றல்
திண்ணிதின் உணர்ந்து நுண்ணிதின் நோக்கி
எண்ணெழுத் தியலால் ஒளிக்கலை யோங்கும் 339

இரவுறும் அறிவும் நாளுறும் உழைப்பும்
கரவாப் பயன்தரும் கலைநிலைக் கூறாய்
எண்ணெழுத் தியலல் நெறிமுறை யோர்ந்தே
திண்ணுறும் பொழுதியல் செப்புமா நெறியே 342

எண்கலை யியல்தெரித் தண்டமிழ் நெறியால்
பண்டுறும் இயலறிப் பெருங்கலைத் திறனாய்
எண்ணெண் கலையுறும் நிறைநிலை யாற்றல்
விண்டுறும் பொருட்கலை விளங்குறத் தெரித்தே
எண்ணெழுத் தியலறி மெய்க்கலைப் பயனும்
நண்ணுவ நாடி நற்றமி ழாயலே 363

எண்கலை மூலத் தியலறி வுற்றே
விண்ணொலி யாற்றல் மேவுறுங் கலைத்திறன்
அறுபான் நான்குறும் மெய்யிய லோர்ந்து
உறுவகை நுட்பம் ஒல்லையிற் கிளந்து
சுழலியற் கூற்றே விரைவுறும் பெருநெறி
எழுவுறுங் காலத் திண்ணிலை யியலாய்
நுட்பத் தியல்நிலை நுணுக்க மாயியல்
அணுவணுத் திறனும் ஆய்வுற வாய்ந்தே
மெய்க்கலை யுண்மை விளம்பற் பாலதே 364

எண்மையும் நுண்மையும் இனிதுற வோர்ந்தே
திண்மையும் சீர்நெறிச் செவ்விதிற் கிளந்தே
எண்ணெண் கலையியல் புறத்தியல் நுணுகி
நண்ணுறுங் கலைத்திறன் நாடுவ நாடவே 365

கண்முத லைந்தும் கருத்துறக் காத்து
விண்முத லைந்தும் விளங்குற நோக்குபு
எண்கலை முலம் எண்ணெண் ணியலும்
நண்ணுறும் நற்கலை நனிவிளக் கும்மே 380

என்முறை வைப்பே எண்கலை யிலங்கி
எண்ணெழுத் தியலுறும் முலத் திறனாய்
விண்ணெறி நாட்டி எண்குறித் தோற்றம்
தண்டமிழ்க் கலைத்திறன் முலத் தியலே 383

எண்ணிலை யியலாய் எண்கலை நெறிக்கூர்
விண்ணியல் முலம் விளங்குற நோக்கி
எண்ணெண் திறனா யிலங்குறு மாநெறி
எண்ணெழுத் தியற்கலை யளவியற் கூற்றே 392

எண்ணியல் திறனால் எண்கலை யோர்ந்தே
எண்ணெண் நெறித்திறன் இயல்பட விரித்தே
ஒளிமொழித் திறனால் ஓங்குறும் பெருநெறி 407

எண்ணே யியல்தெரிக் கணக்கிய லாற்றல்
உண்ணோர் நோக்கி யொளியுறுந் திறத்தால்
மண்ணியல் பறிந்தே மண்கலை தேர்ந்தே
எண்ணிலை யோங்கி யெண்ணமு முணர்வும்
நண்ணுறும் ஆறு பத்துபத் தாறாய்
எண்ணியற் கணக்கின் எழிலுறு மாற்றல்
மண்ணியல் பறிந்தோர் மதியொளித் திறத்தால்
எண்ணுறுங் கால நிலையியல் பறிந்து
திண்ணமுங் குறிப்பும் செழுங்கலைத் திறமும்
ஒண்ணிதின் நோக்கி யொன்பது மாய்ந்து
நன்றுறும் நலனெறி மெய்க்கலை யாற்றல்
ஒன்றுறும் ஒளித்திறம் மெய்க்கலை மொழியே
பார்நிலை யாற்றல் காலமு மறிந்து
தேர்நிலைக் கலைநெறிச் செப்புவ தோர்ந்தே
விண்ணும் மீனும் நுண்ணிதின் நோக்கி
எண்ணுறுங் காலத் தியலறி வுற்றே

பார்நிலை யாய்ந்தறிப் பெருங்கலை யெண்ணியல்
'சிரறி வுற்றோர் செப்புமா நெறியே' 422

வாயில் முன்றில் வரைவியல் நோக்கி
ஆய்தலும் நெறிமுறை யெண்கலைத் திறனால்
நோக்குறும் நோக்கால் பார்நிலை நோக்கி
ஆக்குறு மிடம்தெரி மெய்புயிர் நோக்கிச்
கணக்கியல் நெறியே கருதரு மாற்றல்
கணக்கியல் தெரிக்கும் என்னொண் ணியலே 433

என்னொண் ணியலால் என்கலை யோர்ந்தே
என்முறை யென்ன மென்னுணர் வுற்றே
என்னி லென்னா லியைபுற நோக்கி
என்னிலாக் குறிநிலை என்பொரு ளுணர்த்தி
என்னு மென்னியல் என்கலை யுணர்வால்
என்னிலை யோங்கலை இயல்பென் றோர்ந்து
என்முறை யுணர்ந்தே இயல்புறு நெறியே 436

என்னிலைக் கலையே இலங்குறுந் திறனாய்
விண்ணிலை விண்ணியல் மேவுறு மாற்றல்
என்னொண் கலைத்திற னைந்தியல் நோக்கி
நுண்கலை நுண்ணிதின் முதற்பொரு ளறிந்தே
பொருளறிந் தியங்கும் மெய்ப்பொரு ளுண்மை
பொருளுறுங் கலைதெரி மெய்திறக் கலையாய்
ஐயைந் தியல்நெறி யாற்றலும் நுட்பமும்
ஐந்தியல் நெறியே மெய்க்கலை நிலைக்குறி
என்முறை யாற்றல் இலங்கக் காண்டுழி
என்னொண் கலைத்திறன் இயற்று மாநெறி
நுட்ப மறிந்தே நுணுகியு மணுகியும்
திட்ப மறிந்தே கடுகியுங் கருத்தால்
ஒங்குறு முணர்வால் உளத்தொளி நோக்கி
ஆங்குறும் நிகழ்வே ஈங்குறு முண்மை
ஒங்குறு முணர்வா லுரைத்தனன் நன்றே 437

பாடலு மாடலும் கலைதரு நோக்கால்

நேடலும் நடலும் நிலையுணர் வுய்த்தே
என்டரு மியலால் இசைநிலை யோர்ந்தே
எண்ணியல் முறையி லாடலு மாய்ந்தே
நுண்ணறி வாற்றல் விண்ணறி நோக்கால்
எண்ணறி யிசையலை ஓசை யாய்ந்து
நண்ணுறு மாடல் வளைவியற் கூற்றே
எண்ணுறுங் கலைத்திற னியல்பிற் பெருக்கி
காலமும் விரிவும் காட்டுந் திறனும்
கோலமும் சீலமுங் குறிப்பிற் கொண்டே
ஞாலத் தியல்தெரிப் பாடல் ஆடல்
காலக் கணக்குறக் கருத்துறும் நெறியால்
நோக்குற நோக்கி நுவன்றனன் நன்றே 439

எண்கலை விண்கலை நுண்ணிதி னோர்ந்தே
எண்ணிய லொளிதிகழ் நெறிமுறைக் கூற்றாய்
எண்கலை நெறியே ஒளிநிலை முலம்
எண்ணெண் ணியல்தெரி மாநெறிக் கலையாய்
நண்ணுறும் மெய்ப்பொருள் கலைநெறி முதற்றே 440

எண்ணெறி பெருக்கி விண்ணெறி சுருக்கி
உண்ணெறி நோக்கல் ஒளிநிலைக் கலையாய்
விரித்துறு மாற்றல் வேண்டுறுந் திறத்தால்
தெரிநிலை விளங்கச் சிர்நெறி தெரிந்தே
எண்ணெண் கலைத்திறன் இயலுற நோக்கி
நுண்மைப் புள்ளி நுணுக்குற வாய்ந்தே
திண்மை நாற்புறத் தியலறி வாற்றல்
உண்மை யொளிநிலை யோங்குற் றாய்ந்தே
எண்மை யெண்ணிலை யெண்ணிய லெண்கலை
நுண்மை நோக்கி நுவலரும் பொருளாய்
எட்டின் பிறழ்நிலை யிலங்குறு மியக்கம்
விட்டுறுங் கலைநிலை மெய்ந்நிலை யுணர்ந்தே
முயக்க முணர்ந்தே யியக்க மறிந்தோர்
எண்ணெண் கலைத்திறன் இனிதுண ரறிவரே 447

எண்ணுறு மியலா லிசைநிலை யிடைநிலை
நண்ணுறு மோசை ஒலியிடைக் காலம்

விண்ணுறுந் திறமொளிர் நுண்ணுறு மொலிநிலை
நுண்மையி னோக்கி நுவலுறுங் காலை
எண்ணியற் கலையி னியலுறும் நுட்பம்
நுண்ணிசைக் கலைநெறி நுவலல் வழக்கே 452

எண்ணிலைக் கலைநெறி ஐந்தியல் தெரித்தே
எண்ணிய லெண்முறை எண்ணுனர் திறனாய்
நெறிமுறைக் கலைத்திறன் நிலைபெற நிறீஇ
அறிகலை இயலா லைந்துமைந் தியலாய்
ஒள்ளொளித் திகழும் ஒருநிலைப் புள்ளி
வில்லுறும் நாற்புறத் தியல்நிலை மேவி
அறுபான் நான்கி னியலுறும் மூலம்
உறுநெறிக் காலத் தியல்நெறி விரைவே
வையம் விண்ணும் வரையுறத் தெரித்தே
ஐயம் நீக்குபு மெய்க்கலை யுணர்ந்தே
அகவின் னாற்றல் நனிதெரிந் துணர்ந்தே
அகத்துணர் வொளியால் பெறலருங் கலைத்திறன்
நுண்ணித் னோர்ந்தே திண்ணிதி னாய்ந்தே
எண்ணியற் கலைத்திறன் எண்ணெண் ணியல்முறை
உணர்வொளித் திறத்தால் சிற்றவை நோக்கி
உணர்நிலைக் கலையியல் ஒங்குறு மாற்றல்
மூன்றுநூற் றிரண்டுபத் தியல்நிலை யாகி
ஏன்றுறுங் கலையொளி எண்ணுந் திறத்தால்
அறுபான் நான்கியல் ஐந்நெறி யோர்ந்தே
ஒருநிலை எண்ணியல் உரைத்தனன் விரித்தே 472

எண்ணியல் மொழியே இலங்குறும் மெய்க்கலை
நண்ணி யுணர்ந்தே நெறிக்கலை நாடி
எண்மொழித் திறனா யெண்ணுற நோக்கி
விண்மொழி நோக்கல் மெய்ப்பொரு ளுறுமே 474

நாடும் நோக்கும் நுண்ணிய வுணர்வும்
கோடும் குறுக்கும் புள்ளியுந் தேர்ந்துபு
நாற்புறத் தியல்நெறி நன்னிலை தெரித்தே
ஏற்றுறும் எண்ணியல் நெறிமுறை யோர்ந்தே

குறுக்கம் புள்ளிக் கோட்டின் வரிவியல்
குறுநிலை யுருவும் மெய்ந்நிலை யார்ந்து
தெற்றெனத் தெளிதல் எண்ணிலை முலம்
பெருங்கலைச் சுழியா யுவப்புற நோக்கிக்
கருத்தறிந் தாய்தல் எண்ணிலைக் கலையாய்
எண்ணுற நோக்கி யியலுற வுணர்ந்தோர்
நுண்ணிதின் நுட்பம் நுவலுவ தோர்ந்தே
எண்முறை நெறியென் றியம்பல் வழக்கே 482

கற்பன கற்றுக் காண்பன நோக்கி
சிற்பம் ஒவியம் செல்விசை யோர்ந்தே
எண்கலை நுண்கலை இயலுறத் தேர்ந்தே
விண்கலை நெறிமுதல் மேவுவ தோர்ந்தே
ஒளிக்கலை ஒலிக்கலை ஓர்ந்து தெளிந்தே
வெளியியல் வளியியல் விரைவின் ஆய்ந்து
காலமும் முலமுங் கருத்திற் குறித்தே
கோலமும் சீலமும் குறிப்பி னாய்ந்தே
ஞாலம் ஆக்கும் நெறிநிலை யாய்வோர்
சீலத் தெண்ணியல் எண்ணெண் கலைத்திறன்
நோக்குற நோக்கி நோக்குற் றிலங்கி
எண்ணிய லறிவர் கலைதெரி விரிவும்
விரிவாற் றுலங்கும் மெய்க்கலைப் பொருளும்
தெரிநிலைப் பொருளும் தோன்றாப் பொருளும்
தோன்றும் பொருள்நிலை இயல்நிலை யுணர்வும்
ஏன்றுறும் பொருள்நிலை இயல்நிலைத் திறமும்
எண்ணெண் கலைத்திறன் நிலைவிளக் கும்மே 496

எழுநிலை எண்ணிலை இயல்பை யறிந்தோர்
எழுங்கலை யொளிநிலை நெறியறிந் தோரே 503

நெற்றிப் புருவம் கண்விழி யாய்ந்தோர்
கற்றறி முகநிலை உற்றறிந் தோரே 507

முகமறிந் தோரே உறுப்பிய லறிவர் 508

உறுப்பியல் எண்ணிலை எண்ணியல் அளவே 509

உடலியல் எட்டின் கலைநிலை காட்டும் 510

உயிரியல் ஐந்தின் நெறிநிலை கூட்டும் 511

எண்கூ றியலால் கண்கூ றறிவோர்
பெண்கூ றாண்கூ றியலறி வாரே 512

எண்ணியல் நெறித்திறன் மெய்க்கலைப் பொருளாய்
எண்ணியல் நிலைநெறி மெய்யியல் நுட்பம்
திகழ்தரும் உண்மைப் பொருண்மை தெரிந்தே
அகவொளி நோக்கி ஒளிநிலைக் கலைத்திறன்
அகத்துணர் மெய்ம்மை ஐந்நிலை நிறீஇ
குடிநிலை குறித்தே குறிப்பொரு ளாய்ந்தே
குடியுறுங் கலைநிலைக் கடிதின் நோக்கி
முக்குடி முப்பொருள் முறைமையிற் றேர்ந்தே
ஐங்குடிச் சிறப்பால் அரும்பொரு ளாய்ந்தே
குடியுறும் ஒளிநிலை விண்ணிலை மெய்யொளி
நெடிதின் ஓர்ந்தே நெறிமுறைத் திகழ
ஐங்குடி யாயும் அருங்கலை யோங்கித்
தங்குறும் ஐந்தியற் செந்நெறி முந்நெறி
எண்ணெண் கலையால் இயலுற நோக்கி
நுண்ணறி வுற்று விண்ணறி வோங்கி
எண்ணறித் திறத்தால் இயல்நிலை நோக்கி
ஆய்வுறும் ஆய்வால் அமைவுற வாய்ந்தே
அருங்கலை நிலைமுறைச் செம்முறை தெரிந்தே
ஓர்ந்துணர் நெறிக்கலை உணர்வொளித் திறத்தால்
தேர்ந்துணர் நெறியே செம்மையின் எய்தி
நேரறி வுற்று நிலைபெறக் காண்போர்
சீரறி மெய்ந்நிலை தெரிந்துணர் வாரே 524

எண்ணியல் எண்கலை எண்நெறி எண்முறை
எண்திறன் ஐந்தின் இயல்நிலை ஓர்ந்து
நண்ணுறும் மூலப் பொருள்நிலை தெளிந்தே
நவையறு நாற்புறத் தியலுருக் கண்டே
உள்ளுள் ளொளிர்தரும் மெய்நெறி தேர்ந்தே
தெள்ளறி வுற்றே சீர்நிலைக் கணக்கியல்

நாடித் தூநெறி மாநெறி ஆற்றலால்
நாடுறும் ஐந்தியல் ஐந்துறும் நெறியும்
ஐயைந் தியல்நெறி வலமிடச் சூழல்
மெய்யுணர் வகையியல் மெய்பெறத் தெரிந்து
மெய்யுயிர்க் கலைநிலை உண்மை விளங்கி
வெளியொலி யியல்நிலை விளக்க மாய்ந்தே
ஒளிஒலி ஒலிஒளி நுட்பம் கூர்ந்து
ஒளிஒலி யாய்நிறை ஒலிஒளி ஆக்கம்
தெள்ளத் தெரிந்தே முலத் தியனிலை
விள்ளுறும் ஆற்றல் விளங்கிக் காண்டுழி
முலப் பொருள்நிலை முன்னி ஓர்ந்து
ஞாலம் காலம் கோலமும் நண்ணி
புள்ளித் திறன்வலி பொருந்த வுணர்ந்தே
ஐந்தியல் நுட்பம் அகமுணர் திறத்தால்
வந்துறும் காலத் தியல்நிலை ஓர்ந்தே
காலம் அறிதல் பெருங்கலைத் திறனாய்
காலம் உணர்தல் தொலைநோக் கியலாய்
கால மியல்தெரிப் பொருள்நிலை ஆய்ந்தே
காலத் தனுநிலை அணுவணுத் தேர்ந்தே
கருத்துறும் இடநிலை மெய்ம்மை அறிந்தே
கால முலம் கருத்தில் நிறுத்தி
தேர்த்துகள் பொழுதின் சீர்நிலை அறிந்தே
ஓர்ந்துறும் எட்டின் ஒருநிலை கூர்ந்து
அணுவணு வுள்ளுறும் நுட்பம் கூர்ந்தே
கணுவுறும் நுட்பமும் கடிதில் தெளிந்தே
ஒண்ணிலை காலத் தியல்நிலை ஓர்ந்து
எண்ணிலைப் பொருளியல் நெறிமுறைக் கலைத்திறன்
ஒளிமுதற் பொருள்நிலை ஐந்துறும் நிலைகலை
ஒளிஒளி யியல்புறும் எண்ணெண் கலைத்திறன்
நோக்குபு நோக்கு நுண்ணறி வுற்று
ஆக்குவ கலைநெறி இயல்நிலை முலம்
ஒன்றினின் றொன்றே உருவெடுத் திலங்கி
தென்றிசை நிலைகலை சீர்கழல் ஆக்கம்

பொன்றாக் காலம் பொருந்த உணர்ந்தே
உண்மை நிலைநெறி ஒருங்கியல் தேற்றம்
என்மை யியல்நிலை இலங்குறும் நன்றே 525

எண்ணிலை அறிவியல் விண்ணிலை நுட்பம்
தெண்ணிலை நிலைகலை தெளிவுறுத் திறனே 526

உண்மை மெய்ம்மை உயிர்மை ஓர்ந்து
திண்மை நுண்மை சீரறித் தாற்றலால்
எண்ணறிக் கலைதெரி யியலுணர் நுட்பம்
விண்ணறி வாலுணர் மெய்க்கலை நிலையே 538

நிலையும் கலையும் நெறியுற் றோர்ந்தால்
உலைவில் ஊக்கம் உணர்வும் ஓங்கி
ஊழை வெல்லும் உறுவலித் திறமுறும்
கால நுட்பங் கருத்தில் இருத்தி
மூலத் திட்பம் மெய்ம்மை யறிவோர்
ஏலும் எண்ணெண் இயல்தெரி வாரே 539

எண்ணிலை நுட்பம் இயலறித் திறனாய்
நுண்ணறி வுற்றே நுவலரும் திறத்தியல்
எண்ணறி வியலால் விண்ணெறி நோக்குபு
எண்ணாத் தியல்நெறி அகவின் னாய்ந்தே
நோக்குற நோக்கி நுண்பொருள் ஆய்தல்
நோக்குறுங் கலைத்திறன் எண்ணிலை யியலே 561

காலப் பொழுதியல் கணக்கியல் நெறியே 562

என்மையும் நுண்மையும் விண்மை தெரிக்கும் 571

எட்டியல் ஐந்தியல் நெறிமுறைக் கலையே 572

மூலத் தெழுநிலை முதற்பொருள் ஆய்ந்தே
காலத் தியலும் கணக்கியல் நெறித்திறன்
எண்நிலை நெறியுற் றெண்ணுறும் ஆற்றல்
விண்ணெறி நுண்ணறி விளக்குறும் திறனே 578

உயிரியல் எண்ணிலைக் கலைநெறி மூலம்

செயிரறத் தேர்ந்தோர் நெறியுறத் தெரிவரே 583

ஒருங்குணர் ஆற்றல் ஒள்ளிதின் உற்றே
மருங்குறும் எண்ணிலை நுட்பம் தேர்ந்தே
கருத்துறி னைந்தொழில் கலைநெறி நோக்கி
ஒருநிலை யுற்றுணர் உட்கலை தேர்ந்தே
கருநிலை மூலம் காண்டலும் நெறியே 590

அளவியற் கலைநெறி ஆா வுணர்ந்தே
உளவியற் கலைநிலை உண்மை தெரிந்தே
எண்ணுறுந் திறனிலை நெறிமுறை யோங்கி
விண்ணொளி மூலப் பெருநிலை ஓர்ந்து
பருநிலை நுண்ணியல் வகுத்தியல் நெறியால்
ஒருநிலைக் கலையியல் உற்றறித் திறனாய்
எண்ணெண் ணியலுறும் நுண்கலை ஒளிர
எண்கணக் கியலுறும் நெறிநிலைத் திறனுற்
றோர்ந்தொளிர் ஒண்மை ஒளிநிலைக் கலையே 601

எழுத்திய லெண்ணியல் நெறித்திறன் உள்ளி
வழுத்து மெய்ந்நெறி வளர்கலை மாநெறி
அறுபான் நான்கின் அருங்கலை நுட்பம்
உறுமுறை இயல்தெரி உண்மைப் பொருளறித்
திறமுறு மைந்நெறி செந்நெறி ஓர்ந்தே
ஒளிநிலைக் கலைநிலை உணர்த்துவ தியல்பே 602

தொன்மை முதுகலை எண்ணியல் மரபாய்
பன்மை ஒருமை பெருநெறி ஓர்ந்தே
எண்மை நுண்மை இயல்புற் றாய்ந்தே
திண்மை இயற்கலை சீர்நிலைத் திறனாய்
மொழியும் எண்ணும் முன்னுவ நோக்கி
மொழிக்கலைத் திறநிலை எண்ணிய மூலம்
எண்ணிய லளவிய லெழுத்திய லாய்ந்தே
எண்கலை நிலைத்திறன் எண்ணெண் நிலையியல்
ஐந்தெழுத் தியல்நிலை ஆக்க நுட்பமும்
ஐந்தைந் தியல்நெறி நோக்க நுணுக்கமும்

நுண்ணிதின் நோக்கிப் பண்டுறும் எண்ணியல்
எண்ணியல் எட்டால் எண்ணே நிலையாய்
உண்மை உணர்ந்தே உறுபயன் உரைத்தல்
எண்ணியல் கலைதெரி இயல்நெறி மரபே 604

புள்ளித் திறனறி பொருந்து மாக்கலை
புள்ளிக் கூட்டுறும் ஐந்திய லாக்கம்
தெள்ளுறுங் கலைநிலைச் சீரியற் செந்நெறி
விள்ளுறுங் கால விரைவுறுந் திறத்தால்
ஞாலத் தியலும் விண்ணின் கலையும்
மூலக் குறிப்பால் முதறி வுற்றே
ஒளியா லறிந்து வெளிமுறை தேர்ந்து
களியுறுங் கணக்கியல் காண்பதும் நெறியே 622

எண்டிசை எண்கூ றியல்புற வறிந்தே
எண்முறை எண்ணிலை நெறியுறத் தேர்ந்தே
விண்பார் இடநிலை விளங்குற வறிந்தே
நுண்ணுறும் நுணுக்கம் நுவலறத் தெரித்தே
எட்டி னியல்தெரி நிலைதெரி மூலம்
எட்டுறும் மாக்கலை குறிமுறைத் திறனாய்
எண்ணெண் கலைத்திறன் மேவுறும் ஆற்றல்
விண்ணெறி விளங்கி எண்ணெறி துலங்கி
நுண்ணறி வாற்றல் நுவலுபு நுவன்று
எண்ணிய லாய்நிலை எண்முறை மரபே 627

ஒளியியல் மூலம் ஓங்குறும் உணர்வால்
வெளியியற் கலைதெரி நெறியியல் நோக்கிக்
கலைத்திற மாண்பால் எண்ணெண் நிலையியல்
நிலைத்திறம் நெறிமறை ஒருங்குறுந் தன்மை
ஓவியஞ் சிற்பம் ஒண்டலி ழேழிசை
மேவுறும் இயல்நிலை அறுபான் நான்கியல்
மூலத் திறனாய் முன்னி யோர்ந்தே
காலமும் இடமும் கனிம்புறக் கனித்தே
ஒன்றுறும் ஒன்றில் ஒன்றிரண் டெனுநிலை
ஒன்றுற் றியலாய் ஓங்குறுந் திறனே 631

ஆற்றல் நிலைநெறி அருங்கலை யியலும்
தோற்றுந் திறனும் தேற்றமுந் தெளிவும்
மாற்றிலாக் கணக்கியல் மாநெறி யொன்றே
ஏற்றுறுந் திறனிலை எண்ணிலைக் கூற்றாய்
ஐந்தியல் நெறிக்கலை மெய்யுற விளம்பி
முந்துறுந் தொல்கலை நெறிவிளக் கும்மே 641

அறுபான் நான்கு மெழுத்தமை வுற்றே
உறுமுறைக் கலைதெரி யுண்மை யோர்ந்தே
பேரிய லெண்ணெண் கலைதெரி நோக்காய்
சீரியல் முறையுறுஞ் செந்நெறி கிளக்குபு
தொன்மைப் பண்பும் மென்மை யியல்பும்
வண்மை யாக்கமு மிடையின மாண்பும்
இனங்குறித் தியலு மொளிநிலை யோசை
ஒளிநிலைக் கலைத்திற னொளியா லுணர்ந்தே
வெளிமொழி ஓம்நிலை விளங்குற விளங்கி
எண்ணெண் கலைநிலை எண்மொழி யாற்றல்
எண்மொழித் தமிழா யிலங்குமா நெறியாய்
எண்திற முலம் எழுத்தியல் நோக்கி
எண்கலைத் திறனெறி மெய்யிய லோர்ந்தே
கோடும் வரியும் கோடுறும் வளைவும்
நாடும் புள்ளியல் நீட்டல் குறுக்கல்
மேல்வளை வியற்றல் கீழ்வளை வாக்கம்
கோல்நெறி கோடே கிளைநிலைக் கோடே
இருநிலை மேல்நிலை இருநிலைக் கீழ்நிலை
வலமுறு மிகுநிலை இடமுறு மிகுநிலை
வலமிடம் இருநிலை ஒருநில நெறியாய்
மேல்கீ ழாக்கம் இடையிடைத் தோற்றம்
மேல்கீழ் வளைவிய லிடையிடைப் பரப்பியல்
மேலியற் புள்ளி மெய்ந்நிலை யோர்ந்து
மேலிய லாக்கம் மெல்லினத் தன்மை
வளைவும் நெளிவும் நீட்டுங் குறுக்கமும்
அளைவிலா தாக்கம் நெறிமுறை யோர்ந்தே

நெட்டெழுத் தியல்நிலை நெடுந்தமி ழாக்கம்
நெட்டெழுத் தியற்கலை நெறிமுறை நோக்காய்
நெடிதின் நோக்கமும் நெடுங்கணக் கியலாய்
கடிதி னாக்கங் குறுங்கணக் கியலாய்
ஆயும் ஆய்முறை ஆய்நெறி யாயம்
ஆய மூலமும் மெய்க்கணக் கியலும்
ஏயுமா றியல்தெரிச் சிற்பமுந் தமிழும்
ஏயுமா றியலால் மண்ணும் விண்ணும்
ஏய நோக்கின் மனைநிலம் நிலமனை
ஆய நோக்கின் ஆயங் கூறும்
மெய்ப்பொருள் ஓர்ந்துழி எண்ணெழுத் தியற்கலை
மெய்த்தகு திறனும் மெய்ப்புற நோக்கி
மெய்யுணர் கலையாய் மெய்யியல் விரித்தே
மெய்யியல் முயற்சி ஓசை மூலம்
உய்த்துணர்ந் தாக்கம் நிலைபெறக் கண்டுழி
மெய்யுணர் சிற்பம் மெய்க்கலைத் தமிழ்நிலை
எழுத்தியற் சிற்பம் எண்ணுறுஞ் சிற்பம்
வழுத்து மாக்கலை எழுத்திய லுருவெலாம்
சிற்ப மாக்கலை மூல நிலையெனச்
சிற்பச் செந்தமிழ்ச் செந்நெறித் திருநெறி
உற்றறி யுணர்வால் சிற்றவை நோக்கின்
தெற்றெனத் தெளிதல் செந்தமிழ் வளைவியல்
எட்டியற் கோட்டுரு நேர்க்கோட் டாக்கம்
எட்டுறும் நிலைக்கலை வளைவியல் ஓமென
நெறிமுறை யோர்ந்து நிலைக்கலை யாய்ந்து
குறிமுறை யாற்றலால் குறிநிலை வழக்கே 645

விண்மண் ணாய்தல் எண்ணிலைக் கலைநெறி 656

எண்ணியற் கலைதெரித் தியலைந் தைந்தியல்
விண்ணியல் முறைதெரி விளக்க மோர்ந்தே
எட்டுறுங் கலைநிலை எட்டெட் டியலாய்
எட்டின் நிலைதெரி யியல்நிலை மூலம்
பொருள்நிலை யாக்கம் பொருளியல் நெறியால்

தெருளியல் கலைதெரிச் சிற்றவை நோக்கி
எண்ணெண் நாற்புறத் தெண்ணியற் கலையால்
திண்ணமு முறுதியுஞ் சீரறி வோங்கி
நுண்ணிதின் உணர்கலை மெய்க்கலை நாட்டம்
விண்ணறித் திறனுறும் மெய்யுணர் நுட்பம்
கால விரைவியல் சுழல்நிலை கருதி
மூலப் பொருள்நிலை முயன்றின் தோர்ந்தே
எண்கலை நுணுக்க மியல்பினிற் றேர்நிலை
ஒண்ணெறி ஒள்ளிய லொட்ப மாய்ந்தே
அறுபான் நான்கு மமைவுறும் மெய்க்கலை
உறுநிலை வியலா லோங்குறும் மொலிக்கலை
ஒலிநிலைத் திறனிற லோசை யாற்றல்
ஒலியியற் திறனிற லோசை யாற்றல்
தெரிந்துண ருண்மை ஒலிஒளித் திறனாய்
விரிநிலை மூலத் தெழுநிலைக் கலையாய்
எண்ணெண் கலைதெரி யியலுமா நெறியே 660

செந்நெறி மெய்க்கலை சீர்சால் மாநெறி
மெய்ந்நெறி எண்ணே எண்ணிலைக் கலையால்
ஓங்குறும் ஒட்பத் தொளிதரும் இயல்நிலை
தேங்குறும் பேருணர் வுறுநிலைக் கலையே 667

எண்கலை யியலால் விண்கலை ஓர்ந்தே
எண்ணெறி ஆற்றல் இயைபுறக் கண்டே
உடலியல் எட்டியல் ஒருங்குற் றாய்ந்து
உடலிய லெண்நிலை உறுநிலை ஐங்குடில்
தெள்ளூற் றெரிநிலை சீர்நெறி நோக்கி
விள்ளுறும் மொழியியல் எண்ணிலை உடலியல்
உறுப்பியல் எண்ணள வியல்நிலை நுணுக்கம்
உறுநிலை உள்ளொளி உள்விசைச் சுழலல்
எண்ணிலை எண்ணி எண்முகத் திர்ப்பியல்
உண்முக நோக்கால் விண்முதற் கண்டே
விண்கலத் தியல்நிலை வெளிநிலை விரைநிலை
தெண்ணிலைத் தெருட்கலை நெறிமுறை ஓர்ந்தே

ஆழித் திறனும் உருளை ஆக்கமும்
மேழி மாக்கலை தேர்க்கலை நுட்பமும்
ஒருங்குறத் தேர்ந்தே விண்கலத் தியல்நெறி
பெருக்கமும் சுருக்கமும் பெட்புற் றாய்ந்தே
விசையின் விரைவும் ஆற்றலும் கருதி
விசைநிலைச் சுருக்கல் பெருக்க லோர்ந்து
விண்கலம் எண்ணிலை எண்ணெறி ஆற்றலால்
எண்ணிய நெறியால் லியம்ப லறிவியல்
உண்மை தெளிந்தே எட்டின் ஆக்கம்
திண்ணம் அகவின் னொளிதரும் ஆற்றலாய்
விண்கலத் தியலல் விசைநிலைச் சுழலல்
எண்கலை நுட்ப மியம்புமா நெறியே 686

தெளிவுற் றாய்ந்து சீர்நிலை நாடி
ஒளிநிலை யியலால் ஒங்குறும் ஆற்றலால்
உயிர்ப்பிய லுயிர்ப்பொரு லுயிர்ப்பு முயிர்நிலை
உயிர்க்குல முன்னி ஒருநிலை நோக்கே
ஆக்கும் உயிரெலாம் ஒளிஒலி யியலே
உயிருளம் உயிர்நெறி உயிர்க்கலை உயிர்மொழி
உயிரிசை ஐந்தும் உயிருணர் வொன்றி
உள்ளுவ உள்ளி ஒங்குறும் நெறியால்
தெள்ளு மாக்கலைச் சிற்பச் செந்தமிழ்
ஒவியச் சித்திரம் ஒருநெறித் தன்மையால்
மேவுறும் தன்மை மெய்நிலை அறிந்தே
சித்திர மோவியம் சிற்பச் செந்தமிழ்
மெய்த்தக நெறிநிலை மெய்யுற் றுணர்ந்தே
உள்ளொளி எண்ணிலை உயிரிய லாய்ந்தே
தெள்ளு மாத்தமி ழெண்கலை நெறியே 689

குறியியல் நெறியியல் குறித்தறிபு புலமாய்
ஒன்றுறு மொன்றில் லொன்றி னோர்ந்தே
ஒன்றிரண் டொன்றில் ஒன்றுறும் ஒன்றே
ஒன்றிய ஒன்றால் ஒதுகலை யாக்கம்
தென்கலை தென்னிலை தென்மொழி தென்னியல்

தென்புலம் தென்நிலம் தென்றிசை முலம்
எண்டிசை இயல்நிலை தென்றிசைக் கலைநிலை
எண்டிசை எண்ணிலை தென்றிசை ஒன்பான்
எண்டிசை எட்டே தென்றிசை பிறழ்நிலை
எண்டிசை மெய்ப்பயன் தென்றிசை யியலென
நுட்பந் தேர்ந்தே திட்ப முணர்ந்தே
பெட்புறும் முணர்வின் பெருங்கலை ஆயல்
மெய்நெறிக் கலைநிலை அறுபான் நான்கின்
உய்வகைத் திறனெறி உண்மை யியலே 703

முப்பொருள் முக்கலை முந்நெறி முத்திறன்
செப்பரும் பொருள்நிலை சிருறத் தேர்ந்தே
பருப்பொருள் விழுப்பொருள் உயிர்ப்பொருள் நெறிநிலை
கருப்பொருள் செம்பொருள் கணக்கியல் நெறியே 710

கலைமொழி கண்டுணர் கருத்தறி வுற்றே
நிலைமொழி முலம் நெறிமுறைப் பொருள்தெரி
தலைமொழி தனிமொழி தன்னிலை யாய்ந்துணர்
நிலைநெறி யாற்றல் நெடிது நினைந்தே
சிற்பம் ஓவியம் சித்திரம் கண்ட
பொற்புறும் ஒளிமொழி விண்மொழிச் செந்தமிழ்
கலைத்தொழில் மரபே கவினுறும் நெறியாய்
நிலைத்தொழில் மொழிக்கலை கலைமொழிச் செம்மை
எண்ணல் இயற்றல் எண்முறை யாற்றல்
எண்கலை எண்மொழி எண்நிலை ஒர்தல்
எண்ணுறுந் தனித்திறன் இயல்மொழி நிலைத்திறன்
விண்ணுறுங் கலைத்திறன் வெளிஒளி நோக்கி
சிற்ப மாமொழி செந்தமி ழிசைமொழி
பொற்புறு மோவியஞ் சித்திரம் மாக்கலை
பொருந்த நோக்கி மெய்வினை யாற்றல்
ஒருமொழி ஒளிமொழி உண்மை யுணர்ந்தே
வருமொழி நிலைமொழி வகையுணர்ந் தாய்ந்தே
முல மாமொழி கால முணர்மொழி
முலத் திறமொழி மெய்மொழிச் செம்மொழி

உணர்வா ஒுறுமொழி ஒளியால் திகழ்மொழி
உணர்கலைப் பெருக்கும் சீர்மொழி செழுமொழி
சிற்ப மோவியஞ் சித்திரக் குறியால்
சிற்றவை எண்ணிலை சிரியல் கணக்கியல்
அறுபான் நான்கியல் எட்டின் பிறழ்வால்
உறுபயன் நிலைதரும் ஓம்கலை தரும்மொழி
ஐந்தியல் நெறிதரும் அருங்கலை யுறுமொழி
ஐந்திசை ஏழிசைச் சிற்ப மாமொழி
வந்துறு மோவிய மெய்யுணர் தரும்மொழி
முந்து சித்திரக் குறிநிலை யியல்மொழி
தண்டமி ழைந்தியல் தகைவுறக் கண்டே
பண்டுறும் நெறிக்கலை பாரிய லாய்ந்தே
விண்ட மாக்கலை வெளியியற் கலையென
பண்டுறும் மரபியல் பகர்நெறிக் கலையே 712

மூலப் பொருளியல் முந்நெறி முப்பொருள்
கால மியல்நெறி கலைநெறி தேர்ந்தே
எண்ணொண் ணியல்நெறி கலைநிலை நுணுக்கம்
எண்ணியல் முறைத்திறன் ஒழுங்குறும் ஆக்கம்
ஒன்றிரண் டியல்நெறி உண்மை உணர்ந்தே
ஒன்றே ஒன்றின் இரண்டுறு மொன்றாய்
நன்றுறும் நிலைகலை நெறிமுறை யுணர்ந்தே
எட்டியல் மெய்நிலை இயற்கலை நோக்கித்
தெட்டுறும் சீரியல் நெறிதிறத் தியலே 715

ஒன்றுமுன் றொன்றாய் முந்நெறி யியல்திறன்
நன்றுறும் மைந்தியல் மூலமா நெறியாம் 716

மூலத் தியலெழுங் கனலொளி கூர்ந்தே
மூல மாநெறி இயல்பி னாய்ந்தே
மூல மூலமும் முந்நெறி யாக்கமும்
கால மாவிசை கணக்கிய லாய்ந்து
விசைநிலை தேர்க்கலை விண்ணிலை ஒர்ந்தே
திசைநிலை தென்றிசை இயற்கலை நுணுகி
இயற்றிற னியல்நிலை இனிதி னோர்ந்து

மயலறும் உணர்வால் அகவின் னோக்கி
நோக்குறும் நிலைக்கலை மெய்ந்நெறி ஓர்ந்தே
ஆற்றுறும் அறுபான் நான்கியல் ஆய்நிலை
நாற்புறத் தியல்நிலை புள்ளி கூர்ந்து
தேற்றமுந் தோற்றமும் சீர்நிலைத் திறனாய்
மாற்றங் கூட்டும் விசைநிலை ஓர்ந்தே
அறுபான் நான்கின் எண்ணிலைத் திறனிலை
உறுமுறை யையைந் தியல்நிலை உற்றே
ஒண்ணிதின் ஆய்ந்தே நுண்ணறி வுற்றே
எண்ணெறி யியக்கம் நண்ணு மாநெறி
நுண்கலை நுட்பம் நுவலுறும் ஆற்றலால்
எண்கலை யியற்கலை எண்ணுறுந் திறனால்
விண்ணியல் மாக்கலை நெறிமுறை யோர்ந்து
உண்ணோக் கியலுறும் ஒளிநிலைக் கலைத்திறன்
எண்ணியல் நிலைதெரி யியல்நெறிக் கூற்றாய்
நுண்ணெறி நுட்பம் நுவல்கலை இயலே 727

ஒலிநிலை கலைத்திறன் மெய்ம்மொழி யாக்கம்
ஒலியியல் நிலைதெரி ஒலியிசை ஆக்கம்
ஒளிக்கலை நிலைமுறை ஒன்றிரண் டாயுறும்
வெளிநிலை வெளிமொழி ஒமுறுங் கலைநிலை
மெய்ம்மைப் பொருள்தெரி நுண்மை விளக்கம்
எய்துறும் நிலைநெறி எண்ணெண் ஆக்கம்
மூலத் தெழுதரும் முதலொலி யிசையாய்
சீலத் தியலால் ஒன்றிரண் டைந்தாய்
ஏழிசை யாய்நிலை வாழிசை வளநிசை
ஆழிசை தாழிசை இசைநிலை யோங்கி
எண்ணான் கிசையுறும் மெய்த்திறத் திசைநிலை
எண்கலை ஆறா றிசைநிலை யாகி
எண்நிலை ஏழு பத்திரண் டிசையாய்
எண்நிலை காலம் தாளங் கருதி
மூன்றுபத் திரண்டே ஒன்றுபத் தாறே
ஏன்றுறும் எழு பத்திரண் டிசையாய்
இசைநிலை நுணுக்கம் எழிலுற் றோர்ந்தே

நசையில் எடுத்தல் படுத்தல் நலித்தல்
விரிவுறும் நாற்றிரு பத்தென் நிலைதெரி
விரிதலை ஏழிசைச் செந்நெறி விளக்கும் 734

எண்ணியல் நிலையே இயற்கலை நெறியாய்
எண்முறை எண்கலை என்னெழுத் தியலாய்
என்குறி என்நிலை என்னள வுற்றே
என்திறன் நோக்குழி என்னெண் ணியலாய்
என்னுறும் ஆக்கம் விண்ணுறும் நோக்கம்
விண்கலை வெளித்திறன் விண்ணியல் நிலைத்திறன்
நெறியுற நோக்கி நிலையுறும் உணர்வால்
அறிகலை இயல்திறன் அறிநிலை உணர்வால்
எட்டியல் நிலைதெரி ஐந்தியல் மூலம்
எட்டுறும் மூலம் நாற்புறத் தியல்நெறி
காலம் வடிவம் செயல்நிலை யுன்னி
மூலம் ஒளிநிலை ஒலிநிலை ஓர்ந்து
சீலம் கோலம் தேர்ந்துறும் உணர்நிலை
ஞாலம் படைத்தல் நற்றிற வாற்றல்
ஐந்தொழில் இயற்றும் ஐந்நெறி ஐங்கலை
வந்துறும் மூலக் கனல்ஒலி யியலாய்
தந்த நல்ஒளி நல்ஒலி யியலாய்
முந்துறும் ஒளிநிலை ஒலிநிலை
இயற்றிறன் ஆய்ந்தே எழுத்தொலி பொருட்டிறன்
மயலற லறிந்தே மயனெறி யுணர்ந்தே
ஒளிக்கலை நுற்றிறன் ஓங்குறும் உணர்வால்
வெளிக்கலை ஒமொழி பொழுதுற் றாய்ந்தே
உட்கலைத் திறத்துணர் எண்கலைத் திறனெறி
பெட்புறும் திறநிலைப் பொருந்தக் கண்டே
அகவின் னோக்கொளி அறுநிலை அறுநிலம்
அகத்துணர் இயல்நெறி மூலத் தெழுங்கலை
ஒன்றி உணர்ந்தே உகுநிலை நோக்கி
நன்றுறும் ஒளிநிலை ஒலிநிலை தேர்ந்தே
பொன்றாக் கலைநிலை பொருந்து மெய்நிலை

தென்றிசை தென்கலை தென்னியல் தென்நிலம்
தென்மொழி முலம் முதல்நிலைப் பொருளாய்
நன்றுறும் ஆக்கம் அறுபான் நான்கியல்
ஒன்றின் றிறநிலை உள்ளுதல் நெறியே 735

கலைதெரி யியலால் கணக்கியல் நுண்மை
நிலைதெரிக் நெறிக்கலை நெறிப்பட நிறிஇ
ஒன்றின் முன்றின் உறுநிலை ஆய்ந்து
ஒன்றின் இரண்டின் வருநிலை நோக்கி
ஒன்றின் ஐந்தின் நெறிநிலை கண்டே
நன்றுறும் நெறிநிலை நவையறக் காண்டல்
அளவை யியல்நெறி மரபியல் வழக்கே 751

கலைதெரி யியலால் கணக்கியல் நுண்மை
நிலைதெரி நெறிக்கலை நெறிப்பட நிறிஇ
ஒன்றின் முன்றின் உறுநிலை ஆய்ந்து
ஒன்றின் இரண்டின் வருநிலை நோக்கி
ஒன்றின் ஐந்தின் நெறிநிலை கண்டே
நன்றுறும் நெறிநிலை நவையறக் காண்டல்
அளவை யியல்நெறி மரபியல் வழக்கே 751

கலைநெறி எண்ணெறி கழறு மாநெறி
நிலைநெறி நிலையியல் நெறிமுறை ஆய்ந்தே
எண்ணெண் கலைத்திறன் எழிலுற் றோர்ந்தே
விண்மொழி விண்கலை வெளிநிலை உணர்ந்து
வான்கலை வான்மறை வான்நெறி ஓர்ந்தே
வானியல் ஓசை ஒளிநிலை மருங்கின்
தானுறும் நிலையுணர் வியல்நெறி ஓங்கி
ஒளிநெறிக் கலைத்திகழ் இயல்நிலைத் திறனாய்
வெளிஒளித் திறல்கூர் நுண்ணிலை முலம்
அறிவியல் நெறிமுறை ஆக்கம் தேர்ந்தே
குறியறித் திறனும் நெறியுறு முறையும்
எண்ணிலை யியலால் இலங்கு மாநெறி
எண்கலை நிலைத்திறன் ஒருங்குறும் ஆற்றல்
9 திண்ணிய நெறிமுறை சீரியல் நோக்கிக்

கலையியல் கண்டே கருத்துறும் தொன்னிலை
நிலையியல் ஓங்குறும் நெறியியல் கூற்றே 752

அகத்துறும் மெய்யுணர் வோங்குறும் ஆற்றல்
மிகுத்தொளி யியற்றிறன் அகவின் கலைத்திறன்
உணர்வுறும் திறன்மிகும் உள்ளொளி யோர்ந்து
உணர்கலை ஒளிஒலி மெய்த்திறன் ஆய்ந்தே
எட்டும் ஐந்தும் நெறிமுறை யியலால்
எட்டியல் நாற்புறத் தியல்நெறி ஐந்துறும்
இயல்நெறி விரைவுறும் காலச் சுழலியல்
முயன்றின் தாயும் முப்பொருள் தேர்ந்து
எட்டுறும் திறத்தியல் எண்ணெண் கலைத்திறன்
முட்டறும் முறைநெறி மெய்க்கலை யியலால்
ஐந்து மைந்தியல் நெறிநிலை ஓர்ந்து
முந்துறும் மூலம் பெருநிலைத் திறத்தால்
வந்ததொல் மரபியல் வழிவகை யாய்ந்தே
எண்ணெண் ணிலையியல் இயல்பினின் றுணுகி
நுண்ணிய லாக்கம் நுவலருந் தேக்கம்
ஒளிஒலி யியல்நிலை ஓர்ந்துறும் திறத்தால்
வெளிக்கலை நிலைநெறி இரண்டிரண் டியல்கூர்
ஆறறி வகைநிலை அருங்கலைக் கூர்தெரி
ஆற்றல் நெறிநிலை மெய்ம்முறை உணர்ந்தே
திருநிலை உணர்கலை அறுபான் நான்கியல்
ஒருநிலை முந்நெறி செந்நெறி நோக்கி
அளவியல் நிலைகூர் ஆக்கமும் கலையில்
உளவியல் நுட்பம் ஒருங்குறும் நெறியே 753

தண்டமிழ்த் தனிநெறி ஓம்கலை ஓம்மொழி
ஒண்டமிழ்த் திருநெறி அறுபான் நான்கியல்
வண்டமிழ்க் கலைநெறி சிற்ப மாக்கலை
எண்தமிழ் இயல்நெறி ஓவிய மெய்நெறி
விண்தமிழ் ஒளிநெறி ஓம்மறை இயற்கலை
எண்ணெண் கலைநிலை இயற்றமிழ்க் கலைச்சீர்
எண்ணெண் நாற்புறத் தியல்சீர் இன்றமிழ்

ஐந்தியல் நாற்புற முலம் மென்றமிழ்
முந்துறும் இயல்நிலை யைந்துஞ் செந்தமிழ்
பாரியல் காலமாத் தோன்றல் கணக்கியல்
பாரியல் விளக்கும் பைந்தமிழ் எழுத்தியல்
தேரியல் கலைநெறி தெள்ளு மாத்தமிழ்
சீரியல் நெறிமுறை விண்கலம் மரக்கலம்
கணக்கியல் வகுக்கும் கலைத்தமிழ் நிலைக்கலை
பிணக்கிலாக் கட்டிடப் பெருங்கலை நிலைத்தமிழ்
மனைநிலம் மாண்தமிழ் நிலமனை நெறித்தமிழ்
கனைப்புறும் தண்டமிழ் தமிழியல் நூற்றமிழ்
தென்தமிழ் விளக்கும் வானியல் கணிதம்
மென்றமிழ் விளக்கும் மூலிகை யியல்நூல்
ஒம்மொழி மூலமாய் அறுபான் நான்கியல்
தேமொழி சீர்மொழி எட்டெட் டியலே 757

மூலத் தியல்நெறி முப்பொருள் ஆய்ந்தே
காலமும் இடமும் கருத்துற் றுணர்ந்தே
நெறிமுதற் றிறத்தியல் நிலையுற் றாய்ந்தே
அறிகலை மூலம் காலமும் உன்னி
ஒன்றிரண் டுறுநெறி ஒன்றுறும் ஒன்றாய்
ஒன்றென் றியல்நிலை ஒளிக்கலை ஆக்கம்
நன்றுறும் ஐந்தியல் ஐந்நெறி யியலாய்
தொன்மைப் பெருநெறி அறுபான் நான்கியல்
மாநெறி தமிழ்க்கலை சிற்றவைப் பெருவளி
தூநெறி இயற்கலைத் தோற்றமும் தேற்றமும்
எண்ணியற் கலைநிலை இயல்பினி லாய்ந்தே
பண்டுறும் பொருள்நிலைத் திறனிலை யோர்ந்தே
விண்டுறும் தெருளியல் அருங்கலைத் திறனெறி
கண்டுணர் நெறியியல் கேட்டுணர் இயற்றிறன்
தண்டமிழ்க் கலைநெறிச் சீரியல் நெறியே 759

சீரியல் நேரியல் தேரியல் ஒர்ந்தே
பாரியல் மூலப் பொருள்நிலை ஆர்ந்தே
ஏரியல் வண்ணம் மெய்க்கலைத் திறத்தால்

சூரியல் கலையியல் குறிப்புற் றியல்நெறி
எண்கலை மூலம் ஐங்கலை நிலைத்திறன்
விண்கலை விண்ணெறி விண்ணிலை விண்ணியல்
எண்ணுறுந் திறத்தியல் நெறிமுறைக் கலையால்
எண்கூர் மூலம் இயலியல் நோக்கி
விண்ணெறி முறையால் வியனிலை ஆய்ந்தே
பாரியல் விண்ணியல் காலந் தேர்ந்து
நேரியல் நிலைத்திறன் நவிலல் மரபே 760

எண்கலை மூலத் தியலறி வுற்றே
விண்கலை மூலம் காண்டல் திறனாய்
எண்ணியல் நிலைநெறி இயல்திறன் ஆய்ந்தே
விண்ணியல் கோள்நெறி மீன்நெறி நோக்கி
தண்டமிழ்க் குறிநிலை தனியியல் கணக்கியல்
விண்தமிழ் நெறிமுறை கோள்நிலை கோளம்
எட்டெட் டியலால் இயல்புற் றோர்ந்து
நெட்டுறும் நெறிகணக் கியல்பியல் நவிலும் 761

நூல்பல கற்பினும் நுண்பொருள் உணரினும்
நூல்கோல் எண்ணிலை எண்ணியல் எண்ணி
காத் தளவைக் கருத்துறக் கண்டே
ஞால மூலம் நன்னித் தெரிந்தே
விண்ணளந் தறியும் விதிமுறை அறியினும்
பண்ணளந் தறியுப் பாமுறை தெரியினும்
ஓவியம் சிற்பம் சித்திரம் ஒண்டமிழ்
மேவுறும் கலைநிலை முற்றுறத் தெரிந்தே
ஆவலும் உணர்வும் அறிகலை மூலம்
மேவப் பொருந்துறும் மெய்யுணர் வோங்கிக்
கலைநிலை ஆற்றல் கண்ணெறி நோக்கினும்
நிலைநெறி நோக்கி நெறிகுறி அறியினும்
அறுபான் நான்கிற் மெய்நிலை மூலம்
உறுபொருள் அறிந்தே சிற்றவை எண்ணியல்
ஐந்து மைந்தியல் மெய்நிலை நுட்பம்
முந்துறத் தேர்ந்தே மூதறி வோங்கக்

கலைநெறி நுட்பம் காணாக் கருத்தால்
நிலைநெறி ஓங்கி நெறிமுறை வழக்கே 765

குன்றா வுணர்வுங் குறைவறு மதியும்
வென்றிகொள் உள்ளமும் நெறியறி திறமும்
குறிக்கோள் நோக்கமும் விரியறி வாற்றலும்
குறிப்புறுங் குறிப்பின் குறிநிலை யியலும்
அறிதலும் ஆய்தலும் நெறிநிலை நோக்கிக்
குறிதருஞ் செந்நெறிக் குறிப்புற் றோர்ந்து
சிற்றவைச் சீர்நிலைச் செறிவுற் றோர்ந்து
உற்றுறும் முதறி யுணர்வின் நோக்குபு
ஐந்தியல் நிலைக்கலை யைந்துறு மாற்றலாய்
ஐந்துமைந் திறத்தெரி மெய்க்கலை யாக்கம்
எண்கலை யெண்ணிலை எண்முறை யெண்ணெறி
எண்ணியற் கலைத்திறன் நுண்ணறி வுற்றே
கணக்கியல் நெறியே கலைநெறித் திறனெனக்
கணக்கியல் காண்டல் நெறிமுறை வழக்கே 774

தொன்மொழி தொன்னிலை தொன்மர பியல்நெறி
நன்மொழி யியற்கலை தூய மாநெறி
ஒருகலை நிலைத்திறன் ஒள்ளிதின் ஓர்ந்தே
வருகலை நிலைக்கலை வெளிக்கலை நெறிதிகழ்
முந்நெறி முவியல் முறைமையிற் றிகழ்ந்தே
செந்நெறி எண்திகழ் சீரொளித் திறனிலை
எண்ணெண் ணியல்தெரித் தியலுறம் உணர்வியல்
நுண்கலை நுணுக்கம் நுவலுறும் திறத்தால்
ஐந்தியல் ஐந்நெறி ஆக்கமுற் றோர்ந்தே
ஐந்துறும் நிலைநெறி மெய்ந்நிலைக் கலையியல்
வந்ததொல் மரபியல் வகுத்துறும் நெறிக்கலை
முந்து மாக்கலை முதனிலை யியற்றிறன்
நுண்ணிதின் ஓர்ந்து நுவலரும் சீர்க்கலை
எண்ணுறும் எண்ணியல் இயல்நெறி யுற்றே
விண்கலை விண்மொழி விண்ணியல் நெறியால்
எண்கலை இலங்கல் இலங்கு மைந்நெறி

மூலப் பொருள்நிலை முன்னி யோர்ந்தே
காலத் தியல்நிலை கருத்துணர் வுற்றே
குறிப்பின் நோக்கி நெறிநிலை யியலால்
குறித்துறும் செய்நெறி குறிப்பின் ஆய்ந்தே
குறிநிலை மூலப் பெருநிலை நோக்கி
நெறிநிலை யியல்தெரி நிலைத்திறன் ஆய்தல்
உறுநெறி ஐந்தியல் எண்ணெண் கலைத்திறன்
அறுபான் நான்கின் உற்றுறும் திறனாய்
எண்ணிலை மூலத் தெழுநிலை யியற்றிறன்
தெண்ணிலைச் சிற்றவை சீர்நெறி தெறிக்கும்
நெறியுணர்ந் தாற்றலால் நிலைபெற நோக்குழி
அறிவுணர் கலைதிகழ் ஆற்றுமா நெறியே 776

நாற்புறத் தியல்நிலை எண்ணெண் கணக்கியல்
தோற்றுறும் சிற்றவை மூல மையியல்
காலத் திறத்தின் கணக்கியல் நுட்பம்
மூலப் பொருள்நிலை முன்னி யோர்ந்தே
ஐந்தும் எட்டும் நிலைதெரி யியலால்
முந்து செந்தமிழ்ச் சிற்றவை யாற்றல்
எண்ணிலை எண்கலை எண்ணெறி எண்ணியல்
எண்முறை ஐந்தென் றியல்திறன் நோக்கி
மாநெறித் திட்பம் மாஇயல் நுட்பம்
தூநெறி ஒட்பம் தூய மாக்கலை
ஒளிநிலைக் கலைநெறி ஒங்குறும் ஆற்றல்
வெளிநிலை நாற்புறத் தியல்நெறி மூலம்
வளியியல் அறிநிலை களிக்கலை வெளியென
ஒளிநிலை மூலம் உள்நிலை ஆய்ந்தே
தெளிவுறுந் திறத்தால் மூன்றுறும் நெறிக்கலை
உற்றறி மதிநிலை ஒர்ந்துணர் செயல்கலை
தெற்றுறும் சீரறி வுற்றுறும் மெய்நிலை
அகமும் புறமும் அறிநிலை இயற்கலை
அகவெளி புறவெளி நிலையியல் ஓர்ந்தே
நிலையும் கலையும் நெறியால் நோக்கி

கலைத்திறன் காண்டல் கணக்கியல் நெறியாய்
ஒன்றும் மெய்க்கலை மெய்யியல் திறத்தால்
நோக்கமும் குறியும் நெறியும் உணர்ந்தே
உண்மை யியல்தெரி உற்றுறும் திறனெறி
வண்மைக் கலைநிலை வண்நிலைச் சிற்றவை
எண்ணெண் கணக்கியல் எண்ணிலை முறையியல்
வண்திறன் அறுபான் நான்கியல் வழக்கே **777**

எண்கலை நுட்பம் எண்ணியல் திட்பம்
எண்முறை ஒட்பம் எண்ணெறி நுட்பம்
ஒருங்குற் றோர்ந்தே எண்ணிலை மூலம்
பெருநிலைக் கலைத்திறன் பெருக்கம் ஆய்ந்தே
ஒருநிலை இருகலை முந்நெறி நாற்புறம்
வருகலை ஐந்திறன் வளர்நெறி தெரிந்தே
கால விரைவியல் கணக்கின் ஓர்ந்தே
கோலத் திறத்தியல் மாநெறி நுட்பம்
உணர்நிலைக் கலையால் ஒருங்குறும் ஆற்றல்
உணர்கலை அகவிண் ணொளிநிலைக் கூர்ந்தே
புறவிண் ணோர்ந்தே பெருந்நிலை யாய்ந்து
திறமுறும் எட்டியல் நிலைக்கலை ஆர்ந்தே
எட்டெட் டியல்தெரி ஐந்தியல் நுணுக்கம்
எட்டியல் நாற்புறத் தியல்நிலை ஐங்குறி
புள்ளி மூலத் தியல்நெறி நோக்கி
தெள்ளுறுங் கலைநிலை ஐயைந் தியலால்
அறுபான் நான்கும் வகைபெற நோக்குழி
உறுமுறை கலைநிலை ஒங்குறும் திண்மை
நுண்மைத் திறனறி வண்மை ஓர்ந்தே
எண்மையும் விண்மையும் இயலுற் றாய்ந்தே
எண்ணுற் றாய்ந்தே இலங்கு மாநெறி
கணக்கியல் நோக்கிக் கலையியல் ஆய்ந்தே
கணக்கின் நுட்பம் கருதுதல் மரபே **778**

உட்கலை நோக்கி உள்ளூற் றுணர்ந்தே
எட்டியல் ஐந்தியல் இனிதுற் றாய்ந்தே

எட்டெட் டியலும் நெறிநிலை குறித்தே
எட்டுறும் கலைநிலை முவியல் கலைத்திறன்
ஒன்றுறுந் திறத்தால் ஈரிரண் டாய்ந்தே
ஒன்றியல் முவியல் ஐந்தியல் நுணுகி
உள்ளமும் உணர்வும் ஒருவழிக் கண்டே
விள்ளு மாறியல் விரைவுற் றுணர்ந்தே
அண்டமும் பிண்டமும் ஆய்ந்துணர் மதியால்
கொண்டுறும் மெய்க்கலை குறிப்பின் திறமாய்
ஒன்றுணர் நிலைகலை ஒன்றிய ஆற்றல்
தென்றமி ழியற்கலைச் சீருற் றுணர்ந்தே
நோக்குபு நோக்கி நுவல்நிலை ஆய்ந்தே
ஆக்குறும் திறனெறி அணிகலை யியலும்
அறுபான் நான்கியல் எண்ணியல் கலைத்திறன்
உறுநெறி யியலுறும் உண்மை யுணர்ந்தே
விண்ணியல் மண்ணியல் வெளியியல் நோக்கி
எண்ணியற் கலையா லாவின் ணொளிநிலை
மூலம் உணர்ந்து முழுப்பொருள் தெரிந்தே
கால மூலமும் கடிதின் உணர்ந்தே
நுட்ப மாக்கலை நுண்ணறி வியலாற்
கட்புல னோக்கிக் கருத்துறும் கலைநிலை
எண்ணெண் ணியல்தெரி நெறிமுறைக் கலையால்
எண்ணெறி நுட்பம் இயம்பலும் பெறுமே 795

அகப்பொரு ளுணர்வும் அகப்பொரு ளாற்றலும்
அகத்திணை அன்பின் ஐந்திணை நோக்கி
உள்ளுறும் அன்பும் முணர்வு முணர்ந்துழி
தெள்ளுறும் அன்பியல் சீரியல் நோக்கி
அறிவும் ஆற்றலும் ஆண்மையும் வீரமும்
நெறியுங் குறியும் நினைவுறும் ஆற்றலும்
செயல்முறைத் திறனும் சீர்நிலைக் கூடும்
மயனெறி ஆற்றலால் மதித்தெளி வுற்றே
எண்ணிலை எண்ணெறி எண்முறை எண்சீர்
எண்ணுறும் மாநெறி எண்ணெண் ணியலால்

ஐந்துறுங் கலைநிலை ஆற்றலும் நெறிமுறை
வந்துறும் எண்ணிலை மூலமும் ஆய்ந்தே
நினைவுறும் நெறிக்கலை நினைவிற் றிகழ்ந்தே
நினைநிலை யியற்றிறன் நெறிமுறை நோக்கிக்
காலமும் இடமும் பொருளும் கணித்தே
மூலமும் திறமும் முயன்றினி தாய்ந்தே
கோலக் குறிப்பின் குறிநிலை நோக்கி
உயிரொளி உணர்வொளி உள்ளுறும் திறனால்
செயிரற நோக்கி உடலொளி யுற்றே
நோக்குறும் நோக்கம் நுண்ணுணர் மதிநிலை
ஆக்குறும் மாக்கலை நெறிநிலை யாய்வால்
உடலொளி உயிரொளி உணர்வொளிக் கலையால்
அடலொளி நோக்கி அறியவும் படுமே 796
எட்டே எண்ணிலை இயல்தரும் ஆக்கம்
நெட்டுறும் நிலைகலை நெறிமுறை நோக்கி
விண்கலம் விண்ணூர் வியநெறி ஓர்ந்தே
விண்ணறி யறிவால் எண்ணறி வுற்றே
கணக்கியல் நெறியால் எண்முகத் தீர்ப்பியல்
கணக்கியல் இயல்நிலை வானமா வூர்தி
விசைநிலைக் கணக்கியல் கதிரொளி யியலாய்
விசைநிலை கடவும் மெய்நிலை யாய்ந்தே
அண்ட மாவெளி யியலுறும் வானம்
அண்ட மாவிண் ணொளிக்கலை நோக்கி
எட்டிரண் டியலுறும் நெறிமுறை ஆர்ந்தே
எட்டெட் டியலுறும் மெய்க்கலை மூலம்
பொறிபுலன் உன்னும் நெறியுளங் கொண்டோன்
குறியறி வுற்றோர் குறிப்புணர் கலையோன்
நெறிமுறை மாறா நிலையிய லுற்றோன்
அறிவன் வலவன் பொறியியல் ஆள்வோன்
விசைநிலைப் பெருவழி மேல்கீழ் யியல்நிலை
கண்டுணர் மெய்யறி வுற்றே நிலையியல்
எண்ணியல் முறையால் விண்ணியல் ஆயும்

ஒண்கலை நுட்பம் எண்கலைத் திட்பம்
விண்கலை நுட்பம் விளக்குமா நெறியே 800

எண்தமிழ் எண்ணியல் எண்கலை நுட்பம்
எண்ணுற் றோர்ந்தே கணக்கியல் மூலம்
விண்கலை விண்தமிழ் நெறிமுறை நாடி
பண்டமிழ் பயில்தரும் வண்டமிழ் ஆயின்
மூல மாத்தமிழ் ஞாலத் தியலும்
மூல மாப்பொருள் ஐம்பெருங் குடியும்
மூல மாக்கலை அறுசுடர் ஒளியும்
மூல மாஇயல் அண்டமும் பிண்டமும்
மூல மாநெறி ஓம்ஒளி யியலால்
மூலங் கண்டே செந்தமிழ் உணர்ந்தே
ஞாலம் ஆளும் நற்றமிழ் மூலம்
காலங் காண்டும் கவினுறும் ஆடி
உயிர்க்குல முதன்மொழி ஒண்டமிழ் வண்டமிழ்
செயிரறுஞ் செந்தமிழ் திந்தமிழ் ஐந்தியல்
நலனுற விளக்கும் மொழியியல் நவிலும்
புலமும் குறியும் பொருந்த உணரின்
மொழிக்கலை நுட்பம் மெய்யுணர் வாரே 808

மூலத் திறத்தால் முப்பொருள் ஆய்ந்தே
காலத் திறத்தால் எண்கணக் கியலும்
கோலக் குறிப்பும் குறிநெறி மதியால்
காலமா வியலும் கலையியல் திறனும்
நெடுங்கணக் கியலும் குறுங்கணக் கியலும்
அடுங்கணக் கியலும் அதுங்கணக் கியலும்
விடுங்கணக் கியலும் வெளிநிலை நோக்கும்
தொடுநிலை யாக்கமும் தூநெறி நோக்கமும்
எட்டிரண் டியலாய் இயலும் மாக்கலை
எட்டெட் டியல்நெறி நுணுக்கம் ஓர்ந்தே
அறுபான் நான்கியல் நாற்புறத் தியல்நெறி
உறுநிலை ஐயைந் தியல்நெறிக் கணக்கே 813

உழைப்பே முலம் உணர்வே காலமே
கழைப்பிலா மெய்ந்நெறி கலைத்திறன் நல்கும்
உடலுழைப் பாய்ந்து உணர்வுறத் தேர்ந்து
அடலுறும் அறிவால் நெறியுழைப் புற்றே
நிலைபெற நோக்கல் கலைதரும் பயனாய்
கலைமொழி யியலாய் தலைமொழித் திறனாய்
நிலைமொழி அறிவியல் நெடுங்கணக் கியலாய்
மலைவற ஒர்ந்தே மதியுற் றாய்தல்
எண்ணுறும் திறத்தால் எண்ணுணர் வோங்கியும்
எண்ணுறும் திறத்தால் விண்ணுணர் வோங்கியும்
எண்ணுறும் திறத்தால் கண்ணுணர் வோங்கியும்
எண்ணுறும் திறத்தால் பண்ணுணர் நாடியும்
நாட்டமும் முலமும் நாடுறும் திறத்தால்
வேட்ட மாக்கலை மெய்ப்பொருள் ஓர்ந்தே
பொருள்நிலை முலம் பொருள்நிலைக் காலம்
மருள்நிலை நீங்கி பொருள்நிலை ஆயல்
திருநெறிப் பெருவழி விண்ணிலை ஆய்ந்தே
ஒருநெறிக் கலைத்திறன் உள்ளுறும் திறத்தால்
ஒளிநிலைக் கலைநிலை நுட்பம தாய்தல்
ஒளிநிலை கண்டோர் உரைக்குமா நெறியே 817

புள்ளிக் கோடே பொருந்தும் மையம்
புள்ளிக் கலையே முல மாயியல்
புள்ளி அறிந்தோர் தெள்ளுபே ரறிஞர்
புள்ளி யியலல் நெறிநிலைக் கலையே
புள்ளியல் ஆக்கம் நெடுவரிக் கோடே
புள்ளி முலத் தியலறி வாற்றல்
தெள்ளுறும் கலைத்திறன் சீர்பெற் றுணர்வரே 818

எண்தெரிக் கலையே விண்ணியல் நுட்பம்
எண்ணுணர் கலையே விண்ணுணர் நெறியாம்
எண்ணறி வாற்றல் நுண்ணறி வியலாய்
பண்ணறித் திறனாய்ப் பைந்தமிழ்க் கலையாய்
நண்ணுறு சிற்பம் ஒவியம் உணர்த்தி

பண்டுறும் கட்டிடக் கலைநிலை யியலாய்
விண்டுறும் கணக்கியல் விரைவியல் ஆய்ந்தே
ஆறும் பத்தும் பத்தா றியலாய்க்
கூறும் கணக்கியல் குறிப்பின் ஓர்ந்தே
மூவொன் பான்நிலை மூவியல் ஆய்ந்தே
நாவியல் நவிலல் நன்முறை தேர்ந்தே
ஆயம் கூட்டும் அமைநிலை ஆய்ந்தே
சீயம் வேழம் தெரிநிலை தேர்ந்தே
எண்கலை இயல்நெறி நுண்கலை மூலம்
விண்கலை யாற்றலாய் மண்கலைத் திட்பம்
பண்கலை யாற்றலும் பாங்குறத் தெரிந்தே
கண்ணொளி காட்டும் விண்ணொளி நோக்கி
எண்ணொளி எழுத்தொளி இயைபுறக் கண்டே 825

எண்கலை நுணுக்கம் இயற்கலை விளக்கம்
விண்கலை யியற்றிறன் வெளிக்கலை மூலம்
எண்ணியல் எண்ணொன் றிண்ணிய நெறியியல்
விண்ணியல் கலைநிலை விளக்கமும் தேர்ந்தே
ஒளிக்கலை மூலம் ஒலியியற் கலையாய்
வெளிஒளித் திறனியல் விண்கலை நுட்பம்
எண்முறை யியலாய் எண்ணுறுந் திறனிலை
விண்முறை நிலைநெறி வெளிஒளி வளிநிலை
நேர்முறை நிலைமுறை நெடிதுற நோக்கி
காரியல் கலையியல் கணக்கின் ஓர்ந்தே
நெடிது நோக்கலும் கடிதின் உணர்தலும்
படிநிலை ஆக்கம் பணிநிலை யாய்தலும்
ஓர்தல் உணர்தல் ஒருவழித் திறத்தால்
நேர்கலை நிலைத்திறன் நிலையியல் எண்ணி
அறுபான் நான்கின் மெய்க்கலை தேர்ந்து
உறுநிலை நாற்புறத் தைந்தியல் தேர்ந்து
மூலப் புள்ளி மையம் ஆய்ந்து
கால விரைவியல் கணக்கியல் தேர்ந்து
எண்ணொண் கலைநிலை இயல்புற ஆய்ந்து

எண்ணிலை மூலம் நெறிமுறை தேர்ந்து
மூலமும் காலமும் முறைமையின் ஆய்ந்தே
கோலமும் சீலமும் குறிப்பின் நோக்கி
காலம் படைத்தல் நற்றிற மாமென
மூலத் துணர்வால் மயனெறி மொழியுமே 838

எண்கூர் ஆக்கம் இயல்நெறி நோக்கம்
விண்கூர் நிலைகலை வெளிநெறித் தேக்கம்
எண்கலை யியலால் இயம்பு மாக்கலை
தண்டமிழ் ஐந்தியல் நெடுங்கணக் கியலாய்
கணக்கியல் கலையாய்க் கருது மாநெறி
கணக்கியல் தேர்ந்தே கலைநிலை ஓர்ந்து
பண்ணியல் ஒலிநிலை அசைநிலை யார்ந்தே
பண்ணெறி ஏழிசை ஐந்திசைக் குறித்தே
நுண்ணியல் மதியால் நுவலரும் திறத்தால்
எண்ணு மாக்கலை இசைநிலை யாய்ந்து
வாழிசை வளரிசை வயங்கிசை இயங்கிசை
தாழிசை தளரிசை சாரிசை நேரிசை
எடுத்தல் படுத்தல் நலித்தலும் கூர்ந்தே
தொடுநிலைச் சூழிசை தொல்லிசை நல்லிசை
குழலிசை யாழிசை குறிப்புறத் தேர்ந்தே
பழகிசை பண்பிசை பாங்குற் றாய்ந்தே
வைகறை இசையிசை வகையுறக் கிளந்தே
வைகலும் இசையிசை மெய்யுணர் வுற்றறே
இருள்பொழு திசையிசை ஏழிசை நுட்பம்
கருநிலை கைக்கிளை விளரி துத்தம்
பொருள்நிலை ஓர்ந்தே மூலமும் நோக்கி
மூலத் தெழும்ஒலி ஓங்குரல் ஒலியாய்
காலம் கனியிசை காலம் கணியிசை
இசைநிலை நுட்பம் நிலையிய லார்ந்தே
இசைக்கலை மூலம் அளவை நுட்பம்
தாளமும் முகமும் ஒருநிலை யளவை
தாள்நிலை ஒன்றும் நனிநிலைக் காலம்

காலத் தியலும் அளவைக் கூறும்
கால மூலமும் கணிப்பியல் கண்டே
கருத்துறும் இயலால் நெறிமுறை ஓர்ந்தே
திருநெறி மாநெறி செப்பல் வழக்கே 858

காலரை முக்கால் ஒன்றென் றுணர்நிலை
மூலங் குறிக்கும் ஒரென் னிலையியல்
எண்முறை யியற்றிறன் இனிதுறத் தேர்ந்தே
விண்முறை ஒளிநெறி தமிழ்நெறி மயன்நெறி
உணர்கலை யியலால் ஓங்கும் மெய்க்கலை
உணர்வொளி அறிவொளி கலையொளி நோக்கிக்
கால நுட்பமும் கருத்துறும் ஆற்றலும்
காலமா வலிமை கணியியல் ஆய்ந்தே
உயிரியல் நுட்பம் உணர்கலை ஆற்றல்
செயிரறும் உயிரொளி உடலொளி நோக்கித்
தமிழெழ்ளிச் சிற்பம் இசைக்கலைச் சிற்பம்
இமிழொலி உயிரொலி ஒலியியல் தேர்ந்தே
குமிழொலி அமிழொலி மூலந் தேர்ந்தே
தமிழொலி மெல்லியல் ஓசை நுணுகி
தமிழ்மொழித் தன்னிலை தனிநெறி நோக்கி
மூல முதன்மொழி மெய்ம்மைத் தமிழ்மொழி
காலம் வகுக்கும் கனித்தமிழ் நெறியே
வேலும் வாளும் வில்லும் நோக்கிக்
கோலும் வாளும் குறித்துணர் நெறியால்
நாளும் கோளும் தவையில வாகி
நூலுரை யாற்றல் சொற்பொருள் கண்டே
எண்ணள வியல்நெறி எழுத்தள வுறுநெறி
உண்ணெறி நோக்கி உண்முகம் கண்டே
அகவெளி யாற்றலால் அகத்தொளி நோக்கிப்
புகும்ஒளி ஒளியியல் மேவுறுந் திறனாய்
ஆழி வாழுயிர் அறிகலை யறிந்தே
ஊழிக் காலத் தோகுநிலை கணித்தே
முக்கலை முந்நெறி முப்பொருள் மூவியல்

அக்கலை ஒளியியல் ஒலியியல் ஆய்ந்தே
அறிவியல் அருளியல் குறியுற நோக்கி
அறிகலை ஐங்கலை செந்நெறி மூலம்
எண்ணெண் கலைத்திறன் நுண்ணிய மதியால்
விண்ணெறித் திறத்தால் விளங்க வோர்ந்தே
எண்ணெறி கலைத்திறன் இயல்புறுத் திறனாய்
நுண்ணறி வாற்றல் நுவலரும் கலைச்சீர்
நோக்குபு நோக்கி நாடுவ நாடி
ஆக்குறும் மெய்ப்பயன் ஐம்பொருள் நிலையால்
உற்றுணர் கலையால் உறுபயன் கண்டே
தெற்றுணர் அறிவியல் சீர்த்தமா மதியால்
கலைநில நோக்கின் கருத்துறும் செந்நெறி
நிலைநெறிக் கலைமுறை நெறிப்பட நிறிஇ
ஓங்குறும் ஓமிசை ஓமியம் ஓவியம்
பாங்குறும் சித்திரம் சிற்ப மாக்கலை
தேங்குறும் மெய்யொளி ஒளிஒலி யிசைநிலை
ஆங்குறும் அண்டம் பிண்டம் தேர்ந்தே
ஊங்குறும் ஒளிஒலி ஒருநிலை நோக்கித்
தூங்குறும் மேல்கீழ் இயல்நிலை நாடி
குறிப்பின் குறித்தே குறிநிலை ஆற்றலால்
நெறிகலை இயற்றிறன் நெறிப்பட நினைந்தே
காலரை முக்கால் ஒன்றென் றுணர்நிலை
கால மாநிலை கலையுறும் மாநெறி
உறுப்பியல் அளவை காரை யோர்ந்தே
அறுவகை நிலையும் ஐவகைத் திறனும்
பொருந்த நோக்கிப் பெருங்கலை அறிதல்
ஒருமதி உணர்வோர் உரைத்தல்மா நெறியே 869

உயிர்க்கலை உயிர்நெறி உயிர்க்குறி உயிர்நிலை
உயிரியல் கருவுயிர் இயலியல் நெறியும்
கருநிலை மூலக் கலையியல் ஆற்றல்
உருநிலை கோலத் திறத்தொளி தேற்றம்
உயிரியல் ஆய்தல் ஒருபெருங் கலையாய்

உயிரியல் உடலியல் உறுப்பியல் நோக்கி
எண்வகை யளவாய் இயலுறும் நெறிநிலை
விண்வகை ஒளிக்கலை மூலமா நெறியால்
கண்ணொளி நுட்பம் கலையுணர் திறனாய்
எண்ணொளி யியலொளி நெறிமுறை யாய்ந்தே
தொன்மையும் சிறப்பும் தொகைநிலை கருதி
பன்மையும் தனிமையும் பாங்குற் றாய்ந்தே
தொல்லுயிர் நல்லுயிர் தோற்றமும் தேர்ந்து
பல்லுயிர் வளர்நிலை வாழ்நிலை ஒளிநிலை
வகையுறத் தேர்ந்தே வளர்கலை நுட்பம்
மிகையற நோக்கி மிக்கொளும் திட்பம்
உயிர்நெறி ஆண்பெண் ஒன்றியல் ஆற்றல்
உயிர்த்திறன் ஆண்பெண் ஒன்றுறும் நெறியாய்
நோக்கமும் இயலும் நொடிநொடி ஆய்ந்து
நோக்குறும் மேல்நோக் கியனிலை நோக்கி
உண்மை உணர்ந்து வண்மை யியம்பி
எண்ணிமை காண்டல் இயல்நெறி யாயல்
விண்மை விண்ணெறி விண்ணொளி யியலாய்
எண்கலை எண்முறைச் சிற்றவை நெறியே 871

எட்டியல்

எட்டெட் டுறுநிலை நாற்புறத் தியலாய்
எட்டுறுங் கலையாய் மூலப் பொருளாய்
புள்ளி நுட்பம் பொருந்த வறிவார்
துள்ளும் உணர்வால் நுண்ணிலை அறிவரே 135

உள்ளூறும் ஞாலத் தியல்நிலை அறிந்தார்
வில்லூறும் எட்டெட் டினிதறி வாரே 136

எட்டெட் டியலை அறிமுறை அறிந்தே
எட்டின் ஆடல் இயல்கலை யோர்ந்தே
விட்டுறும் ஒலிஓம் ஒளித்தமிழ் விண்தமிழ்
நெட்டெழுத் தியலே நெறியுணர்த் தும்மே 147

நெறிநிலை விளக்கும் குறிமுதற் கலையாய்
அறிகலை யியலறி யாற்றலுற் றோங்கி
விரிதரும் எண்ணெண் கலைத்திற மூலம்
கரியா யிலங்கிக் கலைநிலைத் தேற்றம்
எண்ணியல் மொழியே ஒளியொலித் திறனொலி
நண்ணுறும் நாட்டம் மெய்க்கலைத் திறனாய்
உள்ளுணர் வுற்றே உறும்பொரு ளோர்ந்தே
தெள்ளிய நுகர்வால் சீருறத் தெரித்தே
இயல்நெறி மாறா எண்முறை விளங்க
மயலறத் தெளிந்து விண்ணொளி நோக்கி
எட்கலைத் திறனால் மொழிநிலை யாய்ந்து
எட்டியல் மூலம் இயம்புவ நெறியே 404

எட்டே நிலைக்கலை எட்டே இயலாய்
எட்டுறும் எட்டில் நிலைப்பயன் ஓர்ந்தே
முட்டின் றுணர்ந்து முழுத்திற னாய்ந்தே
சுட்டும் பொருண்மைச் சுட்டாத் தெருண்மை
முப்பொருள் நோக்கி முக்கலை தேக்கி
செப்புறும் சீரறி வுற்றுத் திகழ்ந்தே

நேரறி வுற்று நிலையறித் திறத்தால்
கூரறி வோங்குங் குறிப்பி னுணர்ந்தே
என்னெண் கலைநிலை வின்னளந் தறிதல்
தின்னுறும் நெறியெனச் சீர்நெறி நோக்கி
மூலத் தெட்டின் விளிம்புறு மாற்றல்
காலத் தெட்டின் கலைநிலைத் தேற்றம்
நிலைக்குறி யுண்மை நிலைநெறித் தேற்றம்
நிலையறி வாலுணர் நெறியறி யுணர்வோர்
நிலையெழு மாடம் நெறியினின் நோக்கி
நிலைக்கலை யுணர்ந்தே நெறிவழுப் பாரே 502

என்தமிழ் என்னிலை என்னெண் இயலால்
பண்தமிழ் ஒலியியல் பேரிசை நுட்பம்
நேரிசை சிரிசை நெறியிசை ஆய்ந்தே
தேரிசை தேர்க்கலை தேர்மொழி தேர்ந்தே
கணக்கியல் நெறிமுறை காலக் கூற்றால்
இணக்குறும் முகத்தள வெண்ணிலை உறுப்பியல்
சீர்நெறி தேர்ந்தே செம்முறை ஆய்ந்தே
தேர்நெறி வின்னெறி நுன்னறி வுற்றே
வின்னும் எட்டே என்னும் எட்டே
தின்னுடல் எட்டே சீரியல் எட்டென
வகுத்துறும் உண்மை உளங்கொள் நெறியால்
வகுத்துணர் நெறிமுறை எண்ணியல் கூறும் 567

எட்டெட் டியல்தெரி கால நுணுக்கம்
எட்டியல் நெறியால் இயைபின் நோக்கி
நாற்புறத் தியனிலை ஐந்நிலை யோர்ந்து
மேற்றுறுந் தெளிநிலை ஐயைந் தியல்பே 592

தாளம் காட்டும் தனிஅள வோர்ந்து
நீள நினைந்து எண்தா ளத்தால்
அளவியல் முறைதெரி நிலையியல் ஆய்ந்தே
உளவியல் முறையா லுற்றறித் திறனால்
எட்டி னியல்நிலை நெறிமுறை ஓர்தல்
எட்டும் எட்டின் விரிவும் இயம்புமே 600

எண்கலை எண்திறன் எண்ணிலை எண்ணியல்
எண்முறை வகுத்தியல் நெறிமுறை யோர்ந்தே
எட்டிய லைந்துறும் ஐந்தியல் நெறிக்கலை
எட்டுறும் நாற்புறத் தியல்நிலை வெளிநிலை
கலைநிலை கருத்துறக் கருதுறும் எண்ணிலை
கலைத்திறன் உண்மை எண்மையுங் காண்டுழி
எட்டும் ஏழும் ஐந்துமுன் றொன்றும்
எட்டுறும் நிலைக்கலை நெறிமுறை ஒர்ந்தே
எட்டினெட் டெட்டென திட்ப மாக்கலை
சுட்டுறும் எண்ணியல் ஐந்து நுட்பமும்
எண்ணே எண்நிலை எண்நெறி நுணுக்கம்
எண்நிலை ஐந்தென் றியைபுற் றோர்ந்தே
எண்ணெண் ணியலால் மொழிநிலைக் கலைநெறி
எண்ணெண் ணுணர்வால் எண்ணுறும் கணக்கியல்
ஞாலக் கணக்கியல் எட்டே யாகி
மூலங் குறிக்கும் மெய்யியல் குறிக்கும்
எட்டின் ஆற்றல் நிறைவுறும் நெறியென்
றெட்டா தியல்நெறி எட்டெட் டியலே 618

காலப் பொழுதியல் கணிப்புறக் கணித்தே
மூலப் பொருள்நிலை முன்னுவ தோர்ந்தே
கோலக் குறிப்பின் நிலைநெறி நாடிச்
சீலச் செந்நெறிச் செய்முறைத் திறனால்
ஞாலந் தெரிந்து நண்ணுவ தோர்ந்து
கோலக் கூர்நெறிக் குறிப்பி னுணர்ந்து
காலக் கூர்எண் கடிநிலை யாய்ந்து
காலங் காட்டும் பொழுதியல் தேர்ந்து
அணுவுள் அணுநிலை யருகுற் றாய்ந்து
கணுக்குள் இயல்தெரிக் கால நுணுக்கமும்
தேர்த்துகட் பொழுதும் சீர்நிலை யாக்கமும்
நேர்நிலைப் பொழுதியல் இம்மி நுணுக்கமும்
முதற்பொரு ளாய்ந்து தலைப்பொருள் நோக்கி
முதற்பொரு ளியல்நிலை முறைமையிற் றேர்ந்தே

எட்டியற் கூர்நிலைக் கால மாறிலை
எட்டியல் நேர்நிலைக் காலக் கூர்நெறி
எட்டெட் டியலறி நிலைமையு மோர்ந்தே
எட்டுறும் பொழுதின் ஏற்ற மாயியல்
கைவிரற் பொழுதெனக் கண்டுறு மாற்றலால்
ஐவிரல் நிலையறி யாற்றலு மோர்ந்தே
என்நிலைக் காலம் அளவறி மெய்யியல்
தெள்ளறி வுற்றுச் சீர்சால் நோக்கியல்
விள்ளறி நோக்கம் விளக்கந் தேர்ந்தே
ஒள்ளுறும் ஒளிநிலை அளவைக் கணக்கியல்
தெள்ளு மாத்தமிழ் எண்ணெண் கலைத்திறன்
நெறிமுறைக் கணக்கியல் நிலைபெற வோர்ந்தே
குறிமுறை ஐந்நிலை எட்டெட் டியல்திறன்
எண்ணள வியல்நிலை மூல மாமெனக்
கொண்டுறுங் கணிப்பும் குறியுறும் நெறியே 620

எட்டெட் டியலாய் நெறிமுறை யோர்ந்தே
எட்டுறுங் கலைநிலை எண்ணியல் வழக்காய்
அணுவுள் ளணுவா யெட்டுறும் நிலைநெறி
அணுவுள் ளணுமுதல் கைவிர லளவை
ஈறா யியம்பும் ஐயள வியலே
நேர்முறை யாக்கம் இம்மியும் என்னும்
நிலைபெறுந் திறனே கைவிரல் நோக்கம்
எட்டின் இயலா யையள வியன்றே
நுட்பந் தெரிந்தே நுவலுவ கணக்கே 647

எட்டின் நிலைகலை இயல்புறும் நிலையொளி
எட்டின் முறைதெரி விண்ணிய லாக்கம்
விண்ணெறி விண்ணொளி விண்கலை தெரிந்தே
எண்ணெறி எண்ணொளி எண்கலை யியலால்
மூலப் பொருள்நிலை முயலுறத் தெரிந்தே
கால மியல்நிலை கடிதி னோக்கி
நெடிதுற நினைந்தே நிலைபெறு முணர்வால்
படியுறும் விண்மண் எண்கலை யுணர்த்துமே 666

எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அள்வை மாநெறி 675

எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே 676

எட்டின் இயல்தெரி எண்ணெறி அளவே
எட்டின் நெறிக்கூர் விண்ணொளி அளவே
எட்டின் இயலும் பார்நெறி அளவே
எட்டின் நெறிமுறை அறுபான் நான்காய்
எட்டின் ஆக்கம் எழுத்தின் கலைநிலை
எட்டின் பிறழ்வே ஓம்நிலைக் கலைநெறி
எட்டுறும் எண்ணே எண்ணிலை இயக்கம்
எட்டியல் திண்மை எட்டுறும் நுண்மை
எட்டுறும் வண்மை பன்மொழி யாக்கம்
எட்டுறுங் கலைநெறி ஏழிசைக் கலையாய்
எட்டுறும் உறுப்பியல் முகத்தளவியலாய்
எட்டுறுங் கையள வியல்நெறித் தன்மை
அணுதேர்த் துகளும் இம்மி எள்ளாய்
அணுகுதல் கைவிரல் எட்டெட் டெட்டாய்
கண்டுறும் நுட்பம் கணிநிலை நுட்பம்
விண்டுறும் நுட்பம் காலமா நுட்பம்
உணர்நிலை அறுபான் நான்கியல் விரிவால்
புணர்நிலை முச்சுங் காற்றும் எண்ணொன்
நுட்பம தறிந்தே ஒட்பமுற் றாய்ந்தே
திட்பத் தியலுணர் சீர்நெறி யாண்டும்
எட்டின் இயலறி எண்கூர் மாந்தர்

நுட்ப மறிந்தே நுண்ணுணர் வோரே 695

எண்கலை எட்டியல் எண்முறை எண்நிலை
எண்திறன் எண்ணெறி இயல்புற் றாய்ந்தே
எண்ணொன் ணியல்தெரி நெறிமுறை ஆக்கம்
எண்ணொளி விண்ணொளி கண்ணொளித் திறனால்
எண்ணுறுந் திறனிலை யியற்கலை ஓர்நெறி
தெண்ணிலை கலைநிலை சீரறி வுற்றே
மையமும் வையமும் உள்ளூற் றோர்ந்தே
ஐயமி லாக்கம் அறிகலை நிலையென
எட்டெட் டியல்தெரி நிலைகலை யாக்கம்
எட்டுமெட் டியலுறும் கணக்கிய லுண்மை
நெறியுற் றோர்ந்தே நிலைபெற் றாய்ந்தே
அறிநிலை ஆக்க மெண்ணியல் எழுத்தியல்
ஐந்தெழுத் தாலுறும் நெறிமுறை யியலால்
முந்துறுங் கலைநெறி முறைநெறி நோக்கே
அகவின் நோக்குறும் ஆற்ற லறிந்தே
மிகுமொளி யியற்திறன் மூலந் தெரிந்தே
ஒன்றிரண் டியல்நிலை உற்றுறும் ஆற்றல்
தென்றிசை தென்னிலை தென்மொழி நோக்கி
நன்றுறும் நெறியால் நவிலுறுங் கலைநிலை
ஒளிநிலைத் திறத்தியல் உற்று நோக்குழி
தெளிவுறும் ஐந்திய லெண்நிலை நெறியால்
எண்ணிலை மூலங் கலைதெரி யியல்நிலை
எண்ணியல் மூலப் பெரும்பொருள் திறனாய்
நன்றுறும் மெய்க்கலை அறுபான் நான்கியல்
விண்ணொளி ஒளிநிலை மெய்யியல் திறனே 726

எட்டு மைந்தும் இயல்நிலை யாகி
எண்கலை நிலைத்திறன் ஐந்தியல் நெறியாய்
எண்முறை யாக்கம் ஐந்தெழுத் தியலாய்
எண்ணுணர் நிலைதெரி ஐம்புலன் நெறிநிலை
எண்ணில் எட்டில் ஐந்தெண் மூலம்
எண்ணுறுந் திறத்துறும் ஐம்பொருள் நெறியாய்

எண்ணியல் ஆக்கத் தைந்தியல் கூறும்
எண்முறை வினையில் செய்வினை யாக்கம்
எண்ணிலை உருவுறும் ஐந்துறும் செயலாய்
எண்ணிலை உடற்திறம் ஐம்பொறி ஐம்புலன்
எண்பே ராயம் ஐம்பெருங் குழுநிலை
எண்கூர் ஆக்கம் ஐந்தியல் நெறியாய்
எண்ணெண் கலைத்திறன் ஐயைந் தியலாய்
எட்டும் ஐந்தும் இயல்பின் னோங்கி
எட்டுறு மைந்துறும் நெறிகலை யாகி
எட்டு மைந்தும் வெளி ஒளியாகி
எட்டு மைந்தும் வெளி ஒளியாகி
எட்டு மைந்தும் சிற்பமா நெறியாய்
எட்டு மைந்தும் ஒளித்தமிழ் கூறும்
வரைவியல் முலம் வரிக்கோட் டியல்நெறி
வரைவும் திட்டலும் எழுதலும் குறித்தலும்
வரைநிலை மெய்க்கலை உருநிலை ஆக்கமும்
வரைவியல் நிலைநெறி வகையுறத் தெரிந்தே
கோடும் குறுக்கும் புள்ளி நிலையலும்
கோட்டுரு நிட்டுரு திட்டுரு இயலும்
கோட்டியல் நெறிக்கலை வளைக்கோட் டியலும்
கோட்டுரு நிலையறி நேர்க்கோட் டாக்கம்
நேர்க்கோட் டியல்நெறி நிலைமேல் வரைவியல்
கூர்க்கோட் டியற்கீழ்க் குறுநிலை வளைவியல்
கோட்டின் மேல்வளை இடைவளை கீழ்வளை
கோட்டுறும் நேரியல் சிரியல் ஓர்ந்தே
கோட்டு மாக்கலை வரிவடி வியல்நெறி
நீட்டுறும் நேர்க்கலை நெடிதுறும் நிலைநெறி
ஏட்டுறும் எழுத்தியல் வண்மை நிலைக்கலை
பாட்டுறும் ஒலித்திறன் ஓசை யளவியல்
காட்டுறுங் கோட்டுரு எண்ணுரு தாளம்
திட்டுறுங் கலைநிலை நெறிநிலை ஓர்ந்து
கோடும் குறுக்கும் நீளம் அகலம்
நாடும் புள்ளி கோட்டியல் ஆக்கம்

வளைவின் நிலைதெரி வளமுற வழங்கல்
வரையியல் நிலைதெரி கோட்டியல் வழக்கே
புள்ளிக் கலைநிலை பொருந்த வுணர்ந்தே
விண்ணும் மெய்க்கலை மூலத் தியல்நிலை
மூலம் நாற்புறத் தியல்நெறி கலைநிலை
மூலப் புள்ளி முன்னிலை யாக்கம்
மூலப் புள்ளி காலங் கூட்டும்
மூலப் புள்ளி விசைநிலை யாக்கம்
மூலத் தியலால் நாற்புற மோர்ந்தே
மூலத் தைந்தியல் நெறிவரும் ஆற்றல்
மூலங் கண்டுழி ஞால மரபியல்
மூலத் தோற்றம் சீலங் கூட்டும்
மூலத் தோற்றம் கால மெய்ந்நிலை
மூலத் தியலால் கோலங் குறித்தே
ஐவினை ஐந்தியல் அகத்துணர் நெறியால்
மெய்வினை செய்வினை மேவத் தெரிந்தே
அகத்துணர் உறுநிலை புறநிலைக் கலையால்
மிகுத்துறும் கலைத்திறன் மெய்நெறித் தேற்றம்
ஒன்றென் றுணர்ந்து ஒருநெறி மாநெறி
நன்றாம் அறுபான் நான்கியல் ஆக்கம்
பொன்றாப் பெருநெறி பேரறி திறத்தால்
என்றும் யாண்டும் இலங்க நோக்கும்
மன்றுறுந் தூநெறி மாநெறி வழக்கே

காலமுங் களமுங் கருத்தி னோர்ந்து
மூலங் காணும் முயற்சி உழைப்பால்
உள்ளகம் நோக்கி அகவின் னொளிநிலை
தெள்ளுறும் உணர்வால் சிரறி வோங்கி
எள்ளள வியல்முதல் அளவிய லோர்ந்து
விள்ளுறும் நெல்லள விரலள வோர்ந்து
எட்டெட் டியலள வியலறி வாற்றல்
எட்டுறும் நிலைதெரி கால மாஇயல்
நுணுக்கம் தேர்ந்து நுவலறி வுற்றே

கணுக்கம் கண்டுழி கலைநிலை மூலம்
உற்றுறும் எண்ணியல் காலத் தளவை
தெற்றுறும் முந்நெறி ஐந்நெறிச் சீரியல்
ஐயைந் தியல்கலை மூலமா நுணுக்கம்
வந்துறும் ஆக்கம் மெய்யியற் பொருளாய்
சீரறி வுற்றே திகழ்நிலை யோங்கிப்
பேரறி வுறுநிலைப் பெருநிலை யாக்கம்
நூலறி நுட்பம் திட்ப மாக்கலை
உள்ளுணர் வியலறி ஒருங்குறும் பெருங்கலை
தெள்ளுறும் நிலைகலை சீர்சால் எண்ணியல்
மூலம் காண்டல் பெருநெறி வழக்கே 742

எட்டுறும் கலைதெரி மூலப் பொருளியல்
எட்டெட் டியல்தெரு உண்மை யறிந்தே
விண்கலை யொளிரும் எண்கலை மெய்நிலை
தெண்ணிலை சீர்நெறிச் சீரறி வோங்கி
பண்டுறும் நெறித்திறன் பகர்நிலை நோக்கி
ஐந்தியல் ஐந்நெறி அருங்கலைத் திறனாய்
முந்துறும் மரபியல் அறுபான் நான்கியல்
சீர்நிலை எண்ணி சீரறி வுற்று
நேர்நிலை மூலம் நிகர்த்தல் நெறியே 756

மூலமும் பொருளும் நெடிதின் நினைந்தே
அறிவுற் றாயல் அண்டமும் பிண்டமும்
நெறியுறும் திறத்தால் நிலைபெறும் கணக்கியல்
அறிவுற் றாய்ந்தே ஐந்தியல் நோக்கி
செந்தமிழ் இசைநிலை நடத்துறும் திறத்தால்
பைந்தமிழ்க் கலைநிலைப் பரப்பியல் ஓர்ந்தே
குமரி மாநிலம் நெடுங்கலை ஆக்கம்
அமர்நிலைப் பேரியல் வெற்புறும் திறனாய்
பல்துளி யாற்றுப் பெருமலை திறனிலைப்
புக்குறும் நிலைத்திறன் ஏழேழ் நிலமும்
ஏழேழு நாடென இயம்புறும் காலை
நால்வகை நிலமும் நன்னெறி விளக்கி

நால்வகைத் திறனாய் பால்வகை விளக்கி
ஆக்கமும் நிறையும் வாழ்வியற் கலையும்
நோக்கமும் குறியும் பெரும்பொருள் ஈட்டலும்
அறநிலை ஓம்பலும் மறநிலை காத்தலும்
திறநிலை வளர்த்தலும் சிற்பம் ஓவியம்
கட்டிடம் மனைநிலம் நிலமனை யாக்கமும்
எட்டுறும் திறத்தால் எண்ணெண் கலைத்திறன்
எட்டே எண்ணியல் எண்கலை மூலமாய்
எட்டுறும் எட்டெட் டியல்நெறி ஆற்றலும்
கருத்துறும் நோக்கால் கலைநிலை ஆய்ந்தே
பெறுநிலை நுட்பம் பெட்புற் றோர்ந்தே
மாநெறி இயலே மாக்கணக் கியலென
தூநெறி யாற்றல் திருநெறி உணர்ந்தே
பாநெறிப் பண்பியல் பகர்கலைத் திறனும்
மூநெறிக் கணக்கியல் கட்டிடக் கலையும்
ஒன்றெென் றுன்னி நன்றுற வாய்தல்
தென்தமிழ்ச் சிற்பச் சிரியோர் கடனே 812

எட்டெட் டியலாய் விளங்கு மாநெறி
ஓசை ஒலிமுதல் ஒளிநிலைக் கலையாய்
மாசறத் தெரிக்கும் மாக்கலை இயல்நெறி
எழுத்தியல் எண்ணிலை இயற்கலை ஒலியியல்
வழுத்து மைந்தியல் வளர்கலைச் செந்தமிழ்
பழுத்தமு தறிவால் பாங்குற் றுணர்ந்தே
விழுப்புறும் நுட்பம் பகுப்பொருள் திட்பம்
பகுப்பொருள் மூலம் கணக்குற் றாய்ந்தே
அரும்பொருள் செம்பொருள் அறிநிலை உன்னி
உன்னுறும் திறத்தால் ஒங்கரும் கலைத்தேர்
பன்னரும் திறத்தால் பகர்நிலை விளக்கும் 833

உந்துபே ரறிவும் உன்னுசி ரறிவும்
முந்துகூ ரறிவும் மெய்க்கலை யறிவும்
செந்தமிழ் தெளிந்துணர் சீர்நிலை யறிவும்
தந்துறும் ஒளிநெறி தனிமுறை யறிவும்

ஆறறி வுற்றே ஐந்நெறி இயல்மதி
கூறுகூ றாந்திறன் குறித்தறி மதியால்
நிலையுழைப் போங்கி நெறியுணர் திறனாய்
கலைத்திற மதியால் கருதும் மாநெறி
அகவின் ணோக்கி அறுநிலத் தையியல்
மிகுமொளி புகுமொளி ஒளித்திறன் நுட்பம்
கணக்கியல் கண்டே கலைநிலை நோக்கிக்
கணக்கியல் மாறா நெறிமுறை தேர்ந்தே
எட்டெட் டியலால் அகவொன் ணொளிநிலை
எட்டுறும் இயலால் சீர்நெறி முலம்
முலப் புள்ளி மையம் நோக்கி
முலத் தியல்கலை மொய்ம்புற் றாய்ந்தே
முலம் விளக்கும் மெய்ந்நெறி யியற்கலை
முலம் காட்டும் மெய்ப்பொருள் ஆக்கம்
கோலங் குறிக்கும் குறிப்பின் ஆய்ந்தே
கால விரைவியல் கடிதின் நோக்கி
ஆறுபே றறிவால் அமைவுற் றாய்ந்தே
கூறுமா நெறிமுறை சீருணர் வுற்றே
ஒன்றே இரண்டே முன்றுநாள் கைந்தே
நன்றுறும் ஆறே ழெட்டுறும் திறனாய்
எண்ணே எட்டே எண்முறை எண்கலை
விண்ணும் எட்டே மண்ணும் எட்டே
உயிர்க்கலை எட்டே உடலொளி எட்டே
செயிரறும் உயிரெலாம் பொருளெலாம் எட்டே
எப்பொருள் எந்நிலை எக்கலை நோக்குறும்
செப்பரும் எண்ணியல் எண்முறை நெறியாய்
ஒப்பிலாக் கலைநெறி சிற்றவை நிலைநெறி
முப்பொருள் முக்கலை முந்நெறி யோங்கி
ஐந்நெறி அறுவகை யியல்நெறி நோக்கி
மெய்ந்நெறி பொருள்நெறி அருள்நெறி யியலாய்
எண்வகை யாய்ந்தோர் விண்வகை யாய்வர்
பண்வகை யாய்ந்தோர் பாவகை காண்பார்

கண்வகை கண்டோர் கலைவகை அறிவர்
மண்வகை தெரிந்தோர் புனல்வகை தெரியல்
உள்வகை யறிந்தோர் வெளிவகை உணர்வர்
உளிவகை உணர்ந்தோர் ஒளிவகை காண்பரால்
உண்மை யுணர்ந்தே ஒருநிலை தேர்ந்தே
நுண்மையும் எண்மையும் நுவலு மாக்கலை
வண்மையும் மென்மையும் வளம்பெற நோக்கி
தன்மைத் தனிநிலை சார்நிலை யியலால்
சிற்பம் ஒவியம் கட்டிடம் ஆயம்
பொற்புறும் நெடுங்கணக் கியல்நெறி முலம்
கலைநெறித் திறமும் கணக்கியல் நெறியும்
நிலைநெறி அறுபான் நான்கியல் வழக்கே 872

எட்டின் மாற்றம்

எட்டெட் டியலால் நெறியறி ஒன்பான்
விட்டுறும் ஒன்றுறும் விரைவியல் நெறியே
நெட்டுறும் நாற்புறச் சுழலே காலம்
எட்டியல் வளைவே ஒன்பான் பிறழ்வே 138

எட்டின் அசைவே ஆடல் இயங்கலே
விட்டுறும் பிறழ்தல் மாஇயல் ஒங்கலாய்
நெட்டுறும் நிலைக்கலை நெறிமுறை ஆடலான்
எட்டுறும் இயலென இயலுரை இயலே 139

ஒமுறும் ஒளியும் ஒமுறும் ஒலியும்
காமுறும் கருத்தில் உள்ளூற வறிந்தே
எட்டின் அடைவே பிறழ்வும் கண்டே
எட்டியல் அறுபான் நான்கறி வாரே 141

மூல மூலம் முயலுறக் கண்டே
மூலப் புள்ளி நடுவண் இருத்தி
நாற்புறப் புள்ளி நவையறக் குறித்தே
ஆற்றுறும் நெறிக்கலை அகத்துணர் வோங்கி
எட்டின் பிறழ்வே ஒமென் றறிந்தே
எட்டே எண்ணின் இயல்முடி பாகி
எட்டுறும் கலைத்திறன் மெய்யுணர் வுற்றே
மூல முதலொலி ஒளியொலித் தமிழே
சீலம் இயங்கல் தெளிவுறுஞ் சிறப்பே 171

எண்ணெண் கலையின் இயலுறுங் கூற்றியல்
திண்மதித் திறத்தால் சீருறத் தெளிந்தோர்
கூறுகூ றியலால் குறித்துறும் நுட்பம்
வேறுவே றியலொலி எழுத்தில் வகுத்தும்
மாறுமா றியலால் சுழல்நிலை தெரித்தும்
ஏறுறும் விண்நிலை மண்நிலை உணர்த்தி
எட்டின் இயலால் இயங்குறும் முயல்நிலை

முட்டின் றுணர்த்தி முறைநெறி வகுக்கும் 264

எட்டால் இயல்நிலை நிலைநெறிக் கலையாய்
எட்டின் பிறழ்வால் என்கலை யசைவால்
விட்டுறும் வலிநிலை விளங்கக் காண்குபு
தெட்டுறும் முயக்கம் மூலந் தோன்றுபு
ஒம்நெறிக் கலைத்திறன் ஒளிகுற நோக்கிக்
காமுறக் காண்டல் கலைநெறி யாற்றல்
தோமில் லாடலான் திருநெறி யியலே
தாமுற உள்ளுணர்ந் தியலுறு மாற்றல்
அகமும் புறமும் உணர்வுறத் தெளிந்தே
மிகையறும் ஒளிக்கலை மெய்யுணர்த் தும்மே 312

ஒம்மொழி என்கலை யியற்பொரு ளாகி
ஒமெழுத் துருநிலை ஒளிக்கலைத் திறனாய்
என்ணியல் நிலைதெரி யிலங்குறு மாற்றல்
விண்மொழி யோசை யொலியென வுணர்த்துபு
எட்டின் பிறழ்நிலை யியலென வோங்குபு
விட்டுறும் நிலைக்கலை யுய்த்துணர் நெறியே 357

ஒமுறும் வளைவெழில் உள்ளுறு முணர்வால்
தாம்நனி யுணர்ந்தோர் தகைமையிற் றேர்ந்தே
எட்டின் பிறழ்வுறும் இயல்நிலை நுணுக்கம்
விட்டுறும் நிலைக்கலை முயக்கத் தாற்றலும்
வளைவியல் நெறிக்கலை வனப்பெழில் மொழித்திறன்
நெளிவியல் நெறியால் நெகிழ்வும் தேற்றமும்
ஆடலான் கலைநெறறி யமைவுறத் தெரிவரே 361

நொடிப்பொழு தியல்நெறி நுணுக்க மோர்ந்தே
நொடிநொடிக் காலஞ் சிறுநொடிப் பொழுதே
பொழுதியற் காலம் மெய்க்கலை யுணர்வால்
பழுதற் றுணர்வால் பான்மை நோக்குபு
ஐயைந் தியல்தெரி நெறிச்சுழ லாய்ந்தே
மூந்துறுங் கால விரைவிய லோர்ந்தே
நாற்புறத் திறயல்தெறி நிலைவளை வாயுறும்

ஆற்றல் விரைவின் நிலைக்கலை யோர்ந்தே
மூலம் முலை விளிம்புறுத் திறனெறிக்
கோலச் சுழல்நிலைச் சீலச் செந்நெறி
குறிப்பி னுணர்ந்தே கணக்கியல் வினையியல்
அறிகலைத் திறத்தா லறிந்துறும் மெய்க்கலை
உறுபொழு தியலா லுற்றறி யுணர்வால்
குறுநிலைப் புள்ளிக் குறிப்பி னியங்கித்
தெரிநிலை யியல்தெரி யைந்நிலை யாக்கம்
விரிநிலை எண்ணெண் கலைத்திற நோக்கம்
எட்டின் மாற்றம் ஒன்பான் தேற்றம்
எட்டுறும் பிறழ்வென எட்டின் பிறழ்வாய்
எண்ணிலை மாற்றம் வளைவியல் நெறியாய்
தெண்ணிலைக் கலைநிலைச் சிற்றவை மூலம்
ஆடற் கலைநிலை அறிநிலை மெய்ம்மை
ஆடலா னியல்நிலைக் கணக்கிய லாற்றல்
நெறியா லுணர்ந்து நினைவுற நினைந்தே
குறியுற நோக்கிக் கூர்த்தமா மதியால்
ஆய்ந்துறு மாற்ற லகவுணர் வொன்றே
ஆய்முறைக் கலைநிலை தெரித்த லியல்பே 644

எட்டின் பிறழ்நிலை ஒமெனத் தேர்ந்தே
எட்டின் பிறழ்நிலை இயல்நிலை ஒன்பான்
ஆடலான் கலைத்திறன் ஐவகை மாத்திறன்
ஆடலான் நெறித்திறன் குறுநிலை யாக்கமும்
ஆடலான் ஒளிநிலை வெளிநிலை நோக்கி
ஆடலான் உருத்திறன் ஆடலும் கலைநிலை
ஆடலான் கலையே அண்டமும் பிண்டமும்
ஆடலான் நெறிநிலை வெளிநிலை ஒளிநிலை
ஆடலான் இயக்கம் விண்ணும் மண்ணும்
ஆடலான் முயக்கம் உடலும் உயிரும்
ஆடலான் திறமே உள்ளமும் உணர்வும்
ஆடலான் செயலே ஊக்கமும் உணர்வும்
நாடரும் கலைத்திறன் ஆடலான் நெறியால்

தேடுறும் மூலத் திறன்நிலை நோக்கி
உற்றறி நோக்கால் உணர்வறித் திறனால்
கற்றறிக் கலையால் கேட்டறி நுட்பம்
முற்றும் அறிதல் முதறி வாற்றலால்
தெற்றெனத் தெரிந்தே செந்தமிழ் ஆய்தல்
கட்டடக் கலைநிலை கணித்தமிழ் நெறிநிலை
சிற்பத் தமிழ்நிலை ஓவிய ஒளிநிலை
சித்திரக் குறியாய் சிற்பமா நெறியாய்
மெய்த்தக வுற்ற திருநெறிக் கலையாய்
உள்ளுள் ளுணர்ந்தே ஒளித்தமிழ் ஆய்தல்
விள்ளுபே ரறிஞர் மேலோர் திறனே 814

சிற்றவை

உற்றுறும் எண்ணெண் உறுங்கலைத் திறனாய்
பெற்றுறும் எண்ணியல் கணக்கறித் தாய்ந்தே
சிற்றவை நெறிநிலை காலச் சுழலும்
உற்றறி உணர்வினோர் ஞாலம் ஆள்வரே 133

சிற்றவை நுட்பச் சீர்குறித் தறிந்தே
உற்ற காலத் தியல்நிலைப் பெருவெளி
உற்றறி வாரே ஐந்தைந் தியலை
உற்றுணர் வாலறி உள்ளொளி காண்பரே 137

அறுபான் நான்காம் சிற்றவை தெரிந்தோர்
உறுமுறை எண்ணியல் எண்கலை அறிந்தே
பெறுமுறை ஆடலான் பிறழ்நிலை உணர்ந்தே
உறுநிலைக் காலம் விரைவறி வாரே 142

எண்ணெண் அளவை இலங்குறும் சிற்றவை
நுண்ணியல் புள்ளி மூலம் உணர்த்தி
மண்டும் காலச் சுழல்நிலை காட்டி
அண்டும் ஐந்தொழில் ஞாலம் காட்டுமே 144

ஐந்திற இயலால் சிற்றவை நோக்கி
வந்துறும் ஐந்துமைந் தியற்கலை ஓர்ந்தே
புள்ளி மூலம் பொருந்தக் கண்டே
தெள்ளுறும் ஓம்ஒலி ஓம்ஒளி நோக்கி
எட்டின் பிறழ்நிலை இனிதுற் றுணர்ந்தே
விட்டுறும் ஒன்பான் நிலைக்கலை ஓம்நெறி
செந்தமிழ் மூல முதலெழுத் தென்றே
வந்துறும் நெறியே வகைவிளக் கும்மே 145

சிற்றவை கணக்கியல் சீருறத் தெளிந்தோர்
உற்றுஐந் தொழிலின் நுட்பமும் ஒளியும்
உற்றுறும் ஓம்ஒளி ஓம்ஒலி உணர்ந்தே
பெற்றுறும் திறவலி பேரியல் நெறியே 146

உந்துறும் உணர்வொளி ஒலிக்கலை யுணர்த்தி
முந்துறும் விண்ணொலிச் செந்தமிழ் ஓம்ஒலி
வந்துறும் ஓம்ஒளி வகைபெறக் கண்டோர்
உந்தல் உந்திச் சுழிநிறை ஆய்ந்தே
தந்துறும் அகவெளி அகவின் னாய்ந்தே
முந்துசெந் தமிழொலி பிறப்பியல் ஆய்ந்துணர்
கலைநெறி தமிழொலி உமிழ்ஒலி ஓசை
நிலைநெறி இயல்கலை விண்ஒளி யாற்றல்
ஒளிமொழித் தமிழென ஓங்குபு நோக்கி
வெளிநிலைச் சிற்றவை என்கலை ஆயலே **280**

சிற்றவை அமைப்பியல் எழுத்தியல் காண்டலும்
உற்ற மூவினம் ஒருங்குற நோக்கலும்
தெற்றவைந் தெழுத்தும் உயிர்க்கலை எழுத்தும்
முந்துறும் மெய்யுயிர் கலைநிலை எழுத்தும்
என்னுற் றெண்ணி எழுந்துற வாய்த்தே
தின்னுறும் சீர்செயல் அண்ணித் தியலால்
எண்ணெழுத் தியற்கலை அறுபான் நான்கில்
விண்ணொளித் தமிழால் வெளியுற முயங்கலும்
ஓமுற அமையும் இயல்பிற் றன்றேனு **281**

சீரே தெரிநிலை சிற்றவை ஓர்ந்து
நேருறும் எண்ணியல் நிலைக்கலை மூலம்
எண்கலை ஐந்நெறி எண்ணெண் ணியலும்
நுண்கலை மூலம் நுவல்நெறி விளங்கி
ஐம்பொருள் ஐந்தியல் செம்மைத் தொன்னெறி
எண்ணெறி யியல நோக்குறுந் திறத்தால்
விண்ணெறி விளங்கும் வகைமுறை யானே **531**

எப்பொருள் எக்கலை எங்குறும் பொருளும்
ஒப்புற நோக்கி லுணர்வுக் கரிதாய்
உணர்வுத் திறனா லோங்குறுந் தன்மை
உணர்வொளி யியலாய் நெறிமுறை கண்டே
அறுபான் நான்கே பெருநிலை மூலம்
உறுகலைத் திறனே உற்றறி யுணர்வால்

பல்பொருள் பெழுமும் அறுபான் நான்கே
தொல்கலைத் தொன்னெறி துலங்க விளக்கி
கலைநெறி மூலம் கணக்கிய லியக்கி
நிலைநெறித் தன்மை நெடிதுறக் காட்டி
பல்கலை இயல்விரிப் பரப்புறுந் திறனாய்த்
தொல்கலை மூலத் தெண்ணியல் நோக்காய்
விரிந்து விளங்கும் விண்ணிலைச் சிற்றவை
புரிந்து நோக்கின் எண்ணிலைச் சிற்றவை
உணர்வி னாய்ந்து ஒளியாற் கண்டே
உணர்கலைச் செழுந்தமிழ்ச் சிற்பமெண் கலையே 658

ஆநிலம் ஆறும் அகத்துணர் வோர்ந்தே
தூநிலப் பெருவெளி ஒளிநிலைக் கலையாய்
மாநிலப் பெருநிலை பெருங்கலை நோக்குழி
ஐந்நிலம் இடநிலைப் பொருள்நிலை ஆய்ந்துழி
அறுவகைப் பொழுதும் ஐந்திய லாக்கமும்
உறுவகைக் கலைத்திறன் உற்றுறு மாக்கமும்
பெறுவகை பெற்றே பெட்புறப் பேணி
தெறுவகைத் திறத்தால் சீருற நோக்குபு
உள்ளூறும் வையம் விண்ணிலை ஓர்ந்து
தெள்ளூறும் புறநிலை விண்மண் ணாய்ந்து
கலைநிலை எண்ணெண் கணக்கிய லாற்றல்
நிலைநெறி மூலம் நெறியுறுங் கணக்காய்
உள்ளுவ துள்ளி ஓங்குறும் ஆற்றல்
தெள்ளு மாநெறி சீர்சால் ஆற்றல்
அறுபான் நான்கியல் அருங்கலைத் திறத்தியல்
உறுமுறை நோக்கி உணர்வுறும் தெளிநிலை
மூலங் காட்டி முன்னிலை நோக்கும்
காலங் காட்டும் கணக்கியல் நெறியாய்
இலங்குவ இலங்கி இயல்பே இயக்கும்
துலங்கு மாநெறிச் சிற்றவை யியலே 739

உற்றறி உணர்வும் ஓங்குறும் மெய்நெறி
பெற்றுறும் நெறிகலை தெற்றுறும் குறியியல்

மெய்ப்பொருள் தெரிநிலை விளங்குறு மாக்கலை
மெய்யியல் நுணுக்கம் எண்கலை நிலையியல்
ஐங்கலை ஐந்நெறி ஐயியல் ஐந்திணை
ஐம்மறை செம்மறை நெறிமுறை யோர்ந்தே
கலைநிலைக் கட்டிட நிலைக்கலை ஓர்ந்து
நிலைநெறி ஓவியம் சிற்பமும் ஆய்ந்து
தலைமுறை ஓம்நெறி தன்னிலை யுணர்ந்தே
நிலையியல் மாறா நெறியுணர் வுற்றே
எண்கலை எண்திறன் இயலுணர் வோங்கி
திண்கலை நுண்கலைச் சீரியல் தெரித்தே
விண்மொழி எண்மொழி விளிநிலை தேர்ந்தே
பண்ணொலி பாவொலி நெறிமுறை நோக்கி
உற்றுறும் மூலத் தெழுங்கன லாற்றல்
பெற்றுறும் நிறையொலி ஒளிக்கலைத் தேற்றம்
அகவின் னிலையே புறவின் னெறியே
அகத்துணர் நெறிக்கலை புறத்துணர் பொறித்திறன்
அகமும் புறமும் ஆய்ந்துணர் நெறியால்
மிகுத்துணர் ஒளிக்கலை முற்று மாநெறி
சீரியல் எண்ணென் நெறிக்கலை முறையால்
தேரியல் ஒளிநிலை சீருற வாய்ந்தே
அறுபான் நான்கின் கணக்கியல் ஒளிநிலை
உறுநிலை நெறிக்கலை உரைக்குமா நெறியே

அரண்நிலை அகழி நீர்நிலை விரிதரை
திரண்டுறும் பெரும்படை வேல்வில் வாள்சூர்
ஏந்துறும் வீரர் கோட்டுறும் கோட்டை
வேந்துறும் இருக்கை வியன்நிலை விரிவிடம்
எழில்நிலை ஓவியம் என்னுறும் நிலைகலை
எழுதத மாக்கலை வரைவுறும் மெய்க்கலை
ஓவிய நுண்கலை ஒளிதரும் பெருங்கலை
ஓவியத் திண்கலை எழிலுறும் வண்ணம்
வேவுறும் சிற்பம் மிளிர்தரும் சித்திரம்
பாவியல் ஆக்கம் பண்புறும் சீரியல்

ஓவம் ஓவியம் ஓவியல் நிலைகூர்
மூவிரு வகைநவில் முன்னிலை நுட்பம்
திட்பமும் நுட்பமும் செறிவுறும் சிற்பம்
பெட்புறும் இசைநடம் பெருங்கலை ஆக்கம்
ஒட்பத் திட்பம் ஒளிநிலை நுட்பம்
எட்டியல் கலைதெரி மூலநுண் ணியலால்
முட்டறு மொழிக்கலை ஒளிக்கலை ஓம்மொழி
எட்டெட் டியல்நிலை எண்ணுறு மாக்கலை
மூலம் அறிந்து காலம் ஓர்ந்து
கோலக் குறிப்பின் சீலம் உணர்ந்தே
ஞால மாநிலை விண்ணிலை நோக்குழி
மூல மெய்யியல் உணர்வுறும் நெறிக்கலை
அறுபான் நான்கியல் ஆக்கத் துறுநிலை
உறுநிலை சிற்றவை ஓங்குறுங் கலையே 741

ஐந்திணை அன்பே அகப்பொருள் மூலம்
ஐந்நெறி ஐம்மறை ஐங்கலை நிலையால்
நெறிமுறை யோர்ந்தே நிலைக்கலை நோக்கிக்
குறிமுறை யாற்றலால் குறித்துறும் குறிப்பால்
குறிப்பறிந் தியலும் கூர்மதி நோக்கி
அருங்கலை நுட்பம் பெருங்கலைத் திட்பம்
பெருநெறி யியற்றிறன் திருநெறிச் சிற்றவை
நோக்குவ நோக்கி நுவலுவ நுவன்றே
ஆக்குறுங் கலைத்திறன் ஐயியல் ஒளிநெறி
ஒளித்தமிழ் ஒலித்தமிழ் எண்தமிழ் இயலால்
வெளிக்கலை விண்ணொளி வியனெறிக் கலைத்திறன்
நுட்ப மாக்கலை மாநெறி மூலம்
ஒன்றுறுந் திறனிலை ஒளியியல் நெறியாய்
நன்றுறுங் கலைநெறி நாடலும் எண்கூர்
எண்ணிலை எண்ணியல் எண்முறை எண்ணெறி
விண்ணிலை முப்பொருள் முக்கலை முந்நெறி
ஐந்நெறி யியலால் ஐம்மறை யோர்ந்தே
செந்நெறி சீர்நெறி செந்தமிழ்க் கலையியல்

சிற்பச் செந்தமிழ் சிற்றவை எண்தமிழ்
பொற்புற் றாய்தல் பெருநெறி மரபே 797

திருநெறிச் சிற்றவைப் பேரொளி முருகே
ஒருநெறிப் பெருவெளி எண்ணெண் கலையாய்
மன்றே வெளியே மாவிண் ஒளியாய்
தென்றமிழ் ஒளியாய்த் திகழுறும் கலையாய்
உயிர்ப்பே ரொளியாய் உணர்வுறும் ஒலியாய்
செயிரற விளங்கும் சிற்றவை நெறியே 805

கற்றமாக் கலையும் உற்றபே ரறிவும்
சிற்றவை முலத் தியலுறும் உணர்வே 806

காலமும் முலமும் கடிதின் உணர்த்தும்
முல மாப்பொருள் முதுகலைச் சிற்பம்
சிற்பம் தெரிந்தோர் சிற்றவை யாய்வோர்
சிற்றவை தெரிந்தோர் முற்ற உணர்ந்தோர்
அறுபான் நான்கியல் அமைவுறக் கண்டே
உறுபயன் தெரிப்போர் உண்மை காண்பரே 829

எண்முறை இயலாய் எண்ணிலைக் கலையாய்
ஒண்ணெறித் திறனாய் ஒளிநிலை நோக்கி
விண்ணும் மண்ணும் விளங்கக் கண்டே
விண்ணொளி நோக்கி வியனொளி ஆய்ந்து
அகஒளி நோக்கி அறிவொளி ஆய்தல்
மிகுமொளித் திறத்தால் புகுமொளிக் காண்டல்
காண்டல் கருதல் கலைநிலைத் திறனாய்
ஈண்டு பேரறிவால் இயல்பின் ஓர்ந்து
மாக்கலைச் சிற்பம் ஒளிநிலை நோக்கி
மாநிலை சிற்றவை எண்ணியல் கருதி
சிற்றவை எண்ணியல் கணக்கியல் முலம்
சிற்றவை எழுத்தியல் மொழியியல் முலம்
சிற்றவை முலம் உயிரியல் காலம்
சிற்றவை காலம் திறத்தியல் ஆய்ந்தே
சிற்றவை நாடல் உற்றபே ரறிவால்

உற்ற மாக்கலை அறிவர்மா நெறியே 839

சிற்ப மாக்கலை செந்நெறி மெய்நெறி
சிற்ப மாயியல் சிற்ப மாவொளி
பொற்புறும் கலைநிலை பொருந்த வுணர்ந்தே
விற்பனத் திறத்தால் முப்பொருள் நோக்கி
கற்றும் கேட்டும் உணர்ந்தும் ஆய்ந்தும்
சொற்பொருள் மெய்நிலை தொல்பொருள் ஆய்ந்தும்
உணர்வின் நோக்குழி மெய்க்கலை தேர்ந்தே
உணர்நிலை இயல்கலை கலைத்திற மதியால்
மெய்ப்பொருள் மெய்ந்நிலை மெய்யறி வுற்றே
ஐவினை செவ்வினை கைவினைத் திறனும்
உய்வினை ஆற்றலால் ஒருங்குணர் திறத்தால்
மெய்த்திறன் ஆக்கம் நிலைகலை நோக்கி
சிற்றவைச் சீரியல் அறுபான் நான்கியல்
உற்றுணர் கலையால் வருபயன் நோக்கி
எட்டும் ஐந்தும் இயல்நெறி நிலையால்
சுட்டு மாக்கலை மாஇயல் மாநெறி
செய்முறை செய்வினை செய்நிலை செய்கலை
மெய்நிலைப் பொருளால் சிற்றவை தேர்ந்து
சிற்றவை முலச் செழுங்கலை யாய்ந்து
தெற்றறி நுட்பம் தேர்ந்துணர் திட்பம்
உற்றறி பொருள்நிலை உளத்துணர் ஆற்றலால்
தெற்றுறும் நிலைபொருள் சீரறி வுற்றே
அறிவியல் கலைத்திறன் அரும்பொருள் ஆய்தல்
நெறிமுறை சிற்றவை மாநெறி இயலே 841

உண்மையும் ஊக்கமும் உளழை வெல்லும்
நுண்மையும் எண்மையும் நெறிமுறை கூட்டும்
காலத் தியலும் கணக்கியல் தேர்ச்சி
கால மாநெறி கணக்கியல் ஆய்ந்தே
ஒன்றுறும் நிலைகலை உள்ளுறும் நுட்பம்
நன்றுறும் சிற்றவை நாற்புறத் தியல்நெறி
முலப் புள்ளி மையம் உணர்ந்தே

மூலமும் காலமும் முறைமையிற் றேர்ந்தே
எண்ணுறுந் திறனிலை இயல்பின் ஆய்ந்தே
விண்கலை விண்ணொளி லியனிலைத் திறத்தால்
கலைநெறி நோக்கிக் கலையியல் கண்டே
நிலைநெறி அறிகலை நவிலலும் வழக்கே 847

உள்ளூறும் உணர்வே உறுகலை உணர்வால்
தெள்ளூறும் நிலைகலைச் சிற்றவை நோக்கி
அறுபான் நான்கியல் அமைவுறக் கண்டே
உறுநிலை நாற்புறத் தியலைந் தியல்நெறி
கணக்கியல் மாநெறி கலைநெறித் தேர்நிலை
பிணக்கறும் தூநெறி பெருநெறி தேர்ந்தே
பெருவளி யியலும் கருவெளித் திறனும்
உருவெளி ஆக்கம் ஒளிநிலை தேர்ந்தே
உள்ளூறுங் கலையியல் உணர்நிலை நோக்கி
தெள்ளு மாத்தமிழ் சீரியல் திறனிலை
மொழியியல் நோக்கி முட்டறுந் திறத்தால்
மொழிக்கலை நுணுக்கம் முன்னிய தோர்ந்தே
செழுங்கலை யியல்நெறி சீர்நெறி தேர்ந்தே
சீரறி வோங்கிச் செந்நெறி உணர்வால்
நேரறி வுற்றே நிலைமுறை நோக்கிக்
கூரறி வுணர்வால் கலைநிலை யாய்ந்தே
பேரறி வியற்றிறன் பெட்புற் றுணர்ந்தே
ஒருகலை நிலைநெறி உள்ளுமோ ரியலால்
வருகலைத் திறனியல் வளமுற் றாய்ந்தே
பெருகலை நிலைமுறை பிறங்கக் கண்டே
இருநிலை முந்நெறி நாற்புறத் தைந்தியல்
வருமுறை நெறியியல் வளர்நிலை நோக்கி
உள்ளம் உன்னல் ஒங்குறும் நெறியால்
தெள்ளூறும் நிலையறி சீர்த்தமா மதியால்
நிலையறி உண்மை நேரறி வுற்றுக்
கலையறி நிலையே கருதல்மா நெறியே 856

ஆழ்நிலை உணர்வால் அகன்றபே ரறிவால்
வாழ்நிலை யுன்னி வளநெறி நோக்கி

ஊழ்நிலை மாற்றும் உறுதியுங் கொண்டே
ஏழ்நிலை இயலறி நுண்ணிய மதியும்
கலைத்திற நெறியும் கருதும் ஆற்றலும்
நிலைத்திறன் பணியியல் நெறியுறும் நுண்மையும்
எண்மை யியலால் இயற்கலை உணர்ந்தே
கலைநிலை நுட்பம் கருத்துற் றோர்ந்தே
நிலைநெறி யியற்றிறன் நெறியுறுந் திட்பம்
ஒன்றுமுன் றைந்தியல் ஏழோ டெட்டும்
நன்றுறும் திறனாய் எண்ணியல் ஐந்தே
நோக்குறும் மூலப் பொருள்நிலை நாடி
ஆக்குறும் கலைத்திறன் அறிவியல் நெறியாய்
எண்முறை எண்ணியல் எண்கலை நோக்கி
விண்முறை விண்ணியல் விளக்கமுற் றாய்ந்தே
கலைதெரி நுணுக்கம் கணக்கியல் மூலம்
நிலைதெரிச் சிற்றவை நேர்முறை யியலால்
உற்ற மாநெறி ஒருங்குறும் மெய்க்கலை
கற்றுணர் கலையும் கலைத்திற நோக்கும்
கேட்டுணர் திறனும் கிளர்ச்சியும் எழுச்சியும்
நாட்டமும் நாடி நவிலல்மா நெறியாய்
அறுபான் நான்கியல் அறைமுறைத் தேர்ந்தே
ஒருநெறிக் கலைத்திறன் உற்றபே றறிவால்
செந்நெறி செய்நெறி சீர்முறை நோக்கி
மெய்நெறி திருநெறி வருநெறி யியலால்
ஒன்றின் ஆக்கம் இரண்டுறும் யியலாய்
நன்றுறும் மூன்றாய் நாற்புறத் தியல்நெறி
ஐந்துறும் ஐங்கலை ஐந்நெறி ஐம்மறை
வந்ததொல் மயன்நெறி தமிழ்நெறி வழக்கே **857**

எண்ணமும் முணர்வும் இயங்குறும் ஆற்றல்
எண்ணியல் நிலைகலை நெறிமுறை யோர்ந்து
தண்டமிழ்ச் சிற்றவை தனிநிலைக் கணக்கியல்
ஒண்டமிழ் ஓம்கலை ஓம்நெறி ஓம்மறை
ஒலியுறும் ஒலியும் ஒளியுறும் ஒலியும்

ஒலிஒளி நிலைக்கலை ஒளிஒலி யியலாய்
ஓசை யியற்றிறன் மாத்திரை அளவியல்
ஓசை குறில்நெடில் ஓங்குறும் திறனாய்
அளவியல் நெறியிசை குறியிசை மொழிக்கலை
வளமுறும் மொழித்திறன் கணக்கியல் நெறியாய்
என்னெண் கலைத்திறன் இயல்புற நோக்கி
நுண்ணறி வுற்றே நுவலருங் கலைத்திறன்
சிற்றவை யியல்தெரி சிர்நிலை நோக்கும்
முற்றும் காணும் முக்கலை முந்நெறி
தெற்றுறும் செயல்நிலை சிருற் றாய்ந்தே
ஒளிக்கலை நுட்பம் ஓங்குறுந் திட்பம்
வெளியொளி அகவெளி யொளிநிலை ஆய்வால்
எண்ணமும் உணர்வும் எழுச்சி யுறுநிலை
விண்கலை யியல்நெறி விளக்கமுற் றாய்ந்தே
நோக்குறும் நிலைகலை நுண்மதித் திறனால்
ஆக்குறும் அறுபான் நான்கியல் நெறியியல்
நோக்கம் கருதல் நிலையுற் றுணர்தலும்
தேக்கு மாநெறிச் சிற்றவை யியலே 885

சிற்றவை சிற்பம் உற்றுறும் ஒளியே 886

அகம் / புறம்

உணர்வால் கலைத்திறன் ஒருநொடி ஆயின்
உள்ளும் புறமும் நிறையுணர் வுற்றே
தெள்ளும் கலைத்திறன் சிருற வியங்கி
துள்ளும் மாப்பொருள் விளக்கமா யுறுமே 80

அகத்துணர் வொன்றே மிகுத்துறும் பயனே 81

உணர்வுறும் ஆற்றலும் உள்ளொளித் தோற்றமும்
உள்ளூறும் பெருஞ்செயல் விண்ணொலி நோக்குபு
தெள்ளுறும் அகவின் புறவின் திறமுறும் 190

அகவின் புறவின் ஒளிஒலி ஓம்நிலை
அகத்துணர் வாலறி அறிவுறும் திறனே 191

அறிவியல் அருளியல் தெருளுறக் காண்டல்
அகவின் ணொளியுணர் மேனிலைத் திறனே 192

அகவின் ணொளியே அறிகலை மூலம் 194

அகமறி யாதார் புறமறி யாரே 195

விண்ணளந் தறியும் எண்ணின் நுட்பம்
எண்ணுற் றுணர்ந்தே எழுத்துறத் தேர்ந்தே
எண்ணே மூலமாய் இயலுறும் ஆற்றல்
விண்ணுறும் ஒளியால் விளங்குற விளங்கி
அகவெளித் திறத்தால் புறவெளி ஓர்ந்து
அகத்துணர் மெய்த்திறக் கலைநிலை கூறுமே 204

உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற் கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே 207

உள்ளூறும் உணர்வே ஊழை வென்று
தெள்ளூறும் முதிர்கலைத் திந்தமி ழியல்நெறி
கால நுட்பமும் கருத்துறும் செயலும்
சீலமுங் கோலமும் சிறப்புற நல்கி
ஞாலமும் அளிக்கும் நற்றிற மன்றோ 246

உள்ளூறும் விண்ணெறி எண்ணெண் திறத்தால்
தெள்ளூறுக் கண்டோர் சீர்நெறி நோக்கி
வையத் தசைவும் விண்ணொளி யியலும்
உய்யக் கண்டே ஒளித்தமிழ் உணர்வரே 249

காலப் பொருளை கடிதுற உணர்த்தி
சீலத் தியலால் இடைநிலை தெரிந்தே
ஒளிநிலை உள்ளும் புறமுற உணர்த்தி
வெளிநிலை ஓம்ஒலி ஓம்ஒளி கூட்டும்
கால நுணுக்கம் உயிரியல் உணர்வால்
மூலமா வியலால் முயன்றினி தாய்ந்தே
சிறுபொழு தோர்ந்தே பெரும்பொழு தெண்ணி
உறுபொழு தாங்குறின் உவப்புடன் உன்னி
காலம் ஒன்றே கலைபல உணர்த்தும்
மூலம் எண்ணிலை மறைமொழி ஓர்ந்து
உள்ளூறும் வையம் புறமுறும் வையம்
விள்ளூறும் திறத்தால் விரைவின் ஆற்றல்
காலஞ் சுழல்நிலை உட்கலை தெரித்தே
காலத் தணுவும் ஞாலத் தணுவும்
அணுஅணு ஒலியும் அணுஅணு ஒளியும்
நுணுக்க மாயொளிர் நொடித்திறன் நோக்கி
காலங் கூட்டும் இடநிலைத் தேர்ந்து
சீலந் தெரிந்துணர் செந்நெறி உள்ளி
ஞாலம் கோலம் மூலமுத் திறனும்
காலத் தாலறி நூலறி வாளர்
உள்ளொளித் திறனுற ஓங்குறி உணர்நெறி
விள்ளும் அறுபான் நான்கியல் தெரிந்தே
சிற்றவை எண்ணிலை எழுத்தியல் ஒலிநிலை

உற்றுறும் உணர்வால் மெய்த்திற னோர்ந்து
எட்டின் பிறழ்நிலை இனிதுற உணர்ந்தே
விட்டுறும் நிலைகலை விள்ளுறும் திறத்தால்
ஓமெனும் திறத்தியல் ஒளியுற் றுணர்ந்தே
தோமில் ஆடலான் இயல்நெறி கூட்டும்
காலம் இயக்கும் பெருந்திற வாற்றல்
காலத் துடிப்பே நன்கினி தூட்டும்
சிறுநொடிக் காலம் திருவுற் றுணர்ந்தோர்
உறுநிலைக் காலத் தியல்நிலை அறிவரே 254

உட்கலைத் திறனே மெய்யுணர் விந்து
விட்புலத் தொளிர்ஒளி வியனிலை காட்டும் 266

எண்ணிலை எண்கலை இயல்நெறித் திறனாய்
எண்மொழி யியற்கலை தெள்ளிதின் உணர்ந்தே
விண்ணெறி விளக்குபு மெய்க்கலை உணர்வால்
துண்ணிதின் உணரும் அறிமதி வலியால்
காலச் சுழலை கருத்தறிந் துணர்ந்தே
மூலப் பொருள்நெறி முழுதியல் தெரிந்தே
அறுபான் னான்குறும் அரும்பொருள் நோக்கு
உறுகலை நெறித்திறன் உற்றிவ னோர்ந்து
பெறுநிலை எண்ணிலை பிறழ்நிலை நோக்கி
உறுமதி யாற்றலால் உள்ளுற் றுணர்ந்தே
உள்ளுறும் விண்ணொளி புறவிண் ணொளியும்
விண்ணுறும் விழிக்கலை நோக்குற் றிலங்கி
ஐந்துமைந் தியலுறும் அருங்கலை நுட்பம்
முந்துறும் விண்ணெறி எண்கலை யாற்றலாய்
ஞாலத் திண்நெறி நவையற நோக்குழி
காலத் தியல்தரு கோலமும் சிலமும்
மூல முற்றியல் முழுப்பொருள் தோற்றி
எண்ணெழுத் தியல்தரும் நறும்பொருள் ஓர்ந்தே
நண்ணுறும் ஐந்தொழில் நிலைக்கலை யாயல்
ஒளியாய் உயிராய் உணர்வாய்க் காண்போர்
தெளிவுறும் ஐந்திறச் சீர்நெறித் திறமே 282

அகத்துறு முணர்வே அகத்துறு மொளியாய்
புறத்துறும் உருவம் நிலைபெறக் கூட்டும் 306

உள்ளூறு மறுபான் நான்கியல் விரைவே
தெள்ளூறும் ஞாலத் தியல்நிலை காட்டும் 333

உள்ளூறும் உட்கலை யோங்குறும் நுட்பம்
தெள்ளிதி றுணர்ந்தே சீர்நிலை நோக்கி
தெள்ளுசெந் தமிழ்நிலை யெண்ணிய வளவை
வில்லூறத் தெரிந்தோர் வினையிய லாய்ந்து
கலைத்தொழில் மூலம் பொருள்நிலை கூர்ந்து
நிலைமொழி யியலை நெடிதுணர் வாரே 352

ஒன்மையி னென்மை ஒளிருற நோக்கி
நுண்மையின் ஒடுக்கம் நுவலுறத் தெளிந்தே
எண்கலை மேவி எண்ணெண் ணியலால்
நண்ணுறு மறுபான் நான்குறுந் திறனெறி
அறுபான் நான்கின் அகவிய லைந்தே 368

பொருண்மை சுட்டியும் வினையிய லுணர்த்தி
மருண்மை தவிர்த்து மெய்ம்மொழிக் கலையால்
ஐந்நிலை யைந்நெறி யகவொளி யாற்றல்
செந்நெறித் திறத்தால் நோக்குவ தியல்பே 414

அகவெளிப் புறவெளி இருநிலைத் திறத்தால்
அகத்துறு முணர்வொளி அருந்திற லாற்றல்
உணர்வாற் றிகழ்ந்து ஒளிபெற நோக்கின்
புணர்நிலை மெய்க்கலை பொருந்துவ நோக்கி
உயிரொளி நுட்பம் உணர்வொளித் திட்பம்
செயிரற நோக்கின் ஆண்பெண் ணியல்பால்
ஒன்றே நிலையெனும் மெய்ந்நிலை தேர்ந்தே
நன்றே யறிந்தனம் நவில்நிலை யொளியே 418

மொழிப்பொத லுண்மை விழியுணர் வோங்கி
செழுங்கலைத் திறமுறும் செந்நெறித் திறத்தால்
புனையா ஓவியம் பொருதெரி யாற்றல்
வனைநெறி வண்ணம் எழுங்கலை வனப்பே

திறமுறத் தெரிந்தே செவ்வணத் திறத்தால்
புறமுறும் ஐவணம் நிலையுறத் தேர்ந்தே
வண்ணத் தியலும் வனப்பும் எழிலும்
எண்ணத் துணர்வும் எழுதரும் நோக்கமும்
வரைதல் நெறியே வரைவுறத் திட்பு
நிறைநிரல் நோக்கி நெறியணி யாக்கி
குறிநெறிக் குறித்தல் புறப்புறந் தேர்ந்து
அறநெறித் திறத்தால் அகப்புற மாய்ந்து
அகமும் புறமும் மிகுமெனத் தேர்ந்தே
அகவொளி யாற்றலால் வண்மை உணர்ந்தே
ஓவிய நெறிமுறை ஓமெழுத் துற்றே
ஓமியல் நெறிக்கலை ஒள்ளிதி னுணர்ந்தே
எழுத்துறும் நிலைவெறி யோவியக் கலைநெறி
வழுத்தினன் சிறிதே ஒளிநிறைத் தமிழால்
உரைத்தன னாகி உவந்தனன் நன்றே

வளியெழுந் திசைக்கும் உள்ளூறு மாற்றல்
வெளிமுத லைந்தும் விளங்குற நோக்கித்
தெளிநிலை யுணர்வால் வளிவெளி மாத்திறன்
ஒளிநிலை யியற்றிறன் உள்ளூற வுணர்ந்தே
காற்றுறும் முச்சாய்க் காலங் காட்டுபு
ஆற்றுறு மாற்றல் சிறுநொடிப் பெருநொடி
நொடிநொடிப் பொழுதின் நுண்ணிமை யாற்றல்
கடிதுறுங் காலப் பொருள்நிலை நோக்கி
நெடிதுறு முயிரொளி நீள நினைந்தே
வினைபுரித் திறனால் மெய்க்கலை யுணர்ந்தே
குறித்துறுங் குறிப்பே குறிநிலைக் கலையாய்
அறிகலை யுணர்வின் ஆற்றல் மிக்கே
நசையறக் காண்டும் நன்னெறி நோக்குபு
இசைநெறித் திறனும் இயலியற் றிறனும்
காற்றுறும் முச்சால் கணக்கியல் நோக்கி
ஆற்றல் கூறும் வடிவுறுங் காலம்
தேற்றமும் தோற்றமும் செவ்விதின் நோக்கி
நூற்றுறை தெளிந்த நுண்ணிய வுணர்வால்

அகவொளி யுணர்திறன் ஒளிக்கலை மாண்பே
அகத்துணர் நோக்கி அறைந்தனன் மாநெறி 430

முப்பொரு ளைந்நெறி முழுது முணர்ந்தே
செப்புறும் ஐந்தியல் சீர்நெறி நோக்கி
அறுபான் நான்கின் அமைவுறு மாற்றல்
உறுபயன் வெளிநிலை யுண்மை யுணர்ந்தே
அகவெளி நோக்கம் புறவின் னோக்கம்
மிகுமொளித் திறனாய் மேவுறு முள்ளொளி
உணர்வே ஆற்றல் உட்கலை யோங்கி
உணர்நெறித் திறனால் மெய்க்கலை விளக்கி
என்னுறும் என்திறன் இயலல் காண்டுழி
நுண்கலை முலம் ஒளிசிறக் கும்மே 460

உள்ளொளி நோக்குநர் வெளியொளி காண்பரே 471

அலையும் மலையும் அகத்து ளுணர்ந்தே
கலைதெரி விண்ணிலைக் கருத்துறுத் தேர்ந்தே
செங்கதி ரொளிநிலை யுணர்நிலை யாற்றலால்
தங்குறும் ஒளிக்கலைத் தன்னிய லாய்ந்தே
கல்லியல் நிலையும் மண்ணியற் செறிவும்
நல்லியல் நெறியால் நண்ணுவ நாடி
ஆங்குறுங் கலைநிலை யியற்பொருள் நோக்கித்
தேங்குறும் அறிவியல் செப்பல் மரபே 483

அலைபடும் பொருளும் கலைபடும் பொருளும்
நிலைபடும் பொருளும் மலைபடும் பொருளும்
நெறியுற நோக்கிக் குறியுறக் கண்டே
அறிவுற வுணர்வோர் அகத்துண ரொளியால்
காண்டலுங் காண்டுழிக் கலைத்திற நோக்கால்
ஈண்டிய லியல்நிலை நிலைபெறுந் திறத்தால்
ஒளிநிலைத் திறனா லோங்குவ தியல்வே 497

அகவொளிப் புறவொளி அகத்துண ரொளிநிலை
மிகுமொளித் திறனால் மெய்க்கலை யோர்ந்தே
அகப்புற வாற்றல் புறப்புறத் தியலும்

அகவொளி நிலைதிகழ் புறவொளிச் சீரும்
ஒங்குறும் உணர்வால் மெய்க்கலை யுணர்வோர்
ஆங்குறும் ஈங்குறும் ஊங்குறுச் சுட்டின்
தேங்குறும் மெய்ப்பொருள் தெரிநிலை காண்பரே 505

அகம்புறந் தெளிந்து அகப்புறம் ஓர்ந்து
அகத்துள் உணர்நிலை ஐங்கலை ஆற்றல்
ஐங்குடி யியல்நிலை நெறிமுறைத் தெளிந்தே
செங்குடி நுட்பம் சீர்நிலை தேற்றம்
விளங்குறும் ஆற்றல் கலைநெறி கூட்டும் 532

எண்கலை நெறியுறும் ஐந்தியல் மூலம்
விண்கலை நுட்பம் விளங்குற விளங்கி
உள்ளுறும் உட்கலை உவப்புறத் தெரிந்தே
தெள்ளுறும் விட்புலன் இயலறி வாற்றல்
நெறியுற வறிந்தே குறியுற் றாய்ந்தே
பொறிபுலன் நிலையுறப் பொருந்தக் காண்டுழி
அண்டமும் பிண்டமும் மெய்நிலை ஓர்ந்துணர்
விண்டுறும் ஒளிநிலை கண்டுணர் ஆற்றலால்
அகமும் புறமும் அகப்புறத் தாற்றலும்
மிகுதிறன் மெய்வலி நிலையியல் கண்டே
உணர்வின் திறநிலை உள்ளொளி யியல்நிலை
உணர்வொளி மெய்த்திறன் ஒருநிலைக் கண்டே
ஓம்முதல் ஒலிநிலை ஓம்முதல் ஒளிக்கலை
ஓமுறும் நெறிமுறை ஓம்இயல் ஆக்கம்
முறையிற் கண்டுழி முறைநெறி உணர்ந்தே
அறைதரும் பொருளா வுறுநிலை யுற்றே
உற்றறி பொருள்திறன் முற்றுறும் அணியாய்
பெற்றுறும் அகவின் னொளிநிலை மூலம்
எட்டெட் டியலுறும் நெறிகலை நிலையியல்
எட்டே இயல்தெரி எண்நிலைப் பொருளாய்
ஒன்றுறும் இயலால் நன்றுறும் திறனறி
ஒன்றிரண் டுறுதிறன் உணர்ந்துள் ளாய்ந்து
மூன்றுதான் கைந்தா றேழெட் டியல்நிலை

ஆன்றுறும் அறிநிலை ஆய்ந்தாய்ந் துணர்வின்
எட்டே எண்ணிலை எண்கலை எண்நெறி
எட்டே எண்மொழி யியல்நிலைச் சிற்பம்
சிற்ப நுட்பம் பொற்புறுத் திட்பம்
உற்றறி வுணர்வுறும் ஒசை ஒலிஒளி
பெற்றுறும் மொழிநிலைக் கலைநிலை இயல்நெறி
தெற்றுறுந் தமிழொலி இமிழொலி உமிழொலி
குறிநிலைக் குமிழொலி அமிழொலி ஐந்தாய்
நெறிநிலை மாறாத் தாநெறித் தமிழ்நெறி
தமிழிசை இமிழிசை உமிழிசை குமிழிசை
அமிழிசை ஐந்திசை ஆற்றலும் ஓங்கி
ஐந்திசை ஐந்தொலி ஐந்துறும் ஒளிநிலை
ஐந்தியல் நெறிமுறை மூலமா நுட்பம்
ஓர்ந்துறும் திறத்தால் ஒமுதற் பொருளொலி
நேர்ந்துறும் விண்ணொலி வெளிமொழித் தமிழென
உண்மை காண்டுழி முதன்நிலைப் பொருள்மொழி
எண்மை ஞாலத் தியல்மொழி பொருள்முதல்
உணர்வொளிக் கலைமொழி ஓங்குறுந் திறமொழி
உணர்நிலைக் கலைத்திறன் ஓங்குறும் மெய்யுணர்
ஓங்குறும் இயலறி வாற்றல் நிலைநெறி
ஈங்குறும் ஆங்குறும் இயல்நிலை அறிந்தே
பைந்தமிழ் ஒலியே பாரொலி விண்மொழி
செந்தமிழ் மொழியே ஓம்ஒலி ஒளியென
அறிந்துணர் திறனிலை அறுபான் நான்கியல்
நெறிமுறை யாக்கம் நிலைபெற் றாய்ந்தே
ஓர்ந்துணர் நெறிநிலை ஒளிமொழிக் கலையாய்த்
தேர்ந்துணர் ஒளிக்கலை நெறிமுறை யியலே 548

கால வியல்தெரி கணக்கியல் ஆய்ந்தே
மூலம் நெறியறி முந்நெறி ஓர்ந்தே
ஐந்நெறி யியல்நிலை அகத்துள் ஆய்வோர்
செந்நெறிச் சீர்மை சிறப்புறக் காண்பரே 557

உள்ளும் புறமும் ஒருங்குணர் நெறியால்

வில்லுங் கலைநெறி மெய்யியல் கூர்ந்து
அகமும் புறமும் அகப்புற மெய்க்கலை
மிகுநிலை விரம் ஆண்மை வண்மை
உண்மை தெருண்மை உற்றறி நோக்கே
திண்ணம் கட்டும் பண்பியல் நெறியே 569

உண்ணோக் கியலே விண்ணோக் குணர்த்தும் 586

அகவிண் ணொளியால் அறிதரும் ஆற்றல்
அகமும் புறமும் நெறிமுறை யோர்ந்தே
அகவெளிப் புறவெளி மிகுமொளி இயலொளி
அகத்துறு முணர்வா லறிகலை மெய்த்திறன்
நாற்புறத் தியலுறு நன்னெறி நோக்கி
நாற்புறத் தியலா லைந்தியல் கலையால்
எட்டியல் நெறிமுறை எட்டெட் டியற்றிறன்
எட்டின் கலைநிலை யியன்று நோக்குபு
முட்டறுந் திறத்தால் முயன்று நோக்குபு
ஒளிநிலை யொளிக்கலை ஒங்குறும் மெய்த்திறன்
வெளிநிலை மெய்த்திறன் விண்மொழி யாற்றல்
எளிமை இனிமை இயல்புறக் கண்டே
ஒளிமொழித் தமிழென் றுரைத்தல் மரபே 623

மூல மாநெறி முன்னெறித் திறனும்
கால மாவியல் கருத்துறுங் கலையும்
அறுபான் நான்கின் அமைவுறு மியலாய்
உறுமுறை யெண்ணிலை ஒங்குறுந் தெரிநிலை
புறவியல் நிகழ்நிலை உள்ளியல் தோற்றும்
புறநிலை யகநிலை ஆய்ந்துணர் மதியால்
அகத்துட் புறநிலை ஆய்ந்துணர் மதியால்
மிகுதிற னாற்றல் மெய்வலி கூடும்
அகத்துள் ளூணரும் பெருங்கலை யுணர்ந்தே
அகத்தை நோக்கி அணுநிலைப் பெருநிலை
நுணுக்குற நுணுக்கி நோக்குபு மெய்த்திறன்
கணுக்கமும் இணுக்கமும் கறையிலா நிலைநெறி
தோன்றக் கண்டே தூநெறி துலங்கி

என்றுறும் புறத்தியல் அகத்துணர் காட்டும்
அகவொளி யாற்ற லருங்கலை மாத்திறன்
அகவொளி நுட்பம் மெய்த்திறப் பொருட்கலை
அகவின் னோக்கால் புறவின் னாய்ந்தே
அகத்துணர் நெகிழ்கலை முகிழ்வொலி கூட்டின்
காண்டுறக் காண்டல் கலைதரும் நெறியாய்
ஈண்டுறும் என்னொன் கலைத்திறன் நெறிமுறை
இயலுறும் பான்மைக் கால விரைவியல்
மயலற நோக்கி மதியொளி யாற்றல்
பெருக்கியுஞ் சுருக்கியும் பேரறி வுற்றே
சுருக்கத் தியல்நிலைத் தொன்மை யுணர்ந்தே
புள்ளியுட் புள்ளி பொருந்த வுணர்ந்தே
புள்ளிக் கூற்றியல் மெய்க்கலைத் திறனாய்
புள்ளியு ளறுபான் நான்கியல் கண்டே
தெள்ளுறுஞ் சீர்மதிச் செறிவுறு முணர்வால்
கண்டு தெளிந்து கணக்கிய லாக்கம்
விண்டுறும் நெறியால் விளக்கம் ஆய்ந்தே
புள்ளியு ளறுபான் நாக்கியல் பொருத்தி
தெள்ளுறுங் கோலம் வடிவியல் நெறிமுறை
நாற்புறத் தியல்நிலை அறுபான் நான்கும்
ஆற்றுறும் ஆற்றல் காலத் தாற்றல்
காலச் சுழலைக் கணிக்கும் ஆற்றல்
கால விரைவியல் வரைவியல் நெறியியல்
கோல நுட்பங் குறித்தறி வுளத்தால்
சீலச் செம்மை தேர்ந்தன ராகி
ஞாலமும் விண்ணும் நவையற வுணர்ந்தே
ஐயைந் தைந்திய லாக்கங் கூர்ந்தே
மெய்யுறும் புள்ளியல் அறுபான் நான்கியல்
விரிவும் விளக்கமும் நெறியுறத் தேர்ந்தே
தேர்நிலைக் கணக்கால் தெற்றெனத் தெளிந்தே
சிற்றவை மூலம் உற்றுறுங் காலந்
தெற்றுறுந் தெளிவால் சீர்மை செப்புமே

எண்மை நுண்மை பெருந்திற னாக்கம்
விண்மை யுணர்த்துங் கலைதெரி நிலையே
அகத்துணர் வறிந்தோர் மெய்க்கலை யோர்ந்தே
அகவெளிப் புறவெளி அகப்புற வியலாய்
கண்டுண ராற்றல் கலைதருந் திறனறி
விண்டுணர் நிலையும் வெளியியற் றிறனும்
எண்ணிலைக் கலைநிலை மெய்ப்பொருள் திறனே 639

மூலக் கருப்பொருள் பல்பொருள் விழுப்பொருள்
காலத் திறனறி யிடநிலை ஓர்ந்தே
கோலக் குறிப்பின் நிலையுணர் நெறிக்கலை
காலப் பொழுதியல் கடிநிலை ஆய்ந்தே
கோல விண்ணிலை நாட்பொழு தியல்நிலை
மூல மாப்பொருள் முறைமையி னுணர்ந்தே
ஞாலம் விண்ணும் ஒளிநிலை யியல்தெரி
கூற்றுறும் நெறிநிலை குறிப்பி னோர்ந்தே
தேற்றுறும் அகவின் ணொளிரும் இயலாய்
ஒன்றுறும் முறைதெரி உணர்வின் ஆக்கம்
நன்றுறும் ஐந்நெறி செந்நெறி நிலைத்திறன்
உளத்துணர் வுற்றே உள்ளொளி நோக்கிக்
களமுங் காலமுங் கருத்துற் றுணர்ந்து
கால நுட்பங் கணக்கிய லாய்ந்து
கால மியற்றும் நெறிநிலை நுட்பம்
மூலப் பொருளியல் காலத் தெருளியல்
சீலமுங் கோலமுந் தெரிவுறத் தெரிந்தே
ஞாலம் படைத்த லைந்தொழி லாக்கம்
கோலத் தறுபான் நானிலங் குறிப்பால்
எண்முறை எண்ணி இயல்நிலை ஆய்ந்து
விண்ணொளி அகஒளி மேவுதல் முறையே! 690

கலைநெறி கலைமொழி கலைஇயல் கருதி
நிலைநெறி நிலைமொழி நிலைஇயல் நோக்கித்
தலைமொழி யுற்றே தன்னிலை நெறியால்
கலைத்திறன் நிலையிய லெண்ணெறி ஆற்றலால்

அறுபான் நான்கின் நிலையிய லோர்ந்தே
உறுகலை நிலைநெறி உள்ளூறு முணர்வின்
தெரிநிலை அகவின் சிருறத் தெரிந்தே
விரிநிலை இயக்கம் மெய்க்கலை உண்மை
ஐந்தியல் நிலையுற் றியல்நெறி நாற்புறம்
வந்துறும் நடுவண் புள்ளித் திறனாய்
மெய்யியற் கலையின் நிலைநெறி யோங்கி
ஐவகை யியல்தெரி ஆறியல் மூலம்
ஐங்குடி நுட்பம் அகமுணர் திறத்தால்
பொங்கொளி உணர்வொளி புகும்ஒளி பேரொளி
தங்கொளி ஐந்தின் தன்னிலை ஓர்ந்தோர்
அகவொளி புறவெளி இயல்பின் ஆய்ந்து
மிகுமொளி ஒலியியல் ஓசை நுட்பம்
புகும்ஒளி எண்ணிலைக் கலைநிலை நிறீஇ
வகுத்துறும் ஆற்றல் ஒளிக்கலை நுட்பம்
எண்ணொண் ணியலா லியல்முறை யியைந்தே
விண்ணொளி மூலத் தெழுதரும் ஆற்றல்
கண்ணொளிக் கதிர்நலம் காண்டல் மாநெறி 691

மெய்க்கலை உணர்வா லெண்ணொண் நிலைத்திறன்
மெய்முதற் பொருளாம் நிலையுறும் நெறிக்கலை
உள்ளூற் றுணர்ந்தே ஒருபொருள் நாடி
விள்ளூறும் நிலைக்கலை விண்ணெறி மூலம்
அண்டம் ஆய்கலை அருங்கலை நெறியாய்
அண்டம் நோக்கல் பெருங்கலை உணர்வே
அண்ட மாக்கலை அறிவியல் நுட்பம்
அண்டத் தியல்நிலை அறிவுறும் ஆற்றல்
எண்ணிலைக் கலையா லியற்புற் றாய்தல்
எண்ணமு முணர்வி னியையும் நோக்கி
சிற்றவை இயல்தெரிச் சீர்நிலை ஓர்ந்து
உற்றறி நுட்பம் ஒருகலை நெறியாய்ப்
பெற்றுறும் ஆறு ஆநிலத் தியல்நெறி
மூலம் முதலாய் முன்னிய ஆறும்

காலச் சீர்நிலை கருத்துற நோக்கி
அகவின் னாய்நிலை அண்டத் துள்ளொளிர்
மிகுவொளி வெளியியல் மெய்நிலை கூட்டும்
மூலக் கலையால் மெய்நிலைத் திறத்தால்
கோலச் செங்குடி பைங்குடி நோக்கி
ஐங்குடி யியலுறும் ஆநிலம் ஆறும்
அங்குறும் முச்சுடர் அறுசுடர் நோக்கி
அகவின் னாற்றலால் அண்ட மாக்கலை
அகத்துணர் வுற்றே நெறியுற் றாய்தல்
ஒளிக்கலை நெறியுறும் உயிரியல் செந்நெறி
வெளிக்கலைக் குறியுறும் உயிரியல் மாநெறி
அண்ட மாய்அறி கலைதெரி மக்களே 698

ஐந்தியல் மூலம் அறிவியல் மெய்க்கலை
ஐந்துறும் திறனே எண்ணியல் திறனிலை
மூலப் புள்ளி முன்னிய நல்கும்
காலக் கலைநிலை கணக்கியல் கூட்டும்
இமைப்பொழு தியல்நிலை எண்ணுற் றெண்ணி
இமையா நோக்கின் உணர்வுற் றோங்கி
உள்ளுள் ளாயும் ஒருபெருங் கலைத்திறன்
விள்ளுறும் பொருள்நிலை ஒளியியல் நோக்கிக்
கால மாத்திறன் கண்டுணர் திறமும்
மூல மெய்நெறி விண்டுணர் ஆற்றலும்
முப்பொருள் முந்நெறி செப்புறும் இயல்நிலை
மெய்ப்பொருள் உணர்கலை எண்ணியல் தெரிந்தே
திட்பமும் நுட்பமும் செறிவுற் றாய்ந்தே
ஒட்பத் தியல்நிலை ஒளிநிலைக் கலையியல்
ஒளியுணர் வொன்றே உறுமியல் நிலைநெறி
வெளியுணர் நிலைகலை கலைத்திறன் ஆக்கும்
எண்ணிய லைந்தும் இயைபுற் றோர்ந்து
விண்ணுறும் ஆக்கம் நெறிமுறைத் திறனாய்
எண்ணி னியன்று முயன்றுறும் மூலம்
கண்ணொளிக் கலைநிலை கருத்துற் றோர்ந்து

விண்ணொளி ஒலியியல் தன்மை நிறிதி
ஒளிஒலி நுட்பம் ஒங்குற் றுணர்ந்தே
வெளிஒளி நிலைதெரி அறிநிலை யியலே
உணர்வுறுந் திறநிலை உள்ளுள் ளார்ந்தே
உணர்வா லறிகலை உணர்வா லுறுநிலை
உணர்வின் ஒர்தல் ஒளிநிலைக் காண்டல்
உணர்வெழும் ஆற்றல் ஒளியியல் தேற்றம்
உணர்வே ஒளியே மூலப் பொருளே
உணர்வின் திறத்தால் மெய்ப்பொருள் நாடி
அகவின் னோக்கல் ஐந்நிலை தெரிந்து
அகவின் னொளியா லைந்தியல் தேர்ந்து
அகவின் நுட்பம் புறவின் திட்பம்
அகத்தொளி ராற்றல் அகமும் புறமும்
மிகுத்துறும் மெய்நிலை தேற்ற முணர்ந்து
அறிவியல் நிலைதெரி யியல்நிலைக் கூற்றே 702

சித்திரம் ஓவியம் சிற்பம் செந்தமிழ்
மெய்த்தக வுறுநிலை உணர்வின் ஆய்ந்தே
பொருளறி மெய்ம்மை பொருந்த வுணரினும்
தெருநெறி வாற்றல் சிறுற மேவினும்
அகவின் னோக்கி அகத்தொளி யுணர்வால்
மிகுகலை காணார் மெய்ந்நெறி யோரார் 766

அகத்துணர் நோக்கி அருங்கலை நோக்கம்
அகத்துணர் இன்பே அரியபே ரின்பம்
அகத்தின் தூய்மை ஆற்றலின் சீர்மை
அகத்தால் நோக்கின் மிகுமொழி கூடும்
அகவியல் ஆற்றல் புறவியல் தேற்றம்
அகக்கலை நுட்பம் புறக்கலைத் திட்பம்
அகமே மூலம் புறமே காலம்
அகவியல் கண்டே புறவியல் நாடி
அகத்துணர் ஆற்றலால் புறச்செயல் புரிதல்
அகநிலை அறிந்தோர் மெய்க்கலை யியலே 821

உள்ளத் தாற்றல் ஊக்கமும் உணர்வும்

உன்னுதல் பெருநிலை ஒங்கல் பெருங்கலை
உள்ள முலமே உணர்வின் பெருந்திறன்
உள்ளங் காண்டல் ஒருநிலைத் திறனாய்
வில்லு மாக்கலை விண்கலை யியலும்
தெள்ளுறக் கண்டே சீர்நிலை நோக்கி
அகஒளி ஆற்றலால் புறவொளி நோக்கி
அகத்துள் நெறிநிலை குறிநிலை ஆய்ந்தே
உள்ளத் தூய்மை ஒருங்குற் றாய்ந்தே
தெள்ளுங் கலைநிலை எண்கணக் கியலாய்
எண்ணெண் ணியல்தெரி நிலைக்கலை யாற்றல்
விண்ணும் காட்டும் வெளிநிலை கூட்டும்
மண்ணும் காட்டும் மாக்கலை யாகி
விண்தமிழ் இயல்நிலை கலைத்திறன் கூட்டி
எண்தமிழ் இயல்நிலை எளிதின் நாட்டி
பண்தமிழ் ஒலித்திறன் ஒலியியல் அசையியல்
விண்தமிழ் கலைநிலை வளநிலைத் தெரிந்து
எண்ணும் எழுத்தும் இயல்புறக் காட்டி
கண்ணும் கருத்தும் கலைநிலை தோற்றி
பண்ணும் ஒலியும் பாங்குற் றுணர
விண்ணும் மண்ணும் ஒலியியல் ஓசை
அசைநிலை யாக்கம் ஒலியியல் தேக்கம்
நசையறக் காட்டும் மாநெறி வழக்கே 822

காண்டல் கருதல் கலைத்திறன் நோக்கல்
வேண்டல் நாடல் வினைத்திறன் இயற்றல்
தூண்டல் துலக்கல் தொல்பயன் நாடல்
காண்தரு பொருள்நிலை கலைநிலை இயலாய்
அகத்துணர் ஒன்றே அரும்பொருள் நெறியாய்
அகமே கலைபயில் நெறிநிலைக் கூடம்
அகத்துணர் கலையால் விண்கலை கூடும்
அகத்துணர் நெறியால் எண்கலை நாடும்
அகத்துணர் முலம் குறிப்பறிந் தாயல்
அகக்கலை நுட்பம் பெருங்கணக் கியலால்

அகக்கலைத் திட்பம் நெடுங்கணக் குணர்த்தி
அகக்கலை யாற்றல் குறுங்கணக் குணர்த்தும்
அகக்கலை யியலாய் மெய்ந்நிலை யறிவோர்
அகத்துணர் வோங்கி ஐந்நெறி யாய்வரே 823

உள்ளமும் வாக்கும் ஒருவழி நோக்காய்
விள்ளும் உணர்வும் விளங்குறும் ஆற்றலும்
எண்ணமும் எழுச்சியும் இயல்புறும் ஆற்றலும்
திண்ணமும் வலிமையும் சீர்மையும் நேர்மையும்
ஆக்கம் கருதி அருவினை நாடலும்
நோக்கம் கருதி நுண்ணுணர் இயல்நிலை
எண்ணிலைக் கலையாய் உள்ளகம் நோக்கி
எண்ணியல் ஆற்றல் மூலப் பொருள்நிலை
அகவெளி மொழிநிலை ஓங்கலை இயலாய்
அகத்துணர் வோங்கி ஞாலம் காண்டல்
அகத்துணர் வியலும் புறநிலை யியலும்
அகத்துணர் நிலைக்கலை அருங்கலை மூலம்
அகமே ஞாலம் அகமே விண்ணாய்
அகமே உயிரொளி மெய்ந்நிலை ஓர்ந்தே
அகத்துறும் மாற்றம் மிகுத்துற நோக்கி
பகுத்துறும் திறனெறி பெருநிலை இயலாய்
வகுத்துறும் மெய்க்கலை வகையுற அறிந்தே
தொகுத்துச் செயல்புரி தூய்மை மாந்தர்
காலம் கண்டே காலம் நோக்கிக்
காலம் முடுக்கிக் காலம் வென்றே
ஞாலம் ஆள்வர் நற்றமிழ் நெறியால்
கோலக் குறிப்பின் மயன்நெறி காண்பரே 831

சிற்பம் ஓவியம் சித்திரம் தேர்க்குறி
பொற்புறு மெய்க்கலை பொருந்துறும் ஆய்வால்
குறிநிலை ஆய்ந்து நெறிநிலைத் திறத்தால்
அறிகலை இயலுறும் ஆக்கம் ஓர்ந்து
நெறியுறும் திறத்தால் நிலையியல் நாடி
குறியும் நெறியும் குறிக்கும் முறைமையால்

சீர்குறி நேர்குறி சித்திரக் குறியும்
கார்க்குறி விழிக்குறி கைக்குறி மெய்க்குறி
குறிநிலை முற்றும் குறிப்புற் றாய்ந்து
குறிப்பின் ஓர்ந்து நெறிநிலை யாய்ந்து
எண்முறை ஆக்கம் இனிதின் நாடி
விண்கலை இயலால் விளக்கம் தேர்ந்து
ஐந்தும் ஐந்தியல் சிற்றவை நாடி
ஐந்தியல் நாற்புறத் தியல்நிலை தேர்ந்து
காலமும் மூலமும் கடிதின் உன்னி
காலக் கணக்கியல் மூலப் பொருளும்
கால மாநெறி இயல்நெறித் திறனும்
கால விரைவியல் நுட்பமும் ஆய்ந்து
காலங் கருதி கருத்தின் நோக்கி
மூலப் பொருள்நிலை முன்னி முன்னி
மூலமும் இயலும் முக்கலை ஆய்ந்து
மூல மாப்பொருள் முப்பொருள் தேர்ந்து
நெடிதின் உணர்தலும் கடிதின் ஆய்தலும்
படிநெறி நோக்கி மெய்நிலை அறிதலும்
குடிநிலைக் கலைதிகழ் கூர்த்தமா மதியால்
குடியியல் சீர்நெறி நேர்நிலை மாக்கலை
கலைமுழு தியல்நெறி கணக்கின் ஓர்ந்து
நிலைமுழு தைந்தியல் நெறிமுறைத் திறத்தால்
உற்றுணர் வோங்கிக் கற்ற மாக்கலை
தெற்றென் றுணர்ந்து சீர்நெறி நோக்கி
உள்ளும் புறமும் ஒன்றென் றுணர்ந்து
விள்ளும் சீர்மதித் திறனியல் நோக்கி
தெள்ளு மாத்தமிழ் சீரறி வுற்றே
விள்ளுறும் பேரறி வியனிலை தேர்ந்தே
பேரறி வியலால் சீரறி வாக்கம்
நேரறித் திறனும் நிலைமதிக் கலையும்
ஒளிமதித் திறனுற உள்ளுற் றாய்ந்தே
வெளிஒலி இயலால் விண்கலை நெறியால்
கனிகொளும் மெய்க்கலை கணக்கியல் தேர்ந்து

அளியுறும் ஐந்தியல் எண்ணிலை நோக்கி
எட்டெட் டியலால் நெறிமுறைக் கருதி
எட்டும் ஐந்தும் இயல்புற நோக்கிச்
சிற்பம் ஓவியம் செந்தமிழ் மாநெறி
பொற்புறும் சிற்றவை புனிதமா நெறியால்
உள்ளூறும் உணர்வால் ஓங்கிய திறனும்
தெள்ளூறும் சிர்க்கலை நுட்பமும் மதியும்
அகத்துணர் வுற்றே அருங்கலை யாய்ந்து
வகுத்தும் பகுத்தும் தொகுத்தும் நோக்கி
மிகுத்துக் கூறும் மெய்க்கலை மெய்ப்பொருள்
வகுத்தே விளம்பல் மயனெறி இயலே 839

குறிநிலை நோக்கி நெறிநிலை ஆய்ந்தே
அறிகலை யியலால் ஐம்புலன் ஐம்பொறி
சீர்நெறி நோக்கிச் சிரறி வுற்றே
தேர்நெறி ஆய்ந்தே பேரறி வோங்கி
நேர்நெறி ஆற்றலால் கூரறி வுணர்வால்
ஓர்நெறி நுட்பம் ஓங்குறுங் கலைநிலை
இயலுறும் ஒளிமதி மயலற வோர்ந்து
செயலுறும் ஆக்கச் சீர்நெறி யோர்ந்து
ஊக்கமும் உணர்வும் ஒருங்குறும் உழைப்பால்
நோக்கமும் நுண்மதி மாறா யியல்பால்
தேக்கமும் தெளிவும் செறிவுற ஆய்ந்தே
ஆக்கங் கூட்டும் அறிவியல் மெய்க்கலை
கலைநிலை கணிநிலை காலந் தேர்ந்தே
நிலைநெறி எண்ணிலை நெறிப்படத் தேர்ந்தே
எண்மு வியல்நெறி எண்கலை நோக்கி
உண்முகங் கண்டே விண்முகம் நோக்கி
அகவின் புறவின் னொளிநிலைக் கலைத்திறன்
அகத்துணர் வொன்றே மிகுபே ரறிவால்
ஊழை வெல்லும் உறுதியும் நல்கி
பாழை நீக்கும் பண்புயர் வோங்கி
ஆழ்மதி அறிமதி அகல்மதி யியலாய்

வாழ்மதிக் கலைத்திறன் வளர்க்குமா நெறியே 870

அகத்துணர் வோங்கி அறிகலை நுணுக்கம்
மிகுத்துறும் திறனால் மிகுமதி நுட்பம்
உற்றுறுங் கலையியல் ஒருங்குற நோக்கித்
தெற்றுறும் விண்ணிலை விண்ணொளி யியற்றிறன்
ஆடலான் கலைநிலை அருளியல் அறிவியல்
நாடரும் மெய்க்கலை நண்ணுமெய்ப் பொருளியல்
ஒளியால் அறிந்துணர் ஒள்ளியல் நெறியியல்
வெளியாற் கண்டுணர் விண்நிலை வான்பொருள்
அகவிண் அகவெளி அகவான் நோக்கி
அகத்துணர் மெய்க்கலை ஐங்குடில் அறுநிலம்
அகவெளி யியற்பொருள் வான்பொருள் சேயொளி
அகத்துறும் நுட்பம் புறத்துறும் திட்பம்
வான்பொருள் ஆடலான் வையமெய்க் கலைநிலை
வான்நிலம் நீர்அனல் வளியியல் அறிந்தே
அண்டமும் பிண்டமும் குறிநிலை இயலாய்
எண்டிசை முலத் தென்றிசைக் குறியியல்
ஒளிவெளி யியலால் யோங்குறும் ஓம்உரு
வெளிஒளி நிலைக்கலை விளக்கும் விண்ணெறி
எண்ணெறி யியலாய் நுண்ணறி வுற்றே
எண்கலை எண்முகம் தாள மாக்கலை
நுண்ணுணர் வுற்றே நுட்பமும் ஆய்ந்தே
எண்ணுணர் கலைநெறி விண்கலைத் திருநெறி
பெருவெளி யியற்றிறன் பெருநிலை யாக்கம்
ஒருவெளி வான்வெளி உள்ளொளி அகவெளி
நோக்குற நோக்கி அகத்துணர் வோங்கி
ஆக்குறுங் கலைநெறி எண்ணெண் ணியலே 875

ஐந்தியல்

ஐம்புலன் ஆற்றல் அமைவுறுந் திறத்தால்
செம்மொழி இயல்திறம் உள்நிலை ஓர்ந்து
மெய்ம்மொழி ஓம்முதல் எழுத்தியல் நாடி
ஐவகை ஆய்தல் பெருங்கலைத் திறனே 50

ஐந்திணை யியலே ஐந்துறு மரபே 59

கோட்டியல் வடிவும் புள்ளியுங் குறியும்
நீட்டுறும் இயலாய் நிகழும் நெறியே 60

ஐந்தியல் தமிழே உணர்கலை ஆற்றல் 84

ஐந்தியல் அமைவுறும் அந்நிலை இலங்கி
ஐந்தெழுத் தியலுறும் ஆற்றலாற் றிகழும்
செந்தமிழ் உயிரெழுத் தைந்திறத் தாலறி
ஐந்திறத் தியலை அறைவதின் னூலே! 108

நெடிதுறும் கோட்டு நிலையியல் வன்னம்
கடியியல் ஐந்தும் குறிப்பதும் இயல்பே! 116

ஐந்தொழில் மெய்த்திறன் அகமுற உணர்ந்தே
வந்துறும் காலம் வகுத்தறி செயலால்
எண்ணெண் பருநெறி எண்ணெண் நுண்ணெறி
ஐந்தைந் தியலும் குறித்திறன் ஓர்ந்து
வந்துறும் உணர்நிலை வழிகுறிக் கும்மே 134

எண்ணெண் நாற்புறத் தியலாய் விரிந்தே
அண்ணுறும் நாற்புற நடுவொன் றியலாய்
எண்ணுறும் நாற்புற விரிவுங் கூடி
எண்ஐந் தியலா யைந்நிலை கூறும். 156

மூலம் அறிந்தார் ஐந்நெறி காண்பரே 197

நூற்றிறன் பொதுணிலை மெய்த்திறன் நாடுபு
ஐந்தியல் நுண்மை அகமுணர் திட்பம்

வந்துறும் புறத்தியல் மாக்கலை இயலும்
எழுத்தே சொற்பொருள் கட்டும் அணியும்
வழுந்தும் ஒளிஒலி முலமா நெறியும்
எட்டின் பிறழ்வே இயல்நிலை ஓங்கி
விட்டுறும் ஓம்கலை வியனுறு மொழிநிலை
ஒளிமொழி முதலெழுத் தியற்கலை நுட்பம்
தெளிவுறும் திண்மை எண்மை சிறப்புறும்
ஐந்நெறி ஆக்கமும் ஐங்கலை நோக்கமும்
செந்நெறி முலத் திருநெறி யாயுறும்
எண்ணுறும் முலம் விண்ணுறுங் கோலம்
நண்ணுறுங் காலம் நவையிலாச் சீலம்
விண்டுறும் ஞாலம் ஐவகை விளக்கி
தண்டமிழ் ஐந்தியல் சாற்றினன் நெறியே 202

ஐந்திணை செந்தமிழ் வாழ்வியல் நெறியே 208

நீர்நிலம் நெருப்பே வான்காற் றைந்தும்
தேர்நிலைக் கலைத்திறன் சீர்நெறி முடிபே 226

ஆறறி நுணுக்கம் ஐந்தியல் நுட்பம்
ஊறறி யாத்திறன் ஒழுக்கத் திட்பம்
வேறுவே றியலும் வெளிநிலைக் கலையும்
கூறுகூற் றியலுறும் அறுபான் நான்கின்
மாறிலா எண்ணிலை எழுத்தியல் நோக்கி
ஈறிலா ஐந்துமைந் தியல்நிலைச் சுழலல்
ஐந்துமைந் தியலால் நாற்புற நடுவண்
ஐந்தும் புள்ளி மெய்க்கலைத் திறனுற
சுழலல் விரைவே சுற்றுறும் திறனாய்
சுழலல் விரைவே காலக் கூற்றாய்
உந்துறும் காலத் தியலறி வாற்றல்
தெள்ளுற நொடிநொடி சிறுநொடி யறிந்தே
வி்ள்ளுவர் காலத் தியலறி மாண்பாய்
துள்ளு கலைத்திறன் எட்டின் பிறழ்வால்
ஒம்ஒலி ஓம்ஒளி ஒருங்குறக் காண்டலும்
ஓம்கலை முதற்றிறன் ஒருமொழித் திறனுற

விண்மொழி நுட்பம் அகவின் னாய்ந்தே
என்மொழிக் கலைத்திறன் புறவின் நோக்குபு
விண்கலை என்கலை நுண்கலை முயலல்
தெண்கலை அறுபான் நான்கின் இயல்பே 241

விண்பொருள் விழுப்பம் உணர்ந்தோ ராகி
எண்பொருள் எண்ணி இயலுற நிற்பர்
தண்டமிழ் நூலுணர் கலையுறும் மேலோர் 242

என்னைத் தியலால் வண்ணம் ஓர்ந்தே
விண்கலை நெறியால் என்னிலை நுனுக்கம்
என்னுற நோக்கி உருவத் தியலை
தின்னுற வரையும் சீர்நெறி ஆய்ந்தே
எழுத்தியல் குறியும் நெறியும் குறிக்கும்
வழுத்து மாநெறி உருநிலை ஆக்கம் 244

முப்பொருள் முக்கலை ஐந்நெறி ஐந்தியல்
செப்பும் ஐந்திறம் செந்தமிழ் நெறியால்
சிற்பம் ஓவியம் கணக்கியல் வரைவியல்
உற்றறி விண்ணெறி காலமா வியலும்
தெற்றுற விளக்கி சீர்சால் நுட்பம்
பெற்றுறின் விண்மொழி தொழிற்கலைத் தமிழாய்
விளங்குறும் தன்மை விளங்கக் கண்டே
வளர்கலை ஐந்தியல் வண்டமிழ் ஆய்வரே 245

மெய்யுணர் திறனால் ஒளிநிலை யோர்ந்து
ஐந்தியல் ஐங்கலை ஐந்நெறி ஆய்ந்தே
காலத் தியலைக் கடிதின் உணர்ந்தே
மூலம் உறுநிலை திறமுறத் தெரிவர்
என்கலைத் திறனை இனிதுணர் வோரே 253

நாற்புறத் தியல்நெறி சுழலலும் ஐந்தே
ஆற்றுறும் ஆற்றலா லியங்குறும் இயக்கம்
தோற்றுறும் வலித்திறத் தியலுறும் முயக்கம்
ஏற்றுறும் எட்டின் பிறழ்நிலை ஆடலான்
தேற்ற மாயொளிர் நிலைகலை நுட்பம்

விற்றுறும் திறனே ஊன்றுறும் திட்பம்
சுழலல் விசல் திறனுறும் நெறியாய்
ஆடலான் நெறிநிலை அறிகலை யுணர்வே 276

முயக்கமும் இயக்கமும் இயங்கலும் உணர்ந்தோர்
இயக்கும் ஐந்தொழில் நுட்பமா யறிவர் 277

எண்ணெண் கலைநெறி விண்ணெறி யறிந்தோர்
நுண்ணுறும் ஐந்தொழில் நுணுக்கம் ஆய்வரே 278

ஐந்தொழில் நுட்பம் எண்ணெண் கலையாய்
ஐந்தியல் மொழியால் நெறிமுறை அமைத்து
ஐயைந் தியலால் அறுபான் நான்கின்
உய்வுறக் காணும் உயிரொளிக் கலையே 279

மாநெறி நுட்பம் மயக்கறக் கண்டே
தூநெறித் திட்பமும் துலங்க வுணர்ந்தே
எண்கலைப் பெருக்கம் நுண்கலை உணர்த்த
விண்கலை யியல்வெளி ஒளிஒலி தெரித்தே
எண்ணெண் நாற்புறத் தியல்வெளி யூடும்
நுண்ணருந் திறனுற நுணுக்குறத் தேர்ந்தே
ஐந்துமைந் தியலா யியங்குறும் மெய்த்திறன்
முந்துற் றுணர்செறி முழுமதிச் செழுங்கலை
ஐந்தியல் பொருளியல் அருங்கலை ஆக்கம்
ஐந்திறத் தியல்நெறி நூலுணர் நெறியே 286

நேர்க்கோட் டியலே நெறியெழுத் தாக்கம் 336

நேர்க்கோட் டியல்நெறி யைந்நிலை யுணர்த்தும் 337

ஐவகைக் கோடும் மெய்வகைப் புள்ளியும்
உய்வகைத் திறவலி யுண்மை யுணர்த்தும் 359

நேர்க்கோட் டெழுத்தியல் நிலைநெறி கூட்டினும்
வளைக்கோட் டியலே வடிவெழில் கூட்டும் 360

ஐங்குறித் தன்மை யகத்து ளுணர்ந்தே
பெருக்கமும் சுருக்கமும் பெரிதும் நாடி

பருநெறி நுண்ணெறி உணர்முறை தெளிந்து
நோக்குநர் நோக்கால் நுவல்வன நுதலி
அறிதல் மெய்க்கலை உணர்வொளி மூலமே 366

நேர்க்கோட் டியலே நெடிதுற நினைத்து
சீர்நெறி எண்ணெண் கலைத்திற னுற்றே
சீர்நிலை நுண்பொருள் செவ்விதி னோர்ந்து
நேர்க்கோட் டியலின் ஒண்முறை யோர்ந்தே
கோட்டுறுங் குறிநிலைப் புள்ளிக் குறுக்கம்
நீட்டுறும் இயல்நெறி நெறியுற நோக்கி
எழுத்தியல் எண்ணிலை இலங்குறத் தேர்ந்தே
வழுத்து மைந்தியல் மரபியல் வழக்கே 372

பாவி நடத்தலின் பாட்டென லியல்பே 376

பாட்டும் பொருளும் பகர்நெறிப் பொருளும்
ஏட்டி னியலும் தூக்கும் நோக்குபு
பாட்டுறும் மெய்ம்மை நிலைப்பொருள் நிறீஇ
அருந்தமி ழைந்தியல் பொருந்துறுங் கலையாய்
கருத்துற நோக்கல் கலைநெறி வழக்கே 377

முறைநெறி வைப்பே முன்னிய கிளக்கும் 378

நெறிமுறை யறிந்தோர் நினைவுறத் திகழ்ந்து
குறிமுறை யறிந்தோர் குறிப்பினுக் கணியாய்
அறிகலை யாற்றல் அருந்தமிழ்த் திறனே
நெறிமுறை கிளக்கும் நிலையியல் நெறியாய்
பெறுமுறை வகுத்தனர் பேரறி வுற்றோர் 379

நீர்மையும் சீர்மையும் நெறிவிளக் கும்மே 382

மாநெறிச் சீர்நெறி மயக்கற வுணர்ந்தே
தூநெறி யைந்தியல் சொற்பொருள் தேர்ந்தே
ஐங்குறி நெறியால் அருங்கலை யெண்ணியல்
விண்ணெறி யாக்கம் விளங்குபு நோக்கி
எண்ணெண் ணியற்கலை விரைவுறுங் காலம்
நுண்ணிதின் ஓர்ந்தோர் கால மாண்வரே 385

ஐந்திய லைங்கலை யைந்நெறி நோக்கி
ஐங்குறி யைங்குறில் ஆய்ந்துணர் நோக்கால்
ஐயைந் தியலும் அறுபான் நான்கின்
மெய்க்கலை நுண்பொருள் மெய்யுற் றுணர்ந்தே
ஐயமுந் திரிபும் களைந்துறு மாற்றலால்
மெய்ப்பொரு ளென்னும் யெண்கலை விளங்கும் 393

குறித்தியல் நெறியே குறிப்புண ராக்கம் 395

ஐந்தொழி லறிந்து மெய்யுணர் வுற்றோர்
முந்துறுங் கால மிடம்பொரு ளோர்ந்தே
காலமும் மூலமும் சீலக் கோலமாய்
ஞாலத் திறனும் நவையறத் தெரிந்தே
நுட்பங் காண்பர் நுண்ணுணர் வோரே 397

நூற்பொருள் நுதலிய ஐம்பொருள் நெறியும்
நூற்றிறம் விளக்கும் ஐந்திய லைந்தினை
நூற்பாப் பொருட்டிறன் நுண்ணிதி னோர்ந்தே
நூற்பொரு ளாயல் நெறியோர் மரபே 400

ஐம்பொருள் செம்பொருள் மெய்ப்பொருள் ஒர்ந்தே
ஐந்நெறி ஐந்தியல் ஐங்குறித் திறனாய்
ஐயைந் தியலும் அறுபான் நான்கின்
மெய்முதற் பொருட்டிறம் நுண்ணிலை தெரித்தே
புள்ளி மூலப் பொருள்மெய் யாய்ந்துணர்
தெள்ளுறும் சீர்நெறி எண்ணிலை விளக்குபு
எண்ணெண் ணியல்நிலை மூலத் திறத்தால்
விண்ணுறும் நெறிமுதற் பொருள்நிலை விளங்கி
உண்முகம் நோக்கும் உணர்வுறுந் திறத்தால்
எண்முகத் தீர்ப்பியல் இயல்நிலை துலங்க
எட்டியல் நிலைநெறி கலைநெறி யுணர்ந்தே
விட்டுறும் மெய்நிலை மெய்ப்பொரு ளுணர்த்தும் 401

மூலத் திறனே முப்பொரு ளாக்கம் 405

மூலங் குறிக்கும் முப்பெரு மியலும்

கோலத் தியலறி குறிப்பி னோர்ந்து
ஐந்தியல் தேற்றம் அகவொளி நுணுக்கம்
ஐங்குறி மருங்கின் சுழல்நிலை யாற்றல்
தந்துறு மொடுக்கம் ஒடுக்கத் துண்மை
முந்துறும் நெறியால் முறையுறக் கிளத்தி
வந்தமாப் பயன் வகையுறத் தெரித்தே
செந்தமி ழொளிநிலை யியலுறத்தேர்ந்தே
ஐங்கலை யைந்திறன் அணுகுறும் நுணுக்கம்
தந்தமுந் நெறியால் அணுஅணு வோர்ந்து
அணுவணுத் திரளே மெய்க்கலை மூலம்
நுணுக்குற நோக்கி நுவலரும் மொழியால்
தேர்ந்துணர் மெய்ந்நிலை எண்ணொண் நெறித்திறன்
ஓர்ந்துணர் மதியோர் உணருவ திறனே 406

கருத்திற் கருதும் கருப்பொரு ளோர்ந்தே
பருப்பொருள் நுண்ணியல் பொருள்நிலை தெரித்தே
பொருளறி திறத்தால் விழுப்பொரு ளாய்ந்து
தெருளுணர் வுற்றுக் கோடல் சீர்நெறி
அறிநிலை கலையா லாய்முறை யாய்ந்தே
செறிநிலைப் பொருண்மை செப்புவ தியலே 413

அரும்பொருள் மெய்ந்நெறி யருங்கலை யுணர்ந்தே
வரும்பொருட் காலம் இடநெறித் தேர்ந்தே
முப்பொருள் முந்நெறி முக்கலை நோக்கி
செப்புவ தியல்நெறி யைந்தியல் மூலம்
ஐங்கலை மெய்த்திறன் நெறிநிலை யோர்ந்தே
தங்குறும் பொருளியல் சாற்றுமா நெறியே 425

நிலம்நீர் நெருப்பே காற்றும் வெளியும்
புலமுறை நோக்கிப் பொருந்திய லாய்ந்து
வலமிடம் தெரிந்தே வருங்கலை யுணர்வால்
புலநெறி சான்ற மெய்ப்பொருள் நோக்கி
ஐம்பொரு ளைங்கலை யைந்நெறித் திறத்தால்
ஐயைந் தியலை நெறியுறத் தெரிந்தே

நோக்கு நுண்மதி நுட்பமுந் தேர்ந்தே
நோக்கல் விண்ணொளி அகவொளித் திறனாய்க்
காண்டல் கருதல் கருத்துற நோக்குபு
வேண்டிய வைந்தொழில் விரைவி னியற்றல்
ஐந்நெறித் திறனால் அறிவுறு மெய்க்கலைச்
செந்நெறி யுணர்வால் மாநெறித் திறனுறும்
உண்முகம் நோக்கி உணர்வி லுரைத்தனன்
எண்முக ஈர்ப்பின் இயல்நிலை யறிந்தே 428

பாடல் இசைநெறிப் பண்புற நோக்கி
நாடல் மெலிதல் நலித்தற் படுத்தல்
ஒங்கல் ஒடுங்கல் நிலையுறும் நெறியாய்
ஒங்குறு மிசைநெறி நுட்ப முணர்நதே
ஐந்திசை நுட்பம் செந்தமிழ்த் திட்பம்
முந்துறுஞ் சிற்ப முகட்டை யாய்ந்தே
உண்மை யுறுபொருள் ஒருங்குறத் தேர்ந்தே
நுண்மை நோக்குநர் நுண்ணிசை யறிவரே 453

ஐந்தியல் முறைதெரி யைந்தவி யான்றோர்
செந்தமி ழிசைநெறிச் சிற்ப மோவியம்
முந்துறுங் கலைநெறி முறைமையி னுணர்ந்தே
செந்தமி ழியலால் தெரிந்துறு மாற்றல்
உணர்வொளி யோங்கி உன்னுந் திறத்தால்
உணர்நெறி யாற்றல் ஒங்குற் றிலங்கி
அவைக்களங் கண்டோர் அருங்கலை யாய்வராய்
ஒண்மை யொளிர்கலை உணர்வுற் றோங்கி
நுண்மை தெரிந்தே நோக்குறும் நோக்கின்
உட்கலை நிலைத்திறன் ஒருங்குற வுணர்ந்தே
எட்டியல் நெறித்திறன் எண்முறை மருங்கின்
இயல்நெறி முயக்கம் இயங்கலும் நோக்கி
இயக்கத் தியலும் எட்டியல் மாற்றமும்
பேரறி வுற்றும் பெட்புற நோக்கிச்
சீரறி வாற்றல் தெரிநிலைக் கலையே 458

எண்ணிலை யைந்தியல் நாற்புறத் தியலாய்
எண்ணொண் திறமுற எண்ணொளி விசி
விண்ணொளிர் நுட்பம் விளங்குறத் தோற்றி
நண்ணுறு மறுபான் நான்குறும் மெய்ந்நிலை
உள்ளூற் றுணர்ந்தே ஓங்குறு மாற்றல்
விள்ளுறு மைந்தைந் தியல்நெறி தெரிந்தே
காலச் சுழல்நிலை விரைவி னியக்கம்
மூலப் புள்ளி முற்றுந் தோற்றி
எண்ணிலை விளக்கம் இயல்பெறக் காண்டலே 459

களமுங் காலமுங் கருத்துறு மாற்றலும்
உளமு முணர்வு மொருநெறி யுற்றோர்
ஐந்தியல் நெறியால் செந்தமி ழாய்வரே 464

தேர்க்கொடித் தேர்த்துகள் பொழுதியல் விரைவும்
தேர்க்கலை நிலையும் தேர்மொழி யியலும்
தேருருத் தோற்றம் தேரொளித் தேற்றம்
நேருரும் உணர்வால் நிலையுறக் கண்டே
காலம் ஓர்ந்தே கலையியல் உன்னி
மூலப் பொருள்நிலை முன்னியும் ஓர்ந்தும்
அண்டமும் பிண்டமும் ஆய்பொருள் உணர்ந்தே
விண்ணும் மண்ணும் விரைவுறக் குறித்தே
எண்ணும் விண்ணும் இயைபுற நோக்கிக்
கண்ணும் விண்ணுங் காணப் பெறுவோர்
மூலம் ஐந்தியல் முற்றும் உணர்ந்தே
ஞாலம் உணர்தலும் சீரறி வாரே 515

பொருளறி யியல்தெரித் தெருண்மை யோர்ந்தே
பொருளிற் பெருநெறிப் பெரும்பொரு ளாக்கம்
நுண்பொருள் பருப்பொருள் விழுப்பொருள் செம்பொருள்
எண்பொருள் கலைப்பொருள் மொழிப்பொருள் இலங்கி
ஐந்தியல் மூலம் எண்ணறி வாற்றல்
ஐந்துறும் மெய்நிலைத் தெரிவுற விளக்கும் 534

எழுநிலை எண்கலை ஐந்தியல் அறுவகை

பழுதற உணரின் செழும்பொருள் நெறியே 546

எழுத்து சொற்பொருள் கூட்டணி யைந்தும்
வழுத்து மாப்பொருள் மெய்க்கலை யுணர்ந்தே
ஐந்தியல் நெறிக்கலை மெய்யுற் றுணர்ந்தே
செந்தமிழ்ச் சிற்பம் ஒவியங் காண்டல்
முந்துறுந் தொன்மர பியல்நெறி யியலே 547

பண்டுறுந் தமிழ்நெறி ஓவியம் சிற்பம்
கண்டுறுந் தமிழொலி ஒளிக்கலை தெறிநிலை
விண்டுறும் இன்னிசை நடத்தியல் நெறியும்
கொண்டுறும் உணர்வால் குறிப்புற் றாய்ந்தே
தண்டமி ழியல்நெறி சிற்பமா மொழியால்
தென்தமிழ் மூலம் ஒமெனும் ஒளிநிலை
மூலப் பொருள்நிலை முன்னி யுணர்ந்தே
ஞாலம் அறிந்து நற்றமிழ் நாடி
தமிழிசை ஐந்திசை ஏழிசை நுட்பம்
இமிழிசை இயம்பல் நுட்பம் தேர்ந்து
உமிழொலி அமிழொலி குமிழொலி நோக்கி
அமைவுறும் ஐந்திசைச் சிற்பம் நோக்கலும்
ஒவிய வண்ணம் வனப்பெழில் காண்டல்
மேவுறும் நடத்தியல் மென்மை வளைவியல்
பண்டுறுந் தமிழ்நெறி தென்றிசை நிலைக்கலை
தண்டமிழ் ஐந்தியல் தகைவுறச் சாற்றுமே 566

ஐந்தியல் ஐந்நெறி மெய்நிலை ஓர்ந்தே
முந்துறும் ஒளியியல் முறைமையின் தேர்ந்தே
எண்ணொளி யியலுறும் எண்ணியல் நுணுக்கம்
விண்ணொளி மூலக் கதிர்நிலை நுணுக்கம்
உள்ளூற் றோர்ந்தே மெய்ந்நெறி ஆய்ந்தே
விள்ளூறும் கலைநிலை மூலத் தெழுநெறி
ஐங்குடி யியலின் நெறியறிந் தியலும்
தங்குறும் ஐம்பொருள் தனிநிலை யுணர்ந்தே
ஒருபொருள் ஐந்தியல் எண்ணிலை நுட்பம்
வருபொருள் தெளிநிலை நுணுக்கம் ஆயல்

உள்ளும் புறமும் உணர்ந்தினி தாய்ந்தே
உள்ளொளி மூலம் ஒளிக்கதிர் ஆயலே 573

செம்பொருள் மெய்ப்பொருள் சீர்நிலை தெரிந்தே
ஐம்பொருள் நுட்பம் அகத்துணர் வுற்றே
நெறிமுறைக் கலைத்திறன் நீள நினைந்தே
அறிகலை யியல்தெரி ஆற்றல் பொருந்தி
குறிப்பின் உணர்ந்தே குறிப்பின் உணர்த்தல்
ஐந்தியற் கலையின் மெய்நிலை என்றே
செந்தமி ழியற்கலை செப்புறும் உண்மை 596

உறுமுறை நுட்பம் உணர்கலைத் திட்பம்
பெறுமுறை அறிந்தே பெட்பின் நோக்குபு
தொன்மொழி ஐயொலி தீந்தமி ழாகி
நன்மொழி ஐயிசை நற்றமி ழாகி
இன்மொழி ஐயியல் இன்றமி ழாகி
தென்மொழி ஐங்கலைச் செந்தமி ழாகி
மென்மொழி ஐந்தியல் தென்றமி ழாகி
ஐயைந் தைந்தா யைந்தமி ழாகி
ஐந்நிலை ஐந்நெறி நுட்பமும் ஆயல்
எண்ணிலைக் கலையென் றியல்நிலை யோர்ந்தோர்
நுண்ணிதி னாய்ந்து நுட்ப முணர்ந்தோர்
அறுபான் நான்கின் பெறுமுறைத் திறத்தால்
உறுமுறை இயல்மொழி எண்ணியல் நோக்கிப்
பன்மொழி படைக்கும் மெய்த்திறத் தெண்ணியல்
தொன்மை நோக்கி ஆய்தல்மா நெறியே 607

குறுக்கல் நீட்டல் குறிமுறை கிளத்தல்
குறுமை நெடுமைக் கோட்டுருக் குறிநிலை
வரிவியல் வடிவியல் வகையுறத் தேர்ந்தே
தெரிவிய லாய்நிலை மாநெறிக் கலையே 628

ஐந்தியல் நெறிமுறைக் கலைத்திற னோர்ந்தே
முந்துறுந் சிற்ப மோவிய நுட்பம்
ஐந்துறும் நிலைகலை எட்டெட் டியல்திறன்

வந்துறும் மூலப் பொருள்நிலை ஆக்கம்
மெய்க்கலை நுட்பத் தியல்தெரி எண்ணிலை
ஐவகை யியல்தெரி நுண்ணிதி னோர்ந்து
செய்வகை செய்வினைத் திறனறி மூலம்
உய்த்துணர் பெருநெறி உட்கலை யோர்ந்தே
ஐங்குடி பைங்குடி செங்குடி நுட்பம்
தங்குறும் கருங்குடி வெண்குடி திட்பம்
அங்குறும் சிறுகுடி நுட்பந் தேர்ந்தே
பொங்கு மாயியல் மூலக் கலைநிலை
முற்றுற வோர்ந்தே முழுநிலைக் கலைநிலை
தெற்றுறும் ஆற்றலால் இருநிலை நோக்கி
அகவிண் ணிலைதெரி மெய்க்கலை யியல்நெறி
மிகுத்துணர் வாற்றல் விண்ணொளி நோக்குபு
நீர்நிலம் கனல்மண் விண்ணிலை நோக்கித்
தேர்க்கலை ஆக்கம் செறிவுறத் தேர்ந்து
ஒருநிலை எண்ணிலை உவப்புற நோக்கிப்
பெருநிலை எண்முகத் தீர்ப்பியல் ஆய்ந்து
வருநிலை உண்முகக் கலைநிலை திசைநிலை
திருநிலை ஐயைந் தியல்நிலைச் சுழலால்
விசைநிலைக் கணக்கறி விரைவியல் நோக்கித்
திசைநிலை ஆக்கம் தென்திசை இயலறி
மூலப் பொருள்நிலை முயன்றினி தாய்ந்தே
கால விசைநிலைக் கணக்கிய லோர்ந்தே
உழைப்புறும் உணர்வும் உறுதியும் ஆண்மையும்
இழைநிலை இம்மித் துளிநிலை மாறா
நெறிமுறை யுணர்வும் குறிமுறை நோக்கும்
அறிகலைச் செயல்நிலை புலனெறி ஆற்றலும்
ஓங்குற வோங்கு மொருநிலை ஆற்றலாய்
தேங்குறுந் திருநிலைச் சீல உணர்வால்
விண்ணிலை மண்ணிலை விரிதரைப் பெருவெளி
உண்ணியல் வெளிநிலை உவப்புற் றாய்ந்தே
கணக்கியல் நெறிநிலை கலையியல் நெறியாய்
கணக்கியல் எட்டியல் எட்டுறும் நிலைதெரி

என்முகத் திர்ப்பியல் விண்கலை விசைநெறி
உண்ணெறி யாற்றல் ஒங்குபு ஒங்கி
துண்ணென் றுணர்த்து சுழலு மாநெறி
விண்ணிலை யுணர்த்தும் மெய்க்கலை நிலைத்திறன்
கலைநிலை யியலாய் விண்கலை ஆயல்
நிலைநெறி விண்கலை மூலந் தெரிதல்
உண்முகத் தியல்தெரி ஒருநிலை ஆற்றல்
விண்முகத் தொளிநிலை விண்கலை இயலே 717

சிற்ப மாநெறி சிரியல் நெறிக்கலை
தெற்றுறும் எண்ணியல் எண்ணெண் திறனிலை
கற்ற மாக்கலை கருத்துணர் நெறியும்
உற்ற அளவியல் நூலுணர் மெய்யியல்
சொற்றுறுந் திறத்தா லையைந் தியல்நெறி
பெற்றுறும் மூலத் திறத்தியல் எண்ணிலை
கலைநிலை நெறியுணர் கணக்கிய லாய்ந்தே
நிலையறி வுற்றுணர் நெறிக்கலை மூலம்
மூலப் புள்ளி மெய்யுணர் வாற்றல்
மூலம் அறிந்தே மூலங் காண்டல்
மூலப் பெயர்நிலை பெயரியல் ஆக்கம்
மூல மியலல் இயங்கல் இயக்கம்
காலத் திண்ணெறி கலைநிலை இயலால்
கால நுட்பங் கடுகி ஓர்ந்தே
கால ஊழிக் காலத் திமைநிலை
கால நொடியியல் கருத்துற் றோர்ந்தே
காலத் தியல்நெறி கணக்கியல் மூலம்
மூல மாநெறி முன்னி ஓர்ந்தே
ஐந்தியல் சிற்பம் ஐந்திசைச் சிற்பம்
முந்துறுஞ் சிற்ப நெறியி னோர்ந்து
எட்டே எட்டியல் எண்ணெண் கலைத்திறன்
எட்டுறும் மூலத் தியல்நெறி யாய்ந்தே
முகடுறும் உண்மை முன்னித் தெரிந்தே
அகத்துணர் வோங்கி அறிவறி நெறியால்

எட்டியல் மூலம் எண்கலை ஆற்றல்
எட்டுறும் நிலைத்திறன் இயலணி தேர்ந்தே
மூலம் பொருந்தி மெய்யியற் கலையால்
கோலங் குறிக்கும் சிற்பம் ஆயல்
ஞாலம் மூலம் நடுநிலை நண்ணி
சீலத் தியலால் செறியு மாக்கலை
நாற்புறத் தியல்நிலை நடுவண் இயல்நிலை
ஆற்றல் விரைவே சுழல்நிலை ஐந்தாய்
ஐந்தைந் தியல்நிலை அழகுறும் நெறியே 719

நினைப்புறும் நினைப்பால் நெறிநிலை முன்னி
கனைத்தெழு மார்ப்புங் கருத்துணர் வோங்கி
வினையும் உணர்வும் விளைவும் நோக்கி
முனைப்பும் உளக்கமும் முன்னுவ தாய்ந்தே
காலங் கருதிக் கருத்துணர் வுற்று
மூலத் திறன்வலி ஐங்குடி யாய்ந்தே
கோலங் குறிக்கும் ஆறுறும் ஆநிலம்
ஆறுறு மியல்நிலை யைங்குடிச் செயல்நிலை
ஆறுறுங் கலைநிலை எண்ணெண் இயல்திறன்
விறுறும் ஆற்றலாய் விளைவுறும் உணர்வால்
கூறுகூற் றியலும் குறிப்புறத் திறனால்
மாறிலா எண்ணெண் ணியல்நிலை நோக்கி
எற்றுறும் காற்றியல் எண்ணெண் ணியல்நெறி
குடிநிலை ஐந்தும் குறித்துணர் மூலம்
நெடிநிலை குறுநிலை இடைநிலைத் தேர்ந்தே
ஒன்றுறும் உணர்வா லொன்றி விரண்டாய்
ஒன்றிரண் டாக்கம் உறுபயன் நோக்கித்
தொல்லுயிர் நல்லுயிர் படைநிலை யாக்கம்
பல்லுயிர்த் திறன்நெறி பெருநெறி யாய்ந்தே
உயிர்க்குலம் உயிர்நெறி உயிரினம் உயிர்ப்பே
உயிரியல் உயிரொளி உயிர்முறை யாய்ந்தே
செயிரறும் உண்மை திருநெறிப் பொதுநிலை
உயிருறும் ஆற்றல் ஒளிநிலை நோக்கி

உணர்வின் நிலைகலை நெறிநிலை ஆய்ந்து
கலைநிலை நெறிமுறை கணக்கியல் தேர்ந்தே
நிலைநெறி ஆற்றல் நாடுவ தோர்ந்தே
ஆற்றுறும் ஆற்றல் ஐந்தியல் நெறியால்
ஆற்றும் ஐங்குடி அறுநிலை யியலே 723

குடிபடை யமைச்சியல் குறிப்பன ஓர்ந்தே
நெடிதியல் நோக்கம் நீள நினைந்தே
நொடிநொடிக் காலம் நுண்மை யோர்ந்து
குடிகுறி யியலாய் ஐங்குடி செய்குடி
கருங்குடி வன்குடி பெருங்குடி ஆக்கம்
ஒருங்குறும் திறமுறும் உள்நிலை ஆர்ந்தே
புறத்தியல் குடிபடை அமைச்சியல் நோக்கம்
அறத்திறன் மாறா ஐங்குடித் திறமுற
ஐம்பே ராயம் எண்பெருங் குழுநிலை
செம்பொருள் ஐந்தியல் எண்ணொண் ணியலே 746

குடிநிலை அறிந்தோர் கூர்மதி நெறியால்
நெடிதுணர் ஆக்கம் நெறிநிலை யியலும்
படிமிசை ஆறியல் அறுநிலை யோர்ந்தே
குடிமுறை ஆக்கம் ஐந்தியல் நெறிநிலை
அடிமுதல் முடிநிலை ஆய்ந்துணர் நெறித்திறன்
கடிதின் நோக்கிக் கால விரைவியல்
கனலெழும் நிலையியல் கருத்துற் றோர்ந்தே
அனல்பொறி ஐந்தியல் ஐந்துறும் ஆக்கம்
மூலத் தியலெழும் முக்கலை முச்சுடர்
மூல மாநெறி முயன்றுறும் முயற்சி
கால விசைநிலை கணங்கணம் ஆய்ந்தே
கால மாறியல் நெறிமுறைத் தேர்ந்து
உற்றறி திறனால் உணர்கலை ஆய்ந்தே
தெற்றுறும் இயல்தெரிச் சீரறி வுற்றே
நுணுக்கம் நொடிநொடி இமைநிலை ஆர்ந்து
கணுக்கம் இம்மி துளிபொழு தாய்ந்து
என்னள வாக்கம் நெல்வள வுற்றே

தெள்ளள வியல்நெறி விரவுறும் அளவை
எண்ணியல் கால முல மாநெறி
தெண்ணியல் நிலைதெரி குடிநிலைக் காற்றியல்
காற்றுறும் வளிநிலை கடிதின் நோக்கி
ஆற்றல் ஆய்ந்து ஆற்றல் திறனுறும்
தேற்றுறும் மெய்ம்மை சிலத் திறனாய்
ஏற்ற மாக்குடி ஐங்குடி யியலே 747

ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே 803

ஏழ்வணத் தியல்பே ஐவணப் பெருக்காம் 804

முக்கலை முப்பொருள் முழுதுணர் திறத்தால்
முக்கலை முலம் மெய்யுணர் நிலையாய்
ஐந்தியல் ஐந்திசை ஐங்கலை ஐந்நெறி
வந்துறும் முல ஒளியியல் ஆய்ந்து
காலம் கணக்கும் கோல மாநெறி
முலமும் பொருளும் முன்னி உணர்ந்தே
எட்டெட் டியலால் நிலைநெறி யாற்றல்
எட்டுறும் கலைநிலை எண்முறை ஒர்ந்தே
நாற்புறத் தியல்நிலை நண்ணிய தோர்ந்தே
தேற்றமும் மாற்றமும் ஏற்றமும் தெரிந்தே
ஆற்றலால் அறிந்தே அகத்துணர் வுற்றே
வேற்றுறும் நிலைகலை எண்முத் திறமும்
முலத் துடிப்பும் காலத் துடிப்பும்
முல உணர்வால் முன்றுறும் மெய்க்கலை
முல இயல்நெறி நிலைகலை யாற்றல்
முலம் முதலாய் முளைத்த ஆறு
கோல மாநிலம் குறித்துறும் பொருளால்
ஐங்குடில் நிலைத்திறன் அகத்துணர் வோங்கிச்
செங்குடில் பைங்குடில் கருங்குடில் வெண்குடில்
ஆங்குறும் திறனும் ஈங்குறும் நிலையும்
ஒங்குறும் கலைத்திறன் ஒளிநிலை ஒர்ந்தே
ஒளிஒலி யியல்நிலை ஒங்குறும் திறத்தால்
வெளிஒளி நிலையால் விளக்கமுற் றாய்ந்தே

கண்ணொளிக் கலையொளிக் கருத்துறும் ஆற்றலால்
விண்ணொளி வியனொளி மேவுறும் திறனால்
எண்ணியல் நிலைத்திறன் விண்ணியல் கலைத்திறன்
எண்ணுறும் திறனிலை இயல்புறத் தேர்ந்தே
ஒருகலை இருநிலை முந்நெறி நாற்புறம்
வருகலை ஐந்தியல் அறுவகை எழுநிலை
எண்கலை மூலத் தியல்நெறி யாற்றல்
எண்ணிலைத் திறனால் இயக்கு மாநெறி
ஓமுறும் பொருள்கலை ஒளியுறும் ஒலியசை
ஓம்மறை ஓம்இயல் ஓம்கலை நெறியால்
மெய்ப்பொருள் நிலைநெறி இயல்கலை ஆற்றல்
மெய்யுணர் திறனால் ஐந்தியல் ஓர்ந்தே
உற்றுணர் திறத்தால் உள்ளொளி நோக்கி
கற்றுணர் மாநெறி கருதரும் கலையும்
நோக்குறும் நோக்கே நுணுக்குறும் ஆற்றல்
நோக்குறும் நுட்பம் மெய்ந்நிலை இயலால்
அகவின் நோக்கே அறிகலை ஆற்றல்
அகத்துணர் திறனே மெய்க்கலை மூலம்
உன்னுவ உன்னி உணர்நிலை ஆய்ந்தே
பன்னுவ பன்னி பகரரும் பொருளாய்
மூலச் செழுமறை முக்கலை யியலாய்
காலம் உணர்த்தும் கால மாநெறி
காலம் கருதி கருத்தில் உன்னி
காலம் நோக்கலும் கலைநிலை இயலே 843

தமிழியல் நுட்பம் ஐந்தியல் திட்பம்
தமிழ்க்கலை மூலம் சிற்றவை நுட்பம்
தமிழ்நெறி ஒளிநெறி மயன்நெறிக் கலையால்
தமிழ்நிலை யியல்வடி வுறும்நேர்க் கோட்டியல்
தமிழ்யற் சிற்பம் ஓவியம் கட்டிடம்
தமிழ்நெறி நுட்பம் தன்னிலை ஆய்ந்தே
ஐந்தியல் ஐந்திசை ஐந்நிலை ஓர்ந்தே
முந்துறும் செந்தமிழ் சிற்பம் ஓவியம்

கட்டிட வைந்தியல் தனித்தமிழ் ஐந்தியல்
எட்டியல் நிலையால் இயல்புற் றாய்ந்தே
ஒண்கலை நுட்பம் ஒங்குறும் கலைநெறி
எண்கலைத் திட்பம் எண்முறை எண்நெறி
நுண்ணறி வுற்றே விண்ணறி வார்ந்தே
எண்ணறி வியற்கலை இயலுமா நெறியாய்
நோக்குற நோக்கி நுவலுவ நுவன்றே
ஆக்குறும் மெய்நெறி பொருள்நெறி யியலால்
தமிழ்நெறி ஒளிநெறி தனிநெறி நோக்கி
தமிழ்மயன் நெறிக்கலை சாற்றல்மா நெறியே 849

ஐந்திற நுணுக்கம் மயக்கலை நுட்பம்
ஐந்திற யியல்நெறி செந்தமிழ்த் திறனெறி
ஐந்தியல் கலைநிலை அகத்துணர் வுற்றே
வந்துறு மாநெறி யியலல்மா நெறியே 850

ஐம்புலம் ஐந்நெறி ஐங்கலை யியல்தெரி
ஒம்பொருள் விழுப்பொருள் சீர்மை மாநெறி
செழுநிலை வளமுறும் நிலத்தியல் நீரியல்
விழுப்பொருள் நிலைக்கலை எரியியல் கூர்ந்தே
பருப்பொருள் ஆக்கம் பார்நிலை ஐம்பொருள்
கருப்பொருள் மூலம் ஐங்குடில் ஐந்நிலை
பொருளுறும் திறத்தால் மெய்ப்பொருள் நோக்கித்
தெருளியல் நிலைதெரிச் சீர்த்தமா மதியால்
ஆய்முறை ஆய்கலை அறிவியல் நெறிக்கலை
ஆய்தலும் உணர்தலும் அறிவியல் நெறியே 852

ஏழிசை இன்னிசை நிலையிசை நேரிசை
வாழிசை வளரிசை கலையிசைச் சீரிசை
ஐந்திசை நுட்பம் ஏழிசைத் திட்பம்
முந்துறும் அசைநிலை ஒலியியல் தேர்ந்து
இசைக்கலை நுட்பம் இன்றமிழ் இயலாய்
வசையறும் ஒலிநிலை மூலம் ஆய்ந்தே
ஒம்ஒலி ஒளியியல் ஒலியலை ஒலியிசை

ஆமுறும் குரலிசை ஒங்கிசை தேங்கிசை
கைக்கிளை விளரி துத்தம் கருதி
மெய்க்கலை நேரிசை குழலிசை யாழிசை
ஆழிசை தூழிசை ஒங்கிசை ஆற்றல்
தாழிசை தனியிசை தன்னெறி நோக்கி
தூழிசை தொல்லிசைப் பொருந்தியல் நோக்கி
ஏழிசை நல்லிசை ஐந்திசைச் சிற்பம்
நுட்ப மாக்கலை நுணுக்குறும் நுணுக்கம்
திட்பமும் நுட்பமும் செறிவுற் றாய்ந்தே
தாளங் காட்டும் காலம் ஓர்ந்து
தாள மாஇயல் நிலையுறும் நெறிகலை
மூலந் தெரிந்தே கால முணர்ந்தே
கால மாஇயல் கருத்துற் றோர்ந்தே
எடுத்தல் படுத்தல் நலித்தலும் நுனுகி
விடுநெறி நிலையிசை ஏற்றிசை யாய்த்தே
இசைக்கலை நுணுக்கம் இன்றமிழ் ஆய்ந்தே
இசையுறும் ஏழிசை நூலியல் நெறியே 862

அருளியல் அறிவியல் கலையியல் நிலையியல்
தெருளியல் பொருளியல் இசையியல் நோக்கி
செந்தமிழ்க் கலைநெறி மயன்தமிழ் ஒளிநெறி
வந்துறும் மாநெறி தூநெறி பாநெறி
மையம் புள்ளி மூலம் நிலையியல்
வையம் ஞாலம் வகையுறும் விளக்கம்
நூலும் கோலும் நுட்ப மாக்கலை
வேலும் வாளும் வில்லும் காட்டும்
வீரத் திண்மை ஈரமா நுண்மை
வீரத் தியல்நெறி விளக்கமும் தேர்ந்தே
உள்ளூறும் உணர்வால் உன்னுவ உன்னி
தெள்ளு மாத்தமிழ்ச் சீர்க்கலை நெறியாய்
ஓம்கலை ஓம்நெறி ஓம்மறை ஓம்ஒளி
ஓம்ஒலி யியல்நெறி செழுங்கலை யாய்ந்து
பைந்தமிழ் நிலைத்திறன் பார்நிலை அறிவியல்

ஐந்தமிழ்க் கலைத்திறன் ஐங்கலை ஐந்நெறி
இயல்புற் றாய்ந்தே எண்ணிலை தேர்ந்தே
மயலறுத் திகலறுத் தொளிநிலை நல்கும்
மயன்நெறி ஒளித்தமிழ் அருகுடர் ஒளிக்கலை
மயத்தமிழ் மாத்தமிழ் இயல்நிலை நுணுக்கம்
ஐந்தியல் நுட்பம் அருங்கலைத் திட்பம்
செந்தமிழ் இயல்நெறி திருநெறி பெருநெறி
உற்ற மாக்கலை உணர்நிலைத் திறனாய்ச்
சிற்றவை யியல்தெரிச் சீர்நிலைக் கலையே

தண்டமிழ் ஐந்தியல் தனிநெறிக் கலையியல்
வண்டமிழ் நுட்பம் வாழ்வியற் கலைநிலை
ஆழ்மதி யியலால் அறிகலை யுணர்ந்தே
வாழ்மதி நோக்கி வாழ்வியல் நெறியால்
தண்டமிழ் யியற்றிறன் திருநெறி மூலம்
ஒண்டமிழ்க் கலைநிலை மெய்ப்பொருள் நெறியாய்
அருளியல் பொருளியல் மெய்ப்பொருள் நூல்நிலை
தெருளியல் கலைத்திறன் காலமா நூல்நிலை
விரமா நிலைத்திறன் விளக்குநன் னூலும்
வீரக் கலையியல் போர்நெறிச் சீர்நெறி
தேர்க்கலை நுட்பம் திருநெறித் திட்பம்
ஏர்க்கலை எண்ணியல் ஒளியியல் நூல்நெறி
ஒளிக்கலை ஒலிக்கலை ஓம்கலை நூல்நெறி
வெளிக்கலை வானியல் கணித நூல்நெறி
சிற்பம் ஓவியம் சித்திரத் தூநெறி
பொற்புறுங் கட்டிடம் மனைநிலப் பெருநூல்
நிலமனைத் திருநூல் ஏழிசைச் செந்நூல்
புலனறிப் பெருநட நூல்நெறி யியலும்
எண்ணியல் நெறியால் இயற்றும் விண்கலம்
எண்ணிலை மரக்கலத் தியல்நெறி நூல்நெறி
மூலிகைச் செந்நிலை மெய்நிலை நாடியல்
காலம் வகுக்கும் பேரியல் நூல்நெறி
திருநெறி பெருநெறி பெருவெளி மன்றின்

ஒருநெறி உணர்நெறி மெய்க்கூர் திருநெறி
உள்ளூற் றோர்ந்தே உறுநிலை ஆயும்
தெள்ளுமாத் தமிழ்நெறி சீர்நெறி ஐந்தியல்
கோட்டியல் உருநிலை நிலையியல் புள்ளி
எட்டியல் பாட்டியல் இயல்நெறிக் கலைத்திறன்
தமிழியல் நுட்பம் நானிலத் தியல்நெறி
தமிழியல் மெய்ப்பொருள் மொழியியல் நூல்நெறி
பன்னெறி யியலால் பாங்குற வமைத்தே
தொன்னெறி தென்றமிழ்த் தூநெறி திருநெறி
மயன்நெறி ஒளிநெறி தமிழ்நெறி கண்டே
மயலறு முளத்தால் அயர்விலா உழைப்பால்
கண்டுறுங் கலைநெறி ஒளிநெறி வெளிநெறி
விண்டுறும் மொழிநெறி இசைநெறி நடத்தியல்
ஆடலான் கலையாய் அருளியல் நெறியாய்
நாடுறும் நிலையில் ஒளியா லுணர்வோர்
நாடுறும் அகவொளி புறவொளிகண்டே
தேடுறும் செந்தமிழ் இயற்கலை காண்பர்
ஒளிமொழித் தமிழே விண்மொழித் தமிழே
வெளிமொழித் தமிழென ஓம்ஒலி உணர்த்தும்
நுட்பம் கண்டே நுண்ணுணர் வோங்கிப்
பெட்புறும் அறிவால் பெருங்கலை நாடி
தண்டமிழ் ஐந்தியல் தகைவுற நோக்கல்
வண்டமிழ் மயன்நெறி விளம்பல் வழக்கே 868

காலமுங் கணக்கும் கலையும் தொழிலும்
மூலமும் பொருளும் முந்நெறி யாற்றலும்
ஐம்பொருள் செம்பொருள் செழும்பொருள் நோக்கி
ஐம்மறை மூலம் ஆய்தல்மா நெறியே 890

ஐங்கலை நெறியே அருந்தமிழ் நெறியாய்
ஐவினை யியலுறும் அறிவியற் கலையாய்
தொழிலியல் எழிலியல் தூநெறி யோங்கி
தொழிற்கலைப் பயிலியல் மெய்ம்முறை யறிந்தே
உணர்வின் ஆற்றலா லுழைப்புறும் மெய்ந்நெறி 891

எழுத்தியல்/மொழி

எண்கலை ஆய்தல் விண்கலை அளத்தல் 79

உள்ளூறும் ஒளியே உணர்நிலைத் திறத்தால்
தெள்ளூறும் ஒளியாய் ஒசைத் திறமாய்
வில்லூறும் சொற்பொருள் ஓங்கத் தெரிந்தே
தெள்ளூறும் மொழிநிலை கலைநிலை யியலே 85

அசையும் சீரும் அமைவுறத் தெரிந்தே
நசையின் நீக்கி நல்லவை தெளிந்தே
ஒலிமுறை எழுத்தின் உண்மை ஒளியை
நிலையுறக் காண்டல் நெறிக்கலை முறையே 87

எழுத்தசை சீர்தளை அடியென் றைந்தாய்
வழுத்தும் இயலால் தொடைநிலை நோக்கி
செழுநிலைப் பாவே சீருற் றோங்கும் 89

பாவியல் உணர்ந்தோர் நாவியல் அறிவரே 90

பாநெறி யொன்றே தூநெறி நுட்பம் 91

எழுத்து முதலைந் தியனிலை தெளிந்தே
வழுத்து நெறிமுறை தூக்குந் தேர்ந்து
செழுங்கலைத் திறனிலை செய்யும் திறத்தால்
பழமைப் பண்பும் புதுமைச் சீர்நெறி
கிழமை நெறிநிலை கிளரொளி தூண்ட
தோன்றும் கற்பனை சொற்பொருள் அணியாய்
முன்றும் முகிழ்த்திடும் பாடல் கெழுமி
முலப் பொருளும் முகிழ்கலை விரிவும்
சிலத் திறனும் சிறுபிரி வாக்கமும்
கோலத் தன்மை குவிந்து நோக்குறும்
ஞாலமும் விண்ணும் நன்னிலை மிளிர
ஐந்தியல் நெறியால் அகம்புறம் இரண்டாய்
வந்தசெந் தமிழ்நூல் வகுக்கப் படுமே 94

ஒமுறும் ஒளியும் ஒமுறும் ஒலியும்
காமுறக் கற்கும் கலைநிலை யாக்கி
வாய்ப்பத் திட்டல் நிறைமொழி நூலே 98

பொருளுறும் திறனாய்ப் பொருள்நிலை விளக்கி
பெருந்திற லாற்றலாற் றொழில்நிலை இலங்கித்
தொழிற் பெயர் துலங்கும் தொன்மைய தாகி
எழிலுறும் மொழியே இன்றமிழ் மொழியாம் 103

ஒலிமுதல் மொழியாய் ஒலிமுதல் திறனாய்
உள்ளொளித் திறனுற உயிரொளி ஓங்கி
உள்ளிருந் தெழுதரும் உமிழ்தரும் ஒலியாய்
தெள்ளுறும் தமிழாய் திகழ்வொளி மொழியே 104

ஒலிமொழித் தமிழாய் ஓங்கிய இயல்பால்
வெளிநிலை விண்ணளந் தியலுறும் மொழியாய்
தெளிகலைத் தென்தமிழ் தென்புல மொழியாய்
அளியுற வியங்கும் அருந்தமிழ் மொழியே 106

எண்ணெண் கலையால் இலங்குறும் மொழியாய்
பண்ணொலி ஓசைப் பெருநிலை ஓங்கி
குறிநிலை மாறாக் குறிப்புறும் கலைதிகழ்
அறிவியல் விளக்கும் அருந்தமிழ் மொழியே 107

உயிரெழுத் தாற்றலும் வடிவமும் தன்மையும்
செயிரறத் திட்டும் முறைமை விளக்கியும்
நெட்டுறும் கோடு புள்ளி இயலுறும்
கோட்டுருத் திறனும் கோட்டியல் சிலமும்
திட்டும் தமிழியல் செப்புவ நெறியே! 113

புள்ளிக் கூற்றே பெருங்கலை உணர்த்தும்! 114

வரிவியல் தன்மை மெய்வகை விளக்கும்! 115

கோடும் குறியும் புள்ளியும் ஆய்ந்து
கோட்டியல் நிட்டியல் குறிப்பின் உணர்ந்து
நாடும் எழுத்துரு எழுத்தொலி செப்பல்
ஏடியல் அறிந்தே இயம்பல் மரபே 117

கல்லின் குறித்தல் ஏட்டின் எழுதல்
சொல்லும் பொருளும் உணர்ந்துறும் ஆற்றலே! 118

சொற்பொருள் உணர்த்தும் மெய்ம்மை அறிந்தே
கற்பவை கற்றுக் கேட்பவை தெளிந்தே
உணர்வின் தெளிந்து நுகர்ச்சியின் ஆய்ந்து
பொருண்மை சுட்டுவ இயல்நெறி மரபே 120

சுட்டும் பொருளும் நெறிகலை யோர்ந்து
எட்டின் இயலுவ மாநெறி வழக்கே 121

நீட்டல் குறுக்கல் முறைமையின் ஆர்த்தல்
திட்டல் எழுத்தின் ஒலிமுறை ஒலிக்கே 123

ஒலிமுறை மிகுந்தே உருநெறிக் கூட்டும்
ஒலித்திறன் அளபின் மிகுநிலை மரபே 124

மையறு புலமை செவ்விதிற் பெறினும்
ஐயமும் திரிபும் அமைவதும் இயல்பே 125

வழக்கியல் அறிந்தோர் நுண்கலைத் தெரிவரே 126

புள்ளிப் பொருளே எழுத்துரு சிவனும் 129

எழுத்தியல் நுணுக்கம் இயலுறத் தெரிந்தே
வழுத்தல் கலைநெறி மரபுறும் ஆக்கம் 148

செந்தமிழ் எழுத்தே ஒளிஒலித் திறனாய்
முந்துறும் உயிரியல் முயங்குமா நெறியே 149

மாநெறி நுட்பம் மறைமொழி எண்ணெண்
தூநெறி கிளக்கும் ஐங்குறில் உயிரும்
எழுத்தா விலங்கி எண்ணாற் றுலங்கி
வழுத்து மாநெறி நிலைக்கலை ஓங்கி
வையத் தன்மை நிலையுற விளக்குபு
ஐயைந் தியல்நெறி பருநெறி நுண்திறன்
காலச் சுழலும் கடுகி விரையும்
கோலமுஞ் சிலமுங் குறிப்பி னுணர்ந்து
ஞாலம் காண்போர் மூலம் ஆய்ந்தே
உள்ளுறும் வையம் புறத்துறும் வையம்
தெள்ளுறும் கலைத்திறன் சீர்நிலை காண்பரே 150

உயிர்க்கலை எழுத்தே முயற்சியின் உள்வளி
செயிரறத் தோன்றும் அணுத்திரள் ஒலியாய்
மெய்க்கலை மெய்ஒலி திறனுறத் தோன்றி
உயிரிய லாகி ஒலிமுறை நெறியே 151

உயிர்ஐங் குறிலே ஓசை நிறைமொழி 152

ஐங்குறில் ஆக்கமே எழுநெடில் ஒசை 153

உயிர்பன் னிரண்டே ஒலிதரும் உருநிலை 154

எழுத்தியல் நுணுக்கம் இயலுறத் தெரிந்தே
வழுத்தல் கலைநெறி மரபுறும் ஆக்கம் 155

மாநெறி நுட்பம் மயக்கற வுணர்ந்தே
தாநெறி உயிர்ஐங் குறில்நிலை நாடிச்
சீர்நெறி எழுத்திய லறுபான் நான்கும்
நேரியல் காண்டல் நெறிமுறை மரபே 158

எண்ணியல் நாற்புறத் தியல்தொறும் எழுத்தால்
நுண்ணுறும் ஒலியே நவையறத் தெரித்தே
விண்ணுறும் ஒளிநிலை மண்ணியல் கலைநிலை
எண்ணுற விளக்கும் எண்ணெண் ஆற்றலே 161

மூலம் அறிந்தோர் முப்பொருள் ஆய்ந்தே
சீலம் காலம் ஞாலத் தியலால்
கோலங் காட்டுங் குறிப்பின் உணர்ந்து
கூறுகூ றியலின் குறிநிலை ஓர்ந்தே
எழுத்தியல் அமைப்பால் நெறிக்கலை மூலம்
வழுத்து மெண்ணியல் வகையுற விரித்தே
அறுபான் நான்கும் அமைவுற நோக்கி
உறுங்கலை மூலத் தைங்குறில் காண்பதே 162

ஐங்குறில் உயிரே அருங்கலை உணர்த்தும் 163

அி உஎ ஒஐங் குறிலே 164

ஒளியுறுந் தன்மையும் ஒலியுறும் வன்மையும்
வரிவடி வியலால் உருவிய லாகி
ஐந்தெழுத் தியலே நெறிமுறை உயிரே 165

எழுத்தெலாம் புள்ளி யியலல்மா நெறியே 167

குறிலை யாய்ந்தோர் நெடிலுணர்ந் தாரே 169

ஐந்தியல் குறிப்பே ஐங்குறில் முலம் 170

மாத்திரை அளவே எண்ணிலை அளவாய்
மாத்திரை இயல்நெறி காலக் கூறாய்
மாத்திரை ஒலியே எழுத்துறு மன்றே 172

அறுபான் நான்கும் எண்ணியல் வடிவாய்ப்
பெருநிலை எழுத்தியல் கலைநெறிச் சிறப்பே 173

கால நுணுக்கம் கருத்துறக் கண்டோர்
முலப் பொருளை முன்னி யாய்ந்து
கோலங் காட்டும் அறுபான் நான்கில்
சிலம் இயலல் சிவனுறத் தெரிந்து
ஞாலத் தியலால் முவகை கிளக்குபு
வல்லினம் மெல்லினம் இடையின மாய்வரல்
தொல்நெறி மரபின் பெருஞ்சிறப் பாகி
அறபான் நான்கின் பெருங்கூற் றியலின்
உறுநிலைப் பருநெறி நுண்ணெறி நோக்குபு
இனநெறி நுட்பமும் திட்பமும் ஓர்ந்தே
எழுத்தியல் ஆக்கம் நிறைவுறு மன்றே 177

எண்ணெண் ணியலறி நாற்புறத் தியலால்
தண்டமிழ் எழுத்தியல் தகைவுற நாடி
முலப் பொருளும் முறைமையிற் குறித்தே
சிலங் காண்டல் திருநெறி யன்றோ 178

எண்ணெண் கலைத்திறன் இயல்மொழி கூட்டி
விண்ணொளி நிலைகலை நெறியுறக் காட்டி
தண்டமிழ் ஐந்தியல் முலம் விளக்கி
ஒண்டமிழ் ஐங்குறில் ஏழ்நெடில் தெரித்து
வல்லின மெல்லின இடையினம் தோற்றி
தொல்மர பியலுரை விளக்குறும் நெறியே 181

என்கலைத் திறமே இயல்நிலை மூலமாய்
என்னெழுத் தாற்றலின் இயல்பட விரித்து
ஐந்தியல் மூலம் அருங்கலை நுட்பம்
வந்துறும் மாநெறி வகுத்துணர் ஆற்றலாய்
முந்துறும் கலைநெறி முறைமையின் ஏற்றே
செந்தமிழ் ஒளிஒலி கணக்கியல் நெறியே 184

சொல்லும் பொருளும் துளகறத் தெரிந்தே
வெல்லும் பொருளே ஐந்துறும் நடுவண்
எழுத்துஞ் சொல்லும் கூட்டணி யாகி
வழுத்து மிகுபுறம் வகுத்துச் சூழ
பொருள்ஒளி ஆற்றல் புலப்பட நோக்குழி
திருவுறும் கலைநிலை தெள்ளிதின் கூடுமே! 198

பொருளே உணர்த்தும் பொருள்மொழி யாகி
பொருளுறும் சொல்லாய்ப் பூந்தமிழ் விளங்கும் 199

உள்ளகத் தெழும்பும் தெள்ளுறும் உணர்வால்
விள்ளுறும் மொழிமுதல் முயற்சிமா வலியால்
மெய்முதல் தோற்றம் உயிருறுந் தேற்றம்
எழுத்தொலி யோங்கி யியலல் மரபே 206

வல்லின மெல்லினத் திடையின தாற்றல்
தொல்நெறி விளக்குபு சொற்பொருள் விளக்கி
இடையுறக் கிளத்தல் இயைபுறு மரபே 210

எழுத்தி னைந்தியல் வழுத்துற நோக்கிச்
செழுங்கலை ஒளியால் செந்நினைச் சிவணி
செந்நெறி ஐந்தியல் மூலம் ஆயல்
செந்தமிழ் நெறிமுறை தெற்றேன் றுணர்த்தும் 214

உற்ற பொருண்மை உள்ளுற வுணர்ந்தே
உயிரொளி ஒலித்திறன் நிலையுறக் காண்டல்
செயிர்தீர் சொற்பொருள் எழுத்தியல் ஆயலே 215

சொற்பொருள் முதலே துலங்க வறிந்தோர்
கற்றறி திறனே கணக்கிலெய் துவரே 216

பல்பொருட் கிளவியும் ஒருபொருள் கிளவியும்
தொல்மர பியலுறுந் தொகைநிலை யாய்ந்தே
கிளக்குறும் சொற்பொருள் ஒளிமொழித் திறனாய்
வளர்கலைப் பொருளுரைத் தொழிற்பொருள் என்ப 220

பொருள்மொழி யாகி உயிர்மொழி ஓசை
தெருள்மொழிச் சொற்பொருள் சிர்பெற விளக்குபு
ஒளிமொழி ஒலிமொழி ஓசை நிலையுறும்
வெளிமொழி செந்தமிழ் விளம்பல் நெறியே 221

குறித்தியல் பொருளே மொழிஒலிப் பொருளாய்
குறிநிலக் கலைத்திறன் தொழிற்பொருள் விளக்கி
நெறியும் ஓசையும் நிலைபெறும் அளவையால்
குறியா வகைநிலை குறித்துறும் மரபால்
அளவின் ஆற்றலும் வெளிநிலை யியலே 222

உணர்வொளித் திறனிலை உரைத்தல் நோக்குபு
உணரல் உணர்த்தல் உணரப் படுநிலை
உணர்மொழி நிலைக்கலை உணர்த்து வித்தல்
உணர்மொழிச் சொற்பொருள் நிலையறித் திறமே 228

ஒளியொளிர் முலம் ஒண்ணிலைக் கலைநிலை
களியுறும் எண்திறன் எண்ணெண் சீர்நெறி
விண்ணிலை கழல்நிலை விரைவுறும் திண்நிலை
அணிகலைத் திறனால் ஆக்குற நோக்குபு
வலமிட முறைநெறி தென்நிலச் சூழல்
நலமுறச் சுழல்நிலை ஞாலத் திண்ணியல்
கால நுணுக்கம் காட்டுபு தேர்க்கலை
முலப் பொழுதியல் முலப் பொருளும்
சீலத் தேர்ந்துழி கால நுண்பொருள்
கோலத் தியலால் குறித்துறும் பொருள்நிலை
எண்ணுற எண்ணிப் பருநிலை நுண்கலை
விண்ணுறும் ஆற்றல் வியநிலைக் கலைத்திறன்
எண்ணெண் ணியலே எட்டின் பிறழ்வால்
திண்ணுறும் ஓம்ஒலி முலத் தியலாய்

எழுந்த மாத்தமிழ் எழுச்சி யுறுநிலை
விழுமொலி உமிழொலி தமிழொலி மெய்க்கலை
கண்கருத் தியன்றே எண்ணெழுத் தியைந்தே
நுண்ணிதின் நோக்குபு எண்ணெண் நெறித்திறன்
விண்மொழி தமிழென ஒசை ஒளித்திறன்
பண்மொழி ஒலிநிலை அளவை மாத்திரை
எண்ணியல் முறையால் எழுத்தியல் ஆக்கம்
திண்ணுறும் குறில்நெடில் சீர்நிலை அசையென
நன்னுறும் மொழிக்கலை நெறிமுதல் ஆக்கம்
என்னுறும் தொழிற்கலை மொழித்திறன் இலங்குமே 231

சொல்லும் பொருளும் தொன்மைய தாகி
சொற்பொருள் மூலம் தொழில்நிலைக் கலைநிறை
மூலத் தியல்ஒலி எழுநிலை எழுத்தாய்
காலமும் இடமும் கடிதின் நோக்கி
சீலத் திண்பொருள் செறிவுற உணர்த்தி
ஞாலத் தியல்நடை நன்னுறும் திறனாய்
சொற்பொருள் நெறிக்கலை குறிக்கலை மொழியாய்
கற்றறி மக்கள் கருத்துறும் திட்பம்
உற்றறி மக்கள் உயரறி நுட்பம்
சொற்றிற முறுவார் பொருதிற மூலம்
தொல்மர பியலுறும் ஒசை ஒலிமொழி
வல்ல மாக்கலை வளர்கலை மதித்திறன்
ஐந்தியல் அருங்கலை நுண்கலை விண்நெறி
வந்துறும் எண்கலை மூலம் கூட்டும்
மெய்நிலை அறிந்தே மெய்ப்பொருள் விளக்குபு
எய்துறும் எண்ணெழுத் தியல்நிலை விரிநெறி
கல்லும் சொல்லும் வில்லும் காட்டும்
நெல்லும் எள்ளும் விரற்கலை அளவை
காலத் தியல்நெறி காட்டு மாநெறி
சீலத் தியலால் செப்புறும் இயல்பே 232

பொருண்மை சுட்டிய தெரிநிலைக் கிளவி
பொருளுறுந் தொழிற்பெயர் நிலைநெறி நோக்கி

பொருள்மொழி நுட்பம் கலைத்தொழில் ஒட்பம்
தெருண்மை தோன்ற செப்புவ தியலே 235

பொருள்மொழி ஓர்தல் கலைத்திறன் நுணுக்கம் 236

மொழிமுதற் பொருணிலை முன்னுற நோக்கி
எழுத்தியல் சொல்லியல் இயைநிலைக் கலைத்திறன்
வழுத்துறும் பொருளே வளர்கலை நுட்பம்
பழுத்தபே ரறிவாற் பகர்பொருள் சொற்கலை
விழுப்பொருள் எண்பொருள் விளங்கக் கண்டுழி
செழுமொழித் திறனுறும் ஐந்தியல் விளங்கும்
அளபின் ஆக்கமும் அசைநிலை நோக்கமும்
வளர்நெறி அளபெழுந் திசைநிலை மாத்திரை
செஞ்சொல் திறனுறும் சீர்நெறித் திறனே
விஞ்சு மாநெறி மாமொழி விளக்குறும்
எண்பொருள் திட்பமும் நுண்பொருள் நுவலரும்
பண்பொருள் இசைத்திறன் பேரள பியற்திறன்
கண்டுறும் ஆற்றலால் ஐந்திசை ஐந்தியல்
விண்டுறும் நெறிக்கலை குறிநெறித் திறனாய்
குறிகுறி யிடெனும் வரைவின தாகி
அறிநிலை எழுத்தென அளந்தன னாகி
எழுமுற எழுச்சியும் கிளர்நிலை உணர்ச்சியும்
எழுத்துறும் இயல்நெறி உருநிலை யோர்ந்து
எழுத்தியல் மூலம் இயலுற வறிந்தோர்
வழுத்து மைந்தியல் வகையுற நுணுகி
ஐந்திறத் தாலறி அருங்கலை நுட்பம்
தந்திறம் விளங்கித் தாமுறக் காண்பரே 240

செய்முறைத் திறவலி உய்முறை வகுக்கும் 262

பொழுதறி காலம் எழுத்துணர் வித்து
வழுவிலா மதியும் வளமுறம் எண்ணியல்
எழுதலும் குறித்தலும் வரைதலும் திட்டலும்
செழுநிலை கலையுறத் தெரித்தலும் இயல்பே 263

கலைமொழிப் பொருளே நிலைமொழி மரபிற்
தலைமொழிச் சிறப்பிற் றானுறு மென்ப 288

எழுத்தொலி ஒசை இயைபுறத் தெரிந்தோர்
வழுத்தொலி ஒளிதிறன் வகையுற ஓர்வர்! 301

ஒலியுறும் திறனும் ஒளியுறும் உருவமும்
கலையுறக் காட்டல் எழுத்தியல் ஆக்கம் 302

எழுத்தியல் நெறியே யியலு மாக்கலை
வழுத்துறு மறுபான் நான்கியல் வரைவால்
பழுத்த நிறைமொழி மறைமொழி யொலியாய்ச்
செழுமைச் சீர்நெறி சிறந்துறும் சிறப்பே
மறைமொழி நிறைமொழி மாநெறித் திறனாய்
நிறைமொழி ஓம்நெறி யுள்நிலை யுற்றே
அறைதரும் அறுபான் நான்கிய லாக்கம்
நிறைதரும் ஒலி ‘ஓம்’ மறைமொழித் திறனே 311

மெய்யுயி ருண்மை விளங்கக் காண்டல்
மெய்ம்மொழிக் கலைத்திறன் நேர்நிலை விளக்கும் 313

ஒலியின் மூலம் ஒளிநெறித் திறனாய்
ஒளிநிலை யாற்றல் ஒளிக்கலை யியலல்
உயிர்மொழித் திறனாய் மெய்ம்மொழி யேற்றல்
உயிர்மெய் யாக்கம் உய்த்துணர் நெறியே 314

உயிரொலி தோன்றுமுன் மெய்யியல் தோன்றும் 315

மெய்யியல் முயலல் இயல்நிலை கூட்டும் 316

உயிரொலி எழுத்துரு வோங்கி நிற்றல்
உயிரொளித் திறனே உண்மை விளக்கும் 317

உயிரொலி யோசை உள்ளகத் தெழுங்கால்
செயிரறு முயற்சி மெய்யிய லொலியே 318

உற்றுறுங் கலையும் உணர்வொளித் திறனும்
முற்றுற வாய்தல் மெய்ம்மொழி யுணர்த்தும்
தெற்றுறுங் கலைத்திறன் சீர்நெறி யெண்ணியல்
முற்றுறும் எழுத்தியல் முழுதொருங் குணர்த்தும் 323

எழுத்தியல் சீர்நெறி யசைநிலை யோசை

வழுத்து மாத்திறன் மெய்க்கலை யியலாய்ப்
பழுத்தபே ரறிவால் பண்புறக் காண்டல்
விழுப்பொருள் செம்பொருள் நுண்ணறித் திறனே 325

உள்ளகத் தெழுதரும் ஒருபெரும் முயற்சி
வில்லுறும் ஓசை ஒலிமுத லாகி
மெய்யொலி கிளர்த்தும் மெய்ப்பொருள் நோக்கி
மெய்யுண ரெழுத்தொலி யுயிரொலி யியலே 327

புள்ளி கூட்டும் பொருள்நிலை யுணர்ந்தோர்
தெள்ளுறும் செந்தமிழ் மெய்ந்நிலை யாய்ந்தே
உயிர்மெய் யாற்றல் ஒங்குறும் உண்மை
செயிரறத் தெரித்தே சீர்நிலை யறிவரே 353

கிளவி யாக்கம் மெய்ப்பொருள் குறித்தே 355

ஓமெழுத் திலங்கும் ஒருபொருள் மொழியாய்
ஓம்கலை யியல்தரும் நெறிமுறைத் திறனாய்
ஒளியும் ஒலியும் வெளிதரும் நோக்கே
களியுறுங் கலைத்திறன் வானிய லோசை
மொழிமுதற் பொருளாய் முதலெழுத் தோங்கி
செழுங்கலைத் தருமொலிச் செந்தமி ழென்ப! 356

விண்ணொளி மொழியாய் மொழிமுதற் பொருளாய்
எண்ணிய விலங்கி எழுத்துறும் வடிவம்
நுண்ணிதின் உணர்ந்தே நுதலிப் புகுதல்
எண்மொழிப் பொருள்திறன் இயலுணர்ந் தறிதல்
செந்தமி ழியல்திறன் நெறிமுறைக் குறியே 362

உறுநெறி எழுத்தியல் ஒளித்திற னுய்ந்தே
மாநெறித் திட்பம் மயக்கற நோக்கி
பாநெறி யியலால் பேரறி வுற்றே
சீரறி யுங்கலைப் பொருண்மை தேர்ந்தே
நேரறி வுற்றே நிகழ்நிலை யாயல்
கால நுட்பங் காட்டுபு காட்டி
விரைவுறும் விசல் வியனிலை தெளிந்தே

ஆடலான் நிலைநெறி அமைவுறத் தேர்ந்தே
நாடற் பொருள்நிலை நற்குறி நன்னி
குறிப்புணர் குறியால் குறிநிலை குறித்தே
நெறிநிலைப் பொருண்மை தெரிநிலைக் கிளவியாய்ப்
பொருண்மை யாய்தல் புலனெறி வழக்கம்
மருண்மை தவிர்த்தே மாநெறி யாயலே 369

சுட்டும் பொருளும் தெரிநிலைக் கிளவியும்
விட்டுறும் இயலும் பிறழ்வின் ஆற்றலும்
ஒமுறும் பொருளால் மெய்ந்நிலை யோர்ந்தே
காமுற வுணர்வர் கற்றறி மேலோர் 370

நுதலிப் புகுதல் நுவல்வோன் திறனே 373

நுவலல் நுதலல் ஒருபொருட் கிளவி 374

மாத்திரை யளவே ஒசை குறித்து
மாக்கலை நிலையின் நெறிமுதற் பொருளாய்
அளவிய லோசை யளவுறத் தெரித்தே
அளவியல் நெறியால் அறைந்தனன் நன்றே 388

எழுத்தொலி யோசை யிலங்குற வொலித்தல்
வழுத்துமாத் தொழிலென விளம்ப லியல்பே 389

உச்சியும் உரமும் கண்டமும் முக்கும்
எயிறுறும் நிலையும் நாக்குறுந் திறனும்
ஒலியிசை கிளத்தல் உற்றுணர் கலையே 390

உறுப்பியல் நோக்கி அளவிய லோங்கும் 391

ஒலியொளித் திறனே ஒன்தமி ழாற்றல் 396

மொழிமுதற் பொருளறிந் தியல்நெறி நோக்கி
தொழிற்கலை மொழியியல் தூநெறி நுட்பம்
விழுமிய மெய்ப்பொருள் விரைவுறத் தெரிந்தே
செழுமொழி வளந்திகழ் செந்தமிழ்த் திறனாய்
உற்றுறும் நோக்கே உளத்தினி லுன்னி
உற்றறி வுணர்வும் முற்றுறத் திகழ்ந்தே

மெய்க்கலைத் திகழ்நிலை வுணர்வுறுந் திறத்தால்
மையறு தொழிற்பெயர் வகையுற விரித்தே
காண்முறை காண்டல் கருதுபு நோக்கல்
ஈண்டிய பொருள்நிலை யியல்பி னாய்தல்
ஐந்திறம் நல்கும் செந்தமி ழியலே 398

காண்டல் கருதல் கருத்துற நோக்கல்
ஈண்டிய குவித்தல் இயல்புறும் நிலைநெறி
எண்ணெண் கலைத்திறன் ஐந்தியல் நோக்கி
நுண்பொருள் விழுப்பொருள் செம்பொருள் பகுப்பொருள்
கருப்பொருள் கலைப்பொருள் கருத்துற் றோங்கி
பெரும்பொருட் சொற்கள் அருந்தமிழ்த் திறனால்
மொழிக்கலை நோக்கி மொழிவரே மேலோர் 399

மரபுறுங் கிளவி மெய்ம்மொழி யாக்கம்
திறனுறத் தேர்ந்தே செய்ந்நிலைக் கலைத்திறன்
சொற்பொருள் மூலம் தெரித்துணர் நோக்கே
கற்றறி எழுத்தியல் கலைமுத லோர்ந்தே
தெற்றுறு முணர்வால் சீர்நெறி யாய்ந்து
தொன்மை துலங்கத் தூநெறி யணுகி
மென்மையும் வன்மையும் மெய்யுற நாடி
பன்னருந் திறத்தால் பைந்தமிழ் நெறியால்
உன்னி யுன்னி யுணர்நெறிக் கலையே 415

கலையுங் கருத்தும் நிலைமொழித் தலைமொழி
நிலையுறு முணர்வும் நெறிமுறை நோக்கும்
தலைமொழித் தமிழால் தன்னிக ரற்றே
கலைமொழி யொளிமொழி யொலியியல் நோக்கி
நிலைபெறுந் தொழில்திறன் எண்ணெண் ணியல்திறன்
கலையுணர் மிக்குக் கருத்துணர் வோங்கி
நுண்ணறித் திறத்தால் நுவலுவ தேர்ந்தே
விழுப்பொருள் விண்பொருள் ஒளிநிலை யாய்தல்
செழும்பொருள் மாநெறி செந்தமிழ் வழக்கே 416

நெறிமுறை வழக்கே நிலையுற நோக்கிக்

குறிகுறித் தியலும் குறிப்புறுந் திறனும்
நோக்குறும் திறன்மதி வாக்குறு மொளியும்
ஆக்குறுஞ் செயல்திறன் அருங்கலை மூலம்
ஒளிநிலை யோர்ந்தே மூலத் தியலெழும்
வெளிமொழிச் செந்நெறி விளம்பலும் மரபே 417

பெருங்குடிச் சிறுகுடிப் பெட்புற நோக்கி
ஒருநெறிப் பொருளும் உருநெறித் திறனும்
ஒருமொழி யுணர்வால் பெரும்பொரு ளாய்ந்தே
ஒருமொழி ஓமென வுணரறி வுற்றே
மெய்க்கலை மெய்யொளி மெய்யுறத் திகழ்ந்தே
உய்முறை ஒலிநிலை யுணர்வினிற் றிகழ்ந்தே
ஆற்றும் ஆற்றல் அகவொளி நோக்கி
தேற்றம் தேர்தல் செய்முறைக் குறியாய்
அறிநிலை மெய்ப்பொருள் அகத்துணர் வுற்றே
குறிமுறை யுணர்த்தல் எண்ணிலை யியலே 426

பார்நிலை யியலா லிடத்தியல் நிலைதெரிச்
சீர்நிலை நோக்கே தெள்ளிதின் நோக்கி
நிலத்தியல் மாண்பே வாழ்கலை நுட்பம்
புலத்தியல் திட்பம் பொருந்த வுணர்ந்தே
மண்விழிக் காலம் மாக்கலை யுணர்ந்தே
விண்விழி யியலறி விளக்கமுந் தேர்ந்தே
கண்விழி நோக்காற் கருத்துற நோக்கி
எண்விழி யொளியி னெழுத்தறி வாரே 445

எழுத்து மெண்ணும் வழுத்துந் திறனாய்ப்
பழுதில் நெறியைப் பொருளுறக் கூட்டிப்
புனையா ஓவியம் பொருள்முறை தெரித்தே
நினைவுறு முணர்வால் நெறிமுறை யறிந்தே
தினைத்துணை நோக்குறுஞ் சீர்மை யறிந்தே
முனைப்புறும் முந்நெறி முன்னுவ நெறியே 446

எழுத்துஞ் சொல்லும் பொருளு மோர்ந்தே
செழுங்கலைத் திறனுறும் கட்டணி யாய்ந்து

ஐம்பொருள் விளங்கி யகத்துணர் வுற்றே
செம்பொருள் ஒளிநிலைச் சீர்நெறி நோக்கி
அகப்புறத் திண்மை மெய்மையின் நோக்கி
அகத்துணர் வுள்ளூறும் ஆற்ற லியங்கி
கலைநெறி இயக்கம் எண்ணெண் கலைத்திறன்
நிலையுறும் எண்ணே நெறிமுதற் பொருளாய்
நோக்குழி யறுபான் நான்குறும் இயல்நெறி
தேக்குறும் ஐந்தைந் தியல்நெறி தெரித்தே
ஒன்றுறும் ஒளிநிலை உவப்புறத் தெரிந்தே
நன்றுறுங் கலைநெறி நண்ணுறுந் திறனால்
எண்ணெண் முலம் இலங்கித் தோன்ற
விண்ணெண் கலைத்திறன் விளங்குபு விளக்கும் 461

உயிரொளி யுணர்வே ஒருமொழிப் பொருளே 467

அணுத்திர ளொலித்திறன் மெய்ந்நிலை யறிந்தே
அணுவணுக் கூற்றி னாய்நிலை தேர்ந்தே
எழுத்தொலி நெறிமுறை இயல்பி னுணர்ந்து
வழுத்து மோசை மாத்திரை யுணர்ந்தே
நெறிப்படக் கிளந்து குறிநிலை குறித்து
அறிநிலை எழுதலின் எழுத்துரு வோங்கி
அணுக்திர ளாக்கம் மெய்ம்மைப் பொருள்நிலை
நுணுக்குற நோக்கி நுவலுறும் நுட்பம்
எழுத்துறு மாக்கம் இயல்நிலை யறிந்தே
எழுமணுத் திரளொலி நுட்பந் தெரிந்தே
எழுத்தியல் நெறியே இயம்புதல் மரபே 468

எழுத்தறிந் தோரே இழுக்கின் நீங்கி
முழுப்பொரு ளுணர்ந்து செம்பொருள் தேர்ந்து
விழுப்பொரு ளாய்வர் மெய்ம்மை காண்பரே 469

பொருண்மை சுட்டியும் பொருளுறத் தேர்ந்தும்
பொருளறி பொருளும் பொருள்நிலைப் பொருளும்
பொருளுணர் வாலறி மெய்ப்பொரு ளென்ப 486

கருதரும் பொருளும் கலைநெறிப் பொருளும்

அரும்பொரு ளாக்கம் விழுப்பொருள் நோக்கிக்
கருப்பொருள் மூலம் கருத்தி லுணர்ந்தே
பருப்பொருள் முறைதெரிப் பான்மை யாய்ந்தே
விழுப்பொரு ளுணர்த்திச் செம்பொருள் காண்டல்
செழும்பொருட் கலைதெரி நுணுக்கமா நெறியே 487

உணர்வொளி யொன்றே யுறுதுணை யாகி
உணர்கலைத் தெரிநிலை மெய்க்கலை பொருந்தப்
புணர்கலைப் புணர்மொழிப் பெருநிலை யாய்ந்தே
புணரிய லாற்றல் பொருளியல் கூட்டி
மொழிநிலைச் சொற்பொருள் பொருள்நிலை யுணர்த்தி
மொழியும் மொழியே சொல்லென உணர்த்தி
சொல்நிலை மூலம் பொருளெனத் தேற்றிச்
சொற்பொருள் மொழியின் தூநெறி யறிந்தோர்
முற்றறித் திறனுற மெய்ந்நிலை யறிவரே 520

உயிர்நிலை உயிர்க்கரு உயிரொளிப் பொருள்நிலை
உயிர்நெறி முதலாய் ஓங்குறுந் திறனறி
உயிர்க்கலை யியலே மெய்ப்பொருள் நெறியென
உய்த்துணர் நெறியால் ஒர்ந்துண ராற்றலும்
உயிர்நிலை மூலம் உயிரொளிக் கோலம்
உயிர்க்கரு மூலம் உயிர்மொழி யியலாய்
செயிரறத் தோற்றும் செந்தமிழ் மொழியே 522

பல்பொருள் தோற்றிப் பெருநிலை விளக்கி
நல்லியல் பன்முறை நெறிநிலை நாட்டினும்
தொல்லியல் வண்ணம் சொற்பொருள் உரைக்கும்
சொல்லியல் தமிழ்நெறி ஓர்வது மரபே 576

உயிரெழுத் தாற்றலும் மெய்யெழுத் தியலும்
உயிரியல் மெய்யியல் நெறிமுறைக் கலைநெறி
ஓர்ந்துணர் அறிவால் ஞாலம் நோக்கின்
தேர்ந்துணர் உயிர்நெறி சீர்த்த நோக்கால்
ஆண்பெண் ஒன்றே பெண்ஆண் திறமுறும்
ஆண்பெண் திறமுறும் அறிநிலை உணர்வால்

உயிரினம் ஒன்றே உயிரியல் முலம்
உயிரியல் கலைதெரி முலம் உணர்ந்தே
உள்ளொளித் திறனிலை உற்றறி உணர்வால்
தெள்ளுயிர் சீர்நிலை நெறியுற் றாய்வரே 582

முக்கூ றைந்தியல் நாற்புறத் தியலாய்
முக்கூ றியல்நெறி மும்முன் றாக்கம்
எட்டின் பிறழ்வால் மும்முன் றியல்நெறி
விட்டுறும் நெறிநிலை எண்கலை நுட்பம்
எண்கலை வகுக்கும் எண்ணெண் ணியலே
திண்ணெழுத் தியலெழுத் துறுசி ரெழுத்தும்
நண்ணும் வல்லின மெல்லின மிடையினம்
எண்ணும் ஐந்தெழுத் தியல்பிரி வுற்றே
ஐயுயிர் பிரிப்பே அகலப் பிரிப்பே
மெய்யுயிர் நோக்கம் மிகுமொலி யாக்கம்
கண்டுண ருண்மை கருத்துற நோக்கி
எண்ணும் எழுத்தும் அறுபான் நான்கே 605

அறுபான் நான்கே மொழிமுதல் முலம்
அறுபான் நான்கே எண்கலை யாக்கம் 606

அகத்தியல் அகத்திணை மெய்ந்நெறி ஆய்ந்தே
அகத்துறும் மெய்யுண ரைம்பொரு ளுண்மை
மிகுத்துறும் நிலைக்கலை நெறிமுறை யோர்ந்தே
அகவெளி யுறுமொளி ஒலியியல் தெரித்தே
விண்கலை நுட்பம் எண்கலை யியற்கலை
கண்ணுற் றோர்ந்தே கருத்துறத் தேர்ந்தே
எழுத்துறும் ஒலியியல் ஒளியியல் ஆற்றல்
பழுத்துறும் நெறிதரும் நிலைமொழி மறையொலி
ஓசை ஒலிக்கலை ஓங்குற வோங்கி
மாசறத் தெரிக்கும் மறையொலி நிறைமொழி
ஐந்தெழுத் தியல்நெறி ஐந்நெறித் திறனால்
முந்துறும் செந்தமிழ் மொழிஒலித் திறனே 612

அறுபான் நான்கின் அகத்துணர் மெய்க்கலை

உறுமுறை எழுத்திய லொளியியற் றிறனிலை
எழுத்துறும் ஒலியே இயல்நிலை நெறிமுறை
முழுமை நிறையொலி இயவுள் ளுணர்வாய்
உட்கலைப் பெருவெளி உயர்ந்துமேல் நோக்கி
எட்கலை நிறைமுறை எண்ணுற வாய்ந்து
கருவெளி நுட்பம் கருத்துற நோக்கிப்
பெருவெளிச் சிற்றவை பெட்புற் றாய்ந்தே
உண்மை ஐங்குறில் ஒளிபெறக் கண்டே
எண்ணத் துணர்வா லெழுத்தெலாம் ஆய்ந்தே
உயிர் றாறாய் உவப்புறக் கண்டே
செயிரறத் திருநெறி எழுத்தொலி நுட்பம்
முயற்சியின் நிறைஒலி முன்னுவ முன்னி
அயரா துழைப்பின் அகவெளி யுள்ஒளி
அகவின் ஒளிதரும் ஆற்றல் கூர்ந்து
மிகுகலை நுட்பம் மேவுறத் தெரிந்தே
ஒளிஒலி யியற்கலை ஒங்குறும் உணர்வால்
வெளிமொழி ஒம்கலை யியல்நெறி விளக்கி
மொழிக்கலை நுணுக்கம் முயன்றினி தாய்ந்தே
மொழிமுதற் பொருளாம் எண்ணிலை தெரிந்தே
அறுபான் நான்கியல் எண்ணும் எழுத்தும்
உறுவகைத் திறமென உய்த்துணர் மொழியே 613

அருங்கலை யெண்ணியல் பெருங்கலை நுட்பம்
வருங்கலை மூலம் அறுகலை யாக்கம்
மூலமும் பொருளும் முறைமையிற் றெரித்தே
காலமும் இடமும் நிலையுறக் காண்டலும்
ஐந்தியல் நெறியால் எண்ணெண் கலைத்திறன்
ஐந்தெழுத் தியலே நெறிமுறை மூலம்
எட்டியல் நிலைக்கலை இயைபுறத் தெரிந்தே
முட்டறும் நிலைமொழி ஐந்தெழுத் தியலால்
செறிவுறச் செறித்தே நிலையியல் நோக்குபு
குறியுறும் ஐந்நிலை மெய்க்குறி தேர்ந்தே
அஇ உஎ ஒநிலை ஐந்தும்

அம்முறை இயலாய் நடுவண் ஒநிலை
நோக்குபு நோக்கி நுணுக்குறும் நுணுக்கம்
ஆக்குறும் இயற்கலை நெறிமுறைப் பொருளாய்
ஐங்குறில் எழுத்தின் பொங்குறுந் திறனொலி
இங்குறும் எண்ணெண் கலைநிலை மூலம்
எண்ணுறு மூலத் தியல்நிலை யாகி
விண்ணுறும் ஒளிக்கலை வெளிமொழித் தமிழாய்
நண்ணுறும் அறுபான் நான்கிறுங் கலையாய்
எண்ணுறும் நிலைக்கலை யிதெனத் தேர்ந்தே
எண்மொழி வருமொழி இன்றமி ழென்றே
எண்மொழி மூலத் தெழுதமி ழாய்ந்தே
ஒண்டமி ழொளிநிலை ஒலிநிலைக் கலையும்
தண்டமி ழியல்தெரித் தாளக் கலையும்
கண்டுண ராற்றல் கேட்டுணர் தெளிவும்
கொண்டுணர் குறிப்புங் குறிப்பின் நோக்கி
நிலைபெற் றுணர்ந்தே நீள நினைத்து
கலையுறு முணர்வால் கருத்துறும் மதியால்
உயிரி றாறின் ஒண்மை தெரிந்தே
செயிரறத் தெரிக்கும் ஏழ்நெறி யோர்ந்து
ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்
ஆநெறி யாற்றல் தூநெறித் தேற்றம்
மாநெறிக் கலையின் மெய்ந்நிலை யோர்ந்தே
பாநெறி யாற்றலுஞ் சொற்பொருள் தேற்றமும்
ஒங்குற வோங்கி உணர்வுறு முளத்தால்
ஓம்மொழி முதலென மெய்ப்பொருள் தேர்ந்தே
தேமொழித் தெளிதிறன் திருநிலை யோர்ந்தே
மொழியியற் கலையின் முன்னுறும் நெறிநிலை
மொழிக்கலை இயலாய் முன்னுவ தோந்தே
ஓம்மொழி யோங்கலை யோம்நெறி யோம்மறை
ஓம்முதற் பொருளறி ஒளிநிலைத் திறனாய்
மொழிமுதற் கூறாய் ஓம்முதற் கண்டே
மொழியிய லாயுறும் முறைநெறி யியலே 619

கால மாத்திரை இயல்தெரி யளவால்
கோல மாயியல் நல்லொலி யோசை
இரண்டே யளவை நெடிலியற் றன்மை
திரண்டுறும் மாத்திரை ஒசை யளவென
முரணுறா நெறிக்கலை முந்து முதற்கலை
அரணுறுந் திறனாய் ஐவகை இயல்நிலை
மெய்வகைத் திறத்தின் உண்மை யோர்ந்தே
உய்வகை உயிர்க்கலை உயிர்ப்பொருள் நாடி
உயிரெழுத் தியல்நிலை உயிர்ப்புறு மாற்றல்
உயிரொளி உடலொளி உயிர்ப்புறத் தேர்ந்தே
எழுத்தியல் மாநெறி இன்றமிழ்க் கலைநெறி
எழுத்தியற் சிற்பம் எண்ணெறி ஓர்ந்தே
வல்லின மெல்லினம் இடையின மார்ப்பொலி
தொல்லியல் கலைநெறிச் சொற்பொருள் முறைநெறித்
தொல்லெழுத் தியல்நெறி எழுத்துறு மோசை
சொல்லொலி இயலொலி சொற்கலை மூலம்
பொருளொளி முற்றும் பொருண்மைத் தெருண்மை
மருண்மை தவிர்த்தே மெல்லொலி கூட்டொலி
ஒலிமுதற் பொருளா யொளிமுத லுருவாய்
ஒலியிசைத் திறனாய் ஓம்முதல் நெறிக்கலை
நாடுவ நாடி நலமுற வாய்ந்தே
கூடுவ கூட்டி எட்டின் பிறழ்நிலை
தேடுறும் ஒன்பா னியல்நிலை யறிந்தே
நாடுறும் நற்கலை மெய்ப்பொருள் திறத்தால்
எட்டின் கலைநிலை விரிநிலை யொன்பான்
விட்டுறுங் கலைநிலை மெய்ந்நிலை யோர்ந்தே
விட்டிசை விளங்கிசை ஓங்கிசை பாங்கிசை
தெட்டுறும் உயிர்ப்பொருள் சீரொலி யாய்ந்தே
ஒலியிசை முதற்பொருள் உன்னுவ உன்னி
நலியா மாத்திரை அளவிய லாய்ந்தே
கணக்கியல் மாறாக் கலைநெறி யுற்றே
கணக்கின் அளவியல் காலமுந் தேர்ந்தே
ஒலிஒளி இயல்நிலை உள்ளுறத் தேர்ந்தே

ஒலியிசை யோசை நுனுக்க மாய்ந்தே
எழுத்தியற் சிரசை நேரசை நேரிசை
வழுத்து மாவொலி நுனுக்க மாய்ந்தே
உயிரெழுத் தியல்திறன் மெய்யெழுத் தியல்நிலை
உயிர்மெய் யாக்கம் மெய்க்கலை மூலம்
செயிரற நோக்கிச் செந்தமி ழியற்கலை
மயலறத் தெளிந்தே நுண்ணுணர் வாற்றலால்
ஒலியொளித் திறனுற நெறிமுறை யாய்தல்
ஒலிமிகும் எழுத்தியல் இயல்நெறித் திறனே 621

ஈறா றாயிரு மியல்பி னறிந்து
மாறாச் செந்நெறி மெய்க்கலை யோர்ந்து
மூவர் றியல்நிலை மெல்லிய லாக்கம்
மூவாக் கலைநிலை முகிழ்பொரு ளாய்ந்தே
உயிர்க்கலை மெய்யியல் உயிரியற் றிறனறி
உயிர்ப்பொரு ளாய்தல் மொழிநிலைக் கலையே 630

எழுத்தியல் மூலம் இயைபுறத் தெரிந்தே
வழுத்து மாநெறி வளர்கலை எண்ணியல்
நெறிநல் குறியும் நிலையுற் றோர்ந்தே
குறிநிலைக் குறிப்பின் குறித்திறன் ஆய்ந்துணர்
மதியா லுளத்துனர் வோங்கும் நிலையியல்
மதிஒளி யியல்நிலை உணர்வார் கூற்றே 665

அஇ உஎ ஒக்குறில் ஐந்தும்
ஆஈ ஊஏ ஐஓ ஒநெடில்
ஈரா றுயிர்நிலை எண்ணித் தேர்ந்தே
மூவா றுறும்மெய் முன்னி யுணர்ந்தே
உயிர்மெய் நிலைக்கலை மெய்யுயிர் எழுத்தாய்
செயிரற நோக்கித் திருவுறக் காண்டல்
எழுத்தியல் நுட்ப மெழுங்கலைத் திட்பம்
எழுத்துறும் நெறிநிலை குறிநிலை வரைவே 671

ஐந்தியல் மெய்ந்நெறி அருங்கலை யுணர்வால்
ஐந்திசைச் சிற்பம் ஒவிய மாக்கலை

முந்துறும் உணர்வின் மெய்ப்பொருள் தெரிந்தே
வந்துறுமி இயல்நெறி அறுபான் நான்கின்
மூலம் கண்டே வலமிடச் சுழல்நெறி
கால விரைவியல் கருத்துற நோக்கி
எட்டின் பிறழ்நிலை என்றுணர் வுற்றே
விட்டுறும் நெறிக்கலை ஆடலான் நெறிநிலை
சிற்றவைத் திருநிலை பெருநிலைக் கலையாய்
உற்றறி மாண்பால் ஒருநிலை நோக்கி
உளத்து மாண்பால் ஒருநிலை நோக்கி
உளத்து ஞுணர்நிலை உற்றுள் ளோங்கி
களமா மறுபா னான்கி னைந்தில்
அி உஎ ஒநிலை யாய்ந்து
அி உஎ நாற்புறம் நிலைத்தே
ஓர்ந்துணர் கூர்நெறி ஒள்ளியல் உணர்ந்தே
ஒநிலை மூலம் ஓம்கலை யாற்றல்
அி உஎ ஒநிலை ஐந்தே
அருங்கலை மூலம் பெருங்கலை நுட்பம்
நுண்ணிதி நுவன்று நுவலுறுந் திறத்தால்
எண்கலை ஐந்திய லியம்புமா நெறியே 678

ஒருநிலைப் பெருங்கலை இருகூற் றியலாய்
வருநிலை முத்திறன் மூவின மாய்த்திகழ்
அறுபா னான்கின் அருந்தமிழ்க் கற்றியல்
உறுநெறி மூல முற்றறி வோர்ந்தே
ஒண்கலைத் திறத்தி னுள்றுவ உள்ளி
எண்கலை எட்டெட் டியல்நெறி ஆய்ந்தே
எழுத்தொலி எழுத்தொளி சிற்ப நல்லிசை
வழுத்தும் பைந்தமி ழோவிய வண்ணம்
ஓவியச் சித்திரச் சிற்ப மாத்தமிழ்
மேவுறு மாற்றலால் நிலைபெற் றோர்ந்தே
சித்திற மோவியஞ் சிற்பச் செந்தமிழ்
மெய்த்தக வோங்கு மெண்ணிய லாக்கம்
ஐயைந் தியல்நெறி ஆக்க மாநெறி

ஐந்நெறி ஐந்திய லருங்கலை நுட்பம்
ஓசை யொலித்திற மூலமா நுட்பம்
மாசறத் தெரிக்கும் மொழியியற் கலையாய்
மெய்யுற் றியல்நெறி உயிர்நெறித் திறனிலை
மெய்க்கலை நுண்ணுணர் வுற்றுறும் திறனாய்
உள்ளி உள்ளி உணர்வொலித் திறனால்
தெள்ளு மாத்தமி ழைந்தொலி யியல்நிலை
விள்ளு செந்தமிழ் ஐந்திசை கண்டே
உள்ளும் மூவின வொலியியல் காண்டல்
நெறிமுறை அறுபான் நான்கியல் மரபே

எழுத்தி னியல்தெரி நிலைகலை யாக்கம்
முழுக்கலை மாநெறி எண்ணெறி யியல்பின்
விழுமிய பருப்பொருள் கருப்பொரு ளோர்ந்து
செழுநிலை யுரிப்பொருள் சீர்நிலை தெரிந்தே
மூல முப்பொரு ளியல்நிலைத் திறத்தால்
காலமும் இடமுங் கருத்துறத் தேர்ந்தே
குறிப்புறுந் திறனிலைக் குறிப்புறுங் குறிப்பின்
குறிநிலை யியற்கலை கூர்நிலைத் தெளிவாய்
உன்னி உன்னி உள்ளுற் றாய்தல்
முன்றுறும் முனைப்பால் முயல்நெறி நோக்கி
ஆக்குறும் மெய்க்கலை அறிவியல் எண்ணியல்
மூலமும் காலமும் முன்னிலை நோக்கி
மூலப் பொருளியல் மெய்ந்நெறி யியலால்
ஒன்றுறும் உணர்வே ஒன்றினின் றொன்றாய்
ஒன்றே நிலைகலை ஒன்றே மூலம்
ஒன்றுறும் நெறிமுதல் பொருளுற் றோர்ந்தே
தென்திசை தென்மொழி தென்தமிழ்க் கலைநிலை
எழுத்திய லாக்க மிலங்குறுந் தூநெறி
எழுத்துறும் வடிவம் நேர்க்கோட் டியல்நிலை
வளைநிலைக் கோடுறும் புள்ளி மாக்கலை
வளைநிலை இடைநிலைப் புள்ளி எழுத்தாய்
விளங்கும் நேரொலி ஓம்நிலைக் கலையால்

ஓமெழுத் துறுநிலை வடிவம் விளங்கி
ஓமுதற் பொருள்நிலை யுள்ளூறும் ஆற்றல்
நிலைகலை நெறியியல் நற்றமி ழாய்ந்தே
கலைமொழி தமிழெனக் கழறல் வழக்கே 683

பொருண்மை சுட்டல் பொருளறி மெய்க்கலை
தெருண்மை நோக்கல் சீரறி வாற்றல்
மருண்மை தவிர்த்தல் மாக்கலை நெறியாய்த்
தெருளூறுஞ் சிற்ப மோவியஞ் செந்தமிழ்
இசைநிலை ஒலிநிலை ஒளிநிலைக் கலையால்
நசையற நோக்கி நாடுவ நாடி
எண்ணிலை யியல்மொழி யைந்தியல் மொழியாய்த்
தெண்ணிலை நெறிக்கலை சீரறி வுற்றே
மொழிக்கலை யுணர்ந்தே முன்னறி வுற்றே
மெய்முதற் பொருள்நிலை முன்னி யுணர்ந்தே
கலைமொழி யியல்மொழி கருத்துற் றாய்ந்தே
நிலைமொழி நெறியால் நீள நினைந்தே
கடிதி னோக்கிக் கருப்பொரு ளாய்ந்து
நெடிதி னுணர்ந்து நெறிக்கலை நுட்பம்
ஒங்குற வோக்கி வுணர்வுறுந் திறத்தால்
தேங்குறுஞ் சீர்நிலை தெள்ளூற் றாய்ந்தே
அயரா துழைக்கு மரும்பெரு மாற்றலும்
மயலறு மதியும் மதிஒளி நுட்பமும்
செயிரறப் பெற்றே செந்நெறி நிலைத்திறன்
உயிர்ப்பு முணர்வு மொளிநிலைப் பெருக்கம்
நன்றுறும் ஒளிநிலை மூலத் தியல்நெறி
ஒன்றுற் றோர்ந்தே உண்மை காண்டுழி
மெய்ப்பொருள் நிலைகலை மெய்யிய லுணர்ந்தே
மெய்நிலை செப்பல் கலைமொழி வழக்கே 685

நிலைமொழி நேர்மொழி நெறிமொழித் திறனால்
தலைமொழி கலைமொழி தன்னிலை ஆய்ந்தே
மொழியில் நுட்பம் மூலத் தாய்ந்தே
மொழிக்கலை உயிர்த்திறன் முன்னிலை நோக்கி

அஇ உஎ ஒநிலை ஐந்தும்
ஆஈ ஊஏ ஐஓ ஔநெடில்
உயிரீ றாறாய் ஓங்குறும் திறனிலை
ஒயிரறத் தேர்ந்தே ஓம்நிலை முதற்கலை
முதலுறும் ஓம்எழுத் தியனிலை யாய்ந்து
முதற்பொருள் முதற்கலை முதன்நெறி மூலம்
ஒருங்குற் றியல்நெறி உள்ளுறும் திறத்தால்
மருங்கின் எழுதரும் மாவொலி ஓசை
சீருறும் ஓம்நெறி செந்தமிழ் விண்ணொலி
நேருறும் திருமறை பெருமறை நிறைமொழி
உண்மையும் வண்மையும் உவப்புற் றாய்ந்தே
நுண்மையும் எண்மையும் எட்டியல் மூலமும்
எட்டின் விரிவும் இயல்புற நோக்கி
எட்டெட் டியல்நெறி மூலத் திறத்தால்
ஓம்நிலை கலைமொழி உயிரீ றாறும்
ஓம்நெறி மரபால் உரைக்குமா நெறியே 754

புலனொருங் குறுநிலை பெருநிலை வீரம்
புலனிலை யுணர்தல் மெய்ந்நெறி ஆய்தல்
புலநெறி யாற்றல் பொற்புறுந் திறத்தால்
நலமுறும் சிற்றவைச் சீரியல் உணர்தல்
தலைநெறி அறுபான் நான்கியல் கணக்கே
நிலைநெறி மூலத் தமிழ்நெறி மரபாய்
அகவிண் ணொளிநிலை ஆர்ந்துறும் கணக்காய்
அகவின் ஒலிநிலை நேர்ந்துறும் எழுத்தாய்
இயங்கு மாநெறி இயல்வன் னோர்ந்து
வயங்குசீர் பெருநெறி உண்மை தேர்ந்தே
நன்மொழிக் கணக்கியல் தென்மொழிக் கலையியல்
தென்னியல் சுழலல் சீர்நிலை ஓர்ந்தே
எட்டின் பிறழ்நிலை இயங்குறுங் காலலை
நெட்டுறும் தென்திசை நிலையென் றாய்ந்து
தென்புலம் தென்மொழி தென்கலை ஓம்நெறி
நன்னெறி ஓம்எழுத் தியல்நிலை ஆய்ந்து

தென்றமிழ் முதலெழுத் தியல்நெறிக் கலைச்சீர்
நன்றுறும் ஓம்எழுத் துறுநெறி யியலே 763

செந்தமிழ்க் கலைநெறி தமிழிய லொளிநெறி
வந்ததொல் மரபுறும் செங்கதிர்த் தூநெறி
முந்துமெய்ப் பொருள்நெறித் தமிழ்மயன் சீர்நெறி
வந்துறுங் கலைமொழி வண்டமிழ் வளநெறி
நெறிமுதற் பொருளியல் நிலைபெற் றோர்ந்தே
குறிமுத லாக்கம் கலைமொழி யோர்ந்து
தண்டமிழ் மயன்நெறி ஓம்நெறிக் கலைச்சீர்
வண்டமி ழைம்மறைச் செம்மறை மும்மறை
ஓம்மறை முதற்சீர் ஒருங்குற் றோங்கி
ஓம்முத லெழுத்தாய் ஒளிஒலி யியல்சீர்
எட்டின் நிலைதெரி யியற்றிற னோங்கி
எட்டுறும் பிறழ்நிலை இயல்நிலை தேர்ந்தே
அமிழொலி இமிழொலி குமிழொலித் தமிழொலி
உமிழொலி ஒமியல் ஒங்குறுஞ் செந்தமிழ்
நிலைக்கலை யாற்றல் நெறிமுதற் கலைநிலை
கலைநெறி யறுபான் நான்கிய லாற்றலால்
எட்டுறும் நிலைதெரி யெண்ணிலை மூலம்
எட்டெட் டியல்தெரி மூல மாக்கலை
ஒளிமுதற் பொருள்நிலை ஒளிநிலைக் கலைநிலை
ஒளியிய லாற்றல் ஒளியியல் நோக்கம்
அகவின் னிலைக்கலை யைந்நிலை நெறிதரும்
மிகுமொளிக் கலைதெரி மெய்ப்பொருள் நெறிநிலை
வகுத்துறு மாற்றல் ஐயைந் தியலல்
தொகுத்துறுஞ் சுழல்நிலைப் படுத்துறும் பெருங்கலை
மையப் புள்ளி மாநெறி நுட்பம்
வையங் கூட்டும் இயல்நெறி யோர்ந்து
தண்டமிழ் முதற்கலை ஓம்நிலைக் கலைநிலை
வண்டமிழ் வளநிலைக் காலமா விரைவியல்
ஒளிநிலைக் கிற்றொளி ஓங்குறும் ஒளிநிலை
வெளிநிலை யியல்தெரி மெய்ந்நிலை யாக்கம்

மெய்ப்பொரு ளியல்தெரி நுணுக்க மாக்கலை
மெய்யியல் மெய்ந்நிலை மெய்க்கலை இயங்குபு
அணுவணுத் திரளொலி அலையொலி யோசை
கலைநிலைக் கலையொலிக் கீற்றொளி நோக்கி
ஒமுறும் நிலையியல் ஒலிநிலை யொளிக்கலை
ஒமுறுங் கலைத்திறன் ஒண்டமி ழாக்கம்
எண்ணிலைக் கலைநிலை இயல்புற் றோர்ந்தே
எண்முறை யாக்கம் மெய்யுணர் பொருளறி
நிலமுறை யாக்கம் நெறியுறத் தேர்ந்தே
கலைமுறை தெரிந்தே கழறல் மெய்நெறி
ஒன்பான் நிலையியல் ஓம்நெறி யாக்கம்
நன்றுறும் எட்டின் பிறழ்நிலை நிலைக்கலை
தென்றமி ழியலெனத் தெளிந்துறும் மூலம்
ஒன்றுறும் ஒளிக்கலை இயலென் றோர்ந்தே
நெறித்திறன் நோக்கி நிலைத்திற னுய்தல்
குறித்திறன் நெறியியல் குறிப்பிற் றெரித்தே
இயல்நெறி திறத்தால் எண்ணிலை நோக்கி
இயங்கல் இயக்கம் எண்ணுற நோக்கி
அறுபான் நான்கியல் அமைவுறும் ஆற்றல்
உறுநிலைக் கலைநெறி யுணர்த்துமா நெறியே 769

எழுத்தியல் நுட்பம் வழுத்து மாநெறி
பகுதில் அறுபான் நான்குறும் நாற்புறம்
ஐந்தியல் நுணுக்கம் அகமுற் றோர்ந்தே
முந்து செந்தமிழ் முறைநெறி ஆய்நிலை
எட்டின் பிறழ்நிலை ஓம்நெறி யோர்ந்து
தெட்டுறும் ஓம்எழுத் திறனிலை யாற்றலால்
மொழிமுத லெழுத்தாய் ஒலியியல் ஓசை
எழுத்துறும் இயல்நிலை இயல்பினி னோர்ந்தே
உயிர்க்குறில் உயிர்நெடில் ஐந்து மேழுமாய்
செயிரற நோக்கி மொழியியல் கண்டே
மூவகை யினமும் மெய்யுயிர் நிலைத்திறன்
பாவகை யியலும் ஓசை ஒளியியல்

அளவை மாத்திரை காலக் கணியியல்
அளவை நெடிதியல் நெடிதுறும் கோட்டியல்
கோட்டியல் வரிவியல் ஒலியியல் ஒளியியல்
நீட்டியல் பெருக்கியல் நிலையியல் கலையியல்
இயல்நிலை மொழியியல் இனிதி னுணர்ந்தே
மயன்நெறிச் சிற்றவை அறுபான் நான்கியல்
இயல்முறை ஐந்தையும் எண்கலைத் திறத்தால்
தண்டமிழ்க் கணக்கியல் செந்தமிழ்ச் சிற்றவை
வண்டமிழ் மயன்நெறி அளவியல் ஆய்ந்தே
மொழியியல் நுட்பம் மூலம் ஆய்ந்தே
எழுநிலை எண்ணிலை ஆய்தல்மா நெறியே 779

எழுத்தறி மூலம் எண்ணறி காலம்
முழுநிலை ஒலியால் செழுநிலை ஒளியியல்
எழுமுணர் முயற்சி இயைநிலைக் கூட்டி
விழும்ஒலி நிலைக்கலை மெய்நெறி யாக்கம்
ஐந்தெழுத் துறுநிலை அகத்துறும் உணர்வால்
வந்துறும் நெறிமர பியல்நிலை வகுத்தே
இடையுறும் நிலைக்கலை நாற்புறத் தெழுநிலை
நடையுறும் காலத் தியல்தரும் சுழல்நிலை
ஐயைந் தைந்தாய் அணியுறும் நிலைத்திறன்
உய்நிலைக் கலைத்திறன் அறுநிலத் தியல்நிலை
அஇ உஎ ஒநிலை ஆய்ந்தே
அந்நிலை முந்நிலை செந்நெறி தேர்ந்தே
தொன்னெறி மாறாத் தூநெறி யாக்கம்
தென்னெறி தென்கலை தென்மொழி யியற்றிறன்
மன்னுறும் உயிரெழுத் தியல்நிலை ஒலிநிலை
பன்னுறும் சிற்பம் பகர்நிலை யாக்கம்
உன்னுறும் ஓவியம் மெய்க்கலை யுணர்ந்தே
தொன்மை நெறியால் ஓமெழுத் தோவியம்
ஓம்கலை சிற்பம் ஓம்மொழி ஓந்தமிழ்
ஓம்இசை தமிழிசை இமிழிசை அமிழிசை
குமிழிசை உமிழிசை கூர்மதி யாய்ந்து

தமிழியல் ஐந்திறம் ஐந்தியல் தன்மை
எழுத்தியல் நுட்பம் ஒளியுயிர் உணர்வே
எழுத்தொலி எழுத்தொளி உருவுறும் நிலையே 791

கோட்டுரு வாக்கம் குறைவற நோக்கி
நீட்டுரு கோட்டுரு நெடிதுரு நினைந்தே
கோட்டுரு வரிவியல் புள்ளிமாக் கலைத்திறன்
திட்டுறும் குறியே சித்திரக் குறியாய்
நீட்டுறும் நெறியியல் நிலைபெறல் ஓங்கி
சித்திரக் குறியே சீர்மெய் மாநெறி
சித்திர நெறியே மெய்க்கலை யியல்நெறி
சித்திரம் ஓவியம் சிற்பம் கட்டிடம்
சித்திர முலமே வரைநிலை கோலம்
திட்டலும் எழுதலும் வரைதலும் குறித்தலும்
நாட்டுறப் பொறித்தலும் கல்லிற் செதுக்கலும்
ஏட்டில் எழுதலும் எண்ணிலைக் காண்டலும்
நாட்டுறும் கலைத்திறன் நற்றிற முலமாய்
எழுத்தே வரிவியல் ஒளியியல் ஒலியியல்
எழுத்தே வடிவியல் கலையியல் நேரியல்
எழுத்தியல் சிற்பம் இசையியல் சிற்பம்
வழுத்து மாக்கலை வகைபெற நோக்கி
முழுமதி யாற்றல் முக்கலைத் திறனாய்
செழும்பொருள் சீர்ப்பொருள் பெரும்பொருள் உரிப்பொருள்
முழுப்பொருள் மெய்ந்நிலை கலைத்திறன் ஆய்ந்தே
பொருளெலாம் நல்கும் பைந்தமிழ்த் திறநிலை
பொருளெலாங் கூட்டும் நீட்டுரு நெட்டுரு
திருவுற வமைத்தே செந்தமிழ் வரைதல்
வருங்கலைக் கணக்கும் மொழிநிலை இயலும்
திருவுற் றறிவோர் பெருமதித் திறத்தால்
கருத்துறக் காண்டல் கலைநிலை யியலே 819

முன்னுறும் முலம் அகவின் ஒளிநிலை
துன்னுறும் கலைத்திறன் சீர்நெறிக் கலையியல்
எண்கலத் திறன்நிலை இயல்நிலை ஆற்றல்

விண்கலை ஒளிரும் தென்றமிழ் மொழியியல்
நுண்கலை நுணுக்கம் நுவலரும் சீர்த்தி
பண்கலை ஏழிசை வாழிசை வளரிசை
நேரிசை சீரிசை நிலையிசை கலையிசை
தேரிசை தமிழிசை தொல்லிசை நல்லிசை
இசைமுதல் நட்பம் இனிதுற வாய்ந்தே
நசையறும் அசைநிலை அசைவொலி இயல்திறன்
நுட்பம் கண்டே நுண்பொருள் ஆய்ந்தே
திட்ப மாநெறி சீர்நிலை உணர்ந்தே
மொழியியல் மூலம் ஒலியியல் காலம்
மொழிக்கலை நுணுக்கம் மெய்ப்பொருள் திட்பம்
மொழிமுதற் கலைநெறி விழியியல் நிலைநெறி
மொழிமுதல் கூர்மை முழுதும் நோக்கி
மொழிப்பயன் ஆக்கம் விழிப்பயன் நோக்கம்
முழுமுதற் பொருளாய் மூவகை இயலும்
ஐவகை யியல்தெரி செய்வகைப் பொருளும்
கைவகை ஆற்றலும் கண்வகை நோக்கமும்
கருத்துணர் ஆற்றலும் கலைநிலை நாடிப்
பொருந்துவ நோக்கி புலனெறிக் கண்டே 834

எண்ணுறும் உணர்வால் இயல்நெறிக் கலையும்
நண்ணுறும் சிற்றவை நயமுறத் தெரிந்தே
கண்ணொளித் திறனால் விண்ணொளி ஆய்ந்து
எண்ணொளி இயலாய் எண்ணிலை நோக்கி
அறுபான் நான்கியல் சிற்றவை மாநெறி
உறுகலை யியல்நெறி ஓங்குறும் கணக்கியல்
ஏழிசை வாழிசை இயங்கிசை நல்லிசை
தாழிசை வளரிசை சீரிசை நேரிசை
இசைநிலை மூலம் எண்கலை நோக்கி
நகையறும் உணர்வால் நாடும் பொருளும்
முந்நெறி முக்கலை மூலமும் தேர்ந்தே
செந்நெறி சீர்நெறி தேர்நெறி ஆய்ந்தே
தேர்க்கலை பொழுதியல் சீருற நோக்கி

ஏர்க்கலை நிலையியல் இனிதின் ஆய்ந்தே
போர்க்கலைக் காலம் புனிதமா நெறியும்
நேர்க்கோட் டியலாய் நிலையுறும் திறமும்
ஒளிமொழி யியல்நெறி உள்ளுணர் நிலைகலை
வெளியொளித் திறனால் மேவுறும் மாக்கலை
நுண்கலை நுட்பம் நுவலு மாநெறி
எண்கலை இயலல் இயம்பும் சீர்மை
எண்ணுறும் திறத்தால் உணர்நிலை ஓங்கி
எண்கலை இயலால் ஆயல்மா நெறியே 844

மொழியே மூலம் மொழிக்கலை யியலாய்
மொழிநிலை ஐந்தியல் ஒளியியல் திறனால்
ஒளியியல் நுட்பம் விண்மொழி வெளிமொழி
மொழிக்கலை யியலாய் முன்னுவ முன்னி
ஆன்றசெந் தமிழ்மொழி அருங்கணக் கியலும்
ஒன்றுறும் நிலைகலை எண்கலை நுட்பமும்
ஒருங்குற நோக்கி உள்ளுணர் வுற்றே
நெருங்குபே ரறிவால் நிலைமுறை நாடி
கருத்தும்கலையும் கருந்துற் றோர்ந்தே
வருநிலை காலம் வகைநிலை யியலாய்
ஐந்துறும் பொருள்நிலை செம்பொருள் உயிர்ப்பாய்
ஐந்தியல் கலையாய் நெறிமுறை நோக்கி
வந்ததொல் மரபியல் வகுத்துணர் நோக்கமும்
ஆக்கமும் உணர்வும் ஐங்கலை நிலையாய்
நோக்குற நோக்கி நுனுகி உணர்ந்தே
செந்தமிழ்க் கலைநிலை சீர்நெறித் திருநெறி
பைந்தமிழ்க் கலைநெறி பழகுறுந் திறத்தால்
முந்துசெந் தமிழ்நிலை முக்கலை முப்பொருள்
வந்த மாநெறி மெய்க்கலை யியலாய்
எழுத்தியல் சொல்லியல் பொருளியல் கட்டியல்
பழுத்துறும் அணியியல் பாங்குறத் தேர்ந்தே
மொழிக்கலை மூலத் தியல்நெறி ஆற்றலால்
மொழிமுதல் பொருள்நிலை மொழியுமா நெறியே 845

எழுத்துறும் வடிவம் இயல்பின் நோக்கி
வழுத்து மாநெறி யியற்கலை ஆய்ந்தே
வல்லினம் மெல்லினம் இடையினக் கூறாய்
தொல்நிலை இருகூ றாக்கமு வினமாய்
ஐங்கலை ஐந்நெறி நிலைமா றாமல்
அங்குறும் முலத் தியல்நெறி நோக்கி
அஇ எஉ ஒநிலை நோக்கி
அஇ அந்நெறி அம்முறை ஆய்ந்தே
உஎ மெய்நெறி உட்பொருள் தேர்ந்தே
ஒநிலை முலம் உறுபொருள் கண்டே
உயிர்எழுத் தியல்நெறி உயிர்த்திறன் நோக்கி
உயிர்நெறி உணர்வொளி யியற்கலை ஆய்ந்தே
உயிர்மெய் எழுத்தியல் நெறித்திறன் ஆய்ந்தே
எழுத்தியல் நுட்பம் மொழியியல் திட்பம்
பழுத்த முதறிஞர் பகர்நிலை நோக்கி
முந்துசெந் தமிழ்க்கலை முந்நெறி யாய்ந்து
வந்ததொல் லியல்நெறி விளம்பல்மா நெறியே 848

மொழியியல் நுட்பம் மொழிக்கலை முலம்
மொழியியல் திட்பம் மொழிமுறை நெறியால்
எழுத்தே சொற்பொருள் கட்டணி யைந்தும்
வழுத்து மாநெறி வண்டமிழ்த் தூநெறி
பழுத்தமு தறிஞர் பாங்குற் றுணரும்
எழுத்தியல் நுட்பம் நேர்க்கோட் டியல்நெறி
நேர்க்கோட் டியலும் நிலைக்கோட் டியலும்
நேர்க்கோட் டியல்நிலை புள்ளிமா இயலும்
நேர்க்கோட் டியல்நிலை மேல்வளை கீழ்இயல்
நேர்க்கோட் டுறும்நிலை கீழ்வளை குரல்நின்
புள்ளிக் குறியாய்க் கோடுறும் கோட்டியல்
வில்லுறும் வளைநிலை நடுவுறும் புள்ளி
அமுதல் ஔநிலை உயிர்பன் னிராய்
கமுதல் னநிலை மெய்யியல் ஆகி
வல்மெல் லிடையினம் மூவின ஓசை

தொல்நெறி மொழியியல் சொற்பொருள் உணர்த்தி
எழுத்தியல் சொல்லியல் பொருளியல் கட்டியல்
வழுத்தும் அணியியல் வகைகிளர் ஐந்தாய்
மொழிநிலை நுணுக்கம் மென்றமிழ் இன்றமிழ்
மொழியியல் நோக்கி முன்றுறும் மெய்க்கலை
மொழிஒளி மொழியாய் மொழிஒலித் திறனாய்
எழிலியல் தொழிலியல் பயிலியல் விளக்கும்
மொழியியல் பெயர்வினை வகுத்துறுந் திறனிலை
மொழிக்கலை நுணுக்கம் ஒருமொழி பெருமொழி
நுட்பங் கண்டே நுவல்கலை யியற்றிறல்
திட்பம் செய்யும் சீரியல் ஆய்ந்தே
மொழிக்கலை வளமுறும் மொழியியல் நுட்பம்
மொழியியல் மொழியும் ஐந்தியல் நெறியே 864

சிற்பம்

கற்கும் பொருளைக் காட்டும் பொருளாய்
நிற்கும் பொருளை நெறியுறத் தோற்றி
உற்றறி வுணர்வும் ஒருங்குறக் கூட்டி
தெற்றெனும் இசைநிலை செவ்விதி னுணர்த்திச்
செயிரறு முயிர்ப்பாய்த் தேற்றந் தோற்றி
உயிர்ப்பொரு ளுண்மை உவப்புறக் காட்டிச்
சிறப்புறுங் கலைப்பொருள் சிற்பம் என்ப 449

ஓவியஞ் சிற்பம் ஒருபொரு ளுணர்த்தும்
மேவுறுங் கலைத்திறன் மெய்யொளி தோற்றித்
திணைப்புறுந் திறத்தால் ஓவியக் கூறாய்
உணர்கெழு ஒலித்திறன் ஒளித்திற னோங்கி
உணர்நிலைச் சிற்பம் மெய்க்கலை கூட்டும் 450

சிற்பம் ஓவியம் இசைக்கலை யறிந்தோர்
பொற்புறுந் தமிழுணர் பொருந்துவ ரன்றே 528

கண்டுணர் கலைநெறி கேட்டுணர் கலைத்திறன்
விண்டுணர் ஓம்நெறி வெளியுணர் ஓசை
இயல்நெறி ஐந்தா யிசைநெறி யைந்தாய்
முயல்கூற் றைந்தாய் முன்னிய முன்னி
ஐந்தின் ஆற்றல் எண்ணிலை கலையென
முந்துசெந் தமிழ்க்கலைச் சிற்பம் சாற்றுமே 568

ஒன்று நோக்கியே உணர்வுறு மாற்றல்
நன்றுறும் மூல நுட்பத் திறனறி
உணர்வாற் றிகழும் ஒருபெருங் கலைத்திறன்
உணர்வின் நோக்கித் திருவினைச் செயலால்
கோட்டின் மூலம் குறுநிலை நோக்கிக்
கோட்டியல் நெறிநிலை நேர்க்கோட் டியலாய்
அண்டமும் பிண்டமும் அமைவுறக் காட்டி
விண்ணொளி மண்திறன் வியப்புறத் தேர்த்தே

நோக்குறுங் கோட்டியல் நுணுக்க மாய்ந்தே
ஆக்குறுந் தேர்க்கலை அமைப்பிய லார்ந்தே
நேர்த்தேர் நிலையியல் நெறிபெறத் தேர்ந்து
தேர்நே ராக்கம் சீர்பெறக் குறித்தே
சீரின் நுட்பம் தேரின் திட்பம்
நேர்க்கோட் டியல்நெறி நிலையுற் றாய்ந்தே
ஐந்நிலை காண்டல் மெய்ந்நெறி கூட்டும்
ஐங்கலை யியல்தெரி மெய்ப்பொரு ளோர்ந்தே
கோட்டின் ஆக்கம் குறிக்கும் பொருளியல்
கோட்டமில் உளத்தால் குறிப்புற் றாய்ந்தே
நாட்டமு மாய்வும் நவையறத் தெரித்தே
கோட்டுருத் தேர்நிலைக் குறித்திய லாய்ந்தே
நோக்கி நோக்கி நுண்ணுணர் வாற்றெரி
ஆக்குறுங் கலைநிலை எழுத்தியற் சிற்பமே 634

குறிநிலை குறித்தே குறிப்பி னுணர்ந்தே
நெறிநிலை யியல்நெறி நீள நினைந்தே
அறிகலை யியல்நெறி அமைவுற் றாய்ந்தே
பொறிபுல னிலைதெரிப் பொற்புறு மியக்கம்
நிலையுறக் கண்டுழி நிலையுறு முணர்வால்
கலைநெறி நின்றே அகவிண் ணொளியால்
நோக்குபு நோக்கி நுணுக்குற வாய்ந்தே
ஆக்குறு மியலா லண்டம் பிண்டம்
கண்டு தெளிந்தே கலைபல வோர்ந்தே
மண்டுறு மைங்குடி மாக்கலை யாய்ந்தே
அனலும் புனலும் கால்வெளி ஞாலம்
நினைவுற் றுணர்ந்தே நெறியி னினைந்தே
ஐம்பொரு ளைங்கலை மெய்யுற நோக்கிச்
செம்பொருட் செந்நெறிச் சீர்நிலைக் கலையால்
ஐந்தியற் சிற்பம் ஐந்திசைச் சிற்பம்
முந்துறும் நிலைக்கலை நெறிமுத லோர்ந்தே
வந்துறுந் தமிழ்மர பியல்நெறி யாற்றல்
தந்த மாக்கலை மெய்க்கலை முலம்

செந்தமி ழியல்நெறிச் சிற்ப மாநெறி
முந்துறு மோவியம் முறைமையிற் றெரித்தே
வந்த மாநெறி என்ணெண் கலையே 643

ஓங்கொளி யுள்ளத் தகநிலை யாய்வோர்
தேங்கொளி விண்ணில் தீதறக் கண்டே
விண்கலை எண்கலை விளங்கக் கண்டுணர்
நுண்கலைச் சிற்பம் நற்றமிழ் தெரிவரே 669

நெறிநிலை யுறுகலை நிலையிற் றேர்ந்தே
நெறிகலை நுட்ப முணர்திறன் ஓர்ந்தே
ஐந்திய லைந்நெறிச் செந்நெறி யாக்கம்
முந்துறுஞ் சிற்பச் செந்தமி ழிசைநெறி
ஓவிய நுணுக்கம் ஒருங்குறந் தேர்ந்து
மேவுறும் பெருங்கலை நுட்பத் தியன்றே
எண்ணெறி யியன்றே யியல்புறத் தெரிந்தே
என்ணெண் ணியல்கலை யுட்திறத் தியல்நெறி
நெறியுற் றோர்ந்தே நிலைபெற் றாய்ந்தே
குறியுற் றியல்நெறிக் குறிப்புறத் தேர்ந்தே
சிற்பச் செந்தமிழ்ச் சீரிசை நுட்பம்
பொற்புற் றாய்தல் நெறிமுறை வழக்கே 674

தெளிவுற் றாய்ந்து சீர்நிலை நாடி
ஒளிநிலை யியலால் ஒங்குறும் ஆற்றலால்
உயிர்ப்பிய லுயிர்ப்பொரு லுயிர்ப்பு முயிர்நிலை
உயிர்க்குல முன்னி ஒருநிலை நோக்கே
ஆக்கும் உயிரெலாம் ஒளிஒலி யியலே
உயிருளம் உயிர்நெறி உயிர்க்கலை உயிர்மொழி
உயிரிசை ஐந்தும் உயிருணர் வொன்றி
உள்ளுவ உள்ளி ஒங்குறும் நெறியால்
தெள்ளு மாக்கலைச் சிற்பச் செந்தமிழ்
ஒவியச் சித்திரம் ஒருநெறித் தன்மையால்
மேவுறும் தன்மை மெய்நிலை அறிந்தே
சித்திர மோவியம் சிற்பச் செந்தமிழ்
மெய்த்தக நெறிநிலை மெய்யுற் றுணர்ந்தே

உள்ளொளி எண்ணிலை உயிரிய லாய்ந்தே
தெள்ளு மாத்தமி ழெண்கலை நெறியே 689

முந்துறும் ஆடல் ஆடலான் நெறிக்கலை
சிற்ப மெண்ணிலை சீருறும் நெறியறி
முற்றுங் கலைதெரி முறைதெரி யியலே 720

கருத்தும் வடிவுங் கலையுங் கண்டுழி
பொருத்த மாக்கலை மாநெறி தூநெறி
மொழியியல் கருத்தும் மாயியல் வடிவும்
பழுதிலாச் சிற்பம் பகரறும் ஒளிநிலை
வடிவுங் கருத்தும் இயல்நெறி மரபும்
நெடிதி னோக்கி கடிதி னுணர்ந்து
இசைக்கலை மொழிக்கலை சிற்பம் ஓவியம்
நசையறும் நடக்கலை ஒலிநிலை மெய்யியல்
நுண்ணிதின் நோக்கிச் சீர்நெறிப் பொருளாய்
சீரறி வுற்று நேரறித் திறனாய்
பேரறி வாற்றல் பெரிதின் நோக்குழி
உயிரொளிக் கருத்தும் உணர்வொளி வடிவம்
செயிரறத் தெரிக்கும் இயல்நிலைச் செயல்திறம்
உற்றுணர் மதியால் உள்ளுற வாய்ந்தே
கற்ற கலைமதி பெற்ற நுண்மதி
தெற்றென் னுணர்ந்து காலங் குறுக்கி
முற்றுறுங் காலம் முடுக்கும் நுணுக்கும்
உழைப்பும் உணர்வும் ஒருங்கு காண்டல்
பிழையிலா நெறியியல் சிற்பமா நெறியே
வெளிநிலை ஒளிக்கலை களியியல் வளியியல்
அளித்திறன் ஆய்நிலை முழுதும் ஓர்ந்தே
துணிநிலை இம்மி சிறுநிலைக் கூற்றும்
விரிவும் விளிப்பும் விறுவிறுப் பார்ந்து
நாற்புறத் தியல்நிலை நண்ணி ஓர்ந்தே
நாற்புறத் தியல்நிலை நண்ணி ஓர்ந்தே
ஏற்றுறுங் காலம் விரைவியற் காலம்
நகையறும் நோக்கால் சிறுபொழு தியல்நிலை

உளத்துணர் வோங்கி யுள்ளூறும் ஆற்றல்
களமும் காலம் பொருளும் கூட்டும்
நிலைநெறித் திறனாய்க் கலைநெறிச் செயலாய்
தலைநெறி உழைப்பாய் மலைநெறி நோக்காய்
நோக்குற நோக்கி நுண்ணுணர் வுற்றே
ஆக்குறும் மெய்க்கலை அளவியல் திறனாய்
உட்கலைத் திட்பம் உயிர்க்கலை நுட்பம்
பெட்புறும் ஆக்கத் தெண்ணில் நிலையாய்
ஒள்ளியல் கலைநெறி ஒண்ணிலை ஆக்கம்
தெள்ளூறுஞ் சீர்நிலை சீரறி வுற்றே
எண்ணியல் ஆக்கம் எண்ணெண் கலைநிலை
உண்ணோக் கியலே விண்ணோக் கியலாய்
நெறியா யுறுநிலை நிலையென் னுன்னி
அறிகலை ஆய்நெறி வெளியியற் றிறனே 722

நடம்

எழுமிசை யொலியா லேற்பன வறிந்தே
எழுமொலி யேற்றல் படுத்தல் நலித்தல்
ஒங்க லெழுப்பலு மிசைநெறித் திறனாய்
ஒங்குற வோங்கி ஒலிதரு மிசையால்
மெய்ப்பொருள் கூட்டி மெய்யுணர் வோங்கி
மெய்ந்நிலைக் கலையால் மெய்ந்நிலை மாறா
இசையொருங் குணர்ந்தே இன்னிசை முழக்கல்
நசையறுஞ் செந்தமிழ் நெறியினி துணர்த்தும் 454

இருவிழி நோக்கால் புருவநுண் ணெளிவால்
கருவிழி நோக்குறக் கருமணி கருத்துறும்
இசையும் எண்ணும் ஏற்புடைத் தாக்கி
வசைதீர் ஒலியின் வயங்குறத் தெரிந்து
தாள்நின யூன்றலும் தனிநிலை யோர்ந்துணர்
தாள்நிலை மாற்றலும் ஏற்றலும் விசலும்
நொடிநொடி நோக்கி நுவப்புற் றியங்கல்
கொடியிடை யாடல் குறித்துறு மியலாய்
ஒடிநிலைத் துவள்நிலை யொசிப்பும் நொசிப்பும்
கடிநிலைக் காலம் எண்ணும் நோக்கி
இன்னிசைக் கலைநெறி இயங்கலும் நோக்கி
துன்னிய ஆடல் நெறிவிளக் கும்மே 455

ஆடல் பாடல் அருந்தமிழ் நெறியே 456

அகமும் புறமும் வாழ்வியற் கலையே 457

சிறுகண் பெருங்கண் சீர்நிலை யாய்ந்தே
குறுங்கண் நிலைக்கண் மெய்ந்நிலை யோர்ந்தே
நெடுங்கண் நெறிக்கண் இயல்பினி துணர்ந்தே
ஏர்க்கண் சேர்க்கண் எழிநிலை தேர்ந்தே
புருவம் நெற்றிப் பொற்பின் ஆய்ந்தே
உருவத் தியல்தெரி மெய்ந்நிலை யீற்றல்

ஒலிய முலம் ஒள்ளித ழாக்கம்
ஒலியத் துயிராய் நிலைபெறும் நெறியே 506

வேல்விழிச் சேல்விழிக் கூரறி நுட்பம்
வாள்விழி மான்விழிச் சீரறி நுட்பம்
விழிக்கலை வல்லார் விழுமிய பொருளால்
மொழிக்கலை நாளும் ஒலியத் தெரிவால்
நீட்டுறும் நெறியால் நெறிநிலை நவில்வரே 513

வளைவுறும் நெறியே வனப்பெழில் கூட்டி
வளைவியல் நெறிக்கலை மெய்க்கலை யழகியல்
அளைவுறுந் திறத்தால் சுழற்கலை நெறியாய்
உளைவுறு மியற்றிறன் ஒருநெறி முறையாய்
வளைவிய லாக்கம் அழகியற் கலையாய்
நெறிமுறை யோர்தல் நெறியோர் திறனே 649

வாழ்வியற் கலையே மெய்க்கலை நுட்பம் 801

இசைக்கலை நுணுக்கம் இயற்றமிழ் ஆக்கம்
இசைநிலை இயக்கம் ஏழிசை நுணுக்கம்
கைக்கிளை விளரி துத்தம் முலமாய்
மெய்க்குரல் இசையாய் இசைநிலை ஓங்கி
அருந்திறல் நிலைக்கலை பெருந்திறல் வலியாய்
வருங்கலை உணர்வும் பெருநிலை நோக்கமும்
உணர்வின் ஆய்ந்தே உள்ளகத் தெண்ணி
உணர்கலை நிலையால் மெய்ப்பொருள் தெரிந்தே
ஏழிசை நுட்பம் வாழிசைத் திட்பம்
தாழிசை நுணுக்கம் ஆழிசைக் கலைத்திறன்
வளரிசை யியலும் தளரிசை முரண்நிலை
வளர்கலைத் திட்பம் வண்டமிழ் இசைத்திறன்
எடுத்தல் படுத்தல் நலித்தல் மூன்றும்
அடுத்தே ஆய்தல் அருந்தமிழ் இசையாய்
அருந்தமிழ் ஐந்திசை சிற்ப மாக்கலை
பெருந்தமிழ் ஏழிசை பேரருள் இசையால்
இசைநிலை நுட்பம் இயற்கலைச் சிற்பம்

நசையற நோக்கி நண்ணுவ நண்ணி
பயன்தரு நோக்கால் பெருங்கலை அறிதல்
நயனுறத் தெரிந்தோர் நன்னெறி இயலே 820

நடக்கலை ஆக்கம் நற்றமிழ்க் கலைநெறி
நடக்கலை அறிவியல் அருளியல் நிலைநெறி
நடமே கால அசைநிலை இசைநிலை
நடமே இடம்பொருள் காலமும் கூட்டும்
நடக்கலை அறிந்தார் இன்றமிழ்த் தெரிவராய்
நடக்கலை நுட்பம் நண்ணிய தோர்ந்தே
உறுப்பியல் கலையியல் இசையியல் தாளம்
உறுநிலை உடலியல் மாறா வண்ணம்
நொடியும் நொசிப்பும் நோக்கும் விழியும்
ஒடிவும் அசைவும் உருள்நிலை விழியும்
சேல்விழி கயல்விழி வாள்விழி நேர்விழி
வேல்விழி குறுவிழி விரிவிழி பிறழ்விழி
தாள்நிலை ஒன்றல் தாள்நிலைப் பிரிதல்
தாள்மேல் விரிந்து கீழ்த்தாள் குவிதல்
தாள்விரி நிலைநெறி இடைநிலை அசைதல்
தாள்கடி கூடல் தாள்முனை விரிதல்
தாள்முனை மாற்றம் தாள்கடி தேற்றம்
தாள்விரல் ஐந்தும் ஒசை யாக்கம்
தாள்வில் ஐந்தும் மேல்நிலை விசல்
கைவிரல் மாற்றம் கலைநிலை தேற்றம்
கைவிரல் முன்றிரண் டியல்நிலை காண்டல்
இடைவளை தேற்றம் இருநிலைத் தோற்றம்
இடையிடைப் புகுவ நெறிவுறுந் திறத்தால்
முன்னுற நடத்தல் பின்னுற நடத்தல்
முன்னிலை தாவல் பின்னிலை தேற்றம்
வரிநெடுங் கண்விழி வகையுற விழித்தல்
தெரிநிலை நடக்கலை திறமுறும் விளக்கம்
பெருநடச் செந்நூல் நெறிமுறை யியலாய்
பெருநடச் செந்நூல் பகருமா இயலே 863

கட்டிடம்

கட்டிட நெறியே கலைநெறி முலம்
கட்டிட நெறியே ஒளித்திறன் கூட்டும்
விட்டுறும் மெய்நிலை பார்நிலை இயற்றிறன்
நெட்டுறும் நிலையொளி நேகுற வறிந்தே
காலம் ஆய்தல் இடநிலை ஆய்தல்
கோலங் கூட்டும் ஆய்முதற் பொருளே
ஆயம் முதற்பொருள் ஆய்நிலை ஆய்முறை
ஆயக் காலம் பார்நிலை ஆயல்
எண்ணிலைக் காலம் இயல்புற அறிந்தே
எண்ணால் ஒர்ந்து நெறியறித் திறனே 550

நிலமனை மனைநிலம் நெறியுற் றாய்தல்
புலநெறி ஒளிநெறி பொருந்தக் காண்டலே 551

நிலமறிந் தோரே புலமறி அறிவர் 552

புலத்தியல் தெளிந்தே நிலமும் மனையும்
நலத்தியல் ஆய்வோர் நெறிமுதல் ஆய்வரே 553

நிலமறிந் தோரே நீர்வளம் நீரியல்
புலத்தியல் பொருந்த முறைநெறி காண்டுழி
வாழ்மனை வளர்மனை எண்ணெண் நிலையால்
ஏழ்நிலை மாடத் தியலறிந் துணர்வரே 558

நிலமும் புலமும் நெறிமுறை நோக்கி
நிலத்தியல் மனையியல் குறிமுறை யாய்ந்து
மனையியல் மாணியல் மெய்ப்பொருள் தேர்ந்து
நினைவுறு முணர்வால் நெறிமுறைத் தேற்றம்
மனையிய லுண்மை நிலத்தியல் வண்மை
மனைநிலத் தன்மை நிலமனை யாற்றல்
புலமுறத் தேர்ந்தே பொருள்நெறி யுணர்ந்து
வலமிடத் தாற்றல் வகையுற விளக்கி

எண்டிசை நிலைக்கலை இயல்புறத் தேர்ந்தே
கொண்டுறு மெண்குறிப் பியல்நெறி யாற்றல்
எண்டிசை நோக்கி யியல்நிலை யறிந்து
மண்டிய பார்நிலை யியல்நிலை தேர்ந்தே
விண்டுறு மியல்நெறி விளக்குமா நெறியே 624

எண்கலை நுண்ணியல் இயல்நெறி மெய்ம்மை
எண்கலைத் திறமும் ஐந்தியல் நுட்பம்
எண்ணுணர் நுட்பம் எழுத்தியல் ஒட்பம்
விண்ணுணர் நெறிக்கலை முறைநிலை வெளியியல்
எண்ணெண் ணாக்கம் நாற்புறத்தியல்நிலை
சுழலுறும் ஆற்றல் ஐந்நிலைத் தெரிநிலை
சுழல்நிலை விரைவியல் நுட்ப மாநெறி
அண்டத் தியலொளி அண்ட நுணுக்கம்
அண்ட மாக்கலை விண்கூர் திறனிலை
விண்ணெறி விண்மொழி வியனிலை தெரித்தே
விண்ட மாக்கலை ஒலிஒளி யியல்தெரி
பண்டுறுந் திறனுறும் பார்நிலைக் கலைநிலை
பாரிடம் ஆயும் பெருங்கலை நுட்பம்
பாரியல் பார்நெறி நிலத்தியல் வண்ணம்
நிலமறிப் பெருங்கலை நிலமறி நுட்பம்
நிலத்திய லறிநிலை நெறிநிலைக் கலையியல்
நிலத்தியல் மூலம் நெறிகணி நிலையால்
புலத்துற் றோங்கி எண்நிலை மூலம்
ஆறே பத்தே பத்தா றாக்கம்
ஆயுறும் ஆயம் அருங்கலைப் பாரியல்
பாரியல் கணக்கியல் பண்புற் றாய்ந்தே
சீரியல் திறனுற் றோர்ந்துறும் மதித்திறன்
நிலத்தியல் நீரியல் நிலத்துறும் நீரியல்
நிலமனை வாழ்மனை வளர்மனை ஆழ்மனை
ஒளிமனைப் பெருமனை சிறுமனை யியலாய்
வெளிநிலைக் கலைதிக ழோங்கு மாமனை
அரண்மனை முரண்மனை ஆயம் ஆய்தலும்

திரண்டுறும் இயல்மனை தேற்றம் தெளிதலும்
பாழ்மனை விழ்மனை தேய்மனை நுனுக்கம்
ஏழ்மனை ஐமனை இயல்தெரிக் குறுக்கம்
மனையிய லாக்கம் மாண்புற் றுணர்ந்தே
வினையியற் கலைநெறி விளங்க வுணர்ந்தே
விட்டிடம் வெற்றிடம் தெற்றிடம் சிரிடம்
எட்டிடம் தெட்டிடம் காவிடம் கலையிடம்
நீரிடம் நிலையிடம் முகப்பிடம் வடிவிடம்
ஒரிடம் ஒளியிடம் உள்கலைப் படைப்பிடம்
இலமுன் வாயில் இயல்புறத் தேர்ந்தே
தொல்நெறிக் கட்டிடக் கலையியல் நுனுக்கம்
மனைநிலைக் கலையும் நிலமனை நுட்பமும்
வினையியல் கட்டிடக் கலைநெறித் திட்பமும்
மேவுறக் கண்டோர் தாவில் தன்மை
ஆவலா வுணர்வோர் அண்டத் தியலைக்
கண்டு தெளியும் கலையின் ஆவலாய்
பண்டுறும் மெய்க்கலை நெறியுணர் வாரே 696

கட்டிடக் கலையியல் நல்லியல் நுட்பம்
கட்டிடத் தொல்லியல் பல்லியல் கணக்கியல்
கட்டிட மெழுநிலை வாயில்நன் முகப்பும்
கட்டிடம் நிலத்தியல் நீர்நிலைத் திறனிலை
முப்புல ஆயம் முறைநிலை ஆயம்
தெட்டுறும் ஆயம் சீர்நிலை யியலாய்
ஆயம் அறிகலை அரும்பொருள் நுட்பம்
எண்நிலை எண்ணெண் இயல்நிலை பெருக்கி
எண்முறை எண்ணால் இரண்டு பத்தேழ்
திண்ணம் கண்டுணர் சீர்நிலை ஆய்ந்தே
எண்ணோ டொன்றாய் ஒன்பதும் நோக்கி
நெறிமுறை நிலைபெறும் ஆக்கம் ஆய்ந்தே
குறுநிலை ஆறே பத்துபத் தாறாய்
நோக்குறும் நிலையும் நுண்ணுற நோக்கி
ஆக்குறும் ஆயப் பெருங்கலை ஆய்தல்

கணக்கிய லுணர்த்துங் கணக்கு மாநெறி
பிணக்கற வுணர்ந்தே பெருங்கலை யியற்றல்
கட்டிட நிலைதெரி கலைவல் லாரின்
எட்டிய லறிநிலை இயலறி நுட்பம்
பண்டுறும் பாரியல் பெருங்கலை ஓர்ந்து
விண்டுறுங் கட்டிட மெய்நெறி யுணர்ந்தே
பொருளுணர் நிலைகலை வாழ்நாள் முதலாய்
நிறைநிலைப் புகழ்நெறி மகப்பே றியலும்
நெறியுற் றோர்தல் அறிவர்மா நெறியே 697

எழுநிலை மாடம் எழுகலைத் திறனிலை
எழுமுணர் வோங்கும் எழுநிலைக் கலைநிலை
எழுமுறை எழுநெறி எழுந்திறன் உணர்ந்தே
எழுநா டித்திறன் இயல்புற் றுணர்ந்தே
அடிநிலைப் பார்நிலை ஆழிடம் வளரிடம்
கடிநிலை இல்நிலைக் கணக்கியல் தெரிந்து
நீர்நிலை நிலத்தியல் புலத்தியல் நுணுக்கம்
சீர்நிலை முற்றம் விட்டிடம் வெற்றிடம்
காவிடம் கலையிடம் கவினுறக் கண்டே
ஆவிடம் வாயில் கருநிலை இல்நிலை
மூல முப்புறம் புறத்தியல் நெறிநிலை
கோல மடுக்கும் இடையிடை அருக்கே
மிடுக்கு அடுக்கும் மெய்நிலை வட்டம்
இடுக்குறும் காற்றியல் இடைநிலை வளைநிலை
வளைநிலை வட்டம் நாற்புறத் தியல்நிலை
வளைவுறும் மாடம் அழகுறும் கூடம்
விரிதரை இயல்நிலை மேலிடை அடுக்கும்
விரிநிலை வில்நிலை வேல்நிலை வடிவுறும்
புரிநிலை செங்கதிர் வடிவுறும் நிலைகலை
தெரிநிலை மலர்நிலை கலைநிலை யியல்வெளி
முன்றுமுன் றியல்நிலை முழுநிலை அளவியல்
முன்றிய லிடைநிலை முழுதுறத் தேர்ந்தே
ஒன்றுறு பெ ழிற்கலை நிலைபெறுந் திறநிலை

17

ஒன்றுறும் வாயில் முகப்புறும் திருநிலை
கட்டிடக் கலைநிலை கலைநெறி நுணுக்கம்
கட்டிட மமைகலை கணக்கியல் நெறியே 704

கட்டிட மாக்கலை கணக்கியல் அறிந்தே
எட்டுறும் நிலைதெரி யியல்பிற் றேர்ந்தே
ஆறுபத் தியல்பத் தாறுந் தேர்ந்தே
கூறு மாஇயல் குறிப்பி னுணர்ந்தே
பார்நிலை நுட்பம் மண்ணியல் திட்பம்
சேர்நிலை திருநிலை இல்நிலை அமைப்பியல்
வாயில் முகப்பும் வெளிநிலை உள்நிலை
ஆவிடம் காவிடம் நீரிடம் சேரிடம்
அமைவுற் றாய்ந்தே தென்றிசை வாயில்
அமைவுறும் நிலைதெரி யியல்கலை நேர்மை
ஒன்பது நுணுக்கம் ஒண்ணிதின் தேர்ந்தே
ஒன்பது மூன்றின் பெருக்குறும் நிலைநெறி
ஆயத் தியலா லறிவுறத் தேர்ந்தே
ஆயம் ஆறு பத்துபத் தாறும்
ஆறுறும் நிலைதெரி அளவிய லோர்ந்தே
கூறுகூ றியலின் குறிப்புணர் கலையால்
வேறுவே றியலின் விளக்க மாய்ந்தே
வாழ்மனை வளர்மனை திருமனை பெருமனை
ஆழ்மனை அகல்மனை இயல்பிற் றேர்ந்தே
மனைநிலத் தியல்நெறி மாண்புறத் தேர்ந்தே
மனையியல் நிலமனை நெறிமுறை உய்ந்தே
நிலத்தியல் நீரியல் நெறியுற் றாய்ந்தே
புலத்தியல் அறிதல் பெருங்கலைத் திறனே 705

கட்டிடக் கலையே கலைதெரி நுட்பம்
கட்டிடக் கணக்கியல் நூலியல் கோல்நெறி
கட்டிட நெறிமுறை கல்மண் ணாய்வியல்
ஆழத் தகலம் நீள முயரம்
ஆழத் தியல்நிலை அடுக்கடுக் கியல்நிலை
அடிக்கலை ஆழம் மேற்கலை யடுக்கே

முடிநிலை முகப்பே மெய்க்கலைத் தேற்றம்
அடுக்கும் இடுக்கும் அமைவுறத் தெரிந்தே
முடுக்கும் இடுக்கும் முடிவுற் றாங்கே
முன்புறத் தெழில்நிலை பின்புறத் தாக்கம்
தென்புற வாயில் சீர்நிலை குடபுலம்
நன்றினி தாய்ந்தே எட்டொன் பதுநிலை
தென்றிசை யியலாய்ச் சீர்பெற வமைத்தே
நீர்நிலை மூலை ஆவிடம் மூலை
ஓர்நிலை மூலை எழில்பெற வமைத்து
திளரி யிடமும் திருநிலை இடமும்
தீதறும் பள்ளித் திருவிடம் உணர்விடம்
இடநிலை முழுதும் இயல்நெறி ஆய்ந்து
குடபுலத் தியல்நெறி தென்றிசைக் கலைநெறி
வடபால் கீழ்பால் வகையுறும் அளவால்
ஆக்குறும் நெறிமுறை அளவினி தாய்ந்தே
நோக்குறும் கட்டிட நெறிமுறை யியலே 706

கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி
கட்டிட மெய்த்திரு கலைநெறி ஆய்ந்தே
எட்டுறும் விண்ணின் இயல்நிலை ஓர்ந்தே
பார்விழிக் கலைநிலை பண்புறுங் காலம்
சீர்நெறிக் காலம் திருவுறத் தேர்ந்தே
வளர்நிலை இயல்கலை வகையுறுத் திறத்தால்
உளமுறும் உணர்வின் ஓங்குறும் மெய்க்கலை
அடிநிலை அடிக்கலை ஆழத் திறனிலை
முடிநிலை முடித்திறன் முந்நிலை இயல்தெரி
கட்டிடக் கலைநிலை கணக்கியல் ஆய்ந்து
தெட்டியல் சீர்நிலை மூலப் பொருள்நிலை
வடிவுறும் கட்டிட வனப்பியல் தெரித்தே
குடியியல் கூரியல் மாடம் கூடம்
நெடிதியல் அகலம் குறுக்கம் நெடுமை
வடிவுறும் மேல்வளை வியல்நிலை கீழ்நிலை
கீழ்வளை வியலும் இடைவளை வியல்நெறி
கீழ்மேல் வளைவியல் மேற்புற வளைவியல்

வளைவியல் மேல்நிலை அடுக்கடுக் கியலும்
உளைவிலா நெடுநிலைப் பேரியல் மாடம்
கரிமுகத் தியல்நிலை கவினிலை மாடம்
விரிநிலை மலர்நிலை எட்டி ரிதழ்நிலை
தெரிநிலை கூடத் தெழில்நிலை மாடம்
எழுநிலை மாடம் எழுகலைக் கூடம்
எழுதாத் திறனிலை ஓவிய எழில்நிலை
வண்ண ஓவியம் விசையுறும் புறச்சுவர்
திண்ண மாக்கலை செங்கதிர் வடிவியல்
கதிர்வடி வியலுறும் கவினுறும் புறமாய்
மதிவடி வியலுறும் உள்நிலைக் கூடம்
வேயா மாடம் வியாக் கூடம்
தோயா நிலையுறும் உகுநிலை மாடம்
நீர்நிலை இயலிடம் ஆவிடம் பொழிலிடம்
தேர்நிலை இயற்கலை செப்பும் பேரிடம்
உறைவிடம் உண்டி நிலையுறும் சீரிடம்
மறைவிடம் திருநிலை வைப்பியல் சீரிடம்
பதினா றிடமும் எழுநிலை மாடம்
மதிநிலை வண்ணம் ஓவியம் புறஞ்சுவர்
கதிரொளி வண்ணம் ஓவிய ஒளிக்கலை
விதிமுறை வகுக்கும் மெய்நிலைப் புறஞ்சுவர்
முழுமதி தோன்றும் பெருநிலை மாடம்
எழுங்கலை யியலுறும் எழுநிலைப் பேரியல்
அடிநிலைக் கலைநிலை ஆறும் பத்தும்
முடிநிலை எட்டிரு நிலையுங் கூறும்
ஒன்பது மாக்கலை மூவொன் பதுநிலை
தென்றிசை வாயில் சீர்நிலை சிறக்கும்
குடபுலத் தியல்நிலை குறிக்கும் நேரியல்
வடபுலம் கீழ்ப்புலம் வகுக்கும் நிலையில்
எண்ணிலை எண்ணியல் கணக்கூற் றியலால்
திண்ணிலை கட்டிட சீர்நிலை இயலே 707

மாடத் தியல்நிலை எழுநிலைக் கலையாய்

மாடமாக் கூடம் வண்ணத் தியற்கலை
எழுநிலை மாடக் கலைநிலை தேற்றம்
செழுங்கலை வண்ணத் தியல்தரும் ஒவியம்
ஒவிய மாடம் சித்திரக் கூடம்
ஒவிய உணர்வுறும் மெய்நிலைத் திறனிலை
கட்டிடக் கலைநெறி கணக்கிய லோர்ந்தே
கட்டிடம் ஒளித்திறன் நெறிமுறை யிலங்கி
எட்டியல் எண்கலை விதிமுறைத் திறனிலை
எட்ட ரியலும் பத்தும் ஆறும்
ஒன்ப திற்றியல் மூவொன் பதுநிலை
நன்றுற் றுறுநிலை நெறிமுறைக் குறியாய்
தொன்றுறும் மாநெறி உண்மை யுணர்ந்தே
அளவியல் நுட்பம் ஒருங்குற் றாய்ந்தே
மெய்க்கலை நிலையுறும் திறநெறி கணக்கியல்
உய்த்துணர் முறையியல் ஒங்குற் றுணர்ந்தே
கலைநிலை யியல்தெரிக் கணக்கியல் முறையே 714

வினைமுதற் பொருளாய் வெளியியல் ஒர்ந்தே
நினைவுறும் நெறியுறும் நெறிக்கலை மூலம்
மனைநிலம் புலத்தியல் நிலமனை தேர்ந்தே
மனையள வியல்நிலை மெய்க்கலை யுணர்வால்
கருத்தும் வடிவும் கணக்கும் ஓர்ந்து
திருநிலை வாழ்விடம் வளர்மனை செழுமனை
நிலத்திய லாற்றல் நெறிமுறை யோர்ந்து
நலந்தரும் புலநிலை நண்ணிய திறத்தால்
குடபுலம் வடபுலங் குறித்தியல் நோக்கி
நடமுறும் திறனிலை தென்திசை ஆய்ந்தே
கீழ்பால் நிலைநெறி கிளக்பு நெறியால்
வாழியற் கலையால் வகுத்துதும் நெறியால்
மூவொன் பதுநிலை மூன்றுபத் தறிந்தும்
மூவா றியல்நிலை முற்றுறும் ஆற்றல்
ஆயங் கணக்கிய லெண்ணிலை நெறியால்
ஆயந் நெரிந்தே அருங்கலை வகையால்

ஆறே பத்தே பத்தா றியலாய்
நூறே இயல்தெரி நூல்நிலை நுணுக்கம்
கோல்நிலை நூல்நிலை குறிப்பின் ஆர்ந்து
கோல்நிலை சிற்றூர் சீரூர் பேரூர்
கோல்நிலை மறுகு மாடமுங் கூர்ந்து
கோல்நிலை அளவியல் குறிக்குங் கணக்கே 724

கட்டிடச் சீர்நிலை நெறிக்கலை யோர்ந்து
கட்டிடம் புறச்சுவர் புறமதில் ஆக்கும்
நீட்டல் குறுக்கல் நிலைவளை வியற்றல்
மாடம் கூடம் விரிதரை சுற்றிடம்
வெற்றிடம் விட்டிடம் காவிடம் கலைவெளி
தெற்றுறும் சுற்றிடம் இடநிலை ஆய்ந்து
வடகீழ் நிலையறி வகுத்தறிக் கணக்கியல்
குடபுலத் தியல்நெறி கூர்நெறிக் கணக்கும்
தென்றிசை வாயில் சீர்முகப் பாய்ந்தே
நன்றுறும் ஒன்பான் நெறிநிலை நன்னி
முன்றில் விரிதரை இருபுற விரிவிடம்
பின்னில் நிலைசெடி கொடிமலர் வளரிடம்
நீர்நிலை விரிதரை சூழிடம் ஆய்ந்து
ஏர்நிலை இயலகம் எண்ணிலைக் கணக்கியல்
மாடம் அமைப்புறும் மாண்நிலை கூடம்
கூடம் இயல்நிலை குறிப்புறக் கண்டே
கீழ்மேற் றிசையுற நீளம் கண்டே
வாழ்தென் வடதிசை அகலம் ஆர்த்தே
வாழ்மனை வளர்மனை நல்மனை தொல்மனை
ஆழ்கலை நிலைதெரி அருங்கலைக் கணக்கியல்
கட்டிட நூல்தெரி யியல்நிலை அமைப்பாய்
கட்டிடக் கலைநிலை கணக்கியல் கூறுமே
எழுதகும் ஓவியம் புனைநிலை ஓவியம்
பழுதறும் சித்திரம் புனையா ஓவியம்
பரன்நிலை மேல்நோக் கமர்ந்திருந் தெழுதகும்
அரன்நிலை வானிலை எழுநிலை ஓவியம்
ஊர்ப்புறச் சுவர்நிலை நெறிதகும் ஓவியம்

ஒளிநிலை யுயிர்திகழ் வனப்புறும் ஒவியம்
வெளிநிலை வண்ணத் தியல்கலை ஒவியம்
விழிநிலை விளக்கி விரத் தியல்நிலை
எழில்நிலை வண்ணம் வடிவுறும் ஒவியம்
விரக் குறிப்பும் விரமா நோக்கும்
விதத் தோற்றம் விரத் தேற்றம்
விரக் கடைநிலை மெய்யியற் தோற்றம்
விர வாள்நிலை தோளெழில் தோற்றம்
இளமுகத் தெழிலுறும் வளமுறும் சேயிழை
வளநிலை நன்னுதல் சேல்விழி வேல்விழி
செவ்வரி படர்நிலைச் சீர்விழி வாள்விழி
செவ்வி யறியும் ஏற்றல் மாநோக்கு
எட்டியல் எழுதரும் பாடலான் உருநிலை
கூட்டுறும் மெய்க்கலை தீட்டுறும் ஒவியம்
ஒவிய வண்ணம் ஒளிர்தரு மாக்கலை
ஒவிய இயற்கலை நுணுக்க நுண்ணறிவால்
கண்விழி நோக்கும் கைவினை ஆற்றலும்
என்றுணர் விசைநிலை இயல்புறுங் காலமும்
செக்கர் வானச் செங்கதிர் தோற்றம்
சொக்கெழில் முழுமதி தோற்றமும் வானமும்
பன்மலர் மலரும் குன்றத் தெழிலும்
நன்மலர் மலர்ந்துறும் நீர்விழ் அருவி
வேழத் தெழில்நிலை விரைவுறும் விலங்கும்
ஆழம் மாக்கடல் செங்கதிர் தோற்றம்
விளைவுறும் நீர்நிலை காட்டுறும் எழில்நிலை
விளைவயல் மலர்க்கா புள்ளின வண்ணம்
ஆழ்மனை பாழ்மனை வாழ்மனை ஏழ்நிலம்
தாழ்வுறும் மலைச்சரி வுறும்நிலை தோற்றம்
சிற்றூர் சீரூர் பேரூர் நடுவண்
உற்றுறும் பெருவெளி ஆநிரைக் கவின்நிலை
ஆவும் கன்றும் அன்புறும் நிலைத்திறன்
காவுறும் நீர்நிலை கலைநிலை ஒவியம்
உள்நோக் குருற்றும் அறிவன் உருவும்

விண்ணோக் குறுசிர் நெறிகலை ஓவியம்
ஓவியக் கலைநெறி உணர்ந்து மாநெறி
ஓவியச் செந்நூல் நெறிபடக் கிளக்கும்

ஐங்குடி ஐம்பொறி ஐம்புலன் ஐந்நெறி
தங்குறும் மெய்ம்மை தகவுற் றோர்ந்தே
எண்ணிலை உறுப்பியல் எண்ணள வுடற்றின்
தெள்ளிய எண்ணி ஒளியுறும் அறுநிலை
ஒளிநிலை அறுநிலை உணர்திற னாகி
வெளிஒளி வளிநிலை அளிகலை ஐந்தாய்
எட்டியல் ஆக்கம் இயல்பின் அறுபான்
தெட்டுறும் ஐம்பொருங் குழுநிலை ஆக்கம்
நெட்டுறும் நிலையறி எண்பே ராயம்
எட்டின் இயலும் ஐந்தின் இயலும்
உள்ளர அறுமுறை ஓங்குறும் ஓங்கல்
தெள்ளர அறுமுறை நாடும் மொழியும்
தெள்ளிதின் னோர்ந்து சிர்சால் அமைச்சியல்
வந்துறும் எண்பே ராயமும் நோக்கி
ஐம்பெருங் குழுவும் சீருறுப் பியலாய்
செம்பொருள் விழுப்பொருள் சீர்ப்பொருள் ஆக்குறும்
நேரிதின் ஆய்ந்து நுண்ணிதின் ஓர்ந்து
சிரிதின் தெளிந்து செவ்விதின் நோக்கி
உள்ளும் புறமும் ஒரதும் அறுநெறி
துள்ளல் மயன்நெறி தமிழ்நெறி யியலே

கால நுணுக்கம் கட்டிடக் கலைத்திறன்
கால விரைவியல் கடிதின் ஓர்ந்தே
காலங் கூட்டலும் காலஞ் சேர்த்தலும்
மூலம் நோக்கலும் முன்னி யுணர்ந்தே
உடற்கட் டுணர்ந்தே உறுதிறன் நோக்கி
அடற்கட் டுணர்ந்தே ஆற்றல் பெருக்கி
கட்டுறும் இயல்நிலை கட்டிடத் தியல்நெறி
எட்டுறும் திறத்தால் உடலடல் கட்டிடம்
ஒன்பது வாயில் எண்ணிலை யளவாய்

நன்றுறும் நிலைநெறி மெய்நெறி யோர்ந்தே
கட்டிடக் கலையே கணக்கியல் ஆற்றலாய்
எட்டியல் நெறியால் இயல்பின் ஆய்ந்தே
விட்டிடம் வெற்றிடம் கலையிடம் சீரிடம்
தெட்டிடம் உணவிடம் சீர்நிலை யறிந்தே
முன்றில வாயில் முகப்பே நோக்கி
தென்திசை வாயில் தென்னிலைக் கலைதெரி
தென்றற் காற்றுறும் தெரிநிலை வாயில்
நன்றுறும் முறைதெரி குடபுலத் தியல்நெறி
ஒன்றுறும் கீழ்பால் உயர்நிலை நோக்கி
நன்றியல் வடபால் நெறிமுறை யோர்ந்து
எண்திசை யியல்நிலை எண்கணக் கியலாய்
விண்டுறும் கூடம் மாடம் நோக்கி
உள்ளுறும் வெள்ளி வியாழ மாடமும்
தெள்ளுறும் கலைநிலை வேழமா மாடம்
எள்ளுறும் எண்ணிலை எண்ணியல் ஆற்றல்
விள்ளுறும் வேயா மாடத் தெண்ணிலை
தாமரை மாடம் தனிநிலை மாடம்
பூமலர்க் கூடம் பதினா றிதழ்நிலை
மாமணி மாடம் தூமணித் திரள்நிலை
மாக்கலைக் கூடம் எழுநிலை மாடம்
எட்டுறும் திறனெறி ஒன்பதின் ஓங்கி
நெட்டுறும் நிலைதெரி நெட்டியல் நீளம்
தெட்டுறும் வளைநிலை சீர்சால் கலைநிலை
ஒட்டியும் ஒட்டா ஒன்றுறும் திறமுறும்
எட்டுறும் புறமதிற் சுவர்நிலை யியற்றிறன்
விட்டுறும் சுடுமண் சுவர்திறன் நெறிநிலை
எண்ணிதின் ஓர்ந்து இயலாற் றாய்ந்தே
நுண்ணிதின் நோக்கி நுவலுறும் திறத்தால்
உடற்கட் டாய்ந்து அடற்கட் டாய்ந்து
இடக்கட் டிடநிலை எண்ணியல் கலையால்
கட்டிடக் கலைநிலை எட்டியல் ஐந்தியல்
கட்டிட கலைநிலை மாநெறி ஆற்றலே 749

கட்டிடக் கலையே கணக்கறி யியற்கலை
கட்டிடக் கலைநெறி எண்ணிலை மெய்ந்நெறி
எட்டுறும் ஆக்கம் இயல்தெரித் திறத்தால்
நெட்டுறும் நெடுநிலைப் பெருநிலை வாயில்
குறுநிலை வாயில் கவின்நிலை வாயில்
உறுநிலை ஒன்பதின் மூன்றுறும் திறனிலை
அறுவகை அளவே நூல்நிலை இயற்கலை
பெறுவகைத் திறனுறும் வாயில் முகப்பே
நல்லியல் மூன்றின் ஒருநிலை ஆக்கம்
தொல்லியல் நீளம் அகலம் நோக்கி
உயரம் உற்றுறும் உறுபெறு நிலையால்
மயல்விலா மதியால் மயக்கற நோக்கி
சுற்றுறும் மேல்வளை வியல்நிலை சுற்று
பெற்றுறும் இடைநிலை இடையிடை யடுக்கே
இடுக்கும் மிடுக்கும் காற்றுறும் இடுக்கும்
விடுவிலாப் பெருங்கண் சிறுகண் அமைநிலை
சிறுகண் ணியல்தெரி சீர்நிலை பதித்தும்
உறுமுறைப் பெருங்கண் ணியல்தெரி பதித்தும்
திறச்சுவர் மதில்நிலை பொருந்த நோக்கி
புறச்சுவர் ஆக்கம் பொருந்து வளைவியல்
நீர்நிலை சேர்நிலம் கூரியல் நிலபுலம்
ஏர்நிலை இடைநிலை இடநிலை அறிந்தே
ஓரிடம் மேல்நிலை ஐந்துகூற் றியலும்
சேரிடம் இடைநிலை ஏழுகூற் றியலும்
நேரிடம் நிலையாய் மூன்றுகூற் றியலும்
பாரிடம் விரிதரைப் பரப்பும் நோக்கி
அடிநிலைக் கலைநிலை ஆயம் ஆய்நிலை
அடிநிலைக் கணக்கியல் கருத்தின் ஓர்ந்து
தொடுநிலை வண்ணத் தோவியல் கூட்டும்
விடுநிலை வனப்பெழில் வண்ணத் தோவியம்
அருநிலை மேல்வளை வியல்நெறி ஆர்ந்து
விடுத்தலும் சேர்த்தலும் அளவையிற் றேர்ந்து
பெருக்கல் சுருக்கல் பெருநிலை நோக்கி

கருநிலை விரிதரைப் பரப்பியல் ஓர்ந்து
திருநிலைச் சிரிடம் ஒருநிலைப் பேரிடம்
வருநிலை கலையிடம் வளர்கலை அமர்நிலை
அமைவுற் றமர்ந்துறும் அளியுறும் இடமும்
அமைகலை ஆடி அணிநிலை ஆய்ந்து
முன்றுமுன் றியலுறும் முன்றியல் ஆடி
ஒன்றுறும் உருத்தே ரிரண்டியல் ஆடி
மாடமும் கூடமும் மெய்நிலை நோக்கி
கூடமா டத்தியல் குறிப்பியல் வண்ணம்
மணிவிளக் குறுமிடம் மாவியல் விரிதரை
அணிவிளக் குறுமிடம் அகவிழி தளைநிலை
திருவிளக் குறுமிடம் சீர்சால் இடமும்
ஒருவிளக் குறுமிடம் உயர்வுறும் விரிதரை
திருவுற் றாய்ந்து திருமனை வாழ்மனை
உருவுற் றிலங்கும் ஓவிய நிலையெழில்
கருவுற் றிலங்கும் கலைஇயல் வண்ணம்
பருநிலை மரத்தியல் பதிநிலை மேல்நிலை
ஒருநிலை நீளம் அகலம் உயரம்
வருகலை எண்கலை எண்ணியல் நோக்கி
ஆயம் நோக்கி அடிக்கலை நோக்கி
வேயா மாடம் வியாத் தூண்நிலை
உருக்கலை ஒளிரும் ஒளிக்கலைத் தூண்தெரி
திருநிலைப் பெருங்கலை சீர்மரத் தியலும்
ஒருங்குற் றாய்ந்து உணர்வின் தேர்ந்து
பெருநிலைக் காட்டகம் வளர்மரம் ஆய்ந்து
மரத்தியல் தூண்நிலை மாக்கலை நெறியால்
உரமும் உயரம் அகலமும் நோக்கி
சுற்றுறும் வளைவும் தெற்றுறும் வடிவும்
தெற்றுறும் மேல்நிலை சிறுநிலை வளைவும்
சிறுநிலை வளைவுறும் பெருங்கலை நெறியும்
உறுகலை கட்டிடச் செந்நூல் விதிமுறை
நெறியாய் ஆய்ந்து நிலைபெற நோக்கி
நெறிநிலை எண்ணியல் மாநெறி வழக்கே

கட்டிடச் செந்நெறிக் கலைநெறி யுணர்ந்தே
கட்டிடக் கணக்கியல் கலைமுறை வகுத்தே
கட்டிடத் தியல்நெறி மூலம் ஆய்ந்தே
கட்டிட மாயியற் கலைநிலை நோக்கம்
கட்டிடக் காலக் கணக்கியல் தேர்ந்தே
கட்டிட நிலத்தியல் புலத்தியல் நோக்கி
கட்டிட நீர்நிலை நேர்நிலை யாய்ந்து
கட்டிட மனைநிலம் நிலமனை யியலாய்
விட்டிடம் வெற்றிடம் வேறிடம் மாறிடம்
தெட்டிடம் சிற்றிடம் சிரிடம் நேரிடம்
நிலைநிறைக் கலைத்திறன் நெறிப்பட நவிலல்
கலைநிலை யெண்ணியல் கருத்துற் றோர்ந்தே
அடிநிலைக் கலைநிலைக் காலம் ஆய்ந்தே
முடிநிலைத் திறனெறி முன்னிய தோர்ந்தே
படிநிலை இயல்தெரிப் பான்மை யாக்கம்
கடிநிலை மூலத் தியல்தரும் நுண்மை
கடியியல் நோக்கிக் கணக்கிய லாய்ந்து
வடிகலை யியல்தெரி வளமுற் றோர்ந்தே
நொடிநொடி யிமைக்கலை நுண்ணிதி னாய்ந்தே
ஒடிவும் விடிவும் ஓர்ந்துண ராற்றல்
அடியும் முடியும் அமைநிலை நோக்கிக்
குடியுங் கூறும் கூர்நிலை யாய்ந்து
நொடிநுண் ணியல்தெரி நுணுக்க மாக்கலை
கொடிநிலைக் கலைநிலை கூர்மா நெறியாய்
காலத் தியல்தெரி நுணுக்கம் ஓர்ந்து
மூலத் தடிநிலை யியல்பின் ஆய்ந்து
அடிநிலை யிடையிடை யகழ்வுற் றாய்ந்தே
அடிநிலை நிலத்தியல் புலத்திய லோர்ந்து
எண்ணள வியல்தெரி நுண்ணிலை நுணுக்கம்
விண்ணள வோர்ந்தே எழுநிலை மாடம்
இடையிடை யடுக்குறுஞ் சுற்றுறு மடுக்கும்
இடையடுக் கியல்நிலைக் கண்பல விரிந்தும்
இடைவெளி இடைநடு எழுகண் ணோக்கி

நடைநிலைப் புறமும் நவிலுறு மகமும்
அகப்புறத் திடையியல் மேல்கி ழாக்கம்
மிகுத்துறும் விரிபரப் பியல்நிலை நோக்கம்
நுண்ணிதி னாய்ந்து நுணுக்கம் ஓர்ந்து
எண்ணுறு யியல்நிலைக் கணக்கிய லுச்சியே 771

கட்டிடக் கலைதெரி கணக்கியல் நுட்பம்
கட்டிட நிலையியல் நெறிதரும் மூலம்
கட்டிட ஆயம் அடிநிலைக் கலைநிலை
கட்டிடப் பாரியல் கணக்கியல் தேர்ந்தே
எட்டெட் டியல்தெரி நிலைக்கலை ஆற்றல்
எட்டுறும் எண்ணே கணக்கியல் நெறியாய்
விண்ணெறி விளக்கம் கால விரைவியல்
எண்ணெறி மூலத் தியலால் ஆய்ந்தே
நெறிமுறை யாறே பத்துபத் தாறே
நெறிநிலை ஒன்பதும் குறிநிலை நோக்கி
அறிகலை மூவொன் பதுநிலை ஆய்ந்தே
நாளும் கோளும் நவையில் பொழுதும்
கோளுறும் விண்மீன் குறித்துறும் நிலையும்
பாரியல் நிலையும் பான்மையும் நோக்கி
சீரியல் நல்லியல் தொல்லியல் நிலைநெறி
நேருறக் கண்டே நிலையுற் றாய்ந்தே
பாருறும் தன்மை பண்பின் ஓர்தல்
கட்டிடத் தியல்நிலை அடிக்கலைக் கணக்கியல்
கட்டிட மூலம் நெறிதரு நிலையால்
அறிமுறை ஆய்ந்தே நெறியுற் றோர்ந்தே
நெறிநிலை யியலால் உணர்தலும் வழக்கே 780

காலப் பொழுதே கணக்கியல் நெறியால்
மூலத் திறனுறும் புள்ளியின் ஆக்கம்
உழைப்பியல் நெறியால் உள்ளுவ உன்னி
உழைப்புறும் உணர்வால் நெறியுற் றாய்ந்தே
உண்முக நோக்கும் உயர்நிலைக் கலையால்
விண்முகத் தியலும் மெய்நெறித் திறத்தியல்

என்முகத் திரப்பியல் இயைபுற் றோர்ந்தே
விண்கலத் தியல்நிலை விசையியல் ஆக்கம்
உருளை நிலையியல் இடையிடை வெளிநிலை
ஆக்குறும் நிலையியல் அறிவுற் றார்ந்தே
நோக்குறும் நிலைதெரி நுண்ணுணர் மதியால்
பொறிபுலன் நிலையுறும் வலவனின் நிலையியல்
நெறியுறும் விசைநிலை விண்நிலை கலையும்
எண்ணெண் கலையியல் இயலுற் றோர்ந்தே
எண்ணியல் அகவின் னொளிதரும் இயலால்
கால விரைவியல் கணக்கியல் ஓர்ந்தே
கோலத் தெட்டின் குறிப்பியல் கனிநிலை
ஓர்ந்துணர் மதியால் உள்வின் ஆய்நிலை
தேர்ந்துணர் விண்கலச் செந்நூல் செப்பும்
முறைநெறி யோர்ந்தே முந்நெறி யாக்கம்
அறையியல் அறுபான் நான்கியல் வழக்கே 781

நீரியல் நீர்நிலை நீர்கலை நுணுக்கம்
நீர்வாழ் உயிர்த்திறன் நெடிதுற நோக்கி
நீர்இயல் நெறிக்கலை நிலைமுறை தேர்ந்தே
நீர்வலி நிலைவலி நிலத்தியல் முறைதெரி
கலைநிலை யாற்றலால் கார்த்திறம் உணர்த்தும்
நிலையியல் மண்ணியல் ஆர்நிலைத் தோற்றம்
தேற்றம் ஏற்றம் மாற்றம் ஆற்றல்
வேற்றுறும் நிலைநெறி நிலத்தியல் நீரியல்
புலத்தியல் மண்ணியல் பொருந்த நோக்கி
நிலத்தியல் நீர்நெறி நீரியல் ஆய்ந்தே
கலையியல் கனியியல் கருத்துற் றோர்ந்தே
மலையியல் கடலியல் காட்டியல் நுணுக்கம்
கோளியல் மீனியல் கோளத் தியலும்
நாளியல் பொழுதியல் நல்லியல் ஆக்கமும்
சிறுபொழு தாக்கம் பெரும்பொழு தேற்றம்
உறுபொழு தியலறி நீரியல் மாற்றம்
கருவுயிர்த் தொகையுறும் நீரியல் ஆக்கம்

உருவுயிர்த் தொகையுறும் நிலத்தியல் நோக்கம்
நீர்முதல் வளிநிலை வெளிநிலை நிலத்தியல்
சீர்முதல் விண்நிலை தீயியல் ஆய்ந்தே
நீர்க்கலை யியலும் நிலக்கலைத் தெளியும்
தேர்நிலை நுட்பம் செப்புவ தியல்பே 782

மாநெறி

மாநெறித் திட்பமும் நுட்பமும் ஓர்ந்தே
தூநெறி கூறுகூ றியல்நிலை நோக்கே 209

மாநெறி ஒன்றே எண்ணியல் மூலம் 608

மாநெறி தருங்கலை மொழிக்கலை மூலம் 609

மாநெறி இயல்நிலை சிற்றவை ஆக்கம் 610

மாநெறி இயல்நிலை சிற்றவை ஆக்கம் 610

மாநெறி நுட்பம் மயலறத் தெரிந்தோர்
மயல்நெறி நீங்கி மயனெறி ஓங்கி
மயன்கலை ஆயும் மதியுணர் வுறுவரே 611

மாநெறிப் பண்பே தூநெறி ஆக்கம் 661

தவளை மாநெறி நுவலரும் நுட்பம் 662

தவளை மாநெறி மூலமெய்க் கலையே 663

மாநெறி ஒன்றே மெய்க்கலை மரபியல்
மாநெறி இயலே எண்ணிலை கூட்டி
தூநெறி எழுத்தியல் ஒலியியல் ஒளியியல்
பாநெறி சித்திர ஓவியஞ் சிற்பம்
ஐந்நெறி அருங்கலை அணியியல் திட்பம்
செந்நெறி ஓம்நிலை ஓம்நெறி விளக்கித்
தொன்நெறி அகவின் னொளிநிலை துலக்கிப்
பன்னெறி காணா நன்னெறி இலங்க
மன்னெறி மயன்நெறி மயல்தபுச் சீர்நெறி
தென்நெறி தமிழ்நெறி சீர்வாழ் நெறியாய்
எண்ணியல் நெறிக்கலை மொழிக்கலை யியல்நெறி
விண்ணொலி காட்டித் தொன்னிலை விளக்கும்
அறுபான் நான்கியல் மூல மாப்பொருள்!
உறுமுறை அறிதல் உண்மைத் தெளிவே

எட்டொரு மாவெண் காணியெண் ணளவியல்
எட்டியல் காணி இயல்முக் காணி
விட்டள வியற்கலை அரைக்கால் காலே
தெட்டுறும் காலரை முக்கா லுணர்ந்து
விதிமுறைத் திறனெறி விரிவுற் றாய்ந்தே
நெடுங்கணக் கியலும் குறுங்கணக் கியலும்
அடுமுறை ஆய்தல் மாநெறி யியலே 694

மாநெறி ஒன்றே தூநெறி வகுத்து
தூநெறி யியலின் தொன்மைய தாக்கி
நெறிமுதற் பொருள்நிலை நிலையுற் றாய்ந்தே
அறிகலை உணர்வின் ஆக்கல் குறிக்கும் 733

மாநெறி யொன்றே மாயியல் வகுக்கும்
மாநெறிக் கலைத்திறன் மெய்ப்பொருள் மூலம்
தூநெறிக் கலையியல் திட்பமும் நுட்பமும்
பாநெறி மெய்யியல் பகிர்ந்துறு மாற்றல்
மிநெறி நுட்பம் மெய்யிய லோர்ந்தே
மாநெறி யியலியல் திட்பங் கூர்ந்தே
எண்ணியல் மூலத் தெழுதரு மாற்றல்
விண்ணியல் விண்கலை விரிநிலை நோக்கி
எண்ணெறி மூலம் எழுத்திய லாய்ந்தே
விண்ணெறி நோக்கி வியனிலை யாக்கம்
கண்ணுறும் நிலையொளி கணக்கியல் நிலைக்கலை
எண்ணுறும் இயற்றிறன் நெறிமுறைத் திகழ்ந்தே
விண்கலை நெறிமுறை விளங்குங் கலைநெறி
எண்கலை யியற்றமிழ் நெறியியல் நாளும்
எண்கலை நுண்டமிழ் விண்கலை விளக்கும்
மாக்கலை யியல்தெரி மாநெறி நுணுக்கம்
ஆக்கமும் அவைநிலை நோக்கமுங் கூர்ந்தே
ஏக்கற் றிலங்கும் எண்ணியற் கலைநெறி
நோக்குறும் உணர்நிலை மெய்ப்பொருள் காண்டல்
எண்ணெண் ணியல்தெரிப் பொருள்நிலை மூலம்
நுண்கலை நுண்ணிலை நுண்பொருட் காலம்

விண்ணிலை விண்ணியல் விண்ணெழிற் கோலம்
பண்ணியற் பண்முறைப் பண்ணெறிச் சிலம்
மண்ணியல் மாக்கலை மன்திற ஞாலம்
எண்ணிய லாக்கம் நிலைக்கலை மூலம்
தெள்ளிதின் ஓர்ந்தே சீர்நெறி யாய்ந்தே
ஒள்ளிய மாநெறி யுணர்நிலை கூறும் 770

மாநெறி ஒன்றே மாக்கலை வகுக்கும்
தூநெறி ஒன்றே பெருங்கலை தொகுக்கும்
பாநெறி ஒன்றே பெருங்கலை பரப்பும்
மாநெறி யியலாய் மாக்கலை நுட்பம்
எண்ணெண் கலைதெரி நுண்ணியல் ஆக்கம்
எண்ணியல் விண்ணியல் இலங்குமாக் கலையால்
கணக்கியல் நுட்பம் காலத் திட்பம்
பிணக்கிலா வகையால் பெருந்திறன் நோக்கி
ஐயைந் தியல்நெறி நுட்பமாக் கலையாய்
ஐநெறி ஐங்கலை மெய்க்கலைத் திறனாய்
செந்நெறிப் பொருளால் சீர்கலை ஆய்ந்தே
தொன்னெறி மரபின் கணக்கியல் தேர்ந்தே
பன்னெறி மூலம் பாரியல் காலம்
நன்னெறி வகுக்கும் நற்றமிழ்க் கணக்கியல்
கணக்கியல் ஒன்றே காலம் வகுக்கும் 827

மாநெறி வொன்றே மாக்கலை மூலம்
மாநெறி மாயியல் மெய்க்கலைக் காலம்
மாநெறி நிலைப்பணி எண்ணெண் கலைத்திறன்
மாநெறி இயலே கணக்கியல் ஆற்றல்
மாநெறி ஆடலான் கலைநிலை யாற்றல்
மாநெறி செந்தமிழ் நெடுங்கணக் கியலே
மாநெறி தூநெறி குறுங்கணக் கியலே
மாநெறி ஆயம் நிலைபொருள் தேர்தல்
மாநெறி இயலால் எழுத்தியல் மூலம்
மாநெறி செந்நெறி ஐநெறி மூலம்
மாநெறி இயலால் ஐந்தியல் நுட்பம்

மாநெறி வொன்றே எண்ணிலை மெய்த்திறன்
மாநெறி நோக்கே எண்கலை எண்ணியல்
மாநெறி திறனால் எண்முறை ஆய்ந்தே
மாநெறி யாற்றலும் பழுதறும் விளக்கம்
தூநெறி தொன்மையும் சொற்பொருள் உண்மையும்
வண்மையும் உண்மையும் வளர்நிலை ஆற்றலும்
எண்மையும் நுண்மையும் இயல்பிற் றேர்ந்தே
நுண்கலை நுணுக்கம் திட்பமும் ஆய்ந்தே
எண்கலை கணக்கியல் இயல்நெறி ஆற்றலால்
விண்ணெறி நோக்கி விளம்புமா நெறியால்
எண்ணெறி இயலல் அறுபான் நான்கே 842

ஓவியம் / ஓமியம்

இயல்நெறி ஐந்தியல் ஐந்நெறி செந்நெறி
இயற்கை நெறிமுறை எழுகதிர் வண்ணம்
ஒளிநிலை நோக்கால் ஒலியுற நோக்கி
எளிமை நிலையுறும் கலைஎழில் ஓவியம்
புனைநிலை ஓவியம் புனையா ஓவியம்
வினையியல் நிலைதெரி வகையெழில் ஓவியம்
சித்திரக் குறியின் சீர்நிலை தெரிக்கும்
மெய்த்திறக் கலைவனப் பெழிலுறும் ஓவியம்
வடிவு காண்டலுங் குடியா யிலங்கும்
அடிமுடி இடைநிலை அழகுறும் வடிவம்
வளைவியல் தெரிநிலைக் கலைநிலை ஓவியம்
இளமை வளமை எழிலுறும் விரம்
உளத்துணர் குறிப்புறும் முகநிலைத் தோற்றம்
வளவிழி நோக்கும் புருவனன் னுதலும்
விரக் கழற்கால் வெற்றித் திண்தோள்
ஈரத் தியலுறும் பெருவரை யகலம்
ஐவிரல் கைவிரல் ஐவிர லடியிணை
ஐவிரல் இலங்கும் இருநிலைப் பேரியல்
செவ்வாய் கருங்கண் சீரிய வுடலியல்
ஒவ்வும் முறுவல் உருவுகுத் தோற்றம்
ஓவிய நூல்தெரி நிலையிய லாய்ந்து
ஓவியத் தியலுறும் ஒள்ளொளி கூர்ந்து
ஓவியம் உயர்நிலை உயிர்க்கலைத் தோற்றம்
ஓவியங் காட்டும் உயிரொளி ஆய்தல்
ஓவிய நல்லியல் உரைபெறு நெறியே 615

ஓவம் ஓவியல் ஓவியம் ஓம்கலை
ஓவியத் தெழில்நிலை உணர்வுறுந் திறனாய்
ஓமெழுத் தொளியும் ஓமெழுத் தொலியும்
ஓமெழுத் துருவும் எழிலுறும் வடிவும்

ஓமுறக் கண்டே ஓங்குற நோக்குபு
ஓமியல் ஓமியம் ஒருபொருள் நிலையாய்
ஓம்கலை நெறிமுதற் பொருளென நிறைந்தே
ஓவிய மாக்கலை ஒளிமுதற் பெருங்கலை
ஓவிய வண்ணம் எழுநிலை வண்ணம்
எழுநிலை வண்ணம் எழுகதிர் நிலையுறும்
எழும்ஒளி ஏர்நிலைப் பெருங்கலை வண்ணம்
செங்கதிர்ச் செவ்வொளி செவ்விச் சீர்நிலை
பொங்கொளி நோக்கிப் புகுமொளி ஆய்ந்தே
ஒளிஒளி மூலம் உயிரொளி நோக்கி
வெளிஒலிக் கோலம் மேவுறும் மெய்யொளி
கண்ட கோலம் கருத்தி லிருத்திப்
பண்ணும் நெறிமுறைப் பெருங்கலை வண்ணம்
இயல்நெறி மெய்க்கலை எழுதரும் மெய்க்கலை
மயலறும் மெய்க்கலை ஓவிய மெய்நெறி
உள்ளுற வோர்ந்தே உணர்வின் ஆய்ந்தே
ஓவியத் தொழிலை ஒளிபெற வரைந்தே
ஓவிய உயிரொளி இயல்புறத் தோன்றினும்
மெய்க்கலை நுட்பம் மெய்யுணர் வுற்று
மெய்யுறத் தெளிதல் ஓவிய இயலே 616

ஓவியக் கலைநெறி யுள்ளுற் றோர்ந்தே
ஓவிய நிலைநெறி அசையா நெறியாய்
ஓவியம் போன்றே அமர்ந்துறும் வரைவால்
ஓவியம் தீட்டும் நெறிக்கலை ஆக்கம்
கண்நெறி நோக்கிக் கைநெறி நோக்கி
விண்நெறி இயன்று மண்நெறி முயன்று
இயல்நெறி ஓவிய மெய்க்கலை நெறியே 617

நவிலு மாநெறி நிலையியல் தேர்ந்தே
நவிலல் ஓம்கலை ஓம்மொழி யறிந்தே
நுவலரு மாற்றல் நுண்ணிதிற் றேர்ந்தே
நுவல்மொழி விண்மொழி விண்கலைத் திறனாய்
எண்கலை இயலால் விண்ணளந் தறிதல்

நுண்கலைத் திறனுறும் நெறிநிலை யாய்ந்தே
ஒழுறும் நிலைக்கலை ஒளியிய லாக்கம்
ஒழுறுந் திறனாய் மூல மெய்ப்பொருள்
ஓமிய லைந்தா யொளிர்திற னுற்றே
ஓம்நெறி யியலு மாக்கமுந் தேர்ந்தே
காலப் பொருள்நிலை கணித்துறக் கணித்தே
மூலம் வலமிடம் மெய்ந்நிலை யோர்ந்தே
விரைவி னாற்றல் காலத் திறனென
விரைவுறும் நிலைக்கலை வையமும் விண்ணும்
உணர்த்திக் காட்டும் மெய்ந்நெறி முறையால்
உணர்வொளி புணர்த்தும் ஒளிநிலைத் திறனே 637

ஒளியிய லொளிநிலை ஒளிவெளி யாய்ந்தே
ஒளிநெறி மூலம் மெய்ப்பொருள் தேர்ந்தே
ஓம்கலை ஓம்நெறி ஓமியல் திறனால்
ஓமியம் ஓமியல் ஒருநெறி தேர்ந்தே
உருவம் வடிவம் நிலைஎழு கலைநெறி
திருநிலை எண்ணிலைக் கலையால் நோக்கி
எண்ணெண் கலைத்திறன் இயல்புற் றாய்ந்து
ஒருநிலை மூலம் பெருநிலைக் கலையாய்
திருநிலைக் கோலஞ் சிலந் தெரிந்தே
எண்ணெறி இயலாற் கலைநெறித் திறமுற
விண்ணெறி நோக்கி வெளிப்படக் கிளக்குபு
எண்ணின் நெறிகலை எழுத்தியல் முறையாய்
எண்முறை இயல்தெரி எட்டின் பிறழ்நிலை
ஓம்ஒளி மெய்க்கலை ஒளிநிலை தேர்ந்தே
ஓம்ஒலி யியல்நிலை உணர்தல் முறையே 673

ஓவியக் கலைதெரி மெய்நிலை வண்ணம்
ஓவிய வனப்பும் எழிற்கலை மூலம்
கதிரொளி யிலங்கும் எழுநிலை வண்ணம்
கதிரியல் ஒங்கும் ஐயண நிலையும்
ஓர்ந்துறும் ஆற்றல் உதுநிலை நோக்கித்
தேர்ந்துறும் வடிவம் வனப்புறும் எழில்நிலை

கண்டுறுந் திறத்தால் கருத்துறும் ஆற்றல்
விண்டுறுந் திறத்தால் தீட்டு மாநெறி
வரைவிய லாற்ற லோவியப் புனைவே
வரைநிலை தீட்டல் வகையுறத் தேர்ந்தே
உணர்வுங் கருத்தும் ஒருவழி நின்றே
உணர்நிலை நோக்கின் கைவழி கையியல்
கண்ணுங் கருத்தும் கலைநிலை மூலம்
எண்ணம் கைவினை எழுதியல் ஆற்றல்
தெரிநிலைக் கலையால் சிரும் விளக்கும்
புரிநிலை ஆற்றல் புனையா ஒவியம்
ஒவிய உணர்வே சிற்பக் குறிப்பே
ஒவியக் கலைநிலை சிற்ப மாநெறி
நெறிமுறை யுவந்து குறிமுறை நோக்கி
அறிகலை ஆற்றல் அமைவுறப் பொருத்தி
பொறிபுலன் நிலையுறும் பொன்றுறும் உணர்வால்
நெறியுறு முளத்தொளிர் நிலையுருத் தீட்டல்
ஒவியம் கலையின் உயிர்நிலை நெறியென
ஒவியத் தியல்நெறி ஒளிபெற் றாய்வரே 708

வண்ண மாடம் வனப்பமை கூடம்
வண்ணத் தியலும் மெய்ம்மை வடிவியல்
வண்ணக் கலைநிலை வடிவுறும் ஒவியம்
எண்ணத் துருநிலை எழில்நிலை வனப்பே
உயிருண ரோவியம் உயிர்க்கலை ஒவியம்
உயிரொளி ஒவியம் ஒளியுயிர் ஒவியம்
ஒவிய உருநிலை சிற்ப மாநெறி
சித்திர மோவியஞ் சிற்ப மாக்கலை
மெய்த்திறக் கலையொளி மேவும் ஒவியம்
ஒவிய வண்ணத் தியல்தரும் ஆற்றல்
மேவுறுஞ் சிற்பம் பேரொலி கூட்டும்
ஒளிக்கலை ஒவியம் ஒலிக்கலைச் சிற்பம்
வெளிஒளிச் சிற்பம் இயல்நிலைச் சித்திரம்
சித்திர மோவியம் சீருணர்த் திருநெறி

மெய்த்தக வாற்றல் மிளிர்கலைச் சிற்பம்
ஒவிய உருநிலை உள்ளுணர் கருநிலை
ஒவிய வடிவம் புறத்தியல் மெய்நிலை
சிற்ப மைந்திசை ஐந்தியல் சீரியல்
சிற்ப மாநெறி இயல்நிலைக் கலையே 709

ஒவியக் கலைநிலை ஒளிதிகழ் நிலைநெறி
ஒவிய உருத்திறன் வடிவெழில் வனப்பும்
கருத்துணர் வுற்றே திருநிலைப் பெருநெறி
உருவுறும் மெய்க்கலை உள்ளுணர் வுற்றே
கைவினைத் திறனிலை செய்முறை நுட்பம்
ஐவினைத் திறனிலை செய்முறை நுட்பம்
உள்ளும் உணர்வும் ஒருங்குறக் கண்டே
விள்ளும் வடிவியல் வியனிலை ஆய்ந்தே
முந்நெறி ஆக்கத் துணர்நிலை மூலம்
செந்நெறி மெய்ப்பொருள் சீர்நெறித் திறத்தியல்
தொன்னெறி ஆய்ந்துணர் உயிரொளித் திறத்தால்
முந்நூல் மெய்க்கலை ஒவியக் கலையே 718

வண்ண ஒவியக் கண்ணொளி நோக்கல்
எண்ணம் உணர்வே எழுச்சி மலர்ச்சி
திண்ணம் கூட்டும் சிற்ப மாக்கலை
நண்ணுஞ் சித்திரம் ஒவியச் சிற்பம்
பண்டுறு நெறிமுறை பார்முறை கிளக்குபு
கண்டுறும் வனப்பும் வடிவெழில் தோற்றம்
விண்டுறும் ஒவியம் நிலைக்கலைச் சிற்பம்
அண்டுறும் சித்திர நெரிக்கூர் ஆக்கம்
ஒவியக் கலைமுதல் ஒலிமுதல் நெறியாய்
மேவுறும் சித்திரக் கூறியல் நுட்பம்
ஒவிலா துளுற்றும் ஒருபெரும் உழைப்புறும்
மேவுறுஞ் சிற்பம் மெய்க்கலை ஒளியே
ஒளியும் ஒலியும் வெளியும் ஒளியும்
ஒளிநிலை ஆற்றலால் மேவுறுஞ் சிற்பம்
தெளிமொழி விளக்கும் களிமுகத் தோவியம்

வெளிமொழி விளக்கும் சிற்பமா வடிவம்
சித்திரம் ஓவியம் சிற்ப மாநெறி
மெய்த்தக வுறுநிலை விளக்கு மாற்றலால்
ஓவிய நுண்மை உருவெழில் திண்மை
ஓவியச் செந்நூல் உரைக்கலை விளம்பும் 729

மூல மாத்தமிழ் அகவின் னொளித்தமிழ்
காலத் தோன்றல் கணக்கியல் நோக்கி
ஓம்கலை ஓம்ஒளி ஓம்ஒலி ஓம்மறை
ஓம்நெறி ஓம்இயல் ஒருபொருள் ஓங்கி
ஓங்குறும் மெய்க்கலை உள்ளகத் தோர்ந்தே
ஓமியல் ஓவியம் ஓங்கலை நிலைநெறி
கவினியல் நிலையுறும் கலைத்திறன் ஆய்ந்து
புவியியல் விண்ணியல் பொருந்து மாற்றல்
நெறியுற் றோர்ந்து நிலைபெற் றாய்ந்து
குறிபெறந் திறத்தால் குறிப்பின் ஆய்முறை
நிலையுறும் எண்ணெண் இயல்தெரி வழக்காய்
கலையுறும் மூலம் காண்டல் நெறியே 758

மூலம் காலம் ஞாலம் ஓர்ந்து
மூல மாநெறி முன்னிய நெறியால்
மூல எண்ணியல் மூல மாத்தமிழ்
மூலத் தியல்நில முன்னி யறிந்தே
ஓம்நிலை தமிழ்க்கலை ஒளிக்கலை தமிழியல்
ஓம்நெறி தமிழ்ஒளி தமிழ்ஒலி ஓர்ந்து
ஓமியல் ஓமியம் ஒருநெறி தெளிந்தே
ஓமியல் ஒன்பான் ஒருங்கூர் ஆக்கம்
தேமொழி ஒலித்தமிழ் தீந்தமிழ் நெறியால்
யாமொழி ஒலியிசை பைந்தமிழ் ஒலிநிலை
மூலத் தோற்றம் உணர்வின் எழுகலை
மூல ஒலியியல் உயிரொளி நிலைகலை
சிற்றவைச் சீரியல் தெற்றென் உணர்ந்தே
முற்றுறும் பேரறி உற்றுற் றுணர்ந்தே
ஒலிநிலைத் தீந்தமிழ் ஒளிநெறிச் செந்தமிழ்

ஒலியியல் ஒசை ஆக்கமும் நோக்கி
முதல்நிலை இருநிலை மூன்றுறும் பெருநிலை
முதற்கலை ஒலியிசை ஒலியியல் ஓங்கி
நான்குறும் ஐந்து அறுநிலை யாற்றல்
என்றுறும் ஒலியியல் இயல்பின் ஒலிக்கும்
நுட்பம் உணர்ந்தே நுண்ணறி உற்றே
பெட்புறுந் தமிழியல் மூல மாத்தமிழ்
ஓம்கலை மூலம் உணர்தல் நெறியென
ஓமுறும் ஆற்றல் உணர்தல் நெறியே 762

ஐந்நிலம்

இயற்கை இயலல் இயல்நிலை வானியல்
வியனிலை மாமழை நீரியல் வளநிலை
மலர்பூஞ் செடியும் மலர்க்கொடி மலர்மரம்
அலர்விரி நிலைமலர் அணியுறும் நிலந்திகழ்
பச்சிலை மூலிகை பயன்தரும் தழையியல்
உச்சி மாநிலை ஓங்கு பெருமரம்
தழைநிலை தழைத்து தளிர்க்கொடி முல்லை
தழைநிலை நன்னிலம் முல்லை மாநிலம் 783

நீர்விழ் அருவி நெடிதுயர் வெற்பும்
கார்தீண் டுச்சி கவின்வரை எழிலும்
வண்ணப் புள்ளினம் வடிவுகொள் விலங்கும்
எண்ணத் தியலா யியலுறும் பல்லுயிர்
மலர்விரை கமழும் மலையிட நடுவண்
புலர்பொழு தியல்கூட் டுறுநிலை யாக்கம்
பன்மலர் வண்ணம் செறிந்து காட்டும்
நன்மலர் குறிஞ்சி நீள்நிலத் தியலே 784

நீர்வளத் தியலால் நெறிதரு நிலவளம்
ஏர்வளம் பயிர்வளம் உயிர்வளம் ஆக்கும்
கார்வளம் கெழுமும் கவினுறுந் தோற்றம்
தேர்வளப் பொழிலும் சீர்நிலை மஞ்ஞை
சீர்நிலை தாமரை குவளை நறுமலர்
நேர்நிலை அணியியல் நிகழும் மருதம்
பொற்புறும் நிலத்தியல் பொங்குறும் வளமும்
கற்புறும் மக்கள் கவினிய நிலமே 785

விரிநிலக் தழ்குருசெய் ஆழ்கடல் பரப்பும்
புரிநிலக் கலைநிலை அறிவியல் நோக்கமும்
கலைநிலைக் கதிர்நெறி கதிரொளி கதிர்க்கலை
நிலைநெறி பொழுதுறும் நெறிநிலை ஆழம்

உணர்வின் ஆற்றல் உயிர்க்கலை அறிந்தே
உணர்திற மதியால் உழைப்புறும் திறமும்
ஆழ மாக்கடல் உயிர்த்தொகை யாய்ந்து
ஆழத் தெளிவும் அகழ்நிலை ஆய்வும்
கொண்டுறும் மக்கள் குடிப்பிறப் பாய்ந்தே
தொண்டுறுங் கடல்சார் நெய்தல்மா நிலமே 786

முல்லையுங் குறிஞ்சியும் முறைமை மாறி
ஒல்லையில் இருநிலம் திருநிலை ஆழ்ந்தும்
தொல்லை வேறுவே றிருநிலை மாறி
வல்லை கடுமை கோடை வெயில்நிலை
புல்செடி கொடிநிலை மாற்றமும் வீழ்ச்சியும்
நல்மரம் அற்றுறும் நீர்நிலை யற்றுறும்
நிலத்தியல் நீரியல் நெறிமுறை சாரா
நிலமுறும் பாலை நெறிமுறை நிலமே 787

நிலத்தியல் புலத்தியல் மனையியல் ஓர்ந்து
நிலத்துறும் நீரியல் மெய்யியல் தேர்ந்து
நாடுறும் நாட்டமும் நவிலரும் நல்வளம்
தேடுறும் தேட்டமும் செப்பரும் கலைவளம்
நீர்வளம் நிலவளம் நெடிதுறுங் குடிவளம்
ஏர்வளம் இயல்வளம் எண்ணித் தேர்ந்தே
தொல்வளம் பெழும் தூயசெந் தமிழின்
பல்வளத் தைந்தியல் எண்ணியல் நாடி
எழுநிலை எழுகலை எழுமுறை ஏழியல்
எழுமுணர் கலைத்திறன் ஏழெழு நாடுறும்
நிலவளத் திறனிலை நெடிதின் ஆய்ந்தே
கலைவளம் சொற்பொருள் கவினிலை மாக்கலை
பொருள்வளம் பொருள்நிலை தொழிற்கலை நோக்கி
தெருளுளம் சீர்நிலை சீரறி வுற்றே
மெய்யியல் மெய்க்கலை நிலையுற் றாய்தல்
மெய்யுணர் கலைத்திறன் மேலோர் நெறியே 788

ஆடலான் நிலைகலை அருளியல் மூலம்
ஆடலான் நெறிக்கலை ஐந்தெழுத் தியல்நெறி

ஐவகை நிலைக்கலை மெய்த்திறன் நோக்கி
மெய்ப்பொருள் ஒளிநிலை அறுசுடர் கலையே
திருநெறி ஓம்நெறி சீர்நெறி நேர்நெறி
ஒருநெறி முருகுறும் ஒளிநெறி ஓம்மறை
விண்ணின் றிழிதரும் பேரொளி அறுசுடர்
எண்கலை ஆடலான் அகத்தொளிர் இயலொளி
ஐந்நிலம் ஐந்திணை ஐந்தொழில் ஐந்நெறி
ஐந்துறும் மூலச் செந்தமிழ்ப் பெருநெறி
முற்றுற வோர்ந்தே பெருவெளி ஆடலான்
தெற்றுற் றுணர்ந்தே இயல்நெறித் தீந்தமிழ்
ஒளிநிலைக் கலையால் ஓங்குற வகுத்த
வெளிமொழி விண்மொழி ஒண்மொழி யியலாய்
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்
வறியமாப் பாலை ஐந்நிலப் பகுப்பும்
நிலத்திறை நிலத்தியல் நிலப்பொருள் நெடுநிலை
புலத்தியல் கருப்பொருள் பருப்பொருள் உரிப்பொருள்
இயல்நிலை முழுதும் மொழியியல் கூறும்
மயன்நெறி ஆடலான் அருள்திறத் தியலால்
மயன்கலை மயன்தமிழ் ஐந்திறத் தாக்கம்
வியனொளி விண்ணொளி நெறிகலை முதலாய்
மயன்வகு நெறித்தமிழ் மாத்தமிழ்க் கலையே 866

நூல்பற்றி

பலநூ லாய்ந்தே நுட்பமும் ஓர்ந்தே
கலைபல உணர்ந்தோன் கற்பதிந் நூலே 30

எண்ணமும் உணர்வும் எழுதரும் ஆற்றலும்
திண்ணமும் நேர்மையும் சீர்மையும் உள்ளோர்
விள்ளும் இயலால் உண்மை உணர்வோர் 31

காலமும் இடமும் கருத்துற நோக்கி
மூலமும் ஒளியும் முயன்றினி தாய்ந்தே
ஞாலமும் விண்ணும் நவையற நோக்கி
கோலத் தமிழியல் குறிக்குமிந் நூலே 32

ஐந்தியல் தமிழே ஐந்திசை மூலமும்
செந்நூல் நெறியும் காலத் தாற்றலும்
முந்து முணர்கலை இடநிலை வண்மையும்
தந்துறும் தமிழியல் இந்நூல் நெறியே 33

முந்துசெந் தமிழை முறைநெறி யாய்ந்து
வந்த தொல்கலை மரபினி துணர்ந்து
ஐந்தவி யாற்றலால் அகவுணர் வுற்றே
ஐந்தியல் தமிழிந் நூலுணர் வாரே 35

எழுத்தும் சொல்லும் பொருளும் விளக்கி
வழுவிலாக் கட்டணி வளமுற வகுத்து
செழுமலர் ஐந்திதழ் செம்மல ரென்ன
முழுத்தமிழ் ஐந்தியல் நூல்நெறி யன்றோ 36

புள்ளிக் கோடே வரியியல் உருவியல்
தெள்ளு தமிழியல் எழுத்தியல் வகுத்து
விள்ளும் சொற்பொருள் கூட்டணி வகையால்
உள்ளும் ஆற்றலை உரைப்பதிந் நூலே 37

மூவகைக் காலமும் முறைமையின் விளக்கி
பாவகைத் திறனும் பண்புறச் செறித்து

ஒவிலா துழைப்போர் உளத்துணர் நிறைந்து
மேவுறும் செந்தமிழ் ஐந்தியல் நூலே 38

முவகைக் குற்றமும் முறைமையின் தவிர்த்தே
ஆவலால் கற்போர் ஐந்தியல் அறிவரே 39

ஐந்தியல் செந்தமிழ் ஐந்திர நூலே 40

மொழிமுதல் ஒலிஒம் முறையின் உணர்த்தி
விழுமிய பொருளை விளக்கிச் செறித்தே
செழுந்தமிழ் முலம் ஐந்தியல் கோலம்
முழுமை விளக்கும் ஐந்திர நூலே 42

ஐந்திரம் ஆய்ந்தோர் தந்திரம் காண்பர் 44

முப்பொருள் திறமும் முகிழ்க்கக் கூட்டினும்
செப்புறும் சீர்நெறி செறிவுற் றோங்கி
வண்ணமும் இசையும் வகுத்தியல் பிரிந்து
பொருள்நிலை வோங்கிப் பெருவனப் புற்றே
திருவுறும் பெருநூல் இலங்கும் மரபே 95

உள்ளொளி கண்ட உணர்வினன் ஆகி
தெள்ளும் தமிழியல் சீருறும் வண்ணம்
எண்ணியல் கலையின் இயல்நிலைத் தேர்ந்து
விண்ணொளி ஒலிஒம் நிலைமறை அறிந்து
ஐந்தியல் நெறிக்கலை மெய்த்திறம் விளங்க
ஐந்திறம் விளக்கும் ஐந்திற நூலே! 109

கணக்கியல் எண்ணெண் கலையின தாகிப்
பணக்கறும் எழுத்துறும் ஐங்குறில் முலம்
உணர்வுறும் நெடிலேழ் எழுத்துறும் ஆற்றலும்
கணக்குறும் திட்பமும் கலையுறும் நுட்பமும்
ஐந்திறத் தன்மை அழகுற விளக்கி
ஐந்துமைந் தியலாய் புள்ளி முலம்
அழகுற விளக்கும் ஓம்ஒலி ஓம்ஒளி
பழகுறும் ஒலிநிலை ஒசை ஆற்றலும்
மாநெறி பருநெறி நுண்நெறி ஓர்ந்தே
தூநெறி ஐந்திறம் துலங்கற் பாற்றே 185

நாற்புறம் அறிந்தே நால்நெறி நோக்கி
நூற்பா நுண்பொருள் நோக்குவ தியல்பே 205

தென்மொழி தென்சொல் தென்புலம் தென்னிலம்
தென்கலை யியலாய் மக்கள் மொழியும்
நன்மொழி செந்தமிழ் விண்தமிழ் ஒளியாய்
தென்மொழி முதன்மொழி சாற்றல் நெறியே 223

தண்டமிழ் மொழியே ஐந்தியல் மொழியாய்
விண்டுறும் கலைத்தொழில் விளக்குறும் தொன்னெறி
மரபியல் செறித்தும் எண்கலை நிலைத்திறன்
வரம்புறும் இயலே ஐந்திற மெய்நூல் 224

இயற்கைப் பொருண்மை எளிதில் காண்டல்
இயல்நெறிப் பொருண்மை அரிதில் நோக்கல்
மயலறும் உணர்வால் மாறுற நோக்குபு
இயல்தமிழ் இயங்கல் கலைத்தொழில் துலங்கள்
பொருண்மை நிலைப்பொருள் மருண்மை தவிர்த்தே
தெருண்மை கிளக்கும் ஐந்திறச் சீர்நூல் 225

கண்முதல் ஐம்புலன் கருத்துறும் நெறியாய்
விண்முதல் ஒலிநிலை விளக்குபு மெய்த்திறன்
எண்முதல் கலையா யியன்றவை நெறியறிந்
திண்கலை தேர்ந்தே மண்முதல் ஆய்தல்
தண்டமிழ் சொற்பொருள் கலைமொழித் திறனாய்
ஒண்டமிழ் ஐந்திறம் உரைத்தனன் நன்றே 227

நூலொளிர் நுண்பொருள் நூற்பாப் பகுப்பொருள்
நூலுரை விழுப்பொருள் நூற்பா நுணுக்கம்
நூலே நுவல்வோன் காலமுங் களமும்
நூலோ ராய்வின் நெறிமுதற் குறித்தே 375

நூற்பா நுதலிய பொருள்நெறி நோக்கினும்
நூற்பா நுண்பொருள் ஆய்ந்துணர் வுறினும்
கேட்டவை கண்டவை கிளர்ச்சியின் நோக்கி
நாட்டமும் ஞுணர்வால் நாடுவ தியல்பே 462

மயன்பற்றி

கதிரொளி வருமுன் எழுவோ னாகி
மதியொளி மலருளம் வாய்ப்பத் திகழ்ந்தே
உன்னும் திறனே ஓங்கி நற்குறிப்பால்
பன்னும் நூல்விரித் துரைக்கும் பாங்கால்
வரைவுறத் திட்டலும் எழுதலுங் குறித்தலும்
நிறைவுற வியற்றுவோன் அறிவினா குவனே 67

ஓரறி வுயிர்முதல் ஆறறி வுயிரும்
நேரறி தன்மை நிலவிய பண்பைச்
சீரறி வுற்றுத் தெள்ளிதின் உணர்ந்தே
ஞாலம் ஆழி விண்மண் கோளம்
கோலச் செந்தி புனல்காற் றியலும்
ஒளிவளி வெளித்திறன் ஓங்குற ஆய்ந்து
விளித்தியல் செய்முறை விளக்குவோ னாகி
செய்முறை செய்தே திறம்பல ஆக்குவன்
உய்முறை ஞாலம் வாழ்நிலை செய்வன
குறிதவ றாநிலை குறிப்பறிந் தியற்றும்
அறிவியல் ஆய்வன் கலைத்திற லோனே 72

கண்டமெய்ப் பொருளைக் கருத்துற வாய்ந்தே
விண்டுறும் ஆற்றலான் பேரறி வாளனே 74

அயனெறித் திறத்தா லாயினுங் காணா
மயனெறித் திறத்தால் மதிஒளி காண்பரே 261

மயல்நெறி நீக்கின் மயன்கலைத் தெளிவே 651

மயநெறி யாற்றல் அயன்நெறி நீக்கும் 652

அயல்நெறி தவிர்த்தோர் மயனெறி யாய்வர் 653

மயனெறி யொளியே எண்ணெண் கலைத்திறன்
மயனெறி யாற்றல் மாநெறி யாற்றல்
மயனெறிச் செம்மைச் சிற்றவை மெய்ம்மை
மயனெறி யோர்ந்தே மெய்யியல் நோக்கி

பலகலை தேர்ந்தே பன்மொழி யாய்ந்தே
நிலவும் ஒளிக்கலை என்னொன் திறனே 654

மயனெறி யொன்றே மூவாக் கலைநிலை 655

செந்தமிழ் ஐந்திறச் சீர்சால் செந்நெறி
முந்துறுங் கலைநெறித் தீந்தமிழ்ச் சிற்றவை
எண்ணியற் கலையுணர் வியல்நெறித் திறனால்
எண்கலைத் திறனெறி விண்கலை மொழியியல்
ஒளித்தமிழ்க் குறிநிலை வெளித்தமிழ் நெறிநிலை
ஒளிவெளி நுட்பம் ஒங்குறும் மதியுணர்
திறனெறிச் சீர்மைத் திருநிலைத் திறத்தால்
அறமுறும் அவையோர் அகமகிழ் வுணர்வால்
வாழ்த்துறும் மொழியால் வேந்தன் மகிழ்ந்தே
வாழ்த்துறும் உரைமொழி வளமுறக் கேட்டே
அழகுறுந் தீந்தமிழ்க் கழகச் சான்றோர்
பழகு மாத்தமிழ்ப் பேருரை புகழ
அவைக்களங் கண்டே அகமகிழ்ந் தின்பால்
நவையறுஞ் சிற்ப நற்றமி ழோவியம்
ஐந்திற நூற்பா முந்துறுந் திறத்தால்
வந்தசெந் தமிழொளி ஆடலான் அருளால்
அகமகிழ்ந் தின்புற் றைம்புலத் தொன்றி
மிகுமொளி யுணர்வால் பன்னிரு செந்நூல்
மூலவைந் தியலால் முறைமையிற் றெரிந்தே
கால மியக்கும் ஆடலான் அருளால்
ஐந்தியற் செந்தமி ழாகுற வியற்றினன்
செந்தமிழ்ச் சான்றோர் சிரவை சேர்ந்தே
எட்டெழுத் தியற்றமிழ் ஐந்திறம் அளித்தனன்
நாட்டுனர் வோங்கும் நறுந்தமி ழுணர்வால்
இருகை குவித்தே இன்புற் றளித்தனன்
திருவுறும் ஆடலான் அருள்நிலை சிறந்தே
ஆன்றவிந் தடங்கும் அருந்தமிழ்ச் சான்றோர்
ஏன்றுள மகிழ்ந்து வாழ்த்துவிர் நன்றே
அயல்நெறிச் சாராத் தமிழொளி யுணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே 892

பழந்தமிழ்ச் சிற்பி மயன் இயற்றிய

ஐந்திரம்


வ. எண்.	தொகுக்கப்பட்ட தலைப்புகள்	ஐந்திர மூலச் சுவடியில் உள்ள வரிசை எண்.
01.	ஒளி/ஓலி[ஓம்,ஒளி/ஓம்,ஒலி]	1,2,3,4,5,8,34,43,45,47,49,97,99,102,105,122,166,168,179,180,182,183,186,187,196,211,229,238,285,287,297,298, 299,300,303,305,307,326,328,334,381,384,387,408,412,443,444,448,463,470,473,476,477,479,484,485,489,490,491, 492,498,499,501,514,521,527,529,530,533,540,544,545,556,564,574,579,580,581,584,585,588,594,595,597,598,625, 626,632,636,638,642,664,670,679,681,682,684,699,713,721,725,737,789,798,799,807,810,826,836,837,846,854,876, 877,879,880
02.	உணர்வியல்	46,48,52,54,55,56,63,70,77,78,82,83,88,101,119,140,200,201,212,213,239,251,269,284,304,321,322,349,358,371, 409,410,419,421,423,427,429,432,438,441,442,451,475,478,480,481,500,504,519,523,536,541,542,560,563,570,575, 577,587,593,603,629,633,640,650,657,659,668,672,677,688,692,700,711,732,744,745,767,768,772,773,790,792,794, 802,809,811,832,853,855,859,861,867,883,887,888,889
03.	மூலக்கனல்	646,693
04.	அணுவியல்	100,488,543,701,851,873,878
05.	நாற்புறத்தியல்	157,160,329,881
06.	காலக்கணக்கியல்	13,14,15,21,22,23,24,25,51,57,69,86,92,93,96,112,130,131,132,143,175,176,189,203,219,243,250,252,255,256,257, 258,259,260,267,268,270,274,283,289,319,320,324,330,340,341,343,344,345,346,347,348,350,351,354,367,386,394, 402,403,411,431,434,435,465,466,493,494,495,516,517,518,535,537,549,554,555,559,562,565,589,591,599,614,648, 731,736,738,743,755,764,775,793,815,816,824,828,835,840,874,882,884
07.	எண்ணியல்	64,73,75,76,110,111,127,128,159,174,188,193,217,218,230,233,234,233,234,237,247,248,265,271,272,273,275,290, 291,292,293,294,295,296,308,309,310,331,332,335,338,339,342,363,364,365,380,383,392,407,422,424,433,436,437. 439,440,447,452,472,474,482,496,503,507,508,509,510,511,512,524,525,526,538,539,561,571,572,578,583,590,601, 602,604,622,627,631,641,645,656,660,667,686,687,703,710,712,715,716,727,734,735,751,752,753,757,759,760,761, 765,774,776,777,778,795,796,800,808,813,817,818,825,838,858,869,871
08.	வட்டியல்	135,136,147,404,502,567,592,600,618,620,647,666,675,676,695,726,730,742,756,812,833,860,872.
09.	வட்டின் மாற்றம்	138,139,141,171,264,312,357,361,644,814.

வ. எண்.	தொகுக்கப்பட்ட தலைப்புகள்	ஐந்திர மூலச் சுவடியில் உள்ள வரிசை எண்.
10.	சிற்றவை	133,137,142,144,145,146,280,281,531,658,739,740,741,797,805,806,829,830,841,856,857,885,886
11.	அகம்/புறம்[அகவின்/புறவின்]	80,81,190,191,192,194,195,204,207,246,249,254,266,282,306,333,352,368,414,418,420,430,460,471,483,497,505, 532,548,557,569,586,623,635,639,690,691,698,702,766,821,822,823,831,839,870,875.
12.	ஐந்தியல்	50,59,60,84,108,116,134,156,197,202,208,226,241,242,244,245,253,276,277,278,279,286,336,337,359,360,366,372, 376,377,378,379,382,385,393,395,397,400,401,405,406,413,425,428,453,458,459,464,515,534,546,547,566,573,596, 607,628,717,719,723,746,747,803,804,843,849,850,852,862,865,868,890,891
13.	எழுத்தியல்/ மொழி	6,7,9,10,11,12,16,17,18,19,20,26,27,28,29,41,52,58,61,62,65,66,68,71,79,85,87,89,90,91,94,98,103,104,106,107, 113,114,115,117,118,120,121,123,124,125,126,129,148,149,150,151,152,153,154,155,158,161,162,163,164,165,167, 169,170,172,173,177,178,181,184,198,199,206,210,214,215,216,220,221,222,228,231,232,235,236,240,262,263,288, 301,302,311,313,314,315,316,317,318,323,325,327,353,355,356,362,369,370,373,374,388,389,390,391,396,398,399, 415,416,417,426,445,446,461,467,468,469,486,487,520,522,576,582,605,606,612,613,619,621,630,665,671,678,680, 683,685,754,763,769,779,791,819,834,844,845,848,864
14.	சிற்பம்	449,450,528,568,634,643,669,674,689,720,722
15.	நடம்	454,455,456,457,506,513,649,801,820,863
16.	கட்டிடம்	550,551,552,553,558,624,696,697,704,705,706,707,714,724,728,748,749,750,771,780,781,782
17.	மாநெறி	290,608,609,610,611,661,662,663,694,733,770,827,842
18.	ஓவியம்/ஓமியம்	615,616,617,637,673,708,709,718,729,758,762
19.	ஐந்நிலம்	783,784,785,786,787,788,866
20.	நூல்பற்றி	30,31,32,33,35,36,37,38,39,40,42,44,95,109,185,205,223,224,225,227,375,462
21.	மயன் பற்றி	67,72,74,261,651,652,653,654,655,892


சங்ககாலச் சிற்பச் சித்தன் மாமுனிமயன் விஞ்ஞான கலைக்கூடம்.



மாமுனிமயன்




முன் பக்கத் தோற்றம்



பக்கத் தோற்றம்

சங்க காலச் சிற்பச் சித்தன் மாமுனி மயனின் விஞ்ஞான கலைக்கூடம் சென்னைக்கு அருகில் மாமல்லபுரத்தில் நிறுவப்படுகின்றது. சங்க காலத்தில் வாழ்ந்தவனும் மூலத்தின் ஐந்து இயல்புகளை முறையே மூலம், காலம்,சீலம், கோலம், ஞாலம் என்ற ஐந்து நிலைகளாக வெளிப்படும் பிரபஞ்ச சிருஷ்டி நுட்பத்தை ஐந்திறம் என கண்டு சொன்ன அறிவின் முதல்வனும், கவிக்கலைஞனாகிய மாமுனி மயனின் பெருமையை பறை சாற்றுவதோடு உலகிலுள்ள எல்லா அறிஞர்களும் போற்றிடும் வகையில் இனிவரும் பொற்புறும் காலத்தில் மயன் கலைகளை பயில்விக்கும் பல்கலைக் கழகமாக திகழும் என்பதில் ஐயமில்லை.



OFFICE OF

THE VAASTU VEDIC RESEARCH FOUNDATION, Chennai

FRONT ELEVATION